215204
to
215214

ஆர்யதர்மம்

ஸை

4 38

22

7-10-1937

215204

215204
S71
OFFICE OF ... 21 OCT 1937 MADRAS

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| புஸ்தகம் 22 | கும்பகோணம் கலி 5039 ஈச்வரஸு புரட்டாசிமீ 21உ 1937ஸு அக்டோபர்மீ 7உ | ஸஞ்சிகை 38 |
|---|---|---|

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு | ரூ. | 20 0 0 |
| இஞ்சு 1-க்கு தட்வை 1க்கு | அணா | 0 8 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்ம ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கடன் தவணை ஒத்தி வைப்பு மசோதா.

### ஒத்திவைக்கப்பட்டது.

சென்னை சட்டஸபையில் காங்கிரஸ் கவர்மெண்டாரால் வியவஸாயிகளின் நன்மைக்காகக்கொண்டு வரப்பட்டிருந்த கடன் தவணை ஒத்திவைப்பு,, மசோதாவைப்பற்றிப்பொது ஜனங்களும், சட்ட நிபுணர்களும எங்கும் பலமாக ஆக்ஷேபம் செய்த காரணமாக மேற்படி மசோதா விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பிரதம மந்திரி அறிவித்தார். சட்ட ஸபை கலைக்கப்பட்டு விட்டதால் இனி இது ஜனவரிக்கூட்டத்திலேயே ஆலோசனைக்கு வருமென்று தெரிகிறது.

## பாலஸ்தீனக்கலகம்.

### பிரிடிஷாரின் கடுமையான நடவடிக்கை.

பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேறும் விஷயமாக அராபியர்கள் பலத்த எதிர்க்கிளர்ச்சி செய்து வருவதை முன்னிட்டு நியமிக்கப்பட்ட பீல் கமிஷனின் தீர்ப்பினால் அங்கு கிளர்ச்சி அதிகமாகி இருவகுப்பாரும் கொலை களவு முதலிய விபத்திற்கு ஆளாகி வருகிறார்கள். சில தினங்களுக்கு முன் பாலஸ்தீனம் ஜில்லா கமிஷனான மிஸ்டர் ஆண்டிரூஸ் என்ற பிரிடிஷ் அதிகாரி அராபியர்களால் கொல்லப்பட்டு விட்டார். இதன் காரணமாக பிரிடிஷார் அங்கு வெகு கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பிரபல அராபியத்தலைவர்கள் கைதி செய்யப்பட்டு தேசப்பிரஷ்டம் செய்யப்படுகிறார்கள். அநேக ஸங்கங்கள் கலைக்கப்பட்டு விட்டன.

பெரிய கலஹம் நேரலாம். பிரிடிஷார் எதையும் ஸமாளிக்கத்தயாராக இருக்கிறார்களாம்.

## கலப்பு விவாஹ விவாதம்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் உள்பட ஆசியாக்காரர்கள், வெள்ளைக்கார ஸ்திரீகளை விவாஹம் செய்து கொள்ளக்கூடாதென்றும், வெள்ளைக்காரர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதெனவும் சட்டம் செய்ய முயற்சி நடந்து வருகிறதல்லவா? இதைப்பற்றி மறுபடியும் அங்கு விவாதம் ஏற்பட்டு இதை விசாரிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறதாம்.

## சேலத்தில் மது விலக்கு அமுல்.

அக்டோபர் 1உ முதல் சேலம் ஜில்லாவில் பூரண மது விலக்கு ஆரம்பமாகி விட்டது. கள்ளுக்கடைகள் யாவும் எடுக்கப்பட்டு விட்டன. கள்ளுக்கடை யிருந்தவிடங்களில் வேறு நல்ல பொதுக்கட்டிடங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஜனங்கள் மிகுந்த உத்ஸாஹம் காட்டுகிறார்களாம்.

மந்திரி ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் சேலத்திற்கு நேரில் சென்று நிலைமையை கவனித்து வருகிறார்.

## சென்னை சட்ட ஸபை.

### நிறைவேறிய மசோதாக்கள்.

சென்னை சட்ட ஸபையில் வரவு செலவு திட்டம் நிறைவேறிய பின், துணி விற்பவர்களுக்கு லைஸென்ஸ் கட்டணம் விதிக்கும் மசோதா நிறைவேறியது. இதன்படி இனிமேல் கைநெசவு இல்லாத துணி வியாபாரிகள் லைஸென்ஸ் வாங்கவேணும்.

முனிஸிபாடிகளில், சட்ட ஸபை ஓட்டர் ஜாப்தாவைக்கொண்டே எலெக்ஷன் நடத்தப்பட வேண்டுமென்று ஒருமசோதாநிறைவேறியது. இதை உத்தேசித்து சில இடங்களில் நடக்க வேண்டிய முனிஸிபல் எலெக்ஷன்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

ஜில்லா போர்டுகளில் இனிமேல் ஸர்க்கார் நியமன அங்கத்தினர் இருக்கக்கூடாதென்று ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி. இப்போதுள்ள ஜில்லா போர்டு நியமன மெம்பர்கள் விலகவேண்டியவர்களாவார்கள்.

எலெக்ஷன்களில் குவியல் ஓட்டு முறை இருப்பதை எடுத்து விட வேண்டுமென்றும் இதனால் தீண்டாத வகுப்பாருக்குத்தீங்கு ஏற்படுவதாயும் இது பூனா ஒப்பந்தத்திற்கு விரோதமென்றும் இந்தியா மந்திரிக்கு அறிவிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

## ஸமஷ்டி கோர்ட் ஆரம்பம்:

புதிய சட்டப்படி இந்தியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஸமஷ்டி கோர்ட்டானது ஸிம்லாவில் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. அதன் சீப் ஜஸ்டிஸ் ஸர் மாரிஸ் குயவரும், இதர ஜட்ஜ்கள் ஸர் ஸுலைமானும் ஸ்ரீமான் ஜயகரும் வைஸ்ராய் முன்னிலையில் ராஜ விஸ்வாஸப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார்கள்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S & Co,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# மதிப்புரை.

## ஸ்ரீ நகரவிமர்சம்.

ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.

(இக்கிரந்தம், ஸ்ரீ பிரும்ஹவித்யா விமர்சினீ சபை ஸ்தாபகரும், அதன் அக்ராஸனருமான பிரும்மஸ்ரீ அருட்கவி ந. சுப்ரமண்ய ஐய்யாவர்களின் தமிழுரையுடனும், திவான் பகதூர் பிரும்ஹஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B.A B.L. ரிடையர்டு டிஸ்டிரிக்டு ஜட்ஜ் அவர்களுடைய ஆங்கில முன்னுரையுடனும், விளங்கப்பெற்று, ஸ்ரீ பிரும்ஹவித்யா விமர்சினீ ஸபையாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1 தான்.

இப்புத்தகத்திற்கு மதிப்புரை எழுதும்படியான பாக்யம் எனக்கு கிடைத்ததைக் குறித்து நான் பேரானந்தமுற்றேன். இதன் மூலமாகவாவது

येन केनाप्युपायेन देव्यां चित्तं समर्पयेत्

என்றபடி அம்பிகா சரணாரவிந்தானுஸந்தானம் எனக்கு கிடைத்துவிடுகிறதல்லவா? பரிணாமவிரஸங்களாயுள்ள பாஹ்ய விஷயங்களிலேயே அனவரதம் அலைந்து திரியும் அந்தக்கரணம், ஒரு நொடிப்பொழுதாவது பராசக்தியின் பாதாரவிந்தங்களில் சென்று லயிக்குமானால் அதற்கு எவ்வளவு புண்யம் செய்திருக்கவேண்டும். இதனை ஒரு மகாகவியானவர்.

आपदि किं करणीयं स्मरणीयं चरणयुगमम्बायाः ।
तत्स्मरणं किं कुरुते ब्रह्मादीनपि किंकरीकुरुते ॥

என்று வாக்கியங்களில் அம்பிகா சரண ஸ்மரணமே அவசியமென்று அறிவித்திருக்கிறார். லலிதாஸ்தவ ரத்னம் or ஆர்யாத்விசதி என்னும் இவ்வுத்தம ஸ்தோத்ரமானது தூர்வாஸ முனிவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஸாதாரண கவிகளால் எழுதப்பட்ட ஸ்தோத்ரங்களைக் காட்டிலும் முனிவர்கள் எழுதிய ஸ்தோத்ரங்கள் வெகு சிலாக்யமானவை. சீக்கிரத்தில் அபீஷ்டபூர்த்தி செய்வதிலும் அவைதான் ஸமர்த்தமானவை. இதனாலேயே ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம், முதலிய இதிஹாஸங்களால் உள்ள, "ஆதித்யஹ்ருதயம்" சிவ, விஷ்ணு, பத்ரகாளீ, தூர்க்கை முதலிய தேவதைகளின் ஸ்தோத்ரங்களை பாராயணம் பண்ணுவது சிஷ்ட ஸம்பிரதாயத்திலிருந்து வருகிறது.. தூர்வாஸரோ காமேச்வர காமேச்வரீ சரணோபாஸன மஹிமையால் பெருந் தபோபலம் பெற்று விளங்கும் சிறந்த தாபஸராவர். அனுஸூயா கர்ப்ப ஸம்பவராயுள்ள இம் முனிவருக்குக் கோபம் மிகுதியாக உண்டென்பது உலகப் பிரஸித்தம். நாரதருக்குக் கலஹம் பிரயமாயிருப்பதுபோல் இவருக்குக் கோபம் வெகுப் பிரியமானது. நாரதர் செய்யும் கலஹம் முடிவில் தார்மிகர்களுக்கு க்ஷேமத்தை யளிப்பதுபோல் இந்த தூர்வாஸரின் கோபமும் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் பண்ணி தார்மிகளுக்கு க்ஷேமத்தையே முடிவில் அளிக்கிறது. ஆகவே இம் முனிவரின் கோபமும் பிரஸாத வடிவமாக அமைந்துவிடுகிறது. மற்ற மகரிஷிகளுக்குக் கோபசாப மூலமாக தபஸ்ஸித்திக்கு நாசம் ஏற்படும். இவருக்கோவெனின் கோப சாப மூலமாக தபோவிருத்தி ஏற்படுவதாக

मुनेर्दुर्वाससोऽन्यत्र तपो नश्यति शापतः ।
दुर्वाससस्तु तपसो वृद्धि रित्याहु रास्तिकाः ॥

என்ற பிரசினை வசனஸித்தமாக அமைந்திருக்கிறது. ஸ்ரீமத் பாகவத கிரந்தத்தில் இம்முனிவரின் உத்பத்தி விரிவாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதில் இவரை சிவாவதாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலேயும் இவருக்கு சுலப கோபமும், சீக்கிர ப்ரஸாதமும் ஸஹஜஸித்தமாயிருப்பதால் ஆச்சரியமில்லை. இதனாலேயே கவிகுல திலகனான காளிதாஸனும், இவரையே சகுந்தலைக்குச் சாபங்கொடுக்கப் பொறுக்கி எடுத்தான். தேவேந்திரன் ஸகல ஸன்னாகங்களுடன் ஐராவதத்தின் மேலேறிக்கொண்டு பரம உத்ஸாஹத்துடன் ஆகாசமார்க்கமாகச் செல்லுகையில் அம்பிகா ப்ரஸாத ரூபமாயுள்ள வாடாத ஸுவர்ணபத்ம மாலையை வஹித்துக்கொண்டிருக்கும் தூர்வாஸரை ஸந்தித்தான். அப்போது அந்த தூர்வாஸர் மஹேந்திரனிடம் அந்தத் தாமரை மாலையை கொடுத்தார். மூவுலகத்திற்கும் அதிபதி என்ற அஹங்காரத்தால் அம்பா ப்ரஸாதமான அம்மாலையையும், அம்பாதாஸரான அம்முனிவரையும் அவமதித்து, அம்முனிவரின் எதிரிலேயே, ஐராவதத்தின் தலைமீது அம்மாலையை வைத்துவிட்டான். ஐராவதமோ, தனது கையால் அம்மாலையை எடுத்துக் காலால் தேய்த்துவிட்டது. வீரபத்திரரைப்போல் தூர்வாஸருக்கு வந்துவிட்டது கோபம். தேவேந்திரனுக்கு உடனே,

येन त्रैलोक्यराज्यश्रीः त्वदालेन चेष्टते ।
सैवाचत्वदमित्राणां वशमापद्यतामिति ॥

என்று திரிலோகாதிபத்யம் அழிந்துபோகும்படி சாபங்கொடுத்தார். தூர்வாஸரின் சாபத்தால் தேவேந்திரன் படாதபாடு பட்டான். அமிருதமதனம்பண்ணி அஸுரவிஜயம் பெற்றான் என்ற விருத்தாந்தத்தால், தூர்வாஸரின் மஹிமை நன்கு விளங்குகிறது, ஆர்யாத்விசதியை அடிமுதல் முடிவுவரையில் வாசிக்கும் ஸஹ்ருதயர்களுக்கு பிரும்மானந்தானுபவம் ஏற்படுகிறது நிச்சயம். இது த்வனிப்ரதானமாயுள்ள உத்தம காவ்யமாய் அமைந்திருக்கிறது. வஸ்து, அலங்காரம், ரஸம் இம் மூன்று வித த்வனியில் ஏதாவதொன்றில்லாத காவ்யமிந்த ஸ்தோத்திரத்திலில்லை எனலாம். இவ்வளவு கோபனராயுள்ள முனிவருக்கு இவ்வளவு ஸரஸஸாகித்யம் எப்படி உண்டாயிற்றோ தெரியவில்லை. எல்லாம் அம்பானுக்ரஹந்தான் காரணம்.

இந்தஸ்தோத்திரத்தில் பராசக்தியின் வாஸஸ்தானமாகிய ஸ்ரீநகரம் வெகு விரிவாய் ஆரம்பத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்நகரத்துக்கு, இருப்பு, எஃகு, செப்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோகம், வெள்ளி, தங்கம் முதலியவைகளால் செய்யப்பட்ட (25) கோட்டைகளும், அவைகளுக்குக் காவலாளிகளுமிருப்பதாக இதில் சொல்லியிருக்கிறது. அக்கோட்டைக்குள் சிந்தாமணி கிருஹமிருப்பதாகவும், அதற்குள், ஸ்ரீசக்ரமும், அதன் பிந்துபீடத்தில் காமேச்வர காமேச்வரீ ரூபமான பராதேவதை வசிக்கிறதாகவும் இதில் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சக்ரவாஸினீயான அம்பிகையின் பாதாதிகேசாந்தஸ்தோத்திரத்துடன் இந்த ஸ்தோத்திரத்தின் முடிவு ஏற்பட்டிருக்கிறது.

இக்கலியில் இஹபர ஸுகமோக்ஷாதி ப்ரயோஜனங்களை சீக்கிரத்தில் பெறுவதற்கு உபாஸனா மார்க்கத்தை தவிர வேறு மார்க்கமில்லை. அதிலும் பராசக்தியின் உபாஸனமே அத்யந்தம் பிரதானமானது. சிலர் சக்தி உபாஸனத்தைத் தாந்திரிகமென்று நினைக்கிறார்கள். அது ஸரியல்ல. ருக்வேதம் முதலிய வேதங்களிலுள்ள அனேக ஸூக்தங்களிலும் உபனிஷதங்களிலும் கூட பராதேவதையின் உபாஸனம் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தவிர ஆகமங்களிலும் தந்திரங்களிலும் கூட மேற்கண்ட உபாஸனம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது ஆகவே பராசக்தி உபாஸனம் வைதிகமேயாகும். பராசக்தியைத்தான், பிருகிருதிமாயை, அவ்யக்தம் என்பதாதி பதங்களால், வேதாந்திகள் வ்யவஹரிக்கிறார்கள் இந்த சக்தியே,

चिच्छक्तिश्चेतनारूपा जडशक्तिर्जडात्मिका ॥

என்ற வசனப்படிக்கு, சித்சக்தியென்றும், ஜடசக்தியென்றும் இருவிதமாயிருக்கிறது. இந்த ஸமஷ்டி சக்திக்கும், சக்திமானாகிய சிவனுக்கும் ஐக்யமே ஸம்பந்தமாயிருப்பதாக,

शिवश्शक्त्यायुक्तो यदि भवति शक्तः प्रभवितुं ।

என்று ஸ்ரீபகவத்பாதாள் ஸௌந்தர்ய லஹரீ ஸ்தோத்திரத்தில் சொல்லி இருக்கிறார்கள். ஸமஷ்டி சக்தி ரூபிணியான பராசக்தியை,

"महामायाविश्वं भ्रमयसि परब्रह्ममहिषी"

"पुरमथितुराहोपुरुषिका ।"

என்பதாதிகளால் சிவனைக்காட்டிலும் கூட ஸ்வதந்த்ரையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது,

ब्रह्मात्मैक्यस्वरूपिणी ।

श्रीशिवाशिवशक्त्यैक्यरूपिणी ललिताम्बिका ।

என்பதாதிகளால் சக்திசகிதசிவோபாஸனமே சக்தி உபாஸனத்தின் ரஹஸ்யமாகும் என்று தெரிகிறது. சக்தி ஸஹித சிவத்தையே ஜகத்காரணமென்றும், பஞ்சகிருத்ய பாராயணமென்றும் வ்யவஹரிக்கப்படுகிறது.

சக்திஸஹித சிவோபாஸனத்தை ஜீவாபேதமாகச் செய்யவேண்டும். இதனாலேயே லலிதாஸஹஸ்ர நாமத்திலும் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம் அநாஹதம், விசுத்தி, என்பதாதிஸ்தானங்களில் சரீரத்துக்குள்ளேயே அம்பிகை வஸிப்பதாகவும், ஸ்ரீசக்ரத்தையும் சரீர சக்ரத்தையும் ஐக்யமாக பாவிக்கவேண்டுமென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வபேதோபாஸனையால் பராசக்தியின் பிரத்யக்ஷமும், பிரஸாதமும், உண்டாகிறது. இதைத்தான் ஔபநிஷதர்கள் பிரும்ஹாபேத ஸாக்ஷாத்காரமென்று சொல்லுகிறார்கள். பிரும்மம் ஸகள, நிஷ்கள, வடிவமாயிருப்பது போல், பராதேவதையும் ஸகளமாயும் நிஷ்களமாயும் விளங்குகிறாள். இந்த தியான யோகத்தால் அஷ்டமஹா ஸித்திகளும் உண்டாகின்றன. இந்த ரஹஸ்யங்களெல்லாம் இந்த ஸ்தோத்திரத்தில் அடங்கிருக்கின்றன.

இந்நூல் வடமொழி தெரியாத தமிழ்மக்களுக்குப் பயன்படாததுபற்றி ஸ்ரீமான் ந. சுப்பிரமண்ய அய்யாவர்கள் தென்மொழியில் உரையொன்று எழுதி இத்துடன் சேர்த்திருக்கிறார்கள். பொதுவாக மொழிபெயர்த்தலென்ற கார்யமே வெகு சிரமமானது. அதிலும் ஸம்ஸ்கிருத பாஷைக்கு மொழிபெயர்த்தலும், அதிலும் "ஆர்யாத்விசதி" போன்ற கிரந்தங்களுக்கு மொழிபெயர்த்தலும் வெகு கஷ்ட ஸாத்யமானது. ஸ்ரீமான் அய்யாவர்களின் மொழிபெயர்ப்பானது மூலக்கிரந்தத்தின் சுவை குன்றுவண்ணம் அமைந்திருக்கிறது. ஸம்ஸ்கிருத பாஷா வ்யுத்பத்தி மாத்திரத்தால் ஆர்யாத்விசதிக்கு மொழிபெயர்க்க முடியாது. ஏனெனின் இதில் அனேக மந்திர சாஸ்திர ரஹஸ்யங்கள் பொதிந்துகிடப்பதால், மந்திர சாஸ்திர ரஹஸ்யமும் தெரிந்தால்தான் மொழிபெயர்த்தல் சுலபமாகும். உதாஹரணமாக, இந்த ஸ்தோத்திரத்தில் "சுக்ரஸ்ரீ" "சுசிஸ்ரீ" "தபஸ்ரீ" "தபஸ்யஸ்ரீ" "நபஸ்ரீ" "நபஸ்யஸ்ரீ" என்பதாதி பதங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இவைகளுக்கு வ்யுத்பத்தி பலத்தால், "கிரீஷ்மாதிருதுக்களின் சோபை" என்றுதான் வ்யாக்யானம் செய்யக்கூடும். ஸ்ரீமான் அய்யாவர்களின் மொழிபெயர்ப்பிலோ, அந்தந்த கோட்டையிலுள்ள வேலைக்கார ஸ்திரீகளென்று இருக்கிறது. இது மந்திர சாஸ்திர ஸம்பிரதாயம் தெரியாதவர்களுக்குப் புலப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)



S73

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# 'மூகபஞ்சசதி'

கடாக்ஷ சதகம்.

(30—9—37 தொடர்ச்சி)

37. தூமாங்குரோ மகரகேதன பாவகஸ்ய
காமாக்ஷி நேத்ரருசி நீலிம சாதுரீ தே |
அத்யந்தம் அத்புதம் இதம் நயனத்ரயஸ்ய
ஹர்ஷோதயம் ஜனயதே ஹரிணங்க
மௌளே: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மகரகேதன பாவகஸ்ய - மன்மதாக்னியின், தூமாங்குர: - புகைக்கொடி போன்றதான, தே - உன்னுடைய, நேத்ரருசி நீலிம சாதுரீ - நேத்ர காந்தியின் கருப்பின் அழகானது, ஹரிணாங்க மௌளே: - சந்திரனை சிரஸில் தரித்த பரமசிவனுடைய, நயனத்ரயஸ்ய - மூன்று கண்களுக்கும் ஹர்ஷோதயம் - ஆனந்தத்தின் புறப்பாட்டை, ஜனயதே - உண்டு பண்ணுகிறது. இதம் - இது, அத்யந்தம் அத்புதம் - மிகவும் ஆச்சரியம்!

1. புகையானது கண்களுக்கு கஷ்டத்தை உண்டுபண்ணுவது ஸாமான்யமாகத் தெரிந்திருக்கையில் இங்கு வர்ணிக்கப்பட்ட புகைக்கொடியானது பரமசிவனுடைய மூன்று நேத்ரங்களுக்கும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதாகச் சொல்வது மிகுந்த ஆச்சர்யமல்லவா!

2. புகையும் கடாக்ஷமும் கருப்புநிறம். புகையானது நீண்டு மெல்லியதாய் மேலே போவதால். அதை கொடிக்கு ஸமமாகச் சொல்வது கவிகளின் வழக்கம்.

3. மன்மதனுடைய ரதமானது மீன்க்கொடியோடிருப்பதாகச் சொல்லப்படுவதால் அவனுக்கு மீனகேதனன், மகரகேதனன், மகரத்வஜன் என்பதான பெயர்களுண்டு.

4. அம்பிகையானவள் மன்மத சாஸ்த்ரத்தின் பரம தாத்பர்யமாக இருப்பதாக அடிக்கடி வர்ணித்திருப்பதை அனுஸரித்து இங்கு மன்மதாக்னியின் தூமாங்குரம் (புகைக்கொடி) போலிருப்பதாகக் வர்ணிக்கப்பட்டது.

5. ஹரிணமென்றால் மானுக்குப் பெயர். சந்த்ரனில் தோன்றும் களங்கத்தை மானென்று சொல்வது கவிகளின் வழக்கம். ஆகவே சந்த்ரனுக்கு ஹரிணாங்கனென்று பெயர். அவனைப் பரம சிவன் தன்னுடைய மௌளியில் (சிரஸில்) தரித்திருப்பதால் அவருக்கு ஹரிணாங்க மௌளி என்று பெயர்.

38. ஆரம்ப லேச ஸமயே தவ வீக்ஷணஸ்ய
காமாக்ஷி மூகமபி வீக்ஷணமாத்ர நம்ரம் |
ஸர்வக்ஞதா ஸகல லோக ஸமக்ஷமேவ
கீர்த்தி: ஸ்வயம்வர்ண மால்யவதீ வ்ருணீதே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, வீக்ஷண மாத்ர நம்ரம் - உனது கடாக்ஷம் கிடைத்தால் போதுமென்று வணங்கியிருக்கும், மூகமபி - ஊமையாயிருப்பவனையும், தவ வீக்ஷணஸ்ய - உனது பார்வையின், ஆரம்ப லேச ஸமயே - ஆரம்பமான சிறிய பொழுதிற்குள்ளே, ஸர்வக்ஞதா - பூர்ணமான அறிவாகிற கன்யகையானவள், கீர்த்தி: - கீர்த்தியென்ற, ஸ்வயம் வரண மால்யவதீ - ஸ்வயம்வர மாலையை யுடையவளாய், ஸகல லோக ஸமக்ஷமேவ-ஸகல லோகங்களுடைய முன்னிலையிலேயே, வ்ருணீதே - வரிக்கிறாள்.

1. அம்பிகையின் கடாக்ஷலேசம் பக்தன் மீது பட்ட மாத்ரத்திலேயே அவன் மூகனாயிருந்தாலும் ஸர்வக்ஞத்வம் என்ற கன்யகையானவள் கீர்த்தியென்ற மாலையும் கையுமாய் அவனைத் தானாகவே (ஸ்வயம்வரமாய்) ஸகலலோகங்களும் பார்த்திருக்கத் தன் பதியாக வரிக்கிறாள் என்று இதில் சொல்லப்பட்டது. அதாவது அவனுக்கு ஸர்வக்ஞத்வமும் அதின் மூலமாக லோகோத்தரமான கீர்த்தியும் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது.

39. காலாம்புவாஹ இவதே பரிதாபஹாரீ
காமாக்ஷி புஷ்கரம் அத:குருதே கடாக்ஷ: |
பூர்வ: பரம் க்ஷணருசா ஸமுபைதி மைத்ரீம்
அன்யஸ்து ஸந்ததருசிம் ப்ரகடீகரோதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தே கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது, காலாம்புவாஹ இவ - காளமேகம் போல பரிதாபஹாரீ - ஜனங்களுடைய தாபத்தைப் போக்கிக்கொண்டு, தே கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது, புஷ்கரம் - புஷ்கரத்தை (ஜலத்தை, நீலோத்பலத்தை), அத: குருதே - கீழ்ப்படுத்திவிடுகிறது. ஆயினும், பூர்வ: - முந்திச் சொல்லப்பட்டதான காளமேகமானது, க்ஷணருசா - க்ஷணப்பொழுது ப்ரகாசிப்பதான மின்னலுடன், மைத்ரீம் - ஸமுபைதி - ஸ்னேகபாவத்தை அடைகிறது. அன்யஸ்து - மற்றொன்றான உனது - கடாக்ஷமானது, ஸந்ததருசிதம் - எப்போதுமிருப்பதான காந்தியை, ப்ரகடீகரோதி - வெளிப்படுத்துகிறது.

1. இந்த ச்லோகத்தில் அம்பிகையின் கடாக்ஷத்தை காளமேகத்திற்கு ஸமமாகச் சொல்லிவிட்டு அதற்குமிதற்குமுள்ள வித்யாஸத்தையும் எடுத்துக் காட்டப்படுகிறது. மேகமானது தனது வர்ஷங்களினால் ஜனங்களுடைய தாபத்தைப் போக்கி குளிரச்செய்கிறது. அம்பிகையின் பார்வையோ ஸகல லோகங்களுடைய (அத்யாத்மிக, அதிபௌதிக, அதிதைவிகங்களென்கிற) தாபத்ரயத்தையும் போக்கடித்து அவர்கள் மனதைக் குளிரச் செய்யும் சக்திவாய்ந்தது.

2. மேகங்கள் ஸாதாரணமாய் கருப்பாயிருக்கையில் மின்னல் தோன்றும்போதெல்லாம் ப்ரகாசத்தோடு இருப்பதாகத் தோன்றும். ஆனால் மின்னலானது க்ஷணருசி — க்ஷண நேரம் காந்தியோடிருந்துவிட்டு மறைந்துவிடும். அம்பிகையின் கடாக்ஷமோ எப்போதும் காந்தியோடு கூடியதாயிருக்கிறது. ஆகவே அம்பிகையின் கடாக்ஷமானது காளமேகத்தையும் கீழ்படுத்தும்படியான அம்சம் வாய்ந்ததென்பதாக இதில் வர்ணிக்கப்பட்டது.

3. புஷ்கரமென்று ஜலத்திற்கும் நீலோத்பலத்திற்கும் பெயர். மேகமானது ஜலத்தை கீழே வர்ஷிப்பதால் 'புஷ்கரம் அத: குருதே' என்று சொல்லப்பட்டது. அம்பிகையின் கடாக்ஷமானது நீலோத்பலத்தை ஜயித்ததான அழகோடிருப்பதால் அதைக் கீழ்ப்படியச்செய்கிறது என்பதாக 'புஷ்கரம் அத:குருதே' என்று அதைப்பற்றியும் சொல்லப்பட்டது.

40. ஸூக்ஷ்மேऽபி துர்கமதரேऽபி குருப்ரஸாத
ஸாஹாய்யகேன விசரன் அபவர்கமார்கே |
ஸம்ஸார பங்க நிசயே ந பதத்யமும் தே
காமாக்ஷி காடம் அவலம்ப்ய கடாக்ஷயஷ்டிம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, ஸூக்ஷ்மேऽபி - மிகவும் நுண்ணியதாயிருந்தபோதிலும், துர்கமதரேऽபி - செல்லமுடியாததாயிருந்தபோதிலும், அபவர்க மார்கே - மோக்ஷ மார்க்கத்தில், குருப்ரஸாத ஸாஹாய்யகேன - குருவின் அநுக்ரஹமென்ற துணையோடு, விசரன் - போய்க்கொண்டிருக்கிறவன், அமும் தே கடாக்ஷ யஷ்டிம் - இந்த உன்னுடையதான கடாக்ஷமென்ற ஊன்றுகோலை, காடம் அவலம்ப்ய - கெட்டியாக பிடித்துக்கொண்டு (போனால்), ஸம்ஸார பங்கநிசயே - ஸம்ஸாரமென்ற சேற்றுக்குப்பலில், ந பததி - விழுகிறதில்லை.

41. காமாக்ஷி ஸந்ததமஸௌ ஹரிநீலரத்ன
ஸ்தம்பே கடாக்ஷருசி புஞ்ஜமயே பவத்யா: |
பத்தோऽபி பக்தி நிகளைர் மம சித்தஹஸ்தீ
ஸ்தம்பம் ச பந்தமபி முஞ்சதி ஹந்த சித்ரம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, அஸௌ மம சித்தஹஸ்தீ - இந்த என்னுடைய மனமாகிற யானையானது, பவத்யா: - உன்னுடைய, கடாக்ஷருசி புஞ்ஜமயே - உன்னுடைய கடாக்ஷத்தின் காந்திக்கூட்டமென்ற, ஹரிநீல ரத்ன ஸ்தம்பே - இந்த்ர நீல ரத்ன ஸ்தம்பத்தில், பக்தி நிகளை: - பக்தியாகிற சங்கிலிகளால், ஸந்ததம் பத்தோऽபி - எப்போதும் கட்டப்பட்டிருந்தபோதிலும், ஸ்தம்பம் ச - அந்த ஸ்தம்பத்தையும், பந்தம் அபி - அந்தக் கட்டையையும், முஞ்சதி - விட்டுவிட்டு ஓடிப்போகிறது. ஹந்த சித்ரம் - என்ன ஆச்சர்யம்!

42. காமாக்ஷி கார்ஷ்ண்யமபி ஸந்ததம் அஞ்ஜனம் ச
பிப்ரன் நிஸர்க தரளோऽபி பவத் கடாக்ஷ: |
வைமல்யம் அன்வஹம் அனஞ்ஜனதாம் ச பூய:
ஸ்தைர்யம் ச பக்த ஹ்ருதயாய கதம் ததாதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, ஸந்ததம் - எப்போதும், கார்ஷ்ண்யம் அபி - கருப்பு நிறத்தையும், அஞ்ஜனம் ச - மையையும் பிப்ரன் - தரித்துக்கொண்டு, நிஸர்க தரள: அபி - இயற்கையாகவே சஞ்சலமாயிருப்பதுமான, பவத் கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது, பக்த ஹ்ருதயாய - பக்தர்களுடைய மனதிற்கு, அன்வஹம் - எப்பொழுதும், வைமல்யம் - மாலின்யமற்ற தன்மையையும், அனஞ்ஜனதாம் ச-களங்கமில்லாமையையும், பூய: - இன்னம், ஸ்தைர்யம் ச - ஸ்திரமான நிலைமையையும், கதம் ததாதி - எப்படிக் கொடுக்கிறது!

1. கடாக்ஷமானது க்ருஷ்ண (கருப்பு) வர்ணமாகச் சொல்லப்படுவதால் அதற்கு கார்ஷ்ண்யமிருப்பதாகச்சொல்லப்பட்டது, பாபத்தைக் கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது வழக்கம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆ ர் ய த ர் ம ம்.

ஈச்வர-௵ புரட்டாசி-மீ 21உ

## மாணவர்களிடையில் புரட்சிப் பிரசாரம் ?

இந்தியாவின் எதிர்கால க்ஷேமமானது நமது மாணவர்களின் ஒழுங்கான மனப்போக்கையே பொறுத்திருக்கிறது. குடும்ப தர்மங்களும், ஸமூஹ ராஜீய வ்யவஸ்தைகளும் ஒழுங்காக நிலைபெற்றிருக்கவேண்டுமானல் மாணவர்களை நல்வழியிற் பழக்கவேண்டியதே தேசத்தலைவர்களின் பொறுப்புவாய்ந்த கார்யமென்பது நிராக்ஷேபமாக விவேகிகளால் ஏற்கக்கூடியது. இவ்விஷயத்தில் தற்போது நடந்துவரும் ஆபத்கரமான பிரசாரமானது தேச க்ஷேமத்தில் உண்மையான சிரத்தைகொண்டவர்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கிவருகிறது. ஸமீப ஸம்பவங்கள் பலவும் இந்தக் கவலையை அதிகரிக்கக்கூடியவையாயிருக்கின்றன. இவ்விஷயத்தில் மற்றவர்களைவிட வ்யவஸ்தைகளையும், பொதுஜன மனப்போக்கையும் கெடுப்பதற்குக் காங்கிரஸ் பிரசாரகர்கள் கங்கணம்கட்டி நிற்பது ஒருபுறமிருக்க, ஸமூஹ, மதப் புரட்சியையே முக்ய லக்ஷ்யமாகக்கொண்ட அபேதவாதப் பிரசாரமும் பலப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். இந்தப் புரட்சிக் கொள்கையினர் தங்கள் விஷமப் பிரசாரத்தைப் பலப்படுத்த மாணவர்களையே முக்யமான ஸாதனமாகத் தெரிந்தெடுத்திருப்பது கவனிக்கத்தக்க விஷயம். பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும் படிக்கும் மாணவர்களிடையே இந்தப் புரக்ஷிக்காரர்கள் பெரும்பாலும் தங்கள் விஷமவேலையைச் செய்துவருகிருர்கள். ஏற்கனவேயே ஆங்கிலப்படிப்பாலும் நவீன நாகரிகத்தாலும் வழி தவறி நிற்கும் நமது மாணக்கர்கள் அபாயகரமான புரக்ஷிக் கொள்கைகளுக்கு இரையாகிவிட்டால் அதைவிட அனர்த்தம் வேறு என்ன? இப்போதே பெற்ருேர்களுக்கும், பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கும் கீழ்ப்படியும் குணமில்லாமல் எங்கு பார்த்தாலும் மாணவர்களின் கட்டுக்கடங்காமையும் வேலை நிறுத்தங்களும், பெரியோர்களை அவமதித்தலும் கணக்கில்லாமல் நடந்துவருகின்றன. இந்த நிலைமையில் அபேதவாதப் போக்கும் ஏற்பட்டால் நிலைமை என்னவாகும்?

காங்கிரஸ் வாதிகள் நிர்வாஹ அதிகாரப் பதவி ஏற்று ராஜாங்கத்தைநடத்தும் கார்யத்தில் இறங்கியுள்ள இச்சமயம் பார்த்து அபேதவாதிகள் தங்கள் பிரசாரத்தைப் பலப்படுத்த முன் வந்திருக்கிருர்கள். காங்கிரஸ் மந்திரிகள் செய்யும் தவறுதல்களும் இவர்களுடைய பிரசாரத்திற்குப் பின் பலமாக உபயோகிக்கப்படுகின்றன. தலைச்சேரியில் கேரள மாணவர்கள் கூட்டம் போட்டார்கள். இதற்கு பம்பாய் அபேதவாதக் கக்ஷித் தலைவரான ஸ்ரீமான் பாட்லி வாலா என்பவர் தலைமை வஹிக்க அழைக்கப்பட்டார். மாணவர்களின் கூட்டத்திற்கு அபேதவாதத் தலைவர் எதற்கு? இதிலிருந்து மாணவர்களின் மனப்போக்கு வெளியாகிறதல்லவா? ஸ்ரீமான் பாட்லிவாலா நெல்லூரில் பேசியதில் ராஜத்வேஷமிருப்பதாகக்கண்டு சென்னைகவர்ன்மெண்டார் அவரைத் தலைச்சேரிக் கூட்டத்தில் கைது செய்தார்கள். காங்கிரஸ் ஆக்ஷி நடக்கும்போது இப்படி நடந்ததை ஸஹியாமல், அந்த மாணவர்கள் "காங்கிரஸ் மந்திரி ஸபை வீழ்ச்சியடைக" என்று கோஷம் செய்து ஆர்ப்பாட்டம் செய்து வருகிருர்களாம். இதிலிருந்து மாணவர்களிடம் அபேதவாதப்புரக்ஷி அபிமானம் எவ்வளதூரம்விருத்தியாகி வருகிறதென்பது புலப்படவில்லையா?

மாணவர்களின் மனதில் புரக்ஷிப்போக்கையும், அடங்காமையையும் உண்டாக்கிய கைங்கர்யத்தில் ஸ்ரீமான் காந்திக்கும் ஸி. ரா. ஆசாரியருக்கும் பங்கு உண்டாயினும், இப்போது இந்தத் தலைவர்கள் ராஜாங்க நிர்வாஹ வேலையில் முனைந்திருப்பதால் புரட்சிப் பேச்சுக்களையும் கார்யங்களையும் எதிர்க்கவேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிருர்கள். அபேதவாதக் கக்ஷியார், காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹத்திற்கு இடையூறு உண்டாகக்கூடியபடி பிரசாரம் செய்வதை இவர்கள் விரும்பவில்லை. ஆதலால், ராஜிய விஷயங்களில் மாணவர்கள் அதிகம் கலக்கக்கூடாதென்று காந்திஜியும் ஸ்ரீமான் ஆசாரியரும் இப்போது அபிப்பிராயம் வெளியிடுகிருர்கள். ஸமீபத்தில் மாணவர்களின் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்கள் அதிகமாகிவிட்டதைப் பார்த்து காந்திஜியே வருந்தி தமது ஹரிஜன் பத்திரிகையில் இதைக்கண்டிக்க முன்வந்திருக்கிருர். மாணவர்கள் ராஜீயக் கொள்கைகளை நிர்ணயிப்பதோ, அவைகள் காரணமாக வேலைநிறுத்தங்களைச் செய்வதோ தமக்குப் பிடிக்கவில்லையென்றும் தாங்கள் இஷ்டப்படும் கக்ஷியிடம் மாணவர்கள் அநுதாபம் காட்டலாமாயினும், படிக்கும் காலத்தில் உபாத்யாயர்களை மீறி ஸ்வதந்திரமாக கார்யம் செய்வதைத் தாம் கண்டிப்பதாயும், ஒரு மாணவன் அரசியல் வாதியாயிருந்து கொண்டே தனது படிப்பையும் கவனிக்க முடியாதென்றும், காங்கிரஸ் மந்திரிகளுக்கு சிரமம் கொடுக்கக்கூடிய வழியில் மாணவர்கள் ராஜீய வேலை நிறுத்தம் முதலியவை செய்யக்கூடாதென்றும் காந்திஜி எழுதி யிருக்கிருர். நமது பிரதம மந்திரியான ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரும் சில தினங்களுக்கு முன் சென்னையில் மாணவர்களுக்கு புத்திமதி கூறுகையில் மாணவர்கள் ராஜீய விஷயங்களில் கலப்பது உசிதமில்லை யென்று அபிப்ராயம் வெளியிட்டார்.

அபேதவாதம் போன்ற புரட்சிகள் மாணவர்களிடம் அதிகம் தோன்ற ஆரம்பித்துவிட்டதை அறிந்த இவ்விருவர்களும் இந்த அபிப்பிராயத்தை வெளியிட முன்வந்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது. எப்படியும் மாணவர்கள் படிப்புக்காலங்களில் ராஜீய இயக்கங்களில் கலவாமலும், கலாசாலைச் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டும் வேலைநிறுத்தம்போன்ற கிளர்ச்சி நடத்தாமலும் அமைதியாகப் படிக்கவேண்டுமென்று காந்திஜி கட்டளையிடுவது வரவேற்கத்தக்கதே.

மாணவர்களின் மனப்போக்கானது நன்கு பரிபக்வத்தை அடையாதது. அநுபவமோ பொறுப்போ படிக்கும் காலத்தில் ஏற்படக்கூடியதில்லை. இந்தநிலைமையில் அவர்களிடையே புரக்ஷிப் பிரசாரம்செய்வது வெடிகுண்டுக்குத் தீவைத்து வெடிக்கச்செய்வதுபோலாகும். இந்த ஸௌகர்யமிருப்பதாலேயே புரக்ஷிக்காரர்கள் தங்கள் விஷமத்தைப் பரவச்செய்ய மாணவர்களைப் பிடித்திழுக்கிருர்கள். கிரீஸ் முதலிய தேசங்களிலும் புரக்ஷிக்காரர்கள் முதல் முதலாக மாணவர்களையே கெடுத்ததாகச் சரித்திரப் பிரஸித்தியிருக்கிறது. அந்த துஷ்கார்யத்தின் உதாஹரணமே இப்போது எங்கும் பின்பற்றப்படுகிறது. ஆதலால் காந்திஜி போன்ற காங்கிரஸ் தலைவர்களோ, மற்ற எக்கக்ஷியினரோ, தற்போது நமது மாணவர்கள் பயங்கரப் புரக்ஷிக் கொள்கைகளுக்கு ஆளாகி இந்தியா தேசத்தின் ஸமூஹ, மத-ராஜீய வ்யவஸ்தைகளுக்குப் பெரிய எதிரிகளாக வரக்கூடிய ஆபத்தைத் தவிர்க்கவேண்டியது அவஸர கார்யமாகும்.

## குறிப்புகள்.

### சட்டஸபைமெம்பர் பதவியும் அர்ஹதையும்.

ஒருவன் ஒரு பொறுப்பேற்ற பதவியை வஹிப்பதானல் அதற்கேற்ற குறிப்பிட்ட யோக்யதை அவனுக்கு இருக்கவேண்டுமென்பது ஸாதாரணமாக லௌகிக விஷயத்திலும் வைதிக விஷயத்திலும் கூட இருப்பதைக் காண்கிறோம். ஒரு வக்கீலாக இருக்கவேண்டுமென்ருல் அதற்காகவென்று சட்டம் படிக்கவேண்டும். அதில்லாதவன் வக்கீலாக முடியாது. இஞ்சினீரிங் படிக்காதவன் இந்த வேலைக்கு அர்ஹதையற்றவன். இந்தமாதிரி ஒவ்வொரு பெரிய உத்யோகங்களுக்கும் குமாஸ்தா வேலைக்கும்கூட அந்தந்த உத்யோகங்களுக்கென்றே ஏற்பட்ட படிப்பு இருக்கவேண்டியது அவச்யமென்றும் அதில்லாதவனை அந்த ஸ்தானத்திற்கு அர்ஹதையற்றவனென்றும் நினைப்பதும் ராஜாங்க கார்யங்களில் நியமமாக இருந்து வருகிறது.

நமது வைதிக கார்ய விஷயங்களிலும் இந்த நியமம் இருப்பதைப் பார்க்கிறோம்.

ஆனல் இந்த நாகரிக காலத்தில் ஏற்பட்டுள்ள பல விசித்ரங்களில் ஒன்று என்னவென்ருல், ஜனநாயக முறையில் நடக்கும் சட்டஸபைகளுக்கு வரும் ஜனப் பிரதிநிதிகளுக்குமட்டும் அதற்கென்று தனியாக ஒரு படிப்பும் பயிற்சியும் ஓர் அர்ஹதையாக இல்லாதிருப்பதுதான்.

அதாவது சட்டஸபை மெம்பராவதற்கு, மனிதனுகவும் ஒரு ஓட்டராகவுமிருந்தாலே போதும். வேறு யோக்யதை ஒன்றுமே வேண்டியதில்லை. இது தான் விநோதம்.

சட்டஸபைகளில் எவ்வளவோ சிறந்ததும் சிக்கலானதும் உயர்ந்த லக்ஷ்யத்தோடு கூடியதும், படிப்பு முதலியது நிறைந்த மேதாவித்தனத்தாலாகக்கூடியதுமான பற்பல விஷயங்கள் தீர்மானிக்கப்படவேண்டியவையாயிருக்கின்றன.

சட்டஸபை பிரஹஸ்பதிகளே பொது ஜனங்களுடைய ஸமூஹ, மத, ராஜீய நன்மைகளைப்பற்றித் தீர்ப்புக்கூறவேண்டியவர்களாக ஜனநாயக அமைப்பில் பெரிய அனர்த்தம் இருந்துவருகிறது. இதன் பலன் நெடுநாளாக நம்மால் அநுபவிக்கப்பட்டும் வருகிறது. ராஜீய, ஸமூஹ நன்மைகளைப்பற்றிய விஷயம் வரும்போது சட்டஸபை மெம்பர்களில் பெரும்பாலோருக்கு அதில் ஞானமோ பரிசயமோ, அநுபவமோ, பொறுப்போ ஒன்றுமில்லாமல் வாயில் வந்ததைத் தாறுமாருகப் பேசிவிடுவது ஸாதாரணமாயிருக்கிறது. இதற்கு மெஜாரிடி பலம் கிடைத்துவிட்டால் இந்தப் பிதற்றலே சட்டமாகிவிடுகிறது. இந்த அனர்த்தத்திற்குக் காரணமென்ன? சட்டஸபை மெம்பர்களாக வருகிறவர்களுக்கு இன்னின்ன விஷயமாகப் படிப்பு இருக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாதிருப்பது தான். இங்கிலீஷ், தமிழ் முதலிய பாஷைகூடத் தெரியாதவர்களும், எவ்விதப் படிப்புமில்லாதவர்களும் கூட இந்தியாவில் ஜனநாயகச் சட்டஸபையில் நமது பிரதிநிதிகளாக விளங்கி நமது ராஜீய ஸமூஹ மத தர்மாதிகளை நிர்ணயித்து நமது தலையில் எழுத அதிகாரம் பெற்றிருக்கிருர்கள். இதைவிட ஜனநாயக ஆட்சியின் விநோதத்தை அதிகம் வர்ணிக்கவேண்டியதில்லை.



### அறியாமையா ? விஷமமா ?

சட்டஸபை மெம்பர்களின் அறியாமையினல் ஏற்படும் அனர்த்தங்கள் பல உள. அவைகளில் ஸமீபத்தில் சென்னை ராஜாங்க ஸபையில் நடந்த விநோத ஸம்பவமும் கவனிக்கத்தக்கது. மது விலக்கைப்பற்றிப் பலர் பேசினர்கள். கள் குடிப்பது மனித ஸ்வதந்திரமென்ருர்கள் சிலர். தனி மனிதனுடைய ஸ்வதந்திரத்தில் தலையிடாதிருப்பதே ஜனநாயகத்தின் உண்மையான தத்வமென்று சிலர் வேதாந்தம் பேசினர்கள்.

இந்த வாதங்களுக் கிடையில், தெய்வ பிராம்மண தூஷணமும் அங்கு நர்த்தனமாடியது. ஸர். ரெட்டியார் நமது தெய்வமாகிய ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி ஸுராபானம் செய்ததாக அவதூறு கூறினர். ஸ்ரீமான் ராமன் மேனன் என்பவர் "பூஸுரர்" என்ற பதத்திற்கு விசித்ரமாக அர்த்தம் கூறி பிராம்மணர்கள் கள் குடிப்பவரென்று சொல்லி ஸந்தோஷப்பட்டார். இவ்விரண்டு அவதூறுகளையும் அங்கு கூடியிருந்தவர்கள் வாய்திறவாமல் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஹிந்துக்களாகிய மந்திரிகளுமப்படியே. பிராம்மணர்களை அவதூறு கூறுவது பலருக்குத் திருப்தியை அளித்திருக்கலாம். இதனல் அதை மறுக்க மனம் வராமலிருக்கலாம். ஆனல் 30 கோடி ஜனங்களால் சிறந்த தெய்வமாகக் கொண்டாடப்படும் ஸ்ரீ ராமனைப்பற்றிச் சொல்லப்பட்ட அவதூறுக்காவது யாராவது பதிலளித்தார்களா? அதுவுமில்லை! ஹிந்து மெம்பர்களுக்கு இவ்விஷயத்தில் உணர்ச்சியே ஏற்படாமல் போனது அதிசயமே. மஹம்மதிய கிறிஸ்தவாதி தெய்வங்களைப் பற்றியோ, ஜாதியைப்பற்றியோ இப்படிப் பேசியிருந்தால் என்ன நடந்திருக்கும்? ஸபையில் ரணகளம் ஏற்படாதா? இந்தியா முழுவதும் தீப்பற்றி எரியாதா? கண்டனக் கூட்டங்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அளவிருக்குமோ? இம்மாதிரி பேசியவர் நிபந்தனையன்றி அதை வாபீஸ் பெற்று மன்னிப்புக் கேட்க நேருமல்லவோ? ஆனல் அத்தகைய உணர்ச்சி ஹிந்து ஸமூகத்திற்கு ஏது? அதனல்தான் கோடிக்கணக்கான ஹிந்துக்களின் எதிரில் ஒரு ஹிந்துவே இம்மாதிரி நம் தெய்வத்தை அவதூறு செய்ததற்கு எவ்விதக் கேள்விமுறையுமில்லாமல் போய்விட்டது. ஸ்வாபிமானமும், பௌருஷமுமில்லாத நம் ஸமூஹத்தின் பயங்கொள்ளித் தனத்தையே இது வெளியாக்குகிறது. அவதூறை மறுத்து உண்மையையாவது சொல்லக்கூடாதா? இந்த நிலைமையிலிருந்தால் மேல்மேலும் இத்தகைய தூஷணம் துணிச்சலால் மலிந்துவிடுவது நிச்சயமே. ஸர். ரெட்டியார் தெய்வ அவதூறு செய்ததும், அதற்குடன் மற்ருெருவர் ஒரு சிறந்த நாகரிகம் வாய்ந்த ஜாதியாரை பஹிரங்கமாக அவதூறு கூற முன் வந்ததுமே இதற்குப் போதிய ருஜுவாகும்.

### திருவாழ்த்தான் ஸம்ஸ்கிருதம்!

திருவாழ்த்தான் ஸம்ஸ்கிருதமென்று பரிஹாஸமாகச் சொல்லுவதுண்டு. ஸ்ரீமான் ராமன் மேனன் என்ற மெம்பர் இந்த ஸம்ஸ்கிருதத்தில் மிகுந்த பாண்டித்யமுள்ளவர் போலும். ஸாதாரணமாக 2வது பாரத்தில் படிக்கும் மாணவனுக்குள்ள ஸம்ஸ்கிருத பரிச்சயம்கூட அவருக்கு தெரியாதென்பது தெளிவு. மிகப்பெரிய அபத்தத்தை ஒரு பஹிரங்க ஸபையில் பேச அவர் துணிவுகொண்டதற்கு அவரிடம் இரக்கம்காட்டவேண்டியதே போலும்! இவருடைய பேச்சுக்கு நாம் சிரிப்பதா, இரங்குவதாவென்றே தெரியவில்லை. ஆரம்பத்தில் நாம் சொல்லியதுபோல் இத்தகைய விஷயம் ஜனநாயக அமைப்பின் விரோதமென்றே சொல்லவேணும். பாஷையையும், சாஸ்திரத்தையும் ஸமூஹ தர்மத்தையும்கூட நன்கு அறிந்துகொள்ளாமல் ஒருவர் ஒரு தீர்ப்பு சொல்லுவது சட்டஸபையில் தான் ஸாத்யமாகிறது. இதேமாதிரி ஒருவர் சட்டஸபைக்கு வெளியில் பேசியிருந்தால் அவர் சித்தப்ரமம் பெற்றவரென்று மதிக்கப்படுவார். "பூஸுரர்கள்" என்ருல் பிராம்மணர்கள் கள்குடிப்பவர்களென்ற அர்த்தம் எந்த பிரஹஸ்பதியால் இவருக்குச் சொல்லிக்கொடுக்கப்பட்டதோ. அந்தோ! பரிதாபம் இவரை யாரோ வேண்டுமென்றே ஏமாற்றியிருக்கவேண்டுமென்று நினைக்கிறோம். இல்லையேல், இத்தகைய திருவாழ்த்தான் ஸம்ஸ்கிருத ஞானத்தைக் கொண்டு அதிகப்ரஸங்கம்செய்ய முன்வர வெட்கப்பட்டிருப்பார். கள்ளைப்பற்றி ஆதரித்துப் பேசும்போதே இத்தகைய புத்தி கலக்கங்கள் ஏற்படுகின்றனவென்ருல் கள்குடியால் என்ன தீங்குதான் விளையாது. கள்ளின் மஹிமையே மகிமை!! அதைத் தொலைக்கவேண்டியதற்கு காரணம் இனி அதிகம் வேண்டுமோ?

### மீண்டும் ஆழ்வாஞ்சேரி.

நம்பூதிரிகளின் கண்டனம்-

சென்னை மெயில் பத்திரிகையில் ஆழவாஞ்சேரி தம்புராக்களின் அறிக்கையைப்பற்றி ஆதரவும் மறுப்பும் மீண்டும் வெளியாகிவருகிறது. அந்த அறிக்கை உண்மையென்று சிலர் ஸ்தாபிக்க முயலுகிருர்கள் வேறு பலர் அந்த மாதிரி அறிக்கை உண்மையல்ல வென்றும் இது நம்பத்தகாததென்றும் யாரோ ஒருவர் நேரில் பார்த்ததாயும் போடோ படம் பிடித்திருப்பதாயும் கூறுவது விஷமமென்றும், அந்த அறிக்கையின் தேதி, வாசகம், முதலியவைகள் ஒற்றுமையாயில்லாமல் முரண்பட்டவைகளாயிருப்பதாயும் மற்ருெரு மறுப்பு மெயில் பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

நம்பூதிரி வகுப்பினர் ஆழ்வாஞ்சேரி அறிக்கையால் மிகுந்த ஆத்திரமடைந்திருப்பதாயும், கள்ளிக்கோட்டையிலோ தலைச்சேரியிலோ நம்பூதிரிகளின் ஸபையை நடத்தி ஆழவாஞ்சேரி தம்புராக்களின் செய்கையை கண்டிக்கவும், அவர்களை மதாசாரியப்பதவியிலிருந்து விலக்கி விடவும், அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி கேரள அரசர்களைத்தூண்டவும் பலமான யோஜனை செய்து வருகிறதாக மெயில் பத்திரிகையில் காணப்படுகிறது.

### கும்பகோணம்.

### பட்டாபிஷேக வைபவம்.

இவ்வூர் ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் பிரம்மஸ்ரீ வேப்பு சாஸ்திரிகளால் நடத்தப்பட்டு வந்த ஸ்ரீராமாயணப்பிரவசனத்தில் பட்டாபிஷேக கட்டமானது சென்ற வாரம் புதன்கிழமை வெகு சிறப்பாக நடந்தேறியது. இந்த வைபவம், ஒரு திரு விழாவாகக்கொண்டாடப்பட்டது. ஸ்ரீ மடத்தின் வாசல் புறமும், உள் பக்கமும் வெகுவாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீமான் ஸி.எஸ் தீக்ஷிதருடைய அரிய முயற்சியால் அன்று ஆயிரம் பேருக்கு மேல் பிராம்மண போஜனமும் வெகு நன்ருகச்செய்யப்பட்டது. பட்டாபிஷேக சமயத்தில் மடம் தாங்காமல் ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. ஸ்ரீ ராமாயணமும், ஸ்ரீராமர் படமும் வாத்ய கோஷத்தோடு ஊர்வலமாக எழுந்தருளப்பட்டு வந்தன.

பிரம்மஸ்ரீ சாஸ்திரியாருக்கு பொது ஜனங்கள் ஏராளமாகச் சம்பாவனைகளைச்செய்தார்கள். இவ்விஷயத்தில் ஸ்ரீமடம் ஏஜெண்ட் ஸ்ரீமான் குப்புஸாமி அய்யர். அட்வகேட் எஸ். ஸ்ரீநிவாசய்யர். முத்து. க. ரு. ஏஜெண்டு ஸ்ரீமான் குப்புஸாமி அய்யர். மாஜி இன்கம்டாக்ஸ் ஆபீஸர் ஸ்ரீமான் P. O. சிவராமய்யர் ஆகியவர்கள் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டது பாராட்டத்தக்கது. வக்கீல் குமாஸ்தாக்களும் இந்த வைபவம் நடக்க வேண்டியதற்குப் பல வழிகளிலும் உதவி செய்து பூர்ணமாக ஒத்துழைத்ததும் விசேஷமாக குறிப்பிடத்தக்கது.

ஒரு நிருபர்.

### கும்பகோணம்.

### ஸ்காந்த புராணப்பிரவனம்.

ஸ்காந்த மஹாபுராணந்தர்கதமான சங்கர ஸம்ஹிதை என்ற பாகத்தில், ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற 'பார்வதி ஜனனம், தபஸ் மஹிமை, தக்ஷிணமூர்த்தி சின்முத்ரார்த்த விவரணம், மன்மத விஜயம், பார்வதி கல்யாணம், குமார ஸம்பவம்' முதலிய விஷயங்களை ஈச்வர-௵ புரட்டாசி-மீ 19உ மங்களவாரம் (5—10—37) முதல் நடைபெறுகிற சாரத நவராத்திரி புண்யகாலத்தில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதீச்வாராளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு, ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளவர்களின் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், மன்னர்குடி மஹாஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், திருவையார் வேதசாஸ்த்ரார்ணவ ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரிகள் இவர்களுடைய ஸாக்ஷாத் சிஷ்யரான 'ப்ரஸங்கபானு வித்வத் பூஷணம்' சேங்காலிபுரம் 'ப்ரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள்' அவர்கள் 5—10—37 முதல் மாலை 6½-மணிக்குமேல் 8-மணிவரையில் சாஸ்திரார்த்தங்களுடன் பிரவசனம் செய்வார்கள். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து சிரவணம் செய்து ஸுக்ருத பலனை அடையும்படி பிரார்த்திக்கிறோம்.

பக்தர்கள்.

வாயுள்ளவன் பிழைப்பான்! என்பார்கள் மதுரை மங்கம்ம ஸத்திரத்தில் எங்கும் எந்த ஜாதியாரும் இருக்கலாம் என்று ஜில்லாசபை தீர்மானித்தாலும் ஓரிரு மஹம்மதியரிதை தங்களுக்குத் தனியிடம் கற்பித்து அதில் மற்றவர் தலையிடாதபடி செய்தனர். அவரைக் கண்டேனும் இந்தியருக்கு மதாபிமானமுண்டாகாதா? யாத்ரிகருக்காக ஏற்பட்ட இதில் அன்னியர் மாம்ஸபாகம்செய்யின் தர்மத்தை இயற்றியவர்கதி என்னவது? வே. ஸோ.

### ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

ஹாகும்பேட்டா
போலவரம் போஸ்டு (கோதாவரி).
கோதாவரி கீழ ஜில்லா.

## மறையோர் மானிடத் தெய்வமே.

உலகில் ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், (ஆக்கல், காத்தல், அழித்தல்) என்னும் முத்தொழில்களையும் முறையே நடத்தி ஸர்வஜீவ தயாபரனென்றும், கருணையங்கடலென்றும் அரியநாமங்கள் பூண்டு அநேக லீலாவிநோதங்களை நடத்தி தனது அரிய சக்தியால் மாந்தர்களைப் பிரமிக்கச் செய்து ஆதி, அந்தம் அழிவு அற்றவராய், ஒளி விளக்காம், தேஜஸ்வரூபனாய் விளங்கும் கடவுள், வேதத்தை ஸிருஷ்டித்து ஆன்மாக்கள் உய்ய வழிகாட்டியாய் தர்மமார்க்கத்தையும், மனிதர்களின் கடமையையும் நிலை நாட்டினார். பகவான் ஸத்யமூர்த்தியாயும், தர்மஸ்வரூபியாயும் விளங்குகிறார் என்பதை வேதம் 'ஸத்யம் வத,' 'தர்மம் சர,' என்பதுபோன்ற அநேக கட்டுப்பாடுகளை முறையிடுவதிலிருந்து நிரூபிக்கிறது.

நிற்க, வேதமானது குண, கர்மங்களின் வேறுபாட்டினால் மாந்தர்களை பிரும்மம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நான்கு வருணத்தவராகப் பிரித்து அவரவர் கடமைகளையும் அறிவுறுத்தி, முறையே அவர்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களையும் உலகில் அடையவேண்டிய வழிகளையும், மெய்ப்பித்துக் காட்டியதுடன் முடிவில் (வீடு) மோக்ஷம் என்னும் நான்காவது புருஷார்த்தத்தை அடையும் உபாயத்தையும் வெள்ளிடைமலையாக விளக்குகிறது.

இவ்வாறு முறையே வேதத்தினால் பிரிக்கப்படும் வர்ணப் பிரிவினையைத்தான், வேதப் பிரதிபாத்யனாய் விளங்கும் பரமாத்மா, கீதாசார்யனாய் அமர்ந்து அர்ச்சுனனுக்கு நேரில் உபதேசிக்குங்கால், "ஏ! அர்ச்சுனா! மனிதர்களில் அவரவர்களுடைய குணங்களுடையவும், கர்மங்களுடையவும், வேறுபாட்டிற்குத் தக்கவாறு பிரும்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்ற நான்கு வருணபேதங்களும் என்னால் உண்டுபண்ணப்பட்டன. அந் நான்கு வருணங்களுக்கும், நான் கர்த்தாவாயிருப்பினும், என்னை ஒன்றிற்கும் காரணனல்லனென்றும், நித்தியனென்றும், சுத்தனென்றும், அறிவாயாக," என்று கூறுகிறார்.

மேலும் பகவான், விதிப்படி செய்யப்பட்ட பரதர்மத்தைக் காட்டிலும் குணஹீனமான ஸ்வதர்மமே சிரேஷ்டம் என்பதை விளக்கி, அறிந்தோ, அறியாமலோ செய்யப் பட்டு வரும் குணஹீனமான ஸ்வதர்மமே சிரேஷ்டமென்று கொண்டாடி, ஸ்வதர்மானுஷ்டானத்தில் மரணமடைந்தாலும், நற்கதி பயக்கும், அதுவன்றி பரதர்மங்களை அனுஷ்டிப்பதினால் நரகம் சித்திக்கும் என்பதை உறுதி கூறுகிறார்.

ஆதலால் நான்கு வருணத்தவர்களின் ஸ்வதர்மத்தையும், அவர்களில் முதன்மையான (மறையோர்) பிராம்மணர்களின் ஸ்வதர்மானுஷ்டானத்தினால் உண்டாகும் பலனையும் ஆராய்வோமாக.

நான்கு வருணங்களில் முதன்மையான பிராம்மணன் வேதத்தை ஐயமுறக் கற்று வேத நெறியைக் கடைப்பிடித்தொழுகல்வேண்டுமென்றும், க்ஷத்திரியன் ராஜ்யபாரத்தை வகித்து, புஜபல, பராக்கிரமத்துடன் அரசனாகி குடிபடைகளை ரக்ஷிக்கவேண்டுமென்றும், வைசியன் வியாபாரத்திலீடுபடவேண்டுமென்றும், சூத்திரன் வேளாண்மையையே தொழிலாகக்கொண்டு பாடுபட்டுப் பயிரைக்காப்பாற்றி பலனைக் காலத்தில் உதவி, ஏனையமூன்று வருணத்தாரும் உஜ்ஜீவிக்க வழிகாட்டியாய் சிறப்புற்றோங்கவேண்டுமென்பது வேதநூற் பிரமாணமாகும்,

நிற்க, வேதத்தை ஐயந்திரிபற ஓதி உண்மைப் பொருளை உணருவதுடன், பிறர்க்கும் தெளிவுற ஓதிக் கற்பிக்க அதிகாரமுடைய மறையோர் யாகாதிகளினால் தேவர்களையும் அக்னிமுகமாக ஹோமங்களைச் செய்து திருப்தி செய்துவைத்து, தேவதைகளின் பூர்ண ஆசீர்வாதத்தைப்பெற்று தாங்கள் நீடூழிகாலம் ஆரோக்கிய திடகாத்திரர்களாய் வாழ்வதுடன் அல்லாமல் ஏனைய வருணத்தவர்களும் சுகமாக வாழ வழிகாட்டியாய் விளங்குகிறார்கள். இத்துடனல்லாமல் வேத மந்திரங்களை பலர் ஒருங்கே ஒன்றுகூடி சதா சர்வகாலமும் ஜபித்து அதற்கு பல பூதமான வேத மூர்த்தியை (பரம்பொருளை) தங்களுடைய மந்திர பலத்தாலும், தபோ பலத்தினாலும், சிலை, செம்பு, பிருதிவிகளில் மூர்த்தீகரித்து விளங்கும்படி ஆக்ஞையிட்டு பக்தர்களாய் நின்று பரமனின் தாளடிகளை வணங்கும் அடியார்களின் கன்மவினைகளையும் எளிதில் களைய வழிதேடுகிறார்களென்றால், பிராம்மணோத்தமர்களின் வன்மையை இவ்வளவென்று வரையிட்டுக்கூற இயலாததே ஆகும்.

சேர, சோழ, பாண்டிய அரசர்களில் சீரும், சிறப்பும் பெற்று வெகு நீண்டகாலம் தங்கள் தங்கள் ராஜ்யங்களை ஆண்டு வந்ததிற்கு காரணம் அவர்கள் முறையே வர்ணாசிரம தர்மங்களைப் பாதுகாத்து வந்ததினாலும் தங்களுடைய பெருமை என்றும் நிலைத்திருக்கும்படி, பல்லாயிரக்கணக்கான பொருளை வாரி இறைத்து தேவாலயங்களை நிர்மாணித்து சர்வேஸ்வரனை ஜீவ கலையுடன் பிரகாசித்து விளங்கும்படிசெய்து மாந்தர்களின் கர்மவினைகளை இன்றும் ஆலயங்களில் சென்று வழிபடுவதினால் நீக்கிக்கொள்ளும்படி கடாக்ஷத்தினாலும் தான் என்று சரித்திரங்கள் நிரூபிக்கின்றன. மேலும் வேதபாரகர்களான பிராம்மணர்கள் தங்கள் தங்கள் சுதர்மானுஷ்டானங்களை விடுத்து, யாக, யக்ஞ, ஹோமாதிகளால் அக்னி முகமாக தேவர்களையும், திருமூர்த்திகளையும் திருப்திசெய்து லோக க்ஷேமமாக பாடுபடும் அரும் பணிவிடையை அறவே அகற்றிவிட்டார்களேயானால் ஏனைய வருணத்தார் எப்பாடுபட்டாலும், காலத்திற் மழைபொழியாது; 'வானம் சுருங்கின் தானம் சுருங்கும்' என்றபடி வறுமை பெருகி நாட்டில் தரித்திரம் தலையெடுக்கும் என்பதை உள்ளத்தில் கொண்டு தான் சோழ, பாண்டிய அரசர்கள் பிராம்மணோத்தமர்களுக்கு சர்வமான்னிய கிராமங்களையும், அக்ரஹாரங்களையும் வெகுவாக அளித்து அவர்கள் தங்கள் கருமானுஷ்டானங்களைச் செவ்வனே செய்யும்படியும், அங்ஙனம் செய்யாதவர்களை சிக்ஷித்தும் வேத தர்மத்தைப் பாதுகாத்து வந்தார்கள். பிராம்மணர்கள் கெட்டுவிட்டார்களேயானால் நாடே சீர்கேடடைந்து விடும் என்பதை 'பசு மரத்தாணி' போல் மனத்தில் பதித்தவர்களாய் விளங்கினார்கள். நாடும் செழிப்புடன் விளங்கியது.

தற்காலம் நாடு சீர்கேடடைந்து வறுமை வாய்ப்பட்டுப் மெலிந்திருப்பதின் காரணத்தை நாம் நன்குணர்ந்தும், நம் மக்களையே ஆங்கிலக் கல்வி கேள்விகளில் பயிற்சிபெறச்செய்து அநாகரீக படுகுழியில் தள்ளி ஆசார ஹீனர்களாக்கி, ஆகம, புராதன, இதிஹாஸங்களின் பெருமையையும், நற்போதனையையும் அறியாத மூடர்களாக்குவதுடன், 'குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளாய்' நாஸ்திகம் பேசவிட்டுவிட்டு பொட்டைக்கிராப்பையும், முக மீசையையுமேகண்டு மகிழ்கிறோம். என்னே மடமை! போதாக்குறைக்கு மூளைக்கும் முன்னேயே மூக்குக் கண்ணாடி ஒன்றை மாட்டி, முதியோர் என்றும் பெரியோர் என்றும் பாராது ஏற இறங்கப்பார்க்கும் இறுமாப்பைக் கற்றுக்கொடுக்கிறோம். இதுவே தான் நாம் நம் நாட்டிற்குச் செய்யும் பேருபகாரம்.

ஒப்பற்ற சிவாஜி தாய்முகமாக ராமாயணப் பாரதக் கதைகளைக் கேட்டதின் பயனால் அரியபெரிய வீரனாய் விளங்கினான். கீர்த்தி இன்றும் உலாவுகிறது. ஆனால் நம்மக்களோ நாகரீகம் என்னும் படுகுழியில் விழுந்தவர்களாய், சேர, சோழ, பாண்டிய அரசர்களின் பெருமையையும், அவர்களின் தர்மத்தையும் அறியாது தர்மம். தர்மமென்று அநேகதரும சத்திரங்களைக் கட்டுவதிலும், அன்னதானமளிப்பதிலும், ஆலயங்களை நிர்மாணிக்க பல்லாயிரக்கணக்கான பொருளைப் பாழுங் கருங்கல்லிற்காக செலவழித்தும், ஆந்தை, கோட்டான் அடையவே அமைத்தார்களென்றும், அன்னதானத்தினால் அந்தணர்களைச் சோற்றுக்காக அலையும் சோம்பேறிகளாகவே செய்தார்களென்றும் நம்மிடமே தூற்றுகிறார்கள். என்னே விந்தை! என்னே பரிதாபம் பாருங்கள்!! .

இதுவே நாம் அவர்களுக்கு ஆங்கிலக்கல்வி கற்றுவைத்ததினால் பெரும்பயன். உண்மையில் நாம் நமது மக்களை வேத பாரகர்களாகவும், சாஸ்திர சம்பிரதாய கட்டுப்பாடுகளை உணரும் வண்ணம் வேதாத்யயனம் செய்யவிட்டிருந்தோமேயானால் இம்மாதிரியான அவதூறுகளைச் செவிகொடுத்து கேட்க நேரிடுமா என்று எண்ணவேண்டி வருகிறது.

ஆதலால் நாம், நம்மக்களையும், நம்மையும் கூடியவரையில் ஸ்வதர்மத்தில் பற்றுள்ளவர்களாய்ச் சீர்படுத்திக் கொள்வதுடன், நமது மஹரிஷிகளின் பெருமையைக் கோத்திரங்களின் மூலம் இன்றும் நாம் சொல்லிவருகிறோமென்பதை உணர்ந்து, கீழ்க்கண்டவாறு அந்தணர்களின் இயல்பை அறிவோமாக.

குருபாததாசர் அவரியற்றிய திருப்புல்வயல் குமரேச சதகத்தில் மறையோர் மானிடத்தெய்வமே! என்று கூறலுற்றார்.

வி. ராமச்சந்திரய்யர்
திருவிடமருதூர்.

## கோவிந்தபுரம் ஆராதனை,

15உ. (1—10—37) வெள்ளிக்கிழமை திருவிடைமருதூருக்கு சமீபத்தில் விளங்குகின்ற கோவிந்தபுரம், ஸ்ரீமத் போதேந்திர மடத்தில் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமி குருமூர்த்தியினுடைய ஆராதனம் மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. அக்காலத்தில் அனேக பக்தர்களும் பண்டிதர்களும் பாகவதோத்தமர்களின் ஸத்கதா காலக்ஷேபங்கள் நிகழ்ச்சி பெற்றன. சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன. அநேக ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது.

குறிப்பு:— ஷை ஆராதன காலத்தில் செங்காலிபுரம் பிரஸங்கபானு வைத்தியநாத சாஸ்திரிகளவர்கள் போதேந்திரஸ்வாமிகளுடைய கிரந்தத்திலிருந்து இக்கலியில் பக்திமார்க்கமே சிறந்ததென்றும், நாமபஜனம் அகண்ட தாரா பஜனம், ஸமுத்ர தாரணம் முதலிய பக்தி மார்க்க ஸம்ப்ரதாயங்கள், கீதாபாஷ்யத்திலிருந்தும் இதர புராணங்களிலிருந்தும் யுக்தி புரஸ்ஸரமாக உபன்யஸித்தார்கள்.

எல்லா மதஸ்தர்களும் முக்தி அடைவதற்கு சிறந்த ஸாதனம் இதுதான் என்றும் இந்த ஸம்ப்ரதாயத்தை பரவச்செய்தால் எல்லோரும் ஒத்துழைப்புடன் அகில ஸாம்ராஜ்யத்தை அனுபவிக்கலாமென்றும் குறிப்பிட்டார். மன்னார்குடி ப்ரம்மஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் காதுக்கினிமையாக கானம்செய்தார்கள். சூலமங்கலம் பிரம்மஸ்ரீ வைத்தியநாத பாகவதர் அவர்கள் குசேலோபாக்யானம் பக்தி ததும்பும்படியாக உபன்யஸிக்கப்பட்டது. திருவாரூர் Veterinary Inspector அவர்கள், சிஷ்யகணங்களுடன் ஷை கைங்கர்யத்தை நன்றாய் ஆதரித்தார்கள். சகல ஜனங்களுக்கும் தீர்த்த ப்ரசாதம் அக்ஷத ப்ரஸாதம் காலத்தில் வழங்கப்பட்டன.

ஒரு நிருபர்



## Sanatanist Conference at Madura.

*Speech delivered by Brahmasree B. S. Vythianatha Aiyar of Madras in opening the Conference of the Sanatanists of Madura, Ramnad, Tinnevelly and other Disiricts held at Madura.*

ARYA BHARATAS,

Our first foremost and most pleasant duty and of all the great and learned gentlemen, the best products of our Great Aryan civilization and culture, who have assembled in vast numbers to make this the fourth Conference of the Sanatanists of Madura, Ramnad, Tinnevelly and other Districts a grand success is to realise and remember with deep devotion and gratitude the power, the Adi Sakti presiding over the intelligence of all beings in the Universe for having promoted the great Dharmikas of the land to realise the seriousness and gravity of the situation facing the country at present and to organise such a conference of the best and patriotic intelligentsia with a view to deliberate upon the various complex problems that press on our countrymen for careful, timely and immediate solution.

The state of the people in our country at the present time is really in a very bad way. There is utter confusion and chaos on all sides. There are forces that deliberately aim at driving away or destroying the vedic Religion from its own home, Hindustan. There are influential leaders of people, Associations and organisations who, considering themselves the best products of and upholders of modern Western Civilization, are never tired of holding up to ridicule the Aryan Culture, Cultural institutions and ancient Civilization as unscientific and out of date and are endeavouring to establish their own pet isms such as rationalism, communism, socialism, Fascism etc., in the name of modern civilization and Democracy.

I would like to point out to you one or two points from the recent address delivered to the New Graduates at the convocation at Madras on the 30th July 1937, by Rao Bahadur A. Lakshamanaswami Mudaliar, Principal of the Medical College, Madras. It has been said by the learned Lecturer: "One of the greatest legacies of a University Training is, that the best thoughts of the men of letters of all Nations of the World are available for the keen student of human nature and it is these elevating ideas and ideals that will ere long help one to take his proper place in the body politic and add his quota to the welfare of the general public." I would like to ask the learned lecturer whether the best thoughts of men of letters of our own country (India) have been made available and taught to these new graduates? Are there no elevating ideas and ideals in our vast literature worthy of being taught and capable of helping them to take their proper place in the body politic and add their quota to the welfare of the general public ?

The lecturer also advised them that "True patriotism consists in ignoring differences and emphasising points of agreement, in discarding age-long customs and traditions which whatever their worth at one time have no place in a world permeated with the spirit of equality, fraternity etc." Has the learned lecturer so soon forgotten that in the Convocation ceremony itself, solemn promises, processions and address delivered by him are all taking place according to an age-long custom and traditions only. New Assemblies and Councils in India that have been formed are all bent upon establishing new traditions. conventions and usages etc., Why this hostility against age-long customs, traditions and usages, which have the force of law in a vast country like India, populated by various different classes, castes, sub-castes, creeds, religions, races, communities etc., strict and impartial maintenance of which alone is the only effective way of keeping the various divergent and hostile elements in this country under proper discipline and control, each in its proper place without causing much trouble or injury to other communities. Does this advice aim at peace or chaos in the country? The modern educated intellectuals should deeply think over such questions a thousand times before they preach such revolutionary reforms. There are already several people in the country preaching such ideas to the ignorant masses who are likely to create disturbances and break the law and order in the land.

### WESTERN EDUCATION.

MODERN EDUCATION IN ENGLAND AND HOW VIEWED BY BEST ENGLISHMEN.

RUSKIN:- A great men of letters, sage, philosopher art critic etc. of England emphatically declared: "I do not care that children as a rule should learn either reading or writing, because there are few in the world who get any good by either, broadly and practically whatever foolish people read, does them harm and whatever they write does other people harm. We suffer much more from the faults of others but lose more by our own ignorance."

HERBERT SPENCER: said "Even as appliances to intellectual culture books are generally overestimated. Something gathered from pages is supposed into a course of education, but if gathered by observation of life and nature, is supposed not thus to enter."

MILTON has said "The system of English education in England forces our children to stick unreasonably in flats and shallows."

LOCKE has said "Schools fit us for the University rather than for the world. Commission after commission and Committee after Committee have reiterated the same complaint. I fear that our present system does not really train the mind or cultivate the power of observation or even give the amount of information which one may reasonably expect from the time devoted to it. General culture is deprecated because it is said that smatterings are useless."

SIR JOHN HERSHAL has said 'There is scarcely any phenomenon which can be fully and completely explained in all its circumstances without the union of several" perhaps of all the sciences. Our present system in most of our Schools sacrifices everything else to Classics and Arithmetic. Our students leave colleges unable to speak either Latin or Greek and without absolutely any interest in classical history or literature. Wisdom at one entrance is completely shut out."

1 Our great mistake in education is the worship of book learning.

2. We strain the memory instead of cultivating the mind.

3. Our chindren are wearied by the Mechanical art of writing and the interminable intricacies of spelling.

4. They are oppressed by the columns of dates and lists of kings and places which convey no definite idea to their minds and have no relation to their daily wants and occupations.

5. We should give them a wholesome variety of mental food and endeavour to cultivate their tastes rather than fill their minds with dry facts.

A boy who leaves his school knowing much but hating his lessons will soon forget almost all he ever learnt while another who had acquired a thirst for knowledge even if he had learnt little, would soon teach himself more than the former ever knew. Our schools in fact become *places for discouragement of learning* and thus produce every opposite effect from that at which we aim. Our children should be trained to observe and think and enabled to form wisest judgements in the work of life. Another point in which our educational systems might be amended is, that it lends at present to give the impression *that everything is known.* The greatest lesson to be impressed on boys was that "what we know is as nothing to what we do not know, that *the great ocean of truth lies all undiscovered before us.*" A wise system of education should at least teach us how little man yet knows and how much he has yet to learn.

BOYLE in one of his essays on "Man's great ignorance of the uses of natural things" says "There is no one thing in nature whereof its uses to human life are yet thoroughly understood" a saying which is still as true now as when it was written. Such being the state of education in England what was the state of Education in India?

### ANCIENT INDIAN EDUCATION.

Impartial observers and historians of the West like Megesthenes (Greek) and others who visited India as far back as the 4th Century B. C. and subsequently have recorded about the state of education imparted then in the country and on many other matters. They have recorded with admiration that high education was imparted to students in classes by preceptors and specialists in Vedas, and Shastras such as Grammar Philosophy, Logic, Mathematics, Astronomy, Literature, Medicine, Law, Smritis, Music and various other sciences and Arts in various important places in India and in such ancient centres of learning as Benares, Nadhea, Nalanda, Taxila, Avantipuram, Ujjaini, Kanchi etc., which contained World Universities. They were owned and managed by Professors and maintained by the Hindu community. They survived many a political revolution because they never depended upon any government support. They have turned out several of the greatest men the world has ever produced. There was no hesitation in saying that so far as real culture is concerned they would compare not unfavourably with any university in the world ancient or modern.

Until the middle of the last century there existed in India a very wide-spread system of elementary education also entirely independent of Government maintained by the community. According to Sir Thomas Munroe in the Presidency of Madras in 1825 there were 12,498 schools and the population then was 12,850,941 i. e. one school to about a thousand of population or one in 590 of male population.

Plain living and high thinking, ethical and spiritual culture and finest human character was widely prevalent. Their generosity, simplicity, honesty, truthfulness, courage refinement and gentleness were proverbial.

*Strabo:* said "They (the Hindus) are so honest as not to require locks to their houses nor writing to bind their agreements."

*Hieven Tsang:* the most famous of Chinese travellers says: "The Indians are distinguished by the straightforwardness and honesty of their character. With regard to riches they never took anything unjustly,"

*Marco Polo:* has recorded "The Brahmans are the best merchants in the world and the most truthful. They would not tell a lie for anything on earth."

*Megesthenes* (Greek) observed with admiration "the absence of slavery in India, the chastity of women and the courage of men. Their generosity, tolerance, frankness intelligence, courtesy, loyalty, gentleness, sobriety, love of knowledge, industry valour and a strong feeling of honour are even now remarkable."

## The Premier's attack and Lawyers.

*Mr. M. K. Vaidyanatha Aiyer, B.A.,B.L.,*

The Prime minister had recently a cheap fling at the legal profession. He is reported to have addressed a Salem audience that "Vakils agitated for reduction of court fees" and they wanted to increase litigation to increase their own practice" "Poor ryots were ruined by litigation." "If litigation was costly they did not rush to courts. If it was cheap they would easily go to court to spite their neighbours. This agitation was not based in the best interests of the country." Evidently the Premier finds the lawyer element inconvenient for the new despotism. The lawyer has been foremost in the service to his country. By training, by atitude and with opportunities the practice of the profession gives him to study public questions and lead, he has always been in the vanguard. The Congress had been started and brought up by lawyers. Most of our self-governing institutions, whether Local Boards or Municipalities, Joint Stock Concerns, Co-operative Societies or Land Mortgage Banks, have in almost all instances been worked by lawyers to a high degree of efficiency. Not only in our own country but in England and elsewhere the lawyer element has contributed the greatest for national progress. The present ministry is composed of a number of lawyers and the Premier was himself a leader of the Bar in his days. If the Congress was returned at the polls by overwhelming majorities, not a little of that succes was due to the indefatigable energy and earnest endeavours of the Bar. Why the Premier should foul his nest is not quite apparent.

What is a government for? What are the primary functions of a government? To protect the subjects from outside aggression and from internal warfare is the first duty of the State. To insure private rights of property, to uphold the sanctity of contracts and compel the people to respect them is the next duty of the State. For this the civil judiciary is intended. If just rights are not respected, what is the subject to do? If you tax justice too heavily, do you not prevent the truly injured from seeking the protection of the State? Has the Premier got statistics of the litigation in this country, how much of it is speculative, how much is to spite neighbours, how much is for enforcement of just rights and how much again arises out of bonafide difference of opinion regarding disputed rights? Do the judiciary and the Bar support the Premier? Do the litigant public support him?

There is no logic in the statement that high court fees will tend to minimise bad litigation. High court fees will equally tend to deny justice to the poor helpless litigants whose rights are infringed by powerful or unscrupulous opponents. The world is mixed good and evil, but the good is always greater, otherwise society cannot thrive. Honest litigation is any day much larger in volume than dishonest, speculative and vengeful fights in courts. The opinion of the Bar is—they are the most competent to express it–that the unduly heavy court fee has meant denial of justice in many cases.

The Premier suggested that if the vakils appeared *without* fees, he would get fees in the courts *reduced* too" This is rather in too light a vein for a responsible statesman. Why should the vakil go without any fee, for the State to reduce the court fee, mind not abolishing court fee altogether? Professional service has become considerably cheaper for the public—both on account of the increasing numerical strength of the Bar and the paucity of work and general financial depression. If court fees should be reduced in that proportion, the scale would go even lower than the previous 1922 level.

This cheap gibe indulged in by the Premier is sure to bear no good, and is likely to have its repercussions. Already people ask themselves whether the new dispensation is any improvement upon the old. The path of wisdon and statesmanship is not in riding rough shod or setting up one class and holding up another to contempt or contuncly, but in earnestly enquiring into grievances, endevouring to conciliate all sections of the public taking the country along with the government and prayerfully executing the God given trust of the good of the governance of the Province. May the leaders Congress carry on the administrationin such a way that there will be only one party in the country and that the Congress, without giving rise to any powerful and discontented opposition!

(Continued from previous page.)

*Darwin:* (p. 484, on his voyage) says: "Cleanliness of Hindus is proverbial. The Hindu convict is better man than a European."

*Ward:* says 'In their forms of address and behaviour in Company, the Hindus must be ranked amongst the politest nations."

*Mon Delbois*: says "The influence of that civilization worked out thousands of years ago in India, is around and obout us every day of our lives. It pervades every corner of the civilised world. Go to America and you find there as in Europe influence of that civilisation which came originally from the banks of the Ganges."

*Dr. Furnell.* Surgeon General and Sanitary Commissioner for Madros in his Convocation address delivered on 1—4—1882 said "As the ancient Hindus were superior to all others in other respects, so also were they superior to the others in recognising the importance and value of water as well as insisting upon preserving the water from filth of any kind whatever." In his Convocation address delivered in 1879 the same officer said "Hindu Physicians were unrivalled in all branches of medicine at the time when Britons were savages and used to go about quite naked."

## வாரக்குறிப்புகள்.

மார்க்கதர்சி வாழ்க! அரக்கன் முடி சூட்டல், பிறந்த நாள் ஜூபிலி முதலிய காலங்களில் குடிகளிடமே பண வசூல் செய்து வருவதையே கண்ட நமக்கு பிகானீர் மஹாராஜா துலாபார வகையில் ஸர்வமதங்களும் வளர தாமளித்தது வாழ்க!' ஏனையோர் இதைக்கைப்பற்றுக!

ஆக்க வழியில் செய்க! ஹரிஜந வாரம் தடபுடலாக நடந்தது. திரும்ப திரும்ப கூட்டம் கூடி தர்ம நிந்தை நாஸ்துதி வர்ண ஸாங்கர்ய மிவைகளைப்பேசிக்கழித்தார்களே தவிர அந்த ஜாதிக்கு மதாபிமான மூட்டி சுத்தத்தை உபதேசித்து ஜல வசதி கால் வயிற்றிற்கேனும் கஞ்சி படுக்க இடம் இதை எவரும் செய்ய வில்லை!

சந்த்ர நாகூர் எதிர்க்கிறது!! புதுச்சேரி கவர்னர் துர்மந்திரிகள் யோசனைக்கிணங்கி சாரதாசட்டத்தை அங்கீகரித்தார். இதை இவ்வூர் புரோஹிதரும் மஹம்மதியரும் சேர்ந்து எதிர்க்கின்றனர். அதை ரத்து செய்வது தர்மம், நியாயம், அழகு!!

### சென்னை
### சாரதா நவராத்ரி மஹோற்சவம்.

சென்ற ஒரு வருஷ காலமாக, கபாலீசுவரர் சந்நிதிக்கு எதிரில் கிழண்டை மாடவீதிவணிக வைஸ்ய மண்டபத்தில். சாஹித்திய வாங்முகபூஷணம், தர்மசேவாதுரந்தர ஸ்ரீவத்ஸ சோமதேவசர்மா அவர்களால் ஸ்ரீமத் பாகவதம் உபன்யசிக்கபட்டு வருவது அனைவரும் அறிந்த விஷயம். நாளது ஈஸ்வர-ஞு புரட்டாசி-மீ 19உ செவ்வாய்கிழமை முதல் 28உ வியாழக்கிழமைவரையில் (அதாவது அக்டோபர்-மீ 5–10–37 முதல் 14–10–37 வரை) நவராத்திரி உத்ஸவ காலத்தில் அதேமண்டபத்தில் பிரதி தினமும் இரவு 8–மணி முதல் 10–மணி வரைஷையாரால் தேவி பாகவதப் பிரவசனம் நடைபெறும். அச்சமயம் பக்த கோடிகள் அனைவரும் விஜயம்செய்து சாரதாம்பிகையின் பிரசாதத்தை அடைந்து உபன்யாசகர் அவர்களையும் கௌரவிக்கவேணுமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

பக்த மகாஜனங்கள், மயிலாப்பூர்.

(2-ம் பக்கத்தொடர்ச்சி.)

படக்கூடிய அர்த்தமில்லை. இதனால் ஸ்ரீ வித்யையில் ஸ்ரீமான் அய்யரவர்கள் பூர்ண ஸாமர்த்யம் பெற்றவர்களென்பது வ்யக்தமாகிறது.

பலர் மூலக்ரந்தத்தின் உண்மைக்கருத்தை உணராமல் துளஸீ, துளஸீ, தீர்த்தம், தீர்த்தம் ஸஸ்வரம்வேதர், விஸ்வம் வேதார்த்தம் என்ற ரீதியில் மொழிபெயர்த்து விடுகிறார்கள். ஸ்ரீமான் அய்யரவர்களோ, அப்படியில்லை ஆர்யாத்விசதியின் உண்மைக்கருத்தை உணர்ந்து மொழிபெயர்ப்பு எழுதியிருக்கிறார்கள். இது ஸ்ரீ நகரவிளக்கத்தின் சுருக்கம். என்ற பூர்வபாகத்தால் நன்கு வெளியாகிறது ஸ்ரீ நகரவிளக்கச்சுருக்கத்தை, ஆர்யாத்விசதியின் தாத்பர்ய ஸாரஸர்வஸ்வமாகக் கூறலாம். ஆர்யாத்விசதியின் தாத்பர்யமாகும் முகத்திற்கு, ஸ்ரீ நகர விளக்கச்சுருக்கம் ஒரு மாசற்றக் கண்ணாடியாக விளங்குகிறது. ஆர்யாத்விசதியில் சொல்லியுள்ள, ஸ்ரீ நகரக் கோட்டைகள், சிந்தாமணி க்ருஹம், ஆவரண தேவதைகள், குருமண்டலம், நித்யாதேவதைகள், இவைகளின் விவரணங்கள் எளிய தமிழ்நடையில் இவரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. இடையிடையே அந்த ஸந்தர்ப்பத்துக்கேற்றப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ நகர விளக்கச்சுருக்கத்தை கவனித்தால் துர்வாஸருக்கு ஆர்ஷஜ்ஞானம் ஆவிர்பவித்திருந்ததுபோல், ஸ்ரீமான் அய்யர் அவர்களுக்கும், ஆர்ஷஜ்ஞானம் அம்பாளனுக்ரஹத்தால் ஆவிர்பவித்துவிட்டதாகவே நினைக்கும்படி யிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட முயற்சி எடுத்துக்கொண்ட ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு அம்பாள் அகிலாபீஷ்டங்களையளிக்கும்படி நான் அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

உயர்ந்த தமிழுரையுடன் கூடின இவ்வுத்தமக்கிரந்தத்தை வெளியிட்ட ஸ்ரீமான் அய்யரவர்களின் பரிச்ரமத்தை நாம் ஸபலமாகச் செய்வதானால் ஒவ்வொருவரும் இதனை வாங்கி வாசிக்கவேண்டும். தனது நண்பர்களையும், பெண்டீர்களையும், வாசிக்கத் தூண்டவும்வேண்டும். எவ்வளவோ செலவில் 1 ரூ. பெரியதல்ல. இதிலுள்ள விஷயங்கள் அவ்வளவு அருமையானவை. இதன் மூலம் ஸ்ரீமான் அய்யரவர்களை நாம் உத்ஸாஹமூட்டி, இதுபோன்ற வேறு கிரந்தங்களையும் பெயர்த்து வெளியிடும்படி செய்யவேண்டும்.

அசுத்தமின்றி அழகாக கிளேஸ் பேபரில் 122 பக்கங்களில் அச்சிட்ட இப்புஸ்தகத்தைக் கையிலெடுத்தால் கீழேவைக்க மனம் வாராதென்பது நிச்சயம். பராதேவதா பக்தியும் பூர்ணமாய் உதிக்கும். பிரிய வாசகர்களே! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

ஆத்ம வித்யா பூஷணம்.
V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.



## பிராம்மணர்களுக்கு விக்ரஹாராதனம் அவச்யம்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டநாமெல்லோரும் மாயையின் வசப்பட்டவர்கள். ஈஸ்வரன் ஒருவரே மாயையின் வசப்படாதவர். யாவற்றிற்கும் காரண பூதர். அவராலேயே நாம் உண்டாக்கப்பட்டும், ஸம்ரக்ஷிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வருகின்றோம். அவனன்றிஓர் அணுவும் அசையாது. அவனையேநாம்அடையக்கடமைப்பட்டவர்களாகின்றோம்.

ஆத்ம சுகத்தை விரும்பி, பிரபஞ்ச வாழ்க்கையில் உழல விடுத்த ஈஸ்வரனை மனோ வாக்கு காயங்களால் ஸ்தோத்தரித்து அவனுடன் இரண்டறக்கலக்க பிரசாதம் பெறப் பாடுபடவேண்டியது புத்திமான்களின் கடமைஆகும். சாமான்யப்புத்தியுள்ளவர்கள், கடவுளைக்கனவிலும் கருதாமல், தங்களுக்கு ஜன்மாந்திர பாக்யத்தால் கிடைத்தஅழிவுள்ள ஸம்பத்தையும், பெண்டு பிள்ளைகளையும் ஸ்திரமாக எண்ணி, அவர்களின் இஹலோகாபிவிருத்திக்கே பூராக் காலங்களையும் விருதாவாகக்கழித்தவர்களாய், ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டது என்பதை நினையாமலும், அன்னவரை பஜிக்காமலும், அந்திய காலத்தில் ரோகங்களால் பீடிக்கப்பட்டு மாள்வதுடன் மறுஜன்மாவில் தாழ்ந்த பிறவியை அடைந்து கஷ்டப்படுகிறார்கள்.

மறு ஜன்மாவில் சுகத்தை அனுபவிக்கும் பொருட்டு, பலனை இச்சித்துக்கர்மாக்களைச் செய்வதும் கொஞ்சம் அறிவின்மையே. பிரதிப்பிரயோஜனத்திற்காக கடவுளை ஸ்தோத்தரித்தால் கர்மாக்களை அனுபவிக்கபாத்யப்படுகிறான். ஸாயுஜ்ய பதவி என்றபிறப்பில்லாத அழிவற்ற சுகத்தை அடைவதற்கு இடமில்லாதுபோகின்றது. பிறப்பற்றிருக்க விரும்பி கடவுளை துதிப்பது அபேக்ஷை அல்லவோ என்றால், நிரபேக்ஷையாய் ஈஸ்வரனை தியானிப்பது தான் பெரியோரின் கொள்கை. ஆனால் கற்கண்டை காட்டி குழந்தைகளுக்கு எண்ணெய் கொடுத்து சுகம்பெறச்செய்வது போல், அழுக்கடைந்த மனதுடையவர்களை நல்வழிப்படுத்த, கடவுளால் இன்ன இன்ன சுகத்தைப்பெறலாமென்று சொன்னாலல்லது கடவுளிடம் பக்தி என்பது அவர்களுக்கேற்படாது.

ஈஸ்வரன் பக்திக்கு வசமாகிறான். கடவுளினருள் பக்தியினாலன்றிக்கிடைக்காது. அந்த பக்தியோ, ஸத்ஸங்கத்தினாலும், ஸதாசார பிரவிருத்தியினாலும், விக்ரஹாராதனை முதலிய அனுஷ்டானங்களாலும் உண்டாகின்றது. பிரகிருதத்தில் விக்ரஹாராதனையை எடுத்துக் கொண்டிருப்பதால் அதை விமர்சிப்போம்.

நீலகண்ட தீக்ஷதர், ஐயர்வாள், தியாகராஜஸ்வாமிகள் முதலிய பக்த சிரேஷ்டர்கள் விக்ரஹாராதனை செய்து, பக்தி ஜன்யமாய் முமுக்ஷுத்வத்தை அடைந்தார்கள். மேலும், ஸர்வாந்தர்யாமியான பகவான் எங்குமிருக்கிறானென்றும், அவரை விக்ரஹங்களில் ஆராதிப்பது பிரயோஜனமில்லையென்றும் நினைப்பது பிசகு. ஓர் கிளையை விட்டு மற்றொரு கிளைக்குத்தாவும் மனதை ஓர் நிலைப்படுத்தி கடவுளை அன்புடன் பஜிக்க விக்ரஹாராதனையே இன்றியமையாத ஸாதனமாகும். ஸர்வாந்தர்யாமியான ஈஸ்வரன் யத்பாவம் தத்பவதி என்றபடி எந்த இடத்தில் எந்த விதமான ரூபத்தோடு கொண்டாடுகிறோமோ அதற்கனுகுணமாகவே ஆவிர்பவிக்கிறார். ஈஸ்வரன் விக்ரஹரூபத்திலா, இருக்கிறானென்றால் யாவராலும் அறியக்கூடாத பொருளை, உருவத்தில் காட்டியிருப்பது உசிதம்.

அப்படிச்செய்வதால் ஈஸ்வராபராதம் ஏற்படுமோ என்றால், பக்தியின் பொருட்டுத்தன்னால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள், செய்யும் பிரதானமே ஒழிய, உத்கிருஷ்டார்த்தம் காட்டிய பொருள்கள் பிரதானமல்ல என்று நினைத்து அவர் வசமாகிறார். பக்வ நிலையை அடையாதவர்களுக்கு, ஒரு பொருளைப்பற்றி பிரமாதமான விவரத்தைச்சொல்லி விழிக்கச் சொல்லுவதைப்பார்க்கிலும், இதுதான் அது என்று ஒரு வஸ்துவைக்காட்டினால் அவர்களுக்கு தக்ஷணமே ஸ்வச்சமாகத்தெரியும். ஆகையால் தான் நம் முன்னோர்கள் விக்ரஹாராதனையைக்கைக்கொண்டு சகலவிதமான சிரேயஸ்ஸையும் அடைந்திருக்கிறார்கள்.

நாமும் அவர்களின் பாதையில் சென்றால் ஸாயுஜ்ய பதவியை அடையலாமென்பது திண்ணம். கிருஹஸ்த தர்மத்தில் தேவதார்ச்சனை பிராம்மணர்களுக்கு முக்கியமானதர்மமாதலால், லௌகிகர்கள் உள்பட, அதைஆசரிக்க வேண்டிய விஷயங்களைத்தெரிந்து அனுஷ்டித்து சர்வவல்லமையுள்ள ஈஸ்வரனின் கிருபைக்கு பாத்திரராவார்களாக.

சிவரும கணபதி கனபாடிகள்.

## இயல்வது கரவேல்.

அறிவுடைய மாந்தர் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை நன்குணர்ந்து வாழ்நாளிடையிற் கிடைத்த பொருள்கள் கடவுள் தம் இனிய கிருபையால் பிறருக்கு உபகாரப் படுத்தும் பொருட்டே கொடுத்தருளியவை யென நினைந்து, இறப்போர்க்கு தம்மிடத்துள்ளனவற்றை ஒளிக்காமல் கொடுப்பர். ஏனெனில் இவ்வுலகத்தில் எவரும் பிறக்கும் பொழுது யாதொன்றுங் கொண்டு வந்ததில்லை; இறக்கும் பொழுதும் கொண்டு போவதில்லை இரப்பவர்க்கீதலால் குறைபடும் என்றெண்ணி ஒளித்து வைப்பவர் ஓர் உண்மையை அறியார் போலும், அதாவது இறைத்தோறும் ஊறும் கிணறு என்பதே உள்ளம், உரை, செயல் இம்மூன்றும் ஏகோபித்து எக்காரியமும் நடக்கல் வேண்டும். உள்ளதை மறைத்துரைக்கும் தன்மையோர் ஸர்வக்ஞராகிய கடவுள் இருத்தலை மறந்து விடுகின்றனர். தம்மை நாடி நச்சி வருவார்க்கு தானஞ் செய்யாதவன் மறு ஜன்மத்தில் பிரமராக்ஷஸாய்ப்பிறப்பானும். பூததயையுள்ள அறிஞர், கொடுக்கக்கூடியதை ஒளிக்கவே மாட்டார்கள்.

'அன்பிலாரெலாந்தமக்குரிய ரன்புடையார், என்புமுரியர் பிறருக்கு' தன்னிடத்தை யடைந்த குறிய நடையை யுடைய புறவினது அழிவினைக்கண்டஞ்சித்தன்னழிவிற்கஞ்சாது தராசுத்தட்டிலேறினான் சிபிச்சக்கரவர்த்தி. தமது முதுகெலும்பை விருத்திராசுரனை வெல்லும் பொருட்டு இந்திரனுக்கு கொடுத்தான் ததீசி முனிவன். தனது மரணத்தைக்கருதாது தன்னுடன் பிறந்துள்ள கவச குண்டலங்களை அந்தண வடிவங்கொண்டு வந்து யாசித்த இந்திரனுக்குக்கொடுத்துயர்ந்தான் கர்ணன். முதிரமலைச்சாரலில் ஆண்டு வந்த குமண வள்ளல் புலவனை நோக்கி 'புலவரே! யான் அரசாண்டு வந்த காலத்து நீவிர் வந்திலீர். எனினும் நமக்கு நல்கும் பொருளொன்று என்னிடத்துளது. அஃது யாதெனின், எனது தலையேயாம். எனது அநுசன் எனது தலையை கொணர்பவருக்கு ஆயிரம் பொன் விலை தருவதாய்ப் பறைசாற்றுவித்திருக்கின்றனன். ஆதலின் நீவிர் இக்கூரிய வாளால் எனது சென்னியை அரிந்து என்னுடைய சகோதரன் கையிற்கொடுத்து அவன் அளிக்கும் விலைப் பொருளைப்பெற்று நும் வறுமை நோயைத்தீர்த்துக்கொள்வீராக' என்று களிப்புடன் கூறினான். மன்னுயிர் மேல் வைத்த அன்பால் தலையையுங் கூடத்தியாகம் செய்யத்துணிவர் தான் சம்பாதித்த பொருளில் ஒருவருக்கும் ஒரு காசளவும் செலவு பண்ணலாகாதென்று விரும்பித்து எழுதுகின்ற சித்த விருத்தி லோபம் உலோபத்திற்கிலக்கணம் உற்ற பொருள் பற்றியுதவாமை யுருவாம். என்ப இதனை இவறல், கடும்பற்றுள்ளம். என்பர். இது மிகவும் கெட்ட குணம். நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை. "இலனென்று மெவ்வமுரையாமை ஈதல், குலனுடையான் கண்ணே யுள" துன்பந்தரு மொழியை யாசிப்பானொருவன் றனக்கு சொல்லுவதற்கு முன்னே அவன் குறிப்பறிந்தீதல்; அத்துன்பந்தரு மொழியை மறுபடியும் பிறனொருவனிடத்திற் போயவன் சொல்லாத வண்ணம் பொருளைக்கொடுத்தல்; யானிப்போது பொருளுடையேன் அல்லேனென்று தம்மிடத்திலுள்ள பொருளை யாசகருக்கு மறைப்பவர்சொல்லுந்துன்பந்தருமொழியைச்சொல்லாது பொருளைக்கொடுத்தல் என்றுங் கொள்க. இயல்வதைக்கரத்தினாலே தான் இம்மாநிலத்தில் இன்னல்கள் உண்டாகின்றன. அங்ஙனன்றிக்கே கொடுக்கக்கூடியதை ஒளிக்காது கொடுத்தலே மிகச்சிறந்ததென்பது நன்குபெறப்படும். அவ்வையாரின் அமுத மொழிகளின் ஆழ் பொருளை ஆராய்ந்து களிமின்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## காஞ்சிபுரம்.

### ஸ்ரீ உதாஸீன் மடத்தில், துவஜாரோஹண விழா.

இன்று காலை 7½மணிக்கு ஷை மடத்தில் துவஜாரோஹண விழா மிக்க வைபவத்துடன் நடைபெற்றது ஹவனம், நவக்ரஹ பூஜை, ஜண்டா பூஜை முதலியவையான பிறகு பிஞ்சத்துடனும் புஷ்ப சந்நிதிகளுடனும் சூரியன் அபயஸ்தம் முதலிய திருச்சின்னங்களுடன் கூடிய துவஜம் மடம் மஹந்து ஸ்ரீமுகாமி நாகேந்திர தாஸ் அவர்களால் அநேக பிராம்மணர்கள், ஸாதுக்கள், அன்பர்கள் ஸமூகத்தில் ஸநாதந தர்மிகி ஜேய் என்னும் ஜெய கோஷத்துடன், மேள தாளங்கள் மந்திரங்கள் கோஷிக்க நாட்டப்பட்டது.

அச்சமயம் ஸ்ரீ ஸநாதந தர்ம ஸேவா ஸங்கம் கார்யதர்சி ஸ்ரீமான் ம. கி. ராமச்சந்திரசர்மா அவர்களால் இம்மடத்தின் உற்பத்தி சரித்திர முதலியவை சுருக்கமாகவும் விமர்சையாகவும் எடுத்துக்கூறப்பட்டது. பிராம்மணர்களுக்கு ஸதாவர்த்தி தக்ஷிணையும், ஹிந்துக்களுக்கும் இதர நண்பர்களுக்கும் ரொட்டி ஹல்வா முதலிய பிரசாதங்களும் சந்தன தாம்பூலங்களும் வழங்கப்பட்டன.

மங்கள ஹாரத்தியுடன் விழா முடிவு பெற்றது.

நமது நிருபர்.

## ஸர்வாதிகாரிகளின் ஸந்திப்பு.

ஜர்மன் ஸர்வாதிகாரியான ஹர் ஹிட்லரை ஸந்தித்தும் பேச இடாலியர் ஸர்வாதிகாரி முஸோலினி ஜர்மனிக்குச் சென்றார். அங்கு ஆடம்பரமான வரவேற்பு அவருக்கு நடந்தது. ஐரோப்பிய நிலைமையைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

உலகத்தில், எங்கும் அபேதவாதமென்ற போல்ஷவிஸத்தை குழிவெட்டி மூடவேண்டுமென்பதும், அதற்காக பலமான எவ்வித முறையையும் கையாளவேண்டுமென்பதும் இவ்விருவரின் விருப்பமாயிருக்கிறது.

215204




## மா ர் ச ளி யே



ஸ்வாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

# அமிர்தாஞ்சனம்






ரண்முக சேந்நூரம்:- இது மகான் அனுக்கிரகத்தால் செய்த முறை. காசரோகங்களை பூர்ணகுணமாக்குவதில் இதற்கு நிகர் வேறே ஔஷதமில்லை நாள்பட்ட ஸ்லேப்பு இருமலை ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தும்.

எனக்கு சுமார் 35 வருஷம் அனுபோகம். அநேகம்பேர்களுக்கு கொடுத்து பூர்ண நற்குணமாகி அவர்களால் கொடுக்கப்பட்ட நற்சாட்சிகளுமிருக்கின்றன. விலை உயர்ந்த சரக்குகளினால் செய்யப்பட்டவை. கால நிர்ணயத்திற்குத் தக்கபடி சார்ஜை குறைக்கப்பட்டிருக்கிறது. 48 நாட்களுக்கு உபயோகிக்கும் மருந்துக்கு விலை ரூ. 25. 24 நாட்களுக்கு மருந்து ரூ. 15. ஏழைகளுக்கு சக்திக்கு தகுந்தபடியும் கொடுக்க சித்தமாயிருக்கிறேன். விபரம் மருந்துகளுடன் அனுப்பப்படும். இன்னும் சகல வியாதிகளுக்கும், குழந்தைகளுக்கு ஏற்படும் ரோகங்களுக்கும் குலேகட்டி ரோகங்களுக்கும், நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

R. K. Murthi, ஆயுர்வேத நன்மருந்து வைத்தியசாலை,
உறையூர், திருச்சிறாப்பள்ளி.


## வெளியூர்ச்செய்திகள்.

### மதுரை.

இவ்வூரில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரன் கோவிலின் ஆடி வீதி மண்டபத்தில் ஸ்ரீ வேதாகம சபையின் ஆதரவில் நடந்து வருகின்ற ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் முக்ய பாகமான 'சீதா கல்யாணத்தை' சாஸ்திர ரத்னம் பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வெகுவிமர்சையாக உபன்யாசம் செய்தார். மதுரை ஜில்லா ஜட்ஜ் மகா-ஸ்ரீ N. சந்திரசேகரய்யரவர்கள் சப் ஜட்ஜுகள், டிஸ்டிரிக்ட் முன்சீப்கள், பிரபல வக்கீல்கள் முதலிய நூற்றுக்கணக்கான ஆஸ்திகர்கள் சிரவணம் செய்து ஆனந்த மடைந்தார்கள். சுமார் 3.மணி நேரம் சாஸ்திரிவாள் அவர்கள் மிகுந்தஉற்சாகத்துடன் ராமாயணத்தின் தத்வத்தையும் ரகஸ்யத்தையும், சாஸ்திரார்த்தத்தையும் கேட்போருக்கு எளிதில் மனதில் பதியும் படி தெளிவாக உபன்யசித்தனர், இது சம்பந்தமாக பகலில் ஓர் பெரிய சமாராதனை நடை பெற்றது.

ஒரு நிருபர்.

### சென்னை.

#### ஆஸ்வயுஜ நவராத்ரீ.

சென்னை ஸ்ரீ ப்ரஹ்ம வித்யா விமர்சினீ ஸபையில் சேர்ந்துள்ள ஸ்ரீ தேவி பக்தர்கள் உபாஸகர்களும் நாளது வருஷம் புரட்டாசி-மீ 19உ (5—10—37) செவ்வாய்க் கிழமை முதல் 10 நாளும் பிரதிதினம் ஸ்ரீபா தேவதையின் ஆவரண பூஜையும், சண்டீ ஆவரணபூஜையும். ஸ்ரீ காயத்ரீ மஹா பூஜையும், ஸப்தசதீ பாராயணமும், கடைசி நாளில் ஹோமமும், ஸுவாஸினீபூஜை ஸந்தர்ப்பணைகளும் லக்ஷார்ச்சனையும் நடத்துப்படி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் இதைக் கண்ணுறும் கனதனவான்களும் ஆஸ்திகர்களும் தேவீ பக்தர்களும் தங்களுக்கு இயன்றவரையில் உதவிசெய்து ஷை ஆராதனைகளை நிர்விக்னமாய் நடப்பித்த ஸர்வாபீஷ்டங்களையும் அடைவார்களாக.

இடம்:— பெரிய தெருவு 16நி வீடு, திருவல்லிக்கேணி.

E. R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

### திருச்சி ஆயுர்வேத ஸபா.

#### நான்காவது வார்ஷிக மஹா ஸம்மேளனம்.

மேற்படி ஸபாவின் நான்காவது 'வார்ஷிக மஹா ஸம்மேளனம்' 8—10—37 வெள்ளிக்கிழமை மாலை 2-மணிக்கு திருச்சி ஆண்டார் வீதியில் ஸ்ரீ ராமச்சந்திர ஆயுர்வேத வைத்தியசாலையில் நடைபெறும்.

அதுசமயம், மதுரை ஆயுர்வேத வித்வான் ஸ்ரீமான் S. நாராயண அய்யங்கார் அவர்கள் ஸபாபதி பதவியை அலங்கரிக்க பிரியத்துடன் ஸம்மதித்துள்ளார். யாவரும் பகுமானத்துடன் விஜயம் செய்ய பிரார்த்திக்கப்படுகிறது.

ஒரு நிருபர்.

### அகில இந்தியா ஸ்ரீவைஷ்ணவ ஸேவா ஸங்கம்.

தற்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ தர்மம் அடைந்திருக்கும் நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாயிருக்கிறது என்பதை எல்லோரும் நன்கறிவர். அப்படி உண்மை நிலைமை வெள்ளிடை மலைபோல் விளங்கியும் அதற்குத்தக்க வழியில் விரைவுடன் சீர்பெற அமைக்க வாளா காலம் கழிப்பது மிகவும் கெடுதலையே விளைவிக்கும். நாடும் நகரமும் எங்கும் இவ்வித பிரச்சனையைக்கேட்டால் இதற்கு பதில், எல்லோரும் நாம் என் செய்யலாம்—இளைஞர்கள் தற்கால நாகரீக மென்று கருதப்படுகிற முறைகளில் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் இனி பழய வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை ஆதரிப்பார்களென்பதே சந்தேகத்திற்கிடமானதுபோல் தோன்றுகிறதே என்பதுவேயாகும். நம்முன்னோர்களால் பண்டையகாலங்கள் தொட்டு பெருமையுடன் போற்றிவந்த தேவாலயங்கள் எந்நிலைமைக்கு வந்துவிட்டனவென்பதையும் வீட்டில் ஆசார அநுஷ்டானங்கள் எவ்வளவு தூரம் கையாளப்படுகிற தென்பதை யோசிக்குங்கால் இனி நம் வரும் கால வாழ்க்கை மிகவும்துக்ககரமானதேயாம் இதற்கு முக்ய காரணம், தற்கால பிள்ளைகளுக்கு பெற்றோர்களிடமிருந்தும், பெரியோர்களிடத்தும் மரியாதை குறைந்து பயம் பக்தியாதொன்று மில்லாமல், ஓர் விதமான கட்டு என்பதே யில்லாமல் மனம் போன போக்கேயாகும். தவிர பெரியோர்களாயிருப்பவர்கள், சிற்சிலர் தவிர, சமயோசிதம் போல் வைஷ்ணவ ஆசார அனுஷ்டானம் வைத்துக்கொள்வது எத்துணை கேட்டை விளைவித்திருக்கின்றது என்பது நாம் அறிந்ததேயாகும். இத்துணை நிலைமையைக்கண்டும், இன்னும் காலம் போக்கி, வரும் காலத்தில் பிள்ளைகள்மனதில் நம்வைஷ்ணவ தர்மம் எத்துணை சிறப்புடையதென்று, அனுஷ்டான பூர்வமாக பெரியோர்கள் காட்ட முன் வராமல் போனால், இன்னும் வெகு சீக்கிரத்திலேயே, வைஷ்ணவ மதம் அழிவதற்கு என்ன சந்தேஹம். ஆகையால் அறிஞர்களான அனைவரும், வெள்ளம்வருவதற்கு முன்னரே அணைகோலவேண்டுவது அவச்யம். இதற்காகவே அகிலஇந்திய ஸ்ரீவைஷ்ணவ ஸேவாஸங்கம் என்பது தோன்றி அனேக வைஷ்ணவ மகாநாட்டில் பிரபல பிரசாரம் செய்துவருகிறது. இதற்கு வடநாட்டார்போல தமிழ்நாட்டாரும் தக்க ஆதரவு அளிப்பார்களென நம்பப்படுகிறது. வைஷ்ணவர்கள் அனைவரும் இச்சங்கத்தை ஆதரித்தால் அது தங்கள் நலத்தை தாங்கள் தேடிக்கொள்வதுபோலாகும். சமயம் தேசாபிமானம் எல்லாவற்றிற்கும் அடிப்படையான தத்வம், அவரவர்கள் தங்கள் கடமையை செய்வதுவேயாகும். சங்க வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் தற்காலம் தமிழ்நாட்டு காரியதர்சி—புனிதநிலையம் காரைக்கால் என்னும் விலாஸத்திற்கு எழுதி முழுவிவரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

காஞ்சீ பாவஸ்து
ராஜகோபாலாசார்யர், பிரஸிடெண்ட்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

583

[illegible]

4 39
22

14—10-1937

215205

215205



Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரம்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 4 ✻ கும்பகோணம் கலி5039 ஈச்வரஸூ புரட்டாசிமீ 28உ 1937ஸூ அக்டோபர்மீ 14உ ✻ வ 39
22

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கள் குத்தகை கூடாது.

தேவாலயங்களுக்கு உத்திரவு.

சென்னை ஹிந்து மத ஸ்தாபன போர்டார் சென்னை மாகாணத்திலுள்ள எல்லா தேவாலயங்களுக்கும் ஓர் உத்திரவு அனுப்பியிருக்கிறார்கள்.

அதில் தேவாலயங்களைச்சேர்ந்த தென்னைமரங்களை இனிமேல் கள்ளுக் குத்தகைக்கு விடக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

## பயங்கரத் திட்டம்.

டாக்டர் ராஜன் மந்திரியென்ற ஹோதாவில் ஓரிடத்தில் பேசுகையில் காங்கிரஸ் மந்திரிகள் இதுவரையில் வெளியிட்டுள்ள திட்டங்கள் நிற்க, வேறு சில திட்டங்கள் யோஜனையிலிருப்பதாயும் அவைகளை ஜனங்கள்கேட்கும்போது திடுக்கிட்டுப் போவார்களென்றும், அவ்வளவு புரக்ஷிகரமென்றும் சொன்னார்.

## காந்தி பிறந்த நாள்.

காங்கிரஸ் கவர்மெண்டால்அநுகூலம்.

ஸ்ரீமான் காந்தியின் 69வது பிறந்த நாள் கொண்டாட்டம் இந்தியாவில் பல விடங்களில் கொண்டாடப்பட்டது. இவ்வருஷம் என்ன விசேஷமென்றால் அநேக மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுவதால் அன்று பள்ளிக்கூடங்களுக்கு லீவு கொடுக்கும்படியும் அநேக ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் கூட இந்தக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும் அநேக முனிஸிபாலிடிகளும் ஜில்லா போர்டுகளும் தீர்மானம் செய்தன.

## இந்தியா சட்ட ஸபைக்கூட்டம். முடிந்து விட்டது.

ஸிம்லாவில் நடைபெற்று வந்த இந்தியா சட்டஸபைக்கூட்டம் 8உயோடு முடிவடைந்து விட்டது. மெம்பர்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டுப்போயினர். [illegible] நிறைவேறிய முக்ய விஷயங்களில் இன்ஷூரன்ஸ் சட்டத்திருத்த மசோதா முக்யமானதாகும்.

## மலைப்பாம்பு மாணவனை விழுங்கியது

உபாத்யாயரின் அஜாக்ரதை.

கஞ்சம் ஜில்லாவைச்சேர்ந்த புகாடா கிராமத்திலுள்ள பள்ளிக்கூடமொன்றில் ஒரு மாணவன் விஷமம் செய்த காரணமாக உபாத்தியாயர் அவனை ஒரு உள்ளில் தனியாக அடைத்து வைத்தார். அங்கிருந்த பெரிய மலைப்பாம்பு அந்தப்பையனை விழுங்கி விட்டது. பையனைத்தேடிப்பார்த்தும் அகப்படாமல் போகவே மலைப்பாம்பின் வயிற்றைக்கிழிப்பார்த்ததில் அதில் அவன் இருக்கக்கண்டார்கள். பையன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டு அங்கு இறந்தான். உபாத்யாயர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

## உயர்ந்த புஸ்தகங்கள்.

மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் எழுதப்பட்டன.

| | ரூ. அ. |
|---|---|
| மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—பாகம் 1 | 2—0 |
| ” ” 2 | 2—0 |
| உதயணன் சரித்திரம் | 1—0 |
| மணிமேகலைக் கதைச்சுருக்கம் | 0-10 |
| புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் | 0-12 |
| நான் கண்டதும் கேட்டதும் | 0—8 |
| புதியதும் பழையதும் | 0—9 |
| [illegible] | [illegible] |
| கோபாலகிருஷ்ண பாரதியார் | 0—8 |
| மஹா வைத்தியநாதய்யர் | 0—3 |
| திருவள்ளுவரும் திருக்குறளும் | 0—6 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள் அருளிச்செய்த

‘ஸௌந்தர்யலஹரி’

by G.V. கணேச அய்யர், B.A., B.L.,

(மூலம் நாகரத்திலும், தமிழிலும், பதவுரை, பொழிப் புரை குறிப்புகளுடனும்,)

விலை ரூ. 1 8 0

கிடைக்குமிடம்:— மானேஜர், ‘ஆர்யதர்மம்’ கும்பகோணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

குணம், மணம், காரம் நிறைந்த **R. J. S. & Co.,**

மேலான **T. T. M. A.** மிஸ்ரி பெருங்காயத்தையே

கவனித்து வாங்கவும்.

போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## இதென்ன விபரீதம்?

M. K. V.

மதுரை மங்கம்மாள் சத்திரத்திலும், கருப்பட்டி சத்திரத்திலும் அந்தந்த ஜாதியார்களுக்கு தனித்தனி விடுதிகள் ஏற்பட்டிருந்தன. ஸ்ரீமான் தாவூத் தேவதாஸ் என்ற டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர் எல்லா விடுதிகளையும் எல்லா வர்ணத்தார்களுக்கும் உபயோகத்திற்கு விடவேண்டும் என்று பிரேரேணை செய்தாராம். போர்டில் துருஷ்கர்களுக்கு ஏற்பட்டுள்ள விடுதியை அவர்களுக்கு ஏகதேசத்திலும், பிராமணர் பிராமணரல்லாதார் இவர்களுக்கு தனித்தனியாக ஏற்பட்டிருந்த 3 விடுதிகளையும் பொதுவில் வைக்கிறதென்றும் தீர்மானித்தார்களாம். நம் ஹிந்து பிரமுகர்களுக்கு துருஷ்கர்களைக் கண்டால் அச்சம். மங்கம்பாள் சத்திரம் ஹிந்துவால் ஏற்படுத்தப்பட்ட சத்திரமாயிருந்தபோதிலும் அதில் தனி உரிமை மஹம்மதியர்களுக்கு ஏற்பட்டிருப்பதை மறுக்க டிஸ்ட்ரிக்ட் போர்டுக்கு தைர்யமில்லை. ஏற்கனவேயிருந்த வரம்புகளை விலக்கியவர் பெயரைப் பார்த்தால் கிருஸ்தவர்போல் தோன்றுகிறது. இதென்ன விபரீதம்! டிஸ்ட்ரிக்ட் போர்டில் ஹிந்துமெம்பர்கள் கிடையாதா? பிராம்மண மெம்பர் ஒருவர்கூட இல்லையா? ரயில்வே ஸ்டேஷனருகில் இச்சத்திரங்கள் கட்டப்பட்டுள்ளன. மதுரை பெரிய க்ஷேத்ரம். யாத்திரிகர்கள் எப்போதும்போவதும் திரும்புவதுமாகயிருக்குமிடம். இவர்கள் சௌகரியார்த்தமாக கட்டப்பட்டுள்ள சத்திரங்களின் பாத்யங்களை விலக்க டிரஸ்டிகளாகவும் மேன்பார்வை பார்ப்பவர்களுமான டிஸ்திரிகட் போடுக்கு என்ன அதிகாரம். இது தர்மஸ்தாபனம் செய்தவர்களின் இச்சைப்படி நடப்பதாகுமா? ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் நடை, உடை ஆசாரம், அகாரம் முதலிய வியவஹாரங்களில் எவ்வளவோ வித்யாஸமிருக்கிறது அல்லவா? வடக்கத்தி பையாவி ஹுக்கா பிடிக்கிறான். பிராம்மணேதரர்கள் சுருட்டு பிடிக்கலாம். பிராம்மணர்கள் இது செய்வதில்லை. இவர்களை சேர்ந்திருக்கக் கட்டாயப்படுத்துவது நியாயமா? நாகரீகமா? சமையல் சாப்பாடுகளிலும் பல வித்யாஸம். சில ஜாதியார் எச்சில் தீட்டு பாராட்டுவதில்லை. சில ஜாதியார் மாம்ஸம்சாப்பிடுவார்கள். சிலஜாதியார்கள் போடும் மசாலைகள் மற்றவர்களுக்கு பிடிக்காது. இப்படிக்கெல்லாமிருக்க இதில் பிரவர்த்திக்க காரணம் என்ன? என்ன ஸ்வேச்சை இது? என்ன ஸ்வராஜ்யம்?

## மாணவர்களும் ராஜீயமும்,

பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் தேசீய சர்சைகள் செய்யலாமேதவிர மாணுக்கர்களாயிருக்கும் காலத்தில் தேசீய ஊழியங்களில் ஈடுபடக் கூடாதென்று காந்தியவர்கள் தெரிவிக்கிறார். 1893-ஹு வாக்கில் மதராஸில் நடந்த காங்கிரஸ் ஸந்தர்ப்பத்தில் பண்டித மதன மோஹன மாளவ்யா அவர்கள் அப்படிக்கே சொல்லியிருக்கிறார். வித்யாப்யாஸம் செய்யும் காலத்தில் தேசீய முயற்சிகளில் நேரில் ஸம்பந்தித்துக் கொள்ள மாணுக்கர்களுக்குத் தகுதியில்லை யென்பது உசிதமான போதனை. ராஜ்யபாரம் செய்யும் மந்திரிமார்களும் பையன்களை படிப்பை நிறுத்தி (Strike) ஸ்டிரைக் செய்யும்படி சொல்வது சரியல்லவென்றும் அப்படிச் செய்வதால் மந்திரிகள் ராஜ்யபாரத்தில் இன்ஸால் மெண்டுகளாக கருதப்படுவார்கள் என்றும் எச்சரிக்கைப்படுத்துகிறார் காங்கிரஸ் அதிகாரப்பதவி வகிக்கும் மாஹாணங்களில் அதிகாரக்கீழ்படிதல் (Discipline) ஜனங்களுக்குத் தானகவே வரவேணுமேதவிர

## வாரக் குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா)

அறை குறையான செய்தி! குடந்தையில் கௌடருக்கு ஆலயப்பிரவேசம் மறுக்கப்பட்டது! நீலகிரியிலிருந்து 20 யாத்ரீகர்கள் வந்தனர்! மந்திரிக்கு தந்தி கொடுத்துவிட்டுப் போய் விட்டனர். என்று இப்படி ஓர் பத்ரிகை எழுதுகிறது. நிருபர் தவறினாலும் கௌடர் எந்த ஜாதி? ஏன் தடுக்கப்பட்டார்? என விவரமறிப்பது பத்திராதிபர்கடமையன்றோ?

அதிகாரத்துர்விநியோகம்! தார்மிகர் எக் கருத்துக்கொண்டு தர்ம நிதி ஏற்படுத்துகிறார்களோ அதை நிறைவேற்ற பின்னவர் ஸம்மதிப்பதில்லை. மதுரை மங்கம்மாள் ஸத்திரம் பிராமணர்களுக்கும், பயிராகிகளுக்கும் இடம் நிகழும்படி மூல சாஸனம் கூறுகிறதென்று படித்துக்காட்டி எல்லா ஜாதியாரும் வஸிக்க இடமளிக்கிறதென்கிறார்கள்.

ஓர் தர்மவீரனில்லையே!! தர்மமறியாத பலர் கூடியும் அது ஸபையாகா. பல நூறுவர் கூடிய சென்னை ஸபையில் மருந்துக்குக்கூட ஓர் தர்ம வீரரில்லாத குறை பெருங் குறையே! ஸர் கே. வி. ரெட்டியின் அஸப்ய பேச்சு! சகசாநந்தன் உருமல். வந்தேமாதர கீத ஆக்ஷேபம் முதலியவைகளை எதிர்த்துப்போராடி தர்மத்தை எடுத்துக் கூறும் ஒருவரை நியமிக்க உதாரபுத்தி இல்லை!!

உத்பாதமோ? பர்மாவில் ஓர் வாலுடன் அக்கிபிண்டம் போல் ஒன்று தோன்றி மறைந்தது. பல விசித்ரமான இருதலை குழந்தைகள், மிருகரூப மனித குழந்தைகள், முதலியன பாபிகளது செயலால் உலகத்திற்கு வரும் தீங்கை காட்டவந்த உத்பாதங்களோ என அஞ்சுகிறோம்.

சில்லரை தேவதைகள்!! கலியே தர்மத்தை சிதைக்க கங்கணதாரியாக நிற்கிறது. அதை நிறைவேற்ற சில தேவதைகள் தலைவர். அவர் சொற்படி ஆடும் சில சில்லரை தேவதைகள் படுத்தும் பாடே பொருக்க முடியவில்லை. மதுரைக்கருகில் கோவிலாபுரத்தில் அவர்கள் தீண்டாதாருக்கு உதவுவதாக கூறிக் கிராம ஒற்றுமையைக் கெடுக்கின்றனர். அங்கும் சண்டை.

சாஸ்திரிகள் தடமாட்டம்!! சாஸ்திரிகளென்றால் தற்கால பத்ரிகை உலகம் மகாகனம் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளையே நினைக்கும்! ஏதோ ஒருவகையில் பிரசித்தி அடைந்த இவர் சிறிதுகாலமாக மிக மோசமாகப் பேசுகிறார்! தனது பிறந்த தினக் கொண்டாட்டத்தில் காலேஜ் மாணவர்களை நாடகமாடப்பார்த்தது எவ்வளவுவிபரீதமான கார்யமென ஏனறியவில்லை?

விசித்ர வாதம்! சென்னை மாகாணம் பேச்சில் சிறந்தது. தனக்கு வேண்டுமாயின் வக்கீல்களை விட அதி விசித்ரமாக சேர முடியாதவைகளைச் சேர்த்து இணைத்து பேசி விடுவர்! குடியை ஆதரித்து ஒருவர் தேவர்களுக்கு குடி இல்லையா? குடித்ததினால் தான் பிராமணர் பூஸுரர் ஆனர்! என்று பேசினர் மிக தந்திரசாலியான பிரதம மந்திரி வேத சாஸ்திரப்படிப்பில்லாததால் இதற்குசிதமான பதிலைத்தர வில்லை.

அவர்களை எதிலும் கீழ்படியும்படி நிர்பந்திக்க கூடாதென்று காந்தி அவர்கள் உபதேசிக்கிறார். காந்தி அவர்களுக்கே தன் பிரசாரத்தின் குறைவுகள் வெளிப்படுவது போலும்! காந்தி அவர்கள் சொல்லியிருப்பதை உத்யோகம் வகிக்கும் காங்கிரஸ்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்களா? M.K.V.

## குடந்தை முனிஸிபாலிடியார் கவனிக்க வேண்டும்.

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி கோவில் தெற்கு வீதியில் (மீன் கடைத் தெரு) ஏற்கனவே யிருந்து வந்த மீன் கடையை, பொது ஜன சுகாதாரத்தைக்கருதி முனிஸிபாலிடியார் எடுத்து விட்டார்கள். இதனால் இந்தப்பிரதேசம் பெரிய ஆபாஸத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க அந்தத்தெருவில் மீண்டும் ஒரு மத்ஸ்யக்கடையை ஏற்படுவத்து பற்றி முனிஸிபாலிடியில் விவாதம் நடப்பதாகப் பத்திரிகையில் பார்த்தோம். ஜன நெருக்கமும், ஸுகாதாரக்கேடும் மிகுந்துள்ள இந்த வீதியில் மறுபடியும் இக்கடையை வைப்பது மிகவும் ஆக்ஷேபகரமானது. நமது நகரத்தில் இந்தப்பிரதேசமானது பல வழியிலும் முக்ய த்வத்தை அடைந்திருக்கிறது. அநேக முக்யமான ரஸ்தாக்கள் இங்கு சேர்ந்திருக்கின்றன. இதற்கு ஸமீபமாக அரண்மனைத்தோட்டம் ஸினிமா கொட்டகை, கடலங்குடித்தெருப் பள்ளிக்கூடங்கள், எலக்டிரிக் ஸப் ஆபீஸ், முனிஸிபல் ஜனன மரண ஆபீஸ், அம்மை வைக்குமிடம், ஆகியவைகளை முன்னிட்டு கணக்கில்லாத ஜனங்கள் ஓயாமல் நடமாட வேண்டியதாயிருக்கிறது. தெற்கேயும், மேற்கேயும் வியாபாரஸ்தலங்களை உத்தேசித்தும் ஜன நடமாட்டம் அதிகம். வீடுகளும் இங்கு நெருக்கமாயிருக்கின்றன. முக்யமாக ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ ராமஸ்வாமி முதலிய தேவாலய உத்ஸவங்களை முன்னிட்டு அடிக்கடி கூட்டம் கூடுமிடம். வடக்கு பக்கத்தில் சில கஜ தூரத்தில் ஸ்ரீ நாகேஸ்வரர் ஆலயமும் இருக்கிறது. ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் முதலிய எல்லா ஸ்வாமிகளும் அந்த வழியாக அநேக உத்ஸவங்களில் வீதிவலம் வருகிறார்கள். ஷை தெற்கு வீதியில் மஹமதியர்களின் தொழுகை ஸ்தலமான பள்ளிவாசலுமிருக்கிறது. இவ்வளவு முக்யமான மேற்படியிடத்தில் மறுபடியும் மீன் கடை வைப்பது எவ்வளவு கெடுதல் என்பதை முனிஸிபாலிடியார் கவனிக்க வேண்டும். ரோட்டிற்கு வெகு சமீபமாயுள்ளதால் அந்த துற்நாற்றத்தால் ஜனங்கள்கஷ்டப்பட நேரும். நகரில் காலரா முதலிய தொத்து நோய்களும் இங்குதான்முதலில்ஆரம்பிப்பது வழக்கமாயிருக்கிறது இந்தயோஜனையைஷை கோவில் டிரஸ்டிகளும், ஸுகாதார உத்யோகஸ்தர்களும், பலமாக எதிர்க்க வேணும். ஜனங்கள் இதில் மிகவும் வெறுப்புக்காட்டுகிறார்கள். ஸுகாதார மந்திரி வரையில் இந்த விஷயம் போகக்கூடியது. சேர்மன் ஸ்ரீமான் செட்டியார் அவர்களும் மற்ற கௌன்ஸிலர்களும் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு மேற்படி கடை வைக்க இடங்கொடுக்கக்கூடாதென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஒரு வரி செலுத்துவோன்

## மூகபஞ்சசதியின் முதல் பாகம். "ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A, B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால்செலவு வேறு] [விலை அணு 0—8—0.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.



## கும்பகோணத்தில் மந்திரிகள்.

### சாரதாச்சட்ட, ஆலயப்பிரவேச பிரஸ்தாபம்.

### கூட்டத்தில் குழப்பம்.

கல்விமந்திரியாகிய டாக்டர் ஸுப்பராயனும் நீதியிலாக்கா மந்திரியான கனம் ராமன் மேனனும் திங்கள்கிழமை மாலை 2-மணிக்கு கும்பகோணம் வந்தார்கள். வக்கீல் சங்கம், முனிஸிபாலிடி, ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸாமி அய்யங்கார் செய்த உபசாரம் இவைகளுக்குப்போய்விட்டு 5-30 மணிக்கு காங்கேயன் காந்தி பார்க்கில் பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். வக்கீல் ஸங்கத்தில் பேசியபோது மந்திரிகளுக்கும் வக்கீல்களுக்கும் அனேக விஷயத்தில் அபிப்ராயபேத மேற்பட்டு பலமான சர்ச்சைநடந்ததாகத் தெரிகிறது. மந்திரிகள் இஷ்டப்படி கார்யம்செய்துவருவதாயும், அது பிடிக்காவிட்டால் அடுத்தஎலக்ஷனில் அவர்களை வோட்டர்கள் விலக்கிவிடலாமென்றும் மந்திரிகள் கூறினார்கள். டாக்டர் ஸுப்பராயன் இந்தச் சுற்றுப்பிரயாணத்தில் தஞ்சை முதலிய இடங்களில் ஆலயப்பிரவேச விஷயம், சாரதாச்சட்டம் இவைகளுக்கு ஆதரவு தேடி பிரசாரம்செய்து வருவதாயும் தெரிகிறது. குடந்தை வக்கீல்குமாஸ்தாசங்கத்தார் இந்த மந்திரிகளுக்கு வாசித்துக்கொடுத்த பத்திரத்தில் மந்திரிஸபையார் மதவிஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்றும், சாரதாச்சட்டம் ஆலயப் பிரவேசம் போன்றவைகள் ஆக்ஷேபகரமானவையானதையால் அவைகளை மந்திரிகள் ஆதரிக்கக்கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கு மந்திரிகள் அங்கு பதில் அளிக்காமல் காங்கேயன் காந்திபார்க்கில் பொதுக் கூட்டத்தில் பதில்சொல்லுவதாகக் கூறிவிட்டார்கள். பார்க்கில் 3 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். மழைதூறல் அதிகமாக இருந்ததால் ஜனங்கள் இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள் இதனால் டாக்டர் ஸுப்பராயன் பேசியது ஒருவருக்கும் காதில் விழவில்லை. கதர்உடுத்த வேண்டியதை வற்புறுத்தி டாக்டர் ஸுப்பராயன் ஷைகூட்டத்தில் கதர் உடுத்தியவர்கள் எவ்வளவுபேர் என்று கைதூக்கச்சொன்னார். ஆயிரம்பேர்களுக்குமேல் கைதூக்கினார்கள். அதில் 10பேர்களுக்குமேல் கதர் கட்டியவரில்லை. இதைக்கண்டு டாக்டர் ஸுப்பராயன் வருத்தமடைந்து கதர்கட்டாதவர்களையெல்லாம் குறிப்பிட்டுக்காட்டி அவர்கள் கைதூக்கியதை ஆக்ஷேபித்தார்.

### குழப்பம்.

பிறகு டாக்டர் ஆலயப்ரவேசத்தை ஆதரித்துப் பேசி இந்தக் கூட்டத்தில் அதை ஆதரிப்பவர்களெல்லாம் கைதூக்கும்படி கேட்டார். பள்ளிச்சிறுவர்கள் உள்பட ஏராளமான பேர் கைதூக்கினர். எதிராக இருப்பவர்களையும் கைதூக்கும்படி கேட்டார். சிலர் தூக்கினார்கள். இருந்தபோதிலும் பலர் கைதூக்காமல் நடுநிலைமை வகித்தனர். உடனே ஸுப்ராயன் அவர்கள் தீர்ப்புக்கூறினார்கள். கும்பகோணம் மஹாஜனங்கள் ஆலயப்ரவேசத்தை ஆதரிப்பதாகத் தெரிகிறதாயும், கூடியசீக்கிரம் இதைப்பற்றி ஸர்க்கார் கவனிப்பார்கள் என்றும் சொன்னார். கூட்டத்தின் ஓரத்தில் நின்ற ஸநாதநி பிரமுகர் ஒருவர் மதஸம்பந்தமான இவ்விஷயத்தை இம்மாதிரி கைதூக்கச் செய்து அபிப்பிராயம் வாங்குவதையும் தீர்ப்புக் கூறுவதையும் பலமாக ஆக்ஷேபித்தார். இது "பொய்யான முடிவு" என்று அவர் கூறினர்.

உடனே கூட்டத்தில் பெருங் கூச்சலும் குழப்பமும் உண்டாகியது. அனேக காங்கிரஸ் வாலண்டியர்கள் அந்த ஸநாதநிகளை சூழ்ந்துகொண்டு இரைச்சல் போட்டார்கள். டாக்டர் ஸுப்பராயன் பேசுவது நின்றுவிட்டது. அந்த ஸநாதநியை தம்மிடம் அழைத்து வரும்படி டாக்டர் ஸுப்பராயன் கேட்டுக்கொண்டார். தமக்குப்பேச அவகாசம் கொடுத்தால் வருவதாக அவர் சொன்னார். அவகாசம் கொடுப்பதாக மந்திரி சொன்னார். அதன் பேரில் ஸநாதனிகளின் பிரதிநிதியாக ஒருவர் மேடைக்கு அழைப்பப்பட்டார். இரு மந்திரிகளும் ஸ்ரீமான் பூவராக அய்யங்காரும் அவரை வேண்டிக்கொண்டு சிறிது விட்டுக் கொடுக்க கேட்டார்கள். "எங்களுடைய அபிப்ராயத்தை வற்புறுத்த எங்களுக்கு உரிமை இருக்கிற"தென்று அவர் பதில் கூறினார். டாக்டர் ஸுப்பராயன் மேலே பிரஸங்கம் செய்து சாரதாச்சட்டமும் அவச்யமென்று முடித்தார்.

கதர் விஷயத்தைப்பற்றிக் கைதூக்கிய போதே அந்தக் கைதூக்கல் அர்த்தமற்றதென்றும் உண்மையை வெளியிடுவதல்லவென்றும் கனம் மந்திரி நன்கு அறிந்தார். அப்படியிருக்க ஆலயப்பிரவேச விஷயத்தில் மட்டும் அந்த தமாஷ் கைதூக்கலுக்கு இவர் விசேஷ மஹிமை கற்பித்தது விநோதமாயிருக்கிறது. மேலும் அஹிம்ஸா தர்மவாதிகளாகிய காந்தி சிஷ்யர்கள் எதிர் கக்ஷியாரை நடத்தும் பான்மையும் மிகக் கேவலமாயிருக்கிறது. கூட்டம் முடிந்தபிறகும் சில சிறுவர்கள் அங்கங்கு கூடி தாறுமாறாக நடந்துகொண்டனர்.

கனம் ராமன் மேனன் பேசுகையில் இதைக் குறிப்பிட்டு காங்கிரஸ்வாதிகள் ஸஹிப்புத்தன்மை காட்டாததைக் கண்டித்து இம்மாதிரி நடந்தால் நாம் ஸ்வராஜ்யத்திற்கே அர்ஹதையற்றவர்களாவோமென்று குறிப்பிட்டார்.

ஸ்ரீமான் பாட்லிவாலா விஷயத்தைப்பற்றி கேட்ட கேள்விக்கு மந்திரி பதில் அளிக்கையில் "காங்கிரஸ் கொள்கையை அநுஸரித்து நடப்பவர்களின் பேச்சு ஸ்வதந்திரம் ஒரு நாளும் பாதிக்கப்படமாட்டாது" என்று சொன்னது கூட்டத்தில் அநேகருக்கு வியப்பை உண்டாக்கியது. கூட்டம் முடிந்ததும் மந்திரிகள் மாயவரம் சென்றனர்.

நேரில் பார்த்தவன்.

## நமது சிறு கதைக்கொத்து.

(ஸ்ரீகாமகோடி பீடாதிபதிகளது ஆக்ஞையின்படி இங்ஙனம் புராண கதைகள் நமது ஆர்ய தர்மத்தில் முன் வெளிவந்ததுபோல் இனியும் வெளிவரும்.)

### ஸத்யவிருதன்.

1. கோஸல நாட்டிலே தேவதத்தன் என்றோரந்தணனிருந்தார். அவருக்கு புத்ர பாக்யமில்லை. ஆதலின் புத்ரகாமேஷ்டி செய்தார். அதில் ஸாமகானம்செய்த கோபிலர் மூச்சு இறைக்க இறைக்க கானம் செய்தார். தேவதத்தர் அவரை என் மூடனைப்போல் கூறுகிறீரென்றான். பெரியோரைப் பழிக்கலாமா?

2 மூட புத்ரனே உனக்குப் பிறப்பானென்று அவர் சபித்தார். முழு மூடப் பிள்ளை பிறந்தது. அது ஊமையாகவுமிருந்தது. தாய் தந்தை வருந்தினர். உறவினர் பரிஹஸித்தனர். உதத்யனெனும் அச்சிறுவன் வெட்கித்து வீட்டைவிட்டுச்சென்றான் பரத்வாஜாச்ரமம் சென்றான். அங்கு முனிவர் கூறியவண்ணம் ஸத்யத்தைக் கடைபிடித்தான். அதனால் ஸத்யவிருதன் என பெயருண்டாயிற்று.

3. ஸத்யத்தைவிட உயர்ந்த புண்யமுண்டா? ஒருநாள் ஓர் வேடன் பன்றி ஒன்றை துரத்திவந்தான். அது வேகமாக ஏஏ என்று கத்திக்கொண்டே ஓடிற்று. எல்லா எழுத்துக்களும் ஓர் மந்திரமாகும். இது அவன் செவியில்விழ அதைமனனம் செய்தான். ஸத்யத்தால் அவன் மனம்தெளிய இதனால் பகுத்தறிவு தோன்றிற்று. அவ்வேடன் இவனை நோக்கி பன்றியைக் கண்டாயா என்றான்.

4. உண்மை சொன்னால் பன்றியைக்கொன்றுவிடுவான் பொய்சொன்னால் பாவம்! என்செய்வது உண்மையே சொன்னாலும் பிறருக்கு தீங்கை விளைவிப்பதாயின் அது உண்மையாகா? என்செய்வது! யோசித்தாள் கருணாமூர்த்தியான தேவி. தன் மந்திரத்தை மனனம் செய்தானென்று அன்புடன் அருள் புரிந்தாள். அவள்வாயில் ஒரு சொல் கிளம்பிற்று அது ஒரு சொல்லே.

5. கண்டவர் விண்டாரில்லை! விண்டவர் கண்டாரில்லை என்று ஸத்யவ்ரதன் வாயில் கிளம்பிற்று. அது வேதாந்தம் நிறைந்ததல்லவா? இதன் தத்துவத்தை இவ்வேடனறிவானா? ஏதோ பித்தன் பேற்றுகிறானென்று போய்விட்டான். பன்றி பிழைத்தது.

6. வித்யாபீஜமென்றும் அவ்வோரெழுத்தால் தேவி ஸந்தோஷித்தாள். ஸகல கலைகளிலும் அவனுக்கு பூர்ண பாண்டித்யமளித்தாள். இதனை அறிந்த அவர் தந்தையும் மைந்தனை அழைத்துப் போற்றினார். இதைக் கண்ட அவ்வேடனும் கொலைதொழிலை விட்டான். முனியானான்.

7. மந்திரத்தின் மஹிமை என்னே! தேவியின் கருணைதானென்னே? விஷயமறியாமல் ஏதோ சப்தத்தைக்கேட்டு நினைத்த உத்தமனே வித்வானானான் என்றால் உண்மை உணர்ந்து குருமூலமாக ஸம்மந்த்ரம் உபதேசம் பெற்றோர் விஷயத்தைக்கேட்கவேண்டுமா? ஸத்யத்தின் சிறப்பே சிறப்பு.

ஸ்ரீவத்ஸ சர்மா.

## சென்னை.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் மஹோற்சவக் கொண்டாட்டம் ஷை சங்கத்தின் ஆதரவில் சங்கக் காரியாலயத்தில் அடியிற் கண்ட விபரப்படி பிரதி மாலை 6-30 மணி முதல் 8-மணிவரை உபன்யாஸங்கள் நடைபெறும்.

14—10—37உ ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹன் ப்ரபாவம் ஸ்ரீ உ ப வே நாச்சியார்கோவில் நடாதூர் கிருஷ்ணமாசாரியார்; 15உ ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்; ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாச்சாரியார்; 16உ தேசிகரும் ஆழ்வாரும், ஸ்ரீஉபவே ந்ரஸிம்மாச்சாரியார் 17உ தேசிகரும் கம்பரும் ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார்; 18உ 'பரமதபங்கம்' ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார்; 19உ அபயப்ரதான ஸாரம் ஸ்ரீஉபவே ஆவியூர்ஸ்ரீநிவாஸாச்சாரியார்; 20உ பரமபதஸோபானம் ஸ்ரீ உ ப வே ஆர். கேசவய்யங்கார்; 21உ ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரமும் யாதவாப்யுதமும் ஆர். கேசவய்யங்கார்; 22உ அடைக்கலப்பத்து, ஸ்ரீஉபவே குரிச்சி வேதாந்தாச்சாரியார்; 23உ தேசிகனும் திருமங்கை மன்னனும் ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
கார்யதர்சி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஸு புரட்டாசி-மீ 28உ

## மந்திரிகளின் மனப்போக்கு!

சென்னை சட்டஸபைக் கூட்டம் முடிந்த பின் மந்திரிகள் பல ஜில்லாக்களிலும் தனித் தனியாக சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். விருந்துகளும், உபசாரங்களும் பத்திரங்களும் எங்கும் பிரபலமாக நடைபெறுகின்றன. இவைகளை முன்னிட்டு, மந்திரிகள் இதுவரை சாதித்ததையும், இனி செய்யப்போவதையும் பற்றிப் பேசிவருகிறார்கள். இவர்களுடைய பேச்சிலேயே பரஸ்பரம் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒரே மந்திரியே தம் வார்த்தைகளில் முன் [illegible] மாறுதலாகப் பேசும் விஷயங்களும் அநேகம் இருந்து வருவதை ஜனங்கள் கவனித்து வருகிறார்கள்.

இது ஒரு புறமிருக்க, பொதுவாகவும், குறிப்பாகவும் கனம் ராஜகோபாலாசாரியர் போன்ற சிலமந்திரிகளுடைய மனப்போக்கு பொது ஜனங்களால் இப்போதே ஜாக்ரதையாகக் கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. மாகாண ஸ்வய ஆக்ஷி மூலமாக நிர்வாஹ அதிகாரபலனத்தும் காங்கிரஸ் வசம் வந்து விட்டதால், மந்திரிகள் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும், அது ஜனங்களுடைய க்ஷேமத்துக்காகவென்றே எண்ணி எல்லாரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பலவித வாசகங்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. தங்களுடைய ஆக்ஷியில் குற்றம் குறைகளைப் பற்றிக் கூறுவதற்கு ஸந்தர்ப்பமேயிராதென்ற ஒருவகை ரீதியை அநுசரித்து காங்கிரஸ் மந்திரிகள் பேசிவருகிறார்கள். இத்தகைய யதேச்சாதிகார புத்திப்போக்கு ஏற்படுவதைப் பற்றி நமது மாகாண மஹாஜனங்கள் கவலையுடன் கவனிக்கவேண்டும்.

சென்னை மாகாணத்தில் "ஹிட்லர் ஆக்ஷி" நடைபெறுவதாக கோஷம் கூறப்படுகிறதென்று கனம் ராமன் மேனன் நாகப்பட்டணத்தில் குறிப்பிட்டார். இதிலிருந்து மந்திரிகளின் கொள்கையிலும், பேச்சிலும் ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கையும் பயமும் ஒருவாறு வெளியாகிறது. மந்திரிகள் இதை வாய்ப் பேய்ச்சளவில் மறுத்தால் மட்டும் போதாது. காங்கிரஸ் ஆக்ஷி ஏற்பட்ட மூன்றா தங்களுக்குள்ளேயே அதைப்பற்றி ஹிட்லர் ஆக்ஷி என்ற சப்தம் ஏன் கிளம்ப வேண்டும்? யாராலும் தாங்கள் செய்யும் காரியங்களுக்கு எவ்வித ஆட்சேபமும் வந்தால், அதைக் கேட்க ஸஹிக்காத மனப்பான்மையை பிரதமமந்திரி காட்டி வருகிறார். பழைய அதிகாரிவர்க்க ஆட்சியோ, ஜஸ்டிஸ் ஆக்ஷியோ நடந்துவந்த காலத்தில் அவர்களின் மீது காங்கிரஸ் தலைவர்கள் என்னென்ன தோஷங்களை கூறினார்களோ, அவைகளையே இப்போது இவர்கள் அநேக விஷயங்களில் அநுஷ்டிக்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் ராஜ்யம் வந்துவிட்டதால் அப்போது தோஷமாகக் கருதினவைகளை இப்போது குணமாகக் கருதவேண்டுமென்கிறார்கள். எதிர்க்கக்ஷியாரின், பொறுப்புள்ளதும், மனஸ்ஸாக்ஷியுள்ளதுமான அபிப்பிராயங்களை மதியாமல் அவைகளை அடக்கியொடுக்கி வெளிக்கிளம்ப முடியாமல் முன்னிருந்தவர்கள் செய்தார்கள். இப்போதும் இதற்குக்குறைவில்லை. தங்கள் அபிப்பிராயத்திற்கு விருத்தமாகப் பேசுகிறவர்களை மந்திரிகள் லக்ஷியம் செய்கிறதில்லை. கடன் தவணை ஒத்திவைப்பு, கட்டாய ஹிந்தி போன்ற அவஸரப்பட்ட கார்யங்களில் அநேக அறிவாளிகளும் பொதுஜனங்களும் மந்திரிகள் செய்கையை ஆக்ஷேபிக்கிறார்கள். அந்தக் கட்சிகளெல்லாம் சுயநலத்தை தேடுகிறவர்களின் கட்சியென்று எளிதாய் ஸ்ரீமான் பிரதமமந்திரி சொல்லிவிடுகிறார். "நாங்கள் மெஜாரிட்டிவோட்டால் வந்தோம். எங்களுக்கு யுக்தமாகத் தோன்றுவதைச் செய்வோம். உங்களுக்குப் பிடிக்காவிட்டால் அடுத்த எலெக்ஷனில் எங்களை விலக்கிவிடுங்கள், அல்லது இப்போது வேண்டுமானாலும் நாங்கள் விலகிவிடுகிறோம்" என்று தந்திரமாகப் பேசிக் கழித்துவிடுகிறார்கள். ஸ்ரீமான் பாட்லிவாலா கேஸ் விஷயமாக காங்கிரஸ் மந்திரிகள் நடந்துகொண்டிருப்பதில் ஸோஷலிஸ்ட் கட்சியாருக்கு மிகுந்த அதிருப்தி உண்டாயிருக்கிறது. பிரஜா உரிமைக்கு பங்கம் ஏற்பட்டிருப்பதாகவும் பேச்சு ஸ்வதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர்கள் ஆக்ஷேபிக்கின்றனர். இதைப்பற்றி கும்பகோணத்தில் ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில், கனம் ராமன் மேனன் கூறிய பதில் விசித்திரமாயிருக்கிறது. பேச்சு ஸ்வதந்திரம் உண்டென்பது உண்மையென்றும், ஆனால் காங்கிரஸ் கொள்கைகளுக்கும் திட்டத்துக்கும் விரோதமாகப் பேச ஒருவருக்கும் சுதந்திரம் கிடையாதென்றும் சொன்னார்.

ஆதலால் காங்கிரஸ் ஆக்ஷிக்கு எதிராகப் பேசுகிறவர்கள் மீது அடக்கு முறையைப் பிரயோகிக்கப் பின்தங்கமாட்டோமென்று மந்திரிகள் பயமுறுத்துவதாகத் தோன்றுகிறது. ஜனநாயக ஆக்ஷிக்கு இது எவ்வளவு விபரீதமான கொள்கை யென்பது நன்கு விளங்கக் கூடியது. ஏற்கனவே அதிகாரம் செலுத்திய கக்ஷியாரும் இப்படித்தான் அடக்குமுறை நடத்தினார்கள். அதையே காங்கிரஸ்காரர் அதிகாரத்திற்கு வந்த பிறகும் செய்கிறார்கள். வரையறைகளும், வியவஸ்தையும், கட்டுப்பாடும் வேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆயினும் வெளியில் பிரஜா உரிமைகளைப்பற்றி எவ்வளவோ பேசிய காங்கிரஸ்வாதிகள், உள்ளே புகுந்த பின் இப்போது செய்வதென்ன? காங்கிரஸ் தலைவர் நோரஜி பிரஜா உரிமைக்குப் பல வழியிலும் அந்நிய கவர்ன்மெண்டால் பங்கம் ஏற்படுவதைத் தடுக்க மிதவாதி முதலிய எல்லாக் கக்ஷியாருடைய ஆதரவையும் அபேக்ஷித்தார். அநேக விடங்களில் அந்த ஸங்கத்தை ஸதாபித்தார். ஆனால் காங்கிரஸ் ஆக்ஷியே அந்த பிரஜா உரிமையை பங்கப்படுத்த முன் வந்துவிட்டதாக சென்னை மந்திரிகளின் பேச்சால் வெளிப்படுகிறது. "ஹிட்லர் ஆக்ஷி" என்று வர்ணிப்பதைப்பற்றி மந்திரிகள் வருந்திப் பிரயோஜனமில்லை. அதற்குக் காரணமாயுள்ள மனப்போக்கை மாற்றிக்கொண்டு, கார்யத்தில் காட்டி மெய்ப்பிக்க வேண்டும். இல்லையேல் பொது ஜனங்கள் சிரத்தையெடுத்து மந்திரிகளின் மனப்போக்கை மாற்றக் கிளர்ச்சி செய்ய நேரிடும். எலெக்ஷன் காலத்தில் வோட் பெறுவதற்காக ஒரு வகையாகப் பேசுவதும் பிறகு வேறு மாதிரியாக நடப்பதையும் வோட்டர்கள் பொறுத்திருக்கமாட்டார்கள். உலகம் முழுவதும் ஒரு கொள்கையாயிருந்தாலும், தான் மட்டும் தனிக்கொள்கையுடனிருக்க எவருக்கும் உரிமையுண்டென்ற ஆதார உரிமையை காந்திஜி எல்லாருக்கும் முதலாக ஒப்புக்கொண்டு அநுஷ்டித்துக்காட்டியவர். அந்த முக்கியக்கொள்கையை புறக்கணிக்காமல் நடப்பது சென்னை மந்திரிகளின் இன்றியமையா முதற்கடமையாகும்.

## குறிப்புகள்.

### மதமாற்றமா ? ஜாதிமாற்றமா ?

டாக்டர் குருக்கோடி என்பவர் பம்பாயில் சில தினங்களுக்கு முன் ஓர் வெள்ளைக்காரியை ஹிந்துமதத்தில் சேர்த்து, அதைப்பற்றித் தமது குதூஹலத்தையும் வெளியிட்டிருக்கிறார். அந்த வெள்ளைக்காரி பெரிய படிப்பாளியென்றும், ஹிந்துமதத்தை வெகுவாக ஆராய்ச்சிசெய்து மெச்சியவளென்றும் அவர் குறிப்பிட்டார். இதனால் ஹிந்துமதத்திற்கு ஏற்றமுண்டாகிவிட்டதாக அவருடைய எண்ணம்போலும்! சில வருஷங்களாக இந்தியாவில் கிறிஸ்தவ, மஹம்மதியர்களுடைய மதமாற்றப் பிரசாரத்திற்குப் போட்டியாக ஹிந்துக்களிலும் இந்த இயக்கம் தலைகாட்டியிருக்கிறது. ஆர்யஸமாஜம் போன்ற சில புதிய ஸங்கங்கள் இந்த வேலையில் முனைந்து நிற்கின்றன.

ஆனால் ஆரம்பத்தில் பிறமதம் சென்று பிரஷ்டர்களாகப்போன ஹிந்துக்களை மீண்டும் தங்கள் மதத்திற்கு வரும்படி மீட்பதே அந்த ஸமாஜத்தின் வேலையாயிருந்தது. ஆயினும் நாளடைவில், அந்த ஸமாஜத்தின் கொள்கைப்படி பிறப்பு, ஜாதிபேதம் கிடையாதாகையால் அந்நிய ஜாதியர்களைக்கூட சுத்திசெய்துவைத்து ஹிந்துமதத்தில் சேர்க்க ஆரம்பித்தார்கள். இம்மாதிரி ஆர்யஸமாஜிகள் செய்வது மதமாற்றமெனச் சொல்லப்பட்டபோதிலும் அது உண்மையில் ஜாதிமாற்றமே என்பது தார்மிகர்களால் கவனிக்கத்தக்கது.

நம் தேசத்தில் முன்காலத்தில், சாக்ய சாணக்கி பலவித நாஸ்திக மதங்கள் இருந்தபோது அவைகளைச் சேர்ந்தவர்களை ஆஸ்திக மதத்திற்குத் திருப்பியதாக சரித்திரங்களால் அறிகிறோம். ஜைன, பௌத்தாதி மதஸ்தர்களில் பலர் வைதிக மதத்திற்குக் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிகிறது. வைதிக மதத்திற்குள்ளேயே சைவர் வைஷ்ணவராகவும் வைஷ்ணவர் சைவராகவும் மாறிய பல கதைகள் இருக்கின்றன. ஆயினும் இப்போது நடக்கும் மதமாற்றத்தை முன்காலத்தியதுடன் சிலர் ஒப்பிட்டுப்பேசுவது மிகுந்த அறியாமையேயாகும். ஜாதிமாற்றத்திற்கும், மதமாற்றத்திற்குமுள்ள வித்யாஸத்தை கவனிக்காமலேயே இப்படிப் பேசுகிறார்கள். முன்காலத்தில் ஜைன, பௌத்தாதிகளோ சைவ, வைஷ்ணவாதிகளோ மதமாற்றம் செய்துகொண்டாரெனினும் அவர்களுடைய பிறப்பு ஜாதியை மாற்ற ஒருவரும் சம்மதி கொடுக்கவில்லை. அவரவர்களுடைய பிறப்பு ஜாதியை ஸ்திரமாக வைத்துக்கொண்டு மதத்தை மட்டும் மாற்றிவைத்தார்கள். சைவ, வைஷ்ணவர்களிலும், பிராம்மணர் பிராமணராகவே யிருந்தும், சூத்ரர் சூத்ராகவே யிருந்தும் மதத்தைமட்டும் மாற்றிக்கொண்டார்களேயல்லாது, அவர்களுடைய பிறப்பு



ஜாதி மாறியதில்லை. வைதிக ஹிந்துமதம் இத்தகைய ஜாதிமாற்றக்கொள்கைக்குச் சிறிதும் இடம்கொடுக்காததே இதற்குக் காரணம்.

இப்போது ஸமாஜிகள் செய்யும் வேலையோ முற்றிலும் ஜாதிமாற்றத்தையே அடிப்படியாகக் கொண்டது. வெள்ளைக்காரனோ மஹம்மதியனோ ஹிந்துவாக மாறினால் உடனே அவனுக்குப் பூணூலும், காயத்ரியும் கொடுத்து ஹிந்து ஜாதியில் விவாஹமும் செய்துவைத்துவிடுகிறார்கள். இது வைதிக மதத்தின் மூலாதார தத்வத்தை நாசமாக்கும் பெரிய விஷமவேலையல்லது வேறல்ல. ஆகையால் சில மந்தபுத்திகள் இந்த வேலையைக் கண்டு மகிழ்ச்சி அடைவது அறியாமையேயாகும். இதனால் ஹிந்துமதமும், அதன் பரிசுத்தியும் அழியுமே தவிர உயராது.

டாக்டர் குருக்கோடி ஏற்கனவே ஒரு வெள்ளைக்காரியை ஹிந்துவாக்கி இந்தூர் அரசனுக்கு விவாஹம் நடத்திவைத்து தர்மதுரோகம் செய்தது பிரஸித்தம். இப்போது இன்னொரு வெள்ளைக்காரியை சுத்திசெய்து வைத்திருக்கிறார். இவளுக்கு ஒரு ஹிந்துக் கணவனைத் தேடிப்பிடிக்கவேண்டிய வேலை அவருக்குக் காத்திருக்கிறது.

இந்த "தர்மாத்மா" தான் சென்னையில் நடக்கப்போகும் பண்டித பரிஷத்திற்குத் தலைவராக விளங்கப்போகிறாராம். என்ன அழகு! இப்போது மதம்மாறிய மிஸ் அருணா என்ற வெள்ளைக்காரியும் இந்த பண்டித பரிஷத்திற்கு ஒரு அங்கத்தினராக வரக்கூடுமோ? இவள் ஹிந்துமதத்தை நன்கு ஆராய்ச்சி செய்த பெரிய படிப்பாளியல்லவா?

### மோட்டார் மரணங்களைத் தடுக்கக் கூடாதா?

[illegible] யில்ஒரு கேள்விக்குப்பதில்அளிக்கையில்இந்த மாகாணத்தில் மோட்டார் வண்டிகளால் ஏற்பட்ட மரணங்களுக்குக்கணக்குச்சொல்லப்பட்டது. அதன்படி சென்றஸர்க்கார் வருஷத்தில்மட்டும்259பேர் மோட்டார்வண்டிகளால் இறந்திருப்பதாயும் 1182 பேர் காயம் அடைந்திருப்பதாயும் தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்போது கடைசியாக மூன்று மாதத்திற்குள் 91 பேர் இறந்திருப்பதாயும் ஸர்க்கார் தரப்பில் விவரம் கூறப்பட்டது. ஆகவே சென்னை மாகாணத்தில் மாத்திரம் வருஷத்தில் சுமார் 350 பேர் மோட்டார் யமன்களால் கொல்லப்படுகிறதாக ஏற்படுகிறது. இம்மாதிரிஒவ்வொரு வருஷத்திலும்சேர்ந்து கொண்டிருந்தால் மரண ஸங்கியை பிறகு அளவிட்டுச் சொல்லுவது அஸாத்யமாகி விடும். இந்தஒரு மாகாணத்தில் இப்படியிருந்தால் இந்தியா முழுவதுமுள்ள ஒவ்வொரு மாகாண மரணக்கணக்கின் படி ஆயிரக்கணக்கான மரணங்கள் ஏற்படுவதாக நிச்சயிக்கலாம். சென்னையை விட பம்பாய், கல்கத்தா முதலியவைகளில் மோட்டார் அதிகம். அந்த மாகாணங்களில் மரணஸங்கியையும் அதிகமாயிருக்குமென்றே நினைக்கவேண்டும்.

இதைத்தவிர ஆகாச விமான மரணம், சுரங்க விபத்து முதலிய நவீனகால மரணங்களையும் சேர்த்துக்கணக்கிட்டால், வியாதி முதலிய காரணமின்றி, மனுஷ்ய யத்னத்தால் தவிர்க்கக்கூடிய அகால மரணத்தால் எவ்வளவு ஆயிரம் ஜனங்கள் மடிகிறார்களென்பது தெளிவாகும். பாலர்களும், யுவர்களும், யுவதிகளும், குடும்ப ரக்ஷகர்களும், மேதாவிகளும், ஆகிய அநேக மனிதர்கள், ஸமூகத்திற்கும் அந்தந்த குடும்பங்களும் உபயோகமாயிருக்கக்கூடியவர்கள் எவ்வளவு பேர் இப்படிப்பரிதாபமாக உயிரிழக்க நேருகிறது?

இதைத்தடுக்க தற்கால, தேசிய கவர்மெண்டார் என்ன முயற்சி செய்யப்போகிறார்கள்? ஒருவன் தமாஷுக்காக மோட்டார் ஸவாரி செய்யவும் அதனால் பலர் அநியாயமாகக்கொல்லப்படுவதும் என்ன நீதி? இந்த அக்கிரமத்தை தடுக்க வேண்டாமா? பால்ய விவாஹத்தால் தேசத்தில் சீக்கிர மரண மேற்பட்டுவிடுகிறதாகப்பழி சொல்லி அதைத்தடுக்க முயற்சிக்கும் மேதாவிகள், இம்மாதிரி மோட்டார் முதலிய விபத்துக்களால் ஏற்படும் அகால மரணங்களைகவனித்தார்களா? உடன்கட்டை ஏறுதல் என்றஅநாகரீக மரணத்தைச்சட்டத்தால் தடுத்து விட்டதாகப்பெருமை பேசும் ஸர்க்காரும், சீர் திருத்த வாதிகளும் இந்த அநியாயமோட்டார்மரணத்திற்கு என்னபதில் கூறுவார்களோ?மோட்டார்முதலியதற்கால நவீன முறை மரணங்களை விட ஸதி மரணங்கள் நம் தேசத்தில் அதிகமாக யிருந்ததாக ஒருவரும் சொல்ல முடியாது. மோட்டார் மரணங்களைத்தடுக்காத வரையில் ஸதி மரணங்களைத்தடுத்து விட்டதாக பேசுவதில் அர்த்தமில்லை.

நவீன மாதிரியான ஸங்காத மரணங்களுக்குப்புதிய புதிய ஆதாரங்களை உண்டாக்கி அதை விருத்தி செய்வது நவீன நாகரீகமும் அதற்கு பலம் கொடுக்கும் நாகரீக ஸர்க்காருமல்லவா? இவர்கள் நமது பிராசீன பழக்க வழக்கங்களை பழிக்க வாயுண்டா?

### தேவாலயங்களுக்குப் பணஉதவி செய்வார்களா ?

சென்னை ஸர்க்காரின் மதுவிலக்கு வேகம் தேவாலயங்களிலும் புகுந்துவிட்டது. ஹிந்து மத ஸ்தாபன போர்டார், மந்திரிகளின் விருப்பத்திற்கிணங்க இம்மாஹாணத்திலுள்ள தேவாலயங்களுக்குச் சொந்தமான தென்னை பனைமரங்களில் இனிமேல் கள் இறக்க அநுமதி கொடுக்கக்கூடாதென்று ஒரு சுற்றுத் திரவு அனுப்பியிருப்பதாக அறிகிறோம். கள் மூலமாகக் கிடைக்கும் பாபபணத்தைக் கொண்டு ராஜபகார்யமே நடத்தக்கூடாதென்று காந்திஜீ கட்டளையிட்டிருக்கிறார். முற்றிலும் மதஸம்பந்தமான தேவாலய கார்யங்களைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. கள்மூலம் கிடைக்கிற பணத்தை தெய்வ ஆராதனைக்கு உபயோகிப்பது பெரும் பாவமென்று அவர் கூறியது இயற்கையே! ஆதலால் காங்கிரஸ் ஆக்ஷியில் இந்த சீர்திருத்தம் நிச்சயம் ஏற்படுமென்று தேவாலயங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டியவைகளே!

கள்மூலம் தேவாலய வருமானம் பெருகுவதை பொதுவாக ஒருவரும் ஒப்பமாட்டார்களாயினும் இப்போது திடீரென்று இந்த மாறுதலில் அநேக தேவாலயங்கள் பெருத்த நஷ்டமடைந்து தவிக்கக்கூடும்.

கோடிக்கணக்கான வருமானமும், வருமான வழியுமுள்ள கவர்ன்மெண்டாரே மதுவிலக்கால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுசெய்துகொள்ள வேறு வரிகளை விதிக்க யோஜித்துவருகிறார்கள். ஆனால் தேவாலயங்களுக்கு இந்த சௌகரியமிருக்கிறதா? இந்த நஷ்டத்தை வேறு எந்த வழியில் அவை சமாளித்து ஈடுசெய்துகொள்ளமுடியும்? பெரும்பாலான தேவாலயங்கள் நிலவருமானத்தையே நம்பி ஜீவித்துவருகின்றன. நிலவருமான நிலைமை தான் இப்போது தெரிந்தவிஷயம். பணதாரித்திரியத்தினால் அநேக தேவாலயங்கள் இப்போதே தவிக்கின்றன. மாமூல் உத்ஸவங்களும் ஆராதனங்களும் பணக்கஷ்டத்தால் நின்றுவிட்டன. தேவஸ்தான போர்டு கப்பம் கட்டப் பணமில்லாமல் நகையும், வாஹனமும் ஜப்தியாகின்றன. இந்த நிலைமையில் அவைகள் இந்த வருமானத்தையும் இழக்கநேரிட்டால் சிரமமல்லவா? கள்ளுத்தகைக்கு விடுவதை நாம் ஆதரித்துப் பேச விரும்பவில்லை. அதை நிவிருத்திசெய்ய வேண்டுமென்றே விரும்புகிறோம். ஆயினும் கள்குத்தகை கூடாதென்று உத்திரவிட்டவர்கள் அதற்குப் பதிலாக கோவில் வருமானத்திற்கு என்ன வழிசொன்னார்கள்? உத்திரவு போட்டுவிட்டால் போதுமா? எண்டோன்மெண்டு போர்க்கு கோவில்கள் கொடுக்கவேண்டிய கப்பத்தை வஜாசெய்வார்களா? ஏராளமாகப் பணவசூல் செய்துவைத்துக்கொண்டிருக்கும் மதுவிலக்குச் சங்கங்கள் போன்றவை, ஷை தேவாலயங்களுக்கு உதவிசெய்யக்கூடுமா? அல்லது கவர்ன்மெண்டாரே அனேக இலாக்காக்களின் நிர்வாஹத்தை நடத்துவதுபோல் தேவாலய நிர்வாஹங்களையும் அவைகளின் வரவு செலவு விஷயங்களையும் கவனித்து, பணமில்லாத கோவில்களுக்கு ஸர்க்காரிலிருந்து கிராண்டு கொடுத்து தேவபூஜைகளும், உத்ஸவங்களும், பணத்தட்டினால் நின்று போகாமல் பார்த்துக்கொள்ளுவார்களா? கோவில் மரங்களை கள் இறக்க உபயோகிக்கக் கூடாது என்று சொல்வது நியாயமாயினும் இந்த நஷ்டத்திற்கும் ஈடுசெய்து கொடுப்பது கவர்ன்மெண்டின் கடமையாயிருக்கிறது.

## வாரக்குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா

பழய வாஸனையோ? இந்நூற்றாண்டில் பற்பல நாகரீகங்கள் தோன்ற, பாண்டிச்சேரி தேர்தல் சண்டை மாத்திரம் ஓயவில்லை. சென்றவார தேர்தலில் பலர் பல காயம் பட்டது சாரதா சட்டத்தை அங்கும் நிறைவேற்றிய கவர்னர் நல்ல பெயரைக் கெடுப்பதாகும். அறவே அச்சண்டை ஒழியும்வண்ணம் செய்ய[illegible]

எச்சரிக்கை! வடநாட்டிலே ஓர் உபாத்தியாயர் துஷ்ட குழந்தையை சிக்ஷிக்க ஓர் உள்ளே அடைத்தார். ஆங்குள்ள மலைப் பாம்பு அவனை விழுங்கிற்று. அதன் வயிற்றிலிருந்து எடுத்தபின்பும் 2மணி ஜீவனிருந்ததாம். உபாத்தியாயர் கைதியானார். கோபம் பொல்லாதது.

நல்லயோசனை! ஜார்ஜ்மன்னர் ஞாபக சின்னமாக மற்றுமோர் உருவச்சிலை வைக்க சென்னை கருதுகிறது. ஏற்கனவே வேறொரு உருவச்சிலை யிருப்பதால் நல்ல தானதர்மத்தில் இதை செலவுசெய்து நல்ல விநியோகம் செய்தால் எல்லோருக்கும் நன்மை உண்டு!

சிரஜீவியாக வாழுமா? திருவல்லிக்கேணியில் ஓர் 'வைதிகர் சங்கம் தோன்றிற்று. பிரும்மஸ்ரீ அகோர சாஸ்திரிகள் அதில் உடனே ஸத்கதாகாலக்ஷேபம் செய்தார். இத்தகைய சங்கம் ஒவ்வோர் நகரத்திலும் வேண்டும். இது நீண்ட ஆயுளுடன் இருக்கும்படி செய்வாரா?

புதுச்சேரியில் எலெக்ஷன் கலஹம். ஜனங்கள் மீது துப்பாக்கி பிரயோகம்.

புதுச்சேரி எலெக்ஷன் விஷயமாக அங்கு கலவரம் ஏற்பட்டதில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது இதனால் 50 பேர் வரையில் காயம் அடைந்ததாகத்தெரிகிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

ஹரகும்பேட்டா.
போலவாம் போஸ்டு (கோதாவரி).
கோதாவரி கீழ ஜில்லா.

## ரயில்வண்டிகளில் சுருட்டுக்குடித்தல் சட்டமூலம் தடுக்கவேண்டும். மந்திரி கவனிப்பாரா?

நமது சென்னை கவர்ன்மெண்ட் பிரதம மந்திரியான ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர் சிலதினங்களுக்குமுன் சென்னையில்கிரிக்கெட் ஆட்டக்காரர்களிடையில் பேசியபோது சுருட்டிக் குடித்தலென்ற கெட்ட வழக்கத்தைப் பற்றி பலமாகக் கண்டித்துப் பேசி அதை யாவரும் விட்டுவிடவேண்டுமென்று வற்புறுத்தினார். சுருட்டுக் குடிப்பதால் சரீர ஆரோக்யம் கெட்டுவிடுவதுடன், வாய் துர்நாற்றமெடுத்து அருவருப்பு ஏற்படுவதாயும் சுருட்டுப் புகையால், ஸமீபத்தில் இருப்பவர்களுக்குப் பெரிய தொந்திரவு ஏற்படுவதாயும், இந்த வழக்கம் ஒரு துர்மார்க்கத்தைச்சேர்ந்ததென்றும், ஹிந்துக்கள் பிராசீன கால வழக்கப்படி இத்தகைய துர்வழக்கங்களை விட்டுவிடவேண்டுமென்றும் பேசியிருக்கிறார்.

இவருடைய பேச்சு முற்றிலும் கொண்டாடத்தக்கதே. இந்தியாவில் பிற நாகரிகமென்ற அநாகரிகங்கள் பலவற்றுள் சுருட்டுக்குடித்தலென்ற கெட்ட வழக்கமும் வெகு தீவ்ரமாகப் பரவிவிட்டது. முன்பு இதில் வெட்கப்பட்டவர்கள்கூட இப்போது பஹிரங்கமாயும் பெருமையாயும் சுருட்டுக்குடிக்கிறார்கள். முக்யமாகச் சிறுவர்களும், பள்ளிக்கூட, காலேஜ் மாணவர்களும் இந்த துர்வழக்கத்தில் அதிகம் இறங்கிவிட்டார்கள். சுருட்டுக் கிடங்குகளும், கடைகளும், ஆடம்பர விளம்பரங்களும் நாளுக்குநாள் வெகுவாக அதிகரித்துவருகின்றன. கனம் மந்திரி, கள்குடியும், சுருட்டுக்குடியும் ஸமமானதென்று குறிப்பிட்டார். அப்படியானல் மதுவிலக்கைப்போல் சுருட்டுவிலக்கிலும் இவர் கவனம் செலுத்துவாரா? அநேக குடும்பங்களில் சிறுவர்கள் இந்தக் கெட்ட வழக்கத்தால் பெற்றோர்களுக்கும் பந்துக்களுக்கும் தாங்கமுடியாத மனவருத்தத்தை கொடுத்துவருகிறார்கள்.

முக்யமாக பொதுஸ்தலங்களில் சுருட்டுக்குடிப்பவர்களுடைய தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. இதனுல் பொதுஜனங்கள் படும் துன்பம் அதிகம். முக்யமாக ரயில் வண்டிகளைக் கவனிக்கலாம். ரயில்வண்டிகளில் சுருட்டுப்புகைத் தொல்லையால் கஷ்டப்படாத பிரயாணியே இருக்கமாட்டார். ஏற்கனவே புளிமூட்டைபோல் அடைபட்டுக் கிடக்கும் 3-வது வகுப்புப் பிரயாணிகளிடையில் சுருட்டுப் பிடிப்பவர்களும் தங்கள் துர்நாற்றப்புகையை பரப்பிவிடுவதால் பிரயாணிகள் படுந் துன்பத்தை வர்ணிக்க இயலாது. தென்னிந்திய ரயில்வண்டிகள் சிறியவையாகவும், நாலுபக்கமும் அடைப்புள்ளவையாகவும் பெட்டிபோலும் இருப்பதால் இங்கு ஏற்படும் சுருட்டுப்புகை வெளியேற வழியின்றி வண்டியிலேயே சூழ்ந்துகொண்டிருக்கிறது. இந்தப் புகையால் ஸ்திரீகளும் குழந்தைகளும், சுருட்டுப்பழக்க மற்றவர்களும் அடையும் கஷ்டம் சொல்லவொண்ணுது. ஏககாலத்தில் அநேகர் வண்டியில் சுருட்டுப் புகையை கிளப்பிவிடுகிறார்கள். ஒருவர்பின் ஒருவராகவும் ஓயாமல் பிடிப்பதால் புகை சூழ்ந்துகொண்டேயிருக்கிறது. பக்கத்திலிருப்பவர்களின் வாய், மூக்கு முதலிய ஸகல த்வாரங்களிலும் சுருட்டுப்புகை படிந்துவிடுகிறது. அவர்களுடைய உடைகளும் சரீரமும் புகை நாற்றமெடுக்கிறது. இவ்வளவு கஷ்டமும் பிரதி வண்டியிலும் வெகு அதிகமாக இருந்துவருகிறது. சுருட்டு குடிப்பவர் சிறிதுகூட தயா தாக்ஷிண்யம், ஸங்கோசமின்றித்தங்கள் வேலையைச் செய்கிறார்கள். ஸஹநதாரக் கேடுஉளதும், வெகு அருவருப்புக் கிடமானதுமான இந்த ஆபாஸத்தை தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் நன்கு அறிந்திருந்தும் அதைத் தடுக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை. ஸாதாரணமாக ஜனங்கள் கூடும், நாடகம் ஸினிமா முதலிய இடங்களில் கூட, லாகிரி வஸ்துக்களையோ சுருட்டுக்களையோ குடிக்கக்கூடாதென்று எச்சரிக்கிறார்கள். கோர்ட்டுகள், ஸர்க்கார் உத்யோகஸ்தலங்கள் முதலியவைகளில் சுருட்டுக் குடிக்கக்கூடாமல், ஸர்க்கார் தடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்க ஸகலஜனங்களுக்கும் பொதுவானதும்வெகுநெருக்கமுள்ளதுமான ரயில் வண்டிகளில் இதைத்தடுக்கவேண்டியது வெகு அவசியமல்லவா? அப்படியிருந்தும் இந்த விஷயத்தில் ஸர்க்காரும், கம்பெனியாரும், பொது ஜனங்களும், சட்ட ஸபை மெம்பர்களும் சிறிதும் சிரத்தை காட்டாதது கண்டிக்கத்தக்கது.

சுருட்டுக்குடிக்கும் பழக்கமுள்ள ஜாதியாியார் சிலர் இருக்கலாம். அவர்களுக்காக மற்ற எல்லோரையும் துன்பப்படுத்துவது நியாயமாகுமா? கோர்ட்டுகளிலும், மற்றவிடங்களிலும் அந்தப்பழக்கமுள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? அதுபோலவே ரயில்களிலும் அவர்களைத்தடுக்க வேண்டியதே.

பிளாட் பாரங்களில் இறங்கி அவர்கள் சுருட்டுக்குடிக்கும்படி செய்யலாம். வண்டிக்குள் குடிப்பது குற்றமாக்கப்பட வேண்டும்.

காங்கிரஸ் மந்திரிகள், ரயில் கம்பெனியாருடன்கலந்து இதில்வெகுசீக்கிரமாக முயற்சி எடுத்துக் பொது ஜன சுகத்தைக்காப்பாற்ற வேண்டியது அவசியமாகும்.

ரயில் பிரயாணி.

### திருசிரபுரம்.
### ஸம்ஸ்கிருத ஸாஹித்ய பரிஷத்.

இப்பரிஷத்தின் முதலாண்டு நிறைவுவிழா 17—10—37 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4-மணிக்குத் "திருச்சி முனிஸிபல் பப்ளிக் ஹாலில்" நடைபெறும். ஸ்ரீயுத திவான்பகதூர், ஸர் T. தேசிகாசாரியார் அவர்கள் தலைமை வகிப்பார். திருப்பதி ஸம்ஸ்கிருத கலாசாலையின் தலைவர், ஸ்ரீ D. T. தாதாசாரியார் அவர்களும், திருவையாற்று ஸம்ஸ்கிருத கலாசாலையின் ஆசிரியர், ஸ்ரீ T. G. சோமசுந்தர தேசிகர் அவர்களும் உபன்யசிப்பார்கள்.

ஒரு நிருபர்.

### கும்பகோணம்
### விசிஷ்டாத்வைத ஸபை.

வழக்கம்போல் இந்த ஸபை 17-10-37 முதல் 24-10-37 வரையில் ஸ்ரீ சாரங்கபாணி கோவில் ரங்கவிலாஸ் மண்டபத்தில் நடைபெறும். பரீக்ஷைகளும் உபந்யாஸங்களும் தினந்தோறும் நடக்குமென்று அறிவிக்கப்படுகிறது.

### கும்பகோணம்.
### பார்வதீ கல்யாணம்.

ஈசுவர-ஸ்ரீ புரட்டாசி-மீ 19உ முதல் ஸ்ரீசங்கராச்சார்யஸ்வாமிமடத்தில் சேங்காலிபுரம் சே. வைத்தினாத சாஸ்திரிகளால் நடத்திவரும் ஸ்காந்தபுராண பிரவசனத்தில் வருகிற புரட்டாசி-மீ 29உ வெள்ளிக்கிழமை பார்வதீபரிணயம் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து, ஷை கைங்கரியத்தில் ஈடுபட்டு சிரவணாநந்தத்தை அடையுமாறு கோரப்படுகிறது.

ஒரு நிருபர்.

### வைஸ்ராய் —நேரு சந்திப்பு.

பண்டித ஜவஹர்லால் நேருவும் ராஜப்பிரதிநிதியும் ஸமீபத்தில் ஸந்தித்துப் பேசக்கூடுமென்று ஸிம்லாவில் ராஜீயவாதிகளுக்குள் பிரஸ்தாபம் நடக்கிறதாம். ஆனுல் நேருஜி இதை மறுக்கிறார்.

## கும்பகோணம் வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தின் சார்பாக மந்திரிகளுக்கு கொடுத்த வரவேற்புப் பத்திரம்.

தாங்கள் இம்மாகாணத்துக்கு மந்திரிகளாக வந்திருப்பதைப்பற்றி சங்க மெம்பர்களும் மெம்பர்களைச்சார்ந்தவர்களும் அளவு கடந்த ஆனந்தத்தை அடைந்து காங்கிரஸ் தயவுடன் தழைத்தோங்கி நீடூழி காலம் நிலை நின்று மகா ஜனங்களின் மனம் குளிர ராஜ்ய பரிபாலனம் செய்ய வேணுமாய் எல்லோரும் ஏகமனதாய் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நாங்கள் குறைகளை பூரணமாக தெரிவித்துக்கொள்ளப்போதுமான அவகாசம் கிடைக்காததால் அடியில் கண்ட விஷயங்களை மட்டில் சுருக்கமாகத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நீதி இலாகா சம்மந்தமாக சமீபத்தில் வரப்போவதாக இருக்கும் வியவசாயிகள் கடன் மசோதாவாலும், ஸிவில் வாரண்டு விஷயமாக இருக்கும் சட்டத்தினுலும் நகரங்களிலும் கிராமங்களிலும் ஏழைகளின் கடன் பத்து வரவுகள் பாதிக்கப்பட்டு அதினுல் பெரும்பாலும் பணம் கடன் வாங்கவும் கொடுக்கவும் முடியாமல் மசோதா வரும் முன்பே அதாவது இப்போதே ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். ஏழையாக இருப்பவன் கடன் வாங்கி தொழில் செய்தே ஜீவனத்தை நடத்த முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம். கடன் வசூலிப்பதில் ஏற்படும் நிர்ப்பந்தம் கடன் கொடுப்போரைத்தடுக்கும் நோக்கமுள்ளதாயிருக்கிறது ஆகவே கடன் வசூலிப்பதில் எவ்வித தடையும் ஏற்படுத்தாமல் கோர்ட்டு பீசு முதலியவைகளைக் குறைத்தும் வேண்டிய சௌகரியங்களைச் செய்வீர்களென்று நாங்கள் பூரணமாக நம்புகிறோம்.

தவிர, ஹிந்து மதத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக நம் தேசத்தில் இருந்து வரும் மத அநுஷ்டானத்தை மாற்ற எந்த அரசாங்கத்தாரும் சட்டமியற்றியதில்லை. மத அநுஷ்டானத்துக்கு விரோதமாக இப்போதுயிருக்கும், ஹிந்துக்கள் விவாக சம்மந்தமான சாரதா சட்டம் வெகு ஜனங்களின் மனதைப் புண்படுத்துகிறது. அதை மாற்றி மதாசாரப்படி நடக்கும் படிக்கும், ஒவ்வொரு மதஸ்தர்களுக்கும் ஆலயங்கள் தெய்வம் தொன்று தொட்டு இருந்து வரும் நிலைமையில் புதிதாக அரசாங்கத்தார் ஆலயப்பிரவேச விஷயமாக யாதொரு சட்டமும் இயற்றாமல் தடுத்தும், இன்னும் நம் மத விஷயமாக அரசாங்கத்தார் பிரவேசித்து யாதொரு சட்டமும் ஏற்படுத்தாமல் காப்பாற்றுவீர்களென்று நம்புகிறோம்.

## ஜமீன்தாரி பிரதேச விசாரணைக் கமிட்டி.

சென்னை கவர்ன்மெண்டார் ஜமீன்தாரி பிரதேச வியவசாயிகளின் நிலைமையை விசாரிக்க ஒரு கமிட்டியை நியமனம் செய்திருக்கிறார்கள். அங்கு விசாரிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றித் தகவல் அறிவதற்காகப் பல கேள்விகளை ஸர்க்கார் தயாரித்திருக்கிறார்கள். அதன் நகல் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது.



## ஸம்ஸ்க்ருத பாஷாபிவிருத்தியும் ஸோபான மார்க்கமும்.

ஸம்ஸ்கிருத பாஷையின் உயர்வைப்பற்றியும் அப்பாஷையை நம் நாட்டில் அபிவிருத்தி செய்ய வேண்டியதின் அவசியத்தைப்பற்றியும் பிரசங்க மேடைகளில் பலர் பேசி வருகிறார்கள்; ஆங்காங்கு சிற்சில ஸங்கங்களும் ஏற்படுகின்றன. ஆனுல் ஒன்றும் கார்ய காரியான பாடில்லை. ஏற்பட்ட கொஞ்ச காலத்திற்கெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் போகின்றன.

இதற்கு முக்ய காரணம் ஸங்கங்கள் கூடும் போதாவது இந்த பாஷையை ஸம்பாஷணையிலும் நடவடிக்கைகளிலும் உபயோகப்படுத்துவது என்ற ஸங்கேதமில்லாமையும், அப்படிச்செய்வது மிக சிரம ஸாத்யமென்ற மனப்பான்மையுமாகும். காலேஜ்களில் ஸம்ஸ்கிருத பாஷையை நவீன முறையில் கற்று வெளி வருகிறவர்களுக்கு இந்த மனோபாவமிருக்கிறது ஸகஜம். கர்நாடக முறையில் ஸம்ஸ்கிருத பாஷையைக்கற்றவர்களுக்குத்தான் வ்யுத்பத்தி ஞானம் ஏற்படும்.

ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்தியாக வேண்டுமானுல் ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படிக்கிற மாணவர்களுக்கு அந்த பாஷை கற்பிக்கும் போதாவது வேறு பாஷைகளையுபயோகிக்காமல் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் அந்த பாஷையில் தானே ஸம்பாஷணை செய்யும்படியான தைர்யத்தையும் சௌகர்யங்களையும் உண்டு பண்ண வேண்டும். மாணவர்கள் ஸம்ஸ்கிருத ஸங்கங்கள் ஏற்படுத்தி வாரமொரு முறை கூடி இந்த பாஷையில் தானே பேசி நடவடிக்கைகள் நடத்துவார்களானுல் தகுந்த பலனளிக்கும்.

காவ்யாதி பாடங்களினுல் மட்டும் ஸம்பாஷணை செய்யவராது. அதற்கு மொழிபெயர்ப்பு அப்பியாஸங்களும் ஸம்பாஷணை அப்பியாஸங்களும் அடிக்கடி செய்ய வேண்டும்.

இதற்கு வேண்டிய முக்ய ஸாதனம் தினப்படி வியவஹாரங்களுக்கும் ஸங்க ஸம்பாஷணைக்கும் உபயோகப்படக்கூடிய பதங்களும் அப்பியாஸங்களுமடங்கிய புஸ்தகங்களாகும். இந்த வழியில் கிரந்த கர்த்தாக்கள் தங்கள் புத்தியை அதிகமாக செலுத்தினதாகத்தெரிய வில்லை. தஞ்சை சாஸ்வதிமால் லைப்ரேரியன் பண்டித ப்ரம்மஸ்ரீ R. ரெங்கநாததாதாசாரியஸ்வாமிகள் எடுத்திருக்கிற சிரமம் போற்றத்தக்கது. இந்த ஸ்வாமி ஸம்ஸ்கிருத ஸோபானம் என்ற பெயருடன் ஒரு புஸ்தகம் வெளியிட்டுள்ளார். சிறு குழந்தைகளை ஸம்ஸ்கிருத பாஷையில் பேசும்படி உத்ஸாக படுத்த இந்த கிரந்தம் மிகவும் சாதகமாயிருக்கிறது. தஞ்சை ஆர்யமத பாடசாலை என்ற ப்ராம்மண பாலிகா வித்யாசாலையில் இந்த நூலை வைத்து பழக்கியதில் குழந்தைகள் உத்ஸாகமாக பேசத்துவங்குகிறார்கள். ஆசிரியர் நோக்கம் பூர்த்தியாகுமென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த புஸ்தகமானது தமிழ் அர்த்தங்களுடன் இயற்றப்பட்டிருப்பதால் தமிழ் நாடு ஹைஸ்கூல்களிலுள்ள ஸம்ஸ்கிருத வித்யார்த்திகளுக்கு மிகுந்த உபகாரமானது என்று சொல்லலாம். அடுத்த பதிப்பில் இங்கிலீஷ் அர்த்தங்களும் அப்பியாஸங்களும் கொடுத்தால் ஹைஸ்கூல்களுக்கு மிக்க உபயோகமாகி விடும். ஸம்ஸ்கிருத அபிமானமுள்ள பண்டிதர்கள் இப்படி பல புஸ்தகங்களை வெளிபிடுவது கடமையாவதோடு ஸம்ஸ்கிதாபிமானிகளான கனதனவான்கள் அவைகளை ஆதரிக்க வேண்டும்.

இந்த பாஷை தேவ பாஷையென்று கொண்டாடுகிற ப்ராம்மணர்கள் தங்கள் குழந்தைகளை இந்த பாஷையை இளவயதில் பயிற்சி செய்ய இம்மாதிரி புஸ்தகங்கள் தேவை. சிறுமிகளுக்கு மட்டிலாவது ஹூண பாஷைகள் அவசியமில்லை. இந்த பிரதம ஸோபானத்திற்கு மேற்படிகளை (சோபானங்களை) மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் பகவான் ஷை ஆசிரியருக்குத்துணை புரிவாராக.

க. வெ. லக்ஷ்மண சாஸ்திரிகள். அட்வகேட், தஞ்சை.

## மெஜாரிட்டி பலத்தின் பெருமையா?

சென்னை சட்டஸபையில் திருவாங்கூர் விளம்பரத்திற்கு துதிபாடி ஓர் தீர்மானம் நிறைவேறிவிட்டது. இது வெறும் மெஜாரிட்டி பலத்தின் பெருமையைக்காட்டிக்கொள்வதற்குச்செய்யப்பட்டதாயிருக்கிறதேயல்லது இதில் சிறிதாவது நீதி யிருப்பதாகத் தெரிய வில்லை. இதுவிவாத காலத்தில்நன்கு ஸ்திரப்பட்டது. ஒரு ஸமஸ்தானத்தின் கார்யங்களில் குண தோஷம் சொல்ல இச்சபைக்கு என்ன அதிகாரமென்று ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியார் என்ற மெம்பர் ஆக்ஷேபித்தற்கு மந்திரி ஸரியான பதில் அளிக்க முடியவில்லை. இதே தீர்மானம் திருவாங்கூரைக்கண்டிப்பதாயிருந்தால் சட்ட ஸபையில் இடம் பெறுமா? கவர்னரும் இதற்கு அநுமதியளிப்பாரா? அப்படியிருக்க வோட்டர்களில் பெரும் பாலோருடைய அபிப்பிராயத்திற்கு விருத்தமாக ஒரு அநீதியான உத்திரவை ஒத்துப்பாடுவதற்கு, இந்த ஸபைக்கு அதிகாரமென்ன? அவசியம் தானென்ன? ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியார் எடுத்துக்காட்டியது போல், ஸ்பெயின் சண்டையைப்பற்றி சென்னை சட்டஸபை மெம்பர்களுக்குப்பல விதமான எண்ணமிருக்கலாம், சீன ஜப்பான் யுத்தத்தைப்பற்றிப்பேச விருப்பமிருக்கலாம். இவைகளைப்பற்றி ஏன் சட்ட ஸபை கவனிக்க வில்லை? காங்கிரஸ் தலைவர் சீனுவுக்கு பரிந்து சீன தினம் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறாரே? அதையனுசரித்து காங்கிரஸ் மெம்மர் நிறைந்த சட்ட ஸபையிலும் ஒரு தீர்மானம் செய்யலாமே? எதிலும் தனக்கென்றால் ஒரு நியாயம்! பிறருக்கென்றால் வேறு நியாயம்! ஸ்ரீமான் கிருஷ்ணமாசாரியார் குறிப்பிட்ட ஆக்ஷேபங்களுக்கு காங்கிரஸ் காரர்களின் விபரீதப்பிடிவாத புத்தியைத்தவிர வேறு ஒழுங்கான ஸமாதானம் இருக்க முடியுமோ? தங்களுக்கு மெஜாரிடி பலமிருப்பதைக்கொண்டு எந்த அநீதியையும் செய்து விடலாம் போலும்! இது தான் ஜன நாயக ஆட்சியின் போக்கோ? ஏற்கனவே மெஜாரிடி பலத்தைக் கொண்டு தவிறு செய்த கக்ஷியாரைக்காங்கிரஸ்காரர்கள் வாய் கிழியக்கண்டித்தது ஏன்? அதே தவிறை இவர்களும் செய்து விட வில்லையா?

ஒரு வோட்டர்.

## இந்துமத தர்ம பரிபாலன போர்டு.

சீர்திருத்த, சம்பந்தமாய் சென்னை வக்கீல் சங்கத்தார், இதரர்களாலும் பல வியாசங்கள் பத்திரிகைகளில் சிலகாலமாக, வெளியாகி வருகிறது. மனிதர்கள், தங்கள் கொள்கை எண்ணத்தை காட்டி எழுதிவைக்கும், உயில் தஸ்தவேஜி ஷரத்துப்படியே நடக்கிறது. நியாயஸ்தலங்களிலும் பரிசீலித்து, எழுதி வைத்தவர்கள் கொள்கையையே நடத்த முடிவு ஏற்படுகிறது. எண்டோன்மெண்டு ஆதி ஏற்பாடுகள், இன்னமாதிரி நடத்தப்பட வேண்டுமென்றே வரம்புகொண்டதாகவே இருக்கக்கூடியது. அம்மாதிரியுள்ள வரம்பு ஏற்பாடு அடியோடே தள்ளப்பட்டு இருப்பதாய் நிச்சயமாக நினைக்க கூடியது. சமஸ்கிருத பாஷா அபிவிர்த்திக்கி ஏற்படுத்திய தர்மத்தை, காலத்துக்கு தக்கபடி வேறு பாஷா அபிவிர்த்திக்கி மாற்ற கூடியது. அதை ரஸ்தாபோட உபயோகித்தால் பொருத்தமாகுமா? ஏற்படுத்தியவர் எண்ணத்துக்கு மாறுதலாகக் கூடியதாகும். போர்டு பரிபாலனத்தில் உள்ள, தர்மங்கள் பெரும்பாகம் ஆதி கொள்கை கருத்துபடியோ, அதற்கு ஒத்த மாறுதல்படியோ நடப்பதாய் தெரியவில்லை. உயில் தஸ்தவேஜி மாதிரியே எண்டோமெண்டு கொள்கை ஏற்பாடு என்பதாய் சீர்திருத்த கொள்கைகாரர்கள், கவர்ன்மெண்டாரும் மனதில் முதலில் கொள்ளவேண்டும். கடவுள் ஆளுதலில் ஆலய பரிபாலனம் அதிலேயே அன்னதானம் நடத்த எண்டோமெண்டு ஏற்பாடு இருந்தால் அந்த ஆலய ஜீரணம் சிலவுகளுக்கு மிகுதிப்படுமானுல் உபயோகிப்பது நீதி. அம்மாதிரி ஏற்படுத்திய இடத்தில் நடத்த வசதிஇல்லாமலும், ஆலயம் ஜீரணமடைந்தால் அப்பக்கம் விரிவாக நடத்தக்கூடிய இதர ஆலய தர்மத்துடன் சேர்த்து விரிவாக நடைபெற பார்க்கவேண்டுவது முறை. இப்போது ஷை தர்ம பரிபாலன சீர்திருத்த கொள்கையோர்கள், தர்ம ஏற்பாடு ஆதி கொள்கை பரிசீலித்து நிர்தாரணித்து, உயில் ஷரத்து உறுதியாய் நடத்தப் படுவதுபோல், எண்டோமெண்டு கொள்கை நடைபெறவும், கால ரீதிக்கி தக்கபடி அந்த வழியில் சேர்ந்ததான, மார்க்கத்தில் மாற்றி, கூடியவரை அநுஷ்டானத்துக்கு வர ஏற்பாடு முயற்சி மனதில் கொண்டு இப்போது நடப்பவைகளை தக்கவழியில் சீர்படவும், மற்றும் அவச்யமான கொள்கையோடு யோசிக்க கோரிக்கை.

S. கணேசய்யர்.

## கவர்னர் சம்பளத்தைக் குறைக்க வேண்டும்.

கவர்னர்களும், கவர்னர் ஜனரலும் தங்கள் சம்பளத்தில் 25 வீதம். குறைவு ஏற்படுத்திக்கொள்ளும் படி தூண்ட காங்கிரஸ் மந்திரிகள் முயற்சிக்க வேண்டுமென்று கல்கத்தாவில் நடக்க போகும் அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டியில் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஓர் தீர்மானம் கொண்டு வருவாராம்.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

215205
593



## சென்னை சட்டசபையின் கூற்று.

சென்றமாதம் நடைபெற்ற சென்னை சட்டசபையில், திருவாங்கூர் மகாராஜா தன் சமஸ்தானத்தில் ஆலயப்ரவேசத் தடையை நீக்கிவிட்டதைப் பாராட்டுவதாக ஓர் தீர்மானம் விவாதத்திற்கு வந்தது நேயர்களுக்கு கவனமிருக்கலாம். இது சம்பந்தமாக கனம் முதன் மந்திரி ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாருள்பட, இத் தீர்மானத்தை ஒட்டி மகாராஜாவைப்பாராட்டி பேசினர்கள். ஆலயப்ரவேசத்தை ஆதரிக்கும் தீவ்ரவாதிகளில் ஒருவரான கனம் முதன் மந்திரியோ அல்லது அவரது கூட்டத்தாரோ இத்தீர்மானத்தைப் பாராட்டிப் பேசியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ராஜீய தந்திரங்களில் கரைகண்ட முதன் மந்திரி இதர தேசங்களுக்கும் தம்கடமையை மறந்தது தான் வருந்தத்தக்கது. ப்ரஸ்தாப விஷயத்தில் ஒரு ராஜ்யம் ஆலயப்ரவேசத்தை ஆதரிக்கும் அதற்கடுத்த ராஜ்யம் அதை எதிர்க்கும் வந்தது அனைவரும் அறிந்த விஷயமே. ஆதரித்த ராஜ்யம் தன் கொள்கையை அனுசரித்திருப்பதால் அதைப் பாராட்டிப் பேசுவதால், இக்கொள்கையை ஆதரிக்காத ராஜ்யத்தை தன் கொள்கையை ஆதரிக்காதற்காக குறை கூறுவதாகவே முடியும். கனம் மந்திரியார் தன் சொந்த ஹோதாவில் எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள்ள உரிமையுண்டென்பதை நாம் மறந்துவிடவில்லை. அவர் முதன் மந்திரியாயிருக்கையில், சிறுபான்மையோருடைய கௌரவத்தையும், சவுகரியத்தையுங்கூட முக்கிய லக்ஷ்யமாகக்கொண்ட ஓர் சபையின் தலைவர், அச்சபையினால் அமைக்கப்பட்ட கவர்ன்மெண்ட், இந்த அடிப்படையான லக்ஷ்யத்தை மறந்து இரு ராஜாங்கத்துக்கிடையே நடந்த விவாதத்தில் ஓர் ராஜாங்கம் தன் ப்ரஜைகளையே கலந்து கொள்ளாமல், யதேச்சாதிகாரத்தைக் கொண்டு தான் தோன்றியாகச் செய்த ஓர் காரியத்தைப் பாராட்டிப்பேசுவது, அச்சபையின் கண்யத்திற்கு குறைவு என்பதை எடுத்துக்காட்டாமலிருந்தது தான் மிகவும் வருந்தத்தக்கது. இதை ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மிகவும் போற்றத்தக்க முறையில் எடுத்துக் காட்டியும் கனம் முதன் மந்திரியார் அதை கவனத்திற் கொள்ளாதது தான் நமக்கு ப்ரமிப்பை யுண்டாக்குகிறது. ஆலயப்ரவேச மசோதா முன்பு டெல்லி சட்டசபையில் வந்து பலத்த விவாதத்திற்குப்பின், தீவிரமான எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டதை எப்படி இவ்வளவு சீக்கிரம் முதன் மந்திரி மறந்துவிட்டிருக்கக் கூடும்! குருவாயூர் சத்யாக்ரகம், காந்திஜியே நேரில் போர் முனையிற் சென்று நடத்தியும் அது வெற்றி பெருததைக் கண்டுங்கூட ஆலயப்ரவேசம் மகாஜனங்களின் ஆதரவைப்பெறவில்லை என்ற இத்தெளிவான உண்மையை ராஜாஜி அறிந்துகொண்டிராமலிருப்பார் என்பர் நம்மால் நம்பக்கூடவில்லை பெரும்பாலோர் ஆதரிக்காத ஓர் செய்கையைச் செய்த ஓர் மகாராஜாவை, பெரும்பாலோரின் ப்ரதிநிதித்வம் உடைய சபை ஆதரிப்பதானது மிகுந்த கேலிக்கூத்தாகவே யிருக்கிறது.

நியாயவாதி.

## ஸ்ரீ வேதாந்த தேசிகர் உத்ஸவம்.

### ஒரு வேண்டுகோள்.

ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணஸபை காரியதரிசி ஸ்ரீமான் உ. வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி வெளியிட்டுள்ள ஆண்டு ப்ரசுரமொன்றில், ஸ்ரீ தேசிகன் அவதாரஸ்தலமாகிய தூப்பிலில் இந்த உத்ஸவத்தை வெகு ப்ரபலமாக நடத்தவேண்டியது ஸ்ரீ தேசிக பக்தர்களின் கடமையென்றும், ஆகையால், வெளியூர்களில் ஆங்காங்கு நடக்கும் உத்ஸவங்களுக்காக வசூலாகும் பொருள்களில் ஒவ்வொரு ஊராரும் ரூ 10க்கு குறையாமல் அனுப்பி ஸ்ரீ தூப்பில் தேசிகன் உத்ஸவத்தை சிறப்பாய் நடத்தினால் ஸ்ரீதேசிகன் திருவுள்ளம் உகப்பதோடு அந்தந்த ஸ்ரீ தேசிகன் ஸன்னதிக்கும்பெருமைவிளைவிக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ஆத்தன்குடி.

### ஸநாதந தர்ம மஹா ஸபை.

ஈஸ்வர ஸு புரட்டாசி மீ 19உ செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு பிரும்மஸ்ரீ வெங்கட சுப்பிரமணியய்யர் கடவுள் வாழ்த்துப்பாட, ஆர். சுப்பிரமணி சாஸ்திரிகள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. திருவாளர் சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் "சீர்திருத்தத்தின் போரால் செய்யும் சீர்கேடு" என்பதைப்பற்றியும், ஜெகதீசய்யர் "பூர்ண மது விலக்கின் அவச்யம்" என்பதைப்பற்றியும்" சொற்பொழிவாற்றினர். தலைவரவர்கள் நவராத்திரியின் மகிமையைப்பற்றியும், சொற்பொழிவாளர்களின் கருத்துக்களை ஆதரித்து அறிய சான்றுகளுடன் நீண்ட நேரம் கூறிய பின் வந்தன வாழ்த்துடன், கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது நிறைவேறியது.

ஆர். சுப்பிரமணியன்.

## காக்கழனி.

### காந்தி பிறந்ததின கொண்டாட்டம்.

1937ம் ஸு அக்டோபர் மீ 2ந்தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஷை கமிட்டியின் ஆதரவில் காந்தி தினம் கொண்டாடப்பட்டது.

மகா ௱௱ ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமியய்யர் அவர்கள் தலைமை வகித்தார். முந்திய மீட்டிங் கணக்குகள் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. தலைவரவர்களால் காந்திஜி உருவப்படம் திறந்து வைக்கப்பட்டு ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. மஹா ஜனங்களுக்கும் வந்திருந்த மற்ற யாவருக்கும் சர்க்கரை வழங்கி வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

ஆர். சந்தானமய்யர்.

## மதராஸ்.

### ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த சம்ஸ்தாபன சபா.

சென்னை நகரிலுள்ள ஷை சபாவின் ஆதரவில் பல மாணவர்களுக்கும் வேத பாராயணம், திவ்யப்ரபந்த ஸ்தோத்திர பாடம் முதலான சம்ப்ரதாய விஷயங்கள் போதிக்கப்படுவதாய்த் தெரிவதுடன் நன்கு பயில்வோருக்கு வெகுமதியளிக்கப்படுவதாயும் தெரிகிறது. இந்த ஸபாவின் மூலமாகவே ஸ்ரீமான் உ. வே. வடகரை ராமானுஜாசாரியாரை பத்திராதிபராய்க் கொண்டு ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தவைஜயந்தி. மாஸ சஞ்சிகை வெளிவந்துலவுவதும் குறிப்பிடத்தக்கதாம்.

ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேக வைபவம். பத்ரீ நாராயண யாத்ரையாய்ச் சென்றிருந்த காரப்பங்காடு வித்வான் வித்வான் ஸ்ரீ உ.வே தேசிக வரதாச்சாரியார் யாத்ராசம்பூர்த்தியாய் சென்னைக்கு விஜயம்செய்து பல அரிய உபந்யாஸங்கள் செய்துவருகிறார். பலரும் வந்து கேட்டு பரமானந்தமுறுகின்றனர். சென்ற திங்களன்று ஸ்ரீ ராமாயணப் பட்டாபிஷேக வைபவ உபன்யாஸம் பூர்ணமெய்தியது.

திருப்பதிகுடை ஊர்வலம். பிரதி வருடம் தவறாமல் நடைபெறும் திருப்பதிகுடை பட்டணப்பிரவேச வைபவத்தை யொட்டி மதராஸ் டவுனெங்கும் 6—10—37 புதன் அன்று ஏழைகளுக்கு அன்னதானமளித்தலும் தெருவெங்கும் பஜனை வைபவங்களும் பக்தகுழாங்கள் ஒரே மனுஷ்ய சமுத்திரமாய் தென்பட்ட காக்ஷியும் மிகவும் ஆனந்தகரமாயிருந்தது. வீடுகள்தோறும் பந்தலலங்காரங்கள் செய்யப்பட்டு குடைக்கு விசேஷ பூஜாமரியாதைகள் செய்யப்பட்டன. ஊர்வலமாகவே சென்று திருப்பதியில்கொண்டு சேர்க்கப்படுமெனத் தெரிகிறது.

ந. வி. நி.

## கலெக்டரின் தர்பார்.

### பாராட்டத்தக்க மாறுதல்.

மதுரை டிஸ்டிரிக்டு கலெக்டர் A. R. C. வெஸ்ட் லேக் துரையவர்கள், திருமலை நாயக்கர் மஹாலில் 9-10-37 மாலை 5-30 மணிக்கு ஓர் தர்பார் நடத்தினார். அவ்வமயம் மெடல்கள், பத்திரங்கள் முதலியவைகள் பரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த தர்பாரில் முதலில் ஹிந்து, முகமதிய, கிறிஸ்தவ ஈஸ்வர வழிபாடுகள் நடந்தன. மதுரைஜில்லா ஜட்ஜி மகா-௱-௱-ஸ்ரீ N. சந்திரசேகர அய்யர் ஓர் ஸம்ஸ்கிருத ஸ்லோகத்தினால் ஹிந்து ஈஸ்வர பிரார்த்தனை செய்தார். பிறகு ஓர் முகம்மதிய கனவான் மகமதிய வழிபாட்டை செய்தார்.

கலெக்டர் துரையவர்களே கிறிஸ்தவ வணக்கத்தை செய்தார். இம்மாதிரிய மூன்று ஈஸ்வர வழிபாடுகள் முதல் முதலாக இந்த தர்பாரில்தான் நடந்தன. இது பாராட்டத்தக்கதே. முடிவில் சக்ரவர்த்தி ஆறுவது ஜார்ஜுக்கும் இந்தியாவுக்கும் "ஜே" கோஷங்கள் நடந்தன.

ஒரு நிருபர்.

## மதிப்புரை.

### "ஸ்ரீஸ்தவம்"

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச்செய்தது. கும்பகோணம் அமிர்தவர்ஷிணீ ஆசிரியர் சிரோமணீ ப. ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமிகள் இயற்றிய தெளிவுரையுடன் கூடிய இந்நூல் ஒன்று வரப்பெற்றோம். ஸ்ரீ பகவத்ராமானுஜருடைய முக்ய சிஷ்யரான கூரத்தாழ்வான் அருளிய பஞ்சஸ்தவத்துள் ஸ்ரீ ஸ்தவம் என்பது ஸ்ரீ லக்ஷ்மீதேவியின் ஸ்தோத்ரம் இதை தினந்தோறும் பக்தியுடன் பாராயணம் செய்தால் பிராட்டியின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரராவதுடன் இஹபரசுகங்களை எளிதில் பெறலாமென்பதில் ஐயமில்லை. யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டு மூலம் தேவநாகரியிலும் கூடவே தமிழிலும் பதிப்பிக்கப்பெற்று விளங்குகிறது. உயர்ந்த காகிதத்தில் அழகான அச்சில் பதிப்பிக்கப்பெற்றது. நேயர்கள் இந்நூலைவாங்கி ஆதரிப்பதின் மூலம் ஆசிரியரது முயற்சியை மேன்மேலும் உத்ஸாஹப்படுத்துவது அவச்யமாகும். இந்நூலின் விலை அணா 0—4—0 (தபால்செலவு தனி.) வேண்டியவர்கள் ஆசிரியர் கெ. 5. சாரங்கபாணி ஸ்வாமி ஸன்னதி கும்பகோணம் என்ற இடத்திலும், ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம் என்ற விலாசத்திலாவது பெறலாம்.

மேலக்காவேரி கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

4 ரூ 40
22

21-10-1937

21526.

215206

597

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஹூ ஐப்டசிமீ 5வ 1937ஹூ அக்டோபர்மீ 21வ | வ / 40

## ஆர்யதர்மம்

ஸ்நாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0.
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

## சென்னை ஹிந்து மதஸ்தாபன போர்டு.

எடுத்துவிடப்படும்.

சென்னை சட்டஸபை காங்கிரஸ் கக்ஷி ஸப் கமிட்டியார் தீவிரமாக ஆலோசித்த பிறகு தேவஸ்தான போர்டை எடுத்துவிட வேண்டுமென்று முடிவுசெய்துவிட்டார்கள். ரவின்யூ இலாகாவில் தர்மஸொத்து நிர்வாஹ இலாகா ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் இந்த நிர்வாஹத்தை நடத்த யோஜனையாம்.

## புனா மாருதிகோவில் தகராறு.

ஸமரஸம் ஏற்படுமோம்.

புனா மாருதிகோவிலில் மணியடிக்கும் உரிமை விஷயமாக ஹிந்துக்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் பெரும் தகராறு நடந்து வருகிறதல்லவா?

இதை ஸமரஸமாக தீர்த்துவைக்க இருவகுப்பாரும் சேர்ந்த பிரபலஸ்தர்கள் கூடி யோஜித்து ஒருவித ஸமரஸத்திட்டத்தை கண்டுபிடித்துவிட்டார்கள். இது மேல் அதிகாரியின் பரிசீலனைக்குப் போயிருக்கிறது. இதன் பயனாக இந்த விவாதம் முடிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

## கட்டாய ஹிந்தி.

பிரதம மந்திரியுடன் வாக்குவாதம்.

சென்னையில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் ஓர் ஹிந்திப் பள்ளிக்கூடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டிப் பேசுகையில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்தார் சிலர் வந்து கனம் மந்திரியைப் பல கேள்விகள் கேட்டார்கள். மந்திரி பேசுகையில் இரைச்சலும் குழப்பமும் அதிகமாக நடந்துகொண்டேயிருந்தது. கனம் ஆசாரியர் கஷ்டப்பட்டு நிலைமையை ஸமாளிக்க வேண்டியதாயிருந்தது.

ஒரு போலீஸ் ஸார்ஜண்டு வந்து எதிர் கக்ஷியாரை எச்சரிக்க வேண்டியதாயிற்றும்.

## அரேபியாவில் கலஹம்.

யூதர் குடியேற்ற விஷயமாக அரேபியாவில் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் நடத்திவரும் நடவடிக்கை காரணமாக அங்கு கலகம் நாளுக்குநாள் வலுத்துவருகிறது. பிரிடிஷ் உத்திரவுக்கு மாறாக அரேபியர்கள் பெரிய கலஹம் செய்யக் கிளம்பியிருக்கிறார்கள்.

## முஸ்லீம் - லீக் கூட்டம்.

ஜின்னாவுக்கு கருப்புக்கோடி.

லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லீம் லீக் தலைவரான ஜனாப் ஜின்னா ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போகப்படுகையில் முஸ்லீம்களில் ஒரு சாரார் கருப்பு கொடி காட்டி அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால் இருகாப்பாருக்கும் பலத்த கலஹம் நடந்து அநேகர் அடிபட்டனர்.

## கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஹூ ஸ்தாபிக்கப்பட்டது.)

கிளை ஆபீஸ்கள்:—மன்னார்குடி & நாகப்பட்டணம்.

ஸப் ஆபீஸ்கள்:—நன்னிலம் & அய்யம்பேட்டை.

30—9—37 எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

| மூலதனம், செல்வுகள். | |
|---|---|
| 1. மூலதனம் (வரவுவந்த பங்குதொகைகள்) ... | 2,82,575—0—0 |
| 2. க்ஷேமநிதிகள், காப்புநிதிகள் ... | 1,98,425—5—8 |
| 3. தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள் ... | 16,83,767—4—5 |
| 4. இதர இனங்கள். ... | 67,805—1—1 |
| மொத்தம் ... | 22,32,572-11—2 |

| சொத்துகள், இருப்புகள். | |
|---|---|
| 1. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள் ... | 64,328—3—0 |
| 2. இன்வெஸ்ட்டுமெண்டுகள்: சர்க்கார், ஸ்டேட் கடன் பத்திரங்கள் ... | 2,26,877—8—0 |
| இதர இனங்கள் ... | 1,86,018-10—5 |
| 3. வரவேண்டிய கடன்கள், வசூலிக்கவேண்டிய உண்டியல்கள், அதிக பத்துகள் உள்பட... | 15,74,345—8—0 |
| 4. சில்லரை இனங்கள் ... | 27,169—2—7 |
| 5. இருப்பு:— ரொக்கமும், இதர பாங்கிகளிலும் | 1,53,833-11—2 |
| மொத்தம் ... | 22,32,572-11—2 |

கும்பகோணம்,
4—10—37.

S. மகாலிங்கய்யர், B.A., B.L.,
மானேஜிங் டைரெக்டர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## சென்னையில் வைதிக மஹா ஸங்கம்.

ஆரம்பக்கூட்டம்.

11—10—37உ திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி வெங்கடாசல செட்டித்தெரு ஸ்ரீபாண்டுரங்கர் கோயிலில் வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ள ஹிந்துக்களின் பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. திருவாங்கூர் மாஜி திவான் பேஷ்கார் ஸ்ரீமான் டாக்டர் N. சுப்பிரமணிய அய்யர் அக்ராசனம் வகித்தார். பல உத்யோகஸ்தர்களும், பண்டிதர்களும் விஜயம் செய்தனர். முதன் முதலாக வேதகோஷத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. அக்ராஸனர் புஷ்பமாலை சூட்டப்பட்டு ஸ்ரீமான் P. S. வைத்தினாதஸ்வாமி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு பாலக்காடு கிருஷ்ணதீக்ஷிதரால் ஆமோதிக்கப்பட்டு ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு தலைவர் தனது விஸ்தாரமான முகவுரைப் பிரஸங்கத்தில் வைதிக தர்மந்தான் சிறந்ததர்மமென்றும் வேதங்களில் எல்லா பிராமணர்களும் நம்பிக்கையுள்ளவர்களாதலால் வேதாத்யனம் செய்துள்ள பிராம்மணர்கள் தான் ஸ்வதர்மத்தைக் காப்பாற்றுவார்களென்றும் அவர்களுக்கு பல லௌகீக காரணங்களால் எவ்வளவு சிரமங்கள் நேரிட்டாலும் அவர்கள் ஸ்வதர்மத்தைக் காப்பாற்றவேண்டுமென்றும் வைதிகமஹாஸங்கம் ஒன்று ஏற்படுத்தி அதில் எல்லா வைதிக பிராம்மணர்களும் மற்றும் வைதிகதர்மத்தில் அபிமானமுள்ளமற்ற பிராம்மணர்களும் சேர்ந்து ஒற்றுமையாய் தங்கள் கடமைகளை நடத்திவருவதால் அவர்கள் உலகத்திற்கே க்ஷேமமளிக்கக்கூடுமென்றும் உலகம் எனப்படும் சுகத்திற்கு பிராம்மணர்கள் முகம்போலிருந்து எல்லோருக்கும் நன்மையும் உதவியும் செய்யவேண்டுமென்றும் இவ்வித சங்கம் ஏற்பட்டால்தான் தன்னாலானவரை அதன்மேன்மைக்கு பாடுபடத் தயாராயிருப்பதாயும் கூறினார். பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

1. சென்னைமாகாணத்திற்கு வைதிகமஹா சங்கம் என்று ஓர் சங்கம் சென்னை நகரை தலைமை ஸ்தானமாகக்கொண்டு ஸ்தாபிக்கப்படவேண்டும்.

2 வைதிகதர்மத்தை ஆதரித்து அபிவிருத்தி செய்வதும், வைதிககர்மாக்களை நடத்திவைக்கும் பிராம்மணர் வகுப்பினர்களை பழையகாலத்திலிருந்தபடி பலப்படுத்தி உஜ்ஜீவனம் செய்வதும் ஷை சங்கத்தின் நோக்கங்களாகும்.

3 அவ்வித நோக்கங்களுடன் ஷை சங்கத்தில் எல்லா வைதிகர்களும் லௌகீகர்களும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும்.

இத்தீர்மானத்தை பிரேரேபிக்கையில் ஸ்ரீமான் மாஜி திருவாங்கூர் ஜில்லா ஜட்ஜி N. ராமச்சந்திரய்யர், வைதிகர்கள்தான் பிராம்மண்யத்தைச் சரியான நிலைமையில் ஸ்தாபிக்கக்கடமைப்பட்டவர்களென்றும் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து ஒற்றுமையாகக் காரியங்களைச் செய்துவந்தாலும் விசேஷமான நற்பயன்கள் உண்டாகக்கூடுமென்றும் வற்புறுத்தி அவர்களுடைய கட்டுப்பாட்டிற்கும் பொதுஜனங்களின் க்ஷேமத்திற்கும் வைதிக மஹாசங்கம் அவசியம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றார். ஸ்ரீமான் P. S. வைத்தினாதஸ்வாமி அய்யர் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசுகையில் உண்மையில் வேதங்களை நம்பி அவைகளில் கூறப்படும் கர்மாக்களை அனுஷ்டிக்கும் ஒவ்வொருவரும் வைதிகரென்றும், வைதிக காரியங்களை நடத்திவைக்கும் பிராம்மணர்களுக்குள் சிறந்த கட்டுப்பாடு இருந்தால் ஹிந்துமதத்திற்கே விசேஷ அனுகூலம் உண்டாகுமென்றும் தற்போதைய அரசியலில் உண்மையில் கட்டுப்பாடான ஒத்த சங்கம் ஏற்பட்டாலும் அதன் கோரிக்கைகள் கௌரவிக்கப்படுமாதலால் ஹிந்துமதத்தை சீர்பெறச் செய்து நமது நாட்டிற்கும் க்ஷேமமளிக்க வைதிக மஹாசங்கம் அவசியமென்றும் அதில் எல்லா வைதிக அபிமானிகளும் சேர்ந்து இதைப்பலப்படுத்தவேண்டுமென்றும் அழுத்தமாய் கூறினார். பிரம்மஸ்ரீ மணக்கால் வைத்தி தீக்ஷிதர் ஆதரித்து தீர்மானம் நிறைவேறியது.

மேற்படி சங்கத்தில் இந்நகரத்திலும் வெளியிலுமுள்ள எல்லா வைதிக பிராம்மணர்களும், வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ள மற்றவர்களும் மாதம் ஒருஅணு சந்தா செலுத்தி மெம்பர்களாகவேண்டும்.

இத்தீர்மானம் திருவல்லிக்கேணி, மெட்ராஸ் பார்மஸி டாக்டர் R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் L. I. M. பிரேரித்து, ஸ்ரீமான் R S. ராமஸ்வாமி அய்யங்கார் ஆமோதித்து பிரம்மஸ்ரீ சாத்தனூர் பிச்சு சாஸ்திரிகள் ஆதரித்து நிறைவேறியது.

3. ஷை சங்கத்திற்கு அடியிற்கண்டவர்கள் உத்யோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர் மாஜி திவான் பேஷ்கார் ஸ்ரீமான் N. சுப்ரமண்ய அய்யர்.

உபத்தலைவர்கள் ஸ்ரீமான்கள்:-

1. ராவ்சாஹிப் P. V. ரங்கஸ்வாமி அய்யங்கார். 2. மாஜி ஜில்லாஜட்ஜி K. S ராமஸ்வாமி சாஸ்திரிகள். 3. மணக்கால் வைத்தி தீக்ஷிதர்.

காரியதரிசி & பொக்கிஷதார் ஸ்ரீமான் டாக்டர் R. கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

கூட்டுக்காரியதரிசி M. நீலகண்ட சாஸ்திரிகள்.

நிர்வாக மெம்பர்கள் ஸ்ரீமான்கள் P. S. வைத்தினாதஸ்வாமி அய்யர் B. A. L. T. திருநெல்வேலி S. ஹரிஹரவாத்தியார். சாத்தனூர் பிச்சு சாஸ்திரிகள். பிக்ஷாண்டார்கோவில் முத்துகிருஷ்ண சாஸ்திரிகள். மயிலாங்கம் வெங்கடாசல சாஸ்திரிகள். R. S. ராமஸ்வாமி அய்யங்கார். மேற்கொண்டும் சிலர் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

சங்கத்தின் பூராவிதிகள் நிர்வாகக் கமிட்டியால் தயாராக்கப்படவேண்டியதாய் தீர்மானிக்கப்பட்டு அக்கிராசனரின் முடிவுரையானதும் வந்தனோபசாரத்துடனும் வேதகோஷத்துடனும் கூட்டம் இரவு 8—30மணிக்கு இனிது கலைந்தது.

நமது நிருபர்.

## தமிழும் ஹிந்தியும்.

ஒரு அநுபவஸ்தர் எழுதுகிறார்

தத்காலம் காங்கிரஸ் மந்திரிஸபை, ஹிந்தி பாஷையைக் கட்டாயப் பாடமாக்க தீர்மானித்திருப்பதும், இதைத் தமிழரிலும் முகம்மதியரிலும் சிலர் எதிர்ப்பதும் யாரும் அறிந்தவிஷயம்.

காங்கிரஸுக்கு வெகு தாராளமாகப் பணம் கொடுக்கும் வடதேசத்துச் சில வியாபாரிகள், ஏதாவதொன்றை நினைத்துவிட்டால் அந்த விஷயத்தை ஸ்ரீ காந்திஜியை எப்படியாவது நம்பும்படிச் செய்வதும், காந்திஜீ ஏதாவது ஒரு ரீதியில் காங்கிரஸில் நுழையவிடுவதும் உடனேஎங்கும் அல்லோலகல்லோலப்பட்டு பிரசாரத்திற்கு காங்கிரஸ் மனிதர்கள் கிளம்பிவிடுவதும் வெகு ஸஹஜங்களாகிவிட்டன.

அவ்விதமான காரியங்களில் ஒன்றுதான் ஹிந்தி கட்டாயப்படிப்பும். இதற்காகப் ப்ரசாரம் செய்பவர்கள் நூதனமாக ஒவ்வொரு காரணத்தையும் ஸ்ருஷ்டித்துக்காட்டுவதும் புதியதல்ல.

தமிழ் ஒன்றைத் தவிர மற்றப் பாஷைகளில் (மலையாளம், தெலுங்கு, கன்னடம்) ஒவ்வொரு வர்க்கத்திலும் (க. வ. ம. வு. ஐ இந்த ஐந்து எழுத்தும் க-வர்க்கம். இதுபோலவே ச-வர்க்கம் முதலியன.) ஐந்து எழுத்துக்களும் உண்டு ஹிந்தியிலும் ஐந்து எழுத்துக்களுமுண்டு.

இந்த ஐந்து எழுத்துக்களையும் உச்சரிப்பது மலையாளி முதலியவர்களுக்கு வெகு சுலபமானாலும் சுத்தத் தமிழர்களுக்கு மிகவும் கஷ்டமாகவே இருக்கும். நாவுக்குப் பழக்கம் வராது. இது அவர்களுக்கு உபத்திரவமாகவே இருக்கும். வேதாத்தியயனம் செய்த ஒரு ப்ராம்மணனுடையவும், அதில்லாத ப்ராஹ்மண பண்டிதனுடையவும், ஸ்கூல்களில் படிக்கும் பையன்களுடையவும், ஒரு மலையாளியுடையவும் ஒரு தமிழனுடையவும் உச்சரிப்பை நன்கு கவனித்துப்பார்த்தால் தெளிவாகவே வித்யாஸம் புலப்படும். அதாவது வீட்டில் பேசும்போது பழக்கத்தில் வாராத சில எழுத்துக்களை உச்சரிக்க நாவு நன்றாக இடம்கொடுப்பதில்லை.

விஷயத்தின் உண்மை இவ்வாறிருக்க, வீணாய்த் தமிழர்களை நிர்ப்பந்திப்பது எந்த நியாயத்தில் சேர்ந்தது? லோகம் முழுவதையுமே க்ஷேமப்படுத்தக் கருதும் காங்கிரஸ் ஸபைக்கார் இப்படித் தமிழனைத் தவிக்கவிடுவது தேசத்தொண்டாகுமோ?

மேலும், இந்தியா முழுவதுமே ஹிந்திமயமாகிவிட்டால், ஹிந்திபாஷைப் பத்திரிகைகள்தானே லக்ஷக்கணக்காயும் கோடிக்கணக்காயும் அச்சடிக்கப்பட்டு குறைந்தவிலைக்கு விற்கப்படமுடியுமல்லவா? அப்பொழுது ஜனங்கள் விலைகுறைந்த ஹிந்திப் பத்திரிகைகளை வாங்குவார்களேயன்றி சுதேசமித்திரன் முதலிய நம் தமிழ் பேப்பர்களை வாங்குவார்களா? படிப்பார்களா? அப்பொழுது தமிழ் பத்திரிகைகள் ஜீவிக்கமுடியுமா?

இந்தியாவுக்கு உண்மையில் ஒரு பொது பாஷை வேண்டுமானல் ஸம்ஸ்கிருதத்தையே அந்த ஸ்தானத்தில் வைத்துக்கொள்வதல்லவோ உசிதம். தமயந்தி ஸ்வயம்வரத்தில் பலதேசத்தரசர்களும் பொதுபாஷையாகிய ஸம்ஸ்கிருதத்திலேயே பேசினதாகச் சொல்லப்படுகிறது. தேசபாஷையாயிருக்கவேண்டுமானல் அந்தப் பதவியைப்பெற தமிழுக்கே அர்ஹதையுள்ளது. பொதுவான உச்சரிப்பு, ஒவ்வொரு வர்க்கத்திலும் முதலெழுத்தும் ஐந்தாமெழுத்துமாக உள்ளபடியால் யாரும் சுலபமாகக் கற்க ஸௌகரியம், ஸ்வதந்திரமான உயர்ந்த நூல்களினிருப்பு, இவைகள் வேறுதேசபாஷைகளுங்குக் கிடையா.

ஸம்ஸ்கிருதக் கிரந்தங்களின் தர்ஜுமைகளாகவோ, ஸம்ஸ்கிருத புஸ்தகங்களிலுள்ள கதைகளை அநுஸரித்தோ அல்லது ஸ்வதந்திரக்கிரந்தங்கள் நம் இந்திய தேசபாஷைகளில் எதில் இருக்கின்றன? சிறிதுகாலமாக வெளிவந்திருக்கும் நவீனக் கதைப்புஸ்தகங்களை சேர்க்கவேண்டாம்.

வெகு நூற்றுண்டுக்கு முன்பு உள்ளதாக அந்த தேசத்தின் நாகரிகம் முதலியவற்றைத் தெரிவிக்கின்றதாக ஒரு கிரந்தமாவது, தமிழைத் தவிர்த்தது வேறு தேச பாஷைகளுள் ஒன்றிலாவது உண்டா? இதை யாராவது கவனித்தார்களா? துளஸீதாஸ ராமாயணத்தை மிகவும் புகழ்ந்துகொண்டாடுபவர், இது ஸ்ரீவால்மீக ஸம்ஸ்கிருத ராமாயணத்தை ஒட்டியதென்பதை மறந்துவிடுகிறார்கள்.



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# ‘மூகபஞ்சசதீ’

கடாக்ஷ சதகம்.

(7—10—37 தொடர்ச்சி)

2. கடாக்ஷமானது தான் கார்ஷ்ண்யத்தோடிருந்தாலும், பக்தர்களுடைய மனதில் கருப்பில்லாத நிலைமையை (வைமல்யத்தை - மாலின்யமில்லாத, தன்மையை - பாபமில்லாத நிலைமையை) உண்டு பண்ணுகிறது. தான் அஞ்ஜனத்தை தரித்திருந்தாலும் பக்தர்களுடைய மனதை அஞ்ஜனமில்லாததாக (களங்கமில்லாததாக) செய்துவிடுகிறது. மேலும் தான் சஞ்சலஸ்வபாவத்தோடிருந்தபோதிலும் பக்தர்களுடைய மனதிற்கு ஸ்தைர்யத்தை (ஸ்திரமாயிருக்கும் தன்மையை—உறுதியான நிலையை) கொடுக்கிறது. ஆகவே கடாக்ஷமானது தனக்கிருக்கும் குணா விசேஷங்களுக்கு மாறான பலன்களை பக்தர்களுக்குக் கொடுப்பதினால் அதில் தனக்கு உண்டாகும் ஆச்சர்யத்தை கவி இதில் வெளியிடுகிறார்.

43. மந்தஸ்மித ஸ்தபகிதம் மணிகுண்டலாம்சு-
ஸ்தோம ப்ரவாள ருசிரம் சிசிரீக்ருதாசம் ||
காமாக்ஷி ராஜதி கடாக்ஷருசே: கதம்பம்
உத்யானமம்ப கருணா ஹரிணேக்ஷணாயா: ||

காமாக்ஷி அம்ப - ஹே காமாக்ஷி! தாயே! மந்தஸ்மித ஸ்தபகிதம் - புன்சிரிப்பாகிற பூங்கொத்துக்களுள்ளதும், மணி குண்டலாம்சு ஸ்தோம - ரத்ன குண்டலங்களின் காந்திக் கூட்டங்களாகிற, ப்ரவாளருசிரம் - துளிர்களோடு அழகானதும், சிசிரீக்ருதாசம் - குளிரச்செய்யப்பட்ட திக்குக்களையுடையதுமான (எங்கும் குளிர்ச்சியுடையதுமான), கடாக்ஷருசே: கதம்பம் - உனது கடாக்ஷத்தின் காந்திகளின் கூட்டமானது, கருணா ஹரிணேக்ஷணாயா: - கருணையென்ற ஸ்த்ரீயினுடைய, உத்யானம் - உத்யானமாக, ராஜதி - விளங்குகிறது.

44. காமாக்ஷி தாவக கடாக்ஷ மஹேந்த்ர நீல-
ஸிம்ஹாஸனம் ச்ரிதவதோ மகரத்வஜஸ்ய |
ஸாம்ராஜ்ய மங்கள விதௌ மணிகுண்டலஸ்ரீ:
நீராஜனோத்ஸவ தரங்கித தீபமாலா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தாவக கடாக்ஷ - உனது கடாக்ஷமாகிற, மஹேந்த்ர நீல ஸிம்ஹாஸனம் - இந்த்ர நீலக் கல்லினுலான ஸிம்ஹாஸனத்தை, ச்ரிதவத: - அடைந்திருக்கும் (அதில் வீற்றிருக்கும்), மகரத்வஜஸ்ய - மன்மதனுக்கு, மணிகுண்டலஸ்ரீ: - உனது ரத்ன குண்டலங்களின் காந்தியானது, ஸாம்ராஜ்ய மங்கள விதௌ - சக்ரவர்த்தியென்று புட்டாபிஷேகம் செய்யும் ஸமயத்தில், நீராஜனோத்ஸவ - தீப ஆலத்தி எடுப்பதின் தரங்கித தீப மாலா - அடுக்கு தீபமாக (ஆகிறது).

45. மாத:, க்ஷணம் ஸ்னபய மாம் தவ வீக்ஷிதேன
மந்தாக்ஷிதேன ஸுஜனைரபரோக்ஷிதேன |
காமாக்ஷி கர்ம திமிரோத்கர பாஸ்கரேண
ச்ரேயஸ்கரேண மதுப த்யுதி தஸ்கரேண ||

மாத: காமாக்ஷி - தாயே! ஹே காமாக்ஷி! மந்தாக்ஷிதேன - ம்ருதுவானதும் (அல்லது நாணத்தோடு கூடியதும்), ஸுஜனை: - ஸாதுக்களால், அபரோக்ஷிதேன - பார்க்கப்பட்டதும் (அறியப்பட்டதும்), கர்மதிமிரோத்கர - கர்மங்களாகிற இருள் கூட்டத்திற்கு, பாஸ்கரேண - ஸூர்யன் போன்றதும், ச்ரேயஸ்கரேண - ச்ரேயஸ்ஸைக் கொடுப்பதும், மதுப த்யுதி தஸ்கரேண - வண்டுகளின் காந்தியை அபஹரித்ததுமான, தவ வீக்ஷிதேன - உனது பார்வையால், மாம் - என்னை, க்ஷணம் ஸ்னபய - ஒரு க்ஷணநேரமாவது நனையச்செய் (அப்பேர்ப்பட்ட உனது பார்வையை என்மீது ஒரு க்ஷணநேரமாவது படும்படி செய்வாயாகவும்.)

46. ப்ரேமாபகா பயஸி மஜ்ஜனம் ஆரசய்ய
யுக்த: ஸ்மிதாம்சு க்ருத பஸ்மவிலேபனேன |
காமாக்ஷி குண்டல மணி த்யுதிபிர் ஜடால:
ஸ்ரீகண்டமேவ பஜதே தவ த்ருஷ்டிபாத: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தவ த்ருஷ்டிபாத: - உனது பார்வையானது, ப்ரேமாபகா பயஸி - ப்ரேமையென்ற நதீ ஜலத்தில், மஜ்ஜனம் ஆரசய்ய-ஸ்நானம் செய்துவிட்டு, ஸ்மிதாம்சு க்ருத - உனது புன்சிரிப்பின் காந்திகளால் செய்யப்பட்ட, பஸ்ம விலேபனேன யுக்த: - விபூதிப் பூச்சோடு கூடியதாய், குண்டல மணித்யுதிபி: — உனது குண்டலங்களிலுள்ள ரத்னங்களின் காந்திகளால், ஜடால: - ஜடையோடு கூடியதாய், ஸ்ரீகண்டமேவ பஜதே - பரமசிவனையே பஜிக்கிறது (அடைகிறது.)

1. தனது பதியான பரமசிவனிடம் அம்பிகையின் பார்வையானது எப்போதும் இருப்பதை இதில் வர்ணிக்கப்பட்டது.

2. கடாக்ஷமானது பரமசிவனிடமே நினைவுடன் தபஸ் செய்யும் ரிஷியாகச் சொல்லப்பட்டது. ப்ரேமையாகிற நதீ ஜலத்தில் மூழ்கி, புன்சிரிப்பாகிற பஸ்மத்தை அணிந்துகொண்டு மணி குண்டலங்களின் காந்திகளாகிற ஜடைகளோடு கூடிய அந்த ரிஷியானவர் ஸதாகாலமும் பரமசிவனை பஜித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது.

3. புன்சிரிப்பை வெளுப்புநிறமாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயமாதலால் இங்கு பஸ்மத்திற்கு (விபூதிக்கு) ஸமமாகச் சொல்லப்பட்டது.

47. கைவல்யதாய கருணாரஸ கிங்கராய
காமாக்ஷி கந்தளித விப்ரம சங்கராய |
ஆலோசனாய தவ பக்த சிவங்கராய
மாதர் நமோऽஸ்து பரதந்த்ரித சங்கராய ||

காமாக்ஷி மாத: - ஹே காமாக்ஷி! தாயே! கைவல்யதாய - கைவல்யமென்ற உத்க்ருஷ்டமான மோக்ஷத்தைக் கொடுப்பதும், கருணாரஸ கிங்கராய - கருணையென்ற கிங்கரனையுடையதும், கந்தளித விப்ரம சங்கராய - சங்கரருக்கு மோஹலீலையை அபிவிருத்தி செய்வதும். பக்த சிவங்கராய - பக்தர்களுக்கு மங்களத்தைச் செய்வதும், பரதந்த்ரித சங்கராய - பரமசிவனை பரவசப்படுத்தியதுமான (தன்வசப்படுத்தியதுமான), தவ ஆலோசனாய - உனது பார்வைக்கு, நம: அஸ்து - நமஸ்காரம் இருக்கட்டும்.

48. ஸாம்ராஜ்ய மங்கள விதௌ மகரத்வஜஸ்ய
லோலாளகாளிக்ருத தோரண மால்ய சோபே |
காமேச்வரி ப்ரசலத் உத்பல வைஜயந்தீ-
சாதுர்யம் ஏதி தவ சஞ்சல த்ருஷ்டிபாத: ||

காமேச்வரி - காமேச்வரருடைய பத்னியே! லோலாளகாளிக்ருத — ஆடுகின்ற அளகங்களின் வரிசைகளாலான, தோரண மால்ய சோபே — தோரணமாலைகளின் காந்தியோடு கூடிய, மகரத்வஜஸ்ய - மன்மதனுடைய, ஸாம்ராஜ்ய மங்கள விதௌ - சக்ரவர்த்தியென்ற பட்டாபிஷேகத்தின் போது, தவ சஞ்சல த்ருஷ்டி பாத: - உனது சஞ்சலமான பார்வையானது, ப்ரசலத் - அசைந்தாடும், உத்பல வைஜயந்தீ - நீலோத்பல மாலைகளின், சாதுர்யம் ஏதி - அழகை அடைகிறது.

49. மார்கேண மஞ்ஜு கச காந்தி தமோவ்ருதேன
மந்தாயமான கமனா மதனாதுராஸௌ |
காமாக்ஷி த்ருஷ்டிரயதே தவ சங்கராய
ஸங்கேத பூமிம் அசிராத் அபிஸாரிகேவ ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! அஸௌ தவ த்ருஷ்டி: - இந்த உனது பார்வையானது, மதனாதுரா - மன்மதனால் பீடிக்கப்பட்டு மஞ்ஜு கச காந்தி - அழகிய கூந்தலின் காந்தியாகிற தமோ வ்ருதேன இருட்டால் சூழப்பட்ட, மார்கேண - வழியாக மந்தாயமான கமனா - மெதுவான நடையையுடையதாய், சங்கராய - பரமசிவனுக்கு (பரமசிவனை உத்தேசித்து), அசிராத் - சீக்ரத்தில், ஸங்கேத பூமிம் - ஸங்கேத ஸ்தலத்திற்கு, அபிஸாரிகேவ- அபிஸாரிகைபோல், அயதே - செல்கிறது.

1. ஒரு ரஹஸ்ய ஸ்தலத்தில் சேருவதாகத் தன் நாயகனுடன் ஏற்பாடு செய்துகொண்டு அந்த இடத்தை நோக்கிச் செல்லும் காமபீடிதையான ஸ்த்ரீக்கு அபிஸாரிகையென்று பெயர். அவ்விதம் சேர ஏற்பாடுசெய்யப்பட்ட இடத்திற்கு ஸங்கேத பூமி (ஸங்கேத ஸ்தலம்) என்று பெயர். அவ்விதமான இடங்களுக்கு பிறர் அறியாதபடி இருட்டில் போவது வழக்கமாகையால் இங்கு அம்பாளுடைய த்ருஷ்டியான அபிஸாரிகையானவள் போகும் வழியானது அம்பாளுடைய கறுத்த கூந்தலினால் ஏற்பட்ட இருட்டோடு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அவ்விதமான இருட்டில் போவதினால் மெதுவான நடையோடு போவதாயும் நாயகனைச் சேரவேண்டுமென்று மதனாதுரையாயிருப்பதால் வேகமாகச்செல்ல ஆசையோடிருப்பதை ‘அசிராத் அயதே’ என்று சொல்லப்பட்டது.

50. வ்ரீடானு வ்ருத்தி ரமணீக்ருத ஸாஹசர்யா
சைவாலிதாம் களருசா சசிசேகரஸ்ய |
காமாக்ஷி காந்திஸரஸீம் த்வத் அபாங்கலக்ஷ்மீ:
மந்தம் ஸமாச்ரயதி மஜ்ஜன கேலனாய ||



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஸ்ரீ ஐப்பசி-மீ 5உ

## நீதி—நிர்வாஹப்பிரிவினை.

இந்தியாவில் ராஜீயக்கிளர்ச்சி தோன்றிய காலம் முதலாக, நீதி—நிர்வாஹ அதிகாரங்களை தனித்தனியாகப்பிரித்து விடவேண்டுமென்ற முயற்சி வெகு பலமாக நடந்து வந்திருக்கிறது. ஏனைய ராஜீய ஸபைகளை விடக் காங்கிரஸ் மஹா ஸபை இந்தக்கிளர்ச்சியின் முன்னணியில் நின்று வந்தது. இவ்விரண்டு அதிகாரமும் ஒரு இடத்தில் சேர்ந்திருப்பதால் விளையக்கூடிய தீமைகளை ஒவ்வொரு காங்கிரஸிலும் விஸ்தாரமாக எடுத்துக்காட்டித்தீர்மானமும் செய்யப்பட்டிருக்கிறது. சிறிது காலமாக காங்கிரஸின் ராஜீயப்போக்கானது மிக்கத்தீவ்ரமாகி பூர்ண ஸ்வதந்திரம், சட்ட மறுப்பு போன்ற பெரிய விஷயங்களில் பிரவேசித்துவிட்டதால் நீதி—நிர்வாஹப்பிரிவினை யென்ற விஷயமானது அதிகம் கவனிக்கப்பட வில்லை. ஆயினும் காங்கிரஸ் தலைவர்கள், ஸமயம் நேரும்போது இந்தச்சீர்திருத்தத்தைச்செய்து விட வேண்டு மென்பதில் சிரத்தை காட்டியே வந்திருக்கிறார்கள்.

இப்போது மாகாணஸ்வய ஆக்ஷி நிர்வாஹம் பூர்ணப் பொறுப்புடன் காங்கிரஸ்காரர் வசமாகிய பிறகு இந்த முக்கியமான சீர்திருத்தத்தை உடனேசெய்யவேண்டுமென்று ராஜீயவாதிகள் எதிர்பார்ப்பது நியாயமே. அநீதியென்று நினைக்கப்பட்ட பலகார்யங்களை காங்கிரஸ் மந்திரிகள் பதவியேற்றவுடனேயே சுறுசுறுப்புடன் நிவர்த்திக்க முன்வந்தது போல், நீண்டகாலமாக தவறு என்று கருதப்பட்டுவந்த இந்த விஷயத்தையும் உடனே கவனிக்கவேண்டியது நியாயமல்லவா? ஐக்கிய மாகாணம், மத்யமாகாணம் முதலியவைகளில் காங்கிரஸ் மந்திரிகள் நீதி-நிர்வாஹப் பிரிவினை வேலையை உடனே கவனிக்க முன்வந்திருக்கிறார்கள். இவ்விஷயத்தில் நமது மாகாண முதன் மந்திரி காட்டிவரும் மனோபாவம் ராஜீய வாதிகளுள் மிகுந்த ஆச்சர்யத்தையும் அதிருப்தியையும் விளைவித்திருக்கிறது. சட்டசபையில் இந்த விஷயம் பிரஸ்தாபத்திற்கு வந்தபோது, முதல்மந்திரியானவர் நீதி-நிர்வாஹப்பிரிவினை இப்போது ஸாத்யமும், அவச்யமும் அல்லவென்று சொல்லிவிட்டார். இது காங்கிரஸ்வாதிகளுக்குள்ளேயே மனக்கசப்பை உண்டாக்கியிருக்கிறது. கனம் மந்திரி சிலபுதிதான தர்க்கங்களைக் கிளப்பி இந்தவிஷயத்தை அடியடாக்கிவிட நினைத்தபோதிலும், அவர் போகுமிடங்களிலெல்லாம் இந்த விஷயம் வற்புறுத்தப்பட்டு வருவதைஅவர் தவிர்க்கமுடியவில்லை. ஆங்காங்கு இவர் கருப்பை வெள்ளைபோல் காட்டும்ரீதியில் ஸமாதானம் சொல்லிக்கொண்டு போகிறார்.

நீதி—நிர்வாஹப் பிரிவினையை சென்னை மந்திரிகள் செய்தாலும் செய்யாவிட்டாலும், இப்போது அவர்கள் சொல்லிவரும் சால்ஜாப்புக்களும் கட்சிகளும் இங்கு முக்யமாக கவனிக்கத்தக்கவை. கனம் ராஜகோபலாசாரியரும், அவரது ஸகாக்களும் இவ்விஷயத்தையொட்டி வெளியிட்டுவரும் மனப்போக்கானது பொதுஜனங்களுக்கு ஒருவகையில் அபாயகரமாயிருக்கிறது. இப்போது காலம் மாறி காங்கிரஸ் ராஜ்யம் வந்துவிட்டதால், நீதி-நிர்வாஹப்பிரிவினை அவச்யமில்லையென்று கள்ளிக்கோட்டையில் கனம் ஆசாரியர் கூறியிருக்கிறார். கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளுவதும், முன்பின் விரோதமாகக் கார்யம் நடத்துவதும், ராஜீய அறிவாளிகளால் ஏற்கக் கூடியதா? இது தேச க்ஷேமத்திற்கு ஏற்றதா? கொள்கையை மாற்றி நடப்பதை ஒரு கொள்கை போல கனம் ஆசாரியர் பேசுவது ஒரு பெரிய ராஜீய அபாயமாகவே நினைக்கக்கூடியதாயிருக்கிறது. காங்கிரஸ்காரர்களே இது அவச்யமென்று இன்றும் அபிப்ராயப்படவில்லையா? மத்ய மாகாணத்திலும் ஐக்ய மாகாணத்திலும் இந்தப் பிரிவினையைக் காங்கிரஸ் மந்திரிகள் செய்திருக்கவில்லையா? ஆகையால், கொள்கைமாறிவிட்டதாக இவர் பேசுவது ஏதோ உள்நோக்கத்தைக் கொண்டதாகவே இருக்கவேண்டும்.

முதன் மந்திரி பலவிடங்களில் பேசுகையில் காட்டிவரும் மற்றொரு விபரீத மனப்போக்கையும் நாம் கவனிக்க[illegible] "தமக்கு மெஜாரிடி பலமிருக்கிறதென்றும் பெரும்பாலோரான ஜனங்களுக்குப் பிரதிநிதியாக இருந்தே தாம் கார்யம் செய்வதாயும், ஆகையால் தாம் எதைச் செய்தாலும் அப்படியே ஒப்பவேண்டியதுதானென்றும் தமது காரியம் பிடிக்காவிட்டால் அடுத்த எலெக்ஷனில் தம்மை நீக்கிவிடுவதே முறை' என்றும் பேசுகிறார். இப்போது இவருக்கு மெஜாரிடி பலமிருப்பது உண்மையே. அதற்காகப் பொதுஜன அபிப்ராய விருத்தமான எந்தக் கார்யத்தையும் தாம் செய்ய அதிகாரம் பெற்று விட்டதாக இவர் கூறுவது ராஜீயநீதியாகுமா? "பிடிக்காவிட்டால் அடுத்த எலெக்ஷனில் என்னை விலக்கி விடுங்கள்" என்று பேசுவது இன்னும் விநோதமாயிருக்கிறது. ஐந்துவருஷங்கள் வரையிலும் இவர் இஷ்டப்படி வேண்டியதைச் செய்தபிறகு அடுத்த எலெக்ஷனில் ஜனங்கள்செய்யக்கூடியதென்னவிருக்கிறது? அதுவரையில் ஜனங்கள் திண்டாட வேண்டியதுதானென்பது இவருடைய எண்ணமா? இந்தமாதிரி பேசுவது மெஜாரிடி பலம் கொண்டு யதேச்சாதிகாரம் நடத்துவதாக நினைக்கப்படாதா? ஆகையால் இந்தக் கொள்கையும் மிக ஆக்ஷேபகரமானதே.

நீதி-நிர்வாஹப் பிரிவினைக்குப் பணமில்லை, ஸந்தர்ப்பம்மாறிவிட்டது என்ற சாக்குப்போக்குகளை இவர் சொல்லிய போதிலும் இவ்விஷயத்தில் உள்ளூரவேறுநோக்கமிருப்பதாகவே நாம் நினைக்கக்கூடியதாயிருக்கிறது. காங்கிரஸ் மந்திரிகள் ராஜீய, ஸமூஹப்புரட்சிகரமான பெரிய சீர்திருத்தங்களையெல்லாம் செய்யப்போவதாக திட்டம் போட்டிருக்கிறார்கள். டாக்டர் ராஜன் ஓரிடத்தில் பேசியபோது, காங்கிரஸ் திட்டத்தின் கர்ப்பத்திலுள்ள சில சீர்திருத்தங்களை பொதுஜனங்கள் கேள்விப்பட்டால் திடுக்கிட்டுப்போவார்களென்று குறிப்பிட்டார். இப்போது சேலத்தில் மதுவிலக்குச்சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அங்கு நீதி-நிர்வாஹ அதிகாரம் ஒன்றாக இருந்தால் ஸௌகர்ய முண்டென்பதை மந்திரி உணர்ந்திருக்கிறார். இனி செய்யப்படப்போகும், ஆலயப்பிரவேசச் சட்டம், தீண்டாதார் அஸௌகர்ய நிவிர்த்திச்சட்டம் ஆகிய அநேக ஸமூஹத்திருத்தச்சட்டங்களை அமுல் நடத்தவும், நீதி-நிர்வாஹ அதிகாரம் ஒன்றாயிருந்தால் ஸௌகர்யமுண்டு. குற்றம் சாட்டும் அதிகாரிகளும் தீர்ப்பு செய்யும் அதிகாரிகளும் ஐக்யப்பட்டு இருந்தால் அளவற்ற ஸௌகர்யமுண்டல்லவா? இந்தமாதிரி எதிர்காலத்தில் ஏதோ பெரிய அந்தரங்க நோக்கம் கொண்டே இந்தமந்திரி பிடிவாதத்தில் இறங்கியிருப்பதாக நினைக்க அவர் பேச்சு இடம் கொடுக்கிறது.

## குறிப்புகள்.

### காங்கிரஸ்காரர் காட்டிய வழியே!

நமது மாகாணத்தில் கட்டாய ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி வலுத்துவிட்டது. காங்கிரஸ் மந்திரிகள் எங்கும் பலமாகக் கண்டிக்கப்படுகிறார்கள். மூன்றுமாத காலத்துக்குள்ளேயே மந்திரிகள்மீது அதிருப்தி அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. சென்னையில் ஓர் கூட்டத்தில் கனம் ராஜகோபாலாசாரியரை நேரிலேயே எதிர்த்துப் பலர் ஆர்பாட்டம் செய்தனர். மற்றொரு கூட்டத்தில் காங்கிரஸ் வாதிகளுக்கும் எதிரிகளுக்கும் அடிதடி நடந்தது. போலீஸார் வரவேண்டியதாயிற்று.

கனம் ஆசாரியர் கூட்டத்தில் நடந்த ஸம்பவங்கள் பத்திரிகைகளில் விஸ்தாரமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவர் பேசுவதற்கே இடம்கொடாமல் பலர் கூச்சலிட்டனர். பலர் தடைசெய்தனர். கனம் ஆசாரியாருக்கு பொறுக்கவில்லை. ஒழுங்காக நடந்துகொள்ளும்படி உபதேசித்தார். கூட்டங்களில் எதிர்கக்ஷி அபிப்ராயங்களைப் பொறுமையுடன் கேட்டு அமைதியாக நடந்துகொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் போதித்தார்.

இது நியாயமே. எந்தக் கக்ஷியாரும் பொதுக்கூட்டத்தில் ஒழுங்காகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ளவேண்டியதை மறுப்பாரில்லை. ஆனால் இந்த விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள்? கனம் ஆசாரியார் இதை யோஜித்தாரா? எதிர்கக்ஷியாரை அலக்ஷ்யமாயும், மரியாதைக் குறைவாயும் நடத்தும் கார்யமானது காங்கிரஸ்காரர்களாலேயே பரவியதென்று பலர் நினைக்கிறார்கள். நாம் அநேக கூட்டங்களில் இதை அநுபவிக்கிறோம். எதிர் கக்ஷியாரை அவமதிப்பது ஒரு ஜயமாக அவர்களால் கருதப்படுகிறது. தலைவர்களும், பத்திரிகைகளும் இதற்கு உடந்தையாயிருந்து ஒத்துப் பாடுகிறார்கள். எதிர்கக்ஷியார் ஏதாவது செய்துவிட்டாலோ தடபுடலாக அது கண்டிக்கப்படுகிறது. ஆகையால் பொதுக்கூட்டங்களில் ஆபாஸமாகநடந்துகொள்ளுவது அஹிம்ஸா வாதிகளாகிய காங்கிரஸ்காரர் காட்டிய வழியேயாகும். ஸமீபத்தில் குடந்தையில் நடந்தஸம்பவமும் உதாஹரணமாகும். ஆகையால் கனம் ஆசாரியர்போன்றவர்கள் அமைதியாகவும் மரியாதையாயும் நடந்து கொள்ளும்படி உபதேசிப்பது பரோபதேச பாண்டித்யமேயோ ஆகும்? இந்த உபதேசங்களெல்லாம் பிறருக்கே. தங்கள் கக்ஷியினரைப்பற்றியவரையில் இது வேண்டியதில்லை? அவர்கள் அஹிம்ஸா வாதிகளல்லவா?



## திருக்குற்றாலம்,

### தத்தாத்திரேய மந்திரத்தில் நவராத்திரி உற்சவம்.

திருக்குற்றாலம் ஸித்தேஸ்வரி பீடாதிபதியாகிய ஸ்ரீமௌனானந்த சாஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் மடாலயத்தில் ஸ்தாபித்திருக்கிற ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு இந்த வருஷம் நவார்த்ரி உத்ஸவ வைபவங்கள் சென்ற பத்து தினங்களாய் வெகு விமர்சையாய் நடந்தன. பிரதி தினமும் வேத பாராயணங்களுடன், மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார அர்ச்சனைகளும், குமாரி பூஜை முதலிடன நடத்தப்பட்டன. உற்சவ தினங்களின் பின்பாகத்தில் சில ஹோமங்கள் செய்யப்பட்டதில் முக்யமாய் ஸ்ரீ சண்டி ஹோமம் வெகு சிறப்பாயிருந்தது. மாலை நேரங்களில் சங்கீதக்கச்சேரிகள் முதலியன எல்லோரையும் ஆனந்திக்கச்செய்தன. பக்த கோடிகள் பல ஜில்லாக்களிலிருந்து ஆயிரக்கணக்காய் வந்து குழுமி யிருந்தனர். பத்து நாட்களும் ஸமாராதனையும், போஜனமும், ஏராளமாய் நடத்தப்பட்டன. இவ்வுத்ஸவத்திற்கு விஜயம் செய்த பக்த பிரமுகர்களில் முக்யமானவர்கள் பின் கூறப்பட்டிருக்கின்றனர்.

பிரம்மஸ்ரீ ஆஸ்திகமணி திவான்பகதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், புதுக்கோட்டை மிட்டாதார் S. சுந்தரம் அய்யர், சேத்தூர் ஜமீன்தார் அவர்கள், புதுக்கோட்டை சமஸ்தான Retd Judge P. V. ரெகுநாதய்யாவர்கள், ஹைதராபாத்ஸ்டேட் ஸோமயாஜி பந்துலுகாரு.சென்னைகஸ்டம்ஸ்ஹௌஸ் ஆடிடர் பக்தபூஷண வெங்கடசுப்பய்யா அவர்கள் திருநெல்வேலி Land Holder பிங்களதேச முதலியாரவர்கள், தென்காசி Govt வக்கீல் K. H. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் சமீபத்தில் இவ்வூருக்கு Tour வந்த வர்களில் Religious Endowments Board President M. R. Ry. Rao Bahadur கொண்டப்பா அவர்கள் அக்டோபர் 12ம் தேதி அன்றும், சென்னை ரெவின்யு மந்திரி கனம் MR. பிரகாசம் அவர்கள் அக்டோபர் 13உ யன்றும் இவ்வுத்ஸவ சம்பவத்தை வந்து தரிசித்துப்போயினர். விஜயதசமியாகிய அக்டோபர் 14ம் தேதி பிற்பகல் உத்ஸவ மூர்த்திகளை நன்றாய் அலங்கரித்து மடத்தைச்சேர்ந்த ஸ்ரீராமர் சன்னதிக்கு முன்புள்ள விசாலமான ஹாலில் எழுந்தருளச் செய்து, அனைவருக்கும் காட்சி அளிக்கப்பட்டது. அது சமயம் அநேக பக்த ஜனங்கள் கூடியிருக்கையில் வேத கோஷங்கள் ஆரவாரிக்க, ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் கருணை புரிந்து அடியிற்கண்ட பக்தர்களுக்கு பட்டங்கள் அளித்தனர்.

புதுக்கோட்டை மிட்டாதார் சுந்திரம் ஐயர் அவர்களுக்கு பக்த சிகாமணி என்பதும் சேத்தூர் ஜமீன்தார் சேவுக பாண்டிய தேவர் அவர்களுக்கு 'குருசேவா துரீண' என்பதும், புதுக்கோட்டை ஸமஸ்தானம் Retd Judge P. V. ரெகுநாதயர் அவர்களுக்கு "தர்ம பிரவீண" என்பதும், முறையே பட்டங்களாக வழங்கப்பட்டன. பின் ஆஸ்திகமணி திவான்பகதூர் K. S. ராமசுவாமி சாஸ்திரி அவர்கள் நவராத்திரி பூஜா மகிமையைப்பற்றி ஓர் உபன்பாசம் கர்ணாமிர்தமாய் வருஷித்தனர். சில பண்டிதர்கள் தொகுத்த தோத்திரப்பாடல்கள் இம்மடாலயத்திற்கு அதிபதியான ஸ்ரீ சித்தேஸ்வரி பீடாதிபதியின் மஹத்துவத்தை நன்கு விளக்கின. இம்மடத்தின் ஹானரரி ஏஜெண்டு ஆகிய M.R C S. சுவாமிநாதய்யர் பக்தி பூர்வமாக இயற்றிய "விக்ஞாபன தீபம்" எனும் தோத்திரப்பாடல்கள் அச்சமயம் அவரால் பாடப்பட்டு, அரங்கேற்றப்பட்டன. பின்னர் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி அம்பாளை மடாலயத்தை சுற்றி எழுந்தருளச்செய்து பவனிவந்தகாக்ஷி வெகு அற்புதமாக யிருந்தது. விஜய தசமியன்று ஜில்லா கலெக்டர் பிரம்மஸ்ரீ V ராமகிருஷ்ண, I. C. S அவர்களும், திருநெல்வேலி ஜில்லா சர்ஜன் T. S சாஸ்திரி அவர்களும் குடும்ப சகிதமாக வந்து தரிசித்தனர். சிஷ்யர்களனைவரும் மஹா சந்நிதானமிடமிருந்து அனுக்கிரகப்பிரசாதங்கள் பெற்று சந்தோஷ பூரிதமாய் தங்கள் தங்கள் ஊருக்குச்சென்றனர்

இந்த தசரா உத்ஸவ சமயத்தில் மஹா சன்னிதானத்திற்கு மாட்சிமை தங்கிய கவர்மெண்டாரால் Coronation Medal அளிக்கப்பட்டதென்றும் சந்தோஷகரமான சமாசாரம் யாவராலும் கொண்டாடப்பட்டது.

ஒரு பக்தர்.

## கும்பகோணம்.

### பார்வதீ கல்யாணம்.

ஈசுவர-ஸ்ரீ புரட்டாசி-மீ 19உ(5-10-37) முதல் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதீச்சுவாரான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்ரகத்தை முன்னிட்டு ஸ்ரீஆசார்யஸ்வாமிகள் கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் சாரத நவராத்திரி புண்ணிய காலத்தில் ப்ரஸங்கபானு, வித்வத்பூஷணம் சேங்காலிபுரம் கே. வைத்தினாத சாஸ்திரிகள் அவர்களால் ஸ்காந்தபுராணம் சங்கரசம்ஹிதையில் பார்வதி ஜனனம் தபஸ்ஸின் மஹிமை தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரார்த்த நிரூபணம், மன்மதவிஜயம் முதலிய விஷயங்கள் சாஸ்திரார்த்தத்துடன் நன்கு பிரதிபாதிக்கப்பட்டன. விசேஷமாக புரட்டாசி-மீ 29உ (15-10-37) வெள்ளிக்கிழமை பார்வதீபரிணயம் மிகவும் விவாஹ பத்ததியுடன் பக்திததும்படியாக உபன்யாஸம் செய்யப்பட்டது. அக்காலத்தில் மஹாமஹோபாத்தியாயர் சிதம்பரம் ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதர்வாள் வித்வாரத்னங்கள் பிர்ம்மஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள், தர்க்கசிரோமணி சுப்பிரமணிய சாஸ்திரிகள், பண்டிதவர வைத்தினாத சாஸ்திரிகள், ரங்கஸ்வாமி சாஸ்திரிகள், ஜகதீச சாஸ்திரிகள், ராமாயணம் வேம்பு சாஸ்திரிகள் மற்றுமுள்ள பண்டிதர்களும் சப் ஜட்ஜி முன்ஸீப்பு, பாங்கர்கள், மற்றும் ஆஸ்திகர்கள் உத்தம ஸ்திரீகள் சமாஜத்தில் விஜயம் செய்திருந்தார்கள். விசேஷ பூஜையுடன் மூல ஸேவையும் கானபுரஸ்ஸரமான படன பாடனமும், சாஸ்திரிகளின் பார்வதீ பரமேசுவரர்களுடைய கல்யாண மஹிமையும் பாரிஷதர்களுக்கு நன்கு விவரிக்கப்பட்டன.

பார்வதீ பரிணயத்தில் மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் பேசுகையில், ப்ரஸங்கபானு சேங்காலிபுரம் கே. வைத்தினாத சாஸ்திரிகள் சிறந்த பண்டிதரென்றும் சிவ பக்த சிகாமணி என்றும் அடிக்கடி சிதம்பரம் முதலிய சபைகளில் பிரஸங்கம் செய்த காலத்திலேயே நான் பண்டிதருடைய மதுரமான மொழிகளை கேட்டு ஆனந்திப்பதுடன் சிவ பக்தியில் ஜனங்களை மூழ்கச் செய்விக்கிறவரென்றும் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தியின் திருவடியில் விசேஷ பக்தியை செலுத்தியவரென்றும், மோக்ஷ ஸாதனமான ஸ்காந்த புராணாந்தர்கதமான சங்கரஸம்ஹிதையில் வர்ணிக்கப்பட்ட சிவபெருமான் மஹிமையை ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்வாள் கிரந்த மூலமாயும் இதர சாஸ்திர மூலமாயும் நிர்ணயிக்கப்பட்ட விசேஷத்தை சேங்காலிபுரம் சாஸ்திரிகளே காட்டத்தகுந்தவரென்றும் சகல பண்டிதர்களாலும் போற்றப்பட்டவரென்று சொல்லுவதில் நான் பின்வாங்கமாட்டேன் என்றும் புதுக்கோட்டை ஸதஸ்ஸை விட்டு கும்பகோணம் என்ற உத்தம க்ஷேத்திரத்தில் நான் விஜயம் செய்தபோது ஸ்ரீ மடத்தில் நடக்கும் பார்வதிபரிணய பிரசனத்தை கேட்டது ஜன்மஸாபல்ய மென்றும், இங்கு விஜயம் செய்திருக்கும் ஸ்ரீமான்களும் ஸ்ரீமாட்டிகளும் சதுர்வித புருஷார்த்தத்தை அடைந்துவிட்டார்களென்றும் கம்பீரமொழியில் பிரஸங்கித்தார்கள். மற்றுமுள்ள பண்டிதர்களும் கனவான்களும் ஆனந்தத்தை அடைந்தார்கள்.

நமது நிருபர்.

## ஸ்ரீ ஸ்ரீ அனந்த பத்மநாப தாஸ பிரசார கைங்கர்யம்.

### ஸ்ரீரங்கத்தில் கூட்டம்.

மதராஸ் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின்சார்பாக17–10–1937ஞாயிற்றுக்கிழமை ஸாயந்திரம் 4–மணிக்கு ஸ்ரீரங்கம் தெற்குச் சித்திரைவீதி மேற்குப்பக்கம், தெற்கு சாகில் மகா—ா—ாஸ்ரீ கஸ்தூரிரங்க செட்டியாரவர்களின், கதவு நெம்பர் 1031 உள்ள "ஸ்ரீரங்க பவன" சத்திரத்தில் வித்வான் பிரம்மஸ்ரீ M.N. சுப்ரமணிய சாஸ்திரிகளவர்களால் 'தற்காலஹிந்து ஸநாதன தர்மம், அதன்ரக்ஷணை, என்கிற தமிழ் உபன்னியாசம், செய்யப்பட்டது. பிராம்மண, வைஸ்ய,சூத்ர,ஹிந்து சநாதன ஆஸ்திக மஹாஜனங்களெல்லோரும் வந்து கேட்டார்கள்,

நமது நிருபர்.

## ஆலயப்பிரவேச மறுப்பு.

### கல்மடம் கோவில் ஸம்பவம்.

பாலக்காடு ஸமீபமான கல்மடம் என்ற ஊரிலுள்ள அய்யப்பன் கோவிலில் தீண்டாதாரும் பிரவேசிக்கலாமென்று சில வருஷங்களுக்கு முன் அந்தக்கோவில் சொந்தக்காரர் அநுமதி கொடுத்திருந்தார்.

இதனால் இந்தக்கோவிலில் பூஜகர்கள் பூஜை செய்ய மறுத்து விட்டார்கள். கோவில் சொந்தக்காரரே பூஜை செய்து வந்தார்.

ஒரு நாள் இவர் பூஜை செய்து விட்டு திரும்புகையில் கோவில் படியில் வழுக்கி விழுந்து இறந்து விட்டார்.

பிறகு அவருடைய வார்ஸ்கள் கோவில் நிர்வாஹத்தை ஏற்று தீண்டாதார் கோவிலில் நுழையக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள் அதனால் இப்போது பூஜகர்கள் பூஜை செய்ய வந்து விட்டார்களாம்.

## வெள்ளைக்காரி ஹிந்துவானாள்.

### ஹிந்துவுடன் விவாகம்.

சென்னை ஆர்ய ஸமாஜத்தினரின் முயற்சியினால் பம்பாயைச்சேர்ந்த மிஸ்- பிட்ஸ் என்ற வெள்ளைக்காரி ஹிந்து மதத்தில் பிரவேசித்தாள். இவளுக்கு சாந்தகுமாரி என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

உடனே இவளை ராயபுரம் டாக்டர் ஸ்ரீமான் சேட்டூர் என்பவர் விவாஹம் செய்து கொண்டார். இந்த வைபவத்திற்கு அநேகர் வந்து அநுக்ரஹம் செய்தார்களாம்.

இதைத்தவிர படித்தவர்களான இரண்டு கிருஸ்துவ ஸ்திரீகளும் ஹிந்து மதம் புகுந்தார்களாம். இவர்களுக்கு ஆர்ய ஸமாஜம் சுத்தி சடங்கு செய்வித்து, லக்ஷ்மிதேவி சபிதாலக்ஷ்மி என்ற பெயர் கொடுத்தது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

ஹரகும்பேட்டா
போலவரம் போஸ்டு (கோதாவரி).
கோதாவரி கிழ ஜில்லா.

## Devadasi System in Hindu Temples.

*(Mr. N. Subrahmanya Iyer)*

I have seen Mrs. Muthulakshmi's article in the papers urging the necessity of putting a stop to the Devadasi system in Hindu temples, and her intention to introduce a bill in the local Legislature for preventing what are now known as *'Pottukottu'* or *'Mudrai'* or *'Gajja Puja'* on the ground they lead to prostitution and prevent the parties from contracting legal marital connection ever after in life May I in this connection, place before the bar of public opinion, the following views of mine, for cool and *dispassionate consideration,* before any move is made for mending or ending the said institution.?

At the outset, one must try to have a clear and correct conception of what the Hindu temples are and what purpose the Devadasi system is intended to serve therein. *Firstly,* the Hindu temples are not petition or prayer halls, like the churches of the Christians and Mosques of the Moselms. They are spiritual power-houses to be kept up according to the *Agamas.* *Secondly,* the so-called images installed therein are not more symbolic *likenesses* of God or other deities as ordinarily conceived. They are material media, either with powers inherent in them, which have only to be maintained, or invested with specific powers as the result of specific processes worked on and through a specific machinary of technigue and intended for dispensing specific influences to those who may so attune themselves as to be able to receive and benefit by them. One cannot now give their rationale, nor give an accurate idea in the language of experience of the ordinary individual. But all this by itself can be no reason for condemning them or the system and rules based thereon. What I wish to emphasise is, that, so long as the temples are accepted as above, they should be understood and worked in the manner consistent *there with.* If it is not an offence to one's sense of reason to approach an object of stone or metal with a narration of your grievances and a request for their redress, as one would do to an authority in power, it cannot be more absurd to believe in addition that if this object should have the power for listening to that prayer or granting it certain pre-requisites should be conformed *to, however* un-understandable they may ordinarily be.

Coming to the specific question of the Devadasi, Devadasi as the term indicates, is the servant of the Deva, or deity installed in the temple to which she is attached, and is wedded, as it were, to that service. Her purity was to be respected with religious awe. Hence the injunction of the smrithis, *"Athava mataram gachet, nagachet Devadarikam"* which means that one may *rather* entertain unclean thoughts with one's mother than with a Devadasi. In this light, dedication can never be deemed to have been intended to be a license for prostitution. If, however, among Devadasis have been found several victims of prostitution, it has to be remembered with regret that there is an abundance of it, both organized and isolated, even elsewhere. And the principal *cause* for it, wherever it is found. is economical. And if the intellegensia of a country, who are entitled to be its people's *responsible* wardens, should neglect their duty among others to keep their sisters free from want and consequent corruptibility, and if at the same time they should defame them as well as the institution and the *religion to* which they owe common allegiance, it must *obviously* be a case of adding insult to injury, both to themselves and others. The cause of prostitution, to repeat, is mainly and essentially economic. There is nothing to stop Devadasis who do not care to continue in a life of temple dedication to get out of it when they please. There is no law to enforce their continuance. But to confuse the issues, to neglect to correct the fundamental cause and seek the force of legislation for all things and sundry, cannot be right.

Now, there is the move on the part of Indian politicians to seek national unity and establish inter-class equality through socio-religious regulations. Whatever be the rationalness or value of the moves it is distressing to read, a Minister speaking in the name of the people's government, saying the other day that unless public opinion changes in the direction they went, the Government must resort to legislation, i. e., compulsion at the point of the King's bayonet. Suffice it to say that the betaking to force in matters of this kind, is the *failure* of reason and not its triumph. If it is not a case right going out and might coming in, what else is it? I wait for an answer.

## "Snatch a Revolver and do something"

The Hon'ble Mr. C. Rajagopalachariar is reported to have said at Sellappampathy (Hindu 11—10—37, page 6) "There were still same difficulties in the path of running the administration. There were numerous reguests everywhere, and petitions for jobs, and refusal meant the anger of the people, who made the requests. He appealed to show more patience and restraint.

There was also the added difficulty of people having no work in other provinces, coming over here to create mischief by inciting the masses to violence. As the Minister in charge of Police, he could not keep quiet and allow such things to go on. He must snatch a revolver and do something to curb such things, if necessary.

The Premier said in reply to the charge that he was acting like Hitler, "I am exercising the power of Swatantram and not of a tyrant".

He also told the people that if they did not learn Hindi now, later on they would repent and would be looked upon by the North as some Vanarasena come from the South.

## கல்லிடைக்குரிச்சி.

ஸம்ஸ்கிருதவாணீ ஸம்வர்த்தினீ ஸபாவின் வருஷாந்தர விழாவானது 13—10—37 மாலை 3-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் ஷை கலாசாலை கரஸ்பாண்டெண்டு மகா-ா-ஸ்ரீ M. ராமலிங்க அண்ணாவி அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு பிரம்ம-ஸ்ரீ T. S. ராமசுவாமி அய்யர், ஸப் ரிஜிஸ்ட்ரார் அவர்களால் அக்கிராஸனம் வஹிக்கப்பட்டது. அவ்வமயம் கல்லிடைகுரிச்சி மஹாஜனங்கள் யாவரும் விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் லெக்ஷ்மி நாராயண சர்மாவினால் இனிமையாக மங்கள கானம் செய்யப்பட்டது. பிறகு காரியதரிசி T. N. ராமனாத சர்மாவினால் வருஷாந்திர போர்டு வாசிக்கப்பட்டு கலாசாலை வித்யார்த்திகள் K. வெங்கட சுப்பிரமணியசர்மாவினாலும் R. பாலசுப்பிரமணிய சர்மாவினாலும் ஸம்ஸ்கிருத மொழியில் வியாகரண சாஸ்திரத்தில் வாக்கியார்த்தம் சொல்லப்பட்டது. பிறகு நியாய சாஸ்திரத்தில் ரூப லக்ஷணத்தைக்குறித்து ஸம்ஸ்கிருதத்தில் ஹரி ஹர சுப்பிரமணிய சர்மாவினாலும் வெங்கடேசுவர சர்மாவினாலும் வாதம் செய்யப்பட்டது. இவ்விரண்டு சாஸ்திரங்களிலும் வாதங்கள் தமிழில் மொழி பெயர்த்து சொல்லப்பட்டது. பிறகு ஷை கலாசாலை வியாகரண உப ஆசிரியர் பிரம்மஸ்ரீ N. கோபால கிருஷ்ண சாஸ்திரியள் அவர்களால் "சரணாகதி ரக்ஷணம்" என்ற விஷயத்தைக்குறித்து ஸம்ஸ்கிருத பாஷையில் எல்லோருக்கும் நன்ருய் தெரியும்படி எளிய நடையில் உபந்யசிக்கப்பட்டது.

பிறகு கலாசாலை வித்யார்த்திகளால் சாகுந்தல நாடகத்தில் ஒரு பாகத்தைக்குறித்து சபையோர்களின் மனம் மகிழும்படி நடித்துக்காண்பிக்கப்பிட்டது. பிறகு அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ் ஆசிரியர் பிரம்மஸ்ரீ வித்வான் குஞ்சிதபாதம் அய்யர் அவர்களால் "கம்பர் கவி இன்பம்" என்ற விஷயத்தைக்குறித்து விசேஷமாகத்தமிழில் உபந்யசிக்கப்பட்டது.

பிறகு தலைவரின் முகவுரை நிகழ்த்தப்பட்டது.

பிறகு ஷை கலாசாலை மெம்பர் பிரம்மஸ்ரீ இஞ்சினீயர் லெக்ஷ்மீ நாராயணய்யர் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி எழுதுகிருர்.

## தேவீ பாகவத உபன்யாஸம்.

திப்பிராஜபுரத்தில் நவராத்ரி புண்ய காலத்தில் தினந்தோறும் பிரம்மஸ்ரீ மந்திரமூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ தேவி பாகவதம் உபன்யாஸம் செய்யப்பட்டது. ஷை பாகவதத்தில் ஆங்காங்கு மூல வாக்யங்களை எடுத்துக்கொண்டு வேத ஆகம ஸ்மிருதி மந்திரசாஸ்திர சங்கரபகவத்பாத வசனங்களைக்கொண்டு தேவீ தத்வ ரஹஸ்யங்கள் ரொம்பவும் மேலானதென்று உபன்யாசம் செய்தது அபூர்வமாயும் வசன கௌரவமாயுமிருந்தபடியால் பிரம்மஸ்ரீ வையாகரண சாப்பசிவ சாஸ்திரிகள் முதலான விவேகிகள் தவருமல் வந்து ச்ரவணம் செய்து பக்தியுடன் மிகவும் புகழத்தக்கதாயிருந்தது. மறுபடியும் நடக்கப்போகிறது.

நாராயண சிரௌதி.

## மைசூரில் காங்கிரஸுக்கு எதிர் நடவடிக்கை.

மைசூர் ஸம்ஸ்தானத்தில் காங்கிரஸ்காரர்களின் ப்ரசாரமும் கொம்மாளமும் நாளுக்குநாள் அதிகரித்து சட்ட விரோதமான செய்கைகளும் நடைபெறுகின்றன. அதனல் அந்த ஸம்ஸ்தானத்தார் காங்கிரஸ் வாதிகள் மீது தீவ்ர நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளார்கள்.

பங்களூரில் பிரஸித்தராயுள்ள ஸ்ரீமான் கே. டி பாஷ்யம் என்ற பிரபலத்தலைவர் ராஜத்துவேஷத்திற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

அநேகவிடங்களில் காங்கிரஸ் கொடி நாட்டப்பட்டதை கவர்மெண்டார் தடுத்து எடுத்து விட்டார்கள். காங்கிரஸ் கொடியானது மைஸூர் அரசுரிமையைப்பாதிப்பதாக நினைக்கப்படுகிறது.


உயர்ந்த புஸ்தகம்!

உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீநகர விமர்சனம்.

ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.

[பிரம்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]

விலை 0—12—0. தபாற்செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




## Sanatanist Conference at Madura.

(continued from 7—10—37 issue)

### PRESENT STATE OF EDUCATION IN INDIA.

Regarding education imparted to the peasantry in the village schools in Bengal, *the Registrar of Co-operative Societies in Bengal* has observed "Instead of developing character, it stunts their sense and encourages a tendency to live more on their wits than on manual labour and easily converts men who would other-wise have been honest, into pettifogging touts."

*Mr. Abdul Karim,* Retired Inspector of Schools Bengal writes: "As soon as a boy enters a school he becomes a different creature. He changes him manners, tastes and even his name. His parents not only lose his assistance in tending cattle and cultivating fields but are also obliged to supply him with good clothes and umbrella besides books writing materials etc., at a cost far beyond their means. After acquiring a smattering of Bengalee he becomes a burden upon his family and not infrequently a curse to the society for he creates factions, fosters litigation and sometimes even teaches perjury and forgery. *Education department might well be abolished with considerable advantage to the People.*

A prominent Bengalee leader has said "The English people might have served their material interests better if they had not introduced English education and left the Indian people in Cultural seclusion. If the English would *'but leave us our own philosophy and religion, we would be content.'*

Another authority on National Education said: "In a system of national education, instruction should be imparted especially in case of younger pupils orally with the help of as few text books as possible. The load of books which our striplings carry at present is pitiable. They are so numerous and so often changed that it is difficult to say whether they are intended for the benefit of the students or of text-book makers."

*Arthur Avelon* other-wise known as Sir John Woodroffe Late Justice of the High Court of Judicature, Calcutta, and an Englishmen by birth, writes as follows, deploring the conduct of the modern educated Indians who are madly adopting Western methods of life, foreign manners and customs: 'I have my moments of angry wonder, as I see the increasing vulgarisation of the fine and aristocratic life of India, the betrayal or neglect of past traditions and culture, the senseless imitation of foreign ways by Indians simply because they are foreign and the many shams and falsities of Modern Indian life." He asks "How many Europeans have been even in a partial degree Hinduised as compared with the thousands who have been Anglicised?" He also deplores that "many Indians have thus madly become 'the mind born sons' Manasa-putras of the English." Although a born Englishman well versed in both the Western and Eastern lore, his reasoned condemnation of the Western civilization, is so strong and true that no modern educated Indian has yet learnt to understand or appreciate *him.* He says that *"the Modern Western civilization in so for as it is divorced from Religion,' is poison for the Eastern peoples."*

"Westernised Indians who think that India suffered through her religion neither know India nor its religion truly. The Hindu race will not perish if it continues to worship the Mother Power (Adi Sakthi), greater than the greatest and manifest in the littlest and her civilization may yet bear fruit once again not only in India, but throughout the whole world. None have the right to forsake their duty." True civilization is the organisation of society so that the individual man and his community may attain his and his immediate and final end i. e. the enjoyment and liberation (Bhukti and mukti). Hinduism in its essentials is one of the most rational of religions. As a matter of fact there is no religion which more justly and logically balances the claims of the life of the world and the life of the spirit as does Hinduism. Civilization consists in the upholding of Dharma as the basis of the individual and general good and the *fostering of spiritual* progress so that with justice to all beings the immediate and intimate goals of humanity may be attained. India has appreciated the dignity of objective facts and that experience is not limited to sense perceptions. There is spiritual experience which is recorded in the Vedas which has been attained in varying degrees by the spiritually wise. These truths though not attainable by reason alone are not inconsistent with it. No country has placed greater reliance on reason than Indians have done. No grander and all-inclusive doctrines have been understood and taught in the world. India's great men held the world in their grasp and wrested from it all its secrets. Indians alone have attained the supreme height in physical moral, intellectual and spiritual attainments by a systematic course of training, from generation to generation, through ages. Indian religion in its fundamental sense is the recognition that the world is an orderly cosmos of which each man is a part and to which he stands in a definitely established relation and his action is and should be in harmony with the whole cosmic activity. A religious man in India feels he is bound in various ways to all beings and the irreligious man considers everything from the standpoint of his limited selfish interests. He concludes "The chief religious and philosophic concepts of India are in their essentials imperishable. Whether the Indian people hold to them or not, they will be taken up and added to the cultural wealth of the greater amongst the White Aryans (as they are commonly called) of the West from which Race in ages past, coloured peoples of Ancient India in part atleast received them. These essential ideas will then in any case remain, because as humanising man for the spiritual end which they place before him they are those of a great and true civilization."

"In no country in the world except India has greater insistence been laid on the fact that man is free and the maker of his destiny. The sastras declare that the soul is born into a body suitable to its previous merit or de-merit or acquirements. Thus the four castes or varnas and subcastes were created by Eswara according to the divisions of Guna and Karma. In India alone man is not despised because he is poor and of humble occupation as is the case in the West. The high caste of a Brahman connotes more rigorous injunctions (Niyamas) than on others. Sudras on the other hand can attain by a minimum of Niyama what Brahman can attain through a maximum of the same."

*Elphinstone* in his "History of India" wrote appreciating the high morality of Indians thus: "Freedom of Indians from gross debauchery is the point in which they appear to most advantage and this superiority in purity of manners is not flattering to our esteem. If the merits of all peoples are balanced, India would appear big in the scale. *Men are not yet men! Some have been and are so. The rest are still candidates for humanity.* There is no religion which more justly and logically balance the claims of the life of the world and the life of the spirit as Hinduism. How supremely beautiful and balanced this ancient ideal was, none can know but those who have studied it, and fathomed the profound principle on which it rested-a principle which harmonized this world of ours and God in one whole."

What modern Western doctrine surpasses this in which man is taught that he need not flee from the world, for therein he may in himself harmonize the *ultimate reality* and its appearance? For such, one's country and one's family and the whole world are but forms of the Mother Power and service to them is service and worship of Her. This doctrine is a marvellous synthesis of the conflict between the spirit and body. The statement that the "Indian doctrine is a flat negation of life" is flat nonsense. The life is supremely valuable and should be made best use of. Those who wish to see India powerful and prosperous must preserve Her Racial Personality unsullied, by acting according to Swadharma and working according to the Law of our Race and attain the highest pinnacle of glory and Eternal Prosperity without much trouble. *The mother seed of the Aryan Race is still fit* and *capable of producing great Men.* By developing her cultural life as before Bharata Varsha will again shine in her full glory as the Mightiest Nation in the world.

Our great Patriotic Swami Vivekananda in his last message to the Westernised Indians wrote thus, and all our leaders should remember the same and keep it nearest their heart. "We should know that our vigour, our strength, nay our National life is in our Religion. For good or evil it is there. You cannot get out of it. You have it now and for ever. You have to stand by it, even if you have *not* the same faith that I have in our religion. You are bound by it and if you give it up you are smashed to pieces. That is the life of our Race and that must be sustained. That is the National Mind and that is the National Life current. Follow it, it leads to glory. Give it up, you die. Death will be the only result, annihilation the only effect the moment you step beyond that life current." "I do not mean to say that Political and social improvements are not necessary. I want you to bear in mind that they are secondary here and that religion is Primary. Indian mind is first religious and then everything else. So this is to be strengthened. Who helps to uphold the world has religion and that is Dharma. How can those who fail to uphold themselves help to uphold others. Dharma is the law of form and Swadharma is that law which upholds our own form. It is the true nature of the Seed of our Race and its manifestations."

### PRESENT STATE OF THE WESTERN CIVILIZATION.

Dr. D. H. Kress M. D. a great Western Medical authority and thinker, testifies to the deterioration of the Western civilization thus "At a breakneck speed the Race is plunging headlong downward. In all civilized countries the distance between the birth rate and death rate has been shortening where women drink and smoke. At the present rate of the increase of mortality from the diseases of degeneracy this Earth will depopulate itself without war. Vital organs are wearing out prematurely. This accounts for the rapid increase in the mortality rate after the 40th year of life. The multiplying instances of mortality from Bright's disease, heartfailure, apoplexy, diabetes, cances etc., are so many indications of universal degeneracy. No sooner one disease is checked or suppressed, then the Devil has a dozen substitutes more deadly than the first. With physical degeneration, moral degeneration is also going on. Class spirit and craven spirit of commercial greed is running riot all over the commercial world. Human vultures gloat over the big profits made by exploiting the helpless sections of humanity. Further proof of degeneration

(Continued on 8 Page)

(Continued from 7 page)

is afforded by the increase of crimes, divorces, veneral diseases etc."

Another great thinker of the modern times *A. G. Gardiner* recently wrote in John Bull regarding the gradual decay of the European Races and stating that White supremacy is doomed. His reasons are: "If Lord Horder and the Eugenists are right, the English nation's intelligence is rapidly declining - so much so, that if matters continue as now, half the population will be mentally defective and we shall be a nation of intellectual degenerates. Rise and decay of Civilisation is a commonplace of history and 500years covered the glory of the most astonishing people who ever inhabited this earth. We still look back with splendour at the little Greek community that dwelt in Athens more than 2000 years ago as the highest achievement of the human mind, and that civilisation has vanished. So with the mighty Roman civilization. So with venice, that once did hold the georgeus East in fee. So with Spain, that dominated the Earth in the early 16th century. It may be that our sun will set too."

*Mental decay*: In the beginning of the last century we numbered then only 8 millions against 40 millions to-day. Are we intellectually 5 times superior to the age that produced Pitt, Fox, and Wellington, Nelson and Byron, Wordsworth and Shelly, Keats and Scott, Coleridge, Constable and Turner? We have increased in quantity but in intellectual quality we have declined. So far the matter other nations are also degenerating, if there is any comfort in that we are all going the same way home. Mental decay is the symptom of the White races in the Modern world.

*Reasons*: Investigation by Dr. R. B. Cattele has shown that the birth rate is inversely related to the intelligence level throughout the whole range of intelligence. In other words, the population is being recruited from the poorest stock and the feeble minded and the subcultural come from large families. The clever children come from meagre families of two and three. Causes of the sterility among the efficient and intellectual classes are obvious. It is there that the gospel of Marie Stopes has made its chief conquests. Among the professional middle and superior artizan classes, families are reaching a vanishing point. The flat system, the servant question, the Motor Car and other facts of the Modern world have put a handicap on children. Our civilization, in a word, is withering at the top."

### INDIANS POSITION AMONG THE CIVILIZED NATIONS OF THE WORLD.

Many of our highly educated countrymen who are at present the leaders of our country are labouring under the great disadvantage of not knowing our own past history, culture, civilization, or religion first hand. With their knowledge obtained second hand they think and argue that Indians have done nothing of value in the past and therefore suppose that they will not be able to do anything in the future also, unless they imitate the English as humble disciples at the foot of their Guru and try to adopt all their ways and adopt similar institutions in all matters of life such as social reconstruction, marriage institution, Education, Parliamentary system of Democratic Government, Commerce, Recreations etc etc. They also consider that the English literature and English History are amongst the most glorious in the world, and that they breathe the spirit of a free and vitally creative people. Those gentlemen do not realise that in imitating others they cease to be themselves and lose their racial identity. Every Englishman will understand at once what is meant by the phrase "to bring up one's boy like an Englishman". But the Neo-Indian of the reformer type cannot understand it. It is only sheer ignorance which can see nothing in India but superstition, selfishness, and servile obedience.

It should be our first and foremost duty to impress on our countrymen young and old to remember that our great ancestors were truly great in every respect and have left us priceless wealth of true knowledge and their example as our heritage. They have also left us strict and minute instructions that our first duty towards them (our ancestors) and succeeding generations should be to examine, understand, and protect and preserve safely the vast and inestimable wealth they have accumulated for our benefit before thinking of acquiring new wealth. We must first realise that we should carefully avoid the risk of foolishly throwing away the most precious things from our treasury, because they happen to have lost their brilliant outward polish for the time being, and run after vain will-o-the- whisps.

These and many other important problems are awaiting solution at your hands after deep and anxious deliberation. With these words I declare this conference open.

## REVIEW.

### Dharmarajys Navarathri Number.

We have just received the Navarathri Number of the Dharma Rajya dated 7th Oct. 1937. As is but appropriate for the Navarathri publication, the issue is almost wholly devoted to the Almighty Mother of the universe, Her attributes and characteristics, the importance and significance of Her worship particularly during Navarathri and the unique Indian conception of Godhead in Her Sakti worship. The issue opens with a very erudite article on the Almighty Mother and Her worship as Sakti under the pen of His Holiness Sri Sankaracharya of Puri Mutt than whom there can be no abler exponment of that cult. Diwan Bahadur K. S. Ramasami Sastrigal has written a short but informing article on the "Navarathri and national Sakti", and the same is followed up by the articles on the "Grace of the Devi" by Prof Venkatesam Pantulu and the "Devi Concept" by Mr. R. Krishnaswami Iyer of Tinnevelly. Rao Sahib N. Natesa Iyer Avl, has contributed an informing article on "Maha Navarathri and its significance". The Worship of Maha Sakti is the subject of another article by Prof A. K. Bannerjee Swami Sri Aseshananda has dealt with "Autumnal worship of the Great Mother". The issue contains other articles about the Devi and Her worship and will repay perusal. The issue is neatly got up with an elegant picture of the Devi in Colours and is priced at annas 2. For copies apply to Dharmmarajya, New Delhi.

### Executive represents the country.

The Hon'ble Dr. Subbaroyan speaking on October, 10, 1937, at Tanjore said, regarding the separation of executive and judicial functions "In modern democracies the executive represented the country and if the people thought it influenced the administration of justice it lay in their power to turn out the Ministry".

Speaking at a public meeting at Tuticorin on October 13, 1937, Mr. K. P. Yegneswara Sarma M. L. A. is reported to have said "Mr. Rajagopalachariar is a master brain". The speaker added "And I am sure there should have been enough justification for the arrest (of Mr. Batliwala) it must have been perhaps clever tactics of Mr. Rajagopalachariar for some ulterior purpose beneficial to the country and no one is competent to sit in judgement over his action."

Does the Premier congratulate himself upon the mentality he has produced in his followers?

## 1908-ளூத்திய முதலாவது ஆக்ட் சீர்திருத்தம்

நிலசுவான்தார் சட்டமாறுதல் சீர்திருத்தம் பரிசீலிக்க கமிட்டி ஏற்படுத்தி அக்கமிட்டிக்கி, பார்லிமெண்டரி ரெவினியூ சிக்ரெடெரியே, கமிட்டி சிக்ரடெரியாக இருந்தவருகிறார். அவரால் சீர்திருத்த விஷயமாய் பொது அபிப்பிராயம் வெளியாக எண்ணி, பலகேழ்விகள் 5—10—37 ஹிந்து முதலிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

மேல்வாரதாரர்கள் நிலவரி உரிமை, ரயித்வாரி கொள்கைப்படி நிகர்மிச்சத்தில் பாதிவரை என்று இருக்க நீண்டகாலமாக கிளர்ச்சியிருக்கிறது. நம் ராஜதானி, ரயித்வாரி நிலவரி ரொம்ப ஜாஸ்தி என்பதாய் நிச்சயிக்கப்பட்டே, நியாயமாக கம்மியாக்க பரிசீலனையிலிருக்கிறது நிகர்மிச்சத்தில் 4ல் 1 பாகமே நிலவரி நிர்ணயிக்க கோரப்படுகிறது. ரயித்வாரி நிலவரி கொள்கைப்படி இந்த சட்டத்துக்கு ஏற்படுத்துவது பொருத்தமாகாதது.

நில சுவான்தாரர்கள் தங்கள் ரயித்துகளிடம் மேல்வாரம் வசூலித்துக்கொண்டு கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கவேண்டியவாள். மேல்வாரத்தை தான்யமாகவும், ரொக்க தீர்வையாக்கியும் வசூலிக்க சட்டப்படி பாத்தியம் இருக்கிறது. நம்மாகாண முன் கவுன்ஸிலில் ஷை சட்டத்துக்கு நிலவரி உரிமை நிர்ணயிக்க 1933 ளூத்தில் வாதபட்டும் பிறகு இதுவரையும் பலவாறு அபிப்பிராயங்கள் வெளிவந்து கொண்டுமிருக்கிறது.

எஸ்டேட்லாண்டு ஆக்ட், டெனண்டுகள் அதிக நிலவரி நியாயமில்லாமல் கொடுப்பதை நிவர்த்தியாக்கவும், மற்றும் உள்ள திருத்தம் ஏற்பட பரிசீலனை கமிட்டி சிக்ரடெரி அவர்கள் வெளிப்படுத்தியுள்ள விஷயமாய், எஸ்டேட் ரயித்துகள், ரயித் அஸோஸியேஷன் தீர்மானம் அபிப்பிராயம் அறிவிக்க முழுமுயற்சிகொள்ளவேணும்.

குரோஸ் அவுட்ரனில் 4ல் 5ல் ஒரு பாகமே நிலதீர்வை உரிமை என்ற வரம்பு, சட்டத்தில் ஏற்படுத்தவும், அதன்படி ஆங்காங்கு உள்ளவழக்கம் ஒத்து சட்டப்படி, கம்முடேஷன் ரொக்கமாயும் பொருள் பங்காகவும் எஸ்டேட் அனுகூலத்துக்கு மேல்வாரதாரர்கள் வசூலித்துக்கொள்ள முதன்மையாக சிக்ரடரிக்கி தெரிவித்துக் கொள்ளவேணும். அம்மாதிரி குரோஸில் 4 அல்லது 5ல் ஒரு பாகம் நிலவரி நிர்ணயப்படி, வசூலிக்க மேல்வாரதாரர்களுக்கும் டெனன்டுகளுக்கும் இப்போதுள்ள விவகாரமே இல்லாமல் ஏற்படுவதுடன் இதா சட்டவரம்பு கொள்கைகளிலும் ஒத்துமை ஏற்பட்டு சட்டகொள்கை சரிவர நடக்கும்.

ராமய்யன், கணபதி அக்கிரஹாரம்.

## அபேதவாத பத்திரிகைக்கு ஜாமீன்.

சென்னையில் ஒருவர் "அபேதவாதி" என்ற தமிழ் வாரப்பத்திரிகையை ஆரம்பிக்க மாஜிஸ்ட்ரேட்டிடம் பதிவு செய்து கொண்டார். ஆனால் காங்கிரஸ் கவர்ன்மெண்டார் இப்பத்திரிகைக்கு ஆயிரம் ரூபாய் ஜாமீன் கட்டவேணுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள்.



605

# வெளியூர்ச்செய்திகள்.

## சென்னை.

### நவராத்திரி.

திருவல்லிக்கேணி பெரியதெருவு 16 நிர். வீட்டில் இந்த நவராத்திரியானது 5-10-37 முதல் 14-10-37 முடிய மிகவும் விமரிசையாக நடந்தேறியது. முதல் நாளாகிய செவ்வாய்கிழமை தினம் காலையில் மகா-ௗ-ஸ்ரீ சுப்பிரமண்ய அய்யாவர்களுடைய ஆக்ஞைபின்பேரில் தாந்திரீகமாகவும் வைதீகமாகவும் கடஸ்தாபனம் நடந்தது. அன்றுமுதல் ஸ்ரீ சக்ரத்திற்கு காலைமாலைகளில் சிந்தாதிரிப்பேட்டை சி. ஆர். கிருஷ்ணசாமி அய்யாவர்களால் ஆவரணபூஜை நடந்தது.

தினம் இரு வேளைகளிலும் சண்டி ஆவரணமும் லக்ஷார்ச்சனையும் பாலக்காடு பிர்மஸ்ரீ அருணசல சாஸ்திரிகளால் நடந்தேறியது. தினசரி ஆவரணபூஜை ஆனவுடன் சுவாசனி பூஜை ஸந்தர்ப்பணை இவைகள் நடந்தது. சுவாசனிகளுக்கு ரவிக்கை சீப்பு கண்ணாடிகள் கொடுத்து சந்தர்ப்பணையும் நடந்தது. தினசரி மாலைகோங்களில் சங்கீதக்கச்சேரிகளும், பஜனைகளும் நடந்தது. இவைகளெல்லாம் பிரும்மவித்யாசபையின் ஆதரவில் பிர்மஸ்ரீ சி. ஆர். கிருஷ்ணசாமி அய்யர் அவர்களின் பார்வையில் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. நவமிதினமாகிய 13-10-37 அன்று இரவு சண்டி ஹோமமும், ஆவரண ஹோமமும் செய்தார்கள். மறுநாள் காலையில் கடஉத்வாஸனம் நடந்தது. வந்து இருந்தவர்களுக்கும் கடதீர்த்தப்ரோக்ஷணமும், பிராசனமும் நடத்திவைத்து சமாராதனையும் நடந்தது. ஆஸ்திகர் எல்லோரும் இம்மாதிரி ஒவ்வொரு நவராத்திரியும் அங்கங்கே நடத்தி நம்முடைய சனாதன தர்மத்தை காப்பாற்ற வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

T. V. சுப்பிரமண்ய அய்யர்.

### சரஸ்வதி பூஜைக்கொண்டாட்டம் திருவல்லிக்கேணி.

அகில இந்தியா பிராஹ்மண மஹா ஸபை, திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம் இவற்றின் ஆதரவில் திருவல்லிக்கேணி தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவன உத்ஸவ பங்களாவில் 14-10-37௳ வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு சரஸ்வதி பூஜைக் கொண்டாட்டம் ஆரம்பமாகியது.

கடவுள் வாழ்த்தாக 'புத்தகம் படிமைமாலை'; 'அஞ்சிலே யொன்று பெற்றான்'; 'அலங்கலிற்றோன்றும் பொய்மை'; பேர் படைத்த விசயனுடன்' என்ற பாடல்கள் பாடப்பட்டன.

பிரதமத்தில் காரியதரிசி பேசியதாவது:- இன்று தினப்பெருமை அளவிடமுடியாதது. விஜயனது தசமி புரட்டாசித்திருவோணம், ஸ்ரீதேசிகனார் வருடத்திரு நட்சத்திரம். இன்று முழுதும் பகவத் விஷயங்களைக்கேட்டனுபவிக்க ப்ராப்தம்.

ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசாரியார் 'திருப்பரிமுகப்பெருமான்' என்ற விஷயத்தை வெகு நேர்த்தியாக சுருக்கமாக உபந்யசித்தார். உபநிஷத்திலுள்ள 'அசுவசப்தம் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனைக்குறிக்குமென்றும் பிரம்மா இழந்த வேதத்தை வெள்ளைப்பரிமுகராய் பகவான் நின்று சரோருகனுக்கு உபதேசித்த சுதினமென்று கொண்டாடினார்.

ஸ்ரீ உபவே. ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் 'ஆசார்ய வைபவம்' எனும் விஷயம் பற்றி அரியதோர் உபன்யாசம் செய்தார். 'அன்னமாயன்று அருமறைகளறைத்தான்,' என்பதை அன்னத்துக்கும் ஆசாரியனுக்கும் உள்ள ஒற்றுமை நயங்களை எடுத்துரைத்து, எம்பெருமானார் ஏற்றதை விளக்கி, குருபரம்பரானுசந்தானத்தின் சீர்மையை நன்கு தெளிவித்து அருமையாக கூறினார். காலை சதஸ்ஸு 10.30 மணிக்கு முடிவடைந்தது.

மாலை 3.30 மணிக்கு அதேயிடத்தில் மறுபடி கொண்டாட்டம் ஆரம்பமாகியதில் ஸ்ரீ உபவே நாச்சியார் கோவில் நடாதூர் கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள் 'ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ப்ரபாவம்' எனும் விஷயம் பற்றி மிகவிரிவாக அழகாக உபந்யாஸம் செய்தார்கள். பல அபூர்வார்த்தங்கள் சாதித்தார்.

வந்திருந்தோர்கட்கு சந்தனம், புஷ்பம், சர்க்கரை வழங்கியபின் வழக்கப்பிரகாரம் வந்தனோபசாரம் வழங்க, கொண்டாட்டம் மாலை 5.45 மணிக்கு முடிவடைந்தது.

ப. ரெ திருமலை ஐயங்கார், காரியதரிசி.

### திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

### ஸ்ரீமத் ஆதிவண்சடகோபய தீந்த்ரமஹா தேசிகர் மஹோற்சவக் கொண்டாட்டம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் சங்கக்காரியாலயமான ஸ்ரீரங்கவிலாசத்தில் அடியிற் கண்டவிபரப்படி ஸ்ரீமத் ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹா தேசிகர் மஹோற்சவக் கொண்டாட்ட உபந்யாசங்கள் நடைபெற்றன. பிரதிதினம் மாலை 6.30 மணி முதல் 8 மணி வரை இவை நடந்தன. வடகலை தென்கலை ஸ்ரீவைஷ்ணவர்கள்கேட்டு மகிழ்ந்தனர். மழைக்கூடக்கருதாது இவர்கள் வந்து கேட்டுசங்கத்திலுள்ள அபிமானத்தை நன்குவெளிக்காட்டினர்.

1-10-37௳ வெள்ளி. விஷயம், சிங்கப்பிரான்பெருமை. உபந்யாசகர் ஸ்ரீஉபவேகுரிச்சி ஸ்ரீநிவாஸவேதாந்தாசாரியார், 2௳ சனி. சிங்கவேள் குன்றத்தான், ஸ்ரீஉபவே. ஆர். கேசவய்யங்கார்? 3௳ ஞாயிறு ஸந்நிதி சிஷ்யன். ஸ்ரீமான் ப.ரெ- திருமலையங்கார்! 4௳ திங்கள். பாகவததர்மம்? ஸ்ரீஉபவேவி. நரஸிம்மாச்சாரியார்; 5௳ செவ்வாய். 'கம்பர் புகழும் சடகோபர்! ஸ்ரீ உபவே ஆர், ஸந்தானகிருஷ்ணய்யங்கார்; 6௳ புதன். 'ஈட்டின்பெருமை! ஸ்ரீ உபவே, ஆர் கேசவய்யங்கார்! 7௳ வியாழன்.' ஸ்ரீ வைஷ்ணவலக்ஷணம். ஸ்ரீ உபவே, ஆர். ஸந்தானகிருஷ்ணய்யங்கார்! 7௳ வெள்ளி. முத்தேசிகர்! ஸ்ரீ உபவேகுரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தசாரியார்? 9௳ சனி. சீபாடியபெருள்?

### பங்களூர்.

நிகழும் 1937-ளூ அக்டோபர்-மீ 5௳ முதல் 14௳ வரையில் பத்து நாட்களாக பங்களூர் கண்டோன்மெண்டு பிராமண சமூஹத்தின் பதினான்காவது வருஷத்திய நவராத்திரி உத்ஸவத்தின் சமயத்தில் தினமும் தேவி ஆராதனம், வேத பாராயணம், பஜனையும் நடந்தன. இரவு ப்ரதிதினமும் 8-30 மணிக்குமேல் சேங்காலிபுரம் புராணகேசரி ப்ரம்ஹஸ்ரீ அப்பாசாமி சாஸ்திரிகள் அவர்களால் தேவி பாகவதம் வெகு விமரிசையாகப் பிரவசனம் செய்யப்பட்டது. வேதாந்தங்களில் அறியதும் நுட்பமுமான பொருள்களை அதிசுலபமாகவும் எல்லோரும் எளிதில் அறியக்கூடிய வசனத்தினால் சொல்லிய அழகு மிகவும் போற்றத்தகுந்த விஷயம். நூற்றுக்கணக்கான ஜனங்கள் விஜயம்செய்து சிரவணானந்தமடைந்து கடைசிதினமான 14ந்தேதி பகவதியின் பிரசாத பாத்ராளாக இரவு வெகு நேரத்திற்குமேல் தங்கள் கிருஹத்திற்குசென்றார்கள். பிர்மஸ்ரீ சாஸ்திரியார் அவர்களுக்கு பொற்பதக்கமும், சம்பாவனையும் கொடுக்கப்பட்டது.

V. R. நடராஜய்யர், ஸிகரெட்டரி.

### ஆலயப்பிரவேச சர்ச்சை.

### ஸ்ரீமான் நடராஜனின் புத்திமதி.

டாக்டர் சுப்பராயன் தஞ்சை ஜில்லாவில் ஆலயப்பிரவேச பேச்சை இழுத்து ஆழம் பார்த்தார். தஞ்சையில் இவர் பேசிய கூட்டத்தில் அக்கிராஸனம் வகித்த ஸ்ரீமான் கே. நடராஜன் என்ற பிரபலஸ்தரே இதை எதிர்த்து அங்கு பேசினார். ஸ்ரீமான் நடராஜன் மந்திரியின் அபிப்ராயத்தை எதிர்த்துப்பேசுகையில், ஆலயப்பிரவேசத்திற்குதாம் சாதகமாயிருப்பதாயும், தமக்கு சொந்தமான இரண்டு கோவில்களில் தீண்டாதாரை அநுமதிக்க தாம் தயாராயிருப்பதாயும் ஆனால் பெரும்பாலான ஜனங்கள் இதை பலமாக ஆக்ஷேபிப்பதாயும், மந்திரிகள் தற்போது ஆலயப்பிரவேசத்தை முக்ய பிரச்னையாகஎடுத்துக்கொள்ளக்கூடாதென்றும், இவ்விஷயத்தை இப்போது வற்புறுத்துவது உசிதமில்லையென்றும், பொது ஜனங்களின் மனமாற்றம் ஏற்படப்பாடுபட வேண்டுமென்றும் மந்திரிகளுக்கு ஆலோசனை கூறினார்.

### த்ரிமதஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானவை.

(தேவநாகரா எழுத்து)

1. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்ரம் (ஸ்ரீ மஹா பாரதம் விராட பர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ் மூலம் பதவுரையுடன் கூடியது. 0—1—0

2. ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-6

3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்தோத்ரம் ஸ்ரீமத் மஹாபாரதம் வனபர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-0

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஆர். எஸ். சர்மா, 'சிரோமணி'

நெ. 14. வெங்கட்டராயர் தெரு கும்பகோணம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.

மேலான T. T. M. A. மிஸ்ஸி பெருங்காயத்தையே

கவனித்து வாங்கவும்.

போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

215206
507






அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## வெளியூர்ச்செய்திகள்.

### ஆங்கரை.

#### ஸ்கந்த ஷஷ்டி.

ஆங்கரை அக்கிரஹாரத்திலுள்ள ஆர்த்தத்திராண பாராயணராய் விளங்கும் மருதாந்த நாதேசுவரர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஷண்முகப்பெருமானுக்குப் பிரமோதூதவருஷம் தொடங்கி, நடந்துவரும் ஸ்கந்தஷஷ்டி உத்ஸவத்தை நிகழும் ஈசுவர வருஷம் ஐப்பசி-மீ 19-உ (14-11-37) வியாழக்கிழமை உபக்கிரமித்து வழக்கம்போல் எட்டாவது நாள் பூர்த்தி செய்வதாக கிராம அசேஷ மகா ஜனங்களால் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது: அந்த உத்ஸவகாலங்களில் ஸ்ரீஷண்முகப்பெருமான், இருக், யஜுஸ், சாமவேத பாராயணங்களுடன் வாஹனாரூடராய் திருவீதியின் கண் எழுந்தருளும் காட்சியை அன்பர்களனைவரும் கண்டு களித்து இஹத்தில் பரம க்ஷேம லாபங்களையும் பரத்தில் சர்வ மங்களப் பிரதமான முக்திப் பேற்றினையும் அடையுமாறு பிரார்த்திக்கின்றனம்.

உத்ஸவ காலங்களில் தினசரி நடக்கும் மஹாந்நியாஸ ஏகாதச ருத்ர ஜபம், இருக், யஜுஸ் ஸாமவேத பாராயணங்களுடன் மஹாபிஷேகம், பிராம்மண சந்தர்ப்பணம், உபந்நியாசங்கள் ஸங்கீத கச்சேரிகள் நடைபெறுமென்று டிரஸ்டிகள் அறிவிக்கிறார்கள்.

### திருச்சி ஆயுர்வேத ஸபா.

திரிசிரபுரத்தில் நிருவப்பட்டு நடந்து வரும் ஆயுர்வேத ஸபையின் நான்காவது வருஷத்திய மகா சம்மேளனம் 8-10-37 வெள்ளிக்கிழமை மாலை 2மணிக்கு ஆண்டார் வீதியில் ஸ்ரீராமச்சந்திர ஆயுர்வேத சாலையில் கூடியது. அச்சமயம் மதுரை, வைத்ய வித்வான் ஸ்ரீமான் எஸ். நாராயண அய்யங்கார் அவர்கள் சபா தலைவராக விளங்கினார். ஜில்லாவின் எல்லா பாகங்களிலிருந்தும் 30 ஆயுர்வேத வைத்தியர்கள் வந்திருந்தார்கள். தன்வந்திரி பூஜை முடிந்ததும், சபா தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது.

ஹிந்து வைத்திய சங்கத்தின் (Central Board of Indian Medicine) அங்கத்தினர்களை இந்திய வைத்தியர்களின் வாக்குரிமையைக்கொண்டு தேர்தல்களில் வந்தவர்களைக் கொண்டு சீர்திருத்தம் அமைக்க வேண்டுமென்றும், அப்படி புதிய தேர்தலில் வந்த ஹிந்து வைத்திய சங்கத்தின் மேற்பார்வையிலேயே எல்லா ஹிந்து வைத்திய பள்ளிக்கூடங்களும் நடத்தப்பட வேண்டும் என்றும் இச்சபை சர்க்காரைக்கேட்டுக்கொள்ள தீர்மானிக்றது.

(2) இந்திய வைத்யர்களின் பரஸ்பர யோக்கியதையை சிறிதும் கவனியாது, அவர்களை A.B, என்ற வகுப்புகளிற் பதிவு செய்து இருப்பதை, மிகவும் மனோகிலேசத்துடன் இச்சபையார் தங்களுடைய மனப்பான்மையை காட்டுவதும் தவிர B வகுப்பில் தாக்கல் செய்யப்படிருக்கிறவர்களுக்கு நேரிட்டிருக்கும் பிரதிபந்தகங்களையும் விலக்கவும் முன் வருமாறு சர்க்காருக்கு அதி தீவிரத்துடன் விண்ணப்பம் செய்து கொள்கிறது.

(3) திருச்சி Dr V.B நடராஜ சாஸ்திரிகளுக்கு "ஆயுர்வேத ஆசார்ய" என்றும் பிருது கிடைத்திருப்பதற்கு இச்சபை தன்னுடைய ஆனந்தத்தைதெரிவித்துக்கொள்கிறது. மேற்படி தீர்மானங்கள் முடிந்தவுடன் வருடாந்திர ரிபோர்ட் காரியதர்சி Dr.A. ராகவராவ் படித்து முடிந்ததும் வரும் வருடத்திற்கு நிர்வாகசபை புதிப்பிக்கப்பட்டு அமைக்கப்பட்டது. நிர்வாக சபையில் Dr.L.V மகாதேவ சர்மாவுக்குப்பதிலாக Dr.T.V ஜெயராம சாஸ்திரிகள் பதவிஏற்றுக்கொண்டார். பிறகு சபா தலைவர் "பிரமேஹம்" என்கிற ரோகத்தைப்பற்றி மிகவும் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். வசந்த குஸுமாகரம், ஹரித்ரா சூர்ணம், தாத்ரீஸ்வரஸம் இவைகள் இந்த ரோகத்திற்கு கைகண்ட ஔஷதம் என்று கூறினார். பிறகு கரூர் Dr. P.S இராம சர்மா என்பவர் "ப்ளட் பிளஷர்" என்கிற விஷயத்தை ஸம்ஸ்கிருதத்தில் நீண்ட வியாஸம் படித்து பின்னர் தமிழில் ஆயுர்வேத நீதியால் ப்ளட் பிளஷர் என்பதைப்பற்றிப்பேசினார். அதில் ச்ரோதஸ் ஸ்தானம் என்றும் துஷ்டவ்யான வாயு காரணம் என்றும் மொழிந்தார். பிறகு Dr. T. S. பாலசுப்பிரமணிய அய்யர் M.B.B.S. அவர்கள் ஆங்கில முறைப்படி ப்ளட் பிரஷரைப்பற்றி அதிதெளிவாய் உபன்யசித்து அந்த உபாதிக்குப்பல காரணங்களையும் விளக்கிக்காட்டியது யாவருக்கும் சந்தோஷத்தை அளித்தது. எல்லா வைத்தியர்களும் பின்னர் சர்ச்சையில் கலந்து கொண்டார்.

மதுரை ஸ்ரீமான்சுப்பிரமணியசாஸ்திரிகள் பஞ்சலக்ஷண நிதானத்தைப்பற்றி உபன்யாசம் செய்தவுடன் தலைவருக்கு உபசாரம் கூறி சபை இரவு 8மணிக்கு கலைந்தது. அங்கத்தினர்களுக்கு விருந்து பிறகு அளிக்கப்பட்டது.

A. ராகவராவ் செகரெட்டரி.

### விரிஞ்சி புரம்.

#### தேகவியோகமானார்.

பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் என்ற பெரியார் சம்ஸ்கிருதத்தில் காவ்ய கவனங்கள் சதா சர்வ காலமும் செய்யக்கூடிய திறமையைப்பார்த்து (காலஞ்சென்ற) சர் வி. குமாரஸாமி சாஸ்திரிகள் (ஹைகோர்ட் ஜட்ஜ்) மற்றும், ஸர். ஸி.பி. ராமஸ்வாமி அய்யராலும் (சர்டிபிகேட்டுகள்) வாங்கப்பெற்று ஸ்ரீல ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி ஆசார்யாளாலும் ஸம்மானிக்கப்பெற்றவராய் அரசாங்கத்தாரால் வெள்ளி விழாவின் போது மெடலும் அடையப்பெற்ற பெரியவாள் நிகழும், ஈஸ்வர ஹு கன்னியா மாசம் சுக்லபக்ஷம் சஷ்டி திதி ஜேஷ்டா நக்ஷத்திரம் கூடிய (10-9-37ல்) தேகவியோகமானார். ஸ்ரீபெரியவாள் ஆத்மா சாந்தி அடைக!

#### ஸ்ரீல ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதர் ஜெயந்தி.

ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கர பகவத் பாதாள் அவதார காலத்திற்கு பிறகு அப்பெரியவாள் சித்தாந்தப்படுத்திய "அத்வைத" மதக் கொள்கைகளை பரவச்செய்யவேண்டி அவதாரம் கொண்ட ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதர் என்ற மஹான் இப்பெரியவாளுடைய மஹத்வ விஜயம் பற்றிய நூல் (மதுரை பிரம்மஸ்ரீ K V. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் அர்ப்பணம் செய்யப்பட்டுள்ள கணிக்கைப்படி ஸ்ரீ தீக்ஷிதர்வாள் அவதாரகாலம் (கலி. 4654. பிரமாதீச ஹு கன்யாமீ 5உ சோமவாரம் கிருஷ்ண பக்ஷ பிரதமை உத்ரப்ரோஷ்டபதா நக்ஷத்திரம்) ஆகவே ஆண்டு தோறும் கன்னியா(புரட்டாசிமீ) ஷை நக்ஷத்திரத்தில் ஸ்ரீதீக்ஷதர்வாள் ஜெயந்தி கொண்டாடப்பட வேண்டிய அவசியத்தை ஒட்டியும், மேலும் தீக்ஷதர்வாள் அவதார ஸ்தலம் இத்திருவிரிஞ்சை ஸ்ரீமார்க்கபந்து ஸ்தலம் ஸ்ரீபெரியவாள் மாதுலரான ஸ்ரீசம்பு தீக்ஷதர் கிரகத்தே தான் அவதரித்து ஸ்ரீ மார்க்க பந்துவேதான் தம் குலதேவதையாய் ஆராதித்து சிவஸ்தல சிலரான அறிகுறியாய் ஸ்ரீதீக்ஷதர்வாள் மடாலயம் ஏற்பட்டிருக்கும் பாக்யம் காரணமாய்(ஷை மடாலயத்து நடந்தேறிய புரட்டாசிமீ 17உ (3-10-37) ஞாயிற்றுக்கிழமை உத்ரப்ரோஷ்டபதா நக்ஷத்திர நன்னாளில் விசேஷ அபிஷேக ஜெயந்தி சிவஸ்தல பக்தாபிமானிகளால் நடத்தி வைக்கப்பட்டது. இனி ஆண்டு தோறும் ஸ்ரீபெரியவாள் ஜெயந்தி கொண்டாடப்படும். ஏனைய ஆஸ்திகோத்தமர்கள் ஸ்ரீதீக்ஷதர்வாள் ஜெயந்தியைக்கொண்டாடி புண்ணியம் அடைவீர்களாக.

வி.எம். முனிரத்னமய்யர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam, Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அகர்யந்திரம்

28-10-1937

4 ல

22 41

215207

471
471
215207
28 OCT 1937
611

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस்து नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஹு ஐப்பசிமீ 12உ 1937ஹு அக்டோபர்மீ 28உ | வால் 41

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கிஸ்தி வஸூல் முறை மாற்றப்படுமாம்.

சென்னை ரவின்யூ மந்திரி கனம் பிரகாசம் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில் நிலவரியைக் குறைக்கவேண்டியதைப்பற்றி அவரிடம் எங்கும் மிராசுதார்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் மந்திரி அதற்குப் பிடிகொடாமல் பதில்சொன்னார்.

நிலவரி வசூலுக்காக ஒருகோடி 30லக்ஷம் செலவு ஆகிறதாயும், இதை நிவர்த்திக்க கிராம பஞ்சாயித்தார் வசமே நிலவரி வசூல் வேலையைஒப்படைக்க நிச்சயித்திருப்பதாயும் சொன்னார்.

நிலவரியைக் குறைத்தால் நிர்வாஹத்திற்குப் பணமில்லாமல் கஷ்டப்படவேண்டி வருமென்றும் அவர் சொன்னார்.

## டில்லிதர்பார் நடக்காது.

1938 டிஸம்பரில் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி டில்லிக்கு விஜயம்செய்து பட்டாபிஷேக தர்பார் நடத்தப் போவதாக பிரஸ்தாபிக்கப்பட்டுவந்தது. ஆனால் இன்னும் காங்கிரஸ்காரர்களுடைய மனப்போக்கு நன்றாக திருந்தவில்லையாகையாலும் பஹிஷ்காரக் கிளர்ச்சி சின்னங்கள் இருந்துவருவதாலும் இந்த நிலைமையில் ராஜவம்சத்தினர் இந்தியாவிற்கு வர பிரியப்படாததாலும் டில்லிதர்பார் நடைபெறாதென்று லண்டனில் முடிவுசெய்யப்பட்டுவிட்டதாக தெரிகிறது.

## எலெக்ஷன் சண்டை.

ஐக்கிய மாகாணத்தில் மந்திரியாயிருந்த மஹம்மதியர் ஒருவர் தம் ஸ்தானத்தை ராஜிநாமா செய்து காங்கிரஸ் சார்பில் மீண்டும் எலக்ஷனுக்கு நிற்கிறார். முஸ்லீம்லீக் இவரை எதிர்த்து தீவ்ர பிரசாரம் செய்கிறது.

ஜின்னாவும், நேருவும் தங்கள் கக்ஷிபலத்தை இங்கு பரீக்ஷிக்கப் பாடுபடுகிறார்கள். பிஜ்னோரில் நடந்த எலக்ஷன் பிரசார கூட்டத்தில் வெடிகுண்டு போடப்பட்டது. இதனால் பலர் காயம் அடைந்தனர். இந்த எலக்ஷனை முன்னிட்டு அங்கு பலத்த கலஹம் நேரக்கூடுமென்று சொல்லப்படுகிறது.

## புகையிலை விஷம்.

### டாக்டர் ராஜன் எச்சரிக்கை.

சென்னை மந்திரியான டாக்டர் ராஜன் பிரஸிடென்ஸி காலேஜ் மாணவர்களுக்கு உபன்யாஸம் செய்கையில், மாணவர்கள் புகையிலை உபயோகிக்கும் துர்வழக்கம் வெறுக்கத்தக்கதென்றும், இந்த கெட்ட பழக்கம் அவர்களுள் பரவிவருவதாயும், புகையிலையில் விஷமிருப்பதாயும், அது ஹிருதயத்தை நாசமாக்கிவிடுவதாயும், இதனால் மாணவர்கள் தாழ்ந்த நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதாயும், நாகரிகத்தின் பெயரால் இந்த இழிவான காரியம் செய்வது வெட்கிக்கத்தக்கதென்றும் கூறினார். கேழ்வரகு கஞ்சி, கீரை, மோர் முதலிய நம்நாட்டு பதார்த்தங்கள் மிகுந்த ஆரோக்ய ஸாதனமென்று அவர் வற்புறுத்தினார்கள்.

## துணிக்கடை லைஸென்ஸ் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது.

சென்னை மாகாணத்தில் கைத்தறி நெசவு அல்லாத துணிகளை விற்பனை செய்பவர்கள் லைஸென்ஸ் பெறவேண்டுமென்று மந்திரிகள் செய்த சட்டத்தை கவர்னர் அங்கீகரித்துவிட்டார். சீக்கிரத்தில் இதில் அமுலுக்கு வந்துவிடும். தாத்காலிகமாகக் கலெக்டர்கள் லைஸென்ஸ் கொடுத்துவரும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

## மதம் மாறிவிடுவதாக பயமுறுத்தல்.

பங்களூருக்கு ஸமீபமான ஹலேபங்கி என்ற கிராமத்தில் தீண்டாதார் பொதுக்கிணறுகளிலிருந்து ஜலம் எடுப்பதையும், பொதுப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிப்பதையும் ஜாதிஹிந்துக்கள் விரும்பாமல் தடுத்துவிட்டார்கள்,

இதனால் தீண்டாதார் கிறிஸ்தவமதம் போய்விடுவதாகப் பயமுறுத்தினார்கள். பாதிரிகளும் இச்சமயம்பார்த்து வேலைசெய்தனர். இதற்கு எதிராக ஆர்ய ஸமாஜிகள் அழைக்கப்பட்டனர். கடைசியாகத் தீண்டாதார் வேறுமதம் மாறுவதில்லையென்று நிச்சயித்திருக்கிறார்கள்.

## கடன்தவணை ஒத்திவைப்பு மசோதா நவம்பரில் வருமாம்.

சென்னை சட்டஸபையின்கூட்டம் நவம்பர் மாதம் 3வது வாரத்தில் நடைபெறுமென்றும் அப்போது கடன் தவணை ஒத்திவைப்பு மசோதா ஆலோசனைக்கு வருமென்றும் தெரிகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்வேட் சன்ஸ் & Co.
56, சக்காபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## நாகூர் பிராம்மண ஸங்கம்,

### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா.

இச்சங்கத்தின் 2 வது ஆண்டு பூர்த்தி மகோத்ஸவம் ஈஸ்வரௗ ஐப்பசி மீ 1உ (17. 10. 37) பானுவாரம் மாலை மணி 6.30 க்கு நாகூர் சிவன்கோவில் மேல மடவிளாகம் ஷைசங்க கட்டிடத்தில் மிக்கவிமர்சையாக நடந்தேறியது. கிராம மகா ஜனங்கள் அனைவரும் அநேகமாய் விஜயம் செய்திருந்தனர். ஷைமகோத்ஸவத்தை முன்னிட்டு சங்ககட்டிடம் மகரதோரணங்களாலும் கொடிகளாலும் நன்கலங்கரிக்கப்பட்டிருந்தன. சங்க வாயிலில் "தலைவர் பிரம்மஸ்ரீ எஸ். மகாலிங்கய்யர் அவர்கள் வரவு நல்வரவாகுக" தர்மமே ஜெயம்" "ஸநாதன தர்மத்துக்கு ஜே" என்ற வாக்கியங்களடங்கிய அட்டைகள் நாட்டப்பட்டிருந்தன. சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கிரஹத்தின் விசாலமான முற்றத்தில் உத்ஸவத்திற்கென்றே பிரத்யேகமாக போடப்பட்டிருந்த அலங்காரப்பந்தலில் தலைவர், உபன்யாசகர் எதிரிலுள்ளகூடத்தில் பரந்தாமனின் திருவுருப்படங்கள் விசேஷ அலங்கார வைபவங்களுடன் எழுந்தருளச் செய்யப்பட்டிருந்தன. பந்தலில் தர்ம தேவதையின் தூதனாக தோன்றி ஹனுமான் உல்லாசமாகத்துவஜத்தில் விளங்கி வந்தார்.

மாலை 6. 30 மணிக்கு அக்ராசனர், உபன்யாசகர்கள் முதலியோர் நாகையினின்றும் இங்கு வந்து சேர்ந்ததும் வாயிலில் நன்கு வரவேற்கப்பட்டு உள்ளே அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஆஸ்திக்யம் நிறைந்த அருங்குணசீலரும் சமூக முன்னேற்றத்துக்கு அரிய தியாகம் செய்து வருபவருமான, அட்வகேட்டுமான பிரம்மஸ்ரீ S. மகாலிங்கய்யர் அவர்களை இவ்வாண்டு பூர்த்தி மஹோத்சவத்திற்கு அக்ராசனம் வகிக்க வேண்டுமென சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ N. நாராயணசாமிய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு பிரம்மஸ்ரீ இராமஸாமி அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டதும் பிரம்மஸ்ரீ S. மகாலிங்கய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்களுக்கும் உபன்யாசகர்களான நாகை அட்வகேட் பிரம்மஸ்ரீ P. S. சிவகுருமய்யர் B. A. BL. அவர்களுக்கும் பிரம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் B. A. B. L. அவர்களுக்கும், ஸநாதன தர்மத்துக்கு ஜே என்ற கோஷத்துடன் பகவத் பிரஸாதமான புஷ்பஹாரங்கள் பிரம்மஸ்ரீ S. இராமசாமி அய்யர் அவர்களால் ஸமர்பிக்கப்பட்டு மரியாதைகள் செய்யப்பட்டன.

சங்கக்காரியதரிசிகளில் ஒருவரான பிரம்மஸ்ரீ S சுப்பரும அய்யர் அவர்களால் வடமொழி ஸ்லோகத்திலும், பிரம்மஸ்ரீ S. இராமசாமி அய்யர் அவர்களால் தென் மொழி ஸ்லோகத்திலும் இனிமையாக கானம் செய்யப்பட்டது. பின்னர் சங்கத்தலைவர் அவர்களால் சபைத்தலைவர் பிரம்மஸ்ரீ எஸ். மகாலிங்கய்யர் அவர்களுக்குவரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. சபைத்தலைவர் அவர்கள் அவையடக்கம் கூறி முன்னுரையாக அழகியதோர் சிறு பிரஸங்கம் செய்த பின் சங்கத்தின் இரண்டாவது ஆண்டின் அறிக்கை காரியதரிசியால் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆத்தன்கடி ஸநாதனதர்ம சபையிலிருந்து ஆசி சேய்தி வந்திருந்தது. நாகப்பட்டணம் ஹிந்துமதாபிமான சங்கக்காரியதரிசியும், நம் சமூக முன்னேற்றத்திற்காக சிறந்த ஊழியம் செய்து வருபவருமான பிரம்மஸ்ரீ N. சாம்பசிவய்யர் அவர்கள் "வருணாசிரம தர்மம்" என்னும் விஷயம்பற்றி அனேக ச்ருதி, ஸ்மிருதி, புராண அனுபவங்களை தெளிவாக எடுத்துக்காட்டி சுமார் 1மணி நேரம் உபன்யசித்தார்கள்.

பின்னர் ஹிந்துமதாபிமான சங்கத்தலைவரும் ஆஸ்திக சிகாமணியுமான பிரம்மஸ்ரீ P S. சிவகுருமைய்யர் அவர்கள் BA BL. "கர்மா" என்னும் விஷயம் பற்றி பேசினர்.

தலைவர் அவர்கள் முடிவுரையில் வேதோக்தமான ஆர்ய மதத்தின் ரக்ஷகர்கள் பிராம்மணர்களென்றும், பிராம்மண தர்மம் ரக்ஷிக்கப்பட்டால் வைதீக தர்மமே ரக்ஷிக்கப்படுமென்றும், அத்தர்மத்திற்கென்று ஏற்பட்டிருக்கும் இன்னல்களுக்கு நம்மிடமுள்ள குறைகள் காரணமென்றும் எய்தவன் அருகிலிருக்க அம்பை நோவதில் பயனில்லை என்றும் நம்மில் ஒற்றுமையின்மையால்தான் நம் சமூகத்தின் உயர்ந்த நோக்கங்களும் சிறந்தஎண்ணங்களும், சமூக ஊழியக்கொள்கைகளும் இழிவு படுத்தப்பட்டு வருகிற தென்றும் ஆகவே ஒவ்வொரு பிராம்மணனும் ஸமுதாய முன்னேற்றத்திற்கான வழிகளில் சிரத்தையும் ஊக்கமும் கொண்டு ஒற்றுமையுடன், சீர்குலைந்து கிடக்கும் ஸமூகத்தை மறுபடியு முன் போல பலமும் ஆதிக்யமும் கொண்டதாக செய்ய முயல வேண்டு மென்றும் கூறி முடித்தார்கள்

பின்னர் சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ என். நாராயணசாமிய்யர் அவர்கள் உபசாரம் கூறினர் பிரம்மஸ்ரீ S. இராமசாமிய்யர் அவர்களாலும் தலைவர் உபன்யாஸகர் ஏனையோருக்கும் உபசார மொழிகள் கூறப்பட்டன. பிறகு சந்தனம் தாம்பூலம் கற்கண்டு பழம் வழங்கப்பட்டுஇரவு மணி 10-30க்கு கூட்டம் இனிது கலைந்தது. பின்னர் பகவத் பஜனையும் நடந்தது.

எஸ். சுப்ரமணியன். சிகரெட்டரி.

## ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸபை.

### கும்பகோணம்.

ஸ்ரீமான் விராஹக்குளம் ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுப் பல வருஷங்களாகநடந்துவரும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸபையானது இவ்வருஷத்திலும் ஸ்ரீவேதாந்த தேசிகர் உத்ஸவகாலத்தில் ஸ்ரீ ரங்கவிலாஸமண்டபத்தில் 17-10-37 முதல் ஆரம்பிக்கப்பட்டு 24.10.37 வரையில் வெகு சிறப்பாக நடந்தேறியது. வேதம், லக்ஷணம் தமிழ் ப்ரபந்தம், ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரம், முதலிய அநேக விஷயங்களில் பரீக்ஷை நடத்தப்பட்டது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து அனேக வித்வான்களும், வேதவித்துக்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீ உ. வே. வித்வான் புத்தங்கோட்டம். ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி, மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ உ வே ஆர். வி. கிருஷ்ணமாசார்யஸ்வாமி, ஸ்ரீஉவே வித்வான் அக்னிஹோத்ரம் தாதாசாரியஸ்வாமி முதலிவர்கள் பரீக்ஷாதிகாரிகளாகஇருந்து பரீக்ஷைகளை நடத்தினுர்கள். கனபாடி ஸ்ரீ அனந்தாசாரியஸ்வாமி, கனபாடி ஸ்ரீ அண்ணாத்துரை ஆசாரியஸ்வாமி இவர்கள் வேதலக்ஷண பரீக்ஷைகளை நடத்தினுர்கள். ஒவ்வொரு தினங்களிலும் மாலை 4-மணி முதல் சிறந்த வித்வான்களின் உபந்யாஸங்களும் நடைபெற்றன.

ஸ்ரீமான்களான புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியர், திருப்பதி ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸ்பால், மீமாம்ஸார்ணவ பண்டிதராஜ திருமலை தாதாசாரியர் சிரோமணி M. O- L. வித்யாரத்னகர, குடவாசல் நரஸிம்மாசாரியர் திருச்சி அட்வகேட், ஏ. வி. கோபாலாசாரியர், அக்னிஹோத்ரம் தாதாசாரியர் முதலியவர்கள் பல முக்ய விஷயங்களைப் பற்றி அழகிய பிரசங்கம் செய்தனர்.

24-10-37. மாலை 4-மணிக்கு வித்வத் ஸம்பாவனை செய்யப்பட்டது. திவான் பஹதூர் எஸ். ராகவய்யங்கார் ஸ்வாமி, ராவ்ஸாஹிப் ஸி. ஆர். லக்ஷ்மிவராஹ அய்யங்கார் அவர்கள், ஸ்ரீமான் ஸி. ஆர் கிருஷ்ணஸ்வாமிய்யங்கார், ஸ்ரீ சங்காராமாநுஜ பாங்க் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீமான் என். கிருஷ்ணஸாமிஅய்யங்கார் அவர்கள் முதலிய பல ப்ரமுகர்களும் விஜயமாயிருந்தார்கள். ஸ்ரீ உ-வே புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமியால் ஸ்ரீமான் விராஹக்குளம் ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களுடையவும், அவர் குடும்பத்தினர்களுடையவும் தர்மசிந்தையைப்பற்றிப் புகழ்ந்து பேசப்பட்ட பின் ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. வேத கோஷங்களுடன் ஸபை மங்களகரமாக ஸம்பூர்ணமாகியது. ஸ்ரீ அஹோபிலமடம் கட்டிடத்தில் வெளியூர் ஸ்வாமிகளுக்கு ததியாராதனுதி ஸௌகர்யங்கள் ஸபையோரால் நன்கு செய்யப்பட்டிருந்தன. திவான் பஹதூர் ஸ்ரீ-உ-வே-ராகவய்யங்கார் ஸ்வாமி ஸபை ஆரம்பமுதலே கூட இருந்து எல்லாக் காரியங்களையும் மேற்பார்வையிட்டு வழக்கம்போல் நன்கு நடத்தி வைத்தார். ஸ்ரீமான் என். கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்களும் ஸபை காரியங்கள் நன்கு நடைபெற விசேஷ ஊக்கம்கொண்டு உழைத்தது பாராட்டக் கூடியது.

ஸபையின் ஆதரவில் நடந்துவரும் வேத பாடசாலை மாணவர்களைப் பரீக்ஷைசெய்து அவர்கள் நன்கு அத்யயனம் செய்விக்கப் பட்டு வருவதில் யாவரும் திருப்தியை வெளியிட்டார்கள்.

நமது நிருபர்.

## வேதாந்த உபன்யாஸ ப்ரகடனம்.

### கும்பகோணம்.

நிகழும் ஈச்வர-ௗ ஐப்பசி-மீ 8உ (24—10—37) பாநுவாரம் முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலை 6-மணிக்கு மேல் கும்பகோணம் ரெட்டிராயர் குளம் கீழ்கரை ஸ்ரீராம மந்திரத்தில், மேற்படி ராம மந்திரம் வேதாந்த பாடசாலை பண்டிதர் ஆங்கரை ப்ரும்மஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் "ப்ரும்மஸூத்ர பாஷ்யார்த்தம்" எளிய தமிழ் நடையில் உபன்யஸிக்கப்படும். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து சிரவணம் செய்யவேணுமாய்க் கோருகிறேன்.

A. ஸுப்ரமண்ய அய்யர்.

## கும்பகோணம்.

ஸரஸ்வதீ பூஜை பழைய பாலக்கரைக்கு வடக்கேயுள்ள ஸ்ரீ கல்யாணராமய்யர் வேத பாடசாலையில் வழக்கம்போல் இவ்வருஷமும் 10—10—37 திங்கட்கிழமை முதல் 4 நாட்கள் பூஜைகள் மிகவும் விமரிசையாகச் செய்யப்பட்டது. 14—10—37ல் ஸரஸ்வதீ ஸஹஸ்ர நாமார்ச்சனையும் மாலையில் லலிதா ஸஹஸ்ரநாமமும் ஷோடசோபசார பூஜையும் நடந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. தென்னந்தோட்டம் ஸ்ரீ ஹரிஹரி என்ற பாகவதரால் ஹரிகதா காலக்ஷேபம், பஜனை முதலியவைகள் நடத்தப்பட்டன. ஸ்ரீமான் மானேஜிங்டிரஸ்டி வி. கணபதி சாஸ்திரிகள் அவர்கள் கூடவே இருந்து சகல உதவியும் செய்துகொடுத்தார்கள். இதுபோல பிரதிவருஷமும் நடக்கும்படியாய் ஸ்ரீ சாரதாம்பாளை வேண்டுகிறேன்.

நேரில் கண்டவன்.



# தர்மங்களை மாற்ற ஒருவருக்கும் அதிகாரமில்லை.

### ம. ம. ஸ்ரீ அனந்தகிருஷ்ணசாஸ்திரிகளின் பிரஸங்கம்.

மைலாப்பூர் ஸம்ஸ்கிருத கலாசாலையின் மாணவ சங்கத்தின் ஆதரவில் 15—10—37 மாலை 5 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. அச்சபைக்கு அகில பாரத வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய சங்கத்தின் பிரஸிடெண்டும் நமது மாகாண சனாதனப் பெரியோருமாகிய மதுரை ராவ்சாகிப் N. நடேசய்யர் B. A., B. L., அக்ராசனம் வகித்தார்கள்.

அப்பொழுது கல்கத்தா விச்வவித்யாலத்தைச் சேர்ந்தவரும் ஸநாதனதர்ம சேவையையே தமது வாழ்கையின் லக்ஷ்யமாகக் கொண்டவரும் நமது பாரததேசத்திற்கே ஓர் ஒப்பற்ற பண்டிதரும், தியாகமூர்த்தியுமாகிய கல்கத்தா மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்த்ரிகளவர்கள் "தர்மஜ்ஞ ஸமயம் பிரமாணம்" என்ற விஷயத்தை சம்ஸ்கிருத பாஷையில் தமக்கென்றே அமைந்த உயர்ந்த நடையில் கம்பீரமாகவும் சொல் நயம் பொருள் நயம் பொருந்தியும் ஓர் உபன்யாசம் செய்தார்கள். அக்கூட்டத்திற்கு சென்னைமாகாண வர்ணாசிரம ஸ்வாராஜ்ய சங்கத்தின் காரியதரிசியும் சென்னை பிரமுகருமாகிய தண்டலம் T. S. ராமஸ்வாமி அய்யரவர்கள் விசேஷ கவனிப்போராக வந்திருந்தார்கள். எப்பொழுதும்போல் கலாசாலை அத்யாபகர்களும் மாணவர்களும் நிறைந்திருந்தார்கள். தெய்வவழிபாடு முடிந்தபின் காரியதரிசியால் முந்தின உபன்யாசத்தின் ரிபோர்ட் படிக்கப்பட்டது.

பிறகு அக்ராசனாதிபதிகளவர்கள் முகவுரையாக சிலவார்த்தைகள் சொன்ன பின்பு பிரம்மஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் கரகோஷத்திடையில் எழுந்து ஸம்ஸ்கிருதத்தில் பேசியதின் சாராம்சமாவது:—

இப்பொழுது காரியதரிசி சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகளை ஸம்ஸ்கிருதத்தில் வாசித்தார். அதில் சென்றகூட்டத்தில் பேசிய உபன்யாஸகர் 'கிருஸ்தவமதத்தை பழைய முறை, புதியமுறை என்பதாக அந்தந்த காலத்தை அனுசரித்து புதுப்பித்து இருப்பது போல, ஏன் நமது ஹிந்துமதத்தையும் காலத்தை அனுஸரித்து புதிப்பிக்கக்கூடாது" எனக் கேட்டிருந்தார். அதைக் கொஞ்சம் ஆராய்வோம். முதலில் அவர் கிருஸ்துவமதத்தை ஹிந்துமதத்திற்கு திருஷ்டாந்தமாகச் சொன்னதே பொருந்தாது. கிருஸ்துவமதமென்பது ஏசுகிருஸ்துவால் ஹிப்ரூபாஷையில் உபதேசிக்கப்பட்ட அல்லது (செய்யப்பட்ட) பைபில் என்ற வேதத்தை ஆதாரமாகக்கொண்டது. அந்த வேதத்தின் அன்னிய பாஷையில் மொழிபெயர்ப்பும்கூட வேதமெனவே கொள்ளப்படுகிறது. அவ்விதமல்ல நமது ஹிந்துமதத்தைச் சொல்லக்கூடிய வேதங்கள். அவை பைபிளைப்போல் இதர பாஷையில் பெயர்க்கப்பட்டால் வேதங்களாகா. பைபிளைப்போல் பௌருஷேயமுமல்ல. அபௌருஷேயமேயாகும். நாம் நமது வேதங்களை அபௌருஷேயமெனச் சொல்வது வேதத்தின் கௌரவத்தை உத்தேசித்தோ, அல்லது பௌருஷேயமென்று சொன்னால் பாபம் என்று பயந்தோ அல்ல. உண்மையையுணர்ந்தேயாகும். அதாவது ஓர் மனிதனால் நமது வேதங்கள் செய்யப்படமுடியாதவை. வேதங்களில் சொல்லப்பட்ட தர்மங்களை எவனும் தானுகவே அறிய முடியாதவை. வேதத்தின் பொருளான தர்மத்தில் ரூபமோ, ஸ்பர்சமோ, சுவையோ, வாசனையோ இல்லாததால் அதைக் கண்ணால் பார்க்கவோ, நாக்கால் ருசிக்கவோ, மூக்கால் முகரவோ, தேகத்தினால் தொடவோ முடியாது. அது சப்தத்தைத்தவிர வேறனதால் செவியால் கேழ்க்கவும் முடியாது. இதனால் பிரத்யக்ஷத்தினால் தர்மத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்பது ஏற்பட்டது. இனி அனுமானப் பிரமாணமும் தர்மத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்று கூறுவோம். அனுமானத்தினால் "பரலோகமிருந்தாலதையடைய ஒருபாயமிருக்கவேண்டுமென அறியலாமே தவிர "இன்னது தான் அதற்கு உபாயம்" என அறியமுடியாது. உதாஹரணமாக புகையைக் கண்டால் நெருப்பு இருக்கவேண்டுமென உரைக்கலாமே தவிர அந்நெருப்பு இன்ன விறகினால் உண்டாக்கப்பட்டதென்று உணர முடியாது. அதுபோல யோகிகளுடைய பிரத்யக்ஷத்திலும் ரூபம் முதலியன வேண்டியிருப்பதில் ரூபம்முதலியன இல்லாத தர்மத்தை யோகிகளும் (ஒரு மனிதனால் எந்த விதத்திலும் அறியமுடியாத பொருளை வேதம் உணர்த்துவதால்) வேதத்தை ஒரு மனிதன் செய்து இருக்கமுடியாதெனத் தெரிகிறது. பைபிள் முதலிய அன்னிய மதஸ்தர்களின் மதக் கிரந்தங்களெல்லாம் அந்தந்த மதத்தை ஸ்தாபித்த மூல புருஷர்களால் செய்யப் பட்டனவென அந்தந்த மதஸ்தர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவைகளில் சொல்லப்பட்ட தர்மங்களெல்லாம் எல்லோருக்கும் பொதுப்படையானவை. உதாஹரணமாக கிறிஸ்துவ மதத்தில் ஏசு கிறிஸ்துவால் உபதேசிக்கப்பட்ட பத்துக் கட்டளைகளில் எல்லோருக்கும் பொதுப்படையானவை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அனுஷ்டிக்க எல்லோருக்கும் அவைகளை சக்தி இருக்குமா என்பது சந்தேகமே. சிலருக்கு சக்தி இருக்கலாம். சிலருக்கு இல்லாமலிருக்கலாம். அப்பொழுது அவைகளை அவர்களுக்கு (சக்தி இல்லாதவர்களுக்கு) தகுந்தபடியாக மாற்றவேண்டியதவச்யமாகிறது.

நமது வேதங்களிலோ, அல்லது அதையனுஸரித்த ஸ்ம்ருதி முதலியபிரமாண கிரந்தங்களிலோ வென்றால் சக்தனுக்கு ஒருவிதமாகவும் அசக்தனுக்கு ஒருவிதமாகவும் ஆபத்தையடைந்தவனுக்கு ஒருவிதமாகவும் தர்மங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நமது தர்மங்களை மாற்றவேண்டிய அவசியமே இல்லை. மாற்றவும் முடியாது. தர்மத்தை அதர்மமென்றோ சிலர் தங்களை பண்டிதர்களென்று சொல்லிக்கொண்டு நிர்ணயம் செய்தாலும், ஒருநாளும் தர்மம் அதர்மமாகாது. அதர்மமும் தர்மமாகாது. ஒருவன் நெருப்புக்கு ஜலமென்று பேர் கொடுப்பதால் நெருப்பு குளிர்ந்து விடுமா?

தீண்டாதார் ஆலயப்ரவேசத்தை சிலர் தர்மமென ஒரு பிரமாணத்திற்கும் கட்டுப்படாமல் நிச்சயித்தாலும் ஒருநாளும் அது நன்மை விளைவிக்காது. பண்டிதர்களுக்கு, சாஸ்திரங்களாலும், அனுஷ்டானங்களாலும் விளங்கிவருகிற தர்மங்களை களையவோ வேறொன்றை தர்மமெனத் திணிக்கவோ உரிமை கிடையாது. இன்னினாருக்கு இன்னின்ன தர்மம் வேதமுதலிய பிரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் இன்னின்ன தோஷங்கள் ஏற்பட்டால் இன்னின்ன பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நிர்ணயிக்கவே அதிகாரமுண்டு. ஆதலால் ஒவ்வொருவரும் தத்தமக்கு தம் ஜாதி குலாசாரத்தை யனுஸரித்து என்ன என்ன தர்மங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன என்று பண்டிதர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே தவிர ஒருநாளும் பண்டிதர்களிடம் தர்மத்தை மாற்றும்படியோ, வேறுவிதமாக ஆக்ஷேபிக்கவோ அதிகாரம் கிடையாது. இதிலேயே "தர்மஜ்ஞ ஸமய:" என்பதின் அர்த்தம் விளங்கும்.

நாஸ்திகர்களெனச்சொல்லிக் கொள்கிறவர்களுக்கும் நான் சொல்வது என்னவெனில் "உங்களுக்கு பரலோகத்தில் நிச்சயமில்லாமலிருந்தாலும் ஆஸ்திகர்களாயிருந்து வேதாதிப்பிரமாணங்களில் சொல்லியபடி நடப்பதே மேல்" என்பதே. அதாவது "பரலோகம் இருக்கிறதா? இல்லையா? என்கிற சம்சயம் இருந்தாலும் கூட ஆஸ்திகனாக இருப்பதே மேல். மரணத்திற்குப்பிறகு நாஸ்திகன் எண்ணப்படி பரலோக மில்லாமலிருந்தாலும் ஆஸ்திகனுக்கு ஒரு கெடுதியும் நேராது. ஆனால் ஆஸ்திகனின் பரலோகமுண்டென்கிற கொள்கை நிலைத்து விட்டால் நாஸ்திகனின் கதி என்ன வாகும்? ஆதலால் எல்லோரும் ஆஸ்திகர்களாயிருந்து தத்தமக்குரிய தர்மங்களை பண்டிதர்களிடமிருந்து கேட்டுத்தெரிந்து கொள்ள வேண்டும். இதையே "தர்மஜ்ஞ ஸமய:" என ஆன்றோர் கூறுவர். தரித்திரனுக்குச்சொன்ன "பலம் பத்ரம் தோயம்" முதலியவைகளை கோடீஸ்வரனுக்கு, இவ்விதமே மாற்றியுமாக "எல்லோருக்கும் எல்லா தர்மமும் செய்யத் தக்கனவை" என நிர்ணயிப்பது தர்மஜ்ஞ சமயமாகாது.

ஒரு சமூகத்தாருடைய ஜாதியை பண்டிதர்கள் நிர்ணயிப்பதென்பதும் அதற்கு தகுந்த படி தர்மத்தை அதர்மமாகவும் அதர்மத்தை தர்மமாகவோ மாற்றலாமென்பதும் கேலிக்கூத்தேயாகும். பாராசரஸ்மிருதியில் கலியில் செய்யக்கூடாத தர்மங்களை "கலி வர்ஜ ப்ரகரணம்" என்றவிடத்து விளக்கப்பட்டு இருப்பதால் நாமும் ஏன் பாராசர் போன்ற மகாத்மாக்களை ஒன்று சேர்த்து அவர்கள் மூலமாக தர்மத்தை மாற்றக்கூடாது? எனச்சிலர் கேட்கிறார்கள். அதற்கு பதில் — "பாராசர் தர்மத்தை மாற்ற வில்லை என்பதும் பாராசர் போன்ற மகாத்மாக்கள் இப்பொழுது இல்லை' யென்பதே யாகும். தற்காலத்தில் தங்களைப்போன்ற படித்த பண்டிதர்களிடம் சொல்வதுண்டு. அதற்கு நானும் "மகாத்மா என்னும் பிருதம் கிடைப்பதைப் பற்றி சந்தோஷமடைந்தாலும், தர்மத்தை மாற்றுவதில் — பாராசர் போன்ற மகரிஷிகளுக்கும் உரிமை இல்லாத விஷயத்தில் என் போன்றவர்களைத்தலையிடச்செய்வது வருத்தத்தையே கொடுக்கிறது', என அடிக்கடி சொல்வதுண்டு. தற்காலத்தில் மகாத்மா எனச் சொல்லிக்கொண்டு தர்மத்தை மாற்ற விரும்பும் சிலருடைய கூட்டத்தில் தர்மக்ஞர்கள் ஒரு நாளும் கலந்து கொள்ள முடியாதவர்கள். ஆதலால் ஒவ்வொரு பண்டிதரும் தத்தமக்குண்டான உரிமையை சாஸ்திரத்தை யனுசரித்து நன் முறையில் உபயோகிப்பார்களாக.

நான் எதிர்பார்க்காத விதமாய் சில வேலைகள் குறுக்கிட்ட படியால் உபன்யாசத்தை இத்துடன் முடித்துக்கொள்கிறேன் எனப் பேசி முடித்தார். மத்தியில் எல்லோருடைய உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் வண்ணம் சிறு சிறு ஹாஸ்யத்துணுக்குகளையும் சில சம்பவங்களையும் நல்ல முறையில் எடுத்துக்கொண்டார்கள்.

பிறகு அக்ராஸனாதிபதியவர்கள் "தர்மக்ஞ ஸமய:" என்ற விஷயத்தை சுருக்கமாக எடுத்துரைத்து உபன்யாசகரவர்களை மிகவும் கொண்டாடினார்கள். 'கலாசாலை மீமாம்ஸா உபாத்யாயர் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமண்ய சாஸ்திரிகளவர்கள் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

A. லக்ஷ்மணன்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

ஈச்வர-வரு ஐப்பசி-மீ 12உ

## கடன் தவணை ஒத்திவைப்பு மசோதா.

சென்னை சட்டஸபையில் பிரதம மந்திரியால் கொண்டுவரப்பட்டுள்ள மேற்படி மசோதாவைப்பற்றி அறியாதவரிருக்கமாட்டார். சென்ற சட்டஸபைக் கூட்டத்திலேயே இதை அவஸரமாக நிறைவேற்றிவிடக் காங்கிரஸ் கக்ஷியார் நினைத்திருந்தும், வெளியில் எதிர்ப்பு ஏற்பட்ட காரணமாக இது ஒத்தி வைக்கப்பட்டது. ஆனாலும், நவம்பரில் நடத்தப்போகிற கூட்டத்தில் இதை நிறைவேற்றிவிட மந்திரிகள் நிச்சயித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த மசோதாவைப்பற்றி எங்கும் அறிவாளிகளால் வேண்டியவரையில் வாதப்பிரதிவாதங்கள் செய்யப்பட்டுவிட்டன. எதிலும் காணப்படுவதுபோல் இந்த மசோதா விஷயத்திலும் ஸாதகமாயும் பாதகமாயும் அபிப்பிராயங்கள் வெளிவருகின்றனவாயினும், பொதுவாக இதை ஆக்ஷேபிப்பவர்களே அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது.

பணம் தேவையுள்ளவன் கடன் வாங்குவதும், பணமுள்ளவன் கடன் கொடுப்பதும், உசிதமான வட்டி பெறுவதும், தர்மமூலமாக ஏற்பட்ட நமது அர்த்த சாஸ்திரங்களிலும் நீதி சாஸ்திரங்களிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், இந்த கொடுக்கல் வாங்கலானது வரையறைக்குட்பட்டதாயும் மிதமானதாயுமிருந்து வந்திருக்கிறது. இக்காலத்தில் இந்த நியமமில்லாமல் மனம்போனபடியெல்லாம் செலவுகள் செய்யவும், தமாஷாக்களுக்காகவும், டம்பகாரியங்களுக்காகவும் மிதமிஞ்சிக் கடன் வாங்கும் வழக்கமானது நவீநாகரிகத்தின் காரணமாகப் பரவிவிட்டது. இதனாலேயே எதிர்பாராத பல துன்பங்கள் ஏற்பட்டு இத்தகைய மசோதாக்களைத் தேடவேண்டிய அவச்யமேற்படுகிறது. மேற்றிசை நாடுகளில் இவ்வித தவணை ஒத்திவைப்பு உண்டாயினும், அது பெரிய தேசக்ஷாபகரமான யுத்தம் முதலிய ஸந்தர்ப்பங்களிலேயே கையாளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அர்த்தசாஸ்திர நிபுணர்களின் அபிப்பிராயப்படி பார்த்தாலும் இந்தியாவில் இத்தகைய மசோதாவுக்கு இப்போது என்ன அவஸரம் நேர்ந்ததென்பது யோஜிக்கவேண்டிய விஷயமேயாகும்.

ஜனங்கள் கடனில் மூழ்கியிருப்பதை மீட்க, கவர்ன்மெண்டார் விரும்பியபோதிலும், குடிகளுக்கு இவ்வளவு சுமையான கடன் ஏற்பட வேண்டிய காரணமென்னவென்று கவர்ன்மெண்டார் கண்டுபிடித்து கடன் வாங்கத் தூண்டும் காரணங்களை களைந்தெறிந்தாலல்லது, இத்தகைய தாற்காலிக பரிஹாரங்களால் பிரயோஜனமென்ன? தற்கால நவீன நாகரிகப்போக்கு, நவீன எண்ணங்கள் இவைகள் காரணமாக ஜனங்கள், வருமானத்துக்குமிஞ்சி செலவு செய்யவும், அதற்காகக் கடன் வாங்கவும் ருசி கொள்ளுகிறார்கள், நவீனப் புடிப்பு, நவீந உடுப்பு, நவீன ஆஹாரங்கள், ஸினிமா, ரேடியோ எலேக்டிரிக், மோட்டார்கார் முதலியகணக்கற்ற ஸாதனங்களை நம் தேசத்தில் புகுத்தி, ஏழைகளும், பணக்காரனும், அவனவன் அந்தஸ்தை மீறிக்கடன் வாங்கத்தூண்டுதல் ஏராளமாக இருந்து வருகிறது. இவைகளில் பெரும்பாகம் சர்க்காராலேயே ஏற்பட்டதாயிருக்கிறது. மேலும், கடன் கிடைப்பது ஸுலபமாகும்படி அநேக ஸௌகர்யங்களையும் கவர்ன்மெண்டாரே செய்து வைத்திருக்கிறார்கள். பகட்டான ஸாமான்களையும், தமாஷாக்களையும் காட்டி ஜனங்கள் கடன் வாங்கியாவது அவைகளை அநுபவிக்க வழி தேடிக்கொடுத்து கவர்ன்மெண்டார் கடன்கள் விருத்தியடையும்படி செய்துவிட்டு, இத்தகைய மசோதாக்களைக் கொண்டுவருவது எவ்விதம் நற்பயனைத்தரும்? நவீந வாழ்க்கையைவெறுத்து பிராசீனரீதியில் வாழச்செய்தால் குடும்பிகள் இப்போதைப்போல அளவு மிஞ்சிய அநாவச்யகச் செலவுக்கும் கடனுக்கும் ஆளாகமாட்டார்கள். ஆகலால் கடன் வாங்கத் தூண்டும் நவீநஸாதநங்களைக் கூடியவரையில் குறைப்பதே முதலில் செய்யவேண்டிய முக்ய காரியமாகும்.

இந்த மசோதாவானது உலகமர்யாதைக்கே மூலவேர் போல் இருந்துவரும் விச்வாஸம் அல்லது நம்பிக்கையை நாசம் செய்வதாயிருக்கிறது. பதி பார்யாஸம்பந்தமோ, ராஜ பிரஜாஸம்பந்தமோ, பிதா புத்ரஸம்பந்தமோ, ஆசார்ய சிஷ்யஸம்பந்தமோ, எதுவும் உலகில் பரஸ்பர விச்வாஸத்தினாலேயே நிலைத்து நிற்கவேண்டியதாயிருக்கிறது. அதுபோலவே, கடன் கொடுப்பவர் வாங்குகிறவர்களும் பரஸ்பரம் விச்வாஸத்தால் கட்டுண்டிருப்பது தர்மமாயிருக்கிறது. முதலில் விச்வாஸம் ஏற்படும்படி நடந்து கொள்வதும், பிறகு விச்வாஸம் வைப்பதும், அதன்பின் அந்த விச்வாஸப்படி கார்யம் நிறைவேற்றுவதுமாக, விச்வாஸத்தில் மூன்று அம்சங்கள் பிரிக்கமுடியாதவையாக அமைந்திருப்பதை லோகத்தாலும் சாஸ்திரத்தாலும் அறிகிறோம். கடன் கொடுப்பவர் வாங்குபவர்களுள் இந்த மூன்று அம்சம் பொருந்திய விச்வாஸம் நிறைவேற்றப்படவேண்டியது தர்ம மூலமாக ஏற்பட்ட கடமையாயிருக்கிறது.

இந்ததார்மஸூக்ஷ்மம் எல்லாப் பொதுக் கார்யத்திலும் உண்டு, கைகேயி தசரதரிடம் நம்பிக்கையால் இரண்டுவரன் கேட்டாள், அவரும் நம்பிக்கையால் அதை வாக்களித்து, வேண்டியபோது அடைந்து கொள்ளும்படி உறுதிகொடுத்திருந்தார். கடைசியாக இந்த நம்பிக்கையை நிறைவேற்ற வேண்டிய காலத்தில் அவர் பின் தங்கவில்லை. ஏனெனில் அவர் விச்வாஸம் அல்லது நம்பிக்கையால் கட்டுப்பட்டிருந்தார்: ஸ்ரீராமனோ, வஸிஷ்டாதி மஹர்ஷிகளோ, பொதுஜனங்களோ, இந்த தர்மத்தை மறுக்கவில்லை. ஏற்கனவே கொடுத்திருந்த வாக்குப்படி நடப்பதால் ஸ்ரீராமபிரானுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் நின்று வனவாஸம் என்ற மகத்தான கஷ்டம் ஏற்பட்டது. ஆனாலும் தர்மமென்று நினைத்து பிதாவின் வாக்கை நிறைவேற்றினார். வாக்குக் கொடுத்தபடி நடப்பது அஸௌகர்யமாயிருந்தால், வாக்கை மாற்றிவிடலாம் என்று ஏற்பட்டுவிட்டால், பிறகு தர்மம் எப்படி நிலைக்கும்? தன் சௌக்கியத்திற்காக வாக்கைவிட்டிருந்தால் அரிச்சந்திரனுக்கு எவ்விதம் பெருமை? ஆரம்பத்தில் தன்னிடம் நம்பிக்கை வரும்படி செய்துகொண்டு, பிறகு அதன் பலனை அடைந்தும், கடைசியாகப் பணத்தை குறிப்பிட்ட கெடுவில் கொடுப்பதாக ஒப்பிய பிரகாரம் செய்வதல்லவோ விச்வாசத்தின் உயிராகும்? திருப்பிக்கொடுக்கும் ஸமயத்தில் மாறி நடப்பது விச்வாஸஹத்தி செய்ததாக ஆகாதா? இது பாரததேசதர்மத்தின் அடிவேரைக் கல்லுவதாக ஆகிறதல்லவா? இத்தகைய விச்வாஸஹத்தி என்ற அதர்மத்தைச் செய்யும்படி கடன் வாங்கியவர்களைத்தூண்டுவதாகவே இந்த மசோதாவின் தன்மையிருக்கிறது. இதை ஒரு அரசாங்கமே செய்வதென்றால் அது சரியாகுமா? தார்மிகர்களான பாரதீயர்கள் இதை ஒப்பமாட்டார்கள். வாக்குறுதிப்படி கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தாலே பாதியோ, அல்லது ஏகதேசமோதான் கிடைக்கக்கூடியதாயிருக்கும். இப்படியிருக்கையில் கொடுக்கவேண்டாமென்று போதிப்பது எவ்வளவு அனர்த்தமென்பது சொல்லத் தேவையில்லை.

## குறிப்புகள்.

### பரிஷத்தின் வேஷம். வெளியாகிவிட்டது.

வருகிற டிஸம்பரில் சென்னையில் நடக்கப்போகும் சீர்திருத்தப்பரிஷத்தின் யோக்யதையைப்பற்றி அவ்வப்போது நாம் விபரம் கொடுத்து வருகிறோம். அதை நடத்தும் உத்தேசம், நடத்துகிறவர்கள், அதன் தலைவர் ஆகிய எல்லாவற்றையும் கவனிக்கையில் அந்த பரிஷத்தின் விபரீதப்போக்கு வெளிப்பட்டிருக்கிறது. இப்போது நமது தலைவர் பிரம்மஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள், அந்த பரிஷத்துக் கூட்டத்தாரின் வாய்வழியாகவே அதன் போக்கை வெளிப்படுத்தி விட்டது விசேஷமாகும். அது விஷயமாக இன்று நமது ஆங்கில அநுபந்தத்தில் நமது தலைவர் அறிவித்துள்ள விரங்களை வாசகர்கள் கவனிப்பது அவச்யமாகும். பரிஷத் நடத்தப்போவதாக அவர்கள் வெளியிட்ட உடனேயே பிரம்மஸ்ரீ நடேசய்யரவர்கள், அதன் பிரவர்த்தகர்களுக்குக் கடிதமெழுதி பரிஷத்தின் போக்கை அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். இதுகாறும் அதற்குப்பதில் இல்லை. ஆனால் இப்போது அதை நடத்துகிறவர்கள் வெகு ஸ்பஷ்டமாக நமது தலைவருக்குப் பதில் கொடுத்து இருப்பது கவனிக்கத்தக்கது.

அந்த பரிஷத்தானது முற்போக்கு நோக்குமுள்ள பண்டிதர்களைக்கொண்டே நடத்தப்படுமாம். முற்போக்கு என்றால் காலதேச நிலைமைக்கு ஏற்றபடி ஹிந்து மத தர்மங்களை மாற்றலாம், மாற்ற வேணும் என்ற அபிப்ராயமுள்ளவர்களென்று பரிஷத் அதிகாரிகளே வியாக்யானம் செய்து விட்டார்கள். பரிஷத்திற்கு ஒரு தலைவர் நியமிக்கப்படுவாராம். ஸபையில் நடத்த வேண்டிய சர்ச்சைகள் யாவற்றும் அவரிஷ்டப்படி நடத்த அதிகாரமிருக்குமாம். அந்தத்தலைவர் தமக்கு உதவியாக மூன்று அல்லது நான்கு பண்டிதர்களை கமிட்டியாக ஏற்படுத்திக்கொள்வாராம். ஸபையில் வெளியிடப்படும் சாஸ்திர அபிப்ராயங்களை அப்படியே எடுத்து வெளிப்படுத்துவதே அந்தக்கமிட்டியின் வேலையாம் அது ஒரு பஹிரங்க ரிபோர்டும் தயாரித்து வெளியிடுமாம். இதைப்பொதுஜனங்களிடையில் பிரசாரம் செய்து அதன்படி செய்யும்படி ஜனங்களைத்தூண்டப்போகிறார்களாம். ஸநாதன தர்மப் பண்டிதர்களை அழைக்கவோ அவர்களுடைய அபிப்ராயங்களைக்கேட்கவோ உத்தேசமில்லையென்று பரிஷத் அதிகாரிகள் ஸ்பஷ்டமாகச்சொல்லி விட்டார்கள், சாஸ்திர நிர்ணயம் செய்வதில் "முற்போக்கு எண்ணம்,, என்பது இது வரையில் கேழ்விப்படாத புதுமையாயிருக்கிறது. இந்த ஒரு அம்சத்திலிருந்தே அந்த பரிஷத்தின் வேஷம் வெளிப்பட்டு விட்டது. தென்னிந்தியப்பண்டிதர்களில் சிலர் இதற்கு அழைக்கப்படப்போவதாகத் தெரிகிறது. அவர்கள் மிகுந்த ஜாக்ரதையுடன் இருக்க வேணும், அல்ப பிரயோஜனத்திற்காக தேசத்தையும் தர்மத்தையும் அவர்கள் காட்டிக்கொடுக்காமல் தீரர்களாக இருக்க வேண்டும்.



ஸநாதன தர்மிகளுடைய பரிஷத்து ஒன்றை சென்னையிலேயே நடத்த நமது தலைவர்கள் பலத்த முயற்சி செய்து வருகிறார்கள். இதன் விவரங்களையும் மற்றதையும் பிறகு குறிப்பிடுவோம்.

### அரசர் என்ன செய்யப்போகிறார்?

திருவாங்கூர் அரசர் ஆலயப்பிரவேச விளம்பரம் செய்ததற்காகக் காங்கிரஸ் வாதிகள் அவரை ஆகாயமளாவப் பாராட்டினார்கள். முனிஸிபாலிடிகள், ஜில்லா போர்டுகள் சட்டஸபைகள் ஆகிய எல்லாவிடங்களிலும் அரசருக்குத்துதிபாடினார்கள். யதேச்சாதிகாரிகளாகத் தூற்றப்பட்ட ஸம்ஸ்தான அரசர்களை இவ்வாறு காங்கிரஸ் வாதிகள் துதி பாடியது நரியின் தந்திரம்போலவே இருக்கிறது. ஸமயம் நேர்ந்தால் அந்த அரசரையே கவிழ்க்கவும் காங்கிரஸ் வாதிகள் தயார். ஸமஸ்தானங்களில் பொறுப்பாக்ஷி, குடியரசு போன்றவை ஏற்பட்டு அரசனை வெறும் பொம்மையாகச் செய்து விடவேண்டுமென்பது காங்கிரஸ் கொள்கை. அதற்கு வேலையும் செய்கிறார்கள். இப்போது திருவாங்கூரில் பெரிய கிளர்ச்சி தோன்றியிருக்கிறதாம். காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் கேசவன் என்பவரை ஸமீபத்தில் விடுதலை செய்தார்கள். அவருக்கு அங்கு எல்லையற்ற உபசாரம் நடக்கிறதாம். ஜனங்கள் அவரையே அரசனாகப்பாவிக்கிறார்களாம். அரசனுக்கு ஏற்பட்ட பிரத்யேக மரியாதைகள் ஸ்ரீமான் கேசவனுக்குச்செய்யப்படுகின்றனவாம். 101 வேட்டுகள் கேசவன் உபசார காலத்தில் போடப்பட்டனவாம். இது அரசருக்கு ஏற்பட்ட தனி மரியாதையாம். அரசருக்குப்பிடிக்கபபடும் மணிக்குடை மாதிரி கேசவனுக்கும் பிடிக்கப்படுகிறதாம். இந்த மாதிரி மரியாதைகளால் ஜனங்கள் ஸ்ரீமான் கேசவனையே அரசராக பாவிக்கிறார்களாம். அரசர் ஆக்ஷிக்குப்பதிலாக கேசவன் ஆக்ஷி இங்கு ஏற்பட்டு விட்டதாக ஜனங்கள் நினைக்கிறார்களாம். இந்தக்கூட்டத்திற்கு வரும் ஜனங்களுக்கோ அளவில்லையாம். மேலும் திருவாங்கூரில் அரசர் ஆக்ஷிக்கு பதிலாக குடியரசு, பொறுப்பாக்ஷி என்றவை ஏற்படவேண்டுமென்று பலத்த கிளர்ச்சி நடக்கிறதாம். இதைக்கண்டு அந்த அரசாங்கம் திகில் அடைந்து விட்டது. அந்த கவர்மெண்டார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையிலேயே இவ் விவரங்களைச் சொல்லி, வெகு தீவ்ரமாக இந்த கிளர்ச்சியை அடக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பொறுப்பாக்ஷிக் கிளர்ச்சி அங்கு காங்கிரஸ்காரர் ஆதரவு பெற்றே நடக்கிறதெனத்தெரிகிறது. அரசர் ஆக்ஷிக்கே உலை வைக்க காங்கிரஸ் கங்கணம் கட்டியிருக்கிறதாகத் தெரிகிறது. ஆலயப்பிரவேச அநீதிக்குக்காங்கிரஸ்கார் உதவியைப்பெற்று அந்த கவர்ன்மென்டார் கூத்தாடினார்களே! அங்கு பொறுப்பாக்ஷிக்கிளர்ச்சி நடந்தால் இந்தியாவிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் அதற்கு பக்க பலமாநிற்கப்போகிறார்கள். அரசர் தமது உரிமைகளையும் மரியாதைகளையும் இழக்கத்தயாராக இல்லை. அடக்கு முறையைப்பிரயோகிக்கப் போகிறார். காங்கிரஸ் வர்திகளோ அரசரின் உரிமையைப் பறிக்க விரும்புகிறார்கள். ஸ்ரீ பத்மநாபன் திருவுள்ளம் என்னவோ?

### உண்மையை மறைக்க முடியுமா?

திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்கக்கட்டுப்பாடான பல வேலைகள் நடப்பதை நாம் பார்த்து வருகிறோம். சென்னை கார்ப்பரேஷன் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்க நிச்சயித்ததும் இந்தக்கட்டுப்பாடான ஆடம்பரங்களில் ஒன்றாகும். அந்த ஆலயப்பிரவேச விளம்பரத்துக்கு ஸர். ஸி. பி. யின் நிர்ப்பந்தம் காரணமல்ல வென்றும், அரசரே மனமொப்பி இதைச்செய்ததாயும் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. ஆனால் கார்ப்பரேஷன் கூட்டத்தில் பேசியவர்கள் யாவரும் ஸர். ஸி. பி. யே இந்த விளம்பரத்திற்கு முக்ய காரண பூதரென்று தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அரசர் சிறுவராயும் அநுபவமில்லாதவராயுமிருக்கையில்ஸொந்தஆலோசனையைமுன்னிட்டு அவர் இப்படிச் செய்திருப்பாரென்று ஒருவரும் நம்பி விடவில்லை. காந்திஜி, பிர்லா, முதலியவர்களின் தூண்டுதலால் ஸசிவோத்தமனே இந்த விளம்பரத்திற்கு பூர்ண ஜவாப்தாரியென்பது உலகமறிந்த ரஹஸ்யமல்லவா? ஆனால் சிலர் இதை ஏதோ காரணத்தால் ஒப்ப மறுத்தார்கள். இப்போதுகார்ப்பரேஷன் இந்த உண்மையை தெளிவாக்கி விட்டது. ஆனால் ஸசிவோத்தமர் இந்த விளம்பரத்திற்கு தாம் காரணமல்ல வென்கிறார்; மஹாராஜாவும் அவர் தாயாருமே காரணமென்று சாதனை செய்கிறார். அந்தோ! ஆச்சர்யம்! ஆலயப்பிரவேச விளம்பரம் செய்து பல மாதங்கள் ஆகி விட்டன. அரசருக்கு இதற்காகக்கார்ப்பரேஷன் ஏற்கனவே உபசாரம் செய்தாகி விட்டது. இப்போது நினைத்துக் கொண்டு ஸர். ஸி. பி. க்கு உபசாரமாம்! இன்னும் சிறிது நாள் கழித்து வேறு ஒருவருக்கும் நடக்கும். சென்னை கார்ப்பரேஷனுக்கு வேறு வேலை இல்லையா? யார் எதை தூண்டி விட்டாலும் அப்படியே ஆடுவது வேலையா?

### நிலவரிவஜாவைவிட மதுவிலக்குப் பெரிதா?

சென்னை ரவின்யூ மந்திரியான ஸ்ரீமான் பிரகாசம் சில ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து பேசியதில் நிலவரியைக் குறைக்கும் விஷயமாகக் காண்டிக்கொண்ட மனோபாவம் ஆச்சர்யமாயிருக்கிறது. மிராசுதார்கள் நிலவரிப்பளு தாங்கமுடியாமல் தவித்து அவரிடம் முறையிட்டுக்கொண்டார்கள். மந்திரியிடமிருந்து ஆறுதலானபதிலை அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆயினும் மிராசுதார்கள் மந்திரியின் பதிலில் மிகுந்த ஏமாற்றத்தை அடைய நேர்ந்திருக்கிறது.

ஸர்க்காருக்குப் பணசௌகர்யமில்லையென்றும், சேலம் மதுவிலக்கால்வருமானம் குறைந்துவிட்டதாயும், நிலவரியையும் குறைத்து விட்டால் ஸர்க்கார் திண்டாடவேண்டிவருமென்றும் கனம் ரவின்யூ மந்திரி சொல்லிக்கொண்டு போகிறார். நிலவரிப்பளுவால் சீர்குலைந்து சிறக்கும் வியவஸாயிகளைப் பார்த்து இம்மாதிரி பேசுவது தர்மமா? இதுவரையில் நிலவரியைக் குறைக்கமுடியவில்லையென்பது ஏற்கனவே நிர்வாஹம் நடத்திய கக்ஷியார் சொல்லிய வாதங்களே! அவைகளையே காங்கிரஸ் மந்திரிகளும் திருப்பிக்கூறுகிறார்களேயல்லாது மிராசுதார்களுக்கு இவர்கள் பெரிய நன்மைசெய்துவிடப்போவதாக ஆடம்பரப் படுத்தியது வெறும் பேச்சென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. காங்கிரஸ் எலக்ஷன் அறிக்கையிலும் அநேக கூட்டங்களிலும் மிராசுதர்களுக்குப் பரிந்து பேசியும் நிலவரியைக் குறைப்பதாயும் வெளியிட்டது மறந்து விட்டதா?

நிலவரியைக் குறைக்கவேண்டுமென்றால் சேலம் மதுவிலக்கைப் பார்த்து திருப்தியடையுங்களென்று மந்திரிகள் கைகாட்டுவது நியாயமா? மதுவிலக்கை விட நிலவரிவஜா விஷயம் கீழ்ப்பட்டதா? பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டிகூட நமது மாகாண நிலவரி விஷயமாக தகுந்த சட்டமியற்ற அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறது. அம்மாதிரி ஒரு சட்டத்தை இயற்ற முந்திய சட்டஸபை தவறிவிட்டதை காங்கிரஸ்வாதிகளே கண்டித்து கூச்சல்போட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் பதவியேற்றதும் வேறு கக்ஷிபேசுகிறார்கள். சேலம் மதுவிலக்கைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் ஏழை மிராசுதார்களின் குடும்பங்கள் அடையும் கதியென்ன? பொதுவுடமை அபேதவாதம் முதலிய கொள்கைகளால், காங்கிரஸ்வாதிகள் மிராசுதார்கள் நன்மையில் இனி, சிரத்தை கொள்ளமாட்டார்களென்று நினைக்க, மந்திரிகள் பேச்சு இடமளிக்கிறது.

## விடுமுறை அறிவிப்பு.

அடுத்தவாரம் தீபாவளியை முன்னிட்டு நமது ஆபீஸுக்கு விடுமுறையாகையால் ஆர்யதர்மம் பத்திரிகை வெளிவராது. அடுத்த ஸஞ்சிகை 11—11—37ல் வெளிவரும்.

மானேஜர்

### ஸ்ரீமான் பாட்லிவாலா ஜாமீன் விடுதலை.

சென்னை மாகாணத்தில் பிரமலமாகியிருக்கும் பாட்லிவாலா வழக்கில் அவரை ஜாமீனில் விடுதலைசெய்யும்படி சென்னை ஹைகோர்ட் உத்திரவு செய்திருக்கிறது. அவர் இந்தமாகாணத்தில் தங்கவோ, பிரஸங்கம் செய்யவோ கூடாதென்று நிபந்தனைவிதிக்கப்பட்டிருக்கிறது.

### கேள்விகேழ்க அதிகாரமில்லை!

நாகப்பட்டிணத்தில் மந்திரி ஸ்ரீமான் கோபால ரெட்டியைச் சிலர் கேள்விகேட்டனர். இதற்கு மந்திரி கோபங்கொண்டு, காங்கிரஸ்காரர் மிகுந்த தியாகம்செய்து மந்திரியாக வந்திருப்பதாயும் தங்களைக் கேள்வி கேட்பவர்களும் அம்மாதிரி தேசத்திற்காக தியாகம்செய்து பாடுபட்டவர்கள்தான் கேட்கலாமென்றும் மற்றவர்கள் கேட்க அர்ஹதைகிடையாதென்றும் கூறினார். ஓட்டர்கள் கூட கேள்விகேட்கக் கூடாதோ? மந்திரிகள் தியாகிகளின் பிரதிநிதியா? வோட்டர்களின் பிரதிநிதியா?

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

போலவரம்

## வாரக்குறிப்புகள்.

(வே. ஸோ. சர்மா.)

ஆங்கிலமோஹம்! ராஷ்ட்ரபதி என கொண்டாடப்படும் ஜவஹர் தன் பெண்ணைப் படிக்க சீமைக்கனுப்பியதோடு ஆங்கில வைத்யமே மிகச்சிறந்ததெனக் கொண்டாடுகிறார். இத்தகையோர் ஸ்வதேசீயம் போதாதா!

ஆச்சரியப்படுகிறார்! காவீரபீடம் மடாதிபதிகளான ஸ்ரீசங்காராசார்யாள் ஸித்தியடைந்தார். குருவாயூருக்கும் விஜயம் செய்த மதாபிமானி இவாள். அவர் உடலைக் கொளுத்தவில்லை என நிருபர் ஆச்சரியப்படுகிறார். நமது மதாசாரம் என்னவென்றறியாத இத்தகையவரைக் கண்டு நாமச்சரியப்படுகிறோம்!

இன்ஷ்யூரன்ஸால் தீமை! பம்பாயில் ஒருவர் தன் பிள்ளை ஆயுளை இன்ஷ்யூர் செய்து சிலமாதஞ் சென்றபின் பிள்ளையைக் கொன்றார். பண ஆசையால் வருந்தீமை ஓர்பால், வீடு வண்டி முதலியவைகளைப்போல் இன்ஷ்யூர் செய்த மனிதனுமிறந்தால் பணம் ஸுலபமாககிடைக்குமென்ற பேராசை ஓர்பால்!

பஞ்சாயத்தைப் போற்றுகிறார்! ரெவினியூ மந்திரி பல இடங்களில் வரிவஸூலுக்காக செய்யும் செலவைக்குறைக்க பண்டைய பஞ்சாயத்திடம் வரி, வழக்கு, சுகாதாரம் முதலிய பல கார்யங்களை ஒப்படைக்கலாமென்கிறார். பண்டையதெல்லாம் சிறந்தன. சிக்கனமானவை! அறிவாரா?

துதிபாடலா? சென்னை நகாஸபை, ஸர். ஸி. பி. ஸசிவோத்தமருக்கு வரவேற்பளித்தது. இது ஓர் பெருந் துரப்யாஸம் நாளுக்கு நாள் பெருகுகிறது. அதர்மமாக ஆலயத்தைக் கெடுத்ததொருபாலிருக்க அநாவச்யமாக அடிக்கடி துதிபாடி இதற்கு அர்த்தமில்லாமல் செய்வது அருவருக்கத்தக்கது!

என்னகாரணம்? திருவாங்கூரில் உள்ளூரில் ஓர் புரட்சி இயக்கமும், மைசூரில் காங்ரஸ் சண்டையும் வலுத்து வருகிறது. இன்னுளில் மிக ஸாமர்த்தியமாய் நடந்து இவைகளை அடக்கவேண்டும்! இச்சண்டைக்கு யார் மூலகாரணம்?

### சென்னை:

ஸ்ரீ சங்கராசார்ய மடம்:- ஸ்ரீசாரத நவராத்ரியில் காலையில் ஸ்ரீ சக்ரத்திற்கு நவாரவண பூஜை, ஸ்ரீமதாசார்யாளுக்கு மஹன்யாஸபூர்வமாராதனை, யஜுர்வேத பாராயணம், தேவீ மஹாத்ம்ய தேவீபாகவத பாராயணம், மாலையில் ஸ்ரீதேவீபாகவத நவாஹ உபன்யாஸமும் நடைபெற்றது. பூர்த்தியான தினத்தில் ப்ராஹ்மண ஸமாராதனையும் உபன்யாஸகருக்கு ஸ்ரீமதாசார்ய ப்ரஸாத பூர்வமான ஸம்பாவனையும் நடைபெற்றது.

ஸ்ரீதேவீபாகவத நவாஹம்:- மைலாப்பூர் பக்த ஜனங்களது பிரார்த்தனையின்படி பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா அவர்கள் 9நாளில் ஸ்ரீதேவீபாகவத உபன்யாஸத்தைப் பூர்த்தி செய்தார். அன்று அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வாராஜ்யஸபைதலைவர் பிரும்மஸ்ரீ ஆர்பாதி நடேசய்யாவர்களும் ஸ்ரீசக்ரநகா விமர்சக்ரந்தகர்த்தாவான பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யரும் விஜயம் செய்தனர். பின்னவர் தேவீ விஷயமாக சிலவார்த்தைகள் சொன்னார். முடிவில் உபன்யாஸகருக்கு பக்தர்கள் பஹுஸம்மானம் செய்தனர்.

ந. நி.

## PUBLIC MEETING.

Under the auspices of the Tanjore District Brahmana Sabha, Kumbakonam, M. R. Ry. **S. Mahalinga Iyer, B.A., B.L.** Kumbakonam will deliver a lecture on **"Religion and Economics"** at 6-30 P. M. on Saturday 30—10—1937, in the New Hall of the Gopala Rao Library Kumbakonam. All are requested to attend.

*S. Swaminatha Sastry, Secretary.*

## ஸ்ரீ அஹோபிலமடம்.

### ஒரு பிரார்த்தனை.

ஸ்ரீ அஹோபில மடத்தின் முக்ய சிஷ்யன் என்ற முறையில் நான் சில ஆலோசனைகள் கூறுகிறேன். 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை திருவரங்கத்திலும், திருமலையிலும் அர்ச்சா ரூபமாக திருப்ரதிஷ்டை செய்த விஷயமாக சென்னையிலிருந்து வெளியான துண்டுப் பிரசுரத்தை தென்னிந்தியாவில் உள்ள சிஷ்டர்களனைவரும் படித்திருப்பார்கள். ஏற்கனவே "சுதேச மித்திரன்" முதலிய பத்திரிகைகளில் மடம் விஷயமாக பல கட்டுரைகள் வெளிவந்ததன் மூலம் சிஷ்யர்கள் வருந்தி நிற்கையில் இந்த துண்டு பிரசுரமும் வெளிவர ஆஸ்பதம் ஏற்பட்டது வருந்தக்கூடியதே. இந்த பிரசுரத்தில் கண்ட விஷயங்கள் சிலவற்றை சிலர் ஏற்கத்தயங்கினாலும் அதிலுள்ள பெரும்பாலான ஆலோசனைகளை சிஷ்யர்கள் ஏற்கவேண்டியதே. திவ்யமங்கள விக்ரஹம் பிரதிஷ்டா ஸம்பந்தமான விவாதம் நிற்க, மடத்தின் பொதுவான உத்தேசத்திலும், அபிவிருத்தியிலும் சிஷ்யர்கள் கவனம் செலுத்தவேண்டிய தவச்யம். தென்னிந்தியாவில் சிறிது காலத்திற்கு முன் உயர்ந்த நிலையில் பிரகாசித்து வந்த இந்த மடமானது தற்பொழுது குடத்தில் ஏற்றிய விளக்குபோல் இருப்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள் இதற்கு காரணம் பல உண்டு. மடத்தின் முக்யோத்தேசமான ஸம்பிரதாய பிரவசன கார்யம் சிலகாலமாக மலினமடைந்திருக்கிறது. ஆசார்யர்கள் அருளிச்செய்த ஸ்ரீ கோசங்களின் பிரவசனமும், பிரகடனமும் செய்யப்படவேண்டியிருந்தும் இந்த விஷயம் கவனிக்கப்படவில்லை. அநேகவிடங்களில் நடந்து வந்த பாடசாலைகள் நின்றுபோய்விட்டன. அநேக இடங்களில் மடம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்படவில்லை. இம்மாதிரி அநேக கார்யங்கள் கவனிக்கப்படாததால் எங்கும் சிஷ்யர்கள் கவலைப்பட நேர்ந்திருக்கிறது.

இவைகளைவிட முக்யமான விஷயம் ஒன்று இருக்கிறது. 12 வருஷங்களாக மடம் ஸஞ்சாரமில்லாமல் ஸ்ரீரங்கத்திலேயே தங்கி இருப்பதால் சிஷ்யர்களுக்கு அஸௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் மடத்தின் முக்யமான கார்யங்களெல்லாம் ஸ்தம்பித்துவிட்டன. அங்காங்கு நாற்றுக் கணக்கான சிஷ்யர்களுக்கு ஸமாச்ரயணபரந்யாஸாதிகளும், க்ரந்த காலக்ஷேபாதிகளும் செய்துகொள்ள ஆவலையிருந்தும் அது நிறைவேற வழியில்லை. எல்லோரும் ஸ்ரீரங்கத்திற்கு வருவது எப்படி ஸாத்யம்? இதனால் சிஷ்யர்கள் வேறு வழியில் இறங்க இடம் ஏற்படக்கூடியதாயிருக்கிறது. ஆகையால் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸஞ்சாரத்தில் எழுந்தருளி சிஷ்யர்களை அனுக்ரஹிக்க வேண்டியதவச்யமாகிறது. ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் திருமேனி அசக்தாக எழுந்தருளியிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இருந்தாலும் சிரமத்தை ஸஹித்துக்கொண்டாவது இதை திருவுள்ளம் பற்றவேண்டும். ஸர்வதா அப்படி முடியாவிட்டால் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கரைகொண்டு ஏன் இதை நடத்தக் கூடாது? ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் நியமனப்படியும் சிஷ்யர்களுடைய அபிஸந்திப்படியும் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் 42-வது பட்டத்தில் அபிஷிக்தராக எழுந்தருளியிருக்கிறார். ஸம்பிரதாய பிரவசனாதிகளில் ஸ்வாமிக்குள்ள நைபுண்யத்தையும் ஸந்தேஹிக்க இடமுமில்லையே! பெரிய அழகிய சிங்கருடைய பரமகிருபைக்கு பாத்திரமாகி எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கரை ஸஞ்சாரத்திற்கு எழுந்தருளச் செய்து ஸம்பிரதாயப் பிரவசனம் நடத்த ஏற்பாடு செய்தால் தற்பொழுது ஏற்பட்டுள்ள விவாதங்கள் யாவற்றும் சாந்தியடைந்து எல்லாம் சுபோதர்க்கமாக முடியும். ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் இதை திருவுள்ளம் பற்றும்படி சிஷ்யர்கள் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தி பிரார்த்திப்பது உசிதமாக இருக்கும். சிஷ்யர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கரை ஸஞ்சாரத்திற்கு எழுந்தருளச் செய்வதில் விசேஷ அபிலாஷை இருப்பதை நான் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஸ்ரீ பெரிய அழகிய சிங்கருடைய திருமேனி அசக்தியை முன்னிட்டே இந்த யோஜனை. எப்படியும் இனிமேலும் சஞ்சாரத்தை திருவுள்ளம் பற்றாமலிருந்தால் ஸம்பிரதாயம் மலினமடையவும், சிஷ்யர்களுள் மடம்விஷயமாக கக்ஷிப்ரதிகக்ஷிகளும் வளரவும் இடம் அதிகரிக்கும்.

ஒருசிஷ்யன்.

### சம்பளவெட்டுக்கு எதிர்ப்பு.

சென்னை மந்திரிகள், ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க யோஜனை செய்துவருவதை ஆக்ஷேபிப்பதற்காக நடுத்தர உத்யோகஸ்தர்களின் கூட்டமொன்று நடந்தது. மந்திரிகளின் கொள்கையைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**Srimad Bhagavatham.**

Condensed from the original, translated into English with Sanskrit Slokas and illustrated.

Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound Price Re. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்.

சுலோகங்களை சுருக்கி வாக்கியார்த்தங்களை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர். ரூ. 1—8—0

7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா.

கிடைக்குமிடம் :—

1. G. Subramania & Co., Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
2. Arya Dharmam Office, Kumbakonam.

குழந்தை
குடல்சால் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T. R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை



## SEPARATION OF JUDICIAL AND EXECUTIVE FUNCTIONS.

*(S. Mahalinga Iyer, Kumbakonam.)*

For justifyng his opposition to the separation of Judicial from Executive functions, the Madras Premier says, that the State is not the enemy of the individual. At any rate, he suggests, it should be taken to be so during the Congress regime. This is a rather strange argument. One may as well say that there need not be any courts, because every man is not an enemy of his neighbour. Statements like this are neither wholly true nor wholly false. As courts are necessary to adjudicate when clashes of rights occur between individuals, so they are equally necessary when occasions arise for doing justice as between the individual citizens and the officials of the State. It can hardly be the Premier's meaning that every official of the State is the State itself. All officials are not angels. If an official does a wrong under a mistake, or prompted by overzeal, or any good or bad motive, the citizen can be protected from such acts only by an independent judiciary. The citizen should be able to feel that the judge can render justice even against the State's agents, without being influenced by the possible favours or frowns of the executive.

A Minister is reported to have said at Tanjore that in modern democracies, the executive represents the country, and if people feel that the executive are interfering with the judiciary, they may turn them out at the next elections. When the grievance is that the Deputy Tahsildar Magistrate or the Sub-Divisional Magistrate may be biassed in favour of the prosecutor, as they happen to be subordinates of the Collector and District Magistrate, it is absurd to suggest that the people may have their remedy by changing the Government at the next elections. The Premier contends, that if the policies of Government are to be carried out, the magistracy should be intimate with the police and both must work with correlated purpose. This is a rather bald suggestion that the magistracy should attune themselves to the policies of the executive. Hence, if an overzealous Police Officer in the Salem District acts high-handedly or mistakenly in carrying out his duties with reference to the ministry's policy of prohibition, the magistrate is so to act as to further the general executive policy. He is not to try a case to find out the facts and apply the law in a purely judicial spirit. One need hardly dwell upon the injustices and oppression to which this may lead. The Congress ministry's view-point seems to be that as they are in their place by the votes of the majority, their actions must be correct, and their decisions on every matter must be accepted by the people. Success at the elections, even by an overwhelming majority, cannot enable the executive official to become a law unto himself. If the executive fully represents the country as the Minister contends, then the Legislature itself may be dissolved after the formation of the Cabinet of Ministers, so that the latter may rule the country in such manner as they may deem fit till the next elections. It is regrettable that the Premier misses the real point at issue. His plea that an independent judge will constitute an *Imperium-Et-Imperio* is misleading. Does he contest the principle that the law which the citizens are expected to obey should be equally obeyed by the State's servants? Even for carrying out the proper work of the State, no official can ignore or infringe the law, even though the law is made by the State's legislature. The Madras Premier's dictum appears to be that all officials during the Congress regime must be presumed to act justly, and according to law, and there is therefore no need for an independent judiciary to ensure that justice is done between the citizens and the agents of the State. The Congressmen appear to think that discipline and loyalty to their leader require their silence, and there is no effective Opposition Party functioning. It is no surprise that novel doctrines are so dogmatically profounded by a ministry who are quite fully alive to the power of their majority.

## Correspondence relating to Madras Parishad.

### Pandits with "Progressive Views" only are to be admitted.

M. R. Ry, Rao Sahib N. Natesa Aiyar avl., wrote on 16—9—1937 to Pandit Kumara Thathachariar, General Secretary of Madras Pandits Parishad, 23, T. P. Koil Street, Triplicane, desiring to have information upon certain points and Mr. Kumara Thathachariar sent his replies by his letter dated 6th October, 1937.

The questions put by Mr. N. Natesa Aiyar and answers are given below:—

*Question 1:-* What qualifications, if any, have been fixed for admission to the Parishad?

*Answer.* Pandits with a knowledge of the Dharma Shastras and Agama Shastras and with progressive views (i. e. who believe in the adaptability of Hinduism to the changing conditions and spirit of the times).

*Question 2:-* Are the points in controversy to be decided by votes, or by the Vakyartha method or by a tribunal acting judicially so to say?

*Answer.* The President acting in consultation with three Pandits to be appointed by the Committee will invite discussion and ascertain the opinions of the invited pandits and issue a report.

*Question 3:-* Will there be admission for the Pandits whom the so-called Sanatanists may suggest and if so will the number be equal on both sides?

*Answer.* Only those Pandits who are invited by the Committee will be allowed to participate in the Conference. The Pandits to be invited will be selected by the Committee with reference to their qualifications and the funds at the disposal of the Committee. The Committee cannot guarantee any representation to Pandits of any particular school.

*Question 4:-* Is maintenance of order the only function of the President? If not what are his other functions?

*Answer.* The conduct of the proceedings will be in the hands of the President who will have full power to regulate the course of the discussion.

*Question 5:-* What are the authorities which the Parished will accept as Pramanas and will be rejected?

*Answer.* The authorities are those accepted in the Shastras.

*Question 6:-* Have any rules or by-laws been framed for the conduct of the proceedings? If so, may I have a copy?

*Answer.* No.

*Question 7:-* Will the conclusions reached by the Benares Parishad be accepted as authoritative or relevant?

*Answer.* The Conference cannot be bound by the conclusions of other Parishads. We believe the opinions expressed by the Pandits in the Conference will command such acceptance as they may be entitled to on their merits. The object of the Conference is not to lay down anything binding upon all people, but only to elicit the opinions of the Pandits learned in the Shastras and to educate public opinion.

*Question 8:-* If there to be judges or Madhyasthas in addition to the President, what is their number. On what principle will they be selected? Is there room in that body for our nominees?

*Answer.* Already answered under question 2.

*Question 9:-* I am writing to nearly 2 dozen Pandits in other Presidencies as well. If they agree to attend will they and our other nominees be paid travelling allowances and other expenses out of the Parishad funds?

*Answer.* Travelling allowances will be paid only to Pandits who are invited by the Committee and will depend upon the funds at their disposal.

M. R. Ry, Rao Sahib N. Natesa Aiyar avl., finding that the so-called Pandits Parishad was in reality only a propaganda meeting for furthering the reformist aim has sent reply to Pandit Kumara Thathachariar on 10—10—37 as follows:

Sir,

I thank you for your very kind letter of 8—10—1937. It is however extremely disappointing. The answers assume as settled the very matters which have to be discussed and considered and decided. We are fully alive to the fact that you are masters in your house and we have no right to make any suggestions in respect of the principles that we ought to act upon or the procedure that has to be adopted if the proceedings of the Parishad are to serve any useful purpose and we refrain therefore from doing so. But we cannot help observing that anything done in the name of the Parishad under the conditions, limitations and restrictions set out in your letter under reference cannot be considered or passed off as the verdict of the country and that it is our duty to inform the public before-hand of the nature of the proceeding and advice them to take such steps as may be necessary to expose their wholly one sided character. To that end it has become necessary to release for publication the correspondence which has passed between me. I propose to do so.

(Sd) N. Natesa Aiyar.

## Democracy and Girls' Education

Recommending that all girls' education should be separated from the general educational Department and constituted into a more or less self contained administration, with women Teachers, Women Inspectors and a Council of women, Mr. C. R. Reddy says "From what I have seen of the way in which Democracy has been, functioning in relation to the girls' schools (e. g.) Municipalities, Taluk Boards, and District Boards, *I would rather close the Schools than continue them in their present deplorable atmosphere. The position of women Teachers under our Board is the most awful that it had been my misortune to contemplate.* A centralised bereaucratic administration with Advisory councils of women would be the best fitted for the Board schools and teachers.

*Mail 24—10—37.*

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B. A., B.L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.
(ஒரே தடவையில் 2 புஸ்தகங்களுக்குமேல் வாங்குபவர்களுக்கு போஸ்டேஜ் இனாம்.)

## 'ஹரீதகி' அல்லது கடுக்காய்.

(T. V. ஜெயராம சாஸ்திரி.)

திராவிட தேசத்தில் மருத்துவப்புலவர்கனால் "திரிபலை" என்று வழங்கப்பட்டு வரும் "கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்" ஆக இம்மூன்று பலங்களினுடைய சமூகத்தில் ஒன்று கடுக்காய் எனப்படும். இதுவே வைத்தியர்களுக்கு மிகவும் பிரியமான சரக்குகளில் ஒன்ருகும். இதற்கு ஸம்ஸ்கிருதத்தில் "ஹரீதகீ" என்று பெயர்.

பிணிகளை ஹரிக்கும் வல்லமையுடைய வைத்தியர்களிடம் 'இருப்பதாலேயும், இயற்கையில் ஹரீத வர்ணம் (மஞ்சள் – பழுப்பு) உடைத்தாயிருப்பதாலேயும், ஸர்வ ரோகத்தையும் ஹரிப்பதாலேயும் (நாசம் செய்வது) இதற்கு ஹரீதகி என்று மகருஷிகள் நாமமிட்டுள்ளார்கள்,

தேவாஸுர யுத்தத்தில், அவர்கள் அமிருதத்துக்கு சண்டை யிடுகையில் ஸாக்ஷாத் மகா விஷ்ணுவினுடைய கையிலிருந்த அமிர்த கலசத்திலிருந்து ஏழு பிந்துக்கள் கீழே சிதறி விட்டதாம். அவைகள் ஏழுவிதமான கடுக்காய்களாக பூலோகத்தில் உண்டாயின என்று சாஸ்திரத்தில் காணப்படுகிறது.

கடுக்காயில் 7 ரகங்கள் நாம் இப்பவும் பார்க்கலாம். ஒரே இடத்தில் 7 ரகங்களும் கிடைக்கா விட்டாலும் இந்தியாவின் பல்வேறு இடங்களில் இவைகள் விசேஷமாய் கிடைக்கின்றன.

அபயா, சேதகீ, பத்யா, பூதனு, ஹரீதகி ஜயா, ஹைமவதீ என அவைகளின் பெயர். இவைகளுக்கு சிவா என்றும் புரியாய பெயர் உண்டு.

அபயா என்னும் கடுக்காவானது 3 அங்குலம் நீளம் உண்டு என்றும், சேதகீ என்பது 10 அங்குல நீளமுள்ளது. என்றும், ஒரு ரேகையுடன் கூடியது என்றும் இது கிடைப்பது மிக்க அரிதென்றும், இலே பஸ்தி வியாதியை அகற்றும் என்றும் பாவமிச்ருடைய மதம். ஆனல் ஆத்ரேயருடைய கொள்கை வேறு. அதாவது சேதகீ இரு வகைப்படும் என்றும், ஒன்று கிருஷ்ண வர்ணம் 6 அங்குல நீளமுள்ளது என்றும், மற்ருென்று சுக்ல வர்ணம் ஒரு அங்குல நீளம் உண்டு என்றும் கூறுகிருர் ஆத்ரேயர். கறுப்பு வர்ணமே சிலாக்யமானது. சேதகீ என்னும் கடுக்கா மரத்தின் நிழலில் நிற்கும் நாற்கால் ஜீவராசிகளே மலம் கழிய ஆரம்பிக்கு மென்ருல் மனிதர்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? ஆகவே சேதகீ என்னும் கடுக்காயானது எவ்வளவு நேரம் கையில் இருக்கிறதோ அவ்வளவு நேரம் வரையில் ஒருவனுக்கு விரேசனம் ஏற்படும். இந்த ரகக்கடுக்காய் திருச்சூர் பக்கத்தில் கிடைப்பதாக கேள்வி.

மூன்ருவது விதம் "பத்யா" என்னும் கடுக்காய் இது மகத தேசத்தில் விசேஷமாய் விளைகிறது. 4 அங்குல நீள முடைத்தது நான்கு ரேகையுள்ளது. வாஜீகரண குணம் காய கல்பம் குணம் உடையது. கிழத்தனம் சருமத்தின் சுருக்கம், தலை மயிர் நரை இவைகள் நீங்கும். மிகவும் உபயோகமானது. மூத்திரப்பையிலுள்ள சகல கோளாறுகளையும் போக்கும்.

பூதனு என்பது 4 வதுவிதக்கடுக்காய். இதுவும்சற்றேறக்குறைய6 அங்குலமுள்ளது. இது ஸிம்ஹளத்வீபத்தில் விளைகிறது. 7 பட்டை உள்ளது. ஆயுஸ் விருத்தியடைகிறது இதை ஸேவிப்பதால் இதில் தோல் மெல்லிதாயிருக்கும், அதில் சதைப்பத்து அதாவது மஜ்ஜா அதிக மிராது. கொட்டைதான் பெரிதாயிருக்கும். இதற்கு பூதனு என்று பெயர்.

ஹரீதகி என்பது பொதுவில் எல்லாவித கடுக்காயிக்கும் பெயராக வழங்கிய போதிலும், பொதுவில் எல்லா [illegible] காட்டில் விளையும் கடுக்காய்க்கு பேர். இதுதான்விசேஷமாய் கடைகளில் காண்கிரேம். இது 8 விதமான உதர வியாதிகளையும் நீக்கும். நீர் தாரை அடைப்பு, மேஹம், த்ருதோஷ [illegible] இவைகளை நன்ருய் நீக்கும். மலத்தைஇளக்கும். வெள்ளபம் [illegible] விரேசனம் செய்விக்கும்.

ஜயா என்பது 6வது விதக்கடுக்காய். இது விசேஷமாய் ஸிந்துநிக்கரையில் உள்ள காடுகளில் விளைகிறது. குல்மம், ப்லீஹம் (Enlargement of the spleen) இவைகளைக்கண்டிக்கும். பேதியில் ரத்தம் கலந்து போவதை நிறுத்தும். பித்த சமனம் செய்யும். பசியை விருத்தி செய்யும்–கபத்தை குறைக்கும்.

7 வது வித கடுக்காய்க்கு ஹைமவதீ என்று நாமதேயம், இது சிறிதாயிருக்கும். குழந்தைகளின் நோய்களை இது நன்ருய்க்கேட்கும். நேத்ரரோகத்தையும் போக்கடிக்கும்.

ஆகவே கடுக்காயில் 7 வித முண்டு என்று ஏற்படுகிறது. இன்னும் இதர பேர்களாலும் இவைகள் வழங்கப்படுவதுண்டு. அமிருதா, ரோஹிணி, வயஸ்தா, ப்ராணதா, நந்தினீ, விஜயா, ஜீவப்ரியா என்பனவும் கடுக்காயின் இதர நாமங்களாம்.

ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி, பாமஏழைகள் கூட சுகம் பெற வேண்டுமானல் அதை இந்த கடுக்கா ஒன்றேஅளிக்கக்கூடும் கடுக்காவின் குணங்கள் அளவிலாதது. இதில் உவர்ப்பு, புளிப்பு, திதிப்பு, காரம், கசப்பு ஆகிய ஐந்து ரஸங்கள் அடங்கி இருக்கின்றன. ஆயினும் இக்த ரஸமும், துவர்ப்புமே பிரதான ரஸங்களாக தோன்றுகின்றன. மற்றவை அனுரஸங்களாம். கடுக்காயில் லவண ரஸம் கிடையாது. இதில் அடங்கியிருக்கும் புளிப்பு ரஸத்தால் வாயுவை ஜயிக்கிறது. மதுரரஸம், திக்த ரஸங்களால் பித்தத்தை சமநிலைக்கு கொண் வருகிறது. கஷாய ரௌக்ஷ்யத்தால் கபத்தை நாசம் செய்கிறது. ஆக மூன்று விதமான வாத பித்த கபங்களை சமநிலமையில் கொண்டு வந்து வைக்கிறது. ஆகவே கடுக்காய் த்ருதோஷசமனீ, ரஸாயனீ யாகும். மலத்தை பிளந்து வெளிப்படுத்தும். சரீரத்தை லகுவாக்கும். புத்தியைக்கூர்மை யாக்கும், கண் பார்வை அதிகரிக்கச்செய்யும். குஷ்டம், வர்ணம், வாந்தி, வீக்கம், மூடக்கு கீல் வாயு இவைகள் கடுக்காயை ஸேவிப்பதால் நீங்கும். ஸகல இந்திரியங்களுக்கும் புஷ்டியையும் லாகவத்தையும் கர்ம ஸாமர்த்தியத்தையும் அளிக்கும்.

ஆனல் த்ருஷ்ணை என்னும் அதிகதாவட்சியினல் பீடிக்கப்பட்டு வரும், ஹனுஸ்தம்ப நோயாளிகளும், நவஜ்வரிகளும், கர்ப்பிணிகளும் கடுக்காயை ஸேவிக்கக்கூடா தென்பது கவனிக்கத்தக்கது.

நல்ல கடுக்காயின் லக்ஷணம் தண்ணீரில் போட்டால் மூழ்கி விட வேண்டும் என்று சாஸ்திர வாயிலாக அறிகிரேம். சேதகி என்னும் விசேஷ பிரபாவத்துடன் கூடிய கடுக்காய் ஹிமயமலையில் கிடைக்கிறதென்று பிரசித்தம்.

கடுக்காவை தெய்வத்துக்கு ஒப்பிடலாம், தாயாருக்கு ஒப்பிடலாம். தாய் போஷிப்பது போல் மனிதர்களுக்கு பிணிகளை நீக்கி சுகத்தை யளிக்கும் சக்தி யுடையது கடுக்காயே

விசேஷமாய் காய கல்பத்தில் தான் கடுக்கா எடுக்கப்பட்டிருக்கின்றது. 100 வயதானலும், சரீர பலம் இந்திரிய பலம் குன்ருமல் இருக்க வேண்டுமானல், அக்நி பலம் அழியாமலிருக்க வேண்டுமானல், சரீர வர்ணம், தேஜஸ், வசீகரணத்துடன் [illegible]னல், விருத்தாப்ய [illegible] விழ்த்த வேண்டுமானல் [illegible]மாய் விஜயா(கடுக்கா) ரஸாயனத்தை சாப்பிட வேண்டும்.

கடுக்காயில் சிறந்த ரஸாயனம் த்ரிபலாவே. கடுக்கா 1 பங்கு, தான்றிக்காய் 2 பங்கு, நெல்லி வத்தல் 4 பங்கு இவைகளைச்சேர்த்து இடித்து வஸ்திர காலிதம் செய்தசூர்ணத்திற்கு த்ரிபலா சூர்ணம் எனப்பெயர். இதையே சாஸ்திரத்தில் கூறிய முறைப்படி லேஹியம் செய்து, வமன, விரேசனத்தால் சரீர சுத்தி செய்துகொண்டு, இந்தத்ரிபலாலேஹியத்தை காலை மாலை சாப்பிட்டுவர சரீரத்தில் பிணிகள் அணுகாது. காயகல்பமாகும். அநேக கெட்ட நோய் விலகி நிற்கும். இதுவே காயசித்திக்கு வழியாகும். கடுக்காவின் பெருமை சொல்லி இயலாது. சரகாசாரியார் கூறிய கடுக்கா மஹிமையை இங்கு ஞாபகத்து கொண்டு வருவது நலம்.

### 'தஞ்சைப் போக்கிரி' என்ற பெயர் மாற்றப்பட்டிருக்கிறது.

பிரபல நடிகர்களைக்கொண்டு, பெங்களூர், ராய்னிக்லால், மோஹனலால் அண்டு கம்பெனியார், சமீபத்தில் 'தஞ்சைப் போக்கிரி' என்ற பெயருடன் பிடித்திருந்த தமிழ் படத்தைக் குறித்து, தஞ்சை வாஸிகள் பல கண்டனக் கூட்டங்கள் நடத்தி மகஜர்கள் அனுப்பி கிளர்ச்சி செய்ததின் பேரில், கவர்மெண்டார் அப்படத்தைக் காட்டக்கூடாதெனத் தடுத்திருந்தனர். ஆகையால் வேறு வழியின்றி படமுதலாளிகள் அதன் பெயரை மாற்றி "பக்காப் போக்கிரி" என்ற பெயருடன் தயாரிக்கசெய்யப் போவதாய் தெரிகிறது. இனிமேலாயினும் குறிப்பிட்ட வகுப்பினரைக் குறித்தும, ஸ்தல ஜனங்களை அவமதித்தும், எடுக்கப்படும் படங்களை, கவர்மெண்டார் தடுப்பார்களா? கவனிப்போம்.

ந. கி.

### திருப்புல்லாணி.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகஸ்வாமிகள் 16—10—36 சனிக்கிழமை திருப்புல்லாணி ஆதிசேதுவுக்கு எழுந்தருளி சனி, ஞாயிறு, திங்கள் மூன்று தினங்களும் ஸேதுஸ்நானம் கண்டருளி அன்று ஸாயந்திரம் சிஷ்யகோடிகளுடன் திருப்புல்லாணிக்கு எழுந்தருளியாகியிருக்கிறது. மதுரை பிரபல வக்கீல் ஸ்ரீ உ-ப-வே T. C. ஸ்ரீநிவாஸவயங்கார் ஸ்வாமியின் முயற்சியில் ஸகல பிருதுகளுடன் ஸ்ரீமதாண்டவன் வரவேற்கப்பெற்று ஸ்ரீ ஜகன்னதன் ஸன்னதிக்கு எழுந்தருளி அரிதிபரிவட்டம் ஸாதித்து ஸகல மரியாதைகளும் ஸமர்பித்து மங்களாசாஸனம் ஆகி ஆச்ரமத்துக்கு யெழுந்தருளியாச்சுது. திருப்புல்லாணியில் ஸ்ரீமதாண்டவன் இன்னம் 4 தினங்கள் எழுந்தருளியிருப்பதாக இருக்கும்.

எஸ். ரகுநாதய்யங்கார்.

### ஆடு, கோழிகள் சிரஞ்சீவிகளாக இருக்குமா?

பங்களூர் முதலிய விடங்களில் கோவிலில் பிராணிபலி தடுக்கப்பட்டனவாம். இதற்காக பலமான பிரசாரம் நடந்ததாம். 60 ஆடுகளும், 30 கோழிகளும் பலியிடப்படாமல் மீட்கப்பட்டதாக ஸந்தோஷம் தெரிவிக்கப்படுகிறது. இதில் யாவரும் ஸந்தோஷப்பட வேண்டியதே! ஆனல் இந்த ஆடுகளும் கோழிகளும் சிரஞ்ஜீவிகளாக வைக்கப்படுமா? பலிநிறுததப் பிரசாரகர்கள் உள்பட ஜீவகாருண்யவாதிகளின் வயிற்றுக்குள்ளோ,வேறு மாம்ஸருசியுள்ளவர்களின் வயிற்றுக்குள்ளோ இந்த பிராணிகள் ஆகாரமாகப் போகாமல் பாதுகாக்கப்படுமா? அர்த்தமற்ற ஆடம்பரம் எதற்காக?



## வெளியூர்ச்செய்திகள்.

### திருவிடமருதூர்.

வெளிச்சம் வேண்டும்.

திருவிடமருதூர் டவுனுக்கு ஐயினு படித்துறை என்கிற சுடுகாடு ஒன்று தான். ஆனல் ஷை சுடுகாட்டுக்கு செல்லும் பாதை சரியானதல்ல. பொது ஜனங்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய பாதை. தோப்புகளாய் இருக்கிறது. ஷை சுடுகாட்டுக்கு போகும் வழியில் யூனியன் வெளிச்சமும் கிடையாது. பொது ஜனங்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிருர்கள். ஷை யூர் 2 NO ரோட்டில் இருக்கும் ஆஞ்ஜநேயர் கோவிலுக்கு தெற்கு சந்தில் வேலிகாவில் பூவரசமரங்கள் அடர்த்தியாயிருக்கின்றன. வெளிச்சமும் கிடையாது. சென்ற மூன்றுவருஷங்களுக்கு முன் ஷை ரோட்டு விஷயமாக ஸ்பெஷல் ஆபீஸர் அவர்களுக்கு ஒரு மனு எழுதி இருந்தேன். அதன் மேல் அங்கு லைட்போடப்பட்டது. இப்போது ஏதோசில காரணத்தால் எடுத்து விட்டது ரொம்ப அசௌகரியமாயிருக்கிறது. ஆகையால் யூனியன் போர்டார் கவனிக்கக்கோருகிறேன்.

வெங்கடஸாமி நாயுடு.

### மேல்மங்கலம்.

ஆஸ்திக மஹா ஜன சபை.

ஈஸ்வர ஹு ஐப்பசிமீ 5, 6, 7, உகளில் மாலை 4மணி முதல் 6½மணி வரை ஸபை நடை பெற்றது. ஸபை அக்ராஸனர் பிரம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யர் அக்ராசனம் வகித்தார்கள், கிராமஜனங்கள் ஏராளமா விஜயம் செய்திருந்தனர்.

ஐப்பசிமீ 5ம்உ அக்ராசனதிபதி அவர்களால் ஸனதன தர்ம சேவை என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தப்பட்டு, மதுரை ஜில்லா ஸபைக்கு இச்சபையிலிருந்து பிரம்மஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் சிவருமகணபதி கனபாடிகள் M. S. ஹரிஹரமய்யர் இம்மூவரும் அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்விஷயத்தை வர்ணுச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ N. நடேசய்யாவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது. 6, 7, உகளில் வீரபாண்டிய ஸதாசிவப்ரமம் அவர்கள் முறையே, பாரத தேசிய தற்போதிய நிலை அதன்பரிஹாரம், ஸனதன தர்மம்,சிகை அவசியம், ஸ்திரீ ஸ்வாதந்ர்யம், விவாஹம் முதலிய விஷயங்கள் பற்றி இரண்டு தினங்களிலும் ரஸமாகவும், கேட்போர் பிரமிக்கச்செய்யும்படியும் பிரகடனம் செய்தார்கள்.

ஸபை காரியதரிசியால் அக்ராஸசனர் உபன்யாசகர்களுக்கு வந்தனேபசாரம் கூறப்பட்டு வேதாசீர்வாத தாம்பூலம்வழங்கப்பட்டு சபை 7ம்உ மாலை 6.30மணியுடன் இனிது முடிந்தது.

கிராம ஜனங்கள் இந்த தினங்களில் சிரத்தையுடன் சிரவணத்தில் ஈடுபட்டது போற்றத்தக்கது.

சிவருமகணபதி கனபாடிகள் காரியதரிசி.

### சென்னை.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர் மஹோற்சவக் கோண்டாட்டம்.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் அடியிற் கண்ட விபரப்படி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர் மஹோற்சவக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடந்தது. இருகலையாரும் கொண்டாட்டத்தில் கலந்து இன்புற்றனர். ஆரும்நாள் தொடங்கி சாற்றுமுறை தினம்வரை பிரதிதினம் ஆரம்பத்தில் பத்தும் முடிவில் பத்தும் இருபது பாசுரங்கள் 'தேசிக நூற்றந்தாதி'யிலிருந்து பாடப்பட்டன. இப்பிரபந்தம் தனியாக அச்சிடப்பட்டு பதினுன்கு பக்கங்கள் அடங்கியது ஒரு அணு விலைக்கு சங்கக்காரியாலயமான 42. ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணியில் கிடைக்கும். வேண்டுமவர் பெற்றுக்கொள்ளலாம். உபன்யாஸங்களில் ஆரம்பதினமன்று மாத்திரம் தவன உத்ஸவ பங்களாவிலும் ஏனையவெல்லாம் சங்கக் காரியாலயத்திலேயே நடந்தன. இம்மாதிரி ஐப்பசி மூலம் முதல் பத்துநாள் ஸ்ரீ மணவாள மாமுனிகள் மஹோர்சவமும் நடைபெறும்.

14—10—37 வியாழன். உபன்யாஸகர் ஸ்ரீஉபவே நாச்சியார்கோவில் நடாதூர் கிருஷ்ணமாசார்யஸ்வாமி, ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹன் ப்ரபாவம். 15உ வெள்ளி ஸ்ரீ உபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாச்சாரியார் 'ஸ்ரீ மத் ரஹஸ்யத்ரயஸாரம்.' 16உ சனி ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி. 'ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரமும் யாதவாப்யுதமும்; ஒன்று ஆழ்வாரையும் மற்ருென்று கண்ணனையும் பிரதிபாதிக்கிறதென்றும், ஒன்றுக்கு விஷயம் கண்ணன் மற்ருென்றுக்கு விஷயம் அவன் சுழலினைஎன்றும் கோவர்த்தனத்தக்கு இட்ட பூஜையின் உட்கருத்தையும் நன்கு விளக்கினர். 17உ ஞாயிறு ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார், 'தேசிகரும் கம்பரும்' தேசிக ப்ரபந்தத்துக்கும் கம்பராமாயணம், சடகோபாந்தாதி முதலியவற்றிற்குள்ள ஒற்றுமை நயங்கள் தக்க சான்றுகளுடன் நன்கு விளக்கப்பட்டன. 18உ திங்கள். ஸ்ரீ உபவே ஆர். கேசவய்யங்கார், 'பரமத பங்கம்'. 19உ செவ்வாய் ஸ்ரீ உபவே ஆவியூர் ஸ்ரீநிவாஸாசாரியார், 'அபயப்ரதான ஸாரம்.' 20உ புதன். ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி 'பரமபத ஸோபானம்' பாமபத பங்கம் செய்து இடைச்சுவரை இடித்து இச்சோபானம் கட்டப்பட்டதென்றும் ஸ்ரீ பாஷ்யம் போல இது அகார, உகார, மகாரங்களை ஆதி மத்தியாந்தங்களில் உடையதென்றும் கூறி, ஜீவோற்பத்தி, ஸ்திதி, அர்ச்சிராதி மார்க்கம் இவற்றை அங்குள்ள ஒன்பது பத்திகளில் அமைத்திருப்பதையும் நன்கு விளக்கினர். 21உ வியாழன். பகவத் விஷயம் ஸ்ரீஉபவே கினர் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி 'தேசிகரும் ஆழ்வாரும்' திருத்தண்காவைப்பற்றி நம்மாழ்வார் திருவிருத்தத்திலும், திருமங்கைமன்னன் திருநெடுந்தாண்டகத்திலும் கூறியிருப்பதில் தேசிகாவதாரத்தை அவை சூசிப்பிக்கின்றன வென்றும், செய்த தமிழ்மாலைகள் நாம்தெளிய வோதித்தெளியாத மறைநிலங்கள் தெளிகின்ருேமே என்று ஒரு தென்னுசாரியரும் சொல்லவில்லையென்றும், ஸ்ரீ பாஷ்யாதிகளுக்கு தேசிகனே இருகலையாருக்கும் ஆசார்யனென்றும், கலாபேதத்தை விருத்திபண்ணுமல் அந்நியோன்னியமாயிருந்து ஆசார்யாபிமானத்தை பெறுவதே தக்கதென்றும் மிக அழுத்தமாகக் கூறினர், 22உ வெள்ளி ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாச்சாரியார் 'அடைகலப் பத்து' இவ்வுபன்யாஸம் வெகு அழகாக அமைந்திருந்தது. 23உ சனி ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி 'தேசிகனும் திருமங்கை மன்னனும்' வெகு அபூர்வமான பல அரியவிஷயங்களை அநுக்ரஹித்தார். மஹோற்சவம் பகவதனுக்ரஹத்தால் இனிது முடிவடைந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

## மதிப்புரை.

### நல்லிச்சேரி, அருணசல சாஸ்திரிகளின் வெளியீடுகள்.

ருத்ரோத்கர்ஷம்.

இதுபல புராணங்களிலிருந்து திரட்டப்பட்டது. மூலம் கிரந்த லிபியிலும் கூடவே தமிழில் கருத்துரையும் அமைக்கப்பெற்றிருக்கிறது சில பக்தர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்கள் காணப்படுகின்றன. நல்லிச்சேரி பிரம்மஸ்ரீ கோபால சாஸ்திரிகளால் தமிழில் பெயர்க்கப்பட்டது.

32 பக்கங்கள் கொண்டது விலை அணு 0-2-0

தேவ்யபராதக்ஷமாபனஸ்தோத்திரம்.

திரிபுரசுந்தரீ. சாடுச்லோகம்.

இது சங்கர பகவத் பாதாசார்யாள் அவர்கள் அருளியது கிரந்த லிபி சுத்தமான எழுத்து. விலை அணு 0-1-0

நிவர்த்தி தர்ம பலகதனம்.

தமிழில் இது ஸ்ரீமகாபாரதத்தில் அனுசாஸன பர்வத்தில் பார்வதீ பரமேஸ்வரருக்கு ஸம்வாதம் ஏற்பட்டு பார்வதிக்கு பரமேஸ்வரரால் கூறப்பட்டு வரும் 189 வது அத்யாயத்தின் தமிழில் மொழி பெயர்ப்பு. ஆஸ்திகர்கள் அவச்யம் கவனிக்கத்தகுந்தது. முதல் 11பக்கங்களில் அடங்கியுள்ளது ப்ரதக்ஷிண சுத்திப்ரகாணம் சூதஸம்ஹிதை யக்ஞவைபவ கண்டத்திலுள்ளது. 27 ஸ்லோகங்கள் கிரந்த லிபி வித்வான் பிரம்மஸ்ரீ கச்சபேஸ்வர சாஸ்திரிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் கூடியது விலை அணு 0-2-0

பாகவத மகாத்மியம்

சேஷ தர்மம்என்ற நூலிலுள்ளது. கோபீசந்தன மஹாத்மியம் ஹரி பக்தி மஹிமா லக்ஷ்மீ நரசிம்ம ஸ்தோத்ரங்களுடன் கூடியது கும்பகோணம் ஸ்ரீ கோமளாம்பா பிரஸில் அழகான புதிய கிரந்த லிபியில் பதிப்பிக்கப்பெற்று பிழையன்றி விளங்குகிறது. தமிழ் மொழி பெயர்ப்பும் கடைசியில் சேர்க்கப்பெற்று விளங்குகிறது. விலை அணு 0-2-6

ஸ்ரீசங்கராசார்யாஷ்டகம்.

குர்வஷ்டம் அர்த்நாரீஸ்தவம் கனகதாரா ஸ்தவம் தேவீ நவரத்ன மாலாஸ்துதி. இவைகள் ஸ்ரீபகவத் பாதாள் அவர்களால் செய்யப்பட்டது. குருபக்தர்களிடம் இது இருக்கவேண்டியதவசியம். கிரந்த லிபி விலை 0-2-0

சாந்தி அத்யாயம்.

இது சிவ ரஹஸ்யம் என்ற நூலிலுள்ளது இதை சுருக்கமாய் அறிய விரும்புவோர்க்கு இது உள்ளங்கை நெல்லிபோல விஷயங்களை எடுதுக்காட்டுகிறது. கோமளாம்பா பிரஸில் கிரந்த லிபியில் பதிக்கப்பெற்றது. சுத்தமான பதிப்பு, லிபிகள் மிக தெளிவாயும் அழகாயும் விளங்குகிறது. பதிப்பாளிகள் முயற்சியை சபலமாய் செய்ய ஆஸ்திகர்கள் இந்நூல்களை வாங்குவதன்மூலம்உபசாந்தியாக்கவேண்டும் எல்லாவற்றிற்கும் தபால்செலவு தனி. வேண்டியவர்கள் ஆர்யதர்மம்ஆபீஸ் கும்பகோணம் என்ற விடத்திலும் அருணசல சாஸ்திரிகள் நெல்லிச்சேரி அய்யம்பேட்டை போஸ்டு என்றஇடத்திலாவது புஸ்தகங்களை பெறலாம்

மேலக்காவேரி
கே. ஆர். வைத்யனுத சாஸ்திரி.

### கம்பராமாயண நவாஹம்:

நாளது 1937-ஹு அக்டோபர்-மீ 23உ சனிக்கிழமை இரவு 6–30 மணிமுதல் பிரதிதினம் கம்பராமாயண கேஸரி முத்தமிழ் கவி பிரும்மஸ்ரீ C. S. முத்துசாமி அய்யர் அவர்களால் கும்பகோணம் டபீர் கீழ்ப்படித்துறையில் 'கம்பராமாயண காலக்ஷேபம்' (நவாஹம்) ஒன்பது நாள் உபன்யாஸம் நடைபெறும். மஹாஜனங்கள் எல்லோரும் விஜயம் செய்து கேட்டு இன்புறுமாறு கோருகிரேம்.

215207



621

## கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில் நடந்துவரும் ப்ரும்மஸ்ரீ பழமார்நேரி ப. ஜெ. அய்யுவய்யர் அவர்கள் தர்மங்கள் ஸம்பந்தமாய் 1—4—36 முதல் 31—3—37 முடிய உள்ள காலத்தின் வரவு சிலவு கோஷ்பாரா.

| வரவு | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| 1 சென்ற வருஷ கோஷபாராப்படி இருப்பு விபரம்:— | | | | | | |
| மூலதன இருப்பு(3½%)கவர்ன்மெண்டு ஸ்டாக்கு சர்டிபிகேட் படி | 65,300 | 0 | 0 | | | |
| கும்பகோணம் பாங்கு F. Dல் இருப்பு | 1,000 | 0 | 0 | | | |
| கும்பகோணம் பாங்கு S. Bல் இருப்பு | 1'054 | 7 | 4 | | | |
| குமாஸ்தா வசக்கட்டு இருப்பு | 19 | 15 | 0 | 67,374 | 6 | 4 |
| 2 கெவர்மெண்டு ஸ்டாக்கு சர்டிபிகேட்டுக்கு இன்கம்டாக்ஸ் பிடித்தம்போக வட்டிவரவு | | | | 1,950 | 8 | 0 |
| 3 இன்கம்டாக்ஸ் ரீபண்டு வரவு | | | | 360 | 12 | 0 |
| 4 கும்பகோணம் பாங்கு F. Dல் வட்டி வரவு | | | | 45 | 0 | 0 |
| 5 ஷை S. B வட்டி வரவு | | | | 37 | 5 | 8 |
| ஆக மொத்தம் ரூ. | | | | 69,768 | 0 | 0 |

| சிலவு | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ காசி விசவனாதஸ்வாமி தினசரி மஹாசிவராத்திரி பூஜை | | | | 120 | 0 | 0 |
| 2 ஸ்ரீபழனியாண்டவர் ஜேஷ்டாபிஷேகம் | | | | 60 | 0 | 0 |
| 3 கும்பகோணம் அத்வைத ஸபைக்கு நன்கொடை | | | | 100 | 0 | 0 |
| 4 பிரும்மஸ்ரீ அய்யுவய்யர் அவர்களுக்கு டிரஸ்டுபடி | | | | 595 | 0 | 0 |
| 5 சிவகாமி அம்மாளுக்கு ஷை | | | | 357 | 0 | 0 |
| 6 பாடசாலை உபாத்யாயர் சம்ளம் | | | | 410 | 0 | 0 |
| 7 ஷை வித்யார்த்திகள் ஸ்டைபெண்டு | | | | 540 | 0 | 0 |
| 8 தண்ணீர் பந்தல் தர்மம் | | | | 105 | 7 | 6 |
| 9 அத்வைத ஸபை குமாஸ்தா ஸம்பள கணக்குக் கொடுத்தது | | | | 30 | 0 | 0 |
| 10 கோஷ்பாரா பிரசுரம் செய்ய | | | | 29 | 0 | 0 |
| 11 ஆர்யதர்மம் பேபர் | | | | 3 | 0 | 0 |
| 12 தபால் சிலவு. பாங்கு கமிஷன் வகையரு | | | | 0 | 14 | 9 |
| 13 பழமார்நேரியிலுள்ள டிரஸ்டு வீடுரிபேர் | | | | 107 | 11 | 9 |
| 14 இருப்பு விபரம்:— | | | | | | |
| குமாஸ்தா வசகட்டு இருப்பு | 0 | 1 | 0 | | | |
| கும்பகோணம் பாங்கு S. Bல் இருப்பு | 1,009 | 13 | 0 | | | |
| கும்பகோணம் பாங்கு F.Dல் இருப்பு | 1,000 | 0 | 0 | | | |
| மூலதனம் 3½% கெவர்ன்மெண் ஸ்டாக்கு சர்டிபிகேட்டுப்படி | 65,300 | 0 | 0 | 67,309 | 14 | 0 |
| ஆக மொத்தம் ரூ. | | | | 69,768 | 0 | 0 |

R. ஸாமிநாதய்யர் B. A., L. T.,
M. K. வைத்யநாதய்யர் B. A., B. L., } மானேஜர்கள்.

N. Ramachandran,
Auditor.

### கம்பராமாயண பிரஸங்கம்.

கும்பகோணம் கோபாலராவ் லைப்ரரி, சாது சேஷய்யர லைப்ரரிகளின் ஆதரவில் உள்ள Study Clubல் கம்பராமாயண கேசரி முத்தமிழ்க்கவி ப்ரம்மஸ்ரீ ஸி. எஸ். முத்துஸாமி அய்யர் 16—10—37ல் ஸ்ரீ ராமர் வாலியை மறைந்து நின்று அம்பு எய்தது: நியாயம் என்று சொல்வதற்கு தக்க சமாதானம் கூறுதல், என்பதைப்பற்றி உபன்யாஸித்தார். உபன்யாசகர் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், கம்பராமாயணங்களில் தக்க சமாதானம் கூறப்படாமலிருந்தபோதிலும் கம்பர் வாலிவாயிலாக தர்மானுசாரம் என்பதை குறிப்பாக உய்த்துணர வைத்தார், என்று யாவருக்கும் தெளிவுபட விளக்கிக்காட்டினார். இதற்கு மேற்கோளாக கங்கை சிசுஹத்திசெய்தது, ஸ்ரீராமர் வாலிவதத்துக்கு உபமானமென்றும், சந்தனு ஞானக்கண் பெற்றபிறகு கங்கா தேவி செய்த கர்ரியம் ஞாயம் என்று எப்படி உணர்ந்தாரோ அம்மாதிரி வாலியும் ஸ்ரீராமருடைய தரிசனார்த்தத்தினால் தத்துவ ஞானமடைந்து ஸ்ரீராமர் செய்தது தர்மாநுசாரமென்றும் ஈசத்ரோகம் ராஜத்ரோகம் செய்த தனக்கு இத்தண்டனை தகுதி என்றும் உணர்ந்தானென்று விளக்கினார், ஸ்ரீராமர் முன்னரே வாலிக்கு எதிரில் வெளிப்படாத காரணம் பாபிகள் கண்ணுக்குப்புலப்படான் என்றும் அவ்வாலி செய்த பாபத்துக்குத் தக்க தண்டனை விதித்து பிறகு அவனுக்குத் தத்துவதரிசனம் அளித்து பரமபதம் கொடுத்தானென்று உபன்யாசகர் பலவித மேற்கோள்களுடன் உபன்யசித்தது பெரிதும் பாராட்டற்பாலது. அவ் வமயம் கூடியிருந்த கூட்டத்தில் அடியிற்கண்ட கனவான்களும் மகாமஹோபாத்யாய எம். வி. இராமாநுஜாசாரியார், வி. எம். சடகோபராமாநுஜாசாரியார், ஆர். ஸ்வாமிநாதய்யர், எஸ் கெ. விஸ்வேசுவா சாஸ்திரிகள், எல். சீனிவாஸய்யர், ஆர். சீனிவாஸய்யர், ஊ. சா. வெங்கிட்டராமய்யர், எம். ராமராவ், கெ. வாதாசாரியார், ஆர். கண்ணன் அய்யங்கார், விஜயம் செய்திருந்தார்கள். ஒரு நிருபர்.

### திருவிடமருதூர்·

ஸ்ரீ ஜ்யோதிர்மய மஹாலிங்கஸ்வாமி நியமாத்யயன பாடசாலா.

இப்பாடசாலையானது, காலஞ்சென்ற திருவிடமருதூர் பிரம்மஸ்ரீ வேதமூர்த்திகள் விச்வேச்வா கனபாடிகள் அவர்களால் சென்ற நாலைந்து வருட காலமாய் யாவரும் அதிசியிக்கும் வண்ணம் பொது ஜனங்களின் ஆதாவை முன்னிட்டு, ஈச்வரானுக்ரஹத்தினால் நடைபெற்று வந்தது யாவரும் அறிந்த விஷயம்.

அம்மஹானுக்குப் பிறகு, அன்னவரின் ஆக்ஞையை அவலம்பித்து, அப்பெரியாரின் தர்ம பத்நி மாதுஸ்ரீ லக்ஷ்மி அம்மாள் அவர்களும், ஷை விச்வேச்வா கனபாடிகளின் முக்கிய சிஷ்யர்களாகிய பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் (சிவநாகரம்) பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களாலும் முன்போலவே மாணாக்கர்களுக்கு பாடசாலையிலேயே போஜனாதி ஸௌகர்யங்களை செய்வித்துக்கொண்டு, யாஜுஷ, ஸாம, வேதங்களை சிரத்தையுடன் உபதேசித்து வருகிறார்கள்.

இவ்வருஷத்திலும், இப்பாடசாலையிலிருந்து, மைசூர் ராஜாங்க ஸபையில் (கீழ்ப்பாலையூர்) சுந்தரேசன் (மாந்தை) சீனிவாஸம் ஆகிய இரு வித்யார்த்திகள் ஸாமவேதம்(சிரௌத லக்ஷணம்) உள்படவும் பரீக்ஷை கொடுத்து, ஸன்மானங்களும் பெற்றிருக்கிறார்கள்.

இப்படியாக ஓர்வித அவலம்பனம் அன்னியில் ஈச்வரானுக்ரஹத்தையும் பொது ஜனங்களின் ஆதாவையே முக்கிய முதலாய் வைத்துக்கொண்டு நடத்தப்பட்டு வரும் இப் பாடசாலைக்கு ஆஸ்திகர்களனைவரும் உதவி புரிந்து மென் மேலும் விருத்தியடையும்படி செய்ய வேணுமாய் கோரப்படுகிறார்கள்

ஓர் நிருபர்.

### ஆத்தங்குடி.

ஸநாதன தர்ம மகாஸபை,

ஈஸ்வர-ஹூ ஐப்பசி-மீ 4உ புதன் கிழமை இரவு 7 மணிக்கு திரு வெங்கிட சுப்பிரமணியய்யர் கடவுள் வாழ்த்துப்பாட, திரு ஜெகதீசய்யாவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஸ்ரீமான். சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் ஸநாதன தர்மம் காங்கிரஸ் தீவிர வாதிகளின் மனப்போக்கு" என்பதைப் பொருளாகக் கொண்டு விரிவுரை நிகழ்த்துகையில். தேசிய பொதுஸ்தாபனமான காங்கிரஸ், அபேதவாதிகள் கையில் சிக்குண்டு, இந்தியாவின் ஜீவநாடியாகிய ஸநாதன தர்ம தத்துவங்களுக்கு விரோதமாக செயல்கள் புரிந்துவருவதைத் தக்க சான்றுகளுடன் கூறினார்கள். தலைவாவகள் முடிவுரை கூறுகையில் காங்கிரஸ் செய்த மஹத்தான தியாகங்களைக் கூறியும், வகுப்புத்தீர்ப்பு விஷயத்தில் நடு நிலைமை வகிக்கும் கொள்கையைக் கண்டித்தும், தற்காலம் முக்கியமாக தமிழ் நாட்டில் காங்கிரஸில் வகுப்பு வாதத்தை கிளப்பிக் கொண்டிருப்பவர்களின் மனோபாவத்தின் தன்மையை விளக்கியும், அக்குறைகளை பூரணமாகப் போக்கவும், காங்கிரஸை தூய தேசியஸ்தாபனமாக ஆக்கவும் மக்கள்கவனம் செலுத்த வேண்டுவது அவசியமென்றும் சென்னை காங்கிரஸ் மந்திரிமார்கள், பூர்ணமதுவிலக்கில் துரிதமாக கவனம் செலுத்தியது பாராட்டத்தக்கதென்றும், விளக்கினார்கள். வந்தனோபசாரத்துடன் சபை முடிந்தது.

வி. சுப்பிரமணியன் செகரட்ரி.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள் அருளிச்செய்த
ஸௌந்தர்யலஹரி'
by G.V. கணேச அய்யர்,
(மூலம்நாகரத்திலும், தமிழிலும், பதவுரை, பொழிப் புரை குறிப்புகளுடனும்,)
விலை ரூ. 1 8 0
கிடைக்குமிடம்:— மானேஜர், 'ஆர்யதர்மம்' கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.

[illegible]

4 42

22 11 - 11 - 1937

215208

215208
சென்னை-600 ...

625

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஞு ஐப்பசி-மீ 26உ 1937ஞு நவம்பர்-மீ 11உ | ஸ 42

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்ச் 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால் விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## ஆமதாபாத்தில் பூர்ண மதுவிலக்கு.

பம்பாய் கவர்ன்மெண்டார் அடுத்த ஏப்ரல் மாதம் முதல் ஆமதாபாத்தில் பூர்ண மதுவிலக்குச்செய்ய நிச்சயித்திருக்கிறார்கள், இதற்கான பூர்வாங்க முஸ்திப்பு வேலைகள் இப்போது முதல் ஆரம்பமாகி விட்டன.

## நரிமன் நசுக்கப்பட்டார்.

பம்பாயில் பெரிய காங்கிரஸ் தலைவராக விளங்கிய ஸ்ரீமான் நரிமன், காங்கிரஸ் கார்ய கமிட்டியாரால் தண்டிக்கப்பட்டு விட்டார். ஸ்ரீமான் படேலுக்கும், இவருக்கும் நடந்து வந்த விவாதம் யாவரும் அறிந்ததே. இவ் விஷயம் கார்யக்கமிட்டியில் விவாதிக்கப்பட்டு, 1934ல் நரிமன் காங்கிரஸுக்கு விரோத [illegible] படியால் பொறுப்புள்ள காங்கிரஸ் நிர்வாஹ ப்பதவிகளில் இனி அவர் இருக்க தகுதியுள்ளவால்ல வென்று கார்யக்கமிட்டி முடிவு செய்தது. பம்பாய் மாகாணக்கமிட்டித்தலைவர் பதவியை அவர் ராஜிநாமா செய்தார்.

## காந்தி — கவர்னர் ஸந்திப்பு.

வங்காள பந்தோபஸ்துக்கைதிகள், அந்தமான் கைதிகள் இவர்களின் விடுதலை விஷயமாக வங்காள கவர்னரை ஸ்ரீமான் காந்திஜி கண்டு பேசினார். இதன் பயன் சீக்கிரத்தில் தெரியவருமென்று நம்பப்படுகிறது.

## கௌரவப்பட்டங்கள் கிடையாது.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், காங்கிரஸ் மந்திரி ஸபைகள் கௌரவப்பட்டங்கள் வழங்குவதில் ஸம்பந்தப்படுவதைப் பற்றி விவாதித்து, இனிமேல் கவர்ன்மெண்டார் பொதுஜனங்கள் வழங்கும் கௌரவப்பட்டங்களுக்கு மாகாண மந்திரிகள் ஜாப்தா கொடுக்கும் கார்யத்தில் ஸம்பந்தப்படுவது கூடாதென்று நிச்சியித்ததாம்.

இனிமேல் [illegible] கவர்ன்மெண்டுகளின் யோஜனையைக்கேளாமல் இந்தியாகவர்மெண்டாரேகௌரவப்பட்டம் வழங்கும் கார்யத்தைச்செய்யக்கூடும்.

## ஸ்வாமி நகைத்திருட்டு.

### 3 பூஜகர்கள் கைதி.

திருவாலங்காடு என்ற சிவஸ்தலத்தில் ஸ்ரீநடராஜஸ்வாமி கோவிலில் 10 ஆயிரம் ரூபா பொறுமான முள்ள, ஸ்வாமியின் நகைகள் இரும்புப்பெட்டியிலிருந்து திருட்டுப்போய் விட்டன. மூன்று பூஜகர்களும் ஒரு ஆசாரியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



## கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஞு ஸ்தாபிக்கப்பட்டது.)

கிளை ஆபீஸ்கள்:—மன்னார்குடி & நாகப்பட்டணம்.

ஸப் ஆபீஸ்கள்:—நன்னிலம் & அய்யம்பேட்டை.

30—10—37 எடுக்கப்பட்ட கோஷ்பாரா.

| மூலதனம், செல்லுகள். | |
|---|---|
| 1. மூலதனம் (வரவுவந்த பங்குதொகைகள்) ... | 2,82,575—0—0 |
| 2. க்ஷேமநிதிகள், காப்புநிதிகள் ... | 1,95,791—0—2 |
| 3. தவணை, நடப்பு, சேவிங்ஸ் முதலிய டிபாஸிட்டுகள் ... | 17,16,834-15—4 |
| 4. இதர இனங்கள். ... | 99,317—1—6 |
| மொத்தம் ... | 22,94,518—1—0 |

| சொத்துகள், இருப்புகள். | |
|---|---|
| 1. ஆபீஸ் சாமான்கள், கட்டிடங்கள், ஸ்தாவரங்கள் ... | 73,079-11—0 |
| 2. இன்வெஸ்ட்டுமெண்டுகள்: சர்க்கார், ஸ்டேட் கடன் பத்திரங்கள் ... | 2,19,077—8—0 |
| இதர இனங்கள் ... | 1,58,505-10—5 |
| 3. வரவேண்டிய கடன்கள், வசூலிக்கவேண்டிய உண்டியல்கள், அதிக பத்துகள் உள்பட.... | 15,99,560—2-11 |
| 4. சில்லரை இனங்கள் ... | 1,05.126—2—2 |
| 5. இருப்பு:— ரொக்கமும், இதர பாங்கிகளிலும் | 1,39,168-14—6 |
| மொத்தம் ... | 22,94.518—1—0 |

கும்பகோணம்,
6—11—37.

S. மகாலிங்கய்யர், B.A., B.L.,
மானேஜிங் டைரெக்டர்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழி.

## ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளின் உபதேசம்.

[R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், அட்வகேட், திருநெல்வேலி.]

ஸ்ரீ ஸ்ரீங்கேரி ஸ்ரீ மஹாஸன்னிதானமவர்கள் சிலவருஷங்களுக்கு முன் தென்னிந்தியாவில் விஜயம் செய்துவந்த ஸந்தர்ப்பத்தில் பலவூர்களில் பலர்கள் தர்சனார்த்தம் வந்தபோது நடந்த ஸம்பாஷணைகளிலிருந்து சில விஷயங்களை நான் கிரஹித்தமட்டில் ஸம்பாஷண ரூபமாக எடுத்தெழுதி இங்கிலீஷில் 'From the Master's Lips' என்றதொரு சிறிய புஸ்தகம் வெளியிட்டேன். ஆர்யதர்மம் முதலிய பத்திரிகைகளில் அதைப்பற்றி மிகவும் சிலாகித்ததுடன் சில நண்பர்கள் அதை தமிழ்ப்படுத்தியும் வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். புஸ்தக ரூபமாக வெளியிடுவதற்கு முன் ஆர்யதர்மத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பிரசுரம் செய்தால் உசிதமாயிருக்குமென்று நினைக்கிறேன். பத்திரிகை வாசிப்போர்களுக்கு அந்தந்த ஸஞ்சிகையில் விஷயம் பூர்த்தியாகாமல் 'இன்னும் தொடரும்', 'இன்னும் வரும்' என்றால் ரஸபங்கம் ஏற்படுவதை நானே அநுபவித்திருப்பதினால் அந்தந்த ஸஞ்சிகையிலேயே ஒவ்வொரு விஷயமும் முடிந்துவிடக் கூடிய நிலைமையிலேயே எழுதிவர உத்தேசித்திருக்கிறேன்.

## ஸநாதன தர்மம்.

ஸ்ரீமஹாஸ்வாமிகளவர்கள் ஒரு கிராமத்தி[illegible] அவர்களுடைய அனுக்ரஹத்தைப் பெறக் கருதி ஓர் ஐரோப்பிய கனவான் தர்சனத்திற்கு வந்துசேர்ந்தார். அப்பொழுது பொதுவாக யோகக்ஷேமத்தைப்பற்றி சில நிமிஷம் ஸம்பாஷணை நடந்தபிறகு அக்கனவான் வினவினார்.

க:- தங்கள் மதத்தில் வெகு தத்வங்கள் இருப்பதாக நானும் சில நண்பர்களும் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறோம். தங்களை ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளவேண்டுமென்ற அவாவும் அவர்களுக்கு உண்டு. தாங்கள் அவ்விதம் விரும்புகிறவர்களை தங்கள் மதத்தினருடன் சேர்த்துக்கொள்ள அனுமதிப்பீர்களா?

ம:- ஹிந்துமதம் அறிவுள்ள யாரையும் இழுக்கும். ஆனால் புதிதாய்ச் சேர்த்துக்கொள்வதென்பது கிடையாது.

க:- ஏன் அப்படி? தங்கள்மதம் விலையற்றதென்பதும் எல்லா மனிதர்களுக்குமே உபயோகப்படக்கூடியதென்பதும் தங்கள் கொள்கையாயிருந்தால். புதிதாய் வேறு மதத்தினர்களை சேர்த்துக்கொள்ளவேண்டியதே நியாயமல்லவா?

ம:- அது அவசியமில்லை. ஒருவனை ஒரு மதத்தில் சேர்க்கிறதென்றால் அவன் அந்த மதத்தில் முன்னமே இல்லாதவனாக இருந்தால்தான் சேர்க்கிறதென்பது ஸாத்தியம்; அவசியமும் கூட.

க:- எனக்கு தெளிவாக அர்த்தமாகவில்லை. ஹிந்துவாகவேண்டுமென்ற எண்ணத்தினாலேயே அவன் ஹிந்துவாகிவிடுகிறான். ஹிந்துவாவதற்கென்று வேறு சடங்குகள் தேவையில்லை, என்று தங்கள் அபிப்பிராயமா?

ம:- அப்படியல்ல. எல்லாருமே அவர்கள் எண்ணம் எப்படியிருந்தாலும் ஹிந்துக்களாகவே இருக்கிறார்கள்.

க:- அதெப்படி?

ம:- ஹிந்துமதம் என்ற பெயர் கொஞ்ச நாளாக எங்கள் மதத்திற்கு வழங்கப்பட்டு வந்தபோதிலும் அதற்கு ஸநாதந தர்மம் என்பதுதான் உசிதமான பெயர். அது ஒரு குறிப்பிட்ட நாளில் ஆரம்பிப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட பெரியோரால் ஏற்படுத்தப்பட்டதுமில்லை. ஸநாதனமானதினால் ஸர்வதேச ஸாதாரணமும் கூட. அதற்கு தேசத்தினால் வரம்பு கிடையாது. ஜன்மம் எடுக்கிற யாரும் அதைச்சேர்ந்தவர்களே. தம்மை அம்மதத்தில் சேர்ந்தவர்களாகக் கருதினாலும் கருதாமல் போனாலும் அதுவே அவர்கள் மதம். நெருப்பின் இயல்பு சுடுவது என்பது. இது வாஸ்தவமாவதற்கு நம்முடைய ஸம்மதத்தை அபேக்ஷிக்கிறதில்லை. இதை வாஸ்தவமென்று நம்பி நாம் நடந்துகொண்டால் நமக்கு க்ஷேமம், இல்லையேல் நஷ்டம் நம்முடையதே. எப்படியும் அவ்வியல்புக்கு மாறுதலாவது ஹானியாவது கிடையாது. அது எப்பொழுதும் எங்கேயும் உண்மையே. இவ்விதமே தான் எங்கள் ஸநாதன தர்மமும்.

க:- தாங்கள் சொல்கிறபடி எல்லா மனிதர்களுமே ஹிந்துதான் என்றால், பலவிதமாக நிர்ப்பந்தம் செய்யும் ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு என்ன நியாயம்?

ம:- எல்லாரும் ஹிந்துக்கள் என்றும் எல்லாருக்குமே நன் நடத்தை போதிக்க ஹிந்துமதம் தயாரென்றும் சொன்னேனே தவிர, போதனுக்ரமமும் எல்லாருக்கும் ஒரே ரீதியாக இருக்குமென்று நான் சொல்லவில்லை. ஸ்வபாவத்தினாலும், வளர்ப்பினாலும், சுற்று ஸந்தர்ப்பங்களினாலும், பரம்பரையினாலும், பூர்வஜன்ம வாஸனையினாலும், மற்றும் பலவித காரணங்களினாலும் மனிதர்களுடைய தன்மை வேறுபட்டுக்கிடப்பதால் எல்லாருக்குமே ஒரேவிதமான நடத்தையைப் போதிப்பது உசிதமாகாது. இந்தத் தத்துவத்தை வைத்தே, தர்மத்தை ஸாமான்யதர்மம் என்றும் விசேஷ தர்மம் என்றும் இரண்டுவிதமாக பிரித்திருக்கிறார்கள். எல்லா மனிதர்களும் அனுஷ்டிக்கவேண்டியது ஸாமான்யதர்மம். இதுவும் விசேஷதர்மமும் சேர்ந்து ஜாதிக்குள்ளடங்கியவர்களால் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

க:- ஜாதி தர்மங்களும் ஆத்மசக்தியைக் கொடுக்குமென்றிருந்தால் அவைகளின் நன்மையை ஜாதியில் சேராதவர்களும் அடைந்தால் என்ன?

ம:- தாஹமிருக்கிறவனுக்கு ஜலம் ஸுகத்தைத்தரும் என்பதற்காக, நல்ல ஜுரத்தில் நாக்கு உணர்ந்துபோகிறவனுக்கும் ஜலத்தைக்கொடுத்துவிடலாமா?

க:- தங்கள் திருஷ்டாந்தம் சரியாகத்தோன்றவில்லை, ஒரு ஜாதிக்குச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு தர்மமானது மற்றொரு ஜாதியாராலாவது ஜாதியில்லாதவாராலாவது அனுஷ்டிக்கப்பட்டால் கெடுதலை உண்டுபண்ணும் என்று எப்படிச் சொல்லப்படுகிறது?

ம:- இப்படி நினைக்கவேண்டும். அதாவது ஒரு ஜாதிக்குச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு தர்மம் மற்றவர்களுக்கும் அனுகூலம்தான் என்று எப்படிச்சொல்கிறது என்று நினைக்கவேண்டும். ஒரு ஜாதிக்கு அந்த தர்மத்தை விதித்திருப்பதிலிருந்தே அது மற்ற ஜாதிக்கு ஏற்படாத விசேஷ தர்மம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு தர்மமானது ஹிதத்தைக் கொடுக்கும் என்பதை நமக்கு சாஸ்திரங்களே போதிக்கிறபடியால் அந்த தர்மம் யாருக்கு [illegible]தைக் கொடுக்கும் என்று சொல்[illegible]சத்தில் மாத்திரம் அதே சாஸ்திரங்களை [illegible]வது உசிதமாகாது. எங்கள் மதமும், நன் நடத்தையை போதிக்க முன்வரும் ஸமயமும், யோக்கியதை அதாவது அதிகாரம் என்பதை தீர்மானித்துக்கொண்டுதான் ஒருவனுக்கு போதிக்கமுடியும். ஜாதிக்கட்டுக்குள்பட்டவர்கள் விசேஷ தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டியவர்கள். இதரர்கள் ஸாமான்யதர்மத்தை மாத்திரம் அனுஷ்டிக்க வேண்டியவர்கள். மேலும், தர்மத்தை அனுஷ்டானம் செய்யும் விஷயத்தில், அதிகார ஸம்பத்தான யோக்கியதை என்னது என்பதையும் அந்த தர்மத்தை விதிக்கும் சாஸ்திரங்கள்தான் சொல்லவேண்டும்.

க:- தாங்கள் சொல்கிறபடி ஹிந்துசாஸ்திரங்கள் எல்லா மனிதர்களுக்காகவுமே ஏற்பட்டவைகளென்றும், எல்லா மனிதர்களுமே தங்கள் மதத்தில் சேர்ந்தவர்களாகவே பிறக்கிறார்களென்றும் வைத்துக்கொண்டால், இதர மதங்கள் இருப்பதற்கு என்ன ஸமாதானம்?

ம:- தாங்களும் ஹிந்துமதத்தில் உள்ளடங்கினவர்களே என்று அவர்கள் தெரிந்துகொள்ளாதது அவர்கள் தோஷம். இதர மதத்திலுள்ள எவ்வித மேலான தத்வங்களும் ஹிந்து மதத்தில் இருக்கின்றன. அதிலும் ஸமான்யதர்மத்திலேயே அடங்கி விடுகின்றன.

க:- எப்படியும், தங்கள் மதத்திற்கு தாங்கள் கொடுத்துக்கொள்ளும் ஸ்தானம் மிகவும் உன்னதமாகத் தோன்றவில்லையா? இதர மதஸ்தர்கள் இதை ஒப்புக்கொள்வார்களா?

ம:- இதரர்கள் ஒப்புக்கொள்வார்களா என்பது கேள்வியேயில்லை. ஒரு பதார்த்தத்தின் பெருமை அப்பதார்த்தத்தைச் சேர்ந்ததே தவிர, மதிப்பிடுகிறவர்களைச் சேர்ந்ததல்ல. நான் ஹிந்து மதத்திற்குக் கொடுக்கிற ஸ்தானம் மிகவும் மேலானதென்று கருதுகிறீர்கள். வாஸ்தவத்தில், அதைக் குறைப்பது ஸாத்தியமில்லை யென்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

க:- எப்படி?

ம:- திருஷ்டாந்தமாக கிருஸ்தவ மதத்தை எடுத்துக்கொள்வோம். கிருஸ்துவினிடம் விசுவாஸம் இருந்தால்தான் முக்தி கிடைக்கும் என்பது வாஸ்தவமாயிருந்தால், அவர் பிறப்பதற்கு முன் பிறந்து இறந்திருந்த அநந்த கோடி ஜனங்களுக்கும் ஸத்கதியில்லை என்று ஒப்புக்கொள்ளவேண்டிவரும். இது அவர் குற்றமா? தங்களுக்கு முன் கிருஸ்து பிறக்காததற்கு அவர்கள் எப்படி ஜவாப்தாரியாவார்கள்? அப்படியே கிருஸ்து இருக்கும் காலத்திலும் அதற்குப் பிறகும் கிருஸ்து என்று ஒருவர் உண்டென்று காதில்கூட கேட்காதவர்களுக்கெல்லாம் ஸத்கதி கிடையாதென்று சொல்லவேண்டும். தவிரவும் ஸத்கதிக்கு அத்யவசிய ஸாதனமாயிருக்கிற ஓர் அம்சத்தை பகவான் வெகுநாள் வெளியிடாமல் வைத்துக்கொண்டு திடீரென்று ஒருநாள் வெளியிட்டாரேயானால் அது நியாயமாகுமா? அந்தத் தேதிக்குமுன் பிறக்கிறவர்களுக்கும் ஸத்கதியடையவேண்டிய ஆத்மாக்கள் உண்டென்பதை பகவான் மறந்துவிட்டாரா? மறக்கவில்லையானால் அவர்களுக்கும் ஸத்கதி ஸாதனம் ஏற்படுத்திக் கொடுத்தாரா? அப்படியானால் அந்த ஸாதனத்தில் கிருஸ்துவனிடம் விசுவாஸம் என்ற அம்சம் சேர்ந்திருக்க நியாயமில்லையே? ஆகையால், முதல் மனிதனை ஸ்ருஷ்டிபண்ணின காலம் ஒன்றுண்டு என்று வைத்துக் கொண்டால், அந்த முதல் மனிதனுக்கும் ஸத்கதி ஸாதனம் சேர்ந்திருக்குமாதலால் இதை அவனுக்குத் தெரிவிக்க வேறு யாரும் இல்லாதத்தினால், அக்காலத்தில் இருந்த மற்றொருவரான பகவான்தான் அந்தக்காலத்தில் உபதேசித்திருக்கவேண்டும் என்று





ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# 'மூ க ப ஞ் ச ச தீ'

## கடாக்ஷ சதகம்.

(14—10—37 தொடர்ச்சி)

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! த்வத் அபாங்க லக்ஷ்மீ: - உனது கடாக்ஷ லக்ஷ்மியானவள், வ்ரீடானு வ்ருத்திரமணீ - வ்ரீடை (லஜ்ஜை) என்ற தோழிப்பெண்ணுடன், க்ருத ஸாஹசர்யா - கூடியவளாய் (உடன் வரப்பட்டவளாய்), மஜ்ஜன கேலனய - ஜலக்ரீடையை உத்தேசித்து, சசி சேகரஸ்ய - சந்த்ர சேகருடைய, களருசா - கழுத்தின் காந்தியினால், சைவாலிதாம் - பாசிபடர்ந்ததுபோலிருக்கும், காந்தி ஸரஸீம் - காந்தியாகிற குளத்தை, மந்தம் ஸமாச்ரயதி - மெதுவாக அடைகிறாள்.

1. பரமசிவனுடைய கழுத்தானது அவர் சாப்பிட்ட ஹாலாஹல விஷம் அங்கு தங்கிவிட்டதால் நீலநிறமாக இருப்பதாகச் சொல்லப்படும். (அதினால் அவருக்கு நீலகண்டனென்றும் காளகண்டனென்றும் பெயர்கள் ஏற்பட்டன.) ஆகவே அவருடைய முக காந்தியாகிற ஸரஸுக்கு கழுத்திலிருக்கும் கருப்பானது பாசிபடர்ந்தது போலிருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்பேர்ப்பட்ட ஸரஸில் ஜலக்ரீடை செய்வதற்காக அம்பாளுடைய கடாக்ஷமாகிற ஸ்த்ரீயானவள், லஜ்ஜை யென்ற ஸகியுடன் மெதுவாகச் செல்லுவதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

51. காஷாயம் அம்சுகமிவ ப்ரகடம் ததானோ
மாணிக்ய குண்டலருசிம் மமதாவிரோதி |
ச்ருத்யந்த ஸீமனி ரத: ஸுதராம் சகாஸ்தி
காமாக்ஷி தாவக கடாக்ஷ யதீச்வரோऽஸௌ ||

காமாக்ஷி — ஹே காமாக்ஷி! அஸௌ — இந்த, தாவக கடாக்ஷ யதீச்வர: - உனது கடாக்ஷமாகிற யதிச்ரேஷ்டரானவர், மாணிக்ய குண்டல ருசிம் - உனது ரத்ன குண்டலங்களின் காந்தியை, காஷாயம் அம்சுகமிவ - காஷாய வஸ்த்ரம்போல், ப்ரகடம் ததான: - நன்றாய் தெரியும்படி தரித்துக்கொண்டு, மமதா விரோதீ - மமதையென்ற பாவத்திற்கு விரோதியாக, ச்ருத்யந்த ஸீமனி ரத: - வேதாந்தங்களில் ஈடுபட்டவராய், ஸுதாரம் சகாஸ்தே - அதிகமாய் விளங்குகிறார்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு யதீச்வரருக்கு ஸமானமாக வர்ணிக்கப்படுகிறது. யதிகள் வழக்கமாக தரிக்கும் காஷாய வஸ்த்ரத்திற்கு ஸமானமாய் அம்பிகையின் ரத்ன குண்டலங்களின் காந்தி இருக்கிறதாம். ச்ருத்யந்தம் என்றால் ச்ருதிகளின் அந்தம் - வேதாந்தம், அதாவது, உபநிஷத்துக்கள் என்று ஒரு அர்த்தம். ச்ருத்யந்தம் என்றால் காது வரையில் என்று மற்றொரு அர்த்தம். அம்பிகையின் கண்கள் காதுவரை நீண்டிருப்பதால் 'ச்ருத்யந்த ஸீமனி ரத:' என்று சொல்லப்பட்டது. யதிகள் வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டிருப்பார்களாகையால் 'ச்ருத்யந்த ஸீமனி ரத:' என்பது அந்த அர்த்தத்திலும் பொருத்தமாக இருக்கிறது.

52. பாஷாண ஏவ ஹரி நீலமணிர் தினேஷு
ப்ரம்லானதாம் குவலயம் ப்ரகடீ கரோதி—
நைமித்திகோ ஜலத மேசகிமா ததஸ்தே
காமாக்ஷி சூன்யமுபமானம் அபாங்கலக்ஷ்ம்யா: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! ஹரி நீல மணி: - இந்த்ர நீல ரத்னமானது, பாஷாண ஏவ - கேவலம் கல்லைத்தவிர வேறல்ல. குவலயம் - கருநெய்தல் புஷ்பமோ, தினேஷு - பகற்காலங்களில், ப்ரம்லானதாம் - வாட்டத்தை, ப்ரகடீ கரோதி - காட்டுகிறது, ஜலத மேசகிமா - மேகத்தின் கருமையானது, நைமித்திக: - எப்பொழுதாவது ஏற்படக்கூடியதாயிருக்கிறது. தத: - ஆகையால், தே அபாங்க லக்ஷ்ம்யா: - உனது கடாக்ஷத்தின் உபமானம் - ஸமமான வஸ்து, சூன்யம் - யாதொன்றுமில்லை.

1. அம்பிகையின் கடாக்ஷத்திற்கு ஸமமாகச் சொல்லக் கூடிய வஸ்துக்கள் மூன்று— இந்த்ர நீலமணி, குவலயம், மேகம் ஆயினும் இவை மூன்றிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டி அவை அம்பிகையின் கடாக்ஷத்திற்கு ஸமானமல்லவென்று நிரூபித்து அம்பிகையின் கடாக்ஷ லக்ஷ்மியானது உபமானமற்றது (நிகரற்றது) என்று வர்ணிக்கப்பட்டது.

53. ச்ருங்கார விப்ரமவதீ ஸுதராம் ஸலஜ்ஜா
நாஸாக்ர மௌக்திகருசா க்ருத மந்தஹாஸா |
ச்யாமா கடாக்ஷ ஸுஷமா தவ யுக்தம் ஏதத்
காமாக்ஷி சும்பதி திகம்பர வக்த்ர பிம்பம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தவ கடாக்ஷ ஸுஷமா — உனது கடாக்ஷத்தின் ஸௌந்தர்யமாகிற, ச்யாமா - கருப்பான நிறத்தையுடைய ஸ்த்ரீயானவள் (ஸரியான யௌவனத்தோடு கூடிய ஸ்த்ரீயானவள்), ஸுதராம் - அதிகமாய், ச்ருங்கார விப்ரமவதீ - ச்ருங்கார விலாஸத்தோடு கூடியவளாயும், ஸ லஜ்ஜா - நாணத்தோடு கூடியவளாயும், நாஸாக்ர மௌக்திக ருசா - மூக்கின் நுனியிலிருக்கும் (மூக்குத்தி) முத்துனுடைய காந்தியால், க்ருத மந்தஹாஸா - புன்சிரிப்போடு கூடியவளாயும், திகம்பர வக்த்ர பிம்பம் - (திக்குகளையே வஸ்த்ரமாக உடைய) பரம சிவனுடைய முக பிம்பத்தை, சும்பதி - முத்தமிடுகிறாள்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை ஒரு ஸரியான யௌவனத்தையுடைய ஸ்த்ரீக்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. மூக்குத்தியிலுள்ள முத்தானது வெளுப்பாயிருக்குமாதலால் அதினுடைய காந்தியை அந்த ஸ்த்ரீயினுடைய மந்தஹாஸமாகச் சொல்லப்பட்டது.

2. பரமசிவன் ச்மசானவாஸியாய் வஸ்த்ரமில்லாமல் திரிந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுவதால் அவரை இங்கு திகம்பரர் (திக்குகளையே வஸ்த்ரமாக உடையவர் என்று வர்ணிக்கப்பட்டது). அம்பிகையின் பார்வையானது எப்போதும் அவர் மீது இருப்பதால் அவருடைய முக பிம்பத்தை அம்பிகையின் கடாக்ஷமானது முத்தமிட்டிருப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

54. நீலோத் பலேன மதுபேன ச த்ருஷ்டிபாத:
காமாக்ஷி துல்ய இதி தே கதம் ஆமனந்தி |
சைத்யேன நிந்ததி யதன்வஹம் இந்து பாதான்
பாதோருஹேண யதஸௌ கலஹாயதே ச ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே த்ருஷ்டி பாத: - உனது பார்வையானது, நீலோத்பலேன - கருநெய்தல் புஷ்பத்திற்கும், மதுபேனச - வண்டிற்கும், துல்ய இதி - ஸமமானதென்று, கதம் ஆமனந்தி - எப்படி (லோகத்தில்) சொல்லுகிறார்கள்? யத் அஸௌ - எந்த இந்த கடாக்ஷமானது, அன்வஹம் - எப்போதும், சைத்யேன - குளிர்ச்சியினால், இந்து பாதான் - சந்த்ரனுடைய கிரணங்களை நிந்ததி - பழிக்கிறதோ, யத் - எந்த கடாக்ஷமானது, பாதோருஹேன ச - தாமரஸ புஷ்பத்தோடும் கலஹாயதே - சண்டையிடுகிறதோ.

1. அம்பிகையின் கடாக்ஷத்திற்கு உபமானமாக நீலோத்பலத்தையும் வண்டையும் லோகத்தில் சொல்லுகிறார்களே. அப்படியிருக்கையில் நீலோத்பலத்திற்கு (அதை மலரச் செய்வதினால்) நண்பனான சந்த்ர கிரணங்களோடும், வண்டுகளுக்கு நண்பனான தாமரஸ புஷ்பத்திற்கும் விரோதியாக அம்பிகையின் கடாக்ஷமானது இருந்து வருவது ஏன் என்று கவி ஆச்சர்யப்படுகிறார்.

2. சந்த்ர கிரணங்கள் மிகவும் குளிர்ச்சியுள்ளவையென்பது லோக ப்ரஸித்தம். ஆயினும் அம்பிகையின் கடாக்ஷமானது பக்தர்களுடைய தாபத்ரயத்தையும் போக்கடிப்பதால் சரீர தாபத்தை மட்டும் போக்கடிக்கும் சந்த்ர கிரணங்களைவிட ச்ரேஷ்டமானவையென்று ஏற்படுகிறது. திரும்பவும் தாமரஸ புஷ்பத்தைவிட அம்பிகையின் கடாக்ஷமானது அழகிலும் மார்தவத்திலும் ச்ரேஷ்டமானவை. ஆகையால் அவ்விரண்டுடனும் கடாக்ஷமானது எப்போதும் சண்டைபோட்டு ஜயிப்பதாக இங்கு வர்ணிக்கப்பட்டது.

55. ஓஷ்ட ப்ரபா படல வித்ரும முத்ரிதே தே
ப்ரூவல்லி வீசி ஸுபகே முக காந்தி ஸிந்தௌ |
காமாக்ஷி வாரி பர பூரண லம்ப மான-
காலாம்புவாஹ ஸரணிம் லபதே கடாக்ஷ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது, ஓஷ்ட ப்ரபா படல - உதடுகளின் காந்திகளாகிற, வித்ரும முத்ரிதே - பவழக்கொடிகளையுடையதும், ப்ரூவல்லி - புருவக்கொடிகளாகிற, வீசி ஸுபகே - அலைகளோடு விளங்குவதுமான, முக காந்தி ஸிந்தௌ - உனது முக காந்தியாகிற ஸமுத்ரத்தில், வாரி பர பூரண லம்பமான - தண்ணீரை நிரப்பிக்கொள்வதற்காக (குடிப்பதற்காக) தழைந்திருக்கும், காலாம்புவாஹ ஸரணிம் - காளமேகங்களின் வரிசையென்ற நிலைமையை லபதே - அடைகிறது.

1. உதடுகள் சிகப்பு நிறமாதலால் அவற்றை பவழக்கொடிக்கு ஸமமாகச் சொல்வது கவிகளின் ஸம்ப்ரதாயம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥


# ஆ ர் ய த ர் ம ம்.

ஈச்வர-ஹு ஐப்பசி-மீ 12உ


## காந்திஜியின் கல்வித்திட்டம்.

தற்காலம் நமதுதேசத்தில் கல்வி விஷயமாக ஏற்பட்டுள்ள குழப்பம்போல் வேறு எக்காலத்திலும் ஏற்பட்டதில்லை. ஆரம்ப மத்திய, உயர்தரக்கல்விகள் எத்தகையவைகளாயிருத்தல்வேண்டுமென்பதைப்பற்றிக் கணக்கற்ற அபிப்பிராய பேதங்கள் இருந்து வருவதைக் காண்கிறோம். இதனால், ஸர்க்காரோ, பொது மனிதர்களோ நினைத்தபடி ஒருமாறுதலைச் செய்துவிடுவது ஸாத்யமில்லாமலிருக்கிறது. எத்தகைய கல்விமுறை வேண்டுமென்பதில் அபிப்பிராயபேதமிருந்தபோதிலும், தற்போதுள்ள முறை பயனற்றதென்றும், இக்காலத்தில் பெரிதாக நினைக்கப்படும் ஜீவன உபாயத்திற்கு அது ஏற்றதாயில்லையென்றும், ஆதலால் இந்த முறையை மாற்றிவிடவேண்டுமென்றும் யாவரும் அபிப்பிராய பேதமின்றி வற்புறுத்தி வருவதுமட்டும் நிச்சயமே.

புதிய கல்வி முறையை நிர்ணயிக்கும் விஷயமாகப் பலதடவை பல நிபுணர்கள் யோஜனை செய்தும், உருவாக ஒன்றும் இன்றுவரை ஏற்படவில்லை. இச்சமயத்தில் ஸ்ரீமான் காந்தி இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி வருவது தேசமெங்கும் ஒருமுகமாக கவனிக்கப்பட்டு வருகிறது. தற்போது அநேக மாகாணங்களில் காந்திஜியின் செல்வாக்குக்கு உட்பட்ட காங்கிரஸ் ஆக்ஷி நடந்து வருவதால், இதுவரையில் நடந்து வந்த சுஷ்க ஆலோசனைகளைப்போலல்லாமல் காந்திஜியின் கல்வித்திட்டமானது அநுஷ்டானத்தில் வரக்கூடிய ஹேஷ்யம் இருக்கிறது. இந்த காரணத்தினால் தான் பொது மக்கள் காந்திஜியின் புதிய திட்டத்தை அதிக ஊக்கத்துடன் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஸ்ரீமான் காந்தி தமது புதிய திட்டத்தின் போக்கைப்பற்றிக் கல்வி நிபுணர்களிடம் தெரிவிக்க வேண்டி ஸமீபத்தில் வார்தாவில் கல்வி மஹாநாடு ஒன்றும் நடத்தி வைத்தார். இதற்கு அநேகமாகர்ண மந்திரிகளும் போய் வந்திருக்கிறார்கள். அந்த மகாணங்களில் இந்த புதிய திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வருவதைப்பற்றியும் யோஜனை ஆரம்பித்திருப்பதாகத்தெரிகிறது.

இனி, காந்திஜியின் திட்டமென்னவென்று கவனிக்கவேண்டும். ஆரம்பக் கல்வி விஷயமாக மட்டுமே அவர் இப்போது புதிய வழியில் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். அதன்படி ஏழுவர்ஷகாலம் வரையில் இலவசமாக ஆரம்பக்கல்வி போதிக்கப்படவேண்டும். இந்த காலத்திற்குள் மாணவர்களுக்கு ஜீவன வழியாக நிற்கும் பற்பல தொழில்களும் கற்பிக்கப்படவேண்டும். மாணவர்களால் தயாரிக்கப்படும் கைத்தொழில் பண்டங்களைவிற்று, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இந்த திட்டத்தை நடத்தவேணும். இந்த வழியில் கிடைக்கும் பணம் போதாதாகையால் பாக்கிப் பணத்தை ஸர்க்கார் கிராண்டாகக் கொடுத்து உதவவேணும். இம்மாதிரியான பல யோஜனைகளை காந்திஜி வெளியிட்டிருக்கிறார்.

இந்த திட்டத்தின் குணதோஷ பரிசீலனையில், தற்கால நவீனர்களும், தார்மிகர்களும் அடிப்படையிலேயே வித்தியாஸப்பட்டிருக்கிறார்கள். காந்திஜியின் புதிய திட்டத்தில் பிராசீன காலத்திய முறையின் சாயை சிறிது காணப்படுவதை நாம் கவனிக்கக்கூடும். வித்யாப்யாஸமானது பணச் செலவின்றியும், ஆடம்பரமின்றியும் முன்காலத்தில் நடந்து வந்ததை காந்திஜி தமது திட்டத்தில் லேசாகப் புகவிட்டிருக்கிறார். தவிரவும், ஒவ்வொரு ஜாதிக்கும் பிறவிநிமித்தமாக பரம்பரைத்தொழில் உண்டென்றும், தற்காலக் கல்வியானது இந்த நன்மையைக் கெடுத்துவிடுகிறதென்றும் காந்திஜி ஒப்புக்கொள்ளுகிறார். ஆதலால், அந்தந்த ஜாதியாரின் தொழிலை அவரவர்கள் பின்பற்றவேண்டுமென்ற நமது முக்யக் கொள்கைக்கு இந்த திட்டத்தில் இடமிருக்குமென்றும் தெரிகிறது. பால்யத்திலேயே மாணாக்கர்களின் கண்ணும், கையும், வேலைசெய்வதில் பழக்கப்படவேண்டுமென்று காந்திஜி விரும்புகிறார் நம் தேசத்தில் வியவஸாயிகளுடைய பிள்ளைகள் சிறு குழந்தைகளாயிருக்கும்போதே எவ்விதப்படிப்பும் இல்லாமலே தம் முன்னோர்களின் தொழிலில் நிபுணர்களாகி விடுவதைப் பார்க்கிறோம்.

அப்படியே தச்சன், கொல்லன், தட்டான் முதலிய தொழிலாளிகளும், தங்கள் பிள்ளைகளை அநுபவத்தினாலேயே இந்தத் தொழிலில் பழக்கி வைத்துவிடுகிறார்கள். இதற்காகப் பள்ளிக்கூடங்கள் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. காந்திஜியின் திட்டத்தில் தொழிலுக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்கப்பட்டபோதிலும், அவரவர் குலபரம்பரைத் தொழிலை அப்யஸிக்க வஸதி ஏற்படுவது வரவேற்கத் தக்கதே.

பல அம்சங்களில் இந்தத் திட்டம் அங்கீகரிக்கக் கூடியதாயிருப்பினும் இதிலுள்ள முக்யமான குறையையும் குறிப்பிடவேண்டும். ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் எல்லா ஜாதியார்களுக்கும் ஒரே மாதிரியான தொழில்களைக் கற்றுக்கொடுக்க இவர் விரும்புகிறார்.

இது பொருத்தமுள்ளதா? பிராம்மண, க்ஷத்திரியாதி பல ஜாதிகள் இன்றும் தங்கள் தங்கள் ஜாதி குல தர்மங்களை முன்னிட்டு தனித்தனியான ஜீவன உபாயங்களைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். ஆரம்பக் கல்விக்காலத்தில் போதிக்கப்படும் எந்தத் தொழிலும் பிராம்மணாதி சில ஜாதிக்கு உபயோகப்படக்கூடியதாயிருக்காது. அவர்கள் பிற்காலத்தில் இந்த தொழில் ஒன்றாலும் ஜீவிக்கக்கூடியவர்களல்ல. பிராம்மணாதிகள் தச்சு, கொல்லு வேலைகளிலோ, மண் பாண்டத்தொழிலிலோ ஜீவிக்கப் பழகியவர்களல்ல. ஜீவிக்கவும் முடியாது. அத்தகையவர்களுக்கு இந்த ஆரம்பக்கல்வித் திட்டத்தில் காணப்படும் கைத்தொழில் முறைகள் அவசியமில்லாதவைகளே. இதைக் கவனியாமல் காந்திஜி எல்லோருக்கும் கைத்தொழில் திட்டத்தை வற்புறுத்தியிருப்பது, எல்லா மனிதர்களும் ஒருவகையாயிருக்கவேண்டுமென்ற நவீனக் கொள்கையை அநுசரித்ததாய் இருக்கிறது.

இதைப்பற்றிச் சொல்லவேண்டிய வேறு சிலமுக்ய விஷயங்களைப் பிறகு விவரிப்போம்.

## குறிப்புகள்.

### மதத்தின் சிறப்பு.

ஸர். ராதாகிருஷ்ணன் என்ற பெரியாரைப் பற்றிப் பலரும் அறிந்ததே. இவர் நமது நாட்டு மதங்களை வெகுவாக ஆராய்ச்சி செய்தவர். வெளிநாடுகளுக்கும் சென்று இதரமத தத்துவங்களை அறிந்துகொண்டிருப்பதுடன் நம் நாட்டு மதத்தின் உயர்வை அத்தேசங்களில் எடுத்துரைத்தவர். இவர் சிலதினங்களுக்கு முன் சென்னையில் மதத்தைப்பற்றி ஓர் அரிய பிரஸங்கம் செய்துள்ளார். மனித ஸமூஹம் உண்மையான உயர்வை அடைவதற்கு மற்ற ஸாதனங்களைவிட மதமே சிறந்த வழியென்று இவர் மெய்ப்பித்தார். தற்கால உலகில் தோன்றியுள்ள அறிவாளிகள் பௌதிக சாஸ்திராதி ஆராய்ச்சியுடன் நின்றுவிட்டார்களேயன்றி மதத்தின் உயர்வை ஆராய்ச்சி செய்யத் தவறிவிட்டார்களென்றும், மதத்தை அவர்கள் அறிவின் வளர்ச்சியால் ஏற்படக்கூடிய கற்பனையான ஓர் மனோபாவமென்று அலக்ஷ்யம் செய்து வருவதாயும் பலமாகக் கண்டித்தார்.

கடைசியாக அவர் பேசுகையில், தற்காலம் அறிவாளிகளென்று வேஷம்போடும் குதர்க்கவாதிகளை ஜனங்கள் தூர ஒதுக்கிவிட்டு, மதம் மூலமாக மஹத்தான சக்திகளையும், உபதேசங்களையும் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் அப்போதுதான் உலகிலுள்ள ஜனஸமூஹம் உண்மையான உயர்ந்தநிலைமையை அடையக்கூடுமென்றும் சொன்னார்.

இவர் பொதுவாக எல்லா மதத்தைப்பற்றியும் குறிப்பிட்டாரேயல்லது குறிப்பாக ஒன்றை மட்டும் உயர்த்திப் பேசவில்லை. ஆகவே, பரலோகம் தெய்வம், சாஸ்திரம், ஆகியவைகளை நம்பி ஏற்பட்டுள்ள எல்லா மதங்களும் அந்தந்த வழிப்படி அந்தந்த ஜனஸமூஹத்திற்கு நன்மை பயக்கத் தடையில்லை. பொதுவுடமை, நாஸ்திக்யம் முதலியவை வெகு தீவ்ரமாகப் பரவி உலகத்தை அழிக்க முற்படும் இச்சமயத்தில் இத்தகைய அறிவாளிகள் ஜனஸமூஹத்திற்கு மதத்தின் சிறப்பைப்பற்றிப் போதிப்பது விசேஷ பலனுள்ளதாகும். ஆராய்ச்சி பூர்வமான இவருடைய மதாபிமானம் தற்கால நவீனப் பித்தர்களுக்கு நல்லபுத்தியைக் கொடுக்குமா?

### அபேதவாதிகளின் தொல்லை!

கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி கூட்ட நடவடிக்கையிலிருந்தும், அதன்பிறகு பத்திரிகைகளில் நடந்துவரும் சர்ச்சைகளிலிருந்தும், காங்கிரஸ் மந்திரிகளுக்கும், அபேதவாதிகளுக்கும் பலமான பிணக்கு ஏற்பட்டிருப்பது வெளிப்பட்டுவிட்டது. ஒருவரையொருவர் அழித்திவிட இருவரும் தருணம் பார்த்துக்கொண்டிருப்பதாக அங்கு நன்கு தெளிவாகியது. சரீர நிலைமையையும் பாராட்டாமல், காந்திஜீ வாதிருந்தால் அந்தக் கூட்டமே வேறுமாதிரியாக முடிந்திருக்கக்கூடுமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு முன்னேற்பாடான கட்டுப்பாடுடன் அபேதவாதிகள் அவிடம் வந்திருந்தார்கள். முக்கியமாக சென்னை மந்திரி சபையைப்பற்றி அங்கு பலமான கண்டனம் செய்து ஆடம்பரப்படுத்தப்பட்டது. பதவியேற்ற விஷயத்திலேயே அபேதவாதிகளுக்கு மிகுந்த ஆத்திரமிருந்தது. அதிலும் இவ்விஷயத்தில் ஸூத்ரதாரராக இருந்து காரியஸித்தி பெற்றுவிட்ட ஸ்ரீமான் ஸி. ஆர். மீது அபேதவாதிகள் மிகுந்த சீற்ற முற்றிருந்தனர். காங்கிரஸ் மந்திரி ஸபையை கஷ்டத்திற்குள்ளாக்கி அதன் வேலையை முண்டனம் செய்யும் நோக்கத்துடனேயே



அபேதவாதிகள் ஒருவர்பின் ஒருவராக சென்னைமாகாணம் வந்து கிளர்ச்சிசெய்தார்கள். பதவியேற்புக்கு எதிராயிருந்த சில காங்கிரஸ் வாதிகளும் அபேதவாதிகளுக்குப் பின்பலமாக நின்று மந்திரிஸபைமீது பாயும்படி தூண்டிவிட்டு வந்தார்கள். இவ்வளவும் கல்கத்தாக் கூட்டத்தில் ஒரு மந்திரியாலேயே வெளிப்பட்ட விவரமாகும். ஆகவே தங்களைக் கவிழ்கச் சூழ்ச்சிசெய்யும் அபேதவாதிகளை சட்டப்படி அடக்கவேண்டியது கடமையாகிவிட்டதென்று காங்கிரஸ் மந்திரிகள் ஸமாதானம் சொன்னார்கள். பாட்லிவாலாமீது வழக்கு நடப்பதும் இந்தநோக்கத்துடன் தானென்று சொல்லப்பட்டது. ஆயினும் அங்கு பேசிய அபேதவாதிகள் யாவரும் ஒருமுகமாக சென்னை மந்திரியை வாய்கொண்டமட்டும் கண்டித்துப் பேசித் தீர்த்தார்களென்பது நிச்சயமே. காங்கிரஸ் காரர்கள் தங்களுக்கு சாச்வதப் பதவி கிடைத்துவிட்டதாக கருதி ஸாதுக்களை மிரட்டவும். விரட்டவும் யோஜனை செய்கிறார்கள். இவர்கள் பிறருக்குச் செய்வதையே அபேதவாதிகள் இவர்களுக்குச் செய்துகாட்டுகிறார்கள். வியவஸ்தா நாசமும், கட்டுக்கடங்காமையும் காங்கிரஸ் வாதிகளாலேயே அபேதவாதிகளுள்பட எல்லோருக்கும் கற்பிக்கப்பட்டது. அந்தப்பாடத்தையே அபேதவாதிகள் தங்கள்வாத்தியார்களிடம் திருப்பி ஒப்புவிக்க ஆரம்பித்தால் இதில் யார்மீது பிசகு?

### ருஷ்யாவின் உதாஹரணம்!

124, 144, ஆகிய பிரிவுகளின்படி காங்கிரஸ் மந்திரிகளே காங்கிரஸ் அபேதவாதிகள் மீது நடவடிக்கையெடுத்து அடக்கு முறையைக் கையாளலாமா? பிரஜா உரிமை, ஸ்வதந்திரம், அஹிம்ஸை ஆகிய காங்கிரஸின் அடிப்படையான கொள்கைக்கு இது விரோதமல்லவா, என்ற கூச்சலை அபேதவாதிகள் கிளப்பிவிட்டனர். ஆனால் மந்திரி ஸபையார் இதற்கு ஸோவியத் ருஷ்யாவில் நடப்பதைத் தங்களுக்கு ஆதாரமாகக் காட்ட முன்வந்துவிட்டார்கள். ஸோவியத் ருஷ்யாவின் தலைவரான மிஸ்டர் ஸ்டாலின், தம்முடன் சேர்ந்து ராஜ்யக்கிளர்ச்சி நடத்திய ஸகாக்களான மிஸ்டர் டிராட்ஸ்கி முதலியவர்கள் மீது இப்போது சட்ட ஒழுங்கு, அமைதி என்ற வியாஜம் கொண்டு கடுமையான அடக்குமுறை செய்துவருகிறார். ஆதலால் எந்த கவர்ன்மெண்டும், சட்டப்படி நடக்காத கிளர்ச்சிக்காரர்மீது நடவடிக்கை எடுக்கப் பின்வாங்கமாட்டார்களென்று காங்கிரஸ் மந்திரிகள் வாதிக்கிறார்கள். ஆனால் ருஷ்யாவின் உதாஹரணம் வேறுமாதிரியாகச் சிலரால் அர்த்தம் செய்யப்படுகிறது. நிர்வாஹ அதிகாரப்பதவி கிடைத்ததும் ஸ்டாலின் தமது ஸகாக்களையே அடக்கிவிட முயன்று துரோஹம் செய்துவிட்டதாக ஒரு சார்பார் கூச்சலிடுகின்றனர். ஆகவே ருஷ்யா உதாஹரணம் இரண்டு தரப்பினராலும் காங்கிரஸ் கோஷ்டியில் கையாளப்படுகிறது. இது எப்படியாயினும் அபேதவாதிகள் காங்கிரஸ் மந்திரிகளுக்கு எதிராகக் கிளம்பிவிட்டது நிச்சயமே. மதுரையிலும் சில தினங்களுக்கு முன்நடந்த காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டத்தில் மந்திரி ஸபைக் கண்டனத்தீர்மான விஷயமாக அபேதவாதிகளுக்கும் காங்கிரஸ் வாதிகளுக்கும் கைகலந்த சண்டை நடந்ததாம். தாராளமாக அடிதடி ஏற்பட்டது. ஒருகாலத்தில் புரட்சிக்காரர்போல் விளங்கிய காங்கிரஸ்காரர்கள், தற்போது, சட்டம், அமைதி, ஒழுங்கு, உரிமை இவைகளைக் காக்கவேண்டியகடமையை உணர்ந்திருப்பது கொண்டாடக்கூடியதே; ஆயினும் இவர்கள் வைத்தநெருப்பு தேசமெங்கும் பரவ ஆரம்பித்த பின்னர் இத்தகைய செய்கைகளால் என்னபிரயோஜனமென்று நமக்கு விளங்கவில்லை. இருந்தாலும் இனி எதிர்காலத்திலாவது தேசத்தில் கட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் அழிப்பதால் ஏற்படும் பெரிய தீங்குகளை இவர்கள் உணருவதற்கு இந்த அபேதவாதத்தொல்லை ஒரு எச்சரிக்கையாயிருக்குமென்று நம்புகிறோம்.

## மதுரை ஸநாதன தர்ம மஹாநாடு.

### ஆர்யதர்மம் விசேஷ அநுபந்தம்.

1937 ஆகஸ்ட்மீ 13, 14, 15உ களில் மதுரையில் நடந்த ஸநாதன தர்ம நாட்டின் நடவடிக்கைகள், தீர்மானங்கள், வரவேற்பு பிரஸங்கம், தலைவர் உபந்யாஸம் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து ஓர் அநுபந்தமாக வெளியிடப்பட்டிருக்கிறது. அங்கு நடந்த பண்டித பரிஷத் நடவடிக்கைகளும் ஸ்ரீசிருங்கேரிஸ்வாமிகளின் ஸ்ரீமுகமும் இதில் அடங்கியிருக்கிறது. இங்கிலீஷிலும், தமிழிலும் தனித்தனியாக பூரா விவரத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அபேக்ஷிப்பவர்களுக்கு இது இனமாக வழங்கப்படும்.

இந்த கைங்கர்யம் ஸ்ரீ அநந்தபத்மநாபதாஸ, தேசபூஷண ஸ்ரீ ஆர். கே. ஸ்ரீ பிரஸன்ன வெங்கடேச்வர ராவ் அவர்களுடை நன்கொடைத்தொகையைக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் ஸ்ரீபுரிஸ்வாமிகள் 1933 மார்ச் 2-ம் தேதி மைலாப்பூரில் நமது ஹிந்து ஸ்திரீகளின் மேன்மையைப்பற்றிச் செய்த பிரஸங்கமும் தமிழில் புஸ்தகரூபமாக ஸ்ரீயுத ராவ் அவர்களாலே அச்சிட்டு வெளியிடப்பட்டு இனமாக வழங்கப்படுகிறது. இத்தகைய கைங்கர்யங்களைச் செய்த ஸ்ரீமான்ராவ் அவர்களின் தர்ம சிரத்தையைப்போற்றுதாரில்லை.

## வாரக்குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா.

தர்மாதிக்ரமபலன்:— பல்லாண்டுகளாக தேசநலத்திற்கு உழைப்பது தேசீய ஸபை. அதில் சில ஆண்டுகளாக அதார்மிகர் உள்ளே புகுந்து தர்மத்தைமீறுகின்றனர். அதன் பயனாக பல துன்பங்களை அநுபவிக்கின்றனர்.

என்ன காரணம்? விஜய நகரம் ராஜா ராஜ்ய விஷயமாகவும் குடும்ப விஷயமாகவும் பட்ட துன்பம் மட்டல்ல. சிறிது அநுகூலம் ஏற்பட்ட காலத்தில் அவர் சென்னையில் தற்கொலை செய்துகொண்டதாக செய்தி கிடைத்தது. பின்னர் அவரைப் பற்றி அதிக தகவல் இல்லை. அவர் விவேகி. நோய் நிமித்தமோ அல்லது குடும்ப கஷ்ட நிமித்தமோ இறந்தால் அது இத்துடன் போகா. அடுத்த பிறவியிலும் தற்கொலை செய்துகொண்ட தோஷத்துடன் கூட அதுவும் சேர்ந்து அநுபவிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருப்பர்.

குரு வேண்டா சீடர்:— ஸ்ரீ அஹோபில மடம் பீடாதிபதிகளாக இருக்க அர்கால்ல என்று ஓர் சீடர் நியாயஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். கலியின் வேகம் எவ்வளவு தூரம் பரவுகிறதென்பதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. ஆயினும் ஒன்று மாத்திரம் சொல்லவேண்டும். முதலில் சிஷ்யசம்பத் நம்மிடம் இருக்கிறதா என்பதை கவனித்து அவச்யமிருந்தால் நமது ஸமூஹத்திற்குள் பலர் கூடி தக்கதை செய்வது நன்று. பிறருக்கு இடமளிக்கும்படி வழக்கு வேண்டாம்!

விட்டுக் கொடுக்க மனமில்லை.— டில்லி ஸபையின் வயதை ராஜப்ரதிநிதியெனும் பிரும்மா கொண்டு நீட்டிவிட்டார். ஸம்ஷ்டி அரசியல் நிமித்தம் இது இங்ஙனம் செய்யப்படுகிறது போலும். இச்சமயம் மற்ற ஸபைகளைப் போல் அச்சபைக்கு தேர்தல் நடத்தினால் தேசீய சபைக்கே அதிக செல்வாக்கு ஏற்படும்.

விஷயமறியாதார்:— "ஸர்வாதிகாரி" என்ற விஷயமாக மந்திரியின் பேச்சை ஆமோதிக்க வந்த ஓர் பத்திரிகை காரணமின்றி நாம் அரசனை தெய்வமாக நினைப்பதைக் கண்டிக்கிறது. ராஜ்யத்தை ஆச்ரமமாகக் கருதும் ஜநகர், தசரதர், ராமர் முதலியவர்களை தெய்வமாக நினைப்பதில் குற்றம் என்ன? தற்கால அரசியல் வாதிகள் சிறிது ஆணவத்தை விட்டு முற்கால அரசியலைப் பண்டிதர்களிடம் கற்க வேண்டுகிறோம்.

அஸ்திவாரம் ஆடிவிட்டது:—— அறிஞர் ராதாகிருஷ்ணன் தற்கால அறிவால் மத நம்பிக்கையின் அஸ்திவாரம் ஆடிவிட்டதென ஓர் உபன்யாசத்தில் கூறினார். தெய்வ நம்பிக்கையைக் கட்டுப்பாடுடன் அவமதித்து ஓர் ஸர்வாதிகாரிக்கு அடிமையாகிறோமென்றார். இரண்டும் முற்றிலும் உண்மை. யாரை அவர் மனதில் கொண்டு பேசியிருந்தாலும் இதில் ஸத்யமிருப்பதை எல்லோரும் கவனிக்கவேண்டும்.

ஜர்மனி பழையதையே விரும்புகிறது:— யூத வகுப்பைச் சார்ந்தவர் என்று காட்ட ஆடையில் ப்ரத்யேகமான ஓர் அடையாளம் முன் இருந்ததாம். அதை நாகரிக உலகம் மறந்தது. மறுபடியும் அதை வற்புறுத்துகிறார்கள். இன்ன வர்ணம், இன்ன ஜாதி இன்ன ஆச்ரமம் என்று எடுத்துக் காட்ட நமக்கேற்கட்ட பழக்க ஒழுக்கங்களை வெறுக்கும் மேதாவிகள் இதைக் கவனிப்பரா?

## பிஜ்னோர் உபதேர்தல்,

### காங்கிரஸ் மந்திரி வெற்றி:

இந்தியா முழுவதும் எதிர் பார்த்து வந்த பிஜ்னோர் உபதேர்தல் முடிவு வெளியாகிவிட்டது. காங்கிரஸ் மந்திரியான ஹபீஸ் மகமத் இப்ராஹீம் என்பவர் 7 ஆயிரம் சொச்சம் வோட் பெற்று ஜயமடைந்தார். போட்டியாக நின்ற முஸ்லீம் லீக் அபேக்ஷகர் 2 ஆயிரம் சொச்சம் வோட் பெற்று பெரும் தோல்வியடைந்தார்.

காங்கிரஸும், லீகும், தங்கள் சக்தியை அளவிட இந்த எலக்ஷனை ஒரு முக்ய ஸாதனமாக நினைத்தன. இரு கக்ஷியும் பலமான பிரசாரம் நடத்தியது. முஸ்லீம்களுக்கு காங்கிரஸிடம் மதிப்பு கிடையாதென்று ஜனாப் ஜின்னா இந்த எலெக்ஷன் மூலம் நிரூபணம் செய்ய முயன்றது பலிக்காமற் போய் விட்டது.

ஸ்ரீ ஜகத்குரு

விஜயயாத்திரை முகாம்,

போலவரம்

## ருஷ்யா தேசத்துப்பொது உடமை ஆக்ஷியின் சீர்கேடு.

பம்பாயில் பிரசுரமாகி வரும் பம்பாய் ப்ரெஸ் ஸர்விஸில் வாரா வாரம் ருஷ்யாவில் நடந்து வரும் அநீதங்களைபலபேப்பர்களிலிருந்து பொறுக்கி வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வாரப்பிரசுரத்தில் அடியில் கண்ட விஷயங்கள் வெளி வந்திருக்கின்றன.

(1) 14 வயதுள்ள வைடலீக் அப்ரோஷியன் என்ற சிறுவன், தன் தகப்பனார் ருஷ்ய ஆக்ஷிக்கு விரோதமாயிருக்கிறார் என்று ரஷிய போலீஸாருக்குத்தெரிவித்தானாம். விசாரணையில் பையன் வாக்கு மூலத்தின் பேரில் தகப்பனாருக்கு தண்டனை கிடைத்தது. பையன் "அவர் இனி எனக்கு தகப்பனார் இல்லை. ருஷ்ய ஆக்ஷிஎன்பிதா "என்று சொன்னானாம் இதற்காக குழந்தைகளுக்காக ம்யோனீர் ப்ரவ்தாவில் அவனைப்புகழ்ந்து ருஷ்யாவில் சிறந்த பள்ளிக்கூடத்தில் சிலவன்னியில் சேர்த்திருக்கிறார்களாம்.

(2) வெகு ஜாக்ருதையாய் பாதுகாத்தும் ஸ்டேலின் குமாரன் 12 வயதுள்ள வாஸில் ஸ்டேலினை அபஹரித்துக்கொண்டு போயிருக்கிறார்களாம். ஸ்டேலின் மன அதிர்ச்சியில் வருந்துகிறாரும் என்று பெர்லின் டெர் அன்கிரிப்' பேப்பரிலிருந்து தெரிகிறது.

(3) ருஷ்யாவில் நிகலீங்ஸக் நகர கட்டிடபார்டு மெண்டில் வேலை செய்த கூலியாட்களுக்கு 1936 அக்டோபரிலிருந்து 1937 மார்ச்சு வரையில் சம்பளம் கொடுபட வில்லை. பப்ளிக் ப்ராஸிக்யூடருக்கும் ஸிடி ஸோவியட் ப்ளீனரி கம்மிஷன் 'க்ராஸ்னி மாயக்' என்ற பேபர் இவர்களுக்கெல்லாம் தெரிவித்தலும் பயன் படவில்லை யென்று நிச்ருகியான்ஸ்கையா ஸ்வெஸ்டா பேபரில் சொல்லப்பட்டிருக்கிறது.

(4) ரொடேரியன் F. G. மாரீஸ் என்பவர் ருஷ்யா போல்ஷ்விஸிமைப்பற்றி செய்த பிரஸங்கத்தில் ருஷ்யப்புது ஆக்ஷியில் ராஜாங்க வேலை செய்யப்பழக்கப்பட்டிருந்தவர்களை பூண்டில்லாமல் அடித்தது பெரியபிசகென்றும் மறுபடியும் ராஜாங்க வேலை நடத்த ஆள் தயார் செய்ய பல வருஷங்களாகி யிருக்கிறதென்றும் ஸர்வஸாம்யக் கொள்கையை அவலம்பித்தவர்களாயினும் அவர்களுக்கு ஜாஸ்தி பரிசு அளிக்க வேண்டியிருக்கிற தென்றும் சொன்னார். ஸர்வ ஸாம்யம் என்பது அசாத்தியமென்று ஊகிக்கும்படியாயிருக்கிறது.

(5) லண்டன் டெய்லி ரெயில் ஒரு தலை முறையாக ருஷ்யாவில் நடந்து வரும் சிரச்சேதங்கள் போல் அவ்வளவு வேறு ஒரு ராஜிய கிளர்ச்சியிலும் (Revolution) இல்லை யென்று சரித்திரங்களிலிருந்து தெரிகிறது என்று அபிப்ராயப்படுகிறது.

(6) அமேரிக்காக கத்தோலிக் யூனிவர்ஸிடி ரெவரெண்டு புல்டன் ரதீன் செய்த உபன்யாஸத்தில் ருஷ்யா ஸம்வாதம் (Communism.) தனவந்தர்களை ஏழைகளாகவும் ஏழைகளை திக்கற்றவர்களாகவும் (wretched) செய்து விட்டதென்றும் ஸாம்யம் நிலை நிறுத்தும் எத்தினத்தில் ஸ்வேச்சை போய் விட்டதென்றும் பணக்காரன் ஏழை என்கிற வித்தியாஸம் போய் வேறு விதமான நவீன வித்யாஸங்கள் ஏற்பட்டு விட்டன வென்றும் சொல்கிறார்.

(7) ஸ்டேலின் கக்ஷிக்கு விரோதிகளை சரியான தண்டனை விதிக்காத குற்றத்திற்காக பல உத்யோகஸ்தர்களை சிறையில் போட்டிருக்கிறார்களாம்.

M. K. V.

## நிர்ப்பந்தச்சட்டம் கூடாது.

ஸ்ரீமான் டி. ஆர். வி. சாஸ்திரியாரின் கருத்து.

(M. K. V.)

மைசூரில் கல்லூரியில் நடந்த வருஷாந்திரகூட்டம் ஒன்றில் காங்கிரஸ்காரர்களின் மது விலக்கு இயக்கத்தை ஆக்ஷேபித்து கொண்டு வரப்பட்ட தீர்மானம் சென்னை பிரபல வக்கீல் ஸ்ரீமான் T. R வெங்கட்டராம சாஸ்திரியாரின் அக்ராஸனத்தில் வாதிக்கப்பட்டது. அத்தீர்மானத்தை ஆமோதித்த ராவ் சாகேப் ஹயவதன ராயர் காங்கிரஸ் காரர்களுக்கு ஏழு மாஹாணங்களில் மெஜாரிடி யிருக்கிறது வாத்ஸவம். ஆனால் மெஜாரிடியாரிடமும் குறைவுகள் யிருக்கின்றன. மைனாரிடியாரை நிர்பந்தப்படுத்துவதும். பொது அபிப்ராயங்களை ஸஹியாமலிருப்பதும் காங்கிரஸுக்கு அழகல்ல. சட்டதிட்டத்தால் மது விலக்கை ஸாதிப்பது பொது ஜன ஆக்ஷிக்கே விரோதமானது. குடி என்பது சீதோஷ்ணஸ்திதிகளையும் பொது ஜனஅபிப்ராயங்களையும் பொருத்தது. மேல் நாட்டில் இவ்வியக்கம் பிரயோஜனப்படாமல் போனதுமன்னியில் சட்டங்களின் கௌரவமும் குலைந்து விட்டதென்று வாதித்தார். ஹஸானில் பெரிய வக்கீல் ஸ்ரீமான் S. வெங்கடேசய்யா அமெரிக்காவில் மது விலக்கு சட்டம் பயன் படாமல் போனதற்கு பொது ஜனங்கள் காரணமல்ல. சட்டத்தை மறுத்து போதுமான பண உதவியுடன் மது தயாரித்து வந்த முரட்டுக்கூட்டங்கள் (Gangs) காரணமாகும். அப்பேர்க்கொத்த கூட்டங்கள் நம் தேசத்தில் இல்லை யென்றும் ஆக்ஷேபவாதம் செய்தார்.

ஸ்ரீமான் T. R. வெங்கட்டராம சாஸ்திரிகள் செய்த முடிவுரையில் அங்கு கூடியிருந்த மாணாக்கர்களை பார்த்து பிரஜைகளின் ஸ்வேச்சையை தடுக்கும் நிர்பந்த சட்டங்களின் சார்பாக உங்கள் வோட்டுகளை கொடுக்காதீர்கள். ஜனங்களை எவ்வளவு குறைவாக சட்டங்கள் நிர்பந்திக்கின்றனவோ அவ்வளவு உயர்வுள்ளது அந்த தேசத்தாசாக்ஷி என்று ஜான் ஸ்டுவர்டு மில் சொல்லியிருக்கிறார். இந்தக்காலத்திலோ துரைத்தனத்தார் பலவிஷயங்களில்பிரஜைகளுக்குஹிதமென்று சொல்லிக்கொண்டு ஜனங்களின் ஸ்வேச்சையை குறித்து சட்ட திட்டங்கள் செய்கிறார்கள். அது சரியல்ல. நமக்குசட்டம் செய்ய வலுவிருக்கிறது என்று ஜனங்களின் உரிமைகளுக்கு விரோதமாய் சட்டம் செய்யக்கூடாது. ராஜ்ய தந்திரிகளின் மனப்பான்மை, 'நான் எதையும் செய்வேன். ஒருவரும் என்னை குறை கூறக்கூடாது, என்பதாயிருக்கிறது. என்று பலவிதமாய் வற்புறுத்திப்பேசினார்கள்.

என்ன பேசியும் பலன் படாமல் ஷை தீர்மானத்தை பெருத்த ஸங்கியைக்கொண்டு ஆக்ஷேபித்து விட்டார்கள்.

இதினால் நாம்அறிவதென்ன? சாரதாமசோதா சட்டமாகுமுன் பிரஜைகள் ஸ்வேச்சையை குலைக்கும் சட்டத்திற்கு இடம் கொடுக்கக்கூடாதென்று ஸனாதநிகள் கத்தினார்கள். மதுபானம் செய்வது கெடுதல் தான் என்று மதுபானம் செய்பவனேஒப்புக்கொள்கிறான். மதுவிலக்கு நல்லது என்று சாஸ்திரியார் அவர்களும் பூர்ணமாய் ஒப்புக்கொள்ளுகிறார் இப்படி யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் சட்ட நிர்பந்தம் தவறு என்று நினைக்கும் சாஸ்திரியார் ஸனாதநிகள் சாரதா சட்டம் தங்களுக்கு வேண்டாமென்று ஆக்ஷேபித்தும் அதை பலாக்காரமாக அமுலுக்கு கொண்டு வந்த காங்கிரஸ் வாதிகளையும் அவர்களுடன் கூடி உழைத்த ஸர்க்காரையும் எதிர்த்து ஏன் வாதம் செய்ய வில்லை? மிதவாதிகளும் காங்கிரஸுடன் அப்போது சேர்ந்து கொண்டார்களே! அதனுடைய பலன் இப்போது சாஸ்திரிகள் அவர்களுக்கு விளங்குகிறது போலும்! நன்றாய்கற்றறிந்த அனுபோகஸ்தர்களுக்கே, என்ன செய்தால் என்ன் வரும் என்று எளிதில் புலப்படா விட்டால் உத்ஸாகம் மேலிட்டு அனுபோகமற்ற வாலிபர்களுக்கு இது விஷயங்களில் என்ன உணர்ச்சி ஏற்படும். இவர்களை மீட்டிங் கூட்டி வோட்டு எடுப்பதே தப்பல்லவா? 'வாலிபர்கள் அபிப்ராயம் நமக்கு ஸாதகமாயிருக்கிறது. ஸ்திரீகள் நம்சார்பாக யிருக்கிறார்கள். பல பொது மீட்டிங்குகளில் நமக்கு சார்பாய் தீர்மானங்கள் நிறைவேறியிருக்கின்றன,, என்று கோஷித்துக்கொண்டு நிர்பந்த சட்டங்கள் செய்வது அநீதியல்லவா! காங்கிரஸ் காரர்கள் கொண்டுவர எத்தனப்படும் ஆலயப்பிரவேச சட்ட திட்டத்தைப்பற்றி சாஸ்திரிகள் அவர்களும் அவர் சார்பினரும் என்ன சொல்ல போகிறார் என்றுநாம் கவனிக்க வேண்டும்-

## ஆலயப்பிரவேச மசோதா.

எம். ஸி. ராஜா கொண்டு வருகிறார்.

சென்னை சட்ட ஸபையில் ஸ்ரீமான் எம் ஸி. ராஜா ஆலயப்பிரவேச மசோதா ஒன்றைக்கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார். இதன் விவரம் ஹிந்துப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா சட்ட ஸபையில் ஸ்ரீமான் ரங்கய்யரால் கொண்டு வரப்பட்டிருந்ததைப்போலவே இது இருக்கிறது. பொது ஜனங்களிடம் ரெபரண்டம் மூலம் அபிப்ராயம் வாங்கி ஆலயப்பிரவேசம் செய்து வைக்க டிரஸ்டிகளுக்கு அநுமதி அதிகாரத்தைக்கொடுப்பது இந்த மசோதா.

இது எப்போது சட்ட ஸபையில் விவாதத்திற்கு வருமென்று தெரிய வில்லை.

**Srimad Bhagavatham.**

Condensed, translated, illustrated, by T. R. Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound Price Re. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா.
கிடைக்குமிடம் :—
1. G. Subramania & Co., Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
2. Arya Dharmam Office, Kumbakonam.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒப்புக்கொள்வதுதான் யுக்திக்கு சரியாகும். ஹிந்துமதத்தில் ஸ்ருஷ்டிக்கு ஆரம்பமுண்டென்பதை ஒப்புக்கொள்ளாததினால், ஸத்கதி ஸாதனத்தைப் போதிக்கும் வேதமும் உலகமும் ஸமகாலத்தில் தோன்றினவைகள் என்றும், அவ்வேதங்கள் பகவானிடமிருந்தே வெளிப்பட்டவை என்றும் சொல்கிறோம். இப்படிக்கன்னியில், பின்னொரு காலத்தில் ஸ்ருஷ்டிக்கு வெகுகாலம் கழித்து, பகவானைத்தவிர வேறு ஒரு பெரியோரிடமிருந்து ஏற்பட்டதாய்ச் சொல்லும் எந்த மதமும் அநித்யமாயும் அறை குறையாயும்தான் இருக்கும்.



## The place of Religion in Educational Reconstruction.

BY MR. T. A. RAMACHANDRA AIYER, B.A.,L.T
AYYAMPET.

*(Continued from 12—8—37.)*

*The Value of Achara or Religious Practices*:- The main purpose of education, namely, soul culture, can be accomplished only by disciplinary practices and not by cramming the mind with bits of knowledge on various subjects or developing muscular energy and bodily strength. Both mind and body have to be disciplined—not merely trained to think all kinds of thoughts and perform any kind of physical act. Hence observance of religious practices by all was itself considered an effective method of mass education. Thus rules and regulations were framed and restrictions imposed on all the acts of man (physical as well as mental), as eating, talking, sleeping, drinking, bathing, dressing, etc., so much so that Swami Vivekananda used to say that "the Hindu talks religion, walks religion, eats religion, sleeps religion, and so on." Several institutions were started and various methods adopted to broadcast and disseminate these religious principles and practices among the masses. Observance of various rites and ceremonies, daily and periodical, fasts, festivals, and vows, religious discourses for popularising the Vedic teachings through the *Ramayana*, the *Bhagavata*, and other similar treatises, devotional dramas and Bhajana parties, the construction of temples and the daily worship and periodical festivals connected with them—all these and other items formed a regular network of agencies for diffusing religious principles and practices among all the people and into the inner-most depths of society. This was done so thoroughly and effectively that several eminent men of other countries have declared that the average Indian is much more cultured than an average European, in spite of the deplored illiteracy of the former and the boasted literacy of the latter. Mr. S. V. Ramamurthy, I. C. S., once truly remarked that the average illiterate Indian peasant is much more cultured than even a graduate of the University. The late lamented P. T. Srinivasa Iyengar, a brilliant scholar and historian, often said that temples were centres of culture round which alone true history can be thought. A distinguished retired educational officer while listening to a learned discourse on the *Ramayana* by an erudite Pandit spontaneously exclaimed: "Here we have a regular walking University!".

This is how mass education was successfully given in ancient India, and we educationists must tap these sources of culture and revivify them before adopting such doubtful methods as compulsory elementary education through the Three R's only, the library movement, night schools for adults, and so on. These modern methods may not be of great value, because compulsory elementary education without the basic religious instruction, may only produce a body of young men whose minds will be exposed, at an impressionable age, to all kinds of cheap books and periodicals with disastrous consequences. A field is far better left to lie fallow than simply ploughed so as to be exposed to the growth of rank weeds. As for the library movement about which a great deal is said in these days, it will prove of some use, only if the sort of books to be circulated and studied by the people, is strictly censored and regulated with religious rigour, Else, it will be a menace to society, as the number of books on the field is so large, and the variety of thoughts they contain are so bewildering—ranging from companionate marriage to birth-control and socialism–that the minds of our unemployed young men, now let loose on society without the restraining influence of religion, are sure to be distracted and misled into dangerous channels. A Western author very truly remarked some time back that "birth-control is more urgent in the dominion of books, than among men."

Thus *Achara* or observance of religious practices is the true foundation of education as it will ensure character building among our pupils which is one of the principal aims of education.

Another fundamental principle underlying religious instruction is the development of will-power which is sought to be trained and strengthened by meditation, concentration, daily worship and prayers. The incapacity to exercise the will-power is a striking defect in our average English educated man. Though several good principles are learnt at school, he is not able to practise successfully even a few of them, for lack of the requisite will-power. Regular practice of even one or two good principles paves the way to success in life far more than the mere knowledge of a number of good principles. The converse of this truth is forcibly expressed in the proverb "Hell is paved with good intentions." Now, will-power is developed by exercising the mind and body to overcome obstacles, mental and physical. Concentration of mind and meditation on God, daily prayers, and rigorous discipline of mind and body through fasting and other vows, and similar observances have been devised for increasing the power of will. The tremendous will of Mahatma Gandhi is one of the secrets of his greatness and he has achieved more by his fasting than by his preaching.

Again religious habits ensure health of body and peace of mind. Every *Achara* devised by the wise men has in view not only soul-culture, but also discipline of body and mind. It is a well-known fact that the orthodox man who is so often despised by us, possesses greater vitality of body and peace of mind, as a result of his daily disciplinary practices, than we, the English educated, who have learnt, among other wrong things freedom for our bodies and the unrestricted play of our senses. Here is a point to be taken note of by those interested in the physical welfare of our pupils. Peace and contentment of mind, as well as restraint over body, passions, and senses, are essential for the joy of man and the health of his body. The development of these factors are amply provided for in religion.

Note again the good habit of daily reading a portion of the sacred texts ('Parayanam'), and singing hymns in praise of God and its influence on mind and soul. We are lifted to higher levels during the 'parayanam' and our minds are carried beyond the madding crowds and rendered free from the miseries of mind often experienced by the godless. Abiding faith in God and a resultant 'shanti' or peace of mind have a healthy reaction on body also. This also is a sure remedy for many diseases such as tuberculosis, the alarming increase of which in India is attributed by eminent doctors more to mental worry and restlessness, than to other causes.

Time and space do not permit me to refer in detail to the highly educative value of many other religious observances which are hastily dubbed as either superstitious or meaningless by those who have not cared to study and understand them. But I may be permitted here to stress the fact that every one of these practices has been conceived and perfected in a comprehensive and far sighted manner so as to have a bearing on the whole of man. This kind of vision is sadly wanting in these days of boasted scientific research. Dr. Tagore has truly remarked that a piece of finely woven Dacca muslin examined under the microscope shows broad meshes at which our imagination shivers, though it is not the reality. Things are thus magnified out of all propotion to truth by scientific research and things appear distorted or twisted. Wild and wonderful theories are thereby propounded by scientific research with the same rapidity with which they are afterwards demolished in the light of new facts perceived later on by the same or more complicated and intricate, but none the less imperfect instruments. Religion is free from this effect because it takes a comprehensive view of things, seen in their true proportion by the aid of wisdom's eye. Scientific reason and research by their very limited scope cannot escape from error. Thus Macarison's dietic researches are confined to the effect of food stuffs on bodies alone, but not on the mind or the soul.

Similarly in divising schemes of physical education, their reactions, good or bad, on mind and soul, seem to be ignored. We educationists, should avoid such pitfals and base our educational methods on our own psychology instead of on the Western one as we are now doing.

I shall illustrate this comprehensive vision of the wise men of our religion, with reference to one daily act enjoined on all of us, namely, "morning baths and worship" and its wonderful efficacy in ensuring for us bodily health, mental joy, and peace and elevation of soul. One is asked to go to a river or a tank and bathe in its cool waters. The mere bath purifies the body and tones the nervous system, thus laying a sure foundation for health. With his mind now calm and vigorous after the cold bath, he stands facing the East in which the glorious and effulgent sun is about to rise and silently utters his prayers. The smooth sheet of water by his side reflecting the blue dome of the sky above, the broad expanse of the heavens above his head, and the refulgent splendour of the rising sun on the horizon in front of him,—all these elemental forces of nature combining together, exercise a harmonious influence on his body, mind and soul. The music of eternity swells through his soul, a rare joy and peace wells up in his mind, and the whole frame of his body tingles and vibrates with the infinite energy of the radiations of the sun, who is the source of all kinds of activities on this planet. What higher kind of training and education of body, mind, and soul do we wish for our young boys, as well as for our own selves, than that envisaged by our ancients in this one disciplinary religious practice?

Every observance prescribed by all great religions can be understood and its true import realised in the manner above shown, only if you have the much needed faith which is a requisite pre-condition to a full appreciation of religion in all its aspects. Thus, fasting enjoined by all religions tones the body, develops the will-power, and elevates the soul. The term "Upavasam" applied to fasting forcibly brings out its value and significance. "Upavasam" means "living near God" as fasting brings us nearer and nearer to Truth, which Buddha and Christ discovered only after penance and fasting.

In the manner shown above, religious practices were used as effective instruments of education in ancient India and religion was connected with, and related to, every branch of our lives. Music, painting, and sculpture, and other fine arts were harnessed to religion as we see in our temples and in the worship of God in our own homes. Religion was part and parcel of our lives—not a separate water-tight institution unrelated to life, as we see in the West. Note and ponder over the paradoxical statement

*(continued on page 8)*

recently made by Hitler in Germany only last week, when he warned the clergy not to meddle with the education of German youth but to confine their activities to "religious instruction," as if "education" is different from "religious instruction." But education according to Hitler is the preparation of German youth for "war."

*Objections answered.* The objections raised against religious instruction in schools are more imaginary than real. Most of these objections can be traced to ignorance of religion and of its influence in the field of education. In my experience of about thirty years as a teacher, I have noted an eager desire to introduce religion in schools on the part of teachers who feel a faith in religion and themselves lead a pious life. The objections really come from people who are either thoroughly ignorant of religion or fight shy of the restrictions it imposes on them. One main objection is want of time for it in the time-table. This can be easily met. If the subject is considered vitally important we can easily find place for it by considerably reducing the scope of the general knowledge subjects as history, geography and elementary science, the cultural, or even the utilitarian value of which is doubtful especially in the way in which they are taught now.

Another difficulty that may be pointed out is the need for teaching two or three religions in each school. My answer is that it is enough if one religion is taught so as to meet the needs of the majority of the pupils in a school. As the Bible is already taught in the Christian Mission Schools, and the Quran in Muhammadan schools, there will be need for teaching only Hinduism in all the schools where Hindu pupils are in the majority. Finance cannot be a serious objection, since the pay of the religious instructor cannot be great. It is enough if a nominal sum is paid to him and he may be even had gratis in big centres as Tanjore and Kumbakonam, where the volume of public opinion in favour of religious instruction is daily increasing.

The most serious objection, I have ever heard, is that it will rouse up sectarian and communal feelings in the school. Now, this is the very reason for which I urge that religious instruction should be taken up in the school and not left only to the home and the parents. In view of the feelings of religious intolerance, which we often note among the uneducated in the homes as well as outside the best place for promoting ideas of tolerance and feelings of mutual goodwill, between religion and religion. and among the various sects of the same religion, is the school which should be a real centre of culture in the fullest sense of the term. The school is the proper place for putting before the plastic mind of the young pupil, the grand ideal that his attitude towards his religion and toward other religions should be the same as that towards his own mother and towards the mothers of his friends and neighbours. He must love his religion intensely as he loves his own mother, but, at the same time, he must treat with reverence and regard other religions, even as he would respect and love the mothers of others. This cardinal aspect of toleration in religion can be taught, cultivated, and developed only in schools in the most effective manner. To those who would still urge that religious instruction is best imparted at home, I would point out that, even then, it can be supplemented and enriched in the school.

I contend that the introduction of religion in the school as a *subject* will raise its value and enhance its prestige in the minds of pupils as well as teachers. It will also effectively check the tendency, often noted in schools, to undermine religion, consciously or unconsciously, in the course of teaching other subjects, because religion is not given the status of a 'subject.' All the various subjects are taught in schools in a correlated manner, and not in a mutually destructive spirit, and hence religion will gain as much by being thus elevated and given a place in the scheme of studies, as it might lose by being kept outside.

The object of this paper will be realized for the present if we give at least some decent place for religion in our scheme of studies. though not the supreme place it deserves. The working out of a detailed scheme of religious instruction in the elementary and secondary school courses and the fitting of it in the scheme. correlating it to other subjects, is beyond the scope of this paper. But it is not at all a difficult matter, when once the importance of religion is realized by us and the demand for it is made. But I know it is not practical politics just now; because poor religion, by her very nature, cannot elbow her way into our hall in the midst of the athletic crowds about, and the din and clash of conflicting interests and the clamour of the various subjects inside the hall. So she has to stand outside, meekly and patiently, waiting for the day when the conflict will be over, and when, exhausted after the struggles, and distracted and disappointed by our repeated failures to solve our questions, we ourselves will look round for the deliverer, and invite the goddess of religion to enter our hall and guide our deliberations. May the Almighty soon usher in that happy day for our Motherland!

## A Review.

We have just received a copy of the Annual Report of the working of the South Indian National Association and Ranade Library for the period from 1—10—36 to 30—9—37. The fact that 35443 persons made use of the reading room of the Library during that period and 2133 books were lent out to members is very commendable and testifies to the usefulness and efficiency of the institution.

It is however a matter for regret that in spite of its popularity, the Government and the Corporation have given it such paltry grants as Rs. 112 and Rs. 120 respectively. It is hoped that the present Government which is professedly for rooting out mass illiteracy will make more substantial grants to all public libraries as they play no small part in the achievement of that goal.

There is one suggestion in the report which we would specially commend to the attention of the Government. The committee have rightly suggested to the educational authorities not to insist on the purchase for the library of books on "modern light literature." This suggestion is none too soon. Every one connected with any public library will endorse the committee's view. Thanks to Cinemas and Talkies, the craze for 'light literature' and particularly that dealing with 'Sex' and 'Nudism' is assuring such proportion that it is urgently necessary for the Government to put a curb on its dissemination. When Mr. S. M. Fossil of the Madras Library Movement was here recently, we took the liberty to ask him whether it was right, for public libraries to possess 'Sex' and 'Nudism' books. We were pained to hear his reply that every kind of book including 'Sex' books was necessary for public libraries. We venture to suggest that there is something fundamentally wrong with this view. Libraries are expected to cater for the spread of knowledge—not of any kind but only of the right sort. It is needless to say that unless the spread of such light literature is effectively controlled, the moral standard of our country will considerably deteriorate.

### Government of Madras.

### Press Communique.

Enquiries have been made as the total number of persons employed in this Province in the various services, the cost of such services and the total pensionary liability. The accounts figures for 1935–36 have been collected and are given below:—

| Particulars of service. | Total number of posts. | Cost Rs. Lakhs. |
|---|---|---|
| I. C. S. | 162 | 28·69 |
| All-India Services exclusive of I. C. S. | 261 | 38·68 |
| Provincial Services | 1,414 | 101·74 |
| Other Services—Subordinate, Ministerial and Inferior services including village establishments | 204,162 | 550·82 |
| Annual pensionary liability | | 92·53 |
| Total | 205,999 | 812·46 |

### திருச்சிராப்பள்ளி.

ஓர் பெரியாருடைய வியோகம்.

கவர்ன்மெண்ட் தபால் இலாகாவில் மிக கௌரவமாயும் எல்லோரும் கொண்டாடும்படியான ரீதியில் வேலைபார்த்து உபகாரச் சம்பளத்துடன் விலகிய பிறகு தக்கபடி அனுஷ்டானங்களை நடத்திக்கொண்டும் ஸநாதன தர்மப் பிரசாரங்களில் ஈடுபட்டவரும் ஸ்ரீமத் ராமாயணம் முதலான உத்தம க்ரந்தங்களை சிரவணம் பண்ணிக்கொண்டும் மிகுந்த சிரத்தை பக்தியுடன் ஸ்நானம், ஜபம், பூஜை, பாராயணம், அதிதிகளின் ஆராதனம் இவைகளிலேயே விசேஷ ஊக்கமுள்ளவரும், வாகூர் மாஜி ஸூப்ரெண்ட் ஸுப்பிரமணிய அய்யர் என்ற ப்ராம்மணோத்தமர் தனது 64வது வயதில், திருச்சி சுகதாஸ்மண்டித்தெருவில் தனது கிருஹத்தில் (27—10—37ல்) தேஹ வியோகமடைந்தார் என்பதை கேட்டு வருத்தப் படாதவர் யாருமில்லர். அவர் ஆத்மா சாந்தியடைக. ஷை யாருக்கு ஒரு புத்திரனும் இரண்டு பெண்களும் இருக்கிறார்கள். ஷையார் குடும்பத்துக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன்.

ஒரு நிருபர்.



## வெளியூர்ச் செய்திகள்.

### திருச்சி ஆயுர்வேத ஸபா ஸ்ரீதன்வந்தரி ஜயந்தி.

சுகாதார உபன்யாஸம்.

ஸ்ரீதன்வந்தரி ஜயந்தியை உத்தேசித்து திருச்சி டவுன் ஹாலில் 31. 10. 37. மாலை 5மணிக்கு ஒருபெரிய பொதுக்கூட்டம் கூடிற்று. திவான்பகதூர் ஸர். டி. தேசிகாசாரியாரவர்கள் தலைமை வஹித்தார். தலைவர் முன்னுரையில் தன்வந்தரி பகவானுடைய அவதார விசேஷத்தையும் ஆயுர்வேதத்தால் ஜனங்களுக்கேற்படும் உபகாரத்தையும் அதன் அநேகவித பெருமையையும் விளக்கிச்சொன்னார். ஸர்க்காரிடத்திலும் ஜனங்களிடத்திலும் இன்னம் அதிக ஆதரவைப்பெற ஆயுர்வேத வைத்யர்கள் ஒற்றுமையாக ஸங்கங்களை அதிகமாக ஸ்தாபித்துக்கொண்டு பிரசார வேலை ஊக்கமாக செய்ய முன் வர வேண்டுமென்பதை மிகவும் முக்கியமானதாகச்சொன்னார்.

மதராஸ் கவர்மெண்டு இந்திய வைத்யக் கலாசாலை உதவி ஆசிரியர் டாக்டர் நாராயணசாமி அய்யர் அவர்கள் (ஆயுர்வேதத்தில் சுகாதார முறை) என்ற விஷயத்தைப்பற்றி உபன்யசித்தார். தானசர்யா, ருது சர்யா தனிப்பட்ட முறை, ஆகார விஹாரங்கள் முதலிய விஷயங்கள் ஆயுர்வேத சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கும் பிரகாரம், அனுஷ்டிக்கும் வழிகளை விளக்கி அதன்படி நடந்தால் இந்தியருக்குதற்காலம் இருக்கும் அல்பாயுசும்; அகால மரணமும், சிசு மரணமும், இப்போதுள்ளவிசனிக்கத்தக்க நிலைமையில் இருக்காதென்று செவ்வைபாக எடுத்து காட்டினார். மேல் நாட்டு நாகரீகத்தை நாம் தழுவுவதால் ஏற்படும் தீங்குகளையும் சொல்லி மேல் நாட்டு முறையில் செய்யப்படும் ஆராய்ச்சி பொது ஜனங்களுக்கு பிரயோஜனமில்லாமலிருப்பதும் சொல்லப்பட்டது.

முடிவில் உபன்யாசகர் — இக்காலத்தில் சிலர் ஆயுர்வேதாபிவர்த்தியைப்பற்றி பண்டைய சாஸ்திரங்களை காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணத்தின் பேரில் காப்பாற்றலாம். ஆனால் எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு எழுதி வைத்து பிறகுவளர்ச்சி குன்றி விட்ட பழய ஆயுர்வேதம் இன்று உலகத்தினருக்கு எவ்விதம் பயன் தரக்கூடியதாக இருக்க ஸாத்யமாகும் என்று நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறான அபிப்ராயம். எத்தனை பல்லாயிரம் வருஷப்பழசாயிருப்பினும் ஆயுர்வேதம் 'இன்றைக்கும் உலகத்தினருக்கு பூர்ணப்பிரயோஜனம் அளிக்கும் சக்தி உடையதாகவே இருந்து வருகிறது என்பதில் சற்றும் ஐயமில்லை. இன்று பூலோகத்திலிருக்கும் ஸகல வைத்திய சாஸ்திரங்களுக்குள், ஆயுர்வேதத்திலுள்ள சாஸ்திரீய தத்வங்கள், உபயோகசௌகர்யம், முதலியன ஒப்பற்ற முறையில் இருக்கின்றனவென்பது விஸ்தாரந்தம், ஆதலால் ஆயுர்வேதத்தைஅதில் இன்றைக்கு மிருக்கும் பெருமைக்காகவே காப்பாற்றினல்போதும். பண்டையது என்ற எண்ணத்தால் மட்டில் காப்பாற்ற தேவை இல்லை. என்று தீவ்ரமாகச்சொன்னார்.

முடிவில் அக்ராஸனம் வஹித்த ஸ்ரீR. ஸ்ரீனிவாசய்யர் அவர்கள், அட்வகேட் ஆயுர்வேத பிரசாரத்தைப்பாராட்டி சுகாதார முறையை எல்லோருக்கும் சுலபமாக உபதேசிக்கும் ஒரு பத்திரிகை மிகவும் அவசியமானது என்று சொன்னார். வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது.

A. ராகராவ் காரியதரிசி.

### கபிஸ்தலத்தில் சுகாதாரவார விழாக் கொண்டாட்டம்.

டிஸ்டிரிக்ட் போர்டு பெண்பாடசாலை.

கபிஸ்தலத்திற்கு பற்பல மூலைகளிலிருந்தும் அக்கிராமத்தை சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்தும் அக்டோபர்மீ 24-ம்தேதியில் ஆரம்பித்து 29-ம் தேதியோடு முடிந்த இக் கொண்டாட்டத்தை கண்ணுற்று ஆனந்திக்க அநேக ஜனங்கள் கூடினார்கள்.

விளையாட்டு முறைகளில் முக்கியமானவை யாதெனில்:—

மாணவர்களாலும், மாணவிகளாலும் ஹரிஜனங்களாலும் கள் முதலிய பான வகைகளை விலக்கவேண்டும் என்பதைப் பற்றியும், மிஷின்களில் உண்டாக்கும் அரிசியால் உள்ள கெடுதலைப்பற்றி பிரசாரங்கள் செய்யப்பட்டன. மதுபான வகைகள் உடம்பில் விஷமாய்ச்சேர்ந்து தேக ஆரோக்கியத்தை கெடுக்கின்றது என்பதைப்பற்றியும், மேல்கூறிய அரிசியானது நாளடைவில் Beri Beri என்ற வியாதியை உண்டாக்குகிறது, என்பதைப் பற்றியும் வற்புறுத்தி கூறப்பட்டன.

சுகாதார முறை, நல் உணவு, தேகப்பயிற்சி, தொத்து வியாதிகளையும் அவற்றைஎவ்வாறு தடுப்பது என்பதைப்பற்றியும் இன்புளுயன்ஸா, டியூபர்கிளாசிஸ்இவற்றைப்பற்றியும் சுகாதார இலாகா இன்ஸ்பெக்டர்களாலும் அனுபவமுள்ள உபாத்தியாயர்களாலும் உபன்யாசங்கள் செய்யப்பட்டன.

தஞ்சை ஜில்லா சுகாதார உத்யோகஸ்தர் பேச ஆரம்பித்ததில், கர்ப்பஸ்திரீயைபாதுகாத்தல், சிசுக்களை வளர்த்தல், ஆகிய விஷயங்கள் விபரமாகவும் வந்தவர்கள் மனதில் பதியும்படியாகவும் உபன்யசித்தார். உடனே உபாத்தியாயர்களும் இவ்விரண்டு துறைகளிலும் வல்ல ஹெல்த் இன்ஸ்பெக்டர் இருவர்களும் இவ்விஷயங்களைப்பற்றி சுருக்கமாகப்பேசினார்கள்.

இது சம்மந்தமான தீவிர முயற்சிகளும் ஒழுங்குள்ள அழகிய ஏற்பாடுகளும் ஏற்பட்டது. கபிஸ்தலம் ஸ்ரீமான் ஆர். வி நாகருஜ மூப்பனார் அவர்களாலேயே. மற்றவர்களுடை பேர் உதவிகள் நிற்க.

முடிவில் விளையாட்டுகளில் உள்ள ஒவ்வொரு அம்சத்திலும் ஜயமடைந்தவர்களைசிலாகித்து பரிசுகள் அளிக்கப்பட்டன. இவ்விழாக் கொண்டாட்டத்தில் முக்யமாய் கண் எதிரே தோன்றியது யாதெனில்ஒரு வயதுக்குமேல் மூன்று வயதுக்குள்பட்ட தேக ஆரோக்கியமுள்ள திடமுள்ள குழந்தைகளுக்கு தக்க பரிசுகள் அளிக்கப்பட்டதேயாகும். பெண்கள் தேக ஆரோக்கியப்பாட்டுகள் பட மதுவிலக்கைப்பற்றி சிறுவர்கள் சம்பாஷிக்க அவ்வவ்வர்களுக்கு தக்கபடி பரிசுகள் கொடுக்கப்பட்டன. அப்போது வந்திருந்தவர்கள் கரகோஷம் செய்தனர்.

தேக ஆரோக்கிய இலாகா தலைமை உத்தியோகஸ்தர் அவர்களுக்கும் மாலைகள் போடப்பட்டன.

கரகோஷங்களும் நமதுதேசசக்ரவர்த்தினி சக்ரவர்த்தி "நீடூழி வாழ்க" என்ற பிரார்த்தனைகளும் நடந்துவிழா முடிவடைந்தது.

ஒரு நிருபர்.

### குன்னக்குடி.

உபன்யாஸம்.

பிரம்மஸ்ரீ என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஷண்முக விலாசத்தில் தேவகோட்டை அட்வகேட் மகா ாா. ாா. ஸ்ரீ ஏ. சுந்தரமய்யர் அவர்கள் (B. A. B. L.) தலைமையில் 28–10 37உ மாலை 4 மணி முதல் 6மணி வரை ஒரு சபை நடந்தது, பண்டிட்பிரம்மஸ்ரீ என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் "தைவ ஆராதனை" என்பதை மேல்கோளாகக் கொண்டு அதன் தத்வங்களை சுருதி இதிஹாஸ புராணங்கள் மூல்யமாய் உபன்யசித்தும் அதன் அவசியத்தைப்பற்றியும் அதனால் இகத்திலும் பரத்திலும் அனுகூலம் உண்டென்பதையும் இப்பொழுது நம்மூரிலேயே பிரசித்தி பெற்ற நம்மூர் கௌரவ நியாயாதிபதி பிரம்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஆராதனை செய்து வந்து க்ஷேமத்தையும் பெருந்தன்மையையும் அடைந்து வருகிறதையும் அவர்களுடன் தான் சவாரி, பிரசாரங்களுக்கு போன ஸமயம் தெரியாதவிடத்திலும், ராஜாங்க சபையிலும் பாமரர்களும் கூட எதிர் கொண்டு அழைத்துக்கொண்டாடியதை அனுபவித்ததை ஷையார்களையே நான் கேட்டதில் தைவ அனுகூலம் ஒருவருக்கு உண்டு யென்பதற்கு அவர் துணையாக. தெரியாத இடத்தில் உபகாரம் செய்வது தான் அத்தாக்ஷி யென்பது சொல்லியிருப்பதையும் ஆனதால் எல்லாரும் தெய்வ ஆராதனை செய்து க்ஷேமத்தை அடைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாக ரொம்ப அழகாக உபன்யசித்தார்கள்.

ஷை தர்மிஷ்டனால் ஸநாதன தர்ம சபை நடந்து வருவதையும் அவர்களுக்கு நாம் ஒத்தாசை செய்து அனுகூலமாக இருக்க வேண்டுமென்பதையும் 9. 7. 37உயில் புதுக்கோட்டை மகாராஜாகாலேஜ்Professor மகா ாா. ாா. ஸ்ரீ கே. பஞ்சாபிகேசய்யர் (M. A. L. T.) தலைமையில் மூன்றாவது வருஷக்கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடந்ததையும் அவர்கள் வருஷம் தோறும் ஸ்ரீ சங்கர ஜயந்தி தினம் தர்ம உண்டியலை உடைக்கச்செய்து விநியோகம் செய்கிறதையும் "ஆர்ய தர்மம்" தினசரிப்பத்திரிகையாக வரவருஷந்தோறும் ரூ(3) குடுப்பதாக வாக்களித்தபடி செய்கையில் காட்டி தாது ஈசுவர இரண்டு வருஷங்களுக்கும் பணம் அனுப்பி 4–9–37உ ரசீது பெற்றிருப்பதையும் அது போல் எல்லாரும் தர்மத்தில் ஈடுபட்டு கிருதார்த்தர்களாக வேணுமென்றும் உபன்யசித்தார்கள். தலைவருக்கும் உபன்யாசகருக்கும் சபையோர்களுக்கும் வந்தனம் கூறி சபை இனிது முடிந்தது.

நமது நிருபர்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரவிட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

215208


அநாவசியமாக ஏன் - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்



அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## மதிப்புரை.

### உபநிஷதப் பலகணீ.||

(உபநிஷத்திலிருந்து சிறிய கதைகள்.)

ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் எழுதியது. சென்னை. மயிலாப்பூர். விவேக போதினி காரியாலயத்தாரால் வெளியிடப்பட்டது. விலை அணு 0–8–0

உலகில் நாளுக்கு நாள் நாகரீகமும் தெய்வ பக்தியும் நமது சிறுவர்களுக்கு விருத்தியாகும்படி. செய்வது நமது கடமையில் ஒன்று. நமக்குப்பின் உலகத்தில் வாழ்ந்து நல்ல ஸ்திதியில் வருபவர்கள் நமது குழந்தைகளே. ஆகவே அவர்களை எவ்வளவு நன்ருய் கற்பிக்கிருேமோ உலகம் அவ்வளவு மேன்மையான ஸ்திதிக்கு வரும். தற்கால பள்ளிக்கூடங்களில் நமது தர்ம நூல்கள் கற்பிக்கப்படுவதில்லை: நமது சாஸ்திரங்களில் நமது முன்னோர்களைப்பற்றிய வீர்யம் வணக்கம் ஆத்ம தியாகம், இரக்கம், பிரியம், வழிபாடு முதலியவைகள் நமது பழய நூல்களில் நிரம்பியிருக்கின்றன. அவைகளை நாம் சிறு வயதிலேயே சுத்தமான மனதில் செவ்வையாய் பாவச்செய்து தெய்வ பக்தியை மாணவர்களிடம் பாவச்செய்தல் வேண்டும். கல்லூரி மாணவர்கள் தங்களுடைய முக்யமான கடமைகளுக்குள் இந்நூலையும் சேர்த்துக் கொண்டு படித்து சமூக முன்னேற்றத்திற்கு தொண்டு செய்ய முன் வர வேண்டும். ஆசிரியர் முன்னுரையில் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதை எளிய நடையில் சொல்லியிருக்கிருர். பல உபநிஷதங்களிலிருந்து ரஸமான விஷயங்கள் பல திரட்டப்பட்டுள்ளன. அவைகளெல்லாம் மாணவரின் மனதை கொள்ளை கொள்ளு மென்பதில் ஐயமில்லை. குரு குல வாசம் என்ற தலைப்பின் கீழ் அமைக்கப்பெற்றது மிக மிக பொருத்தமானது. ஒவ்வொரு பிரகரணத்தில் வேண்டிய சான்றுகளுடன் அவைகளை தேவ நாகர எழுத்திலும், தமிழில் கூடவே மூலம். அர்த்தம் இவைகளும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. உபநிஷத்தில் என்ன விஷயம் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதென ஸ்தூலமாக அறிந்து கொள்ள இது ஹேதுவாகும். அழகான எழுத்தில் உயர்ந்த காகிதத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இவ்வித விஷயங்களை எளிய தமிழ் நடையில் எல்லோருக்கும், உணர்த்த வேண்டு மென்ற எண்ணத்துடன் எழுத ஆசிரியர் முன் வந்ததை நாம் பாராட்டுகிறோம்.

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரிகள்.
மேலக்காவேரி.

## ஸ்ரீ குருதத்வ விமர்சம்.

(ஸ்ரீ பிரும்ஹவித்யா விமர்சினீ சபையின் அக்ராஸனரும், ஸ்தாபகருமான பிரும்மஸ்ரீ ந. சுப்ரமண்ய அய்யரவர்களால் இயற்றப் பட்டது. இதன் விலை அணு 5. மானேஜர் ஸ்ரீ பிரும்ஹவித்யா விமர்சினீ ஸபை. 89 லாயிட்ஸ் ரோடு ராயப்பேட்டை சென்னை.)

இந்நூல் கிடைக்கப்பெற்றோம். இந்நூல் ஸ்ரீ பிரும்ஹவித்யா விமர்சினீ ஸபையில் நடந்த உபன்யாஸத்தின் ஸாரஸங்கிரஹம் என்று தோன்றுகிறது. ஷை ஸபையில் நடக்கும் உபன்யாஸ விஷயங்களை நேரில் கேட்க முடியாதவர்களுக்கு இவ்விதம் புத்தகரூபமாக வெளியிடுதல் மிகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. இச்சிறிய புத்தகத்தில் "ஸ்ரீ குருவின் ஆவச்யகத்வத்தையும் குருவால் சிஷ்யர்களுக்கு கிடைக்கும் பிரயோஜனத்தையும்" "ஸர்வோபாஸ்யனுயும், ஸர்வேச்வரனுயுமுள்ள பகவானைக் காட்டிலுங்கூட ஸ்ரீ குருவே சிறந்தவரென்பதையும், முடிவில் ஸ்ரீ குருவுக்கும், உபாஸ்ய தேவதைக்கும் பேதமில்லை என்பதையும் முமுக்ஷுக்களுக்கு குருபாம்பாானு ஸந்தானம் முக்யமென்பதை ஸ்ரீ குருத்யானம் பண்ணவேண்டிய ப்ரகாரத்தையும், ஸ்ரீ குருபாதுகா ப்ரபாவத்தையும் அதன் த்யானக்ரமத்தையும், ச்ருதி ஸ்மிருதி புராண வசனங்களுடன், தெள்ளிய தென்மொழி நடையில் உபன்யஸித்திருக்கிறது. இப் புத்தகத்தின் கடைசியில் இதனுசிரியரால் இயற்றப்பட்ட "குர்வார்யாஸ்தவம்" "ஸ்ரீ மஹா ஷோடசீமாத்ருகா ஸ்தோத்ரம்" இவ்விரண்டும் தேவ நாகர லிபியில் அச்சிட்டு இணைக்கப்பட்டிருக்கிறது. பெரிய பெரிய சாஸ்திரங்களின் ரஹஸ்யத்தை யெல்லாம் ஸுலபமாய் சிறுவர், சிறுமிகள் எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி இந்நூலாசிரியர் இதில் நிரூபித்திருக்கிருர். இச்சிறு நூலை யாவரும் ஆதரிக்கவேண்டியது அவசியம். அப்படி ஆதரித்தால் இதுபோன்ற வேறு உபன்யாஸங்களும் நூல்வடிவமாக வெளிவருவதற்கு அனுகூலமாக இருக்கும். என்று நான் ப்ரியவாசகர்களிடம் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்நூலாசிரியர் தமது அனுபவத்தையும் இந்நூல் வாயிலாக வெளியிட்டிருப்பதால் ஸ்ரீ குருத்வ விமர்ச விஷயத்தில் சுருதி ஸ்மிருதிகள் மட்டும் பிரமாணமாய் இதில் சொல்லப்படவில்லை. யாவருக்கும் ஸ்ரீ குருவின் அனுக்ரஹம் அவசியமாய் தோன்றினுல் அதற்கு இந்நூல் அவச்யமென்று நான் கருதுகிறேன்.

आस्त देशिक चरणं
निरवधिरास्ते तदीक्षणे करुणा ।

आस्तांकिमपितदुत्कं
किमतः परमस्ति जन्मसाफल्यम् ॥

(ஸ்ரீ பகவத்பாதாள்.)

ஆத்மவித்யாபூஷணம்
இஞ்சிக்கொல்லை V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

## கும்பகோணம்

### ஹரிச்சந்திர புராணம்.

கும்பகோணம் வாணுதுறை சந்நிதித்தெருவில் ஸ்ரீமான் சுப்ரமணியர் அவர்கள் (முனிசிபல்கவுன்ஸிலர்) கிருஹத்தில் சென்ற 2மாதங்களாக ஹரிச்சந்திர புராணம் என்னும்புண்ணிய சரிதமானது பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதரவர்களால்தினந்தோறும்உபன்யாஸம்செய்யப்பட்டுவருகிறது. ஷை புராணத்தில்ஆங்காங்கு மூலவாக்யங்களை எடுத்துக்கொண்டு வேத ஆகம ஸ்மிருதி சுருதி வசனங்களுடன் சத்யத்தின் பெருமையும் இன்னும் விசேஷமான சேஷதர்மங்களையும் யாவரும் எளிதில் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்குமாறு உபன்யாசம் செய்து வருவது அபூர்வமாயும் வசனம்வசீகரமாயிருப்பதால்பெரியோர்களிலநேகர் தவருமல்வந்து கதாச்ரவணம் செய்துபக்திரஸத்தைப்பருகிப்போவது புகழத்தக்கதாயிருக்கிறது. பூஜ்யரான ஸ்ரீஹரிச்சந்திர சக்ரவர்த்தியின் பட்டாபிஷேகம் நாளது அக்டோபர்மீ 24உ (ஐப்பசிமீ 8உ) ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணிக்கு நடைபெற்றது. மறுபடியும் ஷை ப்ரம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதரவர்களின் அநேக உபன்யாஸங்கள் நடைபெறகூடுமாதலால் அக்காலம் பக்தகோடிகள் வந்து சிரவணந்தத்தை அடையுமாறு கோரப்படுகிறது

ஒரு நிருபர்.

## கும்பகோணம்.

கும்பகோணம்; ராஜாதர்மவேதபாடசாலையில் வழக்கம்போல் நடந்துவரும், ஸ்ரீ,;சித்ஸம்வர்த்தனி, ஸபையின் ஆதரவில்,வெங்கிட்டாரயர் அக்ரஹாரம். ப்ரம்மஸ்ரீ S சுப்ரமண்யசாஸ்திரிகளவர்களக்ராஸனத்திலும் ஷை பாடசாலை,எண்ட்ரன்ஸ் கிளாஸ் மாணுக்கன் R. கணபதி, என்பவரால்,"ஸத்ஸங்கமஹிமா." என்னும் விஷயமானது வடமொழியில் எழுதிபடிக்கப்பட்டது. பிறகு அக்ராஸனரால் அதே விஷயத்தை; வடமொழியிலும், தமிழிலும் உபன்யஸிக்கப்பட்டு, ஆதியிலும் மங்களாசரணஞ்செய்யப்பட்டுஷை. ஸபையானது இனிது நடந்தேறியது

ஒரு நிருபர்

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam. Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்

4/22 ல 43

18-11-1937

215209

639

215209

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்: அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஞு கார்த்திகை-மீ 3வ 1937ஞு நவம்பர்-மீ 18வ | ஸ 43 |
|---|---|---|

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## சட்டஸபை காங்கிரஸ் கக்ஷி

### மந்திரிஸபையிடம் நம்பிக்கை.

சென்னை சட்டஸபைக் காங்கிரஸ்கக்ஷியின் கூட்டம் அஸம்பிளிக்கட்டிடத்தில் கனம் ஸி. ரா. ஆசாரியாரின் தலைமையில் 14வ நடைபெற்றது. 150 மெம்பர்கள் வந்திருந்தார்கள். இதில் காங்கிரஸ் மந்திரிஸபையிடம் அந்தக் கக்ஷியினருக்கு நம்பிக்கையிருக்கிறதாவென்று ஜீவநாடியைப் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டது. நம்பிக்கைத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. மூன்றுமாதமாக மந்திரிகள் சாதித்த வேலைகளைப்பற்றி துண்டு நோட்டீஸ் அச்சிடப்பட்டது.

சட்டஸபையில் செய்யப்படவேண்டிய சில முக்யவேலைகளைப்பற்றி இக்கூட்டத்தில் யோஜிக்கப்பட்டது.

## கட்டாய ஹிந்தி

### ஸ்ரீமான் டி. ஆர். வி. சாஸ்திரியாரின் எதிர்ப்பு.

சென்னை பிரமுகரான ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் காங்கிரஸ்மந்திரிகள் செய்ய உத்தேசித்துள்ள கட்டாய ஹிந்திமுறையை பலமாகக் கண்டித்திருக்கிறார். தமிழ் தேசத்தில் ஒரு அன்யபாஷையைக் கட்டாயமாக்குவது மிகவும் அநுசிதமென்றும் இம்மாகாணத்திலுள்ள கிராம வாசிகளில் 100க்கு 95 பேர்கள் கிராமத்தைவிட்டு வெளிச்செல்லக் கூடியவர்களல்லவாகையால் அவர்களுக்கு ஹிந்தி அநாவச்யமென்றும், பழைய காலத்தில் அரசியல் கொடுங்கோன்மையால் அன்ய பாஷை நிர்பந்தம் ஏற்பட்டதுபோல் இப்போதும் ஏற்படக்கூடாதென்றும் ஹிந்தி இஷ்டபாடமாக இருப்பதே மேலென்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## பாட்லிவாலாவுக்குத் தண்டனை

### 6-மாதம் வெறுங்காவல்.

அபேதவாதியான ஸ்ரீமான் பாட்லிவாலா ராஜத்வேஷமாகப் பேசியகுற்றத்திற்காக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு 6மாதக்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அஸெஸர்கள் இவர்மீது குற்றமில்லையென்று சொல்லியும் ஜட்ஜி அதை ஏற்காமல் மேற்கண்ட தண்டனையை விதித்தார்.

## நீல் சிலை எடுக்கப்படும்.

சென்னை மௌண்ட்ரோட்டில் உள்ள மிஸ்டர் நீல் என்ற வெள்ளைக்காரருடைய ஞாபகார்த்தச் சிலை உருவத்தை எடுத்துவிடவேண்டுமென்று பெரிய கிளர்ச்சி நடந்துவந்தது. இதற்காக ஸத்யாக்ரஹம் செய்து பலர் ஜயிலுக்கும் போனார்கள். இப்போது காங்கிரஸ் கவர்ன்மெண்டார் இந்தச் சிலையை எடுத்துவிடவும், அதை மியூஸியத்தில் வைக்கவும் முடிவு செய்திருக்கிறார்களாம்.

## காங்கிரஸ் ஸர்க்காரிலும் 144.

ஏற்கனவே பலமாக காங்கிரஸ் காரர்களால் எதிர்க்கப்பட்டு வந்த 144வது பிரிவானது காங்கிரஸ் கவர்ன்மெண்டுகளாலும் ஆங்காங்கு தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

ஷோலாப்பூரில் சிகப்புக்கொடிக் கிளர்ச்சிக்காரர்களின் தூண்டுதலின்மேல் அங்குள்ள ஒரு ஜாதியினர் ஸர்க்காருக்கு எதிராகக் கலஹம் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். இதைத்தடுக்க பம்பாய் ஸர்க்கார் 144வது பிரிவை அங்கு அமுல் நடத்திவருகிறார்கள். சிவப்புக்கொடி இயக்கமென்பது புரட்சிக்காரர்களின் இயக்கமாகும்.

## சென்னை புதிய மேயர்.

ஆதித்திராவிட வகுப்பைச்சேர்ந்த ஸ்ரீமான் சிவஷண்முகம் என்பவர் சென்னைநகர மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்டார் நீண்டநாளில் இவர்தான் முதல் முதலாக மேயரானவர்.

ஸ்ரீமான் டாக்டர் யூ. கிருஷ்ணராவ் டிப்டி மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இருவரும் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தவர்களாம்.

## கடன் தவணை ஒத்திவைப்பு மசோதா

### ஸர்க்கார் யோஜனை

சென்னை பிரசார மந்திரி வெளியிட்டுள்ள அறிக்கையில் கடன்தவணை ஒத்திவைப்பு மசோதா விஷயமாக கவர்மென்டாரின் பரிசீலனை முடிந்து விட்டதாயும் சீக்கிரத்தில் இது ஸம்மந்தமான அறிக்கை வெளியிடப்படுமென்றும் தெரிவிக்கிறார். வியவஸாயிகளின் கடன் பளுவைப்பரிஹரிக்க உடனேதக்கமுயற்சி செய்யப்படுமென்றுஎதிர்பார்க்கப்படுகிறதாம்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்லேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளின் உபதேசம்.

(2)

கனவான்: ஸத்கதிக்கு எது ஸாதனமென்று மனிதனால் அறிந்துகொள்ள முடியாதென்று வைத்துக்கொண்டால் மாத்திரம் அல்லவா அதை அவனுக்கு உபதேசம் செய்வதற்காக பகவானையே தேடவேண்டும்?

மஹாஸன்னிதானம்: ஸாதனம் கண்டுபிடிக்கும் முன்னர், ஸாதிக்கவேண்டியது ஒன்று உண்டு என்று தெரியவேண்டாமா? ஒருவன் அந்த ஸாத்ய ரூபமாகவாவது அல்லது அந்த ஸாத்யத்தை அனுபவித்தவனாகவாவது இருந்து, அப்படி ஒன்றுண்டு என்று நமக்கு தெரியப்படுத்தாமல் போனால் எப்படி அது நமக்குத் தெரியும்? இது நம் ப்ரத்யக்ஷத்தினால் தெரிந்துகொள்ளக் கூடியதில்லை. தவிரவும், ஒரு தர்ம மார்க்கமானது ஸத்கதிக்குக் கொண்டுபோய்விடும் என்பது நமக்கு எப்படித்தெரியும்? அந்த மார்க்கத்தில் நடந்துபோய் லக்ஷ்யத்தை யடைந்தவன் நமக்குச் சொல்லலாம்; அந்த மார்க்கத்தில் நடக்க அவசியமன்னியிலேயே மேல் பதவியில் நின்றபடியே மார்க்கத்தையும் லக்ஷ்யத்தையும் ஸமகாலத்தில் ப்ரத்யக்ஷமாய் அறிந்திருக்கிறவன் ஒருவன் சொல்லலாம்; அல்லது அந்த லக்ஷ்யமாகவே ஒருவன் இருந்துவிட்டாலும் தனக்கு ஸாதனம் என்னவென்பதைச் சொல்லலாம்.

க: ஈசுவரன் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடவா ஓர் உபதேசம் வேண்டியிருக்கிறது? அவரை அறிகிறது சிரமம்தான்; அவரை அறிய வழிகாட்ட ஸஹாயம் வேண்டியிருக்கலாம்; அவர் இருக்கிறார் என்பதை நாம் யுக்தியினாலேயே தெரிந்துகொள்ளலாமே!

ம: ஈசுவரனுடைய இருப்பு இவ்வளவு ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளக் கூடியதாயிருந்தால், நாஸ்திகர்களும் அனீச்வர வாதிகளும் ஜகத்தில் இருக்கக் காரணம் என்ன? அவர்களுடைய புத்தி வன்மையும் யுக்தி கௌசலமும் நம்முடைய வற்றிற்குக் குறைந்தனவா? பார்க்கப்போனால், ஈசுவர தத்வத்தைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப்பட்டு, கண்டுபிடிக்கத் தவறியவர்கள் அதிமேதாவிகளாகவே இருந்திருக்கிறார்கள். ஈசுவரனைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது அவர்களுடைய புத்திக் குறைவினால் இல்லை. ஈசுவரன் புத்திக்கு ஏற்படாதவன் என்ற தத்வமே அவர்களுடைய தவறுதலுக்கு வாஸ்தவமான காரணமாகும். மேலும் யுக்தியினால் ஈசுவரனைக் கண்டுபிடித்து விடலாமென்று வைத்துக்கொள்வோம்; யுக்தியினால் கண்டுபிடிக்க வேண்டியவராக ஈசுவரன் என்று ஒருவன் உண்டு என்பதை உங்களுக்கு யார் சொன்னார்? இதை சொல்லிக்கொடுப்பதற்காவது ஒருவர் வேண்டும். உங்களுக்கு ஈசுவரன் என்று ஒருவர் உண்டென்று சொல்லிவைத்திருந்தால், அப்புறம் அவரைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் உங்கள் புத்தியைச் செலுத்திப் பார்க்கலாம். இந்த ஸமாசாரமே காதில் படாமலிருந்தால் புத்தியைச் செலுத்த அவகாசமே யில்லையே.

க: புத்தியைச் செலுத்திப் பார்ப்பதற்கு முன்னால் ஈசுவரன் ஒருவர் உண்டென்று நான் எதற்காக கேட்டிருக்கவேண்டும்? ஈசுவரன் என்ற பெயர் என் காதில் பட்டிராது போகினும், ஸதாகாலமும் மாறுதலடைந்து கொண்டு ஈசுவரமாயிருக்கிற இந்த ஜகத்திற்கு ஆதாரமாய், ஒருவித மாறுதலையும் அடையாததாக, சாசுவதமாக, ஒரு வஸ்து உண்டு என்பதை யுக்தியினாலேயே தெரிந்து கொள்ளலாமல்லவா?

ம: எப்படி தெரிந்துகொள்வீர்?

க: ஜகத்தில் இருட்டு, வெளிச்சம், சலம் நிச்சலம், ஸுகம் துக்கம் முதலிய விருத்தாம்சங்களே நிறைந்திருப்பதாகத் தெரிவதால், ஜகத்தில் மாறுதல் இருப்பதால் மாறுதலற்ற ஓர் அம்சமும் உண்டென்று யுக்தியினால் தீர்மானிக்கலாம். எல்லாப் பதார்த்தங்களும் பிரதிக்ஷணமும் நசித்துப்போகிறபடியால், நாசமடையாத ஓர் அம்சமும் இருக்கவேண்டுமென்று ஊஹிக்கிறேன். இவ்விதமாகவே ஊஹம் செய்துகொண்டு போனால் ஜகத் வேற்றுமையுடையதாகவும், பலவிதமாகவும், நசுவரமாகவும், மாறிக்கொண்டும், தோற்றமாகவும் இருப்பதால், இதற்கு விருத்தமாக ஒரு வஸ்து ஏகரூபமாய், சாசுவதாய், மாறுதலற்றதாய், ஸத்தாய் இருக்கவேண்டுமென்று ஊஹிக்கலாம்.

ம: இப்படி கேட்கிறேனே என்று நினைக்கக்கூடாது. குதிரை என்பது நம் அறிவிற்கு விஷயமான ஒரு பதார்த்தம் தானே? இது இருப்பதினால், இதற்கும் விருத்தமான ஒரு பதார்த்தம் ஜகத்தில் உண்டென்று ஏற்படவேண்டாமா? குதிரைக்கு எதிரிடைப் பதார்த்தம் என்ன?

க: "குதிரையல்லாதது" என்று சொல்வேன்.

ம: மிகவும் சரி. இது ஒரு பதார்த்தமா? அல்லது, வெறும் குதிரையின் அபாவம் தானா?

க: குதிரைக்கு எதிரிடை என்று சொல்லியிருப்பதால், அதையும் ஒரு பதார்த்தம் என்றே சொல்கிறேன்.

ம: இப்பதார்த்தம் ஒரு மிருகமா? அல்லது ஜகத்தில் குதிரையல்லாததாயிருக்கிற எல்லாவற்றையுமே இப்பதத்திற்கு விஷயமாக்குகிறீரா?

க: கிரமத்திற்கு, கல்லும் குதிரையாகாததினால் குதிரையல்லாதது என்ற ஜாப்தாவில் சேரும். அப்படியே ஜகத்திலுள்ள மற்ற வஸ்துக்களும். ஆனால் "அல்லாதது" என்ற சப்தம் "குதிரை" என்ற வார்த்தையுடன் அன்வயிப்பதால் குதிரைத்தன்மையை மாத்திரம் தான் நிஷேதிப்பதாகும். ஆகையால் குதிரைத்தன்மையற்ற ஒரு மிருகம் என்று தான் வைத்துக்கொள்ளவேண்டும்.

ம: அதாவது, ஒரு வஸ்துவின் எதிரிடை என்பது, அந்த வஸ்துவின் ஸமமான கோஷ்டியில் சேர்ந்து, ஆனால் அந்த வஸ்துத்தன்மை மாத்திரம் இல்லாததான ஒரு வஸ்துவையே குறிக்கும். அத்தன்மை மாத்திரம் எதிரிடைவஸ்துவில் இல்லாத காரணத்தைக் கொண்டு, எதிரிடை என்று வியவஹாரம் செய்கிறோமே தவிர எல்லா அம்சங்களிலும் எதிரிடை என்பது கிடையாது. வெளிச்சத்தில் ஏற்படக்கூடிய தாரதம்யத்தை இருட்டின் தாரதம்யம் என்றும் வியவஹரிக்கலாம். அதாவது, வெளிச்சம் குறையும்போது இருட்டு ஜாஸ்தி என்றும், இருட்டுக் குறையும்போது வெளிச்சம் ஜாஸ்தி என்றும் சொல்லக்கூடியதாயிருப்பதால் இருட்டும் வெளிச்சமும் அத்யந்தம் விருத்தபதார்த்தங்கள் என்று சொல்வதற்கில்லை.

மேலும், அனுமானத்தின் தன்மையை நீங்கள் நன்கு கவனித்ததாகத் தெரியவில்லை. நான் முன் சொல்லியபடி, அனுமானிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறதென்று தெரியாமலிருந்தால் அனுமானமே பிரவிருத்திக்காது. நெருப்பையே பார்க்காதவனும் அதைப்பற்றிக் கேட்காதவனுமான ஒருவன் புகையைப்பார்க்க நேரிட்டால், அவனுக்குப் புகையிலிருந்து நெருப்பு என்று இன்னொரு பதார்த்தத்தை ஊஹிக்கவேண்டுமென்கிற எண்ணமே தோன்றாது. ஒரு பதார்த்தம் நம் அறிவிற்கு விஷயமானால், அந்த அறிவை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வோமே யொழிய, அதற்குப் பின்னால் என்ன தத்வமிருக்குமென்று ஊஹிக்க அவசியமில்லை. நம் முன் தோன்றுகிற பதார்த்தம் வாஸ்தவமில்லை யென்றாவது நமக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் மாத்திரம் ஊஹத்திற்கு அவகாசமுண்டு. அப்படியே, ஸதாகாலமும் மாறிக்கொண்டிருக்கிற இந்த ஜகத்தை நாம் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருந்து மாறுதலற்ற ஒரு தத்வமுண்டென்று நாம் கேள்விப்படாதபக்ஷத்தில், ஜகத்தைத் தோன்றுகிறபடியே தத்வமென்று ஒப்புக்கொண்டுவிடுவோம். ஜகத்து தோன்றுகிறது என்பதே தத்வமாகும். ஜகத்துமாறுகிறதென்றால் அது அதன் ஸ்வபாவம், ஆகையால் மாறுதல் அடைகிறது. இதற்கு வேறு ஸமாதானம் தேடுவானேன், என்று இருந்து விடுவோம். இப்படிக் கன்னியில், நிர்விகாரமாய், ஸத்தாய் ஒரு வஸ்து உண்டென்று நாம் கேட்டிருந்தால், ஜகத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலுக்கு ஸமாதானம் தேடத்தோன்றும்; அவ்வஸ்துவுக்கும் ஜகத்திற்கும் என்ன ஸம்பந்தம், அந்த ஸம்பந்தத்தைத் தீர்மானிப்பது எப்படி, என்ற விசாரங்களும் ஏற்படும். இவ்விதமாக சர்ச்சையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கே நிர்விகார வஸ்துவைதெரிவிக்கக்கூடிய ஓர் உபதேசம் வேண்டும். இந்த சர்ச்சையில் நம் புத்தி வெகுதூரம் அனுகூலமாயிருக்கும். ஆனால் இவ்வுபதேசத்தை எதிர்பாராமல், புத்தி மாத்திரம் தனியே தனியே சர்ச்சைசெய்ய ஆரம்பித்தால் இருட்டில் தடவிக்கொண்டே தான் இருக்கவேண்டிவரும்.

தவிரவும், ஜகத்திலுள்ள எல்லாப் பதார்த்தங்களும் மாறுதல் அடைகின்றனவென்று பார்த்து, அதிலிருந்து ஓர் அனுமானம் செய்கிறதானால் எல்லாப் பதார்த்தங்களும் மாறுதல் அடைகிறபடியால், இவைகளைத் தவிர ஒரு பதார்த்தம் இருந்தால், அதுவும் மாறுதல் அடையக்கூடியதாகவே இருக்கும் என்று தான் அனுமானம் செய்யமுடியும். திருஷ்டாந்தத்திலிருந்து தெரிந்துகொள்ளுகிற ஹேது ஸாத்ய ஸம்பந்தத்தைத் தழுவியே அனுமானம் பிரவிருத்திக்குமாதலால், அந்த ஸம்பந்தத்திற்கு விருத்தமாய் ஓர் அனுமானம் ஏற்படாது. நம் அனுபவத்தில் எல்லாப் பதார்த்தங்களும் மாறுகின்றன வென்று தெரியும்போது, மாறுதலடையாத ஒரு பதார்த்தம் உண்டு என்று அனுமானம் சொல்லாது. எல்லாம் மாறுகிறபடியால், வேறு பதார்த்தமிருந்தால், அதுவும் மாறுதலடையும் என்று தான் அனுமானம் சொல்லமுடியும்.

எப்படியும், அனுமானத்தினால் நிர்விகாரமாய் ஒரு பதார்த்தம் இருக்கலாம் என்று வேண்டுமானால் ஊஹிக்கலாமே தவிர, இருக்கிறது, என்று நிச்சயமாய் சொல்லவாவது, அப்பதார்த்தம் எத்தன்மையுடையது என்றாவது அனுமானத்திற்குச் சொல்ல யோக்கியதை கிடையாது.

க: உபதேசத்தின் அவசியத்தைப்பற்றி இவ்வளவு தெளிவாக இதுவரை யாரும் எடுத்துச் சொல்லிக் கேட்டதில்லை. கிருதார்த்தனானேன்.

R. கிருஷ்ணஸாமி அய்யர்,
அட்வகேட், திருநெல்வேலி.

## பந்தோபஸ்துக் கைதிகள் விடுதலை,

### காந்திஜியின் முயற்சி.

காந்திஜி இன்னும் கல்கத்தாவிலேயே தங்கியிருக்கிறார். கவர்னரைப் பார்த்தபின் மந்திரிகளுடன் இவ்விஷயத்தைப்பற்றி அவர் கலந்து ஆலோசித்து வருகிறார். ஜயில்களில் இருக்கும் சில கைதிகளையும் காந்திஜி அடிக்கடி ஸந்தித்துப் பேசிவருகிறார். பந்தோபஸ்துக் கைதிகள், அந்தமான் கைதிகள் விஷயமாக திருப்திகாமானமுடிவு ஏற்படுமென்று நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறதாம்.



## குடந்தையில் நடந்ததென்ன?

### தூத்துக்குடியில் கனம் ஸுப்பராயன் பேச்சு. ஒரு மறுப்பு.

(அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியர் எழுதுகிறார்.)

சென்னை மந்திரிகள் சிலர் தங்களுடைய சுற்றுப்பிரயாணத்தில் சிறிது காலமாக ஆலயப்பிரவேச பிரசாரத்தைச்செய்து வருவதை யாவருமறிவார். அதிலும் டாக்டர் ஸுப்பராயன் அதிகமாக இதில் ஈடுபடுகிறார். குடந்தை வந்திருந்தபோது பொதுக்கூட்டத்தில் பேசியதும் ஆலயப்பிரவேசவிஷயமாக அவர் பொதுக்கூட்டத்தில் ஓட்டெடுக்க முயற்சித்ததும் ஸநாதநிகள் பொதுக்கூட்டத்திலேயே இம்முறையை ஆக்ஷேபித்ததும், ஆர்யதர்மம், ஹிந்து, மெயில் சுதேசமித்ரன், தினமணி முதலியன எல்லா பத்திரிகைகளிலும் வெளியாயிருக்கிறது. உண்மை இவ்விதமிருக்க கனம் மந்திரி தூத்துக்குடியில் பேசுகையில் கும்பகோணத்தில் தாம் ஆலயப்பிரவேசத்திற்கு ஓட்டெடுத்தபோது ஒருவரே எதிராக ஓட்டுக்கொடுத்ததாகவும், தாம் அவரையும் மேடைக்குக்கூப்பிட்டு ஸமாதான படுத்தினவுடன் அவரும் ஆலயப்பிரவேசத்திற்கு ஸம்மதித்துவிட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். (சுதேசமித்ரன் நவம்பர்மீ 11உ 3ம் பக்கம்) குடந்தையில்நடந்த ஸம்பவம் ஆலயப்பிரவேச இயக்கத்திற்கு நேர் விரோதமானது. இந்த ஸம்பவத்தை ஆலயப்பிரவேசத்திற்கு சாதகமாக கனம் மந்திரி மாற்றிக்கொண்டது மிகவும் ஆச்சர்யமே! இதை கவனித்தால் கனம் மந்திரி குடந்தையில் நடந்த ஸம்பவத்தை அடியோடு மறந்து விட்டார் என்றே தோன்றுகிறது. கனம் மந்திரி குறிப்பிட்டபடி மேடைக்கு சென்றவன் நானே. மேடையில் நடந்தஸம்பவங்கள் என்னைப்பற்றியவைகளே அதனால் அங்கு நடந்த உண்மை விவரங்களை மறுபடியும் இங்கு வெளியிட்டு கனம் ஸுப்பராயனின் கூற்றை மறுக்கவேண்டியது அவசியமாகிறது.

கனம் ராமன் மேனனும், கனம் ஸுப்பராயனும் குடந்தை காங்கயன் காந்தி பார்க்கில் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரஸங்கம் செய்தார்கள். அன்று மந்திரி ஸபையின் ராஜீய வேலை திட்டத்தைப்பற்றி இவர்கள் பேசப்போவதாக நினைத்தே பலரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவ்விதமிருந்தும் வக்கீல் குமாஸ்தா சங்கத்தினர் ஆலயப்பிரவேசத்தை ஆக்ஷேபித்து படித்து கொடுத்த பத்திரத்திற்கு கனம் சுப்பராயன் பொதுக்கூட்டத்தில் பதிலளிக்க ஆரம்பித்தார். ஆலயப்பிரவேசத்தை ஆதரிப்பவர்கள் கை தூக்க வேண்டுமென்று கேட்டார். சுமார் 300 பேர்கள் அப்பெருங்கூட்டத்தில் ஸாதகமாக கைதூக்கினர். 3 ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். எதிராக ஒரு சிலரே (மந்திரியின் அன்று கணக்குப்படி 10 பேர்) கைதூக்கினர். இதைக்கண்டு கனம் மந்திரி, யாவரும் ஆலயப்பிரவேசத்திற்கு ஸாதகமாக இருப்பதாக தீர்ப்பு கூறினார்.

அச்சமயம் ஒருபுறம் கூட்டமாக நின்றிருந்த ஸநாதநிகளில் ஒரு ப்ரமுகர் 'இவ்விதம் பொதுக்கூட்டத்தில் ஓட்டெடுத்து ஆலயப்பிரவேசத்தில் தீர்ப்புக்கூறுவது ந்யாயமில்லை' என்று உரத்தக் குரலில் கூறினார். உடனே கூட்டத்தில் மூலைக்கு மூலை கூச்சலும், கலவரமும் ஏற்பட்டது. அச்சமயம் மேடைக்கு வரும்படி ஸநாதநிகளை கனம் மந்திரி கூப்பிட்டார். ஸநாதநிகளின் பிரதிநிதியாக நான் சென்றேன். நான் மேடைக்குப் போகுங்கால் நானும் ஸநாதநிகளும் எங்களுடைய கக்ஷியை எடுத்துக்கூற கனம் மந்திரி அழைக்கிறார் என்றே நினைத்தோம். ஆனால் நான் மேடையேறியதும், கனம் ராமன் மேனன் 'இப்பொழுது பேசவேண்டாம்' என்று கூறினார். கனம் ஸுப்பராயன் மட்டும் 'நீங்கள் ஏன் ஆக்ஷேபித்தீர்கள்' என்று கேட்டார். அதற்கு நான் 'ஆலயப்பிரவேசத்திற்கு எதிரான எங்கள் அபிப்ராயம் மாறவில்லை. அதை வற்புறுத்த எங்களுக்கு உரிமையுண்டு. அதனால் ஆக்ஷேபித்தேன்' என்று பதிலளித்தேன். மேடையில் இவ்வளவுதான் நடந்தது. ஆலயப்பிரவேசத்திற்கு நான் சம்மதித்ததாக கனம் மந்திரி தூத்துக்குடியில் சொல்லியிருப்பது முற்றிலும் ஆதாரமற்றது. அதைக் கண்டிப்பாக நான் மறுக்கிறேன். நான் ஆலயப்பிரவேசத்திற்கு அன்று ஸம்மதித்ததுண்மையானால் அன்றே குடந்தை மீடிங்கில் ஏன் அதை சொல்லியிருக்கலாகாது.

கனம் மந்திரி சொல்லுகிறபடி ஹிந்து முதலிய எந்த பத்திரிகைகளிலும் வெளிவராததும் கவனிக்கத்தக்கது. ஸநாதநிகளின் கோட்டையான குடந்தையில் ஒரு ஸநாதநி முதலில் எதிர்த்துவிட்டு பிறகு ஸம்மதித்துவிட்டார் என்றால் முக்யமான இந்த ஸம்பவத்தை உடனே கூட்டத்தில் மந்திரி சொல்லியிருக்கமாட்டாரா? அவ்விதம் சொல்லியிருந்தால், பத்திரிகை காரர்களும் இந்த ஸம்பவத்தை விட்டுவிடுவார்களா? நான் ஸம்மதித்ததாக நிருபர்கள் பத்திரிகைகளில் வெளியிடவில்லையே? குடந்தையில் ஒருமாதத்திற்கு முன் நடந்ததாகச் சொல்லும் முக்யமான இந்த ஸம்பவத்தை இவ்வளவுநாள் கழித்து ஒரு மூலையில்போய் சொல்வதின் தாத்பர்யம் என்ன? அன்று கூட்டத்திற்கு குடந்தையில் பல தீண்டாதார், கிரிஸ்தவர், மஹம்மதியர், சுயமரியாதைக்காரர்கள், பள்ளிக்கூடச் சிறுவர்கள் எல்லோரும் வந்திருந்தனர். அவர்களெல்லோரும் கூடி இதற்கு கைதூக்கியதை நாங்கள் பார்த்தோம். 3 ஆயிரம் பேர் கூடியிருந்த அந்தக்கூட்டத்தில் 300பேர் தமக்கு ஸாதகமாகக் கைதூக்கினார்களென்று மந்திரி சொன்னார். மற்றவர்களுடைய அபிப்ராயமென்ன? இதை ஒரு தமாஷாக நினைத்துப் பலர் நடுநிலைமையிலிருந்தனர், மேலும் மதவிஷயமான ஆலயப்பிரவேசத்தை இம்மாதிரிக் கூட்டத்தில் ஓட்டெடுத்துத் தீர்ப்புச் சொல்வது ந்யாயமன்று என்று சொல்வதே அன்று எங்கள் நோக்கமாக இருந்தது. நீதி நிர்வாஹப் பிரிவினை போன்ற நுட்பமான ராஜீய விஷயங்களைப்பற்றியும் இம்மாதிரி கைதூக்கல் மூலம் முடிவுசெய்வார்களா என்றும் கேட்டோம். மேலும் கனம் மந்திரி அங்கு கதருடுத்தியவர்களை கைதூக்கச் சொல்லியபோது கதருடுத்தாதவர்களும் ஏராளமாக கைதூக்கினார்கள். இதைப்பார்த்த கனம் மந்திரி கதர்கட்டாதவர்களைச் சுட்டிக்காட்டி 'ஏன் இப்படி உண்மையில்லாமல் நடந்துகொண்டீர்களென்று வருந்திக் கேட்டார். கதர், விஷயத்தில் உபயோகமற்றதாக மந்திரி தீர்மானித்த "கைதூக்குதல்" ஆலயப்பிரவேச விஷயத்தில் மட்டும் எப்படி ஒரு தீர்ப்பாகுமென்றும் கேட்டோம். கனம் மந்திரி இவைகளை கவனித்து பதிலளிக்கவே இல்லை பொதுக்கூட்டம் என்னைத்தாக்க வந்ததாக கனம் மந்திரி சொல்லுகிறார். உண்மையில் மேடையைச்சுற்றி நின்ற சில காங்கிரஸ் வாலண்டியர்கள் அங்கு கூடியிருந்த கௌரவம் வாய்ந்த ஸநாதநிகளிடம் மரியாதைக்குறைவாக நடந்துகொண்டது தவிர வேறு ஒன்றுமில்லை. கனம் மந்திரிக்கும் இது தெரியும். கனம் மேனன் பேசுகையில் இம்மாதிரி நடந்துகொண்ட வாலண்டியர்களை கண்டித்து பேசியதே இதற்கு போதிய ருஜுவாகும். ஆகவே குடந்தை ஸம்பவத்தை மறந்து ஆலயப்பிரவேசத்திற்கு நான் சம்மதித்ததாக மந்திரி சொல்லியது உண்மையானதன்று. ஆலயப்பிரவேசம் முற்றிலும் அசாஸ்திரீயமென்றும் அது கூடாதென்றும் நான் அழுத்தமாகநம்பிகிறவன். இந்த மாதிரி அதட்டலுக்கும், அடிதடிகளுக்கும் பயந்து அபிப்பிராயத்தை மாற்றக்கூடியவனல்ல. உண்மை ஸநாதநி ஒருவனும் இப்படியிருக்கமாட்டான். ஆகையால் மந்திரி என்னைப்பற்றி கூறியது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதில் சிறிதும் உண்மை கிடையாது.

உயர்ந்த அந்தஸ்திலுள்ள கனம் மந்திரி, தமது பிரசாரத்திற்கு இத்தகைய உண்மையற்ற சிறிய விஷயங்களைக்கூட பின் பலமாக உபயோகிப்பது மிகவும் பரிதபிக்க கூடிய விஷயம்.

## ஸ்ரீஸூத ஸம்ஹிதா புராண ஸமாப்தி.

புதுக்கோட்டை டவுன் வடக்கு ராஜவீதியில் ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணய்யர் மடத்தில் 50-வது வருஷ ஸ்தாபன்தினத்தைக் கொண்டாட சென்ற அற்பிசி-மீ 8உ முதல் பிரதிதினம் மாலை $6\frac{1}{2}$ மணி முதல் 9 மணி வரை, மாயவரம் ப்ரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் வெகு அழகாக உபந்யஸிக்கப்பட்டுவந்த ஸ்ரீஸூதஸம்ஹிதா புராணப் பிரவசனம் நேற்று புதன்கிழமை இனிது முடிந்தது. இரவில், ப்ரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் அந்த்ய பாகமான ஸூத கீதையில் நிரூபிக்கப்பட்டபடி, வர்ணாச்ரம தர்மங்கள் முதலிய யாவையும் பற்றி நன்கு உபந்யஸித்து முடித்தார். Retired Treasury Officer ப்ரம்மஸ்ரீ S. பஞ்சநத சாஸ்திரிகள் B. A. முதலியவர்களால் ரிக்யஜுஸ் ஸாம வேதங்களைச் சொல்லிமங்கள வாத்ய கோஷங்களுக்குப் பின்னர், பௌராணிகரான ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்குச் சன்மானம் செய்யப்பட்டது. அப்பால், ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி அய்யர், தன் பிதா மடம் கிருஷ்ணய்யர்60 வருஷங்களுக்கு முன் ஷை மடத்தை ஸ்தாபித்த விருத்தாந்தங்களையும், வெகு உருக்கமாகவும், அழகாகவும் பேசி, வந்திருந்த ஸகல ஆஸ்திகர்களுக்கும் தன் வந்தனத்தைத்தெரிவித்துக் கொண்டார். ப்ரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டு, மங்கள வாத்ய கோஷங்களுடன் இந்த வைபவம் நன்கு முடிவு பெற்றது.

ஒரு நிருபர்.

## கும்பகோணம்;

### ராஜாதர்மவேதபாடசாலை.

வழக்கம்போல் நடந்துவருகிற ஸ்ரீசித் ஸம்வர்த்தனீ ஸபாவானது 16—11—37ப்ரதோஷம் மாலை 4மணிக்கு மன்னார்குடி ப்ரம்மஸ்ரீ ராமாயணம் வேம்புசாஸ்திரிகளவர்கள் ஆதரவின்கீழ், எண்ட்ரன்ஸ் கிளாஸ் மாணாக்கன் எ. இராமமூர்த்தியால் வடமொழியில் 'பக்தி' என்கிற விஷயமானது எழுதி படிக்கப்பட்டது. பிறகு அதே விஷயத்தை உபன்யாஸகரால் ரொம்பவும் உருக்கமாக உபன்யஸிக்கப்பட்டு மங்களாசரணத்துடன் ஷை சபையானது நடந்தேறியது.

எஸ். ராமச்சந்திர சாஸ்திரி.

ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாளவர்கள்
அருளிச்செய்த
ஸௌந்தர்யலஹரி
by G.V. கணேச அய்யர்,
மூலம்நாகரத்திலும், தமிழிலும், பதவுரை, பொழிப் புரை குறிப்புகளுடனும்,)
விலை ரூ. 1 8 0
கிடைக்குமிடம்:— மானேஜர், 'ஆர்யதர்மம்' கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ளு கார்த்திகை-மீ 3வ

## மிராசுதார்களின் துன்பம் அதிகரிக்குமோ?

நமது மாகாண காங்கிரஸ் கவர்ன்மெண்டார், மிராசுதார் விஷயத்தில் காட்டிவரும் விபரீத மனோபாவத்தைக் கண்டு தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் ஸரியானகாலத்தில் ஸங்விழித்துக்கொண்டுவிட்டதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம். சென்றவாரம் 7வயன்று மாயவரத்தில் அவர்கள் கூடி தங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தீங்குகளைப் பற்றி ஆலோசித்துத் தீர்மானங்கள் செய்ததாகப் பத்திரிகைகளில் காணப்படுகிறது. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பிரபல மிராசுதார்கள் ஏராளமாக அங்கு வந்திருந்து கவலையுடன் காரியங்களைக் கவனித்ததாக அறிகிறோம், எல்லோரும் ஒருமுகமாகத் தீவ்ர உணர்ச்சிகாட்டியதாகத் தெரிகிறது. நமது ஜில்லா ப்ரதிநிதியாக விளங்கும் சட்டஸபை மெம்பர்களும் சிலர் அங்குவந்து காங்கிரஸ் கொள்கையையும், காந்திஜி கட்டளையையும் காட்டி மிராசுதார்களை வசப்படுத்த முயற்சித்தும் பலிக்கவில்லையென்று அறிகிறோம். காங்கிரஸ் மந்திரிகள் எலெக்ஷன்வாக்குறுதிப்படி மிராசுதார் நன்மையை லக்ஷ்யம் செய்யாததுடன், மேலும் அதிக வரிவிதித்து கஷ்டப்படுத்த யோஜிப்பதைப் பற்றி அங்கு வந்திருந்த யாவரும் பலமாகவும் கட்டுப்பாடாகவும் ஆக்ஷேபித்துப் பேசினர்.

காங்கிரஸ் தலைவர்கள் எலெக்ஷனுக்குமுந்தி பல கூட்டங்களிலும், கான்பரன்ஸ்களிலும் நிலவரியை 50 வீதம் குறைத்துவிடவேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். ஏற்கனவே இரட்டையாக்ஷி மந்திரிகள் இவ்விதம் செய்யாததற்காக அவர்களை காங்கிரஸ் தலைவர்கள் பலமாகக் கண்டித்து மிராசுதார் நண்பர்களாக நடித்துவந்தார்கள். எலக்ஷன் காலத்திலும் அநீதியான நிலவரிக்கு ஆக்ஷேபம்பேசிக் கண்ணீர் வடித்தார்கள். இதை நம்பி மிராசுதார்கள் யாவரும் காங்கிரஸுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தார்கள். மிராசுதார்கள் சிறிது அலக்ஷ்யமாயிருந்தால் காங்கிரஸ்வாதிகள் இப்போது மந்திரியாக உட்கார்ந்துகொண்டிருக்க ஸந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது.

ஆயினுமென்ன? இப்போது காங்கிரஸ் மந்திரிகள் மிராசுதார்களுக்குச் செய்யும் நன்மையென்ன? அதுதான் பூஜ்யம். இம்மட்டுமில்லை. அவர்களுக்குப் புதிதாக வருமானவரி ஒன்றையும் விதித்து தலைக்கிளப்பவிடாமல் நசுக்கிவிட யோஜனைசெய்யப்படுகிறதாம். ஏற்கனவே வரிப்பளுவால் அழிந்து கிடக்கும் மிராசுதார்களுக்கு வரியைக் குறைக்கவேண்டியது நீதியாயிருந்தும் அதைச் செய்யாததுடன் புதியவரி விதிக்கத் துணிந்த ஆச்சர்யத்தை எப்படி வர்ணிப்பது?

காங்கிரஸ் வாதிகள் எலெக்ஷன் உறுதிமொழிப்படி நிலவரியைக் குறைப்பார்களென்று சாதகப்பக்ஷிகள் போல் எதிர்பார்த்திருந்த ஏழை மிராசுதார்களுக்கு நமது ரவின்யூ மந்திரி கையை விரித்துக்காட்டிவிட்டார். அவர் போகுமிடமெங்கும் மிராசுதார்கள் வற்புறுத்தியும், நிலவரிவஜா செய்வதற்கு ஸர்க்காரில் பணம் கிடையாதென்றும், வஜாசெய்தால் ஸர்க்கார் பாப்பாராகப் போய்விடுமென்றும், பக்கா 'அதிகாரிவர்க்கம், (புராக்ரஸி) போல் பேசிவருகிறார்.

இந்தியாவில் முதல் முதலாக முக்யமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் நிலவரியைக் குறைப்பதேயென்பது எல்லா ராஜீயக்கக்ஷிகளாலும் ஒப்பப்பட்ட விஷயம். காங்கிரஸ் இதில் முதல் ஸ்தானம் வகித்திருக்கிறது. இவ்வளவு முக்யவிஷயத்தில் இதுவரையில் மந்திரிஸபை என்ன யோஜனை செய்திருக்கிறது? ராஜீயக்கைதிகளை விடுவித்திருப்பதாயும், ஹிந்தியைக்கட்டாயமாக்கப் போவதாயும், மோருதானம் செய்துவிட்டதாயும், நீல் சிலையை எடுத்துவிட்டதாயும் ஜாப்தா எழுதி வாசிப்பதால், சாகுந்தருவாயில் இருக்கும் மிராசுதார்களுக்கு என்ன நன்மை? சேலம் மதுவிலக்கால் வருமானம் குறைந்துவிட்டதென்று மிராசுதார்களுக்கு சால்ஜாப்பு சொல்லுவது தர்மமா? இடைக்கால மந்திரிகள்கூட தாங்கள் ஸ்தானமேற்றவுடனேயே நிலவரி விஷயத்தில் கவனம் செலுத்த முற்பட்டார்களே! 75லக்ஷம் வஜா செய்தார்களே! மார்ஷ்பாங்க்ஸ் கமிட்டியை நியமித்தார்களே! காங்கிரஸ் மந்திரிகள் அம்மாதிரிமுயற்சிஒன்றும்செய்யாததுடன் அதிகவரி விதிக்கவும் யோஜிப்பது மிக்க அநீதியாகும். சென்ற சில வருஷங்களாக 'அதிகாரிவர்க்க' ஆட்சியாரே மிராசுதார் நிலைமையை அறிந்து சிறுக்ச் சிறுக வஜா அளித்துவந்ததை காங்கிரஸ்காரர்கள் அறியாதவர்களா? அதனால் கிஸ்திகாலம் ஸமீபத்தில் வந்துவிட்டபடியால் மந்திரிகள் காலதாமதமின்றி மிராசுதார் விஷயத்தில் நியாயமான நன்மையைச் செய்யமுற்படுவாரென்று நம்புகிறோம். மாயவரம் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயம் ஒவ்வொன்றும் மிக முக்யமானது. வெகுகாலமாக இந்த விஷயம் தீர்க்கப்படாமல் கிடக்கிறது. ஆகவே இந்த ஜில்லா பிரதிநிதிகளும் இந்த ஜில்லா மந்திரியும் மிராசுதார் கக்ஷியை அலக்ஷ்யம் செய்யமாட்டார்களென்று நம்புகிறோம்.

இச்சமயம் நமது மிராசுதார்கள் கவனிக்கவேண்டிய விஷயத்தையும் நாம் ஞாபகப்படுத்த விரும்புகிறோம். காங்கிரஸின் தற்கலக் கொள்கையையும் நிலைமையையும் நமது மிராசுதார்கள் கவனித்ததாகத் தெரியவில்லை.

அதனிடம் எல்லைகடந்து நம்பிக்கை வைப்பது நியாயமாயில்லை. "பாமரஜன உத்தாரணம்" என்றகொள்கை கொண்டு, மிராசுதார் உரிமைகளைப் பறித்துக் குடியானவர்களுக்கு பாத்யம் ஏற்படுத்தக் காங்கிரஸ் நோக்கம் கொண்டிருக்கிறது. காராச்சி காங்கிரஸ் தீர்மானம் இந்தவழியில் செல்வது மறுக்க முடியாது. சென்னை சட்டஸபையில் இனாம் மசோதாவிவாதகாலத்தில் காங்கிரஸ் மெம்பர்கள், மிராசுதார்களுக்கு விரோதமாகவும், குடியானவர்களுக்கு ஸாதகமாயும் நடந்துகொண்டது பிரஸித்தம். காராச்சித் தீர்மானமே இதற்குக் காரணமாகக் காட்டப்பட்டது. தவிரவும் காங்கிரஸில் அபேதவாதிகளின் ஆதிக்யமும் நாளுக்குநாள் வலுவடைந்து வருகிறது. அவர்கள் ஸொத்துரிமையை அழிக்கக் கங்கணம் கட்டியவர்களென்பது தெளிவு. கார்யக் கமிட்டியிலும், அகில இந்தியக் கமிட்டியிலும் அவர்கள் போடும் கூச்சலுக்கு காந்தியும் மந்திரிகளும் கூட பயப்படவேண்டியிருந்ததை கல்கத்தா கூட்டத்தில் கண்டோம். மந்திரிகளும் ஸோஷலிஸ்டுக்குப் பயந்தே கார்யம் செய்யக்கூடியவர்களாயிருப்பார்கள். வயது வந்தவர்களுக்கெல்லாம் வோட்ஸ்வதந்திரம் அளித்து, ஸொத்து இல்லாத குடியானவர்கள் முதலியவர்களும் ஸொத்துக்காரர்களுக்கு யஜமானர்களாகவரவும் காங்கிரஸ் ஏற்பாடுசெய்கிறது.

ஆகையால் இந்த நிலைமையில் நில உடமைக்காரர்களான மிராசுதார்களுக்கு காங்கிரஸால் நன்மை ஏற்படுமென்ற நம்பிக்கையிருக்கிறதா? மாயவரம் கூட்டத்தைக் கூட்டியவர்களின் அறிக்கை வாசகத்திலிருந்து அவர்களும் இதை உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. அப்படியிருந்தால் இப்போது மிராசுதார்கள் நடந்துகொள்ளவேண்டியவழியென்ன வென்பது தெளிவாயிருக்கிறது. ஸொத்துரிமைப் புரட்சிபோன்ற அனர்த்தங்களுக்கு அவர்கள் இடம்கொடுப்பது நல்லதா? எதிர் காலத்திய பெரியஅபாயத்தைநினைத்து, ஸொத்துரிமை போன்ற வியவஸ்தைகளைப் பாதுகாக்க பிரபலமாக ஓர் எதிர்கக்ஷியை ஸ்தாபிக்க, நிர்பந்தமான ஒரு ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதை நமது மிராசுதார்கள் உணருவார்களா?

## குறிப்புகள்.

### மந்திரிகளின் ஆலயப்பிரவேசப் பிரசாரம்.

சென்னை மந்திரிகள் எலக்ஷன் உறுதிப்படி மதுவிலக்கு செய்தாகி விட்டது. கட்டாய ஹிந்திக்குத் திட்டம் போட்டாகிவிட்டது. ராஜீயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். கடன் தவணை ஒதுக்கப்பட்டு ஸர்க்கார் ஏற்கப்போகிறார்கள். நீல் சிலையை அப்புறப்படுத்தத்தீர்மானமாகி விட்டது. இவ்வளவு செய்த பிறகும் தீண்டாமை விலக்கைப்பற்றி வாய்திறவாமல் இருக்க முடியுமா? ஆகையால் அதையும் நிறைவேற்றக்கங்கணம் கட்டி விட்டார்கள். மந்திரிகளின் சுற்றுப்பிரயாண, உபசார விருந்துப்பேச்சுக்களில் எங்கும் ஆலயப்பிரவேசப்பிரஸ்தாபம் பலமாக நடந்து வருகிறது. உடம்பு அசௌகர்யமுற்றுள்ள பிரதமமந்திரியைத்தவிர மற்ற மந்திரிகள் யாவரும் ஆலயப்பிரவேசத்தைப் பற்றிப் பேசாத இடமேயில்லை.

இதில் கல்வி மந்திரியான கனம் ஸுப்பராயனுக்கு அதிகக்கவலையும் வேலையும் இருக்கிறது. மற்ற மந்திரிகளை விட இவர் அழுத்தமாயும் கண்டிப்பாயும் ஆலயப்பிரவேசத்தைப் பற்றிப்பேசி வருகிறார். ஏற்கனவே சென்னை சட்டஸபையில் இவர் ஒரு மசோதா கொண்டுவந்து பிரயோஜனமற்றதாகிவிட்டது. அப்போது மெஜாரிட்டி பலமில்லாததுடன், கவர்னர், கவர்னர் ஜனரல் இவர்களுடைய மேலதிகாரமும் இருந்தது. இப்போதோ கேள்விமுறை கிடையாது. நினைத்தபடி செய்ய மெஜாரிடிபலம் இருக்கிறது. ஆகையால் கனம் ஸுப்பராயன் இந்த சமயத்தை விடுவாரா? முன்பு தம்மை எதிர்த்தவர்களை பழிவாங்க இது நல்ல ஸமயமல்லவா? ஆதலால் மற்ற மந்திரிகளைவிட இவர் அதிகமாக ஆலயப்பிரவேச பயத்தைக்காட்டி தார்மிகர்களை நடுங்கச்செய்து வருகிறார்.

சில விஷயங்களில் இவருடைய பிரசாரம் நேர்மையற்றதாயுமிருக்கிறது. தாம் போகுமிடங்களிலெல்லாம் தமக்கு எதிரில் காணப்படும் பாமர ஜனக்கூட்டத்தைக்கைதூக்கும்படி செய்து முடிவுசெய்கிறார். ஆலயப்பிரவேச விஷயத்தை நிச்சயிக்க அந்த கூட்டத்தாரே தகுதியுள்ளவர்களென்று அவர் நினைத்துவிடுகிறார். இது சாஸ்திர ஸம்பந்தமான விஷயமென்பதையும், இதை நிச்சயிப்பவர்கள் எத்தகைய படிப்பும் பொறுப்பும் உள்ளவர்களாகயிருக்க வேண்டுமென்கிற வியவஸ்தையையும் இவர் லக்ஷ்யம் செய்வதாகத்தெரியவில்லை.



### குடந்தையில் நடந்த சம்பவம்.

டாக்டர் ஸுப்பராயன் கும்பகோணத்தில் நடந்த கூட்டத்தில், இம்மாதிரியே கைதூக்கச்செய்து அபிப்ராயம் வாங்கினார். ஸனாதநிகள் இந்த முறையை ஆக்ஷேபிக்கவே கூட்டத்தில் கலவரம் நேர்ந்தது. ஸனாதநிகளின் கக்ஷியைச்சொல்லும்படி மேடைக்கழைத்தார். ஆயினும் அங்கு ஒரு ஸனாதநிபோனவுடன் அவருக்குப் பேச அவகாசம் கொடுக்க மறுத்து விட்டார். இத்துடனில்லாமல் தூத்துக்குடியில் பேசுகையில் இந்த ஸம்பவத்தைக் குறிப்பிட்டு கும்பகோணம் ஸநாதனியும் ஆலயப்பிரவேசத்திற்கு ஸம்மதித்து விட்டதாகக் கூறியிருக்கிறார். இதைவிட அபாண்டமான விஷயம் வேறில்லை. இந்த மாதிரி கும்பகோணத்தாரைக் காட்டி வெளியூரில் ஆலயப்பிரவேசத்திற்கு இவர் ஆதரவு தேடுவது நேர்மையுள்ளதாயில்லை. அன்று ஸம்பவம் நடந்த ஸமயம் நாம் நேரில் அங்கு நடந்த விஷயங்களை கவனித்திருப்பதால் கனம் ஸுப்பராயனின் பேச்சு அதிக அதிசயத்தை நமக்கு விளைவித்தது. ஆலயப்பிரவேசத்தை எதிர்த்த ஸனாதநியை ஜனக்கூட்டம் தாக்க ஆயத்தமாயிருந்ததாக கனம் ஸுப்பராயன் குறிப்பிடுவதின் கருத்தென்ன? இது பெருமையா? வருத்தலா, தூண்டுதலா வென்று நமக்கு புரியவில்லை. உண்மையில் இவர் காங்கிரஸின் அஹிம்ஸா தர்மத்தைக் கைப்பற்றியிருந்தால் அன்று காங்கிரஸ் சிறுவர்கள் சிலர் நடந்துகொண்ட மாதிரிக்கு வெட்கப்படவல்லவோவேண்டும்! அதைவிட்டு இவர் பலாத்காரச் செய்கையைப் பெருமையாகப் பேசுவது விந்தையே.

### புனா ஒப்பந்தத்தில் அடங்கியதா?

வேறு சில மந்திரிகள் புனா ஒப்பந்தப்படி காங்கிரஸ் மந்திரிகள் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்துகொடுக்கக் கட்டுப்பட்டிருப்பதாகப் பேசிவருகிறார்கள். உண்மையில் புனா ஒப்பந்தத்தில் ஆலயப்பிரவேச நிபந்தனை விதிக்கப்படவில்லை. புனா ஒப்பந்தமேற்பட்ட மறுதினத்தில் பம்பாயில் மாளவியாஜியின் தலைமையில் நடந்த தலைவர்கள் மஹாநாட்டில் தான் ஆலயப்ரவேசவிஷயம் பிரஸ்தாபத்திற்கு வந்தது. பிரசாரமூலமாக ஜனங்களின் மனதை மாற்றவேண்டுமென்றே அதில் முடிவு செய்யப்பட்டதேயல்லது சட்டம் செய்ய வேணுமென்று சொல்லப்படவில்லை. இதை கனம் ராஜகோபாலாசாரியரே சென்ற சட்டஸபைக் கூட்டத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார் ஆகையால் புனா ஒப்பந்தத்தைக் காட்டி ஏமாற்றுவதும் முடியாது. அது எல்லோரையும் கட்டுப்படுத்தக் கூடியதுமன்று!

மேலும் காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையிலும் குறிப்பாக ஆலயப்பிரவேசம் பிரஸ்தாவிக்கப்படவில்லை. எலெக்ஷன் பிரசாரகாலத்தில் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்யப்போவதாயும் வோட்டர்களிடம் பிரஸ்தாபிக்காததுடன், இப்போது ஆலயப்பிரவேச விஷயத்திற்கு ஸந்தர்ப்பமே கிடையாதென்றும் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவையும் மீறி மந்திரிகளே ஆலயப் பிரவேசம் நடத்துவது தார்மிகர்களுக்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்துவருகிறது.

சீர்திருத்தக்கார சிவஸ்வாமி அய்யரவர்களே ஆலயப் பிரவேசச் சட்டம் செய்ய பக்வமான காலம் வாவில்லையென்கிறார். ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராமசாஸ்திரியோ, நிர்ப்பந்தச் சட்டமில்லாத அரசாங்கமே, நல்ல அரசாங்கமென்கிறார். மதுவிலக்குச் சட்டம் கூட நிர்ப்பந்தச் சட்டமென்கிறார்: காங்கிரஸோ அஹிம்ஸையை அஸ்திவாரமாகக் கொண்டது: இவ்வளவையும் லக்ஷ்யம் செய்யாமல் சென்னை மந்திரிகள் ஆலயப்பிரவேசச் சட்டமியற்றி கோடிக் கணக்கான தார்மிகர்களை ஹிம்ஸிக்கப் போகிறார்களா?

### ஸம்ஸ்கிருதத்திற்கு ஆபத்தா?

சென்னை மாகாணத்தில் ஸ்ரீமான் C. R. பதவியேற்ற சிறிது நாளைக்கெல்லாம் ஸம்ஸ்கிருதத்தைப் புகழ்ந்து பேசியது யாருக்கும் மறந்திருக்காது. ஸம்ஸ்கிருதத்திற்கு, ஸமீபத்தில் உபகாரம் செய்யப்போவதாகவும அவர் கூறினார். இதனால் ஸம்ஸ்கிருதாபிமானிகள் காங்கிரஸ் காபினெட் ஸம்ஸ்கிருதத்திற்குத் தகுந்த ஊழியம் புரியப்போவதாகவே நினைத்து வந்தனர். ஆனால் எர்னாகுளத்தில் கல்வி மந்திரி கார்யதர்சி ஸ்ரீமான் வார்க்கி புதுக் கல்வி திட்டத்தைப்பற்றி பேசியது ஸம்ஸ்கிருதாபிமானிகளுக்கு இடிவிழுந்தது போலாகுமென்பது நிச்சயம். 1, 2, 3, பாரங்களில் ஹிந்தியை கட்டாயப் பாடமாக வைத்துவிட்டு, மேல் வகுப்புக்களிலும் தாய் பாஷைகளை கட்டாயமாக வைத்துவிட்டு ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், ஹிந்தி இவைகளை இஷ்டப்பாடமாக வைக்கவேண்டும் என்பது வார்க்கி திட்டத்தின் ஸாரம். இங்கிலீஷ் பாஷைக்கு உலகில் இருக்கும் தேவையையும், அதிலுள்ள விஞ்ஞான சாஸ்திரங்களையும் அறிந்தவன் அதன் முக்யத்வத்தை உணராதிருக்கமாட்டான். பொதுவாக இங்கிலீஷிற்கு பலத்த செல்வாக்கு அநுபவத்தில் காணப்படுகிறது. இந்த நிலையில் பள்ளியில் படிக்கும் மாணவன் இங்கிலீஷை விட்டு ஸம்ஸ்கிருதத்தை எடுத்துக்கொள்வானென்று எதிர்பார்க்க இடமே இல்லை. இங்கிலீஷுடன் இஷ்டப்பாடமாக ஸம்ஸ்கிருதத்தை வைப்பது மறைமுகமாக ஸம்ஸ்கிருதத்தை ஸ்கூல்களிலிருந்து எடுப்பதுபோலவேயாகும். தேசியம் எல்லா வழிகளிலும் ஓங்கவேண்டுமென்று நினைக்கும் காங்கிரஸ் அதிகாரகாலத்தில் ஸம்ஸ்கிருதம் மறைய ஆரம்பிப்பது நிச்சயமான துரதிருஷ்ட ஸம்பவமாகும். மேனாடுகள் ஸம்ஸ்கிருத பாஷையில் விசேஷமாக முயற்சிசெய்யும் காலத்தில் நமது ஸ்கூல்களிலிருந்தே ஸம்ஸ்கிருதத்தை எடுக்க மன்றமுகமாக முயற்சிப்பது வெட்கக் கேடான கார்யமே. ஸம்ஸ்கிருத பாஷை, அதிலுள்ள க்ரந்தங்கள் இவைகளின் மேன்மை உலக ப்ரஸித்தமானது. இந்தியாவில் அதன் மதிப்பை யறியாது நாம் அதை மறைத்து விட முற்பட்டால் சரித்ரகாரர்கள் நம்மீது பழிகூறப்போவது நிச்சயம். எப்படியானாலும் வார்க்கி திட்டத்தால் ஸம்ஸ்கிருதம் ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டது. ஸம்ஸ்கிருதாபிமானிகள் ஒன்றுகூடி இத் திட்டத்தை உடைத்தெறிய வேண்டும். கட்டாய ஹிந்திக் கிளர்ச்சியால், ஹிந்தி அபிமானி தமிழ் அபிமானி, என்று இரு பிரிவு ஏற்பட்டு விட்டது, அவரவர் தங்கள் கார்யத்தையே கவனிக்கிறார்கள். இவ்விருவரும் ஸம்ஸ்கிருதத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. அது தாயில்லாப் பிள்ளையாக இருக்கிறது. அது ஒரு ஜாதியாரின் பாஷையென்று உதாஸீனம் செய்யப்படக், காரணமிருக்கிறது. பரிந்து பேசுவோர் இல்லாத காரணத்தாலேயே மந்திரி ஸபை ஸம்ஸ்கிருதத்தின் தலையில் கை வைக்க முற்பட்டிருக்கிறதுபோலும்! ஸம்ஸ்கிருதாபிமானிகள் விழித்துக்கொள்வார்களா?

ராமானுஜ தாதாசாரியார்.

### கும்பகோணம் பாங்கு

பெரியதெருவிற்கு மாற்றப்பட்டது.

கும்பகோணத்தில் பிரபலமாக விளங்கிவரும் "கும்பகோணம் பாங்க்" பெரியதெருவிலுள்ள 54-நீ. கட்டிடத்திற்கு 15வ முதல் மாற்றப்பட்டிருக்கிறது. பாங்குக்காகவே இந்தக்கட்டிடம் ஸொந்தமாக விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது.

15வ திங்கள் கிழமைமாலை கிரஹப்பிரவேச விழாநடந்தது. பாங்கின் டைரக்டர்களும் இதா நகரப்பிரமுகர்களும், பொதுஜனங்களும் பலர் விஜயம் செய்திருந்தார்கள். கட்டிடம் அழகாக தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. லக்ஷ்மீபடத்திற்கு பூஜை முதலியவை செய்யப்பட்டபின் பாங்கியின் தலைவர் ஸ்ரீமான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களாலும், திவான் பஹதூர் கே.எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்களாலும், இந்த பாங்கு செய்துவரும் உதவியைப் பற்றிக் குறிப்பிட்டு, மேன்மேலும் இதை யாவரும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. யாவருக்கும், சந்தனம், தாம்பூலம், பழம் வழங்கப்பட்டு விழா மங்களமாகப் பூர்த்தியடைந்தது.

ஏற்கனவே பாங்க் இருந்துவந்த இடத்திலும் ஒரு பிராஞ்சு ஆபீஸ் நடத்தப்படும். காலை 8முதல் 11 வரையிலும் மாலை 3முதல் 6வரையிலும் அங்கும் எல்லா பாங்கு வரவு செலவுகள் செய்யப்படும்.

### ராஜகுமாரருக்குத் தடை. சர்ச்சில் வரக்கூடாதாம்!

பாதிரியின் செய்கை.

அரசுரிமையைத் துறந்துவிட்ட வின்ட்ஸர் கோமகன் தமது மனைவியாருடன் பாரிஸில் தங்கிவருகிறார். இவர் அங்கு ஒருமாதா கோவிலில் தொழுவதற்குப் போகவிரும்பினார். ஆனால் அந்த சர்ச் பாதிரியானவர் இவரை அங்கு வரக்கூடாதென தடுத்தாராம். அமெரிக்க ஸ்திரீயை விவாகத்து செய்து இவர் மணந்ததே இதற்குக் காரணமாம். பிறகு அந்தப் பாதிரி தமது தவறை உணர்ந்து மன்னிப்புக்கேட்டும் வின்ட்ஸர் கோமகன் அந்த சர்ச்சுக்குப்போக மறுத்துவிட்டார். பாதிரியின் செய்கையைப் பலரும் கண்டிக்கிறார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு

விஜயயாத்திரை முகாம்.

நீடாமங்கலம்

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# ‘மூகபஞ்சசதீ’

கடாக்ஷ சதகம்.

(11—11—37 தொடர்ச்சி)

56. மந்த ஸ்மிதைர் தவளிதா மணிகுண்டலாம்சு-
ஸம்பர்க்க லோஹித ருசிஸ் த்வத் அபாங்க
தாரா |
காமாக்ஷி மல்லி குஸுமைர் நவ பல்லவைச்ச
நீலோத்பலைச்ச ரசிதேவ விபாதி மாலா ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மந்தஸ்மிதை: - உனது புன் சிரிப்புகளால், தவளிதா - வெண்மையான நிறத்தோடிருக்கச் செய்யப்பட்டதும், மணிகுண்டலாம்சு ஸம்பர்க்க - உனது ரத்ன குண்டலங்களுடைய காந்தியின் சேர்க்கையினால், லோஹிதருசி: சிவப்பு நிறத்தோடு கூடியதுமான, த்வத் அபாங்க தாரா-உனது கடாக்ஷத்தின் பெருக்கானது, மல்லி - குஸுமை: - மல்லிகைப் புஷ்பங்களாலும், நவ பல்லவைச்ச - புதிதான துளிர்களாலும், நீலோத்பலைச்ச - நீலோத்பலங்களாலும், ரசிதமாலா இவ - செய்யப்பட்ட (தொடுக்கப்பட்ட) மாலைபோல், விபாதி - விளங்குகிறது.

1. கடாக்ஷத்தை கருப்புநிறமாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை நீலோத்பலத்திற்கு ஸமமாகவும், மந்தஸ்மிதத்தை வெளுப்பாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை மல்லிகைப் புஷ்பத்திற்கு ஸமமாகவும், ரத்னங்களைப் பொதுவாக வர்ணிக்கும்போது சிகப்பு நிறமாக வர்ணிப்பது வழக்கமாகையால் அவற்றின் காந்தியை நவ பல்லவங்களுடைய சிகப்பு நிறத்திற்கு ஸமமாகவும் இங்கு சொல்லப்பட்டது. ஆகவே தனக்கு ஸ்வயமாக உடைய கருப்பு நிறத்தோடு மந்தஸ்மிதத்தின் வெளுப்பு, மணி குண்டலங்களின் ரத்னங்களுடைய சிகப்பு, இவற்றோடு கூடிய அம்பிகையின் கடாக்ஷ பரம்பரையை மல்லிகை நவ பல்லவம், நீலோத்பலம் இவற்றால் தொடுக்கப்பட்ட மாலைக்கு ஸமமாகச் சொல்லப்பட்டது.

57. காமாக்ஷி சீதள க்ருபாரஸ நிர்ஜராம்ப:
ஸம்பர்க்க பக்ஷ்மலருசிஸ் த்வத் அபாங்கமாலா |
கோபி: ஸதா புரரிபோ: அபிலஷ்யமாணா
தூர்வா கதம்பக விடம்பனம் ஆதனோதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! த்வத் அபாங்கமாலா - உனது கடாக்ஷத்தின் வரிசையானது, சீதள - குளிர்ந்தான, க்ருபாரஸ - உனது க்ருபாரஸமென்ற, நிர்ஜராம்ப: - நீர்வீழ்ச்சியின் ஜலத்தின், ஸம்பர்க்க பக்ஷ்மலருசி: - ஸம்பந்தத்தால் செழிப்பாயிருப்பதும், ஸதா - எப்போதும், புரரிபோ: - பரமசிவனுடைய, கோபி: அபிலஷ்யமாணா - கண்களால் விரும்பப்பட்டதுமான, தூர்வா கதம்பக - அருகம் புல்லின் கூட்டத்தினுடைய (வனத்தினுடைய) விடம்பனம் ஆதனோதி - ஸாம்யத்தை (அதைப் போலிருக்கும் தன்மையை) அடைகிறது.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷமாலையை ஒரு அருகம் புல் கூட்டத்திற்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. ரஸமென்றால் ஜலமென்றும் அர்த்தம். கோ என்றால் கண்ணைக்குறிப்பதுடன் பசுவையும் குறிக்கும். கடாக்ஷமானது சீதளமான கருணாரஸம் பாய்வதினால் செழிப்பாயும் எக்காலமும் பரமசிவனுடைய கோக்களால் (கண்களால்) விரும்பப்பட்டதாயுமிருப்பதால், ஸதா விழுந்து கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சியின் அருகிலிருப்பதால் செழுமையாயும் கோக்களால், (பசுக்களால்) ஸதாகாலமும் விரும்பப்படுவதுமான அருகம்புல் வனத்திற்கு கடாக்ஷ மாலையை ஒப்பிடப்பட்டது.

58. ஹ்ருத் பங்கஜம் மம விகாஸயது ப்ரமுஷ்ணன்
உல்லாஸம் உத்பலருசேஸ் தமஸாம் நிரோத்
தோஷானுஷங்க ஜடதாம் ஜகதாம் துனோ: [தா]
காமாக்ஷி வீக்ஷண விலாஸ தினோதயஸ்தே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே - உன்னுடைய, வீக்ஷண விலாஸ - பார்வையின் அழகாகிற, தினோதய: - பகற்காலத்தின் ஆரம்பமானது (ஸூர்யோதயமானது), உத்பலருசே: உல்லாஸம் - நீலோத்பலங்களின் அழகை (காந்தியை), ப்ரமுஷ்ணன் - அதிகமாக அடைத்துகொண்டு, தமஸாம் நிரோத்தா - இருட்டைப் போக்கடிப்பதாய், ஜகதாம் - லோகங்களுடைய, தோஷானுஷங்க ஜடதாம் - தோஷங்களால் ஏற்படும் ஜாட்யத்தை, துனோ: - அகற்றுவதாய், மம - ஹ்ருத்பங்கஜம் - எனது ஹ்ருதயமாகிற தாமரையை, விகாஸயது - மலரச்செய்யட்டும்.

1. இதில் அம்பாளுடைய பார்வையை ஸூர்யோதயத்திற்கு ஸமானமாக வர்ணிக்கப்பட்டது. ஆயினும் பார்வையைக்கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது வழக்கமாகையால் அதை அனுஸரித்து ‘உத்பலருசே: உல்லாஸம் ப்ரமுஷ்ணன்’ என்று சொல்லப்பட்டது. தமஸ் என்றால் இருட்டு என்ற அர்த்தமிருப்பதுடன் பாபம் என்ற அர்த்தமுமுண்டு. பாபத்தைக் கருப்பு நிறமுள்ளதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம். அம்பிகையின் கடாக்ஷமானது பாபத்தைப்போக்குவதால் ‘தமஸாம் நிரோத்தா’ என்று சொல்லப்பட்டது.

2. தினோதய: என்பது (தினத்தை உதயம் செய்வதால்) ஸூர்யனைக் குறிப்பதாகவும் சொல்லலாம்.

59. சக்ஷுர் விமோஹயதி சந்த்ர விபூஷணஸ்ய
காமாக்ஷி தாவக கடாக்ஷ தம: ப்ரரோஹ: |
ப்ரத்யங் முகம் து நயனம் ஸ்திமிதம் முனீனாம்
ப்ராகாச்யமேவ நயதீதி பரம் விசித்ரம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தாவக கடாக்ஷ - உனது பார்வையென்கிற, தம: ப்ரரோஹ: - இருட்டின் ஆவிர்பாவமானது, சந்த்ர விபூஷணஸ்ய - (சந்த்ரனை சிரோபூஷணமாக உடைய) பரமசிவனுடைய, சக்ஷுர் விமோஹயதி - கண்களை மயக்குகிறது. து - ஆயினும், முனீனாம் - யோகிகளுடைய, ப்ரத்யங் முகம் - உள்நோக்கியதும், ஸ்திமிதம் - அசைவற்றதுமான, நயனம் - கண்ணை (த்ருஷ்டியை), ப்ராகாச்யமேவ நயதி - வெளிச்சத்தோடிருக்கச் செய்கிறது, இதி - என்பதானது, பரம் விசித்ரம் - மிகுந்த ஆச்சர்யம்.

1. கடாக்ஷமானது கருப்புநிற முடையதால் அதை ‘தம: ப்ரரோஹ:’ என்று சொல்லப்பட்டது. அந்த இருட்டினால் பரமசிவனுக்கு கண்கள் தெரியாமல் மயங்குகையில் அந்தர்முகமானதும் அசைவற்றதுமான யோகிகளுடைய பார்வையானது ப்ரகாசத்தை யடைகிறது. இந்த ஆச்சர்யத்தை கவியானவர் இதில் வர்ணிக்கிறார். இதனால் பரமசிவன் அம்பிகையின் கடாக்ஷ விசேஷத்தினால் முனீச்வரர்களுடைய ஹ்ருதயமானது ப்ரகாசத்தை (பரிசுத்தத்தை) அடைவதும் சொல்லப்பட்டது.

60. காமாக்ஷி வீக்ஷணருசா யுதி நிர்ஜிதம் தே
நீலோத்பலம் நிரவசேஷ கதாபிமானம் |
ஆகத்ய தத் பரிஸரம் ச்ரவணாவதம்ஸ-
வ்யாஜேன நூனம் அபயார்த்தனம் ஆதனோதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே வீக்ஷணருசா - உனது பார்வையின் காந்தியினால், யுதி நிர்ஜிதம் - யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டதான, நீலோத்பலம் - நீலோத்பலமானது, நிரவசேஷ கதாபிமானம் - மானத்தை முற்றிலுமிழந்ததாய், தத்பரிஸரம் - அந்தப் பார்வையின் ஸமீபத்தை, ச்ரவணாவதம்ஸ வ்யாஜேன - காதிற்கு அலங்காரமென்ற வ்யாஜத்தினால், ஆகத்ய - அடைந்து அபயார்த்தனம் ஆதனோதி - அபயத்தை வேண்டுகிறது, நூனம் - இதில் ஸந்தேஹமில்லை.

1. உத்தம ஸ்த்ரீகள் தங்கள் காதுகளில் புஷ்பங்களை அணிவது ஓர் அலங்காரமாகும். அவ்வித புஷ்பத்தை ச்ரவணாவதம்ஸம் கர்ணாவதம்ஸம் என்று சொல்லப்படும். இவ்விதம் அம்பிகை தன் காதில் நீலோத்பலத்தை அணிந்திருப்பதை இங்கு வேறு காரணம் சொல்லி வர்ணிக்கப்பட்டது.

61. ஆச்சர்யமம்ப வதனாப்யுதயாவலம்பீ
காமாக்ஷி சஞ்சல நிரீக்ஷண விப்ரமஸ்தே |
தைர்யம் விதூய தனுதே ஹ்ருதி ராகபந்தம்
சம்போஸ் ததேவ விபரீததயா முனீனாம் ||

அம்ப காமாக்ஷி - தாயே! காமாக்ஷி! வதனாப்யுதயாவலம்பீ - உனது முகத்தின் மேன்மைக்கு ஆதாரமாயிருக்கும், தே - உனது, சஞ்சல நிரீக்ஷண விப்ரம: - சஞ்சலமான பார்வையின் அழகானது, சம்போ: - பரமசிவனுடைய, தைர்யம் விதூய - தைர்யத்தைப் போக்கி, ஹ்ருதி - அவருடைய மனதில், ராகபந்தம் கரோதி - ஆசையினுடைய கட்டை உண்டுபண்ணுகிறது. (அப்படியிருக்க) தத் ஏவ - அதே பார்வையானது, விபரீததயா - (அதற்கு, மாறுபாடாக, முனீனாம் - முனிகளுடைய (யோகிகளுடைய, பக்தர்களுடைய), ஹ்ருதி - மனதில், ராகபந்தம் விதூய - ஆசையின் கட்டைப்போக்கி, தைர்யம் தனுதே-தைர்யத்தை உண்டுபண்ணுகிறது. ஆச்சர்யம் - (இது) ஆச்சர்யம்.

62. ஜந்தோ: ஸக்ருத் ப்ரணததா ஜகதீட்யதாம் ச
தேஜஸ்விதாம் ச நிசிதாம் ச மதிம் ஸபா[யாம்]
காமாக்ஷி மாக்ஷிக ஜரீமிவ வைகரீம் ச
லக்ஷ்மீம் ச பக்ஷ்மளயதி க்ஷண வீக்ஷணம் தே ||



## Some aspects of the Moratorium Bill. Alternative Course.

*(Mr. N. Natesa Aiyer, Advocate, Madura.)*

In the first place, the Bill does not envisage any substantive enactment for affording permanent relief. In the absence of such a measure the interim perplexity and chaos will be agonizing and the declared object of the Bill will stand frustrated. Secondly the temporary suspension of the legal remedy by suit or execution proceeding, which is the only relief vouchsafed by the Bill will merely add to the existing heavy burden and the accumulated indebtedness will descend and press upon the parties with a crushing weight, the moment the Moratorium expires, leaving no loop hole for escape, and the Act will defeat its own purpose. Thirdly the benefit expected from the Bill is problematical, deceptive and illusory while the harm therefrom is certain, incalculable and manifold. An agriculturist is very often a debtor as well as a creditor. What the right hand may gain as a debtor is taken away by what the left hand loses as a creditor. The certain loss outweighs the uncertain gain. Lastly, in actual working, the Bill will not only not do any good either to the owning section or the tilling section but will turn out to be a potential powder-magazine. Instead of helping and promoting the agricultural industry which is the professed object of the Bill, it is sure to smother and kill it by crippling at once the resources of both the owner and tiller. It is common knowledge that petty pattadars paying kist of Rs. 25/ and less constitute the bulk of the agriculturists and they depend primarily on borrowings for carrying on agricultural operations year after year or for advancing the necessary cultivation expenses to their lessees and tenants. When the security afforded by the land is withdrawn by reason of the Act the owner loses what little credit he possesses. When the security afforded by the expected yield is statutorily withdrawn, the tiller also loses credit with his landlord. An inevitable position will arise. Cultivation may be brought to a standstill and agricultural industry will stand paralyzed for sheer want of funds. Money may not be forthcoming even for the purchase of seed-grains, plough bulls and manure. Capitalists will think a hundred times before they can be induced to lend. Besides, legal ingenuity will not be wanting to devise ways and means for circumventing the law and the agriculturists may in the long run find themselves in a position worse than before. An enactment fixing the maximum rate of interest may perhaps bring down the capitlists on their knees on pain of keeping their moneys idle. Whether this will have the desired effect is again a matter for speculation. It may be that the money lender may prefer to be guided by the wise adage "A bird in the hand is worth two in the bush" or think of less risky investments.

It is quite possible that immunity of small holdings from attachment may lead to a rise in the price of land. The agriculturists will however naturally relapse into his previous extravagant and improvident ways of living, ending in a private sale of the very lands the attachment of which the law is solicitous to avert. Simple loans and mortgages willbe supplanted by usufructuary mortgages and absolute sales or sales with a condition for re-purchase. The proposed amendment cannot affect these transactions. In fact no law, however cleverly conceived can strike at them except possibly the introduction of principle of Socialism and Communism which no Indian will contemplate with equanimity.

Its repercussion on other industries and manufactures and trades is better imagined than told. Even the very necessities of life such as rice, groceries, clothes, kerosine oil, etc which are generally supplied to the petty pattadhars and tillers on credit will be denied to them. Mills, factories, exports, imports, all alike may suffer considerably. Even the Government revenue may be imperilled.

The next question is what alternative proposals can effectively take the place of the Moratorium Bill. The world-wide economic depression has hit the agriculturist class more severely than any other and has pushed them to the verge of a steep precipice. A variety of causes, chief among which is the copying of the western habits, customs, and manners, has contributed to a rise in the standard of living which it is well nigh impossible to lower. An immediate substantial relief is a pressing need. Otherwise there is the danger of a huge catastrophe overtaking the country which if not averted now will create a situation hard to handle. One has to keep in view two main principles. Firstly the relief to be granted must not be temporary, secondly it ought also not to trench upon vested rights. The Moratorium Bill before us violates both these principles. For reasons already stated, a mere suspensory legislation of this kind does not appeal to me. It is worse than the disease. I am therefore constrained to rule out all legislations for temporary relief. On the same grounds I am not in favour of a legislation which will compulsorily postpone the time of payment or reduce the amount of principal or interest or distribute the payment over several instalments or similar half-way contrivances. I have to condemn in no uncertain language and with all the emphasis I can command the rumoured proposal to effect a staturoy extinguishment of the debts of all agriculturists. A confiscatory legislation of this kind can find support only in the principles of Socialism and Communism which are wholly repugnant to the Indian genius. Besides it is a matter for consideration whether in view of the Government of India Act, it is within the competence of Provincial Legislature to enact a confiscatory measure. It has to be remembered that the idea at the back of the Legislation is to relieve not all indebtedness but agricultural indebtedness alone. It is conceivable that by reason of the present inability of the Legislature to effect the much-needed substantial reduction in the land Revenue, it has hit upon this palliative measure.

Whatever the reason, the problem can be solved not by giving a temporary immunity but by terminating and wiping off absolutely and immediately all existing indebtedness and helping the class to start life with a clean state. To this end, the Government must itself take over the debts and satisfy the creditors by pursuading them to accept in full acquittance the principal amount with some little interest if possible or by payment in full. A Government which is successfully working the Prohibition Scheme in Salem District at the cost of 26 lacs of public Revenue and is sure to work it similarly in other districts as well at a much higher cost, will certainly be able to cope with the situation. The creditors will submit to a reduction more cheerfully than the Government servants to a cut in their salaries, provided. of course, cash is paid, or what is equivalent to it, G. P. Notes at easy rates of interest and made payable in reasonable instalments are delivered to them. This ought to be followed by a substantial reduction in the Government Revenue at a graduated scale. It may perhaps be a very bold adventure and constitute a severe strain on the very slender resources of the Provincial Government. But the Imperial Government imbused with the sense of paternal responsibility which it owes to the people, will not grudge the necessary aid. Any way the cause is well worth the attempt. It has to be added that the agriculturists can protect themselves only by learning how to help themselves. The Legislature must therefore address itself also to the problem of teaching them how to help themselves. Otherwise they may be entangle themselves in fresh debts. A vicious circle will enmesh them. One possible mode of curbing this natural tendency, is the introduction of Legislation similar to what has been enacted in Punjab and other Provinces restraining alienation and sub-division of holdings 3 acres in extent and consolidating holdings of lesser extent. The law of Damdupat can well be put into force and worked so as to extract the maximum benefit from it. A limit may be placed on the rate of interest also. *It is difficult to evolve any other proposal which will afford permanent relief with-out trenching upon vested rights which it ought to be the effort of every normally working Legislature to avoid.* Under the combined operation of these and similar measures one may hope for the dawn of an era of prosperity and contentment in the Indian Horizon without implanting in the Indian soil the seeds of Socialism and Communism which are hourly threatening to invade India to her total ruin.


Books by Dewan Bahadur
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| 1. | Kalidasa's Heroes | 0 | 6 | 0 |
| 2. | The science of the soul | 1 | 8 | 0 |
| 3. | Manu, the friend of Man | 0 | 8 | 0 |
| 4. | Sandilya Bakthi Sutras | 0 | 4 | 0 |
| 5. | The Gospel of Gita | 0 | 3 | 0 |
| 6. | The future of Brahmin | 0 | 2 | 0 |
| 7. | The Gita ideal of devotion | 0 | 4 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works,
Ltd., Town High School Road,
Kumbakonam.

## ஒற்றுமை உயர்வளிக்கும்.

பழையகோயில்கள் இடிந்து விழுகின்றன. புதுக்கோயில்கள் எழும்புகின்றன. இவையும் அவையாகுமே என்பதை நினைப்பவர் மிகச் சொற்பமே. சங்கங்கள், சபைகள் வெகு ஆடம்பரத்துடன் ஆரம்பிவிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள்ளாகவே இருந்த விடம் தெரியாமல் மறைகின்றதைப் பார்த்திருந்தும் யாது காரணத்தாலோ புது சிருஷ்டி உண்டாக்குவதிலேயே சில உற்சாகிகள் காலம் போக்குகின்றனர். போனதுபோக தற்போதாவது எல்லாம் இணைந்து ஒரு தனிக்குடைக் கீழமர்ந்து தீவிரமாக சநாதனிகள் ஒன்றுபட்டு உழைத்தாலல்லது ஒரு பயனும் எய்துதல் முடியாதகாரியமென்றே சொல்லலாம். இதற்குத் தகுதியான ஸ்ரீ ராமமூர்த்தி போன்ற வீரன் வேண்டும். நம்மவர் ஒருவர் வார்த்தையை தேவதா விசுவாசத்துடன் கேட்பது என்ற விரதம் கைக்கொள்ள வேணும். பிராஹ்மணர், பிராஹ்மண இதரர் என்ற கக்ஷிகளை விலக்கி ஸநாதனதர்ம நெறியில் நிற்கும் சகலரையும் ஒன்றுபடுத்த முயற்சிக்க வேண்டும். கூடியமட்டில் "அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்" இது விஷயத்தில் உழைத்து வருவதில் இதில் இதர சபைகள் கலந்து ஒரு தனிப் பெயருடன் காங்கிரஸ் போல ஒரு சபையாக நின்றுலல்லது ஸநாதனிகள் நன்மைபெறலென்பது முயற்கொம்பே. பேசுவது குறைந்து செய்கை விருத்தியாகவேணும். அநுட்டானம் பிரதானம் இச் சென்னைமாநகரில் தீவிரமாக ஒத்துழைப்பவர்கள் ஒன்றுகூடி அநுஷ்டிக்க சாதகமான திட்டங்களை மேற்படுத்தி அவற்றை அமுலுக்குக் கொண்டுவா முன் வரவேண்டும். ஏதோ சில வயோ விருத்தர்கள் மாத்திரம் நினைத்தபோது சில கூட்டங்களில் பேசிவிடுவதால் முழு நன்மை வரவே வராது. சிறுவர்கள் தரும நெறியில் நிற்க வழிதேடவேண்டும். முதலில் "ஆர்யதர்மம் இந்துநேசன்" போன்ற பத்திரிகைகள் ஒவ்வோரகத்திலும் வருமாறு செய்தல்வேண்டும் இத்திட்டம் ஒன்றைக் கைக்கொள்ளின் மற்றவை ஊசி போனவழி நூல் வருவது போல் வரும். பத்திரிகை உலகம்தான் நாட்டை நடத்துகின்றது. இதில் தக்க முறையில் அரும்பாடுபடுதலே நலன். ஸநாதன தர்மாபிமானிகளும் தனவந்தர்களும் இதை நன்காலோசித்து ஒற்றுமையுடன் உழைத்தால் உயர்வு வருவது கையிற் கனி. பேறிஞர் இதனை நன்குணர்ந்து வழிகாட்டுவாராக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## ஜமீன் மேல்வார சட்டத்திருத்த பரிசீலனை.

ஜமீன்மேல் வாரசட்ட திருத்த பரிசீலனை கமிட்டி, சிக்ரடரி அவர்களால் 5—10—37 தேதியுள்ள கம்முனிக் பிரசுரிக்கப்படி மெமோராண்டங்கள் அனுப்ப கோரப்பட்டிருக்கிறது. ஷை சட்ட சம்பந்தமாய், விரிவான விவகாரம் உள்ளதை நிவர்த்திக்கவும், Fair and Gequitble Rent Share நிர்ணயப்படுத்தி, இதர விஷயங்கள் பரிசீலிப்பதாய், கம்முனிகில் இருக்கிறது.

ரயித்வாரிகொள்கை ஏற்பாட்டுப்படி, எஸ்டேட்லாண்டு ஆக்ட் நிலவரி அனுஷ்டிக்க சட்டசபையில் 1933-ஹூ பேசப்படும், அக்கொள்கை இப்பவும் பத்திரிகைகளில் வெளியாகிகொண்டு வருகிறது. ரயித்வாரி நிலவரி நிர்ணயமானது இன்கம்டாக்ஸ் கணக்கு கொள்கைப்படி ஏற்படவேண்டுமென்றும் நிகர்மிச்சத்தில் நாலில் ஒருபாகம் லாண்டு ரெவினியூ ஏற்படவும், பலமான முயற்சி இருந்து, நம் கவர்ன்மெண்டும், சில வருஷங்கள் சடந்தும், நிர்ணயமாக்ககூடும்.

எஸ்டேட்டாரும், டெனன்டுகளும் ஒருமையாயிருக்க வேண்டுவது கருதி, மேல் கண்ட ரயித்வாரி கொள்கை அனுஷ்டிக்கிறதென்று ஏற்படுமானல், ரெவினியூ, ரிகவரி சட்டம் திருத்தப்படுகிறபடி அனுஷ்டிக்க கோரி விரிவாக விவகாரம் உண்டாக கூடியதால் அதைவிட கமிட்டியார் பரிசீலித்து மேல்வாரம் இவ்வளவு பங்கு என்று நிச்சயப்படுத்தி சட்டமாக்கி, அனுஷ்டிப்பு ஏற்படுவது மேல் என்று தோன்றுகிறது.

பிரதி பூமிக்கும் நிலவரி நிர்ணயப்படுத்த வேண்டுமா என்ற கேள்வி கம்முனிக்கில் இருக்கிறது. மேல்வார பங்கு உரிமை கணக்குபடி, அவச்யத்துக்கு தக்கபடி, பொருளாகவும், காமுடேஷன் செய்து, ரொக்கமாகவும், இரண்டும் உள்ளதாய் வசூலிக்க சட்டத்தில் ஆதாரமிருக்கிறது, ஆங்காங்கு எஸ்டேட்களில், ஓடவாரம் கணக்கு உள்ளபடியே, ஏற்படும் பங்கு டெனண்டுகள் செலுத்தவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். செட்டில்மெண்டு அத்தியாய பரிசீலனையில் நிர்ணயித்து பிறகே பிரதி பூமிக்கும் நிர்ணய படுத்தி கொள்ளவேணும்.

ரெவினியூ ரிகவரி ஆக்ட, பூமிதீரத்தைப் பெருத்து நிலவரி ஏற்பாடுள்ளது. எஸ்டேட் லாண்டு சட்டம், மேல்வாரபங்கு நிர்ணயப்படி வரி ஏற்பாடுள்ளது இப்போதிருந்தசட்டத்தில் ஓடவாரம் 100ல் ஐந்தில் ஒரு பாகம் பங்கு உரிமைஏற்படவும் மற்றும் அவசிய திருத்தங்களுடன், செய்யபட்டால், ஜமீன்தார் டெனண்டு, வகையார்கள் மனஒருமைப்பட்டு, நிலவரி வசூல் திறம்மாகி, விவகாரம் இல்லாமல் ஏற்படகூடியது.

இதுவிஷயம் சேர்ந்து எஸ்டேட் டெனன்டுகள் கமிட்டி சிகாட்டரி டி. விச்வநாதம் அவர்களுக்கு ஓர் அச்ல் 10 நகல்கள் வைத்து எழுதி அனுப்பி உள்ள குறை வெளியாக செய்ய வேண்டியது முக்கியமானது. அப்படி தெரிவித்தால் கம்மிட்டியார் ரிபோர்ட்டு சரிவர ஏற்பட்டு சட்டமாகி நியாயம் நிலைபெற அனுகூலமாகையால் எல்லா எஸ்டேட் டெனன்டுகளும் அவ்விதம் செய்யும்படி கோருகிறேன்.

N. ருமய்யன்
மிராசுதார் கணபதி அக்கிரஹாரம்

## ஸ்ரீ பராங்குச பக்தஸபை. கும்பகோணம்.

9—11—37 மாலை 5-மணிக்கு ஸபையினரின் தனிக்கூட்டம் கூடியது: திருவயிந்திரபுரம், மஹாமஹோபாத்யாய, சேட்டலூர், ஸ்ரீ உ. வே. நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமியின் எழுபதாவது ஆண்டின் நிறைவிற்கு ஷை ஸபையினரின் பிரதிநிதியாகச் சென்றுவந்த ஸ்ரீ உ. வே. இளையவில்லி, தி. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி 7—11—37ல் அங்கு நிகழ்ந்த வைபவங்களைத் தானனுபவித்து வந்தபடியே அழகாகப்பேச, அம்மஹான் நீடூழிவாழ்க, ஸ்ரீ ஆராவமுதாழ்வானையும், ஸ்ரீ கோமளவல்லித் தாயாரையும், நாமனைவரும் பிரார்த்திப்போமாக என ஆனந்தமாக ஆமோதித்துப்பேசி அகமகிழ்ந்தனர்.

ஷை ஸ்வாமியின் ஞாபகச்சின்னமென 360 பக்கங்களுக்கு மேல்பட்டு அச்சிடப்பட்ட புஸ்தகத்தில் பலபாகங்களைப்படிக்க அதையும் கேட்டு ஸபையினரின் ஆனந்தம் அளவடங்காததே.

காரியதரிசி.

## வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஸம்மேளனம்

அகோலா.

பேரார் மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மூன்றாவது வருஷத்திய கூட்டம் அகோலாவில் நவம்பர் 9, 10 தேதிகளில் பிரபலமாக நடந்தது. இந்தியா சட்டஸபை மெம்பராகிய ஸ்ரீமான் பைஜநாதபஜோரியா அவர்கள் தலைமை வகித்தார். ஏராளமாக ஜனக் கூட்டம் வந்திருந்தது.

பிரபல பணக்காரர்களும், ஆஸ்திகர்களுமான மார்வாரி ஸேட்கள் இதை நடத்தப் பெரிய உதவி செய்தார்கள்.

தற்கால நிலைமையை அநுசரித்து அநேக முக்யமான தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேறின. பண்டித பரிஷத், பஜனை முதலியவைகளும் நன்கு நடைபெற்றனவென்று காரியதர்சி நமக்கு அறிவிக்கிறார்.

## மந்திரிகளைக் கண்டிக்கலாம்

சாமி வெங்கடாசலம் பேச்சு.

சென்னையில் நடந்த காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசிய பிரபல காங்கிரஸ் வாதியாகிய ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் காங்கிரஸ் மந்திரிகளின் செய்கையைக் கக்ஷிக் கட்டுப்பாட்டையுத்தேசித்து காங்கிரஸ் வாதிகள் கண்டிப்பது கூடாதெனச் சிலர் நினைப்பது தவறு என்றும், மந்திரிகளைக் கண்டிப்பது தவறல்ல வென்பதே தமது அபிப்பிராய மென்றும் அவர் பேசினாராம்

## அறிவிப்பு

"சீக்ரரேகா"என்னும்தமிழ்ஷார்ட்ஹாண்ட் பிரபலஸ்தர்கள்முன் நடத்தப்பட்டு பிள்ளைகள் தேறினார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்த விஷயம் இதற்குமுன் இந்தபத்திரிகையில் வெளிவந்தது. சென்ற 29ந்தேதி வெள்ளிக்கிழமையன்று முதன்மையாக தேறின D. முத்துகிருஷ்ணன், சந்திரமௌளீஸ்வரன் என்னும் இருவர்களுக்கு ஸ்ரீஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆசார்யாளால் அனுக்ரகபூர்வமாக இரண்டு மெடல்கள் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீகார்யம் குப்புஸாமி அய்யரவர்களால் வழங்கப்பட்டது. தற்போது ராஜா பாடசாலையில் மேலதிகாரிகளின் அனுமதியின்பேரில் ஒரு வகுப்பு நடந்து வருகிறது. சௌராஷ்டிரதெரு தர்மபரிபாலன கமிட்டி ஆபீஸ் கட்டத்திலும் ஒருவகுப்பு நடந்துவருகிறது. கூடியசீக்கிரம் சென்னையில் ஒருவகுப்பு நடக்கஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இடம் பின்னால் குறிப்பிடப்படும்.

S. S. ராமன்.
சீக்ரரேகா ப்ரசாரம்

**Srimad Bhagavatham.**

Condensed, translated, illustrated, by T. R. Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound Price Re. 1—8—0

**ஸ்ரீமத் பாகவதம்.**

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிரும அய்யாவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர். ரூ. 1—8—0
7,8,9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா.
கிடைக்குமிடம் :—
1. G. Subramania & Co., Sri Bhagavatham Publishing House, Tinnevelly Jn.
2. Arya Dharmam Office, Kumbakonam.



# வெளியூர்ச்செய்திகள்.

## புதுக்கோட்டை.

ஸ்ரீவைதிக வர்த்தனீ ஸபா, த்ரி வேத பாராயணம்.

இச்சபையின் ஆதரவில் சென்ற வருஷங்களைப்போலவே 3வது வருஷமான இவ்வருஷத்திலும் ரிக், (க்ருஷ்ண) யஜுஸ், (ப்ரச்ன க்ரம பாராயணமும் சாகையும்) ஸாம, ஆகிய மூன்று வேதபாராயணமும், டவுன், ஸ்ரீசாந்தநாத ஸ்வாமி ஸன்னிதானத்தில் நாளது ஈச்வரஹூ கார்த்திகை-மீ 1-உ (16-11-37) செவ்வாய்க்கிழமை முதல் மார்கழி-மீ 16-உ (30-12-37) வியாழக்கிழமை முடிய ஒருமண்டலத்திற்கு பிரதி தினம் மாலை 6-30 முதல் 7-30 மணி வரை நடத்தப்படும்.

பிரதி தினம் ஷை பாராயணம் முடிந்தவுடன் யஜுர் வேதத்தில் அன்றுடம் பாராயணம் செய்யப்படும் ப்ரச்சனத்தின் அர்த்தத்தையும், அதன் விநியோகம் முதலியதுகளைப்பற்றியும் விஸ்தாரமாக பிரும்மஸ்ரீ M. N. ராகவ சாஸ்திரிகள் அவர்களாலும், குடுமியாமலை, பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச கனபாடிகள் அவர்களாலும், இன்னும் இதர பண்டிதர்களாலும் உபந்நியசிக்கப்படும்,

ஷை பாராயண சமாப்தி தினமான (30-12-37) வியாழக்கிழமை அன்று வழக்கம் போல் ஸ்ரீ வேதநாயகி ஸமேத ஸ்ரீ சாந்தநாத ஸ்வாமிக்கு ஸ்ரீ மஹாந்யாஸ ஏகாதச ருத்ர ஜப பூர்வமாக சங்காபிஷேக மஹாபிஷேகம் முதலியதும், விசேஷமாக பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறது.

ஆஸ்திகர்களனைவரும் பிரதி தினம் வேத சிரவணம் செய்தும் சென்ற வருஷத்தைப் போல ஷை கைங்கர்யத்திற்கு பிரபுக்களனைவரும் அனேக ப்ரகாரங்களாக உதவின பிரகாரமே இவ்வருஷமும் உதவி செய்வதுடன் தங்கள் தங்களுடைய இஷ்டமித்ரர்களையும் உதவி புரியும்படி செய்வதன் மூலமாய் ஸர்வ சக்தரான ஸ்ரீ பரமேச்வரனுடைய பூர்ண பிரஸாதத்திற்கு பாத்திரர்களாக வேணுமாயும் பிரார்த்திக்கப்படுகிறது.

G. மலையப்ப சாஸ்திரிகள்.
காரியதரிசி.

## மதுரை.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவில்உள் ப்ராகாரத்தில் நவராத்திரி ஆரம்ப தினத்தன்று ஆத்மார்த்தமாகவும், லோகக்ஷேமத்தின் பொருட்டாகவும், ஸாம வேத வாத்தியார் வெங்கடசுப்பிரமணிய சாஸ்திரியளின் ப்ரேரணையின் பேரில் சிவராம சிரௌதி வ, சுந்தர சிரௌதி ஆ. மகாதேவ சிரௌதி அநந்தபத்மநாப சிரௌதி ராமசுப்பிரமணிய சிரௌதி வைத்யநாத சிரௌதி சு.சுந்தர சிரௌதி கி.மகாதேவ சிரௌதி ஆக எட்டு பெயர்களாலும் ஸாமவேத பாராயணம் இனிது முடிவுபெற்றது. ஷையாரின் ப்ரேரேபணையின் பேரில் வருண ஜபம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. நல்ல மழை பெய்தது. (28—10—37)ஸாமவேத பாராயணக்காரர்களுக்கும் சந்தனம், தாம்பூலம், தக்ஷிணை பழம் கற்கண்டு கொடுக்கப்பட்டது.

ஷை சமயம் சுமார் 120 வேதப்பிராம்மணாள் பாராயணம் செய்தது மிகவும் ஆனந்தகரமாயிருந்தது. வைதிக சமாஜ காரியதரிசியாயிருந்து ராஜீநாமா செய்த வெங்கடசுப்பிரமணிய சாஸ்திரிகள் மீண்டும் காரியதரிசி பதவியை வகித்து ஸமாஜத்தை அபிவ்ருத்திக் கொண்டு வரும்படி கோரப்பட்டது.

மங்கம்மாள் சத்திர விஷயமாய் மங்கம்மாளின் ஆதி சாஸனத்துக்கு(காப்பி)வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது. காப்பி வந்ததும் மேற்கொண்ட ஏற்பாடுகள் செய்யப்படும்.

வேதாபிமானி.

## கிருஷ்ணராயபுரம்.

நிருட பசு பந்தயாகம்.

மேற்படி கிராமத்தில் வாசம்செய்து வரும் வேதாந்த வித்வான் சோமயாஜி பிரம்மஸ்ரீ சங்கரநாராயண தீக்ஷிதர் அவர்களால் ஐப்பசி மீ 22உ ஸாக்நி சித்ய நிருட பசுபந்தயாகம் செய்யப்பட்டது. இந்த யாகத்திற்குநெல்லிச்சேரி பிரம்மஸ்ரீ ஸ்ரீராமநாத சிரௌதிகள் ஆத்வரம் செய்ததானது ரொம்பவும் பாராட்டத்தக்கது.

மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து தீக்ஷிதர் முதலிய பெரியோர்கள் விஜயம் செய்திருந்தார்கள்

ஒரு நிருபர்

## சீக்ரரேகாபயிற்சி.

முன் சஞ்சிகையின் மூலமாக "சீக்ரரேகா" என்ற தமிழ் ஷார்ட் ஹாண்ட்முறை கும்பகோணம் ஸ்ரீமடத்தில் கற்பிக்கப்பட்டு பரீக்ஷை வைக்கப்பட்டு, பரிசுகளும் வழங்கப்பட்டதென்று நேயர்கள் அறிவார்கள் தற்போது ராஜாதர்மபாடசாலையில் ஓர் கிளை சங்கமும், சௌராஷ்டிர தர்ம பரிபாலன சங்கத்தில் ஓர் சங்கமும் நடைபெற்று வருகின்றது. சென்ற 6.உ முதல் சென்னை தம்புசெட்டி தெரு 119 நெ. ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் ஓர் வகுப்புப்ரசாரகர் S. S ராமனால் துவக்கப்பட்டு இலவசமாகபயிற்சி அளிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. இந்த புதிய கலையை அறிந்து கொள்ள உத்சாகமுள்ளவர்கள் காலை 8-30 முதல் 9-30 முதல் அங்கு நேரில் வந்து கற்றுக் கொள்ளலாம்.

ஒருநிருபர்

## ஆலயப்பிரவேசம்.

டாக்டர் ராஜனின் கருத்து.

சென்னை மந்திரி டாக்டர் ராஜன், திருவனந்தபுரத்தில் சிலதினம் முன்பு பேசுகையில் ஆலயப்பிரவேச விஷயமாகத்திருவாங்கூருக்கும் பிரிடிஷ் இந்தியாவிற்கும் வித்யாஸ முண்டென்றும், திருவாங்கூரில் அரசர் விளம்பரத்தினாலேயே இது ஸாத்யமாயிற்றென்றும், பிரிடிஷ் இந்தியாவில் இன்னும் பொது ஜனங்களின் மனம் மாறவில்லை யாகையால் இவ்விஷயமாகச்சட்டம் செய்வது சிறிது கஷ்டமென்றும் சொன்னார்.

இவர் குருவாயூரில் நடந்த ஆலயப்பிரவேச மஹாநாட்டில் அக்கிராஸனம் வகித்தார். ஸனாதநிகளின் டெபுடேஷனுக்குப்பதில் கூறுகையில் கால தேச நிலைமைக்கு ஏற்றபடி ஆலயப்பிரவேச விஷயத்தில் விட்டுக்கொடுக்கவேண்டுமென்று சொன்னார்.

## கும்பகோணம் ஜயில் விஸிடர்.

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டும், கும்பகோணம் பாங்க் டைரெக்டருமான ஸ்ரீமான். கே. எஸ் நாராயணஸாமி அய்யர் அவர்கள் கும்பகோணம் ஜயில் கௌரவ விஸிடாக ஸர்க்காரால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

## தமிழை வளர்க்க தருமம் வளரும்.

இரு மொழிக்குங் கண்ணுதலார் முதற் கடவுள். இருமொழியும் ஆன்றவரே தழீஇயனார். இரு மொழிகளாவன,வடமொழியும் தென்மொழியும். இவ்விரண்டிற்கும் ஒரு தனி ஆபத்து வந்துளது. அதாவது ஹிந்தியைக்கட்டாயப்படிப்பாக வைப்பதுதான். தமிழ் நாட்டினெல்லை வடவேங்கடம் தென்குமரி. இங்கு வடவேங்கம் என்பது சிங்கவேள் குன்றம் என அறிஞர் கூறுப. அநாதிகாலமாக நந்தமிழகத்தில் தனிப்பெருஞ் செல்வியாகத் திகழ்பவள் தமிழ்த்தாய். மாதா வயிரெறிய மகேசுவர பூசைசெய்வது உத்தம மாந்தர் கடன் அல்ல. தமிழ்த்தாய் நோவுபடுமாறு செய்தல் தமிழ்மக்கட்கு ஆராத்துயரத்தை அளிக்கும் என்பதில் ஐயமுண்டோ? பாஷாபிமானம் குன்றின் தேசாபிமானம் உயர விருக்குண்டோ? அறிஞர்கள் இதனை நன்கு ஆராய்ந்து பிறருக்குச் செவ்வனே எடுத்துரைக்கலாகாதா? பாலர்களுக்கு கட்டாயப் படிப்பை அதிகரிப்பிப்பதனால் எள்ளளவும் பயனுண்டா? தற்போதே எழுதப்படிக்கத்தெரிந்தவர் எண்ணிக்கை எவ்வளவு? கேவல பாஷா ஞானத்தால் மாத்திரம் முழுப்பயன் எய்திவிட முடியுமா?

வல்லான் வகுத்ததே வாய்க்கால். அவ்வல்லாளனும் பிறர் மனம் நோவுபடச் செய்தல் தகுதியாமோ? அஹிம்சா தர்மம் பேச்சளவுடன் நிற்காது செய்கையிலும் பிரதிபலித்தால் தானே சத்தியமாகும். அதிகாரம் கிடைத்தவாறே அனைவரையும் அகங்குளிரச் செய்வதல்லவா அமாத்தியர் முதற்கடமை. அதிகப் பிடிவாதம் பேரறிஞருக்கு அணிகலமாகாது.

உலகத்திலேயே பெரும்பான்மையோர் இப்பாஷை பேசிவருவது நாடறிந்த விஷயம். தமிழபிவிருத்தி நெடுங்காலம் புறக்கணிக்கப்பட்டு ஏதோ கடந்த சிலவருஷங்களாக சற்றே தலைதூக்கும்போது பாலாரிஷ்டம் வந்துவிட்டதுபோலும், தமிழபிமானிகள் இச்சமயம் ஒன்றுசேர்ந்து அளப்பருஞ்சலுதியான தமிழைச் செவ்வனே வளர்க்கத் தொடங்கினால் தருமம் வளரும். தரும ராஜ்யமே வேண்டற்பாலது. கொடுங்கோல் என்பது மஹாஜன அபிப்ராயத்திற்கு முற்றும் முரண்பட்டதாகும். செங்கோன்மையே செப்பந்தரும். ஹிந்தி என்பது வடமொழிக்கு எத்துணையும் நிகராகாது. ஆழ்வார் நாயன்மார்கள் பரிபாலித்த நம் சீரிய தமிழைக் காத்து அபிவிருத்தி செய்வதே தமிழர்கள் தற்போது செய்யவேண்டிய முதற் கருமம். நெற்செய்யப் புற்றேயும் என்பதை மறவாது விடாமுயற்சியுடன் தமிழைக் காப்பாராக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## கும்பகோணம்.

ஸம்ஸ்கிருதபாஷாபிவர்த்தினீ ஸபா.

ஸ்ரீ சங்காசார்யமடத்தில் — 6-11-37 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கும்பகோணம் அத்வைத சபையின் ஆதரவில் ஸம்ஸ்கிருத பாஷாபிவர்த்தனீ சபையின் 10 வது கூட்டத்தில் கஸ்பா கும்பகோணம் டிஸ்டிரிக்ட் முனிசிப் ஸ்ரீ பரமேஸ்வரய்யர் அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷாப்பயாஸம் என்னும்விஷயத்தையும் அதிலும் வியாகரணத்தின் ஆவசியகத்தையும் ஸம்ஸ்கருத பாஷையில் சுமார் 1மணி நேரம் நன்றாக உபந்யாஸம் செய்தார்கள். காரியதரிசியினால் உபன்யாசகர்களுக்கும் பண்டிதர்களுக்கும் வந்தன உபசாரம் சொல்லிய பிறகு சபை இனிது கலைந்தது.

பண்டிட் எஸ். அனந்தராம சாஸ்திரி
காரியதரிசி.

# வெளியூர்ச்செய்திகள்.

## விஷ்ணுபுரம்.

### ஹிந்தி வாரக்கொண்டாட்டம்.

25-10-37 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஜார்ஜ் மிடில் ஸ்கூல் ஹாலில் ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களின் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. ஸ்கூல் மாணவர்களும் உபாத்யாயர்களும் ஊரிலுள்ள ஹிந்திப்ரேமி மண்டலத்தின் அங்கத்தினர்களும் முடிகொண்டான் மகாஸ்ரீ V. மஹாதேவய்யர் முதலான ஹிந்தி அபிமானிகளும் வந்திருந்தனர். ஹிந்தியில் கடவுள் வணக்கம் நடந்தது. ஸ்கூல் ஸம்ஸ்கிருத உபாத்யாயர் V. S. ராமச்சந்திர சாஸ்திரிகள் அதன் அர்த்தத்தை தமிழில் விளக்கிக்காட்டினார்.

உடனேயே ஷை V. S. ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களால் ஹிந்தி பாடம் ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீமான் சந்திரசேகர சாஸ்திரிகள் ஒவ்வொரு பாஷையையும் அடிக்கடி பேசுவதாலேயே வளர்ச்சி அடைகிறதென்றும் ஆகையால் ஹிந்தியை கற்பதோடு மட்டில்லாமல் அடிக்கடி பேசவும் பழகவேண்டும் என்று ஹிந்தியிலேயே ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஸ்ரீமான் V. K சுப்பிரமணிய்யர் அதை அவ்வப்போது தமிழ்ப்படுத்தி மாணவர்களுக்குப்புரியும்படி செய்தார்.

பிறகு ஸ்கூல் உபாத்தியாயர் எஸ். ராமச்சந்திரய்யர் அவர்கள் — ஹிந்தி கற்பதால் மாணவர்களுக்கு தாய் பாஷை கெட்டு வி... ளாக இருந்தபோதிலும் எங்கள் குழந்தைகள் மாகாண பாஷையான தமிழைக்கற்பதினால் அவர்களுக்கு தெலுங்கில் அபிமானமில்லாமற் போகவில்லை. வீட்டில் நாங்கள் ஒரு தவறுமின்றி தெலுங்கிலேயே பேசுகிறோம். எங்கள் குழந்தைகளுக்கு தெலுங்கு எழுத்தே தெரியாவிட்டாலும் சுத்தமாகத்தெலுங்கே பேசுகிறார்கள். வெளியில் பழகும் போது மற்றவர்களைப்போல் சுத்தமாகத்தமிழை உபயோகித்துக்கொள்கிறார்கள். ஆதலால் வேறு பாஷை கற்பதால் தன்னுடைய தாய் பாஷை கெட்டுவிடு மென்பது வீண் விவாதமே தவிர உண்மையாகாது" என்று மிகத் தெளிவாக உபன்யசித்தார்கள்.

பிறகு அக்ராஸனர் தன்னுடைய முடிவுரையில் ஹிந்தியின் அவசியத்தைப்பற்றியும் தஞ்சாவூர் ஜில்லா வாசிகள் மிகச்சீக்ரத்தில் எதையும் கற்றுத்தேர்ச்சி பெறக்கூடியவர்களென்றும் ஹிந்தியை அபிவிருத்தி செய்வதில் ஸ்ரீமான் சந்திரசேகர சாஸ்திரிகளுக்கு இருக்கும் விடாமுயற்சியை சிலாகித்தும் பேசினார்கள்.

பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

வி. எஸ். ராமச்சந்திர சாஸ்திரி காரியதரிசி.

## பவானி.

### பிரும்மஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரிகள்.

இம்மஹான் பத்து தலைமுறைகளாக கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூகா பவானி க்ஷேத்திரத்தில் வசித்துவரும் ஓர் வைதிக குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் சமீபகாலத்தில் சோழதேசத்தில் ப்ரக்யாதி பெற்று சாஸ்திர நிதியாகவும், தர்ம மூர்த்தியாகவும் விளங்கிய பிர்ம்மஸ்ரீ மன்னார்குடி இராஜு சாஸ்திரிகள் போல் இப் பிராந்தியங்களுக்கு ஞானோபதேசியாகவும், வேத சாஸ்திர பாரங்கதராயும், ஸ்ரீ வித்யா உபாஸகராயும் விளங்கிவந்த பிரும்மஸ்ரீ சிவசூர்ய சாஸ்திரியாரவர்களின் பௌத்திரராவர்.

பிரம்மஸ்ரீ நரஸிம்ம சாஸ்திரிகள் சிறுவயதிலேயே புராதன ரீதியாக வித்தியாப்யாஸம் செய்து பாரம்பரிகமான ப்ரவசனத்தையும் செய்துவந்தார். இவரும் தங்கள் உபாஸனாதெய்வமாகிய அம்பாளை கிரமமாக உபாஸித்துவந்தார். இப்பெரியார் இவ்வளவு காலமாக தன் அனுஷ்டானத்தினாலேயே அநேகருக்கு சனாதனதர்மத்தை அறிவித்தவராவர். இவர் தனது 70-வது பிராயத்தில் ஈஸ்வர வருஷம் ஐப்பசி-மீ 12-ந்தேதி குருவாரத்தில் தன்னுடைய பாஞ்ச பௌதிகமான இவ்வுடலை நீத்து அம்பாளின் பரமபதத்தை அடைந்தார். அன்னவரின் வியோகத்தால் அவர் குடும்பமன்றி சனாதனிகள் எல்லோரும் துக்கிக்கின்றனர் என்ற விஷயத்தை இப்பத்திரிகை வாயிலாக யாம் தெரிவிக்கின்றனம்.

ஒருநிருபர்.

## நேமம் ஆற்காடு.

### அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.

ஸ்ரீ ஷண்முகப்பெருமான் வீற்றிருக்கும் குன்னக்குடி யென்ற மயூரகிரி க்ஷேத்திரத்திற்கு வடக்கே சுமார் மூன்றுமைல் தூரத்தில் இந்த புண்ய க்ஷேத்திரம் உள்ளது. இந்த இடம் நீர்வளம் நிலவளம் பொருந்தி நடுமத்தியத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது அகஸ்திய மகாமுனிவரால் பிரதிஷ்டையாகி ஸ்வயம்பு மூர்த்தியாய் விளங்குவதுடன் மதுநதி இங்கே உற்பத்தியாகிறதால் இந்த மூர்த்திக்கு மதுநதீஸ்வரர் என்று பெயர் விளங்குகிறது. ஷை கோவில்வாசலில் ஈசான்ய பார்வையோடு சித்திவிநாயகமூர்த்தியும், வடபார்சத்தில் மங்களாம்பிகை ஆதிசேஷருடன் லிங்கோத்பவமூர்த்தியும், உபய ச்வானத்துடன் பைரவ மூர்த்தியும் இருக்கிறது. பிராசீனமான இந்த கிருபாமூர்த்திகள் இருந்தயிடம் ஜீர்ணமாகயிருந்தபடியால் ஷை கோவில் டிரஸ்டிகளால் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 12—11—37உயில் வெகு சிறப்பாய் நடத்தப்பெற்றது. சுமார் (2000)ஏழை ஜனங்களுக்கு அன்னமளிக்கப்பட்டு பிராம்மணசந்தர்ப்பணமும் நடந்தது. ஆஸ்திக சிகாமணியான குன்னக்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் மகா-ா-ா-ஸ்ரீ வி. சிவராமய்யர் அவர்களும் ஷை கோவில் மானேஜர் அவர்களும் சிறப்பாய் நடத்தியதை போற்றாதாரில்லை.

ஒரு நிருபர்.

# மதிப்புரை.

### நல்லிச்சேரி

### (அருணாசல சாஸ்திரிகளின் வெளியீடுகள்.)

### ஸதாசார நிருபணம் தபோபவாஸநிருபணம்.

இது மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் உள்ளது. பீஷ்மர் தருமருக்கு ஆசாரத்தின் விதியை உபதேசித்து 193வது அத்யாயத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு மட்டும் கொண்டது. தபோவாஸ நிருபணம் 221வது அத்யாயத்தில் அடங்கியது. இதில் விருதங்களை அநுஷ்டிக்கும் முறை, உபவாஸ விவரணம் முதலிய சிறந்த விஷயம் அடங்கி யிருக்கிறது. விலை அணா (0–1–0)

ஸ்ரீராமபுஜங்கஸதோத்ரம். ஸ்ரீகிருஷ்ணாஷ்டகம் இது ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியாள் அருளியது. வித்வான் பிரும்மஸ்ரீ கச்சபேச்வாசாஸ்திரிகளின் அழகான எளியதமிழ்மொழி பெயர்ப்புடன் கூடியது. இதில் பல அறிய விஷயங்கள் உள்ளன. பள்ளியில் படிக்கும் மாணவர்களை இதை மனப்பாடம் செய்யும்படி செய்தால்மாணவர்களுக்கு மதாபிமானம் வளரும். இது எல்லோருக்கும் பயன் படும்படி பதிப்பாளர் பதவுரையும் புதுப்பதிப்பில் சேர்க்கவேண்டு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. எளிதில் ஸ்திரீ பாலர்கள் யாவரும் அறிந்து கொள்ள உதவும். விலை (0–1–6)

சிவாபராத க்ஷமாபன ஸ்தோத்ரம். தசச்லோகி இவை ஸ்ரீபகவத் பாதாசார்யாளால் இயற்றப்பட்டது. கும்பகோணம் வித்வான் ஸ்ரீகச்சபேச்வர சாஸ்திரிகளின் தமிழ் மொழி பெயர்ப்பு. விவேகிகள றிந்துகொள்ள... டிய பல தத்வங்கள் இதில்காணப்படுகின்றது. ... சுத்தமான பதிப்பு. கிரந்த லி...யில் மூலம். விலை (0–1–6)

ஸஹாயத்ரயஸ்துதீ— சிவஸ்தோத்... ஸ்துதீ:— இம்மூன்றும் தமிழ் அர்த்...தவ... ன் கூடியது. ஸ்ரீசூதஸம்ஹிதையிலிருந்... க்கப்பட்டது. எளிய மொழி பெயர்ப்பு. ... சிவன் மயானத்தில் வஸிப்பதின் காரண... வர்ணாச்ரம தர்மம் இவைகளும் காணப்படுகிறது. சுத்தமான பதிப்பு. அழகான அச்சு. விலை(0–1–0)

பிருகுபுத்ரஸம்வாதம் பிங்களோபாக்யானம்

ஸ்ரீமஹாபாரதம் சாந்தி பர்வாவில்மோக்ஷ தர்மபர்வாவில் உள்ளது. முதலிலுள்ளது 65 ச்லோகம், பிந்தியது 39 ஸ்லோகம். பிதாபுத்ர ஸம்வாதத்தின் பரம தாத்பர்யத்தை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது மூலம் கிரந்த எழுத்து; கூடவே வித்வான் கச்சபேஸ்வர சாஸ்திரிகளின் கருத்துரையும் விளங்குகிறது. ஆஸ்திகர்கள் அறிய வேண்டிய பல விஷயங்கள் உண்டு விலை 0–2–0

வைராக்யபிரகரணம்:- ஸம்ஸாரதூஷணம்.

இது சிவதத்வஸுதாநிதியிலிருந்து 11வது அத்யாயத்தின் சுத்த தமிழ் மொழி பெயர்ப்பு. இதில் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் ஓர் எண் கொடுத்து அதன் கருத்துரையை அப்படியே விளங்கும்படி வித்வான் ஸ்ரீ கச்சபேச்வர சாஸ்திரிகளால் எழுதப்பட்டிருக்கிறது. இதில் மொத்தம் 140 ச்லோகங்கள் இருக்கின்றன. விவேகிகள் அறிய விரும்பும் பல விஷயங்கள் காணக்கிடக்கின்றன. (விலை 0–1–6)

வேண்டுபவர்கள் மானேஜர் ஆர்யதர்மம் கும்பகோணம், அல்லது ஜம்புநாத சாஸ்திரிகள் நெல்லிச்சேரி அய்யம்பேட்டை தஞ்சை ஜில்லா என்ற இடத்திற்கு எழுதிப்பெறலாம்

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி
மேலக்காவேரி.


குழந்தை

குடல் ஈரல் கட்டிகளுக்கு

ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள

மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்

மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.

ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி, வேறு.

டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

[illegible]

4 [illegible]

22 44

25-11-19387

[illegible].

921
GV
215210
Registered No. M. 2913.
653

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்,
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஹு கார்த்திகை-மீ 10உ 1937ஹு நவம்பர்-மீ 25உ | ஸ 44

NOV 1937

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு | ரூ. | 20 0 0 |
| இஞ்சு 1-க்கு தடவை 1க்கு | அணா | 0 8 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## சென்னை மாகாணத்தில் ஆலயப்பிரவேசச்சட்டம்.

காந்திஜியின் கட்டளை.

ஸ்ரீமான் காந்தி தமது ஹரிஜன் பத்திரிகையில், சென்னை மாகாணத்தில், தீண்டாதார் ஆலயப்பிரவேசம் உடனே செய்யப்படவேண்டுமென்றும், அதைச்செய்ய வேண்டியது மந்திரி ஸபையின் கடமையென்றும் புனா ஒப்பந்தம், எலெக்ஷன் வாக்குறுதி முதலியவைகளின்படி இந்தக்காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், இதற்காக மசோதாவொன்றைக்கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் வற்புறுத்தி யிருக்கிறார்.

## ஆந்திர மாகாணக்கிளர்ச்சி.

ஸ்ரீமான் பட்டாபி சீதாராமய்யா சென்னையில் ஆந்திரமாகாணப்பிரிவு விஷயமாகத் தீவ்ரக்கிளர்ச்சி செய்து வருகிறார். பாஷைவாரியாக மாகாணங்களைப்பிரித்து விடவேண்டுமென்றும் சென்னை மாகாணத்தில், தமிழ், தெலுங்கு, மலையாள மாகாணங்களென மூன்று பிரிவு அவச்யமென்றும் இதில் செலவு அதிகமாக நியாயமில்லை யென்றும் சொல்லி வருகிறார். ஆந்திரர்கள் இதில் விசேஷ ஊக்கமும் உத்ஸாஹமும் காட்டி வருகிறதாகத்தெரிகிறது.

## அபேதவாதிகளின் கிளர்ச்சி காங்கிரஸுக்கு எதிராக வலுக்கிறது

காந்திஜியின் கண்டனம்.

ஆமதாபாத் கான்பூர், ஷோலாப்பூர், முதலிய பலவிடங்களில் அபேதவாதக்கக்ஷியார், தொழிலாளிகளைக்கிளப்பிவிட்டு காங்கிரஸ் ஆக்ஷிக்குஎதிராகக்கஷ்டமுண்டு பண்ணக்கட்டுப்பாடாகவேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். 144, 124 போன்ற பிரிவுகளை காங்கிரஸ் மந்திரிகள் பிரயோகிக்கும்படியான நிர்ப்பந்தத்தை அவர்கள் உண்டு பண்ணி விட்டு, காங்கிரஸ் ஆக்ஷி பிரயோஜனமில்லையென்று சொல்லுவது அவர்களின் நோக்கம். அதனால் ஆமதாபாத்தில் மிகுந்த நெருக்கடி உண்டாகிவிட்டது. தொழிலாளிகள் அங்கு அபேதவாதிகளால் தூண்டப்பட்டு பெரிய வேலை நிறுத்தம் செய்து கலவரமும் செய்யக்கிளம்பி விட்டார்கள். இம்மாதிரி அபேதவாதிகள் காங்கிரஸுக்கு எதிராக விஷமம் செய்து வருவதை காந்திஜி பலமாகக்கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

## நில வரி வஜா.

75 லக்ஷத்தின் விநியோகம்.

ஏற்கனவே செய்யப்பட்டுள்ள 75 லக்ஷம் வஜாவை, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் எப்படி பங்கிட்டுக்கொடுப்பதென்பதைப்பற்றி சென்னை மந்திரி ஸபையார் தீவ்ரமாக ஆலோசித்து வருகிறார்களாம். சீக்ரத்தில் முடிவு வெளியாகுமாம்.

சாச்வதமான வரிக்குறைவைப்பற்றிப்பேச்சில்லையோ?

## சம்பளக்குறைவு.

100 ரூபாய்க்கு மேல்தான்.

சென்னை கவர்மெண்டார் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளத்தைக்குறைக்கப் போவதாகப்ப்ரஸ்தாபமிருந்து வருகிறதல்லவா? இதைப்பற்றி மந்திரி ராஜன் பேசுகையில் 100 ரூபாய்க்குக்கீழ்பட்ட சம்பளம் பெறுகிறவர்களுக்குச்சம்பளம் குறைக்கப்படாதென்று உறுதி கூறுவதாகச்சொன்னார்.

## மிராசுதார்களுக்குப்புதிய வரி.

தஞ்சை ஜில்லா போர்டின் ஆக்ஷேபம்.

சென்ற வாரம் நடந்த தஞ்சைஜில்லா போர்டின் கூட்டத்தில், சென்னை ஸர்க்கார் பெரிய மிராசுதார்களுக்கு நிலவருமான வரி விதிக்க உத்தேசித்திருப்பதை ஆக்ஷேபிப்பதாயும் அத்தகைய புதிய வரி ஒன்றையும் விதிக்கக்கூடாதென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஸ்ரீமான் ஸுபாஷ் போஸ்

விமான மூலம் ஐரோப்பா பிரயாணம்.

ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திர போஸ் தமது சரீர ஸௌகர்யத்தை உத்தேசித்து ஆஸ்திரியா முதலிய சிலவிடங்களில் சிறிது காலம் வஸிக்க வேண்டியதற்காக ஆகாய விமான மூலமாக ஐரோப்பா புறப்பட்டுச்சென்றார்.

இவர் இவ்வருஷம் காங்கிரஸ் தலைவராக வரக்கூடுமாதலால் ஜனவரிக்கடைசியில் இந்தியா திரும்பி வருவாராம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# ஸினிமாவில் ஸ்ரீராமாநுஜர் படம்.

## சீர்திருத்தக்காரர் விஷமம்.

### ஸ்ரீராமானுஜீயர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

சென்னையில் ஒரு ஸினிமா கம்பெனியார் ஸ்ரீ ராமனுஜர் படக்காக்ஷி ஒன்றைத்தயாரித்து விட்டார்கள். அதன் ஆரம்ப விழா கனம் மந்திரி டாக்டர் ராஜன் தலைமையில் சில தினங்களுக்கு முன் நடந்தேறியது. அப்போது அவர் பேசுகையில் ஸ்ரீ ராமானுஜர் பெரிய சீர்திருத்தக்காரரென்றும், அவர் செய்த சீர்திருத்தங்கள் இக்காலத்தில் அவசியம் வேண்டப்படுவதாயும், இப்போது காந்திஜி ஸ்ரீராமாநுஜரைப்போல் தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றம், முதலிய சீர்திருத்தங்களைச்செய்து வருவதாயும், இந்த படக்காக்ஷியின் மூலம் ஸ்ரீ ராமாநுஜருடைய சீர்திருத்தக்கொள்கைகளை பொது ஜனங்கள் அறிந்து முன்னேற்றமடைய ஸந்தர்ப்பமேற்படுமென்றும் பேசி மகிழ்ந்தார்.

சிறிது நாளாகவே ஸ்ரீ ராமாநுஜருடைய சரித்திரப்படம் ஸினிமாவிற்காகத்தயாரிக்கப்படுவதாகப்பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது. ஸ்ரீ ராமாநுஜர், ஜாதி தர்மங்களையும், ஆச்ரம தர்மங்களையும் லக்ஷ்யம் செய்யாமல் ஸமூஹத்தில் ஆசாரத்திருத்தங்களைச் செய்து, அவைகளைத்தாமும் அனுஷ்டித்தாக வெளிப்படுத்துவதே இந்தப்படத்தை தயாரித்தவர்களின் நோக்கம். மேலும் தீண்டாதார் ஆலயப்பிரவேசம் போன்ற அக்ரமங்களுக்கு ஸ்ரீ ராமாநுஜருடைய பெயரைச்சொல்லி ஆதரவு தேடுவதும் இதன் நோக்கமாகும். இந்தப்படம் தற்கால மந்திரி ஸபைக்கக்ஷியாரின் கொள்கைக்குப்பின் பலமாக இருக்கவே தயாரிக்கப்பட்டதாக நினைக்க இடமுண்டு, இந்தப்படத்தில் நடித்தவர்கள் யாவரும் காங்கிரஸ் வாதிகளென்று நாம் அறிகிறோம். பெரிய ஆசாரத்திருத்தப்புரக்ஷிக்காரர்களான மதுரை ஸ்ரீநிவாஸவரதய்யங்கார் முதலான தீவ்ர காங்கிரஸ் வாதிகள் இந்தப்படத்தில் ஆக்ட் செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமாநுஜர், வர்ணதர்மங்களையும், ஆச்ரம தர்மங்களையும் மீறி அநேககார்யங்களைச் செய்ததாக அவருடைய சரித்திரத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. பிராம்மணேதரர்களான சில ஆழ்வார்களையும் வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்கள் ஆசார்யர்களாக பாவித்து வருகிறார்கள். இதைக்கொண்டு வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஜாதி வ்யவஸ்தை கிடையாதென்றும் பஞ்சமனும், பிராமணனும் ஒன்று என்றும், ஆதலால் அந்த ஸம்பிரதாயம் பெரிய சீர்திருத்த ஸம்பிரதாயமென்றும் உலகம் முழுவதும் ஓர் பெரிய அபிப்ராயம் பாவி வருத்து நிற்கிறது. இந்தஅபிப்ராயத்தை தற்கால ஆசாரத்திருத்தக்காரர்கள் தங்களுக்கு ஸாதகமாக உபயோகித்து வருகிறார்கள். ஸ்ரீ ராமாநுஜரை தங்களது கூடஸ்தராக தற்கால சீர்திருத்தக்காரர்கள் நிச்சயித்துக்கொண்டு விட்டார்கள்.

இந்தக்கக்ஷியை பலபடுத்திக்கொள்ளவே இந்த ஸ்ரீ ராமாநுஜர் படக்காக்ஷி தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பது தெளிவான விஷயம். ஆகவே இது ஸ்ரீராமாநுஜரைக்காட்டி, வர்ணாச்ரம தர்மத்திற்கு விரோதமாகச்செய்யும் ஓர் பெரிய பிரசாரமாகவே கருதப்படக்கூடியது.

சில வருஷங்களுக்கு முன் கும்பகோணத்தில் ஒரு சீர்திருத்தக்காரர் மேற்கண்ட நோக்கத்துடன் ஸ்ரீ ராமாநுஜ நாடகமொன்றை எழுதி அந்த ஆட்டிக்காண்பிக்கச்செய்தார் இதை ஆக்ஷேபித்து அப்போது பெரிய கிளர்ச்சியும் நடந்தது. அந்த நாடகத்தில் ஸ்ரீ ராமாநுஜர் சூத்திராதிகளுடனும், பஞ்சமர் முதலியவர்களுடனும் கட்டிக்குலாவுவதுபோல பல காக்ஷிகள் காண்பிக்கப்பட்டன. தாழ்ந்த ஜாதியாருடன் ஸ்ரீராமாநுஜர்ஸஹபோஜனம் செய்தது போலவும், அவர்கள் தொட்டதை சாப்பிட்டது போலவும், எல்லா ஜாதியாருக்கும் ப்ரணவம் சேர்ந்ததான அஷ்டாக்ஷரம் போன்ற வேத மந்திரங்களை உபதேசிப்பது போலவும் அநேக ஆபாஸமான கதைகள் நடித்துக்காட்டப்பட்டன. ஸ்ரீ ரங்கத்திலும் திருநாராயணபுரத்திலும் ஸ்ரீ ராமாநுஜர் தாமே பஞ்சமர்களைக்கோவிலுக்குள் அழைத்துச் சென்றது போலவும் காக்ஷிகாட்டப்பட்டது. இம்மாதிரி ஸ்ரீராமாநுஜர் மஹிமையைக்குறைக்கக்கூடிய ஸஹிக்க முடியாத பல ஆபாஸப்பொய்க்கதைகளை அந்த நாடகத்தில் காட்டி ஜனங்கள் மனதைக்கலைத்தார்கள். இப்போது தயாரிக்கப்பட்டுள்ள சினிமாப்படமும் மேற்கண்ட வழியிலேயே தயாரிக்கப்பட்டிருக்கிறதாகத்தெரிகிறது. இந்தப்படத்தைப்பார்ப்பதால் ஸ்ரீ ராமாநுஜரையும், வைஷ்ணவ ஸம்பிரதாயத்தையும் பற்றிப்பொது ஜனங்கள் எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்?

இந்தியா முழுவதும் லக்ஷக்கணக்காகப் பரவியிருக்கும் ராமாநுஜீயர்கள் இதற்கு என்ன பரிஹாரம் செய்யப்போகிறார்கள்? ஸ்ரீ ராமாநுஜர் தீவ்ர வர்ணாச்ரமியென்பதும், வர்ணாச்ரமதர்மங்களை மனதாலும் மீறக்கூடாதென்று அவருடைய கிரந்தங்களில் ஒவ்வொரு எழுத்தும் அழுத்தமாகப் போதிக்கிறதென்றும், அவர் சிறிதும் வர்ணாச்ரம தர்மங்களை மீறிய பாபத்தைச் செய்யவில்லையென்பதும் வெகு தெளிவான விஷயங்களல்லவா? பிராம்மணேதர ஆழ்வார்களை நாம் என்ன எவ்வழியில் பஹுமானிக்கிறோமென்பதை ஸ்ரீ வேதாந்ததேசிகாதி ஆசார்யர்கள் நிர்ணயித்திருக்கவில்லையா? ஆழ்வார்களையும், பிரபந்தங்களையும் பற்றி, நம்மில் தோன்றியுள்ள சில அதிவாதிகளின் கூற்று எப்படியிருப்பினும் ஸ்ரீ வேதாந்ததேசிகாதிகள் உண்மையை நன்கு வெளியிட்டிருக்கவில்லையா?

ஆதலால் தீவ்ரவர்ணாச்ரமியாயிருந்து தமது கிரந்தங்கள் முழுவதும், அந்த தர்மங்களைஸ் தாபித்து ரக்ஷித்துள்ள நம் இராமாநுஜரும், அவரது ஸித்தாந்தமும், அவைதிகமென்றும் சீர்திருத்தமென்றும், பிறர் பரிஹஸிக்கும்படி லக்ஷக்கணக்கான அவர் சிஷ்யர்களுடைய கண்ணெதிரில் பழிக்கப்படுவதை நம்மவர்கள் ஸஹித்திருக்கப்போகிறார்களா? மஹா மஹிமை பொருந்திய அந்த ஆசாரியரைக்கண்டபடி படக்காக்ஷியில் காட்டுவதை நாம் பார்த்திருப்பதா? ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதிகளும் மற்ற பெரியோர்களும் வைஷ்ணவப் பொது ஜனங்களும் இந்தப்படத்தைப்பலமாக ஆங்காங்கு ஆக்ஷேபிக்கவேண்டியது அவச்யமாகும்.

மஹம்மதியர், கிரிஸ்துவர் போன்ற வகுப்பார், தங்கள் தெய்வங்களையும் ஆசார்யர்களையும் ஸினிமா படக்காக்ஷிகளில் தாறுமாறுக காட்டுவதை ஆக்ஷேபித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள், ஸமீபத்தில் அப்பர், திருஞான சம்பந்தர் முதலியவர்களுடைய படக்காக்ஷி சம்பந்தமாக ஜைன மதஸ்தர்கள் கிளர்ச்சி செய்தது பிரஸித்தமானது, இந்தமாதிரி இதர மதஸ்தர்களுக்கும் இருக்கும்மதஸம்பிரதாய உணர்ச்சி நமக்கு கிடையாதா? அவர்களுடைய மத உறுதியைக்கண்டு நாம் லஜ்ஜைப்பட வேண்டாமா?

சிறிது காலமாகவே சினிமாக்களில் ஸமூஹத்திருத்தப் படங்கள் காட்டப் பட்டு வருகின்றன. தார்மிகர்களால் இது ஆக்ஷேபிக்கப்பட்டு வருகிறது. சினிமா தணிக்கை போர்ட்டில் ஒரு ஸநாதனி பிரதிநிதி இருக்க வேண்டுமென்றும் சில கூட்டங்களில் கோரப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள காங்கிரஸ் கவர்மெண்டார் இவ்விஷயத்தில் எப்படி நடக்கப்போகிறார்களோ தெரியாது, ஆயினும் இந்த ராமாநுஜப்படக்காக்ஷியை தடுக்கவோ, அல்லது மாற்றியமைக்கவோ நம்மவர்கள் தக்க முயற்சியை தக்க இடங்களில் செய்ய வேண்டும். எங்கும் இதை ஆக்ஷேபித்து தீர்மானம் செய்ய வேணும். ஸரியான வழியில் கிளர்ச்சி நடத்தி இதைத்தடுக்காவிடில் இந்த ஸம்பிரதாயத்தின் கௌரவம் குலைந்து போவதுடன் ஸ்ரீராமாநுஜரின் மஹிமைக்கும் மாசு ஏற்படுவது நிச்சயமே. அவருடைய சிஷ்யர்களாக விளங்கி வரும் நம்மவர்கள் அவரது மஹிமையையும் ஸித்தாந்தத்தையும் காப்பாற்றி உண்மை சிஷ்யர்களாக பிரகாசிக்கவேண்டியது அவச்யம்,

ஒரு ராமாநுஜீயன்.

# வாரக்குறிப்புகள்.

வே. ஸோ. சர்மா.

தலைவர் திண்டாடினாரே! சுகாதார மந்திரி ஆண் மக்களுடன் பெண்களும் கலந்து மேல் வகுப்பிலும் படிக்க வேண்டும். அப்படி இல்லாவிடின் தேசம் கெட்டுவிடும் என்கிறார். காந்தி ஆச்ரமத்தில் நடந்தது இவருக்கு தெரியாதா. பல நாள் பட்டினியிருந்து அவர் பிராயச்சித்தம் செய்து கொண்டது எதற்கு?

மூன்று அக்ரமம்! தூத்துக்குடி தேவஸ்தான சங்கம் திருச்செந்தூர் சுப்பிரமண்ய ஆலய சுத்தை வெள்ளிவிழாநிதிக்களித்ததும் ஸ்வாமி தனத்தை ரேடியோவுக்களித்ததும் ஒரு ஸ்திரீயை தர்ம கர்த்தாவாக நியமித்ததும் மிக அக்ரமச்செயல். ஸ்வாமி தான் இவர்களுக்கு நற்புத்தி புகட்ட வேண்டும்!

புலிக்கு பலியா! கட்சு மஹாராஜா வேட்டையாட புலிகளை வளர்க்கிறார். அது பல ஜனங்களைக்கொன்றாலும் அதை யாரும் சுடக்கூடாதாம். இவர் வேட்டைக்காக எத்தனை ஜீவனிறந்தன. முடிவில் இவரை அது வாயில் போட்டுக்கொள்ளுமோ என அஞ்சுகிறோம்.

லக்ஷமளித்தவர் வருகிறார்! அமெரிக்காவில் ராமகிருஷ்ண மடத்திற்கு ஓர் லக்ஷம் ரூ சேர்ந்து கொடுத்த இரு பெண்மக்கள் இந்தியாவிற்கு வந்தனர். இவர்கள் போலி வேதாந்திகளைக்கண்டே ஏமாறுகின்றனர். உண்மை நல்லகுருகுலமோ தர்மஸ்தாபநமோ சென்று அவர்களை அடுத்த அவர்களையும் தநத்தையும் நல்வழி செலுத்தலாம்!

ஸதாசாரத்தைக்கைப்பற்றுக! ஸ்ரீராமகிருஷ்ண விவேகாநந்தாதிகளால் பிற நாட்டார் நம்மதத்தில் சிறந்த அன்பு கொண்டனர். அந்த அன்பும் மதிப்பும் நிலைத்திருக்கும்படி தற்காலம் அந்த மடத்து ஆநந்தர்கள் ஸதாசாரத்தைக்கைவிடாமலிருக்கும்படி வேண்டுகிறோம்.

வாயால் போற்றுகிறார்! ஸ்வயம்வந்தபோது தேசியவாதிகள் நம் தர்மத்தை வாயால் போற்றச்சளைப்பதில்லை. ஆனால் அதை அழிக்கவும் அஞ்சுவதில்லை. டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஓர் சொல், ஓர் விருதம், ஓர் மனைவி, நம்மதத்தில் சிறந்ததென் போற்றுகிறார். என்ன விருதத்தை அநுஷ்டிக்கிறார் இவர்?

தொத்து நோய்! ஆலயப்பிரவேச நோய் பாம்பேயிலும் ஆரம்பித்திருக்கிறதாம். நமக்கு அடுத்த மாகாணமான இதிலும் பரவுவது நியாயமே!

கங்காநாதஜா வருவாரா? சென்னையில் நடக்கும் அகிலஇந்திய பண்டிதபரிஷத்திற்கு அலஹாபாத் யூனிவர்ஸிடி வைஸ் சான்ஸலர் மஹாமஹோபாத்யாயகங்காநாதஜா எம். ஏ அவர்கள் தலைமைவஹிப்பாரென அறிகிறோம்



# திருவிசலூர்.

## புஸ்தகசாலை தினக்கொண்டாட்டம்.

### அறிஞர்களின் பிரஸங்கம்.

இவ்வூர் நீலகண்ட சாஸ்திரிகளவர்கள் பாடசாலையில் வித்தியார்த்தி ஸங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட (பாரதீபவனம்) என்ற லைப்ரரியின் முதல் வருஷக் கொண்டாட்டமானது 21—11—37 மாலை மூன்று மணிக்கு மிகவும் சிறப்பாக நடந்தேறியது, ஷை கொண்டாட்டத்திற்கு கும்பகோணம் கஸ்பா முன்ஸீப், மகா-ா-ா-ஸ்ரீ ஏ. பரமேச்வரய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள், ஸபையின் ஆரம்பத்தில், இப்பாடசாலை உபாத்தியாயர், ப்ரம்மஸ்ரீ V. H. ஸுப்ரமண்ய சாஸ்திரிகளால் மங்களங்கூறப்பட்டு, கனம் தலைவருக்கு ஸரியாக நல் வரவு கூறப்பட்டது, பிறகு வித்தியார்த்தி ஸங்கக் கார்யதரிசி எஸ். எம். கிருஷ்ணனால் ஸபையின் சென்ற வருஷத்து ரிபோர்டு வாசிக்கப்பட்டது. இப்பாடசாலை வித்தியார்த்தி வி. ஸுப்ரமண்யனால் "திதிக்ஷை" என்ற விஷயதைக்குறித்து. ஸம்ஸ்கிருதத்தில் சுருக்கமாகவும் சாரமாகவும் ஓர் உபந்யாஸம் செய்யபட்டவுடன். கும்பகோணம் மகா ா ா ஸ்ரீ எம். கே, வைத்தியய்யர் அட்வகேட் அவர்கள் தாத்காலீக ஸம்ஸ்கிருதவித்தை என்னும் விஷயத்தை மிகத் தெளிவாயும் சாளமாயும் உபன்யாஸித்தார்கள். அதன் சாராம்சமாவது.

நமது ஸம்ஸ்கிருதவித்தையை மேல் நாடுகளில் பற்பல இடங்களில் போதுமான கவுரவத்துடன் ஆதரிப்பதே அதன்மேன்மையை விளக்குகிறது. பெரிய வித்யாஸ்தானமாக மதிக்கபட்டு வரும். ஆக்ஸ் போர்ட்டு முதலான இடங்களில் கூட ஸம்ஸ்கிருதசேர், (chair) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஸம்ஸ்கிருதவித்யையை முன்காலத்தில் படித்து நன்றாக முகஸ்தமாக வைத்துவந்தார்கள்; பழைமையான இங்கிலீஷ்படிப்பிலும் முக்யமான சில மகாகவிகளின் கிரந்தங்கள் மனஸ்தமாக வைக்கபட்டிருந்தன. ஆகிலும் அவ்வாறுமனப் பாடம் செய்கிறவர்கள் மனதின் கல்பனு சக்தியற்றவர்கள் என்று தற்காலம் இகழப்பட்டு மனப்பாடம் செய்யும் முறையையே விட்டுவிட்டார்கள்.

தற்பொழுது ஸம்ஸ்கிருதத்தில் அந்த நிலைமையானது படித்து சில வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் குருமுகமாகவே படிக்கும் படியுள்ள அவஸ்தையில் பரிணமிக்கிறது. ஆகையினால் ஆதியில் மனபாடமும் அதை அடிப்படியாகக்கொண்டு பிறகு மனதின் நல்பனையும் ஒவ்வொருவரும் விருத்தி செய்ய வேண்டும் என்றும் சொன்னார்.

பிறகு மத்தியார்ஜுனம் பிரம்மஸ்ரீகவிமணி வி. கெ. சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள், வித்யையானது மனதின் பரிசுத்தத்திற்காக கற்பிக்கப்படுகிறது. அதன் நோக்கம்பணம் சம்பாதிப்பதல்ல. தற்காலம் ஆங்கிலம் படித்தோரும், சிரோமணி படித்தோரும் வேலையில்லாமல் இருப்பதே அதற்கு நிதர்சனம். பல சமயங்களில் உலகத்தோர் ஸம்ஸ்கிருதம் படித்தவர்களை.. படித்தவர் கோஷ்டியிலேயே சேர்க்காமலிருப்பது மிகவருந்தத் தகுந்தது. ஸம்ஸ்கிருதத்திலும் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் பூர்ணமான அப்யாஸம்வேண்டும். தற்காலம் சிரோமணிகள் வேலை இல்லாமல் இருப்பதால் ஒவ்வொரு கிருமத்திலும் குழந்தைகளுக்கு ஸம்ஸ்கிருதம் கற்பிப்பது மிக எளிதாகவே இருக்கும். ஆகையினால் எல்லோரும் அதற்கு முயற்சிக்கவேண்டும் என்றும் உருக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பிறகு கும்பகோணம் கவர்மெண்ட் காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிட் மகா-ா-ா-ஸ்ரீ K. L. வியாசராய சாஸ்திரிகள் அவர்கள் தற்கால ஸம்ஸ்கிருத படிப்பிலிருக்கும் சில குற்றங்களைக் கூறி மதசம்பந்தமான த்வேஷங்களை ஸம்ஸ்கிருத பாஷையினால் வந்ததாகக் குறிப்பிட்டு அதை நிந்திப்பது மிகவும் பொருத்தமற்றது என்று நிரூபித்து லைப்ராரியின் ஆவச்யத்தையும் மிக எளிய நடையில் உபன்யஸித்தார்கள்.

பிறகு அக்ராசநாதிபதிகள் அவர்கள் வித்தைகளில் கீழ்த்திசை வித்தை என்றும் மேல்த்திசை வித்தை என்றும் பேதம் கல்ப்பிப்பது மிகவும் நிந்திக்கத் தக்கது. மேல்நாட்டார்களிடமும் சில குணங்களிருக்கின்றன. அவைகளை நாம் அவச்யம் கவனித்துக்கொள்ளவேண்டும் நமது நன்மைகளை அவர்கள் க்ரஹித்துக்கொள்ளாவிடில் அதில் சிறிதும் தோஷம் கிடையாது. நமது முன்னோர்களின் கிரந்தங்களில் காணப்படாத பல அபூர்வ விஷயங்கள் அவர்களால் கண்டு பிடிக்கப்படுகின்றன. பற்பல தேஜோலோகங்களை அவர்கள் தமது புத்திவலிமையால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களின் உதவியால் நேரில் பார்க்கிறார்கள். மேலும் நாம் வித்யையை தனத்தில் ஆவலுடன் கற்பது மிகவும் இகழத்தகுந்தது. அதன் மனச்சாந்தியே. அந்த வித்யையை ஆரம்ப தசையில் முகஸ்தமாகவே கற்கவேண்டியிருந்தாலும் பிறகு நமது புத்திசக்தியை அதனுடன் கலந்து அதை பரிமளிக்கச் செய்யவேண்டும் அன்றியில் கிளிப்பிள்ளை சொற்போலவே அது மதிக்கப்படும். சிரவண மனன நிதித்யாசனங்களாலேயே வித்யை த்ருடப்படுகிறது என்று நமது சாஸ்திரங்கள் அறிவிக்கின்றன. மேலும் ஆரம்ப தசையிலேயே ஸம்ஸ்கிருத பாஷையில் வ்யவகாரம் செய்யக் கற்றுக் கொள்ளவேண்டியது அவசியம். சாஸ்திரீய வ்யவஹாரங்களைத் தவிர லௌகிக வ்யவகாரத்தையும் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே செய்ய முயற்சிக்கவேண்டும். எதற்கும் த்ருடதரமான அப்யாஸம் செய்யவேண்டும். இப்பாடசாலை வித்யார்த்திகள் யாவரும் பயம் என்பதை விட்டு விநயத்துடனிருக்கவேண்டும். துர்பலனுக்கு வித்யை வருவது அஸாத்யம். மேலும் ஸர்வவித யோகத்தையும் ஒன்று சேர்த்தமைக்கப்பட்டிருக்கும் ஸந்தியாவந்தனத்தைத் தவாமல் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். பிறகு இப்பாடசாலை கனம் ஹெட் பண்டிட்டவர்களால் அக்ராஸநாதிபதி அவர்களுக்கும் உபன்யாஸகர்களுக்கும் மாலை சூட்டி கிருதக்ஞதை தேரிவித்துக்கொள்ளப்பட்டது முடிவில் பாரதீ பவனத்தின் போஷகர்களுக்கும் நன்றி செலுத்தப்பட்டு சபையோர்களுக்கும் சந்தன தாம்பூலம் வழங்கி சபை கலைந்தது. மேற்படி சபைக்கு வேப்பத்தூர் மகா-ா-ஸ்ரீ நரஸிம்ம அய்யர் அவர்கள் மகா-ா-ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யரவர்கள், மகா-ா-ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யரவர்கள், உள்ளூர் வைத்திய ரத்தினம் பாலகிருஷ்ணய்யரவர்கள் முதலிய பிரமுகர்கள் விஜயம்செய்தது குறிப்பிடத்தக்கது. ஷை ஸபை ஆரம்பம்முதல் முடிவுவரை அநேகமாக ஸம்ஸ்கிருதத்திலேயே நடந்ததென்பது விசேஷமாகப் போற்றத்தக்கது.

ஒரு நிருபர்.

# கும்பகோணம்

## ஸ்ரீமத் பக்தவிஜய கிரந்த ஸத்காலக்ஷேபம்

கும்பகோணம் மேட்டுத்தெரு ஸ்ரீவிசுவநாதஸ்வாமிகோவிலில் நாளது ஈச்வரஸு கார்த்திகைமீ 5வ(20-11-37) சனிக்கிழமை முதல் பிரதிதினம் மாலை 4மணிமுதல் 5½மணி வரையில் கும்பகோணம், ஸ்ரீசாரங்கபாணிஸ்வாமி கோவில் ஸன்னதி தெருபஜனைமடம் பிரம்ஹஸ்ரீ வாஸுதேவராவ் பாகவதரவர்களால் பிரம்ஹ நிஷ்டர்ஸாது மஹீபதிஸ்வாமி அவர்களால், மஹாராஷ்டிர பாஷையில் திருவாய் மலர்ந்தருளிய பக்தி பிரதானமான, பக்தவிஜயம் என்னும் கிரந்தகாலக்ஷேபம் நடைபெறுவதால் ஆஸ்திக பக்தசிரோமணிகள் வந்து சிரவணம் செய்யவேணுமாய் பிரார்த்திக்கின்றனம்.

பக்தர்கள்.

# திருவல்லிக்கேணி.

## ஸ்ரீ அஹோபிலமடத்தில் உபன்யாசம்.

18—11—37 வியாழன் மாலை 6-45 மணி முதல் 8-30 மணி வரை திருவல்லிக்கேணி ஸ்ரீ அகோபிலமடத்தில் ஸ்ரீ உபவே ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமியால் 'திருமங்கை ஆழ்வார் வைபவம்' என்னும் விஷயம்பற்றி அரிய உபந்யாசம் செய்யப்பட்டது. இறுதியில் சாற்றுமறை நடந்து விசேஷ விநியோகங்களும் வழங்கப்பட்டன. இங்ஙனம் அடிக்கடி தற்போதுள்ள மடத்து அதிகாரிகள் நடத்த உத்தேசித்திருப்பது மிகவும் களிப்பூட்டுகின்றது. அமலன் அருளால் அனைத்தும் தட்டின்றி நடந்து அனைவரும் அநுபவிப்பாராக.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

# பந்தோபஸ்துக் கைதிகள் விடுதலை.

## வங்காளிகளின் அதிருப்தி.

ஸ்ரீமான் காந்தியும், வங்காள கவர்னர், மந்திரிகளும் கலந்து பேசியதின் பலனாக 1100 பந்தோபஸ்துக்கைதிகளை விடுதலை செய்ய வங்காள ஸர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆனால் மேற்படிக்கைதிகள் அவரவர்களுடைய கிராமங்களிலோ, வீடுகளிலோ பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பவர்கள். ஆகையால் இந்த விடுதலையால் விசேஷப்பலன் யாதுமில்லையென்றும், ஜயிலில் வஸிக்கும் கைதிகளின் விடுதலையே முக்யமென்றும் வங்க ராஜீயத்தலைவர்களும், பத்திரிகைகளும் அபிப்பிராயப்படுகின்றனர்.

# ஆழ்வாஞ்சேரி தம்புராக்கல் பஹிஷ்கரிக்கப்பட்டார்.

## ஆலயப்பிரவேச ஆதரவின் பலன்

கொச்சியில் உள்ள ஆழ்வாஞ்சேரி தம்புராக்கல் என்ற பிரபல மதாசாரியர் திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தும், கூடல் மாணிக்கம் கோவில் ஸம்ப்ரோக்ஷணத்தை எதிர்த்தும் அபிப்ராயம் வெளியிட்டிருந்தாரல்லவா? அதற்காக நம்பூதிரி ஸமூஹத்தார் அவரை பஹிஷ்காரம் செய்துவிட்டார்கள். சுகபுரம் என்றவிடத்தில் ஷை தம்புராக்கல் பிரதி வருஷமும் நம்பூதிரிகளுக்கு ஸமாராதனை செய்வது வழக்கம். இவ் வருஷத்திலும் சென்றவாரம் இந்த ஸமாராதனை நடந்தது. ஆனால் நம்பூதிரி பிராம்மணர்களில் ஒருவராவது இந்தஸமாராதனைக்கு வாராமல் பஹிஷ்கரித்துவிட்டார்கள். இதன்மேல் அங்கு தயாரிக்கப்பட்டிருந்த சாப்பாடு வகைகளை வேறு ஜாதியாருக்குப் போடவேண்டி வந்ததாம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

ஈச்வர-ஸூ கார்த்திகை-மீ 10௳

## அகில இந்திய ஸநாதந தர்ம வித்வத் பரிஷத்.

இந்தியாவில் ஆசாரத்திருத்தக் கிளர்ச்சி ஏற்பட்ட காலம் முதலாக இதுவரை ஏற்படாத புதிய நெருக்கடி இப்போது நமது தர்மங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. பல வேறு வழிகளிலும் தங்கள் பிரசாரத்தை நடத்தி வந்த சீர்திருத்தக்காரர்கள் நமது பண்டிதர்களைக் கொண்டே தங்கள் மனோரதங்களை ஸாதித்துக் கொள்ள முயற்சித்திருக்கிறார்கள். சிலவருஷங்களுக்கு முன், காஞ்சியிலும், திருவாதியிலும் சீர்திருத்தக்காரர்கள் செய்த முயற்சி பயன்படாமல் போய்விட்டது. ஆயினும் இப்போது பல வழியிலும் காலநிலை தங்களுக்கு அநுகூலமாக மாறிவருகிறதென்ற தைர்யம் சீர்திருத்தக்காரர்களுக்கு உண்டாகியிருக்கிறது.

ஆசாரச் சீர்திருத்தத்தைப்பற்றி பிரசாரம் அதிகமாயிருப்பதுடன் காலதேசவைகுண்யத்தால் பொது ஜனங்களும் தர்ம சிரத்தை இழந்து வருவது சீர்திருத்தக்காரர்களுக்குப் பெரிய பின் பலமாக அமைந்திருக்கிறது. மேலும் சாரதாச் சட்டம், திருவாங்கூர் ஆலயப்பிரவேசம் முதலியவைகளால் சீர்திருத்தக்காரர்கள் தைர்யம் கொள்ளவும் இடம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் பெரிய ராஜீய ஸபையாக விளங்கி வந்த காங்கிரஸ்ஸும் ஆசாரத்திருத்த வேலையில் முனைந்திருக்கிறது. சிலமாகாணங்களின் ராஜ்ய நிர்வாஹத்தையும் அது நடத்துகிறது. இவ்வளவு ஸௌகர்யங்கள் ஏற்பட்டுள்ள ஸந்தர்ப்பத்தை ஆசாரத்திருத்தக்காரர்கள் வீணுக்காமல் நீண்டகாலமாயிருந்துவரும் தங்கள் கொள்கைகளை நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். இந்த நோக்கத்துடன் சென்னையில் அவர்கள் ஓர் பண்டித பரிஷத்தைக் கூட்ட முயற்சித்து வருவது யாவரும் அறிந்ததே.

இந்த பரிஷத்தில் எல்லாவித அபிப்பிராயமுள்ளவர்களுக்கும் போதிய பிரதிநிதித்வம் கொடுத்து, நியாயமான முறையில் நிஷ்பக்ஷபாதமானவழியில் விஷயங்கள் விமர்சிக்கப்படுமென்று நினைத்தோம். ஆனால் ஸமீபத்தில் வெளியான விவரங்களிலிருந்து இந்த பரிஷத் ஒருதலை பக்ஷமான நோக்கத்துடனேயே நடக்கப்போவதாக நிச்சயமாகி விட்டது. பரிஷத்தை நடத்துகிறவர்கள்' அவர்களின் நோக்கம், பரிஷத் தலைவர், போன்ற விஷயங்களை கவனித்தால் இந்த பரிஷத், அநாதிகாலமாக ச்ருதி ஸ்மிருதி, சிஷ்டாசாராதிகளால் நிச்சயிக்கப்பட்டு தேசமெங்கும் இருந்துவரும் தர்ம ஸ்வரூபத்தை மாற்றுவதே உத்தேசமென்பது தெளிவாகிவிட்டது. இதை நடத்துவோரில் ஆர்யஸமாஜிகள், தியஸாபிகள், ஆசாரத்திருத்தக்காரர் போன்ற பற்பல கொள்கைக்காரர்கள் சேர்ந்திருக்கிறார்கள், வைதிக தர்மத்திற்கு அடியோடுவிருத்தமான கார்யங்களைச் செய்வோர் பலர் இதில் கலந்து இருக்கிறார்கள்.

தலைவராக வரிக்கப்பட்டுள்ள டாக்டர் குருத்கோடி என்பவர் தீவ்ர ஆர்யஸமாஜி, தீவ்ரச் சீர்திருத்தக்காரர். வெள்ளைக்காரர், துருஷ்கர் முதலியவர்களை ஹிந்துக்களாக மாற்றி விச்வாமித்ரஸிருஷ்டி செய்து வருகிறவர். தவிரவும் இந்த பரிஷத்தை நடத்துகிறவர்கள், இதில் ஸநாதநதர்மிகளான பண்டிதர்களுக்கு ப்பிரவேசம் கிடையாதென்றும் சொல்லிவிட்டார்கள். காலாநுகுணமாக சாஸ்திரத்தை மாற்றலாமென்று நினைப்பவர்களும், முற்போக்கு எண்ணமுள்ளவர்களுமே தான் இதற்கு வரலாமென்று தெரிவித்திருக்கிறார்கள்: ஆகையால் தற்காலம் வேண்டப்படும், ஆலயப்பிரவேசம், ஜாதி நாசம், விவாஹ தர்ம நாசம், மத மாற்றம் போன்ற அதர்மங்களை ஜனங்களுக்குப் போதிக்கவே சாஸ்திரத்தின் பெயரைச் சொல்லி பண்டிதர்களைக்கொண்டு ஏற்பாடு செய்ய உத்தேசமென்பது தெளிவாகிவிட்டது:

இந்த நிலைமையில் கோடிக்கணக்கான தார்மிகர்களுடைய கடமை பெரிதாகிவிட்டது. அதை உணர்ந்து அவர்கள் சீர்திருத்தப் பரிஷத்தின் வேஷத்தை வெளிப்படுத்தி உண்மையான தர்ம வழியை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது அவச்யமாகிவிட்டது: இச்சமயம் மௌனமாயிருந்தால் வைதிக தர்மத்தின் நிலைமை மிக்க அபாயமாகிவிடும்: ஆதலால் நமது பெரியோர்கள் பலர் சேர்ந்து சென்னையில் டிஸம்பர் கடைசியில் ஸநாதநதர்மிகளான வித்வான்களைக்கொண்டு ஒரு தனி பரிஷத் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்: இதற்கு அகிலஇந்தியாவிலிருந்தும் சுமார் 400 பண்டிதர்கள்வரையில் அழைக்கப்படுவார்கள். ஸநாதநதர்ம சிரத்தாளுக்களான பிராம்மண அப்பிராம்மண பிரபுக்களும் பலர் அழைக்கப்படுவார்களென்று தெரிகிறது:

இந்த சிறந்த முயற்சியை ஆஸ்திகர்கள் யாவரும் கட்டுப்பாடாக எல்லா வழியிலும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் ஞாபகப்படுத்தவேண்டியதில்லை,

நமது மாகாணத்திலுள்ள பண்டித மணிகளும் தனிப்பட்ட குறை, தனிப்பட்ட மனத்தாங்கல் முதலியவைகளை மறந்து, பிரபலனான எதிரியை அடக்கும் விஷயத்தில் ஸங்கேதத்துடனிருந்து உபகாரம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்: முக்யமாகச் சீர்திருத்தக்காரர்களின் வலையில் சிக்கி அதர்மத்திற்கு இடமளிக்கமாட்டார்களென்றும் நம்புகிறோம்

## குறிப்புகள்.

### திருவாங்கூர் திவானின் கூற்று!

திருவாங்கூர் சட்டஸபையில் ஒரு மெம்பர், உடனே அத்தேசத்தில் ஜனங்களிஷ்டப்படி பொறுப்பாக்ஷி அளிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார், அதை ஸசிவோத்தமர் நிராகரித்துவிட்டார். சட்டஸபைத் தலைவரென்ற ஹோதாவில் தாம் இந்தப்பொறுப்பாக்ஷித் தீர்மானத்திற்கு அநுமதி கொடுக்கமுடியாதென்று சொல்லிவிட்டார்.

இந்த ஸம்பவத்திற்கு ஸமாதானமாக அவர் கூறியுள்ள விஷயம் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. அதைக் கவனிக்கையில் அவர் ஆலயப்பிரவேசத்திற்குச் சொல்லிய ஸமாதானமும், இந்தப் பொறுப்பாக்ஷிக்கு எதிராக இப்போது கூறியுள்ள ஸமாதானமும் முரண்பட்டிருப்பதாக நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. ஆலயப்பிரவேச சீர்திருத்தமானது, அங்குள்ள வெகுஜன அபிப்பிராயப்படி அவர்களுடைய திருப்திக்காகவே செய்யப்பட்டதென்று அந்த ஸர்க்கார் வாதித்து வருகிறார்கள். முன்னோர்களுடைய ஆசாரமும், சாஸ்திரமும், சட்டமும் இதற்கு விருத்தமாயிருந்தும் அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் இந்தத் தலைகீழான மாறுதலை அவர்கள் செய்யத் துணிந்தார்கள். பொதுஜன அபிப்பிராயத்திற்கு மதிப்புக்கொடுத்தே இந்த புரட்சிகரமான மாறுதலை தைர்யமாகச் செய்துவிட்டதாகப் பெருமை பேசிவருகிறார்கள்.

இப்படியிருக்க, பொறுப்பாக்ஷி விஷயத்தில் மட்டில் அந்தப் பொதுஜன அபிப்பிராயத்தை ஏன் புறக்கணிக்கவேண்டும்? ஜனங்களிஷ்டப்படி பொறுப்பாக்ஷியளித்துவிட்டு அரசர் ஒதுங்கி இருக்க ஏன் ஸம்மதிக்கக் கூடாது? இது பெரிய புரட்சிகரமான மாறுதலாகத் தோன்றலாம். ஆலயப்பிரவேசமும் அத்தகையதுதானே? ஆலயப்பிரவேசத்திற்காக எங்கும் அரசருக்கு வாழ்த்துக்கிடைக்கும்படி செய்ததுபோல் பொறுப்பாக்ஷி வழங்கியதற்கும் வாழ்த்து வாங்கிக் கொடுக்கலாமே? பொறுப்பாக்ஷி கொடுத்தால் ஸ்வதந்திரவாதிகள் அரசனைத் தலைமேல் வைத்துக் கூத்தாடமாட்டார்களா? சென்னை கார்ப்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களின் உபசாரப் பத்திரங்களுக்கும் அளவிருக்காதே? பிரஜைகள் பொறுப்பாக்ஷிவேண்டுமென்று நிச்சயமாகக் கேட்க்கையில அதைமறுப்பது என்ன நியாயம்?

பொறுப்பாக்ஷித் தீர்மானமானது இப்போது திருவாங்கூர் சட்டத்திற்கு விரோதமானதென்று ஸர் ஸி. பி. வாதிக்கிறார். இது உண்மையானுல் பொறுப்பாக்ஷிக்கு விரோதமான அந்த சட்டத்தையே. மாற்றி விடலாமே? ஆலயப்பிரவேசம் சட்டவிருத்தமாயிருந்தும்அரசவிளம்பரத்தால்சட்டத்தை தூக்கி எறிந்துவிடவில்லையா? சட்டவிருத்தமான கார்யம் செய்வதில்லையென்றும் சட்டத்தையும் பழைய ஸம்பிரதாயத்தையும் காப்பதே கடமையென்றும் இப்போது வாதிக்குமிவர் ஆலயப்பிரவேச விஷயத்தில் மட்டில் வேறு மாதிரியாக நடந்துகொண்டதற்கு ஸமாதானம் சொல்லமுடியுமா? ஆலயப்பிரவேச விஷயத்தில் ஸசிவோத்தமரை ஆகாயமளாவத் துதிபாடிய காங்கிரஸ் ஸ்வதந்திர வாதிகள், பொறுப்பாக்ஷி கொடுக்க மறுக்கும்இவருடை கூற்றைஏற்பார்களா? வியஸ்தா வாதிகளாகிய தார்மிகர்களைப்பற்றியோவென்றால் இவ்விரண்டையும் அவர்கள் ஏற்கக்கூடியவர்களன்று. ஆகவே ஒரு விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயப்படி நடப்பதாயும், மற்றொன்றில் சட்டப்படி நடந்து, விட்டுக்கொடுக்காமலிருப்பதாயும் பேசுவது முரண்பட்டதென்று நமக்குத் தோன்றுகிறது.

அரசர் தன் சொந்த ஸௌகர்யத்தையும், கௌரவத்தையும், மஹிமையையும்விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. தெய்வத்தின் மஹிமை எப்படித் தொலைந்தாலென்ன? இந்தக் கொள்கைதான் அங்கு ஊன்றியிருப்பதாகப் பொது ஜனங்கள் நினைப்பார்கள்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

தாடபள்ளிக்கூடம்.



## ஆலயப்பிரவேச மசோதாவுக்கு காந்திஜியின் கட்டளை.

ஸ்ரீமான் காந்தி தமது 'ஹரிஜன' ப்பத்திரிகையில் சென்றவாரம் ஆலயப்பிரவேச விஷயமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு ஓர் கட்டளை பிறப்பித்துள்ளார். இது முக்யமாகச் சென்னை மாகாணத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. காந்திஜி தமது வியாஸத்தில், கொச்சி ராஜ்யத்தையும், சென்னை கவர்ன் மெண்டையும், இவ்விஷயத்தில் ஸமமாக பாவிக்கக்கூடாதென்பதை ஒப்புகிறார். கொச்சி ராஜா தமது தேசத்தில் ஸ்வதந்திர அரசராகையால் அவரிஷ்டப்படி அங்கு ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வது. சௌகர்யமென்றும், ஆனால் சென்னை கவர்ன்மெண்டானது பற்பலஜாதி மதஸ்தர்களுக்கும் பொதுவாகப் பொறுப்பாளியாயிருப்பதால் அது தன்னிஷ்டப்படி ஒரு ஆலயப்பிரவேசச் சட்டத்தை இயற்ற அதிகாரம் கிடையாதென்றும் காந்திஜி ஒப்புக்கொள்ளுகிறார்.

ஆனால் ஆலயப்பிரவேசத்திற்கு அவர் இரண்டு வழியைக் குறிப்பிடுகிறார். டிரஸ்டிகளாகவே இஷ்டப்பட்டு ஆலயங்களைத் தீண்டாதாருக்குத் திறந்துவிடுவது ஒன்று. அல்லது ஸேவார்த்திகளான ஜாதி ஹிந்துக்கள் சேர்ந்து தீண்டாதாரை அநுமதிக்க ஸம்மதிப்பது ஒன்று. ஆனால் இந்த இரண்டு வழியிலும் ஆலயப்பிரவேசத்தை ஸாதிக்கவேண்டுமானல் அதற்காக ஆலயப்பிரவேச அநுமதிச் சட்டமொன்றை இயற்றவேண்டியது அவச்யமென்றும் இதை இயற்றச் சட்டஸபைக்கு அதிகாரமிருப்பதாயும் ஆதலால் உடனே அநுமதிச்சட்டத்தை சென்னை கவர்ன்மெண்டார் செய்து தீரவேண்டுமென்றும் காந்திஜி கட்டளையிட்டிருக்கிறார்.

ஆதலால் ஏற்கனவே சட்டம் செய்யத்துடித்துக்கொண்டிருந்தவர்களுக்கு காந்திஜியின் பின்பலமும் கிடைத்துவிட்டதால் சீக்கிரத்தில் இது சென்னை சட்டஸபையில் வந்து நிறைவேறுமென்று நாம் எதிர்பார்க்கலாம். எரவாடா ஒப்பந்தகாலத்தில் ஹிந்துத்தலைவர்கள் ஆலயப்பிவேச உறுதிமொழியளித்ததையும் காந்திஜி ஞாபகப்படுத்துகிறார். சிலரைப்போல் புனா ஒப்பந்தத்திலேயே இதுவும் அடங்கியதென்று காந்திஜி வாதிக்காதது விசேஷமே, ஆயினும் புனா ஒப்பந்த காலத்தில் உறுதிமொழி கொடுத்தவர்கள் எல்லா ஹிந்துக்களின் பிரதிநிதிகளா? அவர்களுடைய உறுதிமொழிக்கு எல்லோரும் கட்டுப்படவேண்டிய அவசியமா? ஹிந்துமஹாஸபையே. புனா ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவில்லை. அதில் ஸம்பந்தப்பட்டமாளவியாஜி, டாக்டர் டாகூர் முதலியவர்களும் ஏற்கனவே பின்வாங்கி விட்டார்கள். ஒரு சிலரைத்தவிர பெரும்பாலான ஹிந்துக்கள் புனா ஒப்பந்தத்தையே எதிர்த்து வருகையில், சில தலைவர்கள் ஏதோ பேரம் பேசிக்கொண்டது இந்தியா முழுவதும் கட்டுப்படுத்துமா?

அநுமதிச் சட்டம் செய்யக்கூட சட்டஸபைக்கு அதிகாரமுண்டாவென்பது யோஜிக்கப்படவேண்டும். அந்தச் சட்டத்தினால் தேசத்தில் உள்நாட்டுச் சச்சரவு அதிகரிக்கவே இடமுண்டாகும். ஆதலால் இதையும் தார்மிகர்கள் எதிர்க்கவேண்டியதே.

### தீவ்ரக் கிளர்ச்சிவேண்டும்

மேலும் மந்திரிகள் ஆலயப் பிரவேசச் சட்டம் செய்வதற்குத் தங்களுக்குப் பின் பலமாகப் பொதுஜன அபிப்பிராயம் வேண்டுமென்று ஆங்காங்கு கிளப்பிவிட்டு வருகிறார்கள்: காங்கிரஸ்காரர்களும், சீர்திருத்தவாதிகளும், பள்ளிக்கூட, காலேஜ் மாணவர்களை வைத்துக்கொண்டு கூட்டம் நடத்தி ஆலயப் பிரவேசத்திற்கு ஸாதகமாகத் தீர்மானம் செய்யும்படி தூண்டப்படுகிறார்கள். இதை வைத்துக் கொண்டு தேசமெங்கும் ஆதரவு ஏற்பட்டுவிட்டதாகப் பாசாங்கு செய்ய உத்தேசமிருப்பதாகத் தெரிகிறது.

ஆதலால் இச்சமயம் ஸநாதன தர்மிகளின் கடமை பெரிதாயிருக்கிறது. காங்கிரஸின் மெஜாரிட்டி பலத்தைக்கண்டு நம்மவர்கள் பலர் நம்பிக்கை யிழந்து மௌனமாயிருக்கிறார்கள். "எப்படியும் ஆலயப்பிரவேசச்சட்டம் வந்து தீரப்போகிறது. நாம் எதிர்த்து என்ன பிரயோஜனம்" என்ற வேதாந்தம் பேசுவதில் பயனில்லை. நம்முடையஎதிர்ப்பை கட்டுப்பாடான முறையில் பலமாக வெளிப்படுத்திவிட்டால் அதை மீறியும் காங்கிரஸ் வாதிகள் அநீதிசெய்தால் அதன்பின் நாம் செய்யவேண்டிய வேறு கார்யங்களையும் யோஜிக்கலாம். ஏற்கனவே இந்தியா சட்டஸபையில் ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து நமது மாகாணத்தில் பெரியகிளர்ச்சி நடந்திருக்கிறது. மதாசார்யர்களும் பெரிய உத்யோகஸ்தர்களும், பிரபல பண்டிதர்களும் மற்ற ஆஸ்திகர்களும் அதை எதிர்த்து ஸர்க்காருக்கு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் கூட்டம் நடத்தி கண்டனத் தீர்மானம் அனுப்பப்பட்டது. அநேக மஹஜர்களும் அனுப்பப்பட்டன. மேற்கண்ட கிளர்ச்சிகளை மறுபடியும் நாம் அங்காங்கு உடனே ஆரம்பிக்கவேணும்-ஸநாதனப் பிரசாரகர்கள் இதை உடனே கவனிப்பது நலம். தர்ம ஸபைகளும் கிளர்ச்சி செய்யவேணும். எல்லா ஜாதியாருடைய உதவியையும் நாடவேண்டும். ஆலயப்பிரவேசத்தை ஆதரித்தபோதிலும், சட்டமூலமாக நிர்ப்பந்தம் செய்யக்கூடாதென்கிற கக்ஷியாரையும் நாம் சேர்த்துக்கொள்ளலாம். ஆகையால் மதாசார்யர்களான மடாதிபதிகளும், மற்றவர்களும் தக்க முயற்சிசெய்து தீவ்ர கிளர்ச்சி நடத்தவேண்டியது அவஸரமாகும்.

### பள்ளிக்கூடங்களில் நாடகமேடை?

காரச்சியில் நடந்த மாணவர் கூட்டத்தில் தலைமைவஹித்து ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி கல்வி விஷயமாகச் சில யோஜனைகளை வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி இந்தியாவில் எதுவும் தேசிய தோரணையில் நடைபெற வேண்டுமென்று விரும்பும் தேசாபிமானியாகையால் இந்தியர்களின் கல்விவிஷயமாக அவர் வெளியிட்ட அபிப்பிராயத்தில் தேசிய அம்சமிருக்கிறதாவென்று விமர்சிக்க வேண்டியது அவசியம். இக்காலத்தில் கல்வி விஷயமாக எவ்வித நிச்சயமான அபிப்பிராயமும் இல்லாமல் குழப்பமிருப்பது வாஸ்தவமாயினும் ஹிந்துக்களின் ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கும் குடும்ப தர்மங்களுக்கும் ஏற்காத படிப்புமுறையை ஆதரிப்பது தேசியமாக நியாயமில்லை.

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி புருஷர்களின் படிப்பு, ஸ்திரீகளின் படிப்பு ஆகியவை விஷயமாக வெளியிட்டுள்ள அபிப்பிராயம் மேற்றிசை தேசங்களின் சாயையை அநுஸரித்ததாயிருக்கிறதே யல்லது பாரத தேசத்திய பழக்க வழக்கங்களுக்கு ஏற்றதாயில்லை.

மாணுக்கர்களுக்குப் படிப்புடன், நாடகம் ஆடவும் கற்பிக்கவேண்டுமென்கிறார். ஒவ்வொரு கலாசாலைகளிலும் நாடகமேடை அமைத்து மாணவர்களுக்கு நாடகப்பயிற்சி செய்விக்கவேண்டுமாம். அதன் பிரயோஜனமென்னவென்று நமக்கு விளங்கவில்லை. நாடகக்கலை சிறந்ததாயிருந்தாலும் மாணவர்களை அதில் பழக்குவது ஸன்மார்க்க ஹேதுவாகுமா? அந்தக்கலையை அப்யஸித்து நடிக்க வேண்டியவர்கள் வேறு அதிகாரிகளே. மாணவர்களை இதில் பழக்குவது மிகுந்த அனர்த்தஹேதுவாகும். படிப்பும் நடத்தையும் நசித்துவிடும். இந்திய நாகரிகத்தில் இதுவரையில் கேள்விபடாத இந்த அபூர்வ யோஜனை விசித்ரமாகவே இருக்கிறது. நாடகம் கற்கப் பள்ளிக்கூடமெதற்கு? நாடக சாலைகளிலேயே மாணவர்களை விட்டுவிடலாமே? பெற்றோர்களின் பணத்தை இதில் பாழாக்கவேண்டுமா?

### ஸ்திரீகளின் படிப்பு

ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஸ்திரீகளின் படிப்பு விஷயமாகச் சொல்லியுள்ள அபிப்பிராயமும் விவேகிகளால் ஏற்கக்கூடியதல்ல. ஸ்திரீகள் உயர்தரப்படிப்பு உள்பட, எல்லாவற்றிலும் பயிற்சிபெறவேண்டுமாம். மேலும் ஸ்திரீகளும், புருஷர்களும் ஒரே பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிப்பதே மேல் என்று இவர் பேசுகிறார். தவிரவும் ஸமூஹ விஷயங்களிலும், பொதுக்கார்யங்களிலும் புருஷர்களைப் போலவே ஸ்திரீகளும் ஸம்பந்தப்படவேண்டுமாம். ஆனால் குடும்ப நிர்வாஹத்தையும் ஸ்திரீகள் கவனிப்பது அவச்யமென்கிறார்- கடைசியாக ஸ்திரீகள் ஸ்திரீகளாகவே இருக்கவேண்டுமேயல்லாது புருஷர்களாக ஆகிவிடக்கூடாதென்றும் சொல்கிறார். இவ்வாறு பேசுவது தமாஷ் பேச்சா, அல்லது பொறுப்புள்ள பேச்சா என்பது தெரியவில்லை.

ஸ்திரீகளும், புருஷர்களும் சேர்ந்து படிப்பதால் எவ்வளவோ அனர்த்தங்கள் ஏற்படுவதை அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்து வருகிறோம். மஹாத்மாவாக விளங்கும் காந்திஜியாலேயே இது ஸமாளிக்கமுடியவில்லை. ஸபர்மதி ஆச்ரமத்தில் நடந்த ஸம்பவங்களும் உபவாஸமும் உலகமறிந்த விஷயம். இன்னும் எவ்வளவோ உதாஹரணமுண்டு. பல மேதாவிகள் ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்து படிப்பதை எதிர்க்கிறார்கள். இப்படியிருக்க இந்தியதேச வழக்கத்திற்கு ஏற்காததும் தீங்கு மிகுந்ததுமான இந்த யோஜனையை இவர் சொல்லுவது ஏற்கக்கூடியதல்ல. பணக்கஷ்டத்தால் ஸ்திரீகளுக்குத் தனிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த முடியவில்லையென்கிறார். மஹம்மதியர் விஷயத்தில் இவர் என்னசெய்வார்? அவர்கள் ஸ்திரீபுருஷர் சேர்ந்து படிப்பதை ஒப்பமாட்டார்களே? அதற்குமட்டும் பணம் எங்கிருந்து கிடைக்கும்.

ஸ்திரீகள் பொதுக்காரியங்களில் கலக்கவேணும், காலேஜ் பள்ளிக்கூடங்களில் புருஷர்களுடன் சேர்ந்து படிக்கவேணும், சட்டஸபை எலக்ஷனுக்கு நிற்கலாம், தமாஷ்களுக்குப் போகலாம், இவ்வளவு செய்தாலும் ஸ்திரீகள் ஸ்திரீகளாகவே இருக்கவேண்டுமென்று இவர் பேசுவது வெகு விநோதமாயிருக்கிறது.

எல்லா விஷயங்களிலும் புருஷர்களுக்கு ஸமமாகவோ, அல்லது மேற்பட்டவர்களாகவோ ஸ்திரீகள் இருக்கவேண்டுமென்று இவர் விரும்புகிறார். அப்படியிருக்க வேறு எந்த அம்சத்தில் ஸ்திரீகள் ஸ்திரீகளாகவே இருக்கவேண்டுமென்று சொல்லுகிறாரோ தெரியவில்லை. ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி சொன்னாலும் சொல்லாவிட்டாலும் ஸ்திரீகள் ஸ்திரீகளாகவே அமைக்கப்பட்டிருக்கிறார்.

## சென்னை.
## (ஸ்ரீ சாரதா விலாஸினீ ஸபா,)

### 48 ஸம்ஸ்காரங்கள் அவச்யமே.

சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலையில் (19—11—37) வெள்ளிகிழமை மாலை 5 மணிக்கு மேற்கண்ட சபை கூடிற்று. சபைக்கு தலைமை ஆசிரியர் அவர்களும் மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் கூடியிருந்தார்கள். சென்னை சர்வகலாசாலை ஸம்ஸ்கிருத புரபஸர் பிரம்மஸ்ரீ S. K. ராமனுத சாஸ்திரிகளவர்கள் சபைக்கு அக்ராசனம் வஹித்தார்கள். மங்களம் சொல்லி முடிந்தபின்பு காரியதரிசியால் முந்தின உபன்யாஸத்தின் சுருக்கம் வாசிக்கப்பட்டது. பிறகு D. சுப்ராயபட்டர் என்னும் வேதாந்தவகுப்பு மாணவனுல், "புருஷ சம்ஸ்காரங்கள்" என்னும் வ்யாஸம் வடமொழியில் எழுதி வாசிக்கப்பட்டது. அதின் சாராம்சமாவது—பராசரர் யாக்ஞவல்க்யர் மனு முதலான முன்னோர்கள் நமக்கு 48 ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டுமென்பதாக விதித்திருக்கிறார்கள். அந்த ஸம்ஸ்காரங்களுக்கு பலனையும் செய்யாவிடில் ஏற்படும் பாபத்தையும் சொல்லியிருக்கிறார்கள். சில நவீன விமர்சகர்கள் அவர்கள் சொன்ன சம்ஸ்காரங்களை மாற்றவும் சங்கோசப் படுத்தவும் எத்தனித்தார்கள் உதாஹரணமாக "விதவா விவாஹம்" "மற்றொரு வர்ணத்தோடு விவாஹம் செய்தல்" "ப்ரௌடா விவாஹம்" "ஒருநாள் விவாஹம்" முதலான சில தர்ம சாஸ்த்ர விருத்தமான கார்யங்களை செய்யவேண்டுமென்பதாக பறையடிக்கிறார்கள். அது சுத்த பிசகான காரியம். அம்மாதிரி செய்வதால் முன்னோர்களுக்கு கௌரவ குறைவும் நமக்கு ஒரு ஹானியும் தேடுவதேயாகும். இந்த சம்ஸ்காரங்களை யாவற்றையும் செய்வதால் என்ன பிரயோஜனமென்று விசாரிக்கையில், இந்த உலகத்திலும் பரலோகத்திலும் சுகங்களை அனுபவிக்கிறோம். சுகத்தை தவிற துக்கத்தை ஒரு மனிதனும் விரும்பமாட்டான். ஆகையால் இதுவே பரம பிரயோஜனம். ஆகையினுலேயே இந்த சம்ஸ்காரங்களை செய்யவேண்டிய தவச்யம் என்று முடிக்கப்பட்டது.

பிறகு அச்ராஸனுதிபதியவர்கள் சொன்னதாவது:— இந்த சம்ஸ்காரங்களை செய்வதால் நாம் எட்டுவிதமான ஆத்ம குணங்களை சம்பாதித்து கொள்வதேயாகும். ஆகையால் இந்த எட்டு குணங்களையும் சம்பாதித்து கொள்ளும்வரை ஸம்ஸ்காரங்களை செய்தால் போதும். ஸம்ஸ்காரங்கள் அவ்வளவும் செய்யவேண்டுமென்ற அவச்யமில்லை. ஆனுல் இதை ஸம்ஸ்காரங்களை மாற்றவும் குறைக்கவும் ஒருவருக்கும் ஒருவிதத்திலும் சுதந்திரம் கிடையாது. இந்த ஆத்ம குணங்களை சம்பாதித்துகொள்ள வேண்டுமென்பதே முன்னோர்களுடைய நோக்கமேயொழிய 48 ஸம்ஸ்காரங்களையும் செய்யவேண்டுமென்பது நோக்கமில்லை. ஆகையால் ஆத்ம குணங்களை சம்பாதித்துக்கொள்ளவேண்டிய தவச்யமென்று சொல்லி முடித்தார்கள்.

பிறகு தலைமை ஆசரியர் பிரம்மஸ்ரீ கருங்குளம் மஹாமஹோபாத்யாய கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் பிரம்மஸூத்ர சாங்கர பாஷ்யத்தில் 48 சம்ஸ்காரங்களையும் செய்யவேண்டியதவச்யமா? இல்லையா? என்பதைப்பற்றி வெகுவாக விசாரித்து அதில் பலரின் அபிப்ராயங்களைக் கண்டித்து 48 ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டிய தவச்யம் என்று பகவான் சங்கரர் சொல்லுகிறார். அப்பேர்ப்பட்ட மஹான்களே எதையும் சங்கோசப்படுத்தாமல் சொல்லும்போது நாமும் அதை அனுசரித்தே 48 ஸம்ஸ்காரங்களை செய்து அதனுல் ஆத்ம குணங்களை சம்பாதித்து கொள்வது மிகவும் உசிதமான காரியமாகும் என்று சொல்லி முடித்தார்கள். பிறகு காரியதரிசியால் தன்யவாதம் சொல்லப்பட்டு சபை இனிது முடிந்தது.

E. S. ராமமூர்த்தி.

## திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கம்.

### ஸ்ரீ மணவாளமாமுணிகள் மகோற்சவக் கோண்டாட்டம்.

திருவல்லிக்கோணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணிகைரவிணியின்கீழ் கரையிலுள்ள ஸ்ரீ வானமாமலை மடத்தில் ஸ்ரீ மணவாளமாமுனிகள் மஹோற்சவக் கொண்டாட்டம் அவரது அவதாரதினமான ஐப்பசி மூலம் முதல் ஒரு பத்துநாள் அடியிற்கண்ட விபரப்படி உபந்யாச ரூபமாக நன்குநடந்தது பிரதிதினம் மாலை 6-30 மணிமுதல் 8, 8-30, 9-மணிவரை உபன்யாஸங்கள் நடந்தேறின மழையைக்கூடக் கருதாது ஸ்திரீபுமான்கள் வந்து கேட்டு இன்புற்றனர். ஸ்ரீவைஷ்ணவ சமூஹத்தினரான இருகலையாரும் இங்ஙனே சேர்ந்து வாழ்தலே மிகச்சிறியதென அனைவரும் குதூகலித்தனர். ஆரம்பதினத்தன்று சங்க வெளியீடான நான்காவது மலர் 'மணவாள மாமுனிகள்' வந்திருந்தோர்கட்கெல்லாம் வினியோகிக்கப்பட்டது. 7-11-37 ஸ்ரீ உபவே ஸி. நரஸிம்மாச்சாரியர் 'திருவாய்மொழி நூற்றந்தாதி; 8உ ஸ்ரீ உபவே ஆர். கேசவய்யங்கார் ஆர்த்திப்ரபந்தம்; 9உ ஸ்ரீஉபவே ஆர். சந்தானகிருஷ்ணையங்கார் உபதேச ரத்தினமாலை; 10உ வித்வான் ஸ்ரீ உபவே ஸ்ரீரங்கம் சடகோபாசார்யர்ஸ்வாமி மணவாள மாமுனிகளும் ஆர்த்தியும்; 11உ ஸ்ரீஉபவே ஆர். சந்தான கிருஷணய்யங்கார் ஸ்ரீ பாதுகாபட்டாபிஷேகம்; 12உ ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ் வேதாந்தாச்சாரியார், திருவெட்டெழுத்து; 13உ ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார், மணவாள மாமுனிகளும், மறைமுடித்தேசிகனும்; 14உ காலை 8மணி முதல் 9-3- மணிவரை ஸ்ரீஉபவே சந்தான கிருஷ்ணய்யங்கார், அமலன் அருள்; 15உ பண்டித திருவாலி ராமாநுஜாசாரியர், மணவாள மாமுனிகள் உரைநடை; 16உ ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார், யதிராஜவிம்சதி.

### திருமங்கை மன்னன் திருநாட் கோண்டாட்டம்.

கார்த்திகையிற் கார்த்திகை நாளான 18-11-37 வியாழக்கிழமை மாலை 6-மணி முதல் 7-30 மணிவரை திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ வானமாமலை மடத்தில் மங்கையர்கோன் மஹோற்சவம் நடந்தது ஸ்ரீஉபவே ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி 'கலியன் கவித்திறம்' எனும் விஷயம்பற்றி உபன்யஸித்தார். 20உ அதே விடத்தில் மாலை 6-30 மணிமுதல் 8.45 மணி வரையில் 'திருமடல்கள்' என்னும் விஷயம் பற்றி பண்டித திருவாலி ராமாநுஜாசார் ஸ்வாமி உபந்யஸித்தார்.

### திருப்பாணாழ்வார் திருநாட்கோண்டட்டாடம்,

கார்த்திகையில் உரோகிணி நாளான 19—11—37 வெள்ளிக்கிழமை ஷை மடத்தில் சங்கத்தின் ஆதரவில் பாண்டுபெருமாள் உற்சவம் நடக்க ஸ்ரீஉபவே குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் 'திருப்பாணாழ்வார் வைபவம் என்பதுபற்றி விரிவாக உபன்யஸித்தார்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## ஸ்ரீராமராஜ்ய பட்டாபிஷேகம்.

சென்னை உத்தியோகஸ்தார் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி சிங்கராச்சார் தெருவிலுள்ள ராமராவ் ஸ்கூல் மெத்தையில் ஸ்ரீஉபவே வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமியால் ஸீரிஸாக 7—8—37உ முதல் நடத்தப்பட்டுவந்த ராமாயண ஹரிகதா காலக்ஷேபத்தில் 14—11—37 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-45மணிக்கு ஸ்ரீராமராஜ்ய பட்டாபிஷேகம் ஆரம்பமாகியது. பாகவதர் வெகு அழகாக இராமாவதாரத்தை ஸங்க்ரஹித்து பட்டாபிஷேக கட்டத்தை வெகு நேர்த்தியாக நடத்தினுர். வால்மீகி, கம்பர், அருணசலக்கவி இவர்களது இராமாயணத்தினின்று வேண்டுமளவு எடுத்தாண்டு ஸபையை ரஞ்சிப்பித்தார். வேண்டிய சம்மானங்கள் அவர்கட்கு வழங்கப்பட்டன. சங்கத்தார் பரம காருணிகரான பெரியவாச்சான் பிள்ளை பாசுரப்படி ராமாயணப்புத்தகத்தை தனியாக அனைவர்க்கும் வழங்கினர். சங்கத்தலைவரான ஸ்ரீமான் ஆர். இராமசாமி அய்யங்காரவர்கள் சில புகழுரைகள் சாற்றினுர். திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி வாழ்த்துப்பாக்களாக தாமியற்றிய ஐந்து பாடல்களைப்பாடி விளக்கினுர். ஸ்ரீமான் வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார் சங்கத்தின் சார்பாக வந்தனுபசாரம் செய்தார். ஸ்ரீமான் யம். வி. திருமலையாசாரியார் சபையோர்சார்பில் வந்தனம் அளித்தார். ஸ்ரீஉபவே நடாதூர் கிருஷ்ணமாசார் ஸ்வாமி (நாச்சியார் கோவில்) வெகு அழகாக பாகவதரைப் புகழ்ந்து பேசினுர். வந்தவர்கட்கு தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு வழங்கப்பட்டன. ஊர்கோலமும் செவ்வனே நடந்தது. மழையும் காற்றுமிருந்தும் பட்டாபிஷேக மஹோற்சவம் சம்பிரமத்துடன் முடிவடைந்தது. நாதஸ்வரக் கச்சேரி வெகு நேர்த்தியாக இருந்தது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## மதிப்புரை.

### இராமகீதை.

(பாராயணத்திற்கு யோக்கியமானது)

இந்தக்கீதை அத்தியாத்தும இராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் ஸ்ரீ இராம லக்ஷ்மண ஸம்வாதரூபமாகப் பரமசிவன் பார்வதியைக் குறித்து உபதேசிக்கிறார். இதில் அத்தியாத்தும விஷயம் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலில் ஸ்ரீராமர் தர்மத்தின் தத்துவத்தை உபதேசித்து, பிறகு குருவைச் சரணமடையவேண்டிய விதத்தையும், மோக்ஷத்திற்கு சாதனம் ஞானமென்பதையும் சொல்லி அதன் பின் 'தத்வமஸி' இந்த வாக்கியார்த்தத்தையும் ஸமாதி இலக்ஷணத்தையும் பக்தி மார்க்கத்தையும் ஸ்தாபிக்கிறார்.

இதனை எளிய தமிழில் வசனமாக மொழிபெயர்க்கப்பட்டு மூல சுலோகத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 4. விலாசம்:— T. வாசுதேவராவ் பாகவதர், ஸ்ரீசாரங்கபாணி வசுவாய் கோவில் சன்னதித் தெரு, பஜனைமடம், கும்பகோணம்.

## பம்பாயில் ஆலயப்பிரவேசம்.

### சர்க்கார் சட்டம் தயாரிக்கிறார்கள்.

பம்பாய் மந்திரி ஸபையார் அந்தமாகாணத்திலுள்ள தேவாலயங்களை ஜாதி ஹிந்துக்களுக்குப்போல தீண்டாதாருக்கும் ஸமமாக திறந்து விடும்படி டிரஸ்டிகளுக்கு அதிகாரம் கொடுக்க ஒரு மசோதாவைத்தயார் செய்து வருகிறார்கள்.



## SANATANIST MEETING AT MYLAPORE.

*A public meeting of Sanatanists was held on Sunday the 14th instant at Mylapore under the presidency of Mr. T. S. Ramaswamy Iyer.*

The President in his introductory remarks laid stress on the antiquity of the Hindu Religion guided by and based on the Smrithis and Sruthis of the land and said that none had any right to change the Dharma. He criticised the move contemplated by a few zealous reformers to hold a Pandits' Parishad with a view to find support from the Sastras for the changing of Hindu Dharma so as to come in line with modern conditions. In particular he deprecated the attempts to gather round only those Pandits who favoured the necessity of a change and to refuse admission to the others equally well versed in learning who are prepared to discuss the various issues impartially. The four-fold questions of Temple Entry, conversion and reconversion, inter-caste and inter-communal marriages, simplification of performance of rites and rituals, sought to be discussed in the Pandits' Parishad and the conclusions that are likely to be arrived at will necessarily be one-sided. This he said is the time for the learned Pandits of the land to stand up boldly for Sanatana Dharma. He revealed the fact that a counter Parishad will be convened at Madras during the last week of December and that many Mahamahopadhyayas and other learned Pandits throughout the land have agreed to lend their support to it. This Parishad is to be called The Akhila Bharatheeya Sanatana Dharma Poshaka Vidwat Parishad and will discuss these as also other allied questions of vital importance to our Dharma and arrive at an impartial conclusion. He appealed to all those interested in the cause to lend their support to the same whole-heartedly.

Mahamahopadhyaya-Kulapati Brahmasri Karungulam Krishna Sastrigal said that Dharma is a *Vyavastha* and that even animals are guided by this by instinct. Sanatana Dharma has been prevailing in the land from time immemorial and it cannot be altered to suit our whims and fancies. Dharma is an organic whole and if one part is changed the whole suffers and will lead to ruin.

He moved a resolution opposing the entry into temples of the Avarnas.

Brahmasri Somadeva Sarma speaking next said that the Harijans were not keen about Temple Entry and the Temple Entry question has been brought to the fore by certain enthusiasts neglecting the real economic problem of the Harijans, namely, the means to live. Sanatanists were prepared to do their utmost to improve the economic position of the depressed classes.

Mr. Desika Thathachariar then supported the resolution and it was unanimously passed.

Mr. Subrahmania Sastigal then moved a resolution opposing reconversions of those who have left Hinduism and the conversion of other religionists to Hindu Dharma and the attempts to find Sastraic support for it in the Pandits Parishad. He explained that Hinduism is one that should be attained by birth. Sruthis and Smrithis, he said, were all against conversion. Mr. Venkatarama Sastrigal seconded this resolution and this was unanimously passed.

Vidyabhushana Sekharipuram Pandit Doraiswamy Sastrigal of Palghat then moved a resolution condemning the move to find Sastraic support for widow marriages, inter-caste and inter-communal marriages, and Sagotra marriages. He said that widowhood is a result of past karma, which is to be atoned for in this birth, during which period of expiation, the widows are to be Brahmacharinis by which alone they would pave the way for happy lives in future births. Inter-caste and inter-communal marriages, he said, were against the spirit of the Sastras. Mr. M. S. Ganesa Sarma seconded the resolution and it was unanimously adopted,

Mr. Ganesa Sarma than moved a resolution giving full support to the Akhila Bharatiya Sanatana Dharma Poshaka Vidwat Parishad convened by many Mahamahopadhyayas and other learned Pandits in the country for the true interpretation of the Sastras and the advancement of Sanatana Dharma. He exhorted all the Pandits in this land not to be guided by any other considerations except the interpretation of the Sastras in their true spirit as they have been traditionally interpreted and followed by eminent souls in the past.

Mr. Anantha Rao seconding the resolution said that such a Vidwat Parishad was necessary for interpreting the real object of the Sastras for laymen. The resolution was then passed without a division.

The President moved a resolution exhorting the people of all castes and communities in the Hindu Religion to stand up to their Swadharma at the present moment when religion was undergoing a crisis. This was unanimously passed.

Another resolution from the chair was to the effect that Madras Legislative Assembly and the Council are political bodies and as such cannot enact measures touching Religious or Socio-Religious matters. This was also passed unanimously.

A resolution opposing the making of common property of Hindu Temples which have been hitherto enjoyed by particular communities alone and condemning the statements of some congress Ministers in this connection, which was drafted by Mr. N. Subrahmanya Iyer, Retired Dewan Peishkar, Travancore, and moved on his behalf by Mr. C. P. Krishnamoorthy Rao, was discussed at some length and was dropped as it was thought it was not happily worded and may lead to issues of legal importance.

*The following resolutions were unanimously adopted at the Meeting.*

RESOLUTIONS.

This meeting of Sanatanists considers the Travancore Temple Entry proclamation as well as the legislation with similar objects contemplated by the Congress Government in Madras, are against our age-long customs and the Sastras and are calculated to spoil the sanctity of our temples. It condemns the recent move made by some interested parties to so interpret the sastras as to create sanction for the securing of temple entry to the Avarnas by convening a Parishad of only those Pandits favouring their move.

This meeting views with apprehension the attempts of a few gentlemen to mis-interpret the Sastras in the above Parishad so as to secure religious sanction for the reconversion of those who have left the Hindu fold and for converting Non-Hindus into Hinduism.

This meeting deprecates the attempts to secure religious sanction for widow remarriage, inter-caste and inter-communal marriage, which go by the name of social Reform, by misinterpreting the Sastras in the aforesaid Parishad.

This meeting gives its full support to *The Akhila Bharatiya Sanatana Dharma Poshaka Vidwad Parishad* to be held in Madras on the 25th, 26th, 27th and 28th of December 1937 convened by Mahamahopadhyaya Yagnaswami Sastrigal, Mahamahopadyaya Karungulam Krishna Sastrigal, Mahamahopadyaya Ananthakrishna Sastrigal, Pandit Deonaikacharya, Pandit Rajeswara Sastri, Rao Saheb N. Natesa Iyer, Brahmasri T. S. Ramaswamy Iyer, Brahmasri N. Srinivasacharya, Mr. C. P. Krishnamoorthy Rao and others, to discuss each of the above and all allied questions of vital importance to Bharatha Dharma.

This meeting enjoins members of all castes in the Hindu Religion not to neglect their Swadharma and thus lead to the decay of Hinduism.

This meeting draws the attention of the President and Members of the Madras Legislative Assembly and the Legislative Council that they are political bodies consisting of members belonging to all castes, communities and interests and as such are not competent to enact such measures or express any opinion on religious and social usages and customs, which have the force of law, such as questions of temple entry. This meeting deplores the passing of a resolution in the Madras Legislative Assembly congratulating His Highness The Maharajah of Travancore on the Temple Entry Proclamation, which is being condemned by all believing Hindus.

This meeting authorises the president to communicate the resolutions to His Excellency The Viceray, His Excellency The Governor of Madras, The Government of Madras, The President of the Central Legislative Assembly, the President of the Madras Legislative Assembly and the President of the Madras Legislative Council, as also the Government of Travancore and Cochin.

## VIDVAT PARISHAD.

The Secretary, All India Varnashrama Swarajya Sangha, Nagpur, writes:—

"An independant Vidvat conference of orthodox Pandits of All India, is to be held at Madras on 25th to 28th December, 1937.

The 10th Annual Conference of the All India Varnashrama Swarajya Sangha and its Vidvat Parishad is to be held at Madras on 29th to 31st December, 1937.

## தஞ்சாவூர் ஜில்லா, நீர் வரி உயர்வு பிரேரபணை.

1932 ஹுத்திய காவிரி மேட்டூர் வாடர் செஸ்ஜூல் சம்பந்தமாய், ரேட் ஜாஸ்தி ஏற்படுத்த நவம்பர் முதல் வாரத்தில், கவர்மெண்டு பிரசுரம், எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. மூன்று பசலிக்கு முன்பு, ஏற்பட்டதை கம்மியாக்கி வசூலிக்கப்பட்டது.

வாழை, கருப்பு, கொடிக்கால், வகை சாகுபடிக்கு ஏகர் 1க்கு ரூ 17–8–0 ஏற்படுத்தி, அம்மாதிரி மானுவரி சாகுபடி, பூரா இனும் நஞ்சை கிராமங்களுக்கும், சுமார் இருமடங்கு தீர்வை ஏற்பட்டு, டிராப் ஏற்பட்டிருக்கிறது. நில தீர்வை ஜாஸ்தி கொண்டதாயும், பரிசீலித்து கம்மிப்படுத்த பல வருஷங்களாக கோரி, சமீபம் மாயவரத்தில், மிராசுத்ார் மகாநாடு, சேர்ந்து தீர்மானித்தும் உள்ள, இக்காலம். நீர்வரி உயர்வுபடுத்த ஏற்பட்டுள்ளது, பொருத்தப்படாத கொள்கையென்று படக்கூடியது.

அம்மாதிரி உயர்வு ரேட், ஜில்லா மிராசுதாரர்கள் வரி சுமையே. ஏகர் 1க்கு 17–8–0 ஏற்பட்ட சாகுபடி பொருள் சகலருடைய உபயோகத்துக்கு அவசியமுள்ள வைகள். சாகுபடி குறைந்தாலும், பொருள் விலை நிர்பந்த வரியால், ஜாஸ்தி பட்டாலும், சகல ஜனங்களுக்கும் அநுகூலக்குறைவானது.

ரெவின்யூ மந்திரியார் சுமார் 3 மீ முன் தஞ்சையில் மிராசுதார்சம்பந்தப்பட்டவர்களிடம், மேட்டூர் பிராஜெக்ட் செலவு பல கோடி ஆகியதற்கு, வட்டி கிடைக்க வேண்டியதென்று அறிவித்ததின், கருத்து ஜலவரி உயர்த்தி உள்ளதாய் நிச்சயப்படுகிறது. ஷை பிராஜெக்ட் ஆரம்ப நோக்கம், செலவு, வட்டி வகை, பழய டெல்டாவில் தண்ணீர் தீர்வை, ஜாஸ்தியாக வேண்டியதில்லை என்பது, பூரா விபரமும் திவான்பகதூர் சாமிநாதய்யர் அவர்களால், 5 நிருபங்கள் ஹிந்து பத்திரிகையில் 2ஹு முன்பு வெளியாக்கப்பட்டு யிருக்கிறது. அக்காலம் இருந்த ரேட் கம்மியாக்கி வசூலித்தார்கள். இப்போதைய கவர்மெண்டு அறிக்கை கொள்கைபடி ரேட் ஏற்படுமானல் தஞ்சை ஜில்லா பழய டெல்டா, சாகுபடி, நிலவரி உயர்த்தியதாக ஏற்படும்

டெல்டா மிராசுதார் சங்கத்தார்களும் உயர்வு தண்ணீர் வரி ஏற்படாமல் மற்றவர்களும், பத்திரிகை மூலமாய் வெளியாக்கி, ஷை வாடர் செஸ்ஜூல் சம்பந்தமுள்ளோர்கள், கவர்மெண்டுக்கு நியாயம் காட்டி அரிவித்து, பூரா முயற்சியுடன் கோரிக் கொள்ள வேண்டிவதுமுக்கியமும் முதன்மையுமானது

பூரா இனும் வகை கிராம நஞ்சை புஞ்சை சாகுபடி ஜலபாசன உரிமை, ஜில்லா தலைமை ரெவின்யூ அதிகார நிர்ணயப்படி, நடக்க வேண்டியதாய் இருக்கிறது. தஞ்சாவூர் அரசாங்கத்தார் சம்பந்தப்பட்ட, சத்திரம், தேவஸ்தானம், மூகாசா, வகை பூரா இனும் கிராமங்கள், ஜில்லாவில் 5ல் 1 பாகமும் இதர ஜமீன் மேல்வாரதார்களுடையதும் உள்ளது.

1932 ஹுத்திய காவிரி மேட்டூர் பிராஜெக்ட் வாடர் செஸ்ஜூல் ஏற்படுத்திய காலம், கிராண்டணைகட்டு ஆறுபாசனம் சுமார் 3 லக்ஷம் ஏகர் சாகுபடி நிர்ணயிக்கப்பட்டது. அந்தப்புது ஆறு பாசனத்துக்கு ஏற்பட்ட தண்ணீர்வரி, பிறகு குறைவுபடுத்தியே, உள்ள பாதி சாகுபடி பூமிக்கு, வசூலிக்கப்படுகிறது.

30 ஹுத்துக்கு மேல்பட்டு நீண்ட காலங்களாக இருபோக, ஒருபோக சாகுபடி [illegible] அந்தந்த, இனா சாகுபடி பாசன உரிமையுள்ள [illegible] அந்த சாகுபடி [illegible] தண்ணீர் தீர்வை கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் ஏற்படுத்தி பரிசீலித்து ஜில்லா கலெக்டர் அவர்களின் வரம்பு ஏற்பட வேண்டும். ஷை 1932ஹுத்துக்கு முன் 30 ஹு மேல்பட்டு சாகுபடி உள்ள நபவர அந்தந்த இன வாரி, நிரந்தர சாகுபடி பாசன உரிமையுள்ளதாகவும், அம்மாதிரி உள்ள இனும் கிராம பூமி சாகுபடி தண்ணீர் வரி விலக்கு ஏற்படவேண்டியதே நீதியானது.

ஜி கே. கணேசன்

## ஆங்கரை.

ஸ்கந்த ஷஷ்டி உத்ஸவம்.

இவ்வருஷம் 4-11-37-ல் ஆரம்பம்செய்து 11-11-37ல் முடிய நடந்தது. தினசரி மஹான்னியாஸ ஏகாதச ருத்திர ஸஹிதம் சுவாமிக்கு திவ்யாபிஷேகமும் - பிராமண ஸந்தர்ப்பணையும் - உபன்யாஸங்களும். ஸங்கீத கச்சேரிகளும் வெகு அழகாக நடந்தது. ருக். யஜுஸ் ஸாம வேதங்களுடன். பாராயணம். நடந்து வர. ஸ்ரீ. ஷண்முகன் திரு வீதியில் உலவின காக்ஷி கண்டோர் மனதைக் கவரச்செய்தது. சுவாமி புறப்பாடு முதலான வைகளில் கிராம ஜனங்கள். விசேஷ ஒற்றுமையுடன் ஈடுபட்டது பெரிதும் போற்றத்தக்கது. தவிர வாலிபர்களாகிய சிறு பையன்கள் விசேஷ உத்ஸாகத்துடன் ஸகல காரியங்களிலும் ஊக்கமுடன் உழைத்தார்கள். இவ்வருஷம் உத்ஸவத்திற்கு அடியில் கண்ட வித்வான்கள் உபன்யாஸத்திற்கு வந்து மஹாஜனங்களை மிகவும் உத்ஸாகப்படுத்தினது செப்பத்திரமன்று.

பிரம்மஸ்ரீகளான பாஷ்யபாவஜ்ஞ - ஸ்மிருதி பூஷண வாகூர் ஸ்ரீ வ. வெங்கட்டராம சாஸ்திரிகள் எம். என் சுப்பிரமணிய சாஸ்திரிகள், பழூர் வேதாந்த பாடசாலைஉபாத்யாயர் அப்பாத்துரை சாஸ்திரி, பொம்பலபாளையம் கோபால சாஸ்திரி, கும்பகோணம் வேதாந்த பாடசாலை உபாத்யாயர் ரெங்கசாமி சாஸ்திரிகள்; திருவானைக்காவல் ஸ்ரீ மடம் வேதாந்த பாடசாலை உபாத்யாயர் போலகம் ராம சாஸ்திரிகள், புதுக்கோட்டை பஞ்சு சாஸ்திரிகள். ஆத்தன்குடி கல்யாண சுந்தர கனபாடிகள் எம். சுந்தரேச சாஸ்திரி மேற்கண்ட வித்வான்களாலும் மூன்று வேதாத்யயன கனபாடிகளாலும் பிரம்ம ஸபையைப்போல் பிரகாசிக்கப்பட்டு உத்ஸவம் இனிது பரி பூர்ணமாக முடிவடைந்தது.

ஏ. எஸ் பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள்.

ma, Sri Karyam, Antharanga Kainkarya Sabha & Vydika Dharma Sangam, Madras. Deonaikacharya, (Pandit), Lucknow. Rajeswara Sastri, (Pandit), Benares. N. Natesa Iyer, (Rao Sahib), Madura. S. M. Parande, (Rao Bahadur), Nagpur. T. S. Ramaswamy Iyor. N. Srinivasacharya. C. P. Krishnamurthy Rao, Coimbatore. T. K. Balasubrahmaniam, (Gurubhaktha Sikhamani). Srirangam. R. K. Prasanna Venkateswara Rao, (Desabhushana), Srirangam. V. Jaya rama Iyer, Vakil, Trichinopoly. K. C. Ramaswamy Iyer, Vakil, Kulithalai. P. S. Krishnamurthy Iyer, Government Advocate. Trichy. Sundaresa Sastrigal, Polakam. P. C. Muthu Chettiar (Rao Bahadur) K. Rama Aiyengar, (Ex. M. L. A.) R. Venkatachalam Aiyer (Retired Sub Judge). V. Subramaniya Iyer (Principal, Sanskrit Patasala).

[குறிப்பு:— இந்த வேண்டுகோளில் இன்னும் பல பண்டிதர்களுடையவும் கனவான் [illegible] கையெழுத்து வாங்கப்பட்டு வருகிறது. அவை கிடைத்ததும் பிரசுரிக்கப்படும்.]

## AN APPEAL

Some gentlemen of Madras, headed by Sir P. S. Sivaswami Iyer, have resolved to hold in December, what they call an "All India Parishad of Pandits and others interested in the subject of reforms and changes in the Hindu Social and religious practices demanded by the time- spirit". Its avowed object is, 'to obtain Shastraic opinion on and educate the public on four principal matters eg. re-admission into the Hindu fold of converts to other religions, simplification of the Hindu rituals and Samskaras, modification in the laws of marriage and inheritance and removal of untouchability and privileges of temple entry to all Hindus'. A further announcement has been made by them that Doctor Kuruthkoti, the High priest of Miss Miller marriage, has agreed to preside over the parishad and that Doctor Arundale, the husband of Sreemati Rukmani Arundale and the president of the Theosophical Society, has agreed to be a member of the Reception Committee or its Vice President. It has also been stated that "Only those Pandits with progressive views (i.e. who believe in the adaptibility of Hinduism to the changing conditions and spirit of the times) who are invited by the Committee, will be allowed to participate in the Conference and that the committee cannot guarantee any representation to Pandits of particular school". The implication is, that Pandits who do not answer the above description will be shut.

A feeling is growing that an onesided proceeding of the kind envisaged by the resolution, is bound to be deceptive and illusory. A well grounded apprehension has arisen, that the Parishad may not correctly bring out the real correct and full meaning and intent of the Shastras but that on the other hand it may carry with it a grim potentiality for injecting into the minds of the unwary public a wrong and onesided view as to what is Dharma and what is not Dharma and misleading them. The result will be nothing short of a national calamity of the first magnitude. The process of dismantling brick by brick, the ancient Vedic culture, civilization, Religion and philosophy which are the chiselled products of aeons of intense meditation and introspection and which with adamantine strength have been bravely and triumphantly with-standing the onslaughts of successive foreign fires and swords has already commenced in right earnest and the time has come for deciding whether and how far it will be for the good of the country to allow it to go on unnoticed and unchecked. To this end, an All India movement has been set on foot for holding a genuine representative All India Vidwat Parishad in Madras in the 4th week of December. Its primary object is to dive deep into the Shastras and make an impartial considered and authoritative pronouncement on their real meaning and intent regarding the problems referred to above and other allied questions, for the guidance of the present generation and for posterity as well. We yield to none in recognizing the necessity for adjustments in relation to modern conditions, within the limits recognized by the Shastras. It is expected that about 350 pandits will gather from all parts of India. We appeal to Hindu India to join the movement and make the Parishad serve the purpose for which it is called into existence.

Yagnaswamy Sastrigal, (Mahamahopadhyaya). Karungulam Krishna Sastrigal, (Mahamahopadhyaya, Kulapati). Anantha krishna Sastrigal, (Mahamahopadhyaya) Calcutta. Ramachari, Agent, Sree Uttaradhi Mutt, Triplicane. K. Krishnamurthy Sar-

( Continued on 2 column. )



## ஸ்ரீ அஹோபிலமடம்.

### டாக்டர் ராஜன் விஜயம்.

ஸஞ்சாரம் புறப்படப்பிரார்த்தனை:

கார்த்திகைமீ 1வ செவ்வாய்க்கிழமை சுகாதார மந்திரி டாக்டர் மகாா-ா-ஸ்ரீ கனம் ராஜன் அய்யங்கார் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் ஷை மடத்திற்கு வந்தார்கள்.

அச்சமயம் ரிடயர்டு ஸிவில் ஜட்ஜ் திவான்பகதூர் ராகவய்யங்கார் ரிடயர்டு ஸப் ஜட்ஜ் ருஜகோபாலய்யங்கார் மாஜி போலீஸ் ஸூப்ரெண்டு நாராயணய்யங்கார் முதலிய பிரபுக்களும் மற்றும் அநேக உத்யோகஸ்தர்களும் பண்டிதர்களும் பொது ஜனங்களும் அங்கு வந்து இருந்தார்கள்.

அப்பெருங்கூட்டத்தின் நடுவில்மடத்தின் இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்களும் வீற்றிருந்தார்கள்.

அப்பொழுது— சுகாதார மந்திரி டாக்டர் ஸ்ரீமான் ராஜன் அய்யங்கார் ஸ்ரீ அழகியசிங்கர் எதிரில் சொன்னதாவது:—

"மடத்தில் ஸ்ரீசின்ன அழகிய சிங்கர் விஷயமாக வ்யாஜ்யம் நடக்கிறதாக கேழ்விப்படுகிறேன். அதுமிகவும் தப்பானது. வ்யாஜ்யம் நடக்காமல் ஸ்ரீ அழகிய சிங்கர் கவனிக்கவேண்டியதவச்யம்.

அப்படி இல்லாமல் இந்த வ்யாஜ்யம் நடந்தால் ஸ்ரீசின்ன அழகிய சிங்கருக்கு மடத்துப் பட்டத்தை. நான் கூட இருந்துஏற்பாடுசெய்தவனென்கிற ஹோதாவில் அவரிடத்தில் ஒருவிதமான குறையுமில்லை. என்றுநானேவந்து ஸாக்ஷி சொல்லி அந்தவ்யாஜ்யத்தைத்தடுக்க வேண்டியிருக்கும் இந்த வியாஜ்யம் மடத்துக்கு மிகவும் அகௌரவமாக இருக்கிறது.

இம்மாதிரி விபரீதங்களுக்கெல்லாம் காரணம். மடம் ஸஞ்சாரம் பண்ணுயல் — 10— வருஷங்களாக ஒரே இடத்தில் இருப்பதுதான் உலகம் முழுவதுக்கும் அது இஷ்டமில்லை. ஆகையினால் இப்பொழுதே ஸஞ்சாரம் போகவேண்டியதவச்யம். பெரிய அழகிய சிங்கருக்கு அசக்தியாக இருந்தாலும் — தினம் 4. 5. மைலாவது இரண்டு பேரும் ஸஞ்சாரம் போகவேண்டியதவச்யமே?

ஸ்ரீ பெரிய அழகிய சிங்கருக்கு எந்த இடத்தில் பெருமாள் திருவடி ஸாதித்தாலும் பாதகமில்லை. ஆகையினால் வேண்டிய சௌகர்யங்களைப் பண்ணிக்கொண்டு ஸஞ்சாரம் பண்ண வேண்டியதவச்யம்" என்று மிகவும் கண்டிப்பாகவும் கம்பீரமாகவும் நிர்ப்பந்தமாகவு சொன்னார். அதன் பிறகு திவான்பகதூர்ஸ்ரீ ராகவய்யங்காரும் "ஸஞ்சாரம் புறப்படவேண்டியதே அவச்யம். ச்ரமத்தைக் பாராட்டக்கூடாதென்றும் உலகம் முழுவதும் அப்படியே அபிப்பிராயப்படுவதாயும்" சொன்னார். பிறகு ஸ்ரீபெரிய அழகிய சிங்கர் தமது சக்திக்குறைவை உத்தேசித்து ஸஞ்சாரம் போவது ச்ரமமாக இருக்கிறதென்றும் ஸாதித்தார்.

அதற்கு ஸ்ரீ ராகவய்யங்கார் அசக்தியோடு இவ்விடத்தில் எல்லாக்காரியங்களையும் நடத்துவது போல ச்ரமத்தைப்பொருத்துக்கொண்டாவது ஸஞ்சாரம் பண்ணவேண்டியது தான் அவச்யம் என்று சொன்னார்.

டாக்டர் ராஜன் அய்யங்காரும் அசக்தியைப்பார்த்து முடியாது ஸஞ்சாரம் பண்ணவேண்டியது தான் அவச்யம் என்று முடித்தார்.

பிறகு டாக்டர் ராஜன் இரண்டு அழகிய சிங்கர்களிடமும் தனித்தனிச்சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து திரும்பிப்போய் விட்டார். நிற்க, ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீசின்ன அழகிய சிங்கரிடம் சில குறைகளைச்சொல்லி அவர் ஆஸ்தானத்திற்கு அநர்ஹர் ஆகையினால் அவர் மடத்துக் காரியங்கள் ஒன்றையும் பார்க்காமல் வெளியே போகவேணு மென்று திருச்சி ஸப்கோர்ட்டில் வியாஜ்யம் போடப்பட்டிருப்பதை யாவருமறிந்திருக்கலாம்.

ஸ்ரீ அழகிய சிங்கர் சுமார்— 8 வருஷ காலங்களுக்கு முன் ஸ்ரீ பெரிய அழகிய சிங்கருக்கு திருமேனி ரொம்பவும் அசக்தியாக இருந்த ஸமயத்தில் ஸ்ரீ பெரிய அழகிய சிங்கர் அநேகம் பெரிய மனுஷ்யர்களுடன் ஆலோசித்து ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் மடத்தின் ஆஸ்தானத்திற்கு வேண்டிய எல்லா யோக்யதையுடனிருப்பதால் அவருக்கு சாஸ்திரப்படி ஸன்னியாஸம் மந்திரோபதேசம் முதலியவைகளைச்செய்துவைத்து அப்படி ஓர் பத்திரமும் எழுதி ரிஜிஸ்தரும்பண்ணி 8-வருஷங்களாக தம்முடன் ஸமானமாக அவருக்கு ஸகல மர்யாதைகளையும் செய்து வருகிறது யாவரு மறிந்த விஷயமே.

இப்படியிருக்க நீண்ட காலமாக அங்கீகரித்து விட்டு இப்பொழுது சின்ன அழகிய சிங்கருக்குக்குறைசொல்ல ஆரம்பித்து இருப்பது அநுசிதமே.

இந்த வியாஜ்யத்திற்கு பயந்து ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் — தமது ஸன்னியாஸ தர்மத்தை அனுசரித்து வைராக்யத்தினால் மடத்தை விட்டு விலகி விட நினைத்தாலும்- 8 வருங்களாக மடத்தில் ஆஸ்தானதிபதியாக இருந்து வந்தஒருவரை எவரோ ஒருவருடைய மனக்குறைவுக்காக இன்று ஒதுக்கி விடுவது, அவரை ஏற்படுத்தின ஸ்ரீ அழகிய சிங்கர் கௌரவத்திற்கும் மடத்தின் கௌரவத்திற்கும் தகாதாகையினாலும் இனி இந்த அர்கதியைப்பார்த்திருக்கும் ஒருபண்டிதன் இந்த மடத்தின் பட்டத்துக்கு வரமாட்டான். ஆகையினாலும் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் மடத்தை விட்டுப்போவது அநேகம் மடத்[illegible] இஷ்டமில்லாமலிருக்கிறது. ஆதலால் நமது ஸன்னிதி ஸம்பிரதாயத்தின் கௌரவத்தையும், சிஷ்யர்களின் விருப்பத்தையும் கவனித்து இந்த வ்யாஜ்யத்தை வாபீஸ் பெறுவதே உசிதமாகும்.

ஓர் மடத்து சிஷ்யர்.

## இளம்பள்ளியிலும் ஆலயப்பிரவேச சர்ச்சையா?

குடந்தையில் ஓர் ஹைஸ்கூல் மாணவர் கழகத்தில் தீண்டாதாரை ஆலயத்தில் நுழையச்செய்வது அவச்யமா? இல்லையா? என சர்ச்சை நடந்ததாம். தலைவர் தலைமை வகித்து தாம் இரண்டு தினங்களில் சர்ச்சை செய்தாராம். கடைசியில் அதிகப்படியான ஓட்டுகளால் தீர்மானம் நிறைவேறியதாம். என்ன விந்தை! ஆங்கில அரசாட்சியில் இந்தியாவில் பற்பல மதங்கள் இருப்பதைக்கண்டு ஆங்கிலக்கல்லூரிகளில் மதவிஷய போதனையை முற்றிலும் விலக்கி லௌகிகப்படிப்பையே ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அக்கல்லூரியிலும், மத வாஸனையே இல்லாத இக்கழகத்தில் இம்மத விஷயமான [illegible] வேண்டியதின் அவச்யம் என்ன? இதன் அவசியத்தை விளக்கி இதனால் சிலமதாபிமானிகளான பெற்றோர்களுக்கு உண்டாயிருக்கும் கசப்பை விலக்க இத்தலைவர் முன் வருவாரா? இப்பிரச்னை உலகில் பல வருஷங்களாக விருப்பு, வெறுப்புடன், விளங்கின்றது. இப்பொழுது என்ன விசேஷம்? பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களே, பெரும் பான்மையாக 15 வயதிற்குட்பட்டவர்களே. தனிமையாக இவ்விஷயத்தைப்போதிய அளவு சர்ச்சை செய்ய விசேஷ அறிவு அவர்களிடம் இல்லை. மதவாஸனையே இல்லாதவர்கள். அவர்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்யச்சொல்வதின் கருத்து என்ன? நமது வைதிக தர்மங்களை வெளியிடும் சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாண கிரந்தங்களும் அவைகளை அனுஸரித்துப் பல மகரிஷிகளால் செய்யப்பட்ட நிர்ணயங்களும் வியவஸ்தைகளும் நமது தேசத்தில் நசித்து விடவில்லை. சாஸ்திரங்களுக்கு அர்த்தம் சொல்ல வேண்டிய வழிகளை நிர்ணயித்த மீமாம்ஸா நியாயவிதிகளும் ஏராளமாக இருக்கின்றன. இவைகளில் மிகுந்த பிரயாசைப்பட்டுப்பரிசயம் செய்த மதாசாரியாளும், பண்டிதர்களும் இன்னும் ஏராளமாக விளங்கி வருகின்றார்கள். சாஸ்திர விஷயங்களில் ஒரு நிர்ணயம் செய்து வெளியிடுவதற்கு அவர்களுக்கு விசேஷ சக்தியும், பாத்யமும் இருக்கிறது. ஆகவே இனியாவது இது போன்ற மத விஷயங்களில் மாணவர்களின் அறிவைச் செல்லாமல் செய்வதுடன், உலக விஷயத்தில் விசேஷ பயிற்சியுடன் பிற்காலத்தில்மேன்மையடையக்காரணமான கல்வி சுத்தம், அடக்கம் முதலியவைகளில் திறமை பெறும்படி செய்து கொண்டு 60 ஆண்டுக்கு மேலாக கல்லூரிக்கு ஏற்பட்டிருக்கும் நற் புகழை நிலைநாட்டும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் மதாபிமானி

## மணக்கால்.

ஸ்கந்தசஷ்டி உத்ஸவம்:— லால்குடிக்கடுத்த நம்பிமாநகரம் என்னும் மணக்கால் கிராமத்தில் காயத்திரி நதியின் வடகரையில் வீற்றிருக்கும் ஷண்முகப் பெருமானுக்கு சென்ற வருஷம் போல் இவ்வருஷமும் நான்து வருஷம் ஐப்பசி-மீ 19வ முதல் ஸ்கந்தசஷ்டி உத்ஸவம் ஆரம்பித்து ஐப்பசி 24வ யன்று சூர ஸம்ஹாரமும், அடுத்தநாள் திருக்கல்யாணமும், அன்றிரவு ஆங்கரை பிரம்மஸ்ரீ விஸ்வநாத பாகவதர் அவர்களால் "பார்வதி கலியாணம்" ஹரிகதா காலக்ஷேபமும், மறுநாள் "விடையாற்று" உத்ஸவமும் வருணனது தொந்தரவில்லாமல் இனிது நடந்தேறியது.

தார்மிக உபந்நியாஸங்கள்:— பாஷ்ய, பாவஜ்ஞ ஸ்மிருதி பூஷண வாகூர் பிரம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்கள் 12—11—37 வெள்ளிக்கிழமை யன்று "கர்மானுஷ்டானம்", 13—11—37 யன்று "பக்தி"யைப்பற்றியும் கீதை, ச்ருதி, புராண மேற்கோள்களுடன் நன்கு உபந்யசித்தார். பின் ஸநாதனதர்ம பிரசாரக மதுரை M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள் "ஸநாதனதர்மம்" "பக்தி", "தர்மம்", "நமது முன்னோர்களின் பெருமையும் நமது தற்கால கடமையும்", "சந்தியாவந்தனத்தின் தத்வமும் பெருமையும்" என்ற விஷயங்களைப்பற்றி உருக்கமாக உபந்நியசித்தார்கள்.

புராண ப்ரவசனம்:— ஷை வெங்கட்டராம சாஸ்திரிகளைக் கொண்டு நாளது வருஷம் கார்த்திகை-மீ 1வ முதல் "ஸூதஸம்ஹிதா." ப்ரவசனம் ஆரம்பமாகி நடந்து வருகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் பக்திசிரத்தையுடன் கேட்டு ஆனந்தித்து வருகிறார்கள்.

[illegible] வைத்தீஸ்வரன், மணக்கால்


மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"
Mr. C. V. கணேசய்யர், B. A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால்செலவு வேறு] [விலை அணு 4—8—0.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஜனார்த்தன் அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.
ஒரே தடவையில் 2 புஸ்தகங்களுக்குமேல் வாங்குபவர்களுக்கு போஸ்டேஜ் இனும்.)

215210
சென்னை-600 008.

663





மார்சளியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்




## ஆழ்வார் திருநகரி.

### மந்திரிகளின் விஜயம்,

சென்னை மந்திரிகளில் ஒருவரான கனம் டாக்டர் ராஜன் சென்ற 10வ. இந்நகர்க்கு வரவே, கோயில் மரியாதைகளுடன் டிரஸ்டி மற்றும் முக்கியஸ்தர்களால் வரவேற்கப்பட்டார் ஆலய தர்சனம் செய்துகொண்டு உபய வேதாந்த கலாசாலையை யடைந்தார் கலாசாலை சூப்ரண்டெண்ட் ஸ்ரீமான் டி. கோவிந்தமய்யங்காரின் வேண்டுகோளின் பேரில் மாணவர்களுக்கு மந்திரி ராஜனால் வருடாந்திரப் பரிசுகள் வழங்கப்பட்டன. வித்வான் சிரோமணி டி. ராமகிருஷ்ணையங்காரால் ஸ்ரீ நம்யாழ்வார் வைபவத்தைப் பற்றி ஓர் உபந்யாசம் செய்யப்பட்டது, இந்நகர் பிரபல மிராசுதாரும் தேவஸ்தான கமிட்டி வைஸ் பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் டி. தெய்வச்சிலையங்கார், பி. ஏ. பி. எல். ஜில்லாபோர்டு பிரஸிடெண்ட் ராவ்பகதூர் ஐ. ஸி. எஸ் வான்பிள்ளை முதலிய பலபிரமுகர்களும் வந்திருந்தனர். முடிவில் டாக்டர் ராஜனால் ஓர்சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டதில் பிரஸ்தாபித்ததாவது:- எங்கும் கோயில் நிர்வாஹங்கள் சரியாயில்லை. திவ்யப்ரபந்தங்களின் தாத்பர்யங்களையும் வைஷ்ணவ சம்ப்ரதாய தத்வார்த்தங்களையும் யாவர்க்கும் தெரியும்படி செய்ய மடாதிபதி ஸ்வாமிகளும் வித்வான்களும் சிரமத்தை யெடுத்துக் கொள்ளவேணும். ஆகம சாஸ்திரங்களைப் பயில பாடசாலைகள் ஏற்படுத்துவதும் அவசியமாகும். தீர்த்தம் ப்ரசாதம் மரியாதை வகையருவுக்கு சண்டை வியாஜ்யத்தகாரில்லாமல் ஒழியவேண்டும். எல்லாவற்றிற்கும் மதாசாரியர்களும் மடாதிபதிகளும் கவனம் செலுத்தவேண்டும். கலாசாலை ப்ரசங்கம் முடிந்ததும் கோபுரவாசல் முன் டகையில் ஸ்ரீமான் ஏ. வி. திருவேங்கடத்தய்யங்கார் தலைமையில் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது கனம்மந்திரியால் காங்கிரஸ் மந்திரிகள் திட்டங்களைக் குறித்து உபந்யஸிக்கப்பட்டது முடிவில் மந்திரி ஸ்ரீவைகுண்டம் நோக்கிப் பயணமானர், கல்வி மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் முதல்வாரத்தில் இவ்விடம் வந்திருந்தார். கோயிலார்களால் வரவேற்று உபசரிக்கப்பட்டனர் ஏ. வி. டி. ஐயங்கார் தலைமையில் நடந்த கூட்டத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களும் ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினர்.

### மத உபந்யாஸம்.

காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீஉபவேவித்வான் அண்ணங்கராசாரியாரால் 22-11-37 முதல் ஒருமாதகாலம் பிரதிதினம் இரண்டு வேளையிலும் இந்நகர் ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான முன்மண்டபத்தில் ஆசார்ய ஹ்ருதய காலக்ஷேப உபந்யாஸம் செய்யப்படும்.

### வித்வான் காலமானர்.

ஸ்ரீ உ. வே. வித்வான் ஐயாகுட்டி சடகோபய்யங்கார் திடீரென்று காலஞ்சென்று விட்டது வருந்தத் தக்கதாம். உபய வேதாந்தவித்வான் மலைப்போத்தி ஐயங்கார் ஸ்வாமி பரமபதித்த வருத்தம் தீர்வதற்கும் முன்னரும் மாணமெய்தியதால் இந்நகர் மஹாஜனங்கள் துக்கிக்கின்றனர்.

### ஸம்ஸ்கிருத ஸ்கூல்.

மதுரூஸ் நாராயணமுதலி வீதியில் ஸ்தாபிதமாய் நடைபெற்றுவரும் ஸம்ஸ்க்ருத ஸ்கூலில் தர்க்கம் வியாகரணம்வரை சொல்லிக் கொடுக்கப் படுவதுடன் திவ்யப்ரபந்தம் வேத பாராயணமும் நடைபெற்று வருகிறது. காக்குமானி ஆதிகேசவலு செட்டியார் சாரிடிஸிலவில் மாணவர்களுக்கு சாப்பாடு வசதிகள் செய்யப்படுகிறது இந்தஸ்கூலில் தென்கலையார் மட்டுமே அனுமதிக்கப் பட்டு வந்தார்கள். தற்போது வடகலையார், ஸ்மார்த்த மத்வாள் யாவருமே சேர்த்துக்கொள்ளப் படுகிறுள். சாப்பிடப்ரியமில்லாத மாணவர்களுக்கு மாதம் 5அல்லது 6ரூ கொடுக்கப்படுகிறது. பெருமிதமான தர்மங்களையும் செய்துகொண்டு சம்ஸ்க்ருத ஸ்கூலையும் நடத்திவரும்படி சாரிடி ஸ்தாபகரின் உதாரமான போக்குபாராட்டத்தக்தாம் தாராளமான் மனோபாவத்துடன் ஸ்கூலில் யாவரும் சேர்த்துக்கொள்ளப் படுவதும் குறிப்பிடத்தக்கதாம்.

ந. வி. நி.

## மாயவரம்.

### ஸாமவேத பாராயணம்.

மாயூரக்ஷேத்திரத்தில் துலாமாஸத்தில்21வ. முதல் 30வரையில் நடக்கும் பிரும்மஉத்ஸத்தில் அபயாம்பிகாஸமேத மாயூரநாதசுவாமிக்குஸாமவேத பாராயணம்பிராம்மணபோஜனம் நடத்து கொண்டு வருகிறது. இந்தவருஷமும் ஈசுவரனுடைய அனுக்கிரஹத்தினல் ரொம்ப நன்ருக நடைபெற்றது. 16பேர்பாராயணம் செய்தார்கள். 9வது திருநாள் 10-வது திருநாள் 2 நாளும் திப்பிராஜபுரம் பிர்ம்மஸ்ரீ நாருயணசாமி சிரௌதிகள் வேதமஹிமை சிவசரித்திரம் உபன்யஸிக்கப் பட்டது. அநேகபேர்கள் சிரவணம் செய்தார்கள். பிறகு வேதபிராமணாளுக்கு சம்பாவனை செய்யப்பட்டது. ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் மஹோபதேசிக. பஞ்சாபகேச சாஸ்திரிகளை நாங்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் சாஸ்திரிகள் சிக்பா யஹாமாயூர நாதரை பற்றி ஆசீர்வாதம் அனுப்பி இருந்தார். மேற்படி ஆசீர்வாதத்தை பிர்மஸ்ரீ நாராயணஸாமி சிரௌதிகள் சொல்லிக்கேட்க எல்லோரும் திருப்தி அடைந்தார்கள். மேற்படி சிரௌதிகள் ஸநாதநதர்ம அபிமானியான திருக்கருகாவூர் மஹா ௱ ௱ ஸ்ரீ T. L சுப்பையர்வாளுக்கு பரமஸ்ரேயஸ் உண்டாகும்படி பிராம்மணர்களை பிரார்த்தித்துக் கொண்டு சபைமுடிவு பெற்றது. இந்ததர்மம் உபரி உபரி விர்த்தி அடையும்படி ஈசுவரனை பிரார்த்திக்கிறேம்.

சிவராமசாஸ்திரிகள்.
விசுவதீக்ஷதர்.

## விரிஞ்சிபுரம்.

### வேதபாராயணம்.

ஷடி க்ஷேத்ரஸ்மாணத்தினுலேயே புத்திர ஸந்தானங்களை உண்டாக்கக்கடலாய் விளங்கும் ஸ்ரீமரகதாம்பிகா ஸமேத ஸ்ரீமார்கபந்தீச்வர ஸ்வாமியின் கிருத்திகா பானுவாரோத்ஸவம் நாளது ஈசுவரஹூ கார்த்திகைமீ 18 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகும் உத்ஸவத்திற்கு சுமார் 10 வருஷங்களாக ஆஸ்திகர்களின் உதவியைக்கொண்டு நடந்து வரும் வேத பாராயணத்திற்கு பிராமண ஸமாராதனை சம்பாவனை முதலிய செலவுகள் நடைபெற வேண்டியிருப்பதாலும் பண்டு முதலிய மூலதனம் இல்லாமலிருப்பதாலும் இதைகண்ணுறும் ஆஸ்திக சிகாமணிகள் அவரவர்கள் தங்களாலியன்றளவு பொருளுதவி செய்து ஈச்வரானுக்ரஹத்தை முன்னிட்டு ஐஹிக ஆமுஷ்மிக பலசித்திகளை அடையும்படி கேட்டுக்கொள்கின்றனம்.

ராமசந்திர தீக்ஷிதர்.
பனங்குடி-நன்னிலம் தாலூகா.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbak[illegible]
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

ஸ

4 45

22

2-12-1937

215211

667

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஹூ கார்த்திகை-மீ 17உ 1937ஹூ டிஸம்பர்-மீ 2உ | ஸ 45

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்.
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

## ஸ்ரீஜகதீச சந்திர போஸ் மரணம்.

பிரபல விக்ஞான சாஸ்திர விமர்சகரான ஸ்ரீமான் போஸ் திடீரென்று காலம்சென்று விட்டார். இந்தியாவில் இவர் பெரியவிக்ஞான சாஸ்திரநிபுணராயிருந்து புதிய பலஆழ்ந்த தத்வங்களை கண்டுபிடித்திருக்கிறார். மரம், செடிகொடி முதலிய ஸ்தாவரபிராணிகள் 'உயிருள்ளவை யென்பதும்அவைகளுடன் மனிதன் பேசமுடியுமென்பதையும் இவர் கண்டுபிடித்தார். நமது தேசத்திய ரஸாயன சாஸ்திரங்களின்ம ஹிமையை வெளியிட்டவர் இவரே தேசமெங்கும்பெரியவருத்தம் ஏற்பட்டிருக்கிறது.

## இந்தியாவில் விமான வெடிகுண்டு பயம்.

### ஸர்க்கார் ஆலோசனை

இப்போது நாகரீகதேசங்கள் எங்கும் விமான மூலமாக வெடிகுண்டு எறிந்து நிரபாதிகளானஸ்திரீ புருஷர்களையும் கொலைசெய்யும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இந்தியாவிலும்எச்சமயத்திலும் எத்தேசத்தாராவது திடீரெனவிமமானத்தில் வந்துவெடிகுண்டுபோடலாம். இந்த புதிய விபத்து அங்குஏற்படாமல் தடுக்க என்னமுயற்சிகள் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி இந்தியாகவர்ன்மெண்டார் காராச்சியில் ஒரு மஹாநாடுகூடி ஆலோசித்து வருகிறார்கள்,

## ஸ்ரீயுத அரவிந்தகோஷ்

புதுச்சேரியில் யோகியாய் வாழ்ந்து வரும் ஸ்ரீமான்அரவிந்த கோஷ் வருஷத்திற்கு ஓறுநாள் ஜனங்களுக்குதர்சனம் கொடுக்கும் வழக்கப்படி சிலதினங்களுக்குமுன் வெளி வந்துதர்சனம் கொடுத்தார். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரபலமான அந்தஸ்திலுள்ள அநேகம் பேர்கள் சுமார் 400வரையில் அவரை தர்சிக்க வந்திருந்தனர். ஸ்ரீமான் கோஷ் ஒருவருடனும் பேசுவதில்லை.

## ஸ்திரீ முன்ஸீப்

### திருவாங்கூரில் புதுமை

திருவாங்கூர் ராஜ்யத்தில் ஸ்ரீமதி அன்னு சண்டி என்ற மலையாளஸ்திரீ வெகு நாளாக வக்கீல்தொழில் நடத்திவருகிறாள். இப்போது அவளை முன்ஸீப் கோர்ட்டில் ஜட்ஜியாக நியமித்திருக்கிறார்களாம். திருவாங்கூரிலேற்பட்டு வரும் விநோதங்களில் இதுவும் ஒன்று?

## சென்னை மாகாணத்தில் அபேதவாதப்பிரசாரம்.

சென்னையில் காங்கிரஸ் மந்திரஸபை ஏற்பட்டது முதல் அபேத வாதிகள் கட்டுபாடாகத் தங்களது பிரசாரத்தை அதிகம் நடத்தி வருகிறார்கள். வெளிமாகாணங்களிலிருந்து ஒருவர் பின் ஒருவராக வந்துகொண்டேயிருக்கிறார்கள். சென்னை மந்திரி சபையின் மனத்தைச் சோதிப்பதே இவர்கள் நோக்கமாம். தற்போது ஸ்ரீமான்ஜயப்பிரகாசநாராயணன் என்றவர் தென்இந்தியாவில் அபேதவாதமேசிறந்ததென எங்கும்பிரசாரம் நடத்திவருவதுடன் தொழிலாளர் கிளர்ச்சியை உண்டுபண்ணியும் மந்திரிசபையைக்கண்டித்தும் பேசிவருகிறார். இவர்அகில இந்திய அபேதவாதக் கார்யதர்சியாரவார்.

## திருவாங்கூரில் காங்கிரஸ்கிளர்ச்சி.

ஸ்ரீமான்பட்டாபிஸீதாராமய்யாவின் தலைமையில் திருவாங்கூர் காங்கிரஸ்மஹாநாடு நடைபெற்றது. அந்த ஸம்ஸ்தானத்தில் உடனே பொருப்பாக்ஷி ஏற்படவேண்டுமென்று அவர் பேசினார். பொருப்பாக்ஷிக்கிளர்ச்சியை அங்கு வலுப்படுத்த பிரபலமான கமிட்டி யொன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறதாம். கூட்டத்தில் இவ்விததீர்மானமும் நிறைவேற்றப்பட்டது:

## மந்திரிகளுக்கு முனிஸிபல் உபசாரம் கூடாது

சென்னை மந்திரிசபை ஒருஉத்தரவு பிறப்பித்திருக்கிறது. முனிஸிபாலிடிகளோ, ஜில்லா போர்டுகளோ மந்திரிகளுக்கு வரவேற்பளிப்பதும் உபசாரப்பத்திரம் வாசிப்பதும் வழக்கமாயிருப்பதைநிறுத்தி விடவேண்டுமென்று அதில்கூறப்பட்டிருக்கிறது. மந்திரிகள் இனிமேல் அத்தகைய உபசாரப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்களாம்.

## தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் மந்திரி களிடம்தூது.

தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் பிரதிநிதிகள் சிலர் சென்னையில்கனம் ரெவின்யூமந்திரியைக்கண்டு இந்தஜில்லாமிராசுதார் குறைகளைத்தெரிவித்துக்கொண்டார்கள். கனம் ராஜகோபாலாசாரியர், கனம் ராமநாதன் ஆகிய மந்திரிகளும் அச்சமயம்கூட இருந்தார்கள்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

குணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co,

மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே

கவனித்து வாங்கவும்.

போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## கோடி கன்னிகாதானம். ஸ்ரீ தாதாசார்யஸ்வாமீ.

சென்ற நூற்றுண்டின் கடைசியில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்களில் வெகு பிரஸித்த ஆசார்யாரக எழுந்தருளியிருந்த கோடி கன்னிகாதானம் ஸ்ரீ தாதாசார்யஸ்வாமியினுடைய அவதாரதின மஹோத்ஸவமானது கார்த்திகை அநுஷமாகிய இன்றையதினம் தென்னிந்தியாவில் காஞ்சீபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கும்பகோணம் முதலான அனேக இடங்களிலும் அனேக கிராமங்களிலும் அந்த ஸ்வாமியின் சிஷ்யர்களாலும் வம்சஸ்தர்களாலும் கொண்டாடப்படும். காஞ்சியில் "அய்யங்கார் உத்ஸவம்" என்ற பெயருடன் இந்த உத்ஸவம் வெகு பிரபலமாக நடக்கிறது.

இந்த ஸ்வாமியின் அவதார ஸ்தலமாகிய குடந்தையில் ஸௌராஷ்ட்ர தர்ம பரிபாலன கமிட்டியின் நிர்வாகத்திலுள்ள ஸ்ரீ வரதராஜ ஸ்வாமிகோயிலில் 10 தினங்களாக இந்த உத்ஸவம் விசேஷமாக நடந்து, இன்றைய தினம் வீதிப் புறப்பாடு, சாற்றுமுறை முதலியவை வெகு நன்றாக நடைபெற்றன.

தென்னிந்தியாவில் ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களுக்குள் ஸ்ரீ தாதாசார்ய ஸ்வாமியின் சரித்திரமானது தற்கால கவர்ன்மெண்ட் சரித்திர ஆராய்ச்சியாளர்களுடைய கவனத்தைப் பெற்றதாயிருப்பது விசேஷமாகும். இவர் விஜயநகரம் ஸம்ஸ்தான அரசனுக்கு ராஜகுருவாக இருந்து அந்த ஸம்ஸ்தான ராஜ்ய, மத விஷயங்களில் பெருத்த செல்வாக்குப் பெற்றிருந்தார். எல்லா மதஸ்தர்களாலும் கொண்டாடக்கூடிய மஹிமையையும் பெற்று விளங்கிவந்தார். வைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தரன்றி எல்லோருமே இவரிடம் மிகுந்த கௌரவம் வைத்தார்கள். ஆதலால் தென்னிந்திய சரித்திரக்காரர்கள் இவருடைய சரித்திரங்களை ஆராய்ச்சிசெய்து வெளியிடவேண்டியதாயிற்று.

சென்னை கவர்ன்மெண்டார் விஜயநகரஸம்ஸ்தான சரித்திரத்தை ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ள புஸ்தகத்தில் பெரும்பாலும் இந்த தாதாசார்ய ஸ்வாமிகளுடைய சரித்திரம் ரிகார்டு செய்யப்பட்டிருக்கிறது. தென் இந்திய ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களின் சரித்திரங்களை ஆராய்ச்சிசெய்ய நியமிக்கப்பட்ட ஸ்ரீமான் கோபிநாத ராவ் எம். ஏ. அவர்கள் இந்த தாதாசார்ய ஸ்வாமிகளுடைய சரித்திரத்தை சிலாசாஸனம், ஸர்க்கார் தஸ்தாவேஜிகள் காஞ்சீ முதலான கோவில்களில் காணப்படும் சாஸனங்கள் முதலியவற்றால் வெகுவாய் ஆராய்ச்சிசெய்து வெளியிட்டிருக்கிறார். அதிலிருந்து ஸ்ரீதாதாசாரியர்ஸ்வாமி தென்னிந்தியாவில் பெற்றிருந்த கௌரவமும் செல்வாக்கும் நன்கு விளங்குகிறது. இன்றைக்கும் காஞ்சீபுரம் போன்ற தென்னிந்தியக் கோயில் பலவற்றில் கல்வெட்டுகளில் ஸ்ரீதாதாசாரியருடைய கைங்கர்யங்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு அவர் செய்துள்ள நன்மைகளும் நன்கு விளங்குவன. இவருக்கு ஸமகாலத்திலிருந்த ஸ்ரீஅப்பைய தீக்ஷிதேந்திராளுடைய சரித்திரத்திலும் பெரும்பாலும் ஸ்ரீ தாதாசாரியருடைய பிரஸ்தாபம் காணப்படுகிறது. அது நமது ஆர்ய தர்மம் முதலிய பத்திரிகைகளில் ஏற்கனவே பிரசுரமாகியிருக்கின்றன. அந்த விவரத்திலிருந்து அக்காலத்தில் ஸ்ரீதாதாசாரியருக்கு ராஜஸ்தானங்களிலும், பொதுஜனங்களிடையும் இருந்துவந்த இணையற்ற கௌரவமும் செல்வாக்கும் வெளியாகக்கூடியது.

இவ்வாறு ஸர்க்கார் ஸம்பந்தப்பட்ட சரித்திரக்காரர்கள் ஸ்ரீ தாதாசார்யரைப் பற்றி விஸ்தாரமாகக் குறிப்பிடவேண்டிய ஆவசியகதை ஏற்பட்டதிலிருந்து, அவர் எவ்வளவு ப்ரஸித்தரா யிருக்கவேண்டுமென்பது, புலப்படும். வெறும் கதையாக இல்லாமல், இவர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்குச் செய்துள்ள உபகாரம் யாவற்றும் ஸர்க்கார் தஸ்தாவேஜிகளாலும் கோவில் கல்வெட்டு, அக்ரஹாரம், குளம் முதலியவைகளாலும் வெளிப்படக்கூடியவையாயிருக்கின்றன. இவ்வாறு அவர் பிரஸித்தி பெற்றிருந்ததற்கு, அவருடைய குலம், சீலம், ஞானம், அநுஷ்டானம், த்யாகம், கணக்கற்ற கைங்கரியங்கள் ஆகியவைகளே காரணம். இதனால்தான் அவர் தென்னிந்திய அரசர்களால் நன்கு மதிக்கப்பட்டதுடன் லக்ஷக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ஆசார்யாராக விளங்கினார்.

'தென்கலை வடகலை என்ற இப்போதைய இருபிரிவு வைஷ்ணவர்களுக்கும் ஆசார்யர்களாயும், ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தையே உலகில் பிரவிருத்திப்பித்தவர்களுமான ஜகதாசாரியர்களான, ஸ்ரீமன் நாதமுனி, ஆளவந்தார், பிள்ளான் போன்ற மஹான்களின் திருவம்சத்தில் இந்த தாதாசார்யஸ்வாமி அவதரித்தவர், ராஜஸ்தானங்களில் பற்பல ஸித்தாந்திகளுடன் இவர் வாதம் செய்து ஜயித்துவந்ததிலிருந்து இவருடைய ஞானஸம்பத்தை அளவிடலாம். பல கிரந்தங்கள் இயற்றியுள்ளார். வைதிக கர்மானுஷ்டானத்தில் மிகுந்த உறுதியுள்ளவர். அக்காலத்தில் வைஷ்ணவஸம்பிரதாயத்திற்கு ஏற்பட்ட தொந்திரவுகளை நிவர்த்திக்கத்தமது உயிரையும் லக்ஷ்யம் செய்யாமல் பாடுபட்டிருக்கிறார்

முக்கியமாக ஆழ்வார்கள் அருளிய தமிழ் பிரபந்தங்களுக்கு அக்காலத்தில் ஒரு வழியில் குறைவு ஏற்படும் போல் இருந்தது. அது சமயம் இவர் தமது மஹிமையாலும் செல்வாக்கினாலும் அந்தஆபத்தை நிவர்த்தித்து அந்த பிரபந்தங்களுக்கு ப்புத்துயிர் உண்டுபண்ணலானார் இதனால்இவர் "த்ராமிடாம்னாயயோகி" என்ற திருநாமம்பெற்றார். தென்னிந்தியாவிலுள்ள விஷ்ணு தேவாலயங்களில் இவர் செய்துள்ள கைங்கர்யங்களுக்கு கணக்கில்லையென்று சரித்த ரிகார்டுகளால் நிர்ணயிக்கப்படுகிறது. பல இடங்களில் அக்ரஹாரங்களை நிர்மாணித்திருக்கிறார், இவருடைய தர்ம கைங்கர்யத்தால் அமைக்கப்பட்டுள்ள குளங்களும் பலஉண்டு. இவருக்கு "அய்யங்கார்" என்ற திருநாமம் அஸாதாரணமாக அக்காலத்தில் வழங்கி வந்தது. இவர் நிர்மாணித்த குளத்திற்கு "அய்யங்கார் குளம்" என்று இன்றைக்கும் ஸ்ரீகாஞ்சியில் பெயர் வழங்கி வருகிறது.

இம்மஹான் கும்பகோணத்தில் அவதரித்தவராகையால் அச்சமயம் இவிடம் வந்திருந்த கர்னாடக அரசனின் விருப்பப்படி இவ்வூரில் "அய்யங்கார் வீதி" என்று இந்தஸ்வாமி இருந்து வந்த தெருவுக்கு இவர் பெயர் கொடுக்கப்பட்டு இன்றைக்கும் வழங்கி வருகிறது இம்மாதிரி அநேக கைங்கர்யங்கள் சரித்திரரிகார்டு மூலமாக வெளிப்படுகிறது. அநேக ஏழை குடும்பிகளுக்கு விதாஹ உதவி செய்துவந்ததற்காக "கோடி கன்னிகா தாதா" என்ற புகழும் பெற்றார்.

இந்த ஸ்வாமியின் திருத்தகப்பனருக்கு 'பஞ்சமத பஞ்ஜனம்' ஸ்ரீதாதாசாரியர் என்று திருநாமம், அவர் மஹா வித்வானும் அநுஷ்டாதாகவும், ஸ்ரீ வைஷ்ணவ மஹான்கள் பலரால் ஆசார்யாராக வரிக்கப்பட்டவராயும் எழுந்தருளியிருந்தார். 'ஷஷ்டி பிரபந்த நிர்மாதாவும் உபநிஷத் பாஷ்யகாருமான ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமி முதலிய மஹான்கள் இந்த பஞ்சமத பஞ்ஜன ஸ்ரீ தாதாசார்யஸ்வாமியினுடைய ஞான ஸம்பந்தம் பெற்றவர்களென்றால் அதை விட இவருடைய பாண்டித்யத்திற்கு வேறு ருஜு வேண்டியதில்லை யன்றோ? இன்று கூட வடகலை ஸ்ரீவைஷ்ணவர்களில் மிகப் பெரும்பாலோர் "தாதாசார்ய பாரங்குசௌ" என்று இந்த ஸ்வாமியை குருபரம்பரையில் அநுஸந்தித்து வருவதை பார்க்கிறோம். விச்வகுணாதர்சகாரரான ஸ்ரீவெங்கடாத்வரீ, இந்த பஞ்ச மதபஞ்ஜன தாதாசார்ய ஸ்வாமியை கர்னாடபூப்ருத்குரோ: என்பதால் ராஜகுருவென்றும், வேறு பல மஹிமை பொருந்தியவரென்றும் குறிப்பிடுகிறார்.

இம் மஹானுடைய குமாரராக அவதரித்த ஸ்ரீகோடி கன்னிகாதானம் ஸ்ரீதாதாசாரியரும் பிதாவைப்போலவே ஸகல அம்சங்களிலும் ஒப்புயர்வற்று ச்சிறந்து விளங்கி ஸ்ரீமன் நாதயாமுனிகளுடைய ஸத்ஸம்பிரதாயத்தை ஸம்ரக்ஷித்து பிரகாசிக்கும்படி உபகரித்த மஹானாகையால் இவருடைய அவதாரதின உத்ஸவம் ஸ்ரீவைஷ்ணவராக உள்ள ஒவ்வொருவராலும் கொண்டாடப்படக்கூடியதே.

ஸ்ரீவைஷ்ணவன்.

## ஸ்ரீ ராமாயண படனக்ரமம்

வஸிஷ்டமகரிஷி வாக்கியம்:—

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் ஸகல கார்யங்களும் அநுகூலமாகுமென்றும்இகபர ஸாதகம் உண்டென்றும் வால்மீகி பகவான் அருளிச்செய்திருக்கிறார்.

அதில் அநேக ரகஸ்யார்த்தங்களும் இருக்கின்றன. அதில் எவர் எவர்களுக்கு எந்தந்த காரியங்கள் ஆகவேண்டுமோ அந்தந்த காரியங்களுக்கு இதில் சொல்லப்பட்டிருக்கிற ஸர்க்கங்களும் சுலோகங்களும்பலன்களும் வாசிக்கப்பட்ட கிரமங்களும் வாசித்து நிறுத்தப்பட்ட கிரமங்களும் இதில் சொல்லி யிருக்கின்றன. இதைசிரத்தையுடன் வாசிக்கும் பக்ஷத்தில் எல்லா காரியங்களும் அநுகூலமாகுமென்றுரைக.—

வால்மீகி என்ற அமிர்த சஞ்சீவி மூலிகையை எவர்கள் பாராயணம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அவர்கள் மூன்று காலம் ஸந்தியாவந்தனம், ஜபம், ஆசாரம், பகவான் ஆராதனை, பாகவத பக்தி, ஸ்ரீ ராமாயணம் ஆசாரியரால் உபதேசம் பெற்று வாசித்துக்கொண்டு வருகிறவர், இந்த ஆறு சங்கதியும் அவர்களிடத்தில் இருக்கும் பக்ஷத்தில் இதில் சொல்லி யிருக்கும் 48 மூலிகைகளில் எந்தமூலிகை பாராயணம் செய்தாலும் பலிதமாகும் என்றுரைக.

டம்பர்களுக்கும், நாஸ்திகர்களுக்கும் இது பலிதமாகாது. வஸிஷ்ட பகவானே. அமிர்த மூலிகையானது எந்தந்த வியாதியைக்கேட்கும், என்ன காரியங்களுக்கனுகூலமென்று கேட்க, அதற்கு பதிலை அவரேகூறியிருக்கிறார். வியாதியினுடைய பேயர்.

(1) மண்டைவலி, (2) வயிற்றுவலி, (3) நீரிழவு, (4) கைகால் சாதாரண வீக்கம், (5) அன்னம் உட்செல்லாதது, (6) கட்டி, (7) மருந்து உள்செல்லாதிருத்தல் (8) ஏவுதல் (9) மருந்து உள் சென்று கேட்காமலிருத்தல் (10) கண்ணில் சதை வளர்ந்திருத்தல் (11) மாலைகண் தெரியாமலிருத்தல் (12) ருதுவாகாமலிருத்தல் (13) தேகம் வெளுத்திருப்பது இப்படிப்பட்ட அநேக கர்மவியாதிகள் மனிதர்களுக்கு உண்டாகும். இதுகள் மருந்துகளால் அநுகூலமாகாவிட்டால் அடியில் சொல்லியபடி மூலிகையினால் அநுகூலமாகும். அதிலும் நிவர்த்தியாகாவிட்டால் அந்தவியாதி நிவர்த்திடாகாதென்றுரைக.

மற்றவிஷயங்களாவன:—

1 வித்தை. 2 தனதான்யசம்பத்து. 3 குடும்பவிர்த்தி. 4 புத்திர சந்தானம். 5 பரிக்ஷை கொடுத்து தேறாமல் போகுதல். 6 வேலையிலிருந்து டிஸ்மிஸ் Dismiss ஆனது 7 பெரிய வேலை. 8 ஜெயிலிலிருக்கும் மனிதனை விடுதல் 9 தானிருக்குமிடத்திலிருந்து மாற்றுதல். 10 பெரிய மனுஷன் ஸ்நேகம். 11 வரும்படி விஷயம். 12 கண்ஸியம் உண்டாகுதல். 13 மோக்ஷம். இன்னம் அநேக விஷயங்கள் செய்து கொள்ளலாம் என்றுரைக.

---



## மிஸ்டர் எம். ஸி. ராஜாவின் ஆலயப்ரவேச மசோதா.

(நடாதூர், ஸ்ரீநிவாஸாசாரியர், தேவஸ்தானபோர்டு மாஜிகமிஷனர்.)

சமூஹம், மதம் இவற்றை பற்றிச் சட்டம் செய்வதானால் சம்பந்தப்பட்ட கக்ஷியினரோ அல்லது ஸமூஹமோ சம்மதித்து அவர்களிடையே அவ்வியக்கம் பரவி அங்கீகரிக்கப்பட்டு அதற்கு சட்டரூபமான ஸௌகரியம் வேண்டும் என்று ஒருமனதாக அபேக்ஷித்தால்தான், செய்துகொடுக்ககூடு மென்பது ஜனநாயக ஆக்ஷிமுறையின் அடிப்படையான கொள்கை. இம்மாதிரிதான் மேனாடுகளில் நடந்தேறுகின்றது. திருவாங்கூர் ஆலயப் பிரவேச அறிக்கை போன்றவை ஏதேச்சாதிகாரத்தின் திருவிளையாடல்களே. சமூஹமத சட்டங்கள் ஒரு சாராருடைய அனாதியான பாத்தியத்தைக் குலைப்பதற்கும் மதாசாரங்களில் பலவந்தமாகத் தலையிடுவதற்கும் செய்யப்படக்கூடாது. இந்த நியாயத்தை எவரும் மறுக்கமுடியாது; பஹிரங்கமாய் மறுத்ததுமில்லை.

நிற்க, மிஸ்டர் ராஜா அவர்களின் மசோதா இதற்கு நேர்விரோதமான தத்துவத்தைக்கொண்டதென்பது அதன் அநுபந்தமாகிய 'பிரயோஜனமும் காரணம்' (Objects and reasons) என்பதில் அவர் கூறுமவையிலிருந்தே வெளியாகின்றது. ஜாதிஹிந்துக்களின் கோவில்களுக்கு தங்களுக்கு இதுவரையில் பிரவேசிக்கும் பாத்தியம் இல்லையாகிலும் வேண்டுமென்று சிலகாலமாக, விலக்கப்பட்ட ஜாதித் தலைவர்கள் சிலர் தீவ்ரமாக கிளர்ச்சி செய்து வருகிறார்களாம். அதற்கு ஸாதகமாக ஜாதிஹிந்துக்களான சீர்திருத்தக்காரர்களும், அனாதி ஸம்பிரதாயங்களை உடைத்தெறிந்து, மதத்தினாலும் சட்டத்தினாலும் அச்சாதியாருக்கு ஏற்பட்டிருக்கும் தடைகளை நீக்க வேண்டுமென்று கடின கிளர்ச்சியில் சேர்ந்திருக்கிறார்களாம். ஆனால் அக்கோயில்களில் பிரத்யேக பாத்யதையை அனாதியாக அனுபவித்து வரும் ஜாதி ஹிந்துக்கள் எவ்வித மாறுதலையும் புதுமையையும் அநுமதிக்கிறதில்லையாம். கோவில்களின் மதாசாரங்களையும் சம்பிரதாயங்களையும் மீறிச்செய்யப்படுமவை இந்தியன் பீனல் கோர்டின்படி தண்டிக்கத்தக்க குற்றங்களாகுமென்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்வே, இந்நிலைமையில் சீர்திருத்த நோக்கமுடைய ஒரு தர்மகர்த்தா இஷ்டப்பட்டால் தன் கீழுள்ள கோவிலை எவர்க்கும் திறந்துவிட அநுகூலமாகும்படி ஒரு அநுமதிச்சட்டம்' (Permissive law) செய்யப்படவேண்டியது அவசியமாகும்! ஆனால் எவர்களுடைய பாத்யம் பறிமுதல் செய்யப்படுகிறதோ அவர்களுடைய சம்மதம் அவசியமே இல்லை போலிருக்கிறது நமது ராஜா அவர்களுக்கு! அதைப்பற்றி ஒரு எழுத்துக்கூட அவரெழுதவில்லை. ஆனால் அவர்களுக்கு இது சம்மதமில்லையென்பதையும் விளக்கி விட்டார்! இதற்கு பெயர் அநுமதி மசோதாவாம்!

அதாவது, ராமன் தனதுசொத்தை பீமன் கேட்டவுடன் கொடுத்துவிட வேண்டுமென்று நிர்பந்திக்க முடியாதாம்; ஆனால் ராமனிடமிருந்து அதைப்பிடுங்கி பீமனுக்கு கொடுக்க ஒரு நாகனுக்கு அநுமதி கொடுக்கச்சட்டம் செய்யலாமாம்! என்ன பொருத்தம்! என்ன நீதி!! ராஜா அவர்களின் கூற்று முஸோலினியின் பேச்சுப்போலிருக்கிறது. இத்தாலிக்கு நாடு வேண்டும்; காட்டு மிராண்டிகளான எதியோபியரை நாகரீகாக்க வேண்டியிருக்கிறது; ஆனதுபற்றி எதியோபியாவின் மீது படை எடுக்க வேண்டியதாயிருக்கிறது' என்றல்லவோ கர்ஜிக்கவேண்டியதாயிருக்கிறது! முஸலோனிக்கு ஆயுதபலமிருந்தது. நமது ராஜாவுக்குத்திருத்தக்காரர்களின் கிளர்ச்சி பலமாயிற்று. நமது காங்கிரஸ் சர்க்காரும் எதியோபியர் விஷயத்தில் 'சர்வ தேச சங்கம்' நடந்து கொண்டது போல் வைதீகர்பால் ஒருக்கால் செய்து விடுவார்களோ என்பது பின்னால் தெரியவேண்டும்! வைதீகஜாதி ஹிந்துக்களின் ஓட்டுகளையும் கொண்டே காங்கிரஸ் கக்ஷியினர் இப்போது அதிகாரத்திலிருக்கிறார்கள். என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

ஆனும் இவ்விஷயத்தில் கனம் முதல் மந்திரியும், காந்தி மஹாத்மாவும் கூறியிருப்பதைச் சற்று கவனிக்கலாம். ராஜாஜீ அவர்கள் சட்டசபையில் 'நிர்ப்பந்தமான ஆலயப்பிரவேசச்சட்டம் செய்யமுடியாது' என்றார். மஹாத்மாவும் சமீபத்தில் வெளியிட்ட பிரசுரமொன்றில் 'ஒரு கோவிலில் வழக்கமாய் வழிபடும் ஸவர்ணர்கள் சம்மதித்தாலன்றி இம்மாதிரி சட்டமொன்றைச்செய்வது சரியல்ல' என்றுவரைந்துளர். ஆயினும் '(ஹரிஜனங்களுக்குள்ள) தடைகளை நீக்கச்சட்டம் செய்யலாம்' என்று கனம் ராஜகோபாலாச்சாரியாரும், 'ஆனால் அனுமதிச்சட்டமொன்றை சென்னை அரசாங்கத்தார் நிறைவேற்றலாம்; நிறைவேற்றவும் வேண்டும்' என்று காந்தியவர்களும், கூட்டியேபேசியிருக்கிறார்கள். இவர்களின் கருத்து என்ன?

அனுமதிச்சட்டமென்பது பிறர் பாத்யங்களில் தலையிடாமலும், அவருக்கு விரோதமில்லாமலும், அபேக்ஷிக்கும் சாருக்கு சட்டமூலமான சௌகர்யமொன்றைச்செய்து கொடுப்பது. உதாரணமாய், பிரும்ம ஸமாஜம் என்றும் சீர்திருத்த மத கோஷ்டி பெருகினபோது அவர்கள் சீர்திருத்தக்கல்யாணங்களில் முனைந்தார்கள். அவர்கள் ஹிந்துமதஸம்பிரதாயங்களைப் புறக்கணித் தவர்களாதலால், அக்கலியாணங்களில் பிறந்த மக்களுக்கு வார்சுரிமை கொடுக்கச்சட்ட மொன்று அவசியமாயிற்று. பிரம்ம ஸமாஜக்கலியாணச்சட்டம் இயற்றப்பட்டது. அவ்வழியிலேயே பின்னர் கலப்பு விவாஹச்சட்டமும் உண்டாயிற்று. இது அநுமதிச்சட்டமென்றால் பொருந்தும். அஃதின்றி ஒருஜாதி ஹிந்து மைனரின் கார்டியன் இஷ்டப்பட்டால் அம்மைனருக்கு அவர் சீர்திருத்த விவாஹம் செய்து வைக்கலாமென்றால், அது அநுமதிச்சட்டமாகுமா? யாருக்கு எதற்கு அநுமதி கொடுப்பது? கடைத்தேங்காயை எடுத்துத்தெருப்பிள்ளையாருகுக் உடைக்க வழிபோக்கனுக்கு அநுமதியா?

கோவில் நிர்மாணம் பூஜா விதி முதலியவற்றை விதிக்கும் ஆகமசாஸ்திரங்களில் 'தர்மகர்த்தா'வுக்கு இடமில்லை. கோவில் ஊழியர்கள் தங்களுக்குப் பரம்பரையாய் வரும் விருத்திகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் ஊழியங்களைச் செய்து வருவதும், அவர்கள் சரியாய் செய்துவருகிறார்களா என்பதை அரசன் மேற்பார்வையாக கவனித்து வருவதும் தான் அனாதி நடப்பு. பிரிட்டிஷ் ராஜாங்கத்தில்தான் தர்மகர்த்தாவும் கம்மிட்டியுமேற்பட்டது. சென்னையின் பிரகிருத தேவஸ்தானச் சங்கம் ஏற்படும் வரையில் வடசர்க்கார் (தெலுங்கு) ஜில்லாக்களில் அர்ச்சகர்களேதான் தர்மகர்த்தாக்களாயுமிருந்து வந்தார்கள். மைனர் சொத்துக்களைக் காப்பாற்ற கார்டியன்போல் கோவில்களுக்கு தர்மகர்த்தாக்கள். எனவே இவர்களுக்குக் கோவிலின் மதஸம்பிரதாயங்களில் என்ன சம்பந்தம்? என்ன ஆதிக்யம்? அவற்றை இவர்கள் மீறுவது நம்பிக்கை துரோகமென்றும் குற்றமன்றோ? இதை அநுமதிக்கவாசட்டம் செய்வது?

ராஜா அவர்களின் இந்த மசோதாவை அநுமதிச்சட்டமென்பது உண்மைக்கு மாறுபாடென்றே தெளிவாகிறது. அதில் 5-ம் பிரிவின்படி இதுவரையில் அதைப்பற்றி நினைவே இல்லாதிருந்த வகுப்பினருக்கு மிக உருப்படியான ஒரு பாத்யதை உண்டாகுமாதலால் அம்மட்டில் அது அநுமதிச்சட்டம் தான். ஆனால் அனாதியாய் ஏகதேச பாத்யத்துடன் இருந்த ஜாதிக்களுக்கு அது நிர்ப்பந்தத்தை விளைக்கும் பறிமுதல் சட்டமே யாகும். இம்மசோதா நிறைவேறினால் பிறகு, 'விலக்கப்பட்ட ஜாதிகளைச் சேர்ந்த எவரும் ஜாதிக் கோவில்களில் பிரவேசித்துத் தொழுவது சட்டசம்மதமே ஆகக்கடவது. என்று அப்பிரிவு கூறுகின்றது. ஆனது பற்றி இதை ஆக்ஷேபித்தலோ தடுத்தலோ செய்பவர்கள் சிவில் கிரிமினல் இரண்டு தாப்புகளிலும் ஏற்படக் கூடிய சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாவார்கள். ராஜா அவர்களின் தீண்டாமைவிலக்கு மசோதாவின்படி அன்றோர் சிறை தண்டனைக்குள்ளாவார் என்பது வெளிப்படையாயே இருக்கிறது.

இம்மசோதாவின் 3-வது பிரிவானது கோவிலின் தர்மகர்த்தா தானேயாவது ஐம்பது ஓட்டர்களின் வேண்டுகோளின் மேலாவது வோட்டர்களை நாடி, பதிவான வோட்டுகளின் மெஜாரிடி பலத்தைக்கொண்டு கோவிலை விலக்கப்பட்ட வகுப்பினருக்குத் திறந்துவிட், அவருக்கு அநுமதி கொடுக்கிறது. இவர் தீர்மானம் பின்னர்வரும் டிரஸ்டிகளையும் ஸேவார்த்திகள் அனைவரையும் கட்டுப்படுத்துமாம். என்ன தருமம்! என்ன நீதி! மதமென்பது வோட்டின் மீது நிற்பதா! வோட்டர்கள்தான் யார்? மசோதாவில் இதற்கு பதில் இல்லை. கோவிலிருக்கும் ஊரார் மட்டும் வோட்டர்களாக மாட்டார் என்பது நிராபேக்ஷம். இப்படி ஓட்டுக்கூட்ட முயல்வது பிரயோஜனமற்ற காரியம் என்பதும், சில வருஷங்கக்கு முன் குருவாயூர் 'சத்யாக்ரஹ' அமளியின்போது காந்தி மகாத்மாவே நடத்திப் பார்த்த பிரயத்தினங்களிலேயே தெளிவாய் விட்டது. முன்னரே டில்லி சபையில் இம்மசோதா கொண்டுவரப்பட்டபோது ராஜப்ரதிநிதி அவர்கள் நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் அதைப்பற்றி அபிப்பிராயங்களை வரைவழைத்துப் பார்த்து, அதற்கு எங்கும் தீவிரமான எதிர்ப்பிருப்பதைக் கண்டார். சபையும்மசோதாவை நிராகரித்து விட்டது. திருத்தக்காரர்களின் பகீரதப் பிரயத்னமும் பலிக்கவில்லை. இப்போது நாட்டில் அதே நிலைமைதான் உள்ளது. மேலும் சென்னை மாகாணக்கோவில்களின் நிலைமை தனிப்பட்டது. அவற்றை ராஜா அவர்களின் மசோதாபோன்ற புயற்காற்றுகளுக்கு பலியாக்கக் கூடா.

தேர்தல்களின்போது காங்கிரஸ் தலைவர்கள் ஆலயப்ரவேசத்தைப்பற்றி குறிப்பாய் கேழ்க்கப்பட்டார்கள். அவர்களும் அது தேர்தல் விஷயமொன்றல்லவென்றே விடை அளித்தார்கள். இதை காங்கிரஸ் சர்க்கார் மறக்கமாட்டார்கள் என்று நம்புவோம்! வாக்காளருக்கு நம்பிக்கைத் துரோஹமெனலாம் படியில் நடந்துகொள்ளாமலிருப்பார்களாக! இம்மசோதா நிறைவேறினால் அதனால் எண்ணிறந்த தீங்குகள் விளைந்துவிடும் என்பது திண்ணம்! இதை சபைக்குள்ளேயே அநுமதிக்கக் கூடாது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

ஈஸ்வர-ஹு கார்த்திகை-மீ 17௨

## ஸமஷ்டியை ஏன் எதிர்க்கவேண்டும்?

புதிய ராஜிய அமைப்பின் ஒரு பாகமாகிய மாகாண ஸ்வய ஆக்ஷி அமுலுக்கு வந்துவிட்டதால் மற்றொரு பாகமாகிய ஸமஷ்டித் திட்டம் மத்ய கவர்ன்மெண்டில் ஏற்படவேண்டியது அவச்யமாகிவிட்டது. ஆகையால் கனம் வைஸ்ராய் ஸமஷ்டியை எவ்வளவு சீக்கிரத்தில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியுமோ அவ்வளவு முயற்சியையும் செய்துவருகிறார். சுதேச ஸம்ஸ்தானாதிபதிகளைத் திருப்திசெய்யவேண்டிய ஸங்கடத்தாலேயே இத்திட்டம் ஏற்படத் தாமதம் உண்டாகியிருக்கிறது. இதைத் தடுக்க ராஜப்பிரதிநிதி தமது செல்வாக்கை உபயோகித்து வருகிறதாகத் தெரிகிறது.

இச்சமயம் காங்கிரஸ்காரர்கள் ஸமஷ்டியை எதிர்த்துப் பெரிய உத்கோஷம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் இது பலமாக இருக்கிறது. ஆனால் ஹிந்து மஹாஸபைத் தலைவர்களான, டாக்டர் மூஞ்சே, பாய் பரமானந்தர் போன்ற பிரமுகர்களும் ஹிந்து மஹாஸபை கார்யக்கமிட்டியும் ஸமஷ்டியை ஆதரித்து நிற்கிறார்கள். அத்திட்டத்தால் நன்மை விளையுமென்று அந்தக் கக்ஷியார் நம்புகிறார்கள். ஆதலால் ஸமஷ்டியை சீக்கிரத்தில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று ஹிந்துமஹாஸபை விரும்புகிறது. ஹிந்து ஸபையோ அதன் தலைவர்களோ, காங்கிரஸையும் அதன் தலைவர்களையும்விட தேசாபிமானத்தில் சிறிதும் குறைந்தவர்களல்ல.

ஆயினும், காங்கிரஸ் ஸமஷ்டியை எதிர்ப்பதும், ஹிந்து ஸபை அதை ஆதரிப்பதும் எதனால்? இது ஒரு விசித்ரமான நிலையல்லவா?

காங்கிரஸ், ஸமஷ்டியை எதிர்ப்பதற்குப் பல காரணங்களைச் சொல்லிவருகிறது. முதலாவதாக ஸமஷ்டி சட்டஸபைக்கு நேர்முகமாக எலெக்ஷன் இல்லாமல் சட்டஸபை மூலமாகத் தேர்தல் நடத்துவது, சுதேச சம்ஸ்தானப் பிரதிநிதிகளை எலெக்ஷன் மூலம் பொறுக்காமல் அரசர்களே பொறுக்கியனுப்புவது, மத்ய கவர்மெண்டிலும் இரட்டையாட்சி ஏற்பட்டிருப்பது, போன்ற பல காரணங்களைக் காட்டி காங்கிரஸ் அதை எதிர்க்கிறது. இவ்வளவு தெரிந்தும் ஹிந்து ஸபை அதை ஆதரிக்கும் ஏன்?

வகுப்புத் தீர்ப்பினாலும், மாகாண சட்டஸபை அமைப்பினாலும் சில மாகாணங்களில் ஹிந்து ஸமூஹத்தின் பாத்யம் பாதிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லீம்களுக்கு மெஜாரிடி ஏற்படும்படி செய்திருக்கிறது. இதனால் ஹிந்து ஸமூகத்தின் நலம் பாதிக்கப்படுமென்ற அச்சம் ஹிந்து ஸபைக்குத் தோன்றியிருக்கிறது. வகுப்புத் தீர்ப்பை மாற்ற அது கிளர்ச்சிசெய்வதும் தெரிந்ததே. இந்த விஷயங்களில் காங்கிரஸ், ஹிந்து ஸமூஹத்தின் நன்மையைப் புறக்கணித்து முஸ்லீம்களுக்குச் சலுகைகாட்டுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறது. வகுப்புத் தீர்ப்பு விஷயமாக காங்கிரஸ் போட்டுவரும் வேஷமே இதற்குப் போதிய ருஜுவாகும்.

ஸமஷ்டி ஏற்பட்டால் காங்கிரஸானது முஸ்லீம்களுக்குப் பரிந்துபேச இடமில்லாமல் போய்விடும். ஸமஷ்டி ஸபையில் ஹிந்துக்களின் பிரதிநிதிகளே அதிகமாயிருப்பார்கள். மாகாண சட்டசபைகள் மூலமாகவரும் பிரதிநிதிகளைத் தவிர, சுதேசஸம்ஸ்தான பிரதிநிதிகளாக வருகிறவர்களும் இருப்பார்கள். இந்தியாவில் சுதேசஸம்ஸ்தானங்கள் பெரும்பாலும் ஹிந்துக்களுடையதே. மஹம்மதிய ஸம்ஸ்தானங்கள் வெகு சிலவே. ஆதலால் சுதேச சம்ஸ்தான பிரதிநிதிகளைச்சேர்த்தால் ஸமஷ்டிசபையில் ஹிந்துக்களின் பிரதிநிதித்வம் அதிகமாயிருக்கும், இது காங்கிரஸுக்கும், முஸ்லீம்களுக்கும் அநிஷ்டமல்லவா? முஸ்லீம் நண்பனாக நடிக்கவிரும்பும் காங்கிரஸ், ஸமஷ்டியை எதிர்ப்பதற்கு இதுவும் ஒரு ரஹஸ்யக்காரணம். முஸ்லீம் உதவியை கொண்டல்லவோ காங்கிரஸ், ஸ்வராஜ்யம் வாங்கிக் கொடுக்கப்போகிறது?

ஹிந்து ஸபை ஸமஷ்டியை ஆதரிப்பதற்கு காரணம் இப்போது தெளிவாகிறது. மாகாண ஸ்வய ஆக்ஷி மூலம் ஹிந்து ஸமூகத்துக்கு ஏற்பட்டுள்ள தீமையைத் தடுக்க ஸமஷ்டி ஒரு ஸாதனமென்று ஹிந்துசபைத் தலைவர்கள் கருதுகிறார்கள். இந்தியாவில் ஹிந்து ஸமூகத்தின் க்ஷேமம் பெருகவேண்டுமானால் இப்போதைய ஸமஷ்டி அவச்யமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

ஸ்மஷ்டியில் ஹிந்துக்களின் மெஜாரிடி ஏற்படுமென்ற எண்ணத்தாலேயே ஜின்னா கோஷ்டியார் அதை எதிர்க்கிறார்களேயல்லது ஸ்வராஜ்யம் வரவில்லையே என்கிற காரணத்தாலல்ல. முஸ்லீம் ஸமூஹத்திற்கு திருப்திகாமான வழியில் ஏதாவது சிறிய மாறுதல் செய்துவிட்டால் உடனே அவர்கள் ஸமஷ்டியை ஆதரிக்கத் தயார். அப்போது காங்கிரஸைப்போல் அர்த்தமில்லாமல் எதிர்ப்புகோஷம்செய்ய முஸ்லீம்கள் முன்வரமாட்டார்கள். தங்கள் ஸமூஹ நலத்திலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்களல்லவா?

காங்கிரஸோ ஜனப்பிரதிநிதிஸபை கூட்டி ஸ்வய நிர்ணய ஸ்வதந்திரப்படி தாமே இந்தியாவிற்கு ஏற்ற ராஜீய அமைப்பைத் தயாரிக்கப்போகிறதாம். ஆகையால் அந்நியர்கள் ஏற்படுத்திய ஸமஷ்டியை ஏற்கப் போவதில்லையென்று கோஷம்போட்டு வருகிறது. இது ஒரு ஸ்வப்பன உலகத்தில் இருந்து பேசுவதாகவே இருக்கிறது. ஐரோப்பிய தேசங்களில் தற்போது நியாயம், ஸத்யம், பூததயை முதலியவை மறைந்துவிட்டன. வல்லான் வகுத்ததே சட்டமாயிருக்கிறது. ஆயுதபலம் பொருந்தியவன் என்ன அநியாயம் செய்தாலும் கேள்விமுறை கிடையாது. இந்த நிலைமையில் காங்கிரஸ் எந்த தேசத்தாருடைய ஆதரவைக் கோரமுடியும்? பிரிட்டன் யாருக்குப் பயப்படவேண்டும்? ஆகையால் காங்கிரஸ் வீணாக வீரம் பேசுவதில் பயனில்லையென்பது ஹிந்துஸபைத் தலைவர்களின் எண்ணமாயிருக்கிறது. தற்போது கொடுத்துள்ள மாகாண ஸ்வ ஆக்ஷியை ஒரு அறிக்கைமூலம் ரத்துசெய்து, இந்திய நிர்வாஹத்தை ஒரு நிமிஷத்தில் பிரிட்டிஷார் கைப்பற்றிவிடச் சட்டத்தில் பூர்ணமாக இடமிருக்கிறது. அப்போது காங்கிரஸோ வேறு ராஜீய சபைகளோ செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆதலால் கிடைத்த ஸந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு நன்மை அடைவதே புத்திசாலித்தனமென்று நினைப்பவர்கள் இருப்பது ஸஹஜமே.

மாகாண ஸ்வய ஆக்ஷியை எதிர்த்தபோதிலும் காங்கிரஸ்வாதிகள் அதை ஏற்று நடத்த முன்வரவில்லையா? அதுபோல் ஸமஷ்டியையும் ஏற்று நடத்தலாமென்பது ஹிந்துஸபை தலைவர்களின் கருத்து. ஹிந்து ஸமூஹ க்ஷேமத்தில் சிரத்தையுள்ளவர்கள் ஹிந்து ஸபைத்தலைவர்களின் வேண்டுகோளை ஆலோசித்துப்பார்ப்பது விரும்பத்தக்கதல்லவா?

## ஸ்ரீ அஹோபில மடத்தில் டாக்டர் ராஜன் பேசியது.

ஓர் மறுப்பு.

சென்றவார ஆர்யதர்மத்தில், ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் டாக்டர்ராஜன் பேசியவிஷயம் பிரசுரமாயிருக்கிறது.

டாக்டர் ராஜன் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு வந்தது அந்தரங்கமென்றும் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் ரஹஸ்யமாகப்பேசினாரென்றும் அவைகள்பேபரில்பிரசுரிப்பதற்காக இல்லைஎன்றும், டாக்டர் ராஜன்பேசியதாக பிரசுரிக்கப்பட்ட விஷயங்கள் ஸரியானவையல்லவென்றும், அவை ஆதாரமற்றதென்றும், ஸ்ரீ ஸ்வாமிகளை யாத்திரை புறப்படும்படியாகச் சொல்லவில்லையென்றும், அவர் கோர்ட்டிலுள்ள வியாஜ்யத்தைப்பற்றிப் பேச மறுத்தாரென்றும் ராஜன் விஜயசம்பந்தமான ஏற்பாடுகளையெல்லாம்தாமே செய்ததாகவும் துங்கம்பாக்கம் ஸி. ஸி ஸி. பாங்க் மானேஜர் ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்கார்நமக்கு அறிவிக்கிறார்.

ஒரு திருத்தம்.

சென்றவாரம் ஆர்யதர்மத்தில் ஒரு நிருபர் அஹோபிலமடம் ஸ்ரீ சின்ன அழகிய சிங்கர் விஷயமாக ஏற்பட்டுள்ள வ்யவஹாரத்தைப் பற்றி எழுதியுள்ள நிருபத்தில், வ்யாஜ்யத்தின் வாதி மைலாப்பூர், கிருஷ்ணமாசார்யர் என்றுஎழுதியிருந்தது பத்திரிகையில் அச்சாகாமல் விட்டுப்போய்விட்டது.

## அங்குளீயப்ரதான கட்டம்.

சென்ற 5—4—37முதல் திருச்சி கீழ ஆண்டார் வீதியில் விளங்கும் மூலைப்பிள்ளையார்கோவிலில் திருவையார் பிரம்மஸ்ரீ வித்வத் மணி ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் நடைபெற்றுவரும் ஸ்ரீமத்வால்மீகி ராமாயண உபன்யாஸத்தில் நாளது ஈச்வர-ஹு கார்த்திகை-௨ 20௨ 5—12—37 ஞாயிற்றுக்கிழமை இரவில் கணையாழி கொடுக்கும் கட்டம் நடைபெறும். ஆஸ்திகர்கள் அனைவரும் வந்து கதாச்ரவணம் செய்து ஸ்ரீ ஸீதாராம கிருபைக்குப் பாத்ரர்களாகக் கோரப்படுகிறது.

கே. ஆர். வி.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

தாடபள்ளிக்கூடம்.



# அகில பாரத வர்ஷீய வித்வத் பரிஷத்.

## 25—12—37ல் சென்னையில் ஆரம்பம்.

### ஸபாதிகாரிகளின் அறிக்கை.

இந்தியாவின் புதிய ராஜீயத்திருத்தத்தை அநுஸரித்து ஏற்பட்டுள்ள மாகாண ஸ்வய ஆக்ஷியில் சட்டஸபைகள் பிரஜைகளின் ஸமூஹ, தர்ம விஷயங்களில் கூட பிரவிருத்திக்குமானால் அதைத் தடைசெய்து வைக்க ஸரியான பாதுகாப்பு சட்டமூலமாக ஏற்படவில்லையென்று நினைக்கிறோம். சட்டஸபைகள் ராஜீயக்கிளர்ச்சியின் ஸௌகர்யத்தால், புதிய மதவாதிகளால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கின்றன வென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இப்படியிருக்க தர்ம ஸ்வரூபத்தை மாற்றவேண்டுமென்கிற அந்த நவீன மதவாதிகள் தர்ம விருத்தமாயும், தங்களுக்கு இஷ்டமாயுமுள்ள ஒன்றை சட்டஸபைகளில் நிறைவேற்றி வைக்க ஸௌகர்யமுள்ளவர்களாயிருந்தும் அப்படிச் செய்ய முன்வராததற்கு, பொதுஜனங்களுடைய கிளர்ச்சி ஏற்படுமென்கிற பயமே காரணமாயிருக்கிறது. அந்தப்போது ஜனக்கிளர்ச்சியை அடக்கவும், தங்கள் புதிய மதம் சாஸ்திரீயமென்று காட்டவும் வெகுவாக முயற்சி செய்து வருகிறார்கள். இதற்கு அடையாளமாகவே சென்னையில் டிஸம்பர் மாதத்தில் ஓர் பண்டித பரிஷத் என்ற பெயரால் அவர்கள் செய்யமுற்பட்டிருக்கும் பிரயத்னத்தை நாம் எடுத்துக் காட்டுகிறோம். அந்த பரிஷத், புதிய மதவாதிகளாலேயே கூட்டப்படுகிறது. அந்த பரிஷத்திற்கு, காலநீதியை அநுஸரித்து தர்மத்தை மாற்ற விரும்பும் முற்போக்கு சீலர்களான வித்வான்களே விஷய விசாரம் செய்ய அழைக்கப்படுவார்களாம்.

இதனால், சாஸ்திரவச்யர்களான ஸாதாரண ஜனங்களிடையில் மனதிற்குப் பிரமம் ஏற்படுவதாயிருப்பதால் இப்போது விசாரிக்கவேண்டியவைகளும், அறிய வேண்டியவைகளுமான விஷயங்களின் உண்மையை சாஸ்திர தத்வமறிந்த பண்டிதர்களைக் கொண்டு உடனே வெளிப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் மதராஸ் வாஸிகளான தீர்க்காலோசனையுள்ள தார்மிகர்கள் சேர்ந்து சென்னையில் "அகில பாரத வர்ஷீய வித்வத் பரிஷத்" ஒன்று தனியாக டிஸம்பரில் கூட்டப்படுகிறது,

இந்த பரிஷத்தின் கூட்டமானது டிஸம்பர் 25௨ ஆரம்பித்து 27௨ முடிய நான்கு தினங்கள் வரையில் நடைபெறும். இதற்கு இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் ஏராளமாக வித்வான்கள் அழைக்கப்படுவார்கள்.

பரிஷத்தில் விசாரிக்கவேண்டிய விஷயங்களும் அடியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நவீந மதவாதிகள் அறிய விரும்பும் விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இந்த விஷயங்களில் வித்வான்களுடைய பிரமாண யுக்தி பூர்வமான விசாரம் எங்களுக்கு அவசியமாயிருப்பதால் வித்வான்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை கிரந்த ரூபமாக எழுதியனுப்பி அநுக்ரஹிக்கவேண்டுகிறோம். கிடைத்த அபிப்பிராயங்களை பிறகு பரிஷத்ரிபோர்டில் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். அதற்கு அநுமதியும் வேண்டுகிறோம்.

சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களெல்லாம் டிஸம்பர் 10௨ வரையில் காசி, மாதோராய், 10 நெ. என்ற விலாஸத்திற்கும், அதன் பின் லலிதாஸதனம், ராயப்பேட்டை மதராஸ் என்றவிலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

பரிஷத் ஸம்பந்தமான மற்ற கடிதப் போக்கு வரத்துக்களெல்லாம் ராவ் ஸாஹிப் என். நடேசய்யர், அட்வகேட் மதுரை, என்ற விலாஸத்திற்காவது, ஸ்ரீமான் டி. எஸ். ராமடை, மதராஸ் என்ற விலாஸத்திற்காவது எழுதப்படவேண்டும்,

இங்ஙனம்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அநந்தகிருஷ்ணசாஸ்திரி. ஸ்ரீ ராஜ ராஜேச்வர சாஸ்திரி த்ராவிட, காசி. ஸ்ரீ தேவநாயகாசாரிய காசி. ராவ்பஹதூர் ஸதாசிவமாதவராவ் பாண்டே, மாஜி ஜில்லா ஜட்ஜ் நாகபூர். டி. எஸ். ராமஸ்வாமி அய்யர் சென்னை.

### வித்வத் பரிஷத்தில் விசாரிக்க வேண்டிய விஷயங்கள்.

கேள்விகள்.

(1) தர்மஸ்வரூப நிர்ணயத்தில் யுக்திக்கு ஸ்வதந்திரமாகபிராமாண்யம்உண்டா? இல்லையா?

(2) உண்டானால் சாஸ்திரங்களுக்கும் யுக்திக்கும் விரோதம் ஏற்படுகையில் எதற்கு பிராமாண்யம்?

(3) ஆத்மதுஷ்டி என்பது சாஸ்திர விருத்தமாயிருந்தால் பிரமாணமாகுமா? ஆகாதா?

(4) பிரமாணமாயிருந்தால் என்ன மாதிரி வியவஸ்தை ஆதரிக்கத் தக்கது?

(5) தேசகால நிலைமைக்கேற்றபடி சாஸ்திரங்களுடைய மாறுதல் செய்வதில் எவருக்காவது அதிகாரமுண்டா? இல்லையா?

அரசனால் தர்மசாஸ்திர மாறுதல் செய்ய முடியுமா?

(6) ராஜநீதியை அநுஸரிக்குமிடத்தில் தர்மசாஸ்திரங்களின் ப்ராமாண்யத்தை ரக்ஷிப்பது அவச்யமா? இல்லையா?

(7) சாஸ்திர அர்த்தங்களை நிர்ணயிப்பதில் மீமாம்ஸக வழியைப் பின்பற்றுவதா? அல்லது இதிஹாஸ ரீதியையா?

மேற்கண்ட விஷயங்களும் தர்க்கப் பிரமாணத்தைக் கொண்டு வாதரீதியில் விசாரிக்கப் பட வேண்டியவை. கேள்வி பதில் முறையிலும் விவாதிக்க அவஸரம் கொடுக்கப்படும்

கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றியகேள்விகளுக்கு சுருதி-ஸ்மிருதி இதிஹாஸ புராணவசநபலத்தைக் கொண்டு விசாரம் நடைபெறும்.

### ஸ்பர்சாஸ்பர்ச விசாரம்.

(1) வர்ணங்களும், அநுலோம பிரதிலோம ஸங்கரஜாதிகளும் குணகர்மங்களால்ஏற்பட்டவையா? அல்லது பிறப்பால் ஏற்பட்டவையா!

(2) தீண்டத்தகாத ஜாதிகளுக்குத் தீண்டாமை என்பது பிறப்பாலா? செய்கையாலா?

(3) இப்போது காணப்படும் தீண்டாதார் சாஸ்திரங்களில் குறிப்பிட்டுள்ள தீண்டாத ஜாதியைச் சேர்ந்தவர்களா? இல்லையா?

(4) தீண்டாதவர்கள் பொதுஸ்தலங்களில் பிரவேசிக்கும்விஷயத்திலும், தேவாலயத்தில் பிரவேசிக்கும் விஷயத்திலும் பொதுக்கிணறுகளில் ஜலம் எடுக்கும் விஷயத்திலும் சாஸ்திர வியவஸ்தை எத்தகையது?

### சுத்தி விஷயம்

1. விதிப்படி மிலேச்சர்களாக்கப்பட்டவர்களை பிராயச்சித்தாதிகளால் சுத்தி செய்து மறுபடி அவர்களது பூர்வஜாதி தர்மங்களில் ஸம்பந்தப்பட அதிகாரம் கொடுக்கலாமா! முடியதா?

2. முடியுமானால் அதற்கு என்ன வியவஸ்தை?

### விவாஹம்

1. பிராம்மணாதிகளில் இருக்கும் உள் வகுப்பார் பரஸ்பரம் விவாஹம் செய்து கொள்வது சாஸ்திர ஸம்மதமா? இல்லையா:

2 அஸவர்ண விவாஹம் சாஸ்திர ஸம்மதமா? அன்றா?

### ஸம்ஸ்காரங்கள்

1. ஸம்ஸ்காரங்களை விடுவதோ, குறைப்பதோ மட்டும் காப்பாற்றி, வர்ணாச்ரமாதி விசேஷ தர்மங்களை விடுவதோ முடியுமா? முடியாதா?

2. விசாரிக்கவேண்டிய வேறு பல விஷயங்களும் உண்டு.

### JUDGES.

1. ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், கோவர்த்தனமடம், பூரி,
2. ஜெகத்குரு ஸ்ரீ கோகுல்நாத்ஜி ஸ்வாமிகள் பாம்பே.
3. ஜெகத்குரு ஸ்ரீகுருகல், காமலேஸ்வரம் பேட்டை, மதராஸ்.
4. ஜெகத்குரு ஸ்ரீ உத்தராதிமடம், திருப்பதி.
5. ஜெகத்குரு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாமிகள், அஹோபிலமடம்.
6. மகாகனம் தங்கிய பரீக்ஷித் ராஜா அவர்கள் இளவரசர், கொச்சி.
7. ஜெகத்குரு ஸ்ரீ சுமதீந்திரமடம்.
8. ஜெகத்குரு ஸ்ரீ வியாசராயமடம், சோசலே, மைசூர்.
9. மஹாமஹோபாத்யாய வித்யாவாசஸ்பதி S. குப்புசாமி சாஸ்திரிகள், மதராஸ்.

### OBSERVERS.

1. ஸ்ரீ மன்மத நாத் முகர்ஜீ மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ், கல்கத்தா. 2, மகா-௱-ஸ்ரீ கன்யாலால், அலஹாபாத் ஹைகோர்ட் ஜட்ஜி.
3. ஸ்ரீயுத வஸந்தகுமார சாடர்ஜி, ரிடையர்ட் அக்கவுண்டண்ட் ஜனரல், அஸ்ஸாம்.
5. ஸ்ரீமான் பி. வைத்தியநாத அய்யரவர்கள் ரிடையர்ட் தலைமை நீதிபதி, கொச்சி
6. ஸ்ரீநிவாஸய்யர், ரிடையர்ட் தலைமை நீதிபதி, கீழ்கோர்ட் மைசூர்.
7. ராவ்பஹதூர் வெங்கடகிருஷ்ணய்யா சத்ராபுரம், ஒரிஸா.
8. ஜயந்தி ராமய்யா பந்துலுகாரு, முக்தீஸ்வரம், கீழகோதாவரி.
9. ராவ்பஹதூர் எஸ். யம். பாண்டே ரிடையர்ட் ஜில்லா நீதிபதி, மத்தியமாகாணம்
10. பி. வி. ரெகுநாதய்யா, ரிடையர்ட் ஜட்ஜி, சீப்கோர்ட் புதுக்கோட்டை
11. மஹாமஹோபாத்யாய தாத ஸுப்புராய சாஸ்திரிகள்,
12, மஹாமஹோபாத்யாய யக்ஞஸாமி சாஸ்திரிகள் கும்பகோணம்.
13. மஹாமஹோபாத்யாய R. V. கிருஷ்ணமாச்சாரியார்- கும்பகோணம்-
14. அக்னிஹோத்ரம் தாததேசிகாசார்யர் கும்பகோணம்.
15 பண்டிட் ஹரிபாத காவ்ய ஸ்மிருதி மீமாம்ஸ தீர்த்த, கல்கத்தா.
16 மஹாமஹோபாத்யாய துர்கா சங்கர வேததீர்த்த, கல்கத்தா.
17 டாக்டர் நாகராஜ சர்மா, கும்பகோணம். 18 பண்டிட் ராமபதி மிஸ்ரா, பம்பாய். 19 எக்ஸ். மஹாமஹோபாத்யாய பஞ்சானனன் தர்க்கரத்னம், வங்காளம். 20. மஹாமஹோபாத்தியாய, பண்டிட் தர்க்காசாங்க்ய, வேதாந்த தீர்த்த, கல்கத்தா. 21. மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. ஸ்வாமிநாதய்யர், சென்னை.
22. மாமிபாய் பாண்ட்யா, ஸொலிஸிடர் பம்பாய்.
23. மோஹன்லால் அக்னிஹோத்ரி, மீரட்
24. மஹாமஹோபாத்யாய சங்கர சாஸ்திரி, ஜாம்நகர்.
25. மஹாமஹோபாத்யாய ஸ்ரீதர சாஸ்திரி, புஷ்கரம்.
26. பண்டிட் ரகுநாத ப்ரஹ்மசாரி, ராவல்பிண்டி.
26 மஹாமஹோபாத்யாய கண்டபாணி

## வாரக் குறிப்புகள்

(வே. ஸோ. சர்மா.)

பைபிள் கட்டாயம் கூடாது! எல்லைப்புற மாகாணத்தில் பாதிரிகள் பைபிளைக் கட்டாய பாடமாக வைத்தால் அரசாங்க உதவி நிறுத்தப்படுமென்று ஓர் உத்திரவிடப்பட்டது. தேசாபிமானி என்போர் தனக்குக்கிடைத்த அதிகாரத்தால் முதலில் செய்யவேண்டிய வேலை இஃதன்றோ? சென்னை சேதி என்ன?

கண்கொடுத்தவனுக்கு காணிக்கை! தென்னாட்டில் ஓர் ஜமீன்தார் கண்களை இழந்து பலவைத்யரும் கைவிட, அவர்மனைவி பழனி ஆண்டவனைப் போற்றி பூஜித்தாள். கண்கள் கைகூட 10 ஆயிரம் ரூபாய் காணிக்கை அளித்தாளாம். தைவாநுக்ரஹம், கற்புடையாள் கடமை! இரண்டிற்கும் நிதர்சநமான இது சீர்திருத்தக்காரருக்குக் கண்ணளிக்குமா?

இனி உண்மை கூறலாம்! தேசியவாதிகளது தயவை ஸம்பாதிக்க சில பத்ரிகைகள் 'இவர் நின்றார், சிரித்தார், கனைத்தார், என் பதுபோன்ற அநாவச்ய ஸமாசாரங்களுடன், தர்மவிஷயங்களை ப்ரசுரிக்காமலும், திருத்தியும் கூறுகின்றன. காங்க்ரஸே ஓர் பத்ரிகை ஆரம்பிக்கிறதாம்! சென்னையிலும் ஓர் காங்க்ரஸ் பத்ரிகை ஆரம்பித்தால் (அதனால் வருந்தீங்கு ஓர் பாலிருக்க) மற்ற பத்திரிகைகள், நிஜம் கூறலாம்.

வேஷம் வெளியாகிறது! கம்யூத்ரிகள் எல்லோரும் ஆலயப்ரவேசத்தை ஆமோதிக்கின்றனரென்று பத்ரிகைகள் உண்மைக்கு மாறாக கூறின. ஆனால் அதே பத்ரிகைகள் ஆலய ப்ரவேசத்தை ஆமோதித்த குற்றத்திற்காக ஓர் தனிகாளித்த விருந்தை அவர் பகிஷ்கரித்தனர். என்பதையும் பிரசுரிக்கின்றன. உண்மை எது? என எளிதில் எவருமறியலாமன்றோ?

என்ன காரணம்? குடந்தையில் ஓர் தெலுங்கு பிராமணன் போலீஸ் காவலுடன் தமிழ் பிராமண ஸ்திரீயை மணந்ததாக பத்ரிகை கூறுகிறது! உண்மையானல் வைதிக ஸபை, பிராமண ஸபை, ஆனுதாரக்ஷக ஸபை, பிராமண்யம், பாண்டித்யம், ஆஸ்திக்யம் நிறைந்த இங்கு இவ்விஷயத்தில் உதாஸீநமாயிருக்க ஏதேனும் தக்க காரணமிருக்கவேண்டும். பிரசுரிக்கத் தக்கதாயின் இதை விளக்கினால் நலம்!

விரைவில் காணலாம்! சில தர்மங்களை மீறினால் அதன் பயன் தாமதித்துக் கிடைக்கும். சில நேரிலே காட்டும்! சென்னை சிலாசாஸன அதிகாரிகள் பெண்மக்களை வேலையிலமர்த்த முடியாதென்று கூற, திருவாங்கூர் ஸசிவோத்தமர் ஓர் பெண்ணை முனிசிபாக்கி சீர்திருத்தக்காரர் புகழுரையைப் பெற்றார். இதனால் வரும் கஷ்டத்தை அவரே காணலாம்!

இங்கு யுத்தமா? இந்தியதுறைமுகங்களில் விஷவாயு பிரயோகிக்கப்பட்டால் முகமூடியால் எப்படி அதை அகற்றுவதென கற்பிக்கப்படுகிறது. மடியில் கனமிருந்தாலன்றோ வழியில் பயமுண்டா என விசாரிக்கவேண்டும்? முன் ஜாக்ரதையாக இருப்பது நியாயமே?

ஒன்று சேருமா? தார்மிகர் சிதறிக்கிடப்பதால் நமது கக்ஷி ஓங்கி முன்னுக்கு வரவில்லை. டிஸம்பரில், ஓர் வைதிக பரிஷத், தென்னிந்திய பிராமண மஹாஸபை, அ. பா. வர்ணாச்ரமஸ்வராஜ்யஸபை என மூன்று வைதிக ஸபைகள் கூடுகின்றன. இம்மூன்றும் ஒன்று சேர்ந்தால் நம்மை வெல்பவர் எவருமில்லை? கடவுளே காக்க.

### தர்ம ஸ்தாபன சீர்குலைவு:

பண்டைய் நாள் ஏற்பாட்டில் பிரத்யொரு க்ஷேத்திரங்களிலும் யாத்ரீகர்களுக்கான வசதியாய் சத்திர, மட, நிலயங்கள் இருக்கப் பெற்று மான்யங்களும் நம் நாட்டு மன்னர் அரசாக்ஷியில் விடபட்டு, பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதும் பிரசித்தம் ஆனால் சுயநல நவநாகரீகம் முற்றிய இக்காலம், ஷை தர்மஸ்தாபனங்கள் பலவும் சீர்குலைவுற்று தர்மமான்யங்கள் ஓர் சில ஷை சத்திர, மட, நிர்வாக மானேஜர் தர்மகர்த்தாக்கள் என்று சொல்லப்படும் பெருச்சாளிகளின் சொந்தமாக சர்க்கார் தணிக்கையுமின்றி கேவல ஸ்திதிக்கு வந்திருப்பதும் பிரசித்தமே!

விரிஞ்சீபுரம் என்ற திவ்யத்தலத்தே சுமார் 50 சத்திர, மட நிலயங்கள் இருந்துவருகின்றன. அக்ரஹாரத்தின் கண் ஆனந்தாயர் சத்திரம் ஷை நிலய தர்மத்துக்கான சுமார் ஆறு ஏகரா அயன் நஞ்சைமான்யங்கள் (ஷை மான்ய வருமானம் வருடாதி 80 கலம் சுமார் ரூபாய் 250-)க்கு வருமானமுள்ளது. சுமார் 12 ஆண்டுகளாக ஜீர்ணிக்கப்பட்டு வருவதுபற்றி ஷை சத்திரம் கிலமடைய விட்டிருப்பது பற்றியும் ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு மகஜர் மனுசெய்துக்கொண்டும், விசாரணை முடிவுவாரமல் காங்கிரஸ் மந்திரி சபைக்கு மனுவு செய்துக்கொண்டும் தர்ம நிலயம் காக்கப்படாமலிருந்துவருகிறது.

மற்றும் உயர்ந்தநிலைமையில் தர்மம் நடத்தி வந்துள்ள புகழ்வாய்ந்த சுப்பிரமய்யர் சத்திரம் பிற்காலம் ஷை சத்திரத்தை திருப்பதூர் ஸ்ரீ சூரிடநாராயணன் செட்டியார் என்ற பூமாலை செட்டியார் வசம் ஒப்புவிக்கப்பட்டு ஆண்டுதோறும் ஒருவாறு ஷை சத்திரத்தில் ஷை செட்டியாரால் பங்குனி பிரம்ம உத்சவ பத்து நாட்களிலும் கார்த்திகை கடைஞாயறு உத்ஸவ மூன்று நாட்களிலும் யாத்ரீகர்களுக்கு தர்மசந்தர்ப்பணை நடத்திவைக்கப்பட்டு வந்தது. ஷை செட்டியாருக்கு ஏராளமான சொத்துக்கள் இருப்பதுயாவும் தர்மத்திற்கே பிரயோஜனப்படுத்தவேண்டி சாஸன ஏற்பாட்டில் திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில தேவார பாடசாலையும் இத் திருவிரிஞ்சிஸ்தல ஷையார் சத்திரத்தில் தர்ம சந்தர்ப்பணை நடத்திவர முடித்துவைத்த அத் தர்மவான் சென்ற ஆண்டில் காலகதி அடைந்துவிட்டார். சம்சாரம் கிடையாது. வார்சுபாத்தியமுடையவரகள் சுமார் 50 வருஷமாய் நடத்திவந்த தர்ம கைங்கரிய சந்தர்ப்பணையை திடீரென சென்ற பங்குனி விழாவில் நிறுத்திவிட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். கடைஞாயறு விசேஷ உற்சவம் சமீபமிருப்பதால் ஆயிரக்கணக்கில் வரும். யாத்ரீகர்களுக்கு வேறு சாப்பாடுவசதி இல்லாத துர்ப்பாக்ய நிலைமையை ஷை செட்டியார் வம்சத்தார் கவனித்து தர்ம சந்தர்ப்பணையை நடத்திவைத்து புண்ணிப் பலனை அடையக் கோரி பிரார்த்திக்கின்றனம்.

முனிரத்ன அய்யர்.

---

முன்போல் எதிர்க்க!! மைசூரில் ஓர் மேதாவி விதவா விவாஹ சட்டம் செய்ய தீர்மாநம் கொண்டுவந்திருக்கிறார். ஆங்கு முன்னம் ஆலயப்ரவேசத்தை எதிர்த்த ஆஸ்திகர் இதையும் எதிர்த்து நசுக்கும்படி வேண்டுகிறோம்!

பிரஞ்சில் கலஹம்!! தற்கால ஆக்ஷியை வெறுத்து ஆங்கு ஓர் பலத்த கிளர்ச்சி நடக்கிறது! தர்மவழி ஆளுகை இல்லாத இடங்களில் எப்போதும் சாந்தி இராது! தேசிய ஸபை இதை நன்கு கவனிக்க!

### குடந்தை பிராமண அநாத ரக்ஷண ஸபை.

ஷை ஸங்கத்தின் கார்ய கமிட்டிக் கூட்டம் 20-11-37. அன்று டபீர் படித்துறையில் நடை பெற்றது. அட்வோகேட் ப்ரம்மஸ்ரீ M. K. வைத்யநாதய்யர் அவர்கள் தலைமை வஹித்தார். கமிடியாரின் வேண்டுகோளின்மேல் திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள், M. R. ஸ்ரீநிவாஸாசாரியர் இவர்களும் விஜயம் செய்திருந்தனர். கடந்த சில மாதங்களில் கமிட்டி சார்பாக நடந்த வேலைகளை அக்ராஸநாதி பதி விவரித்தார். ஆடிடர் ரிபோர்டும் கோஷ்பாராக்களும் வாசிக்கப்பட்டன. இதுவரை நன்கொடையளித்து வந்த கனவான்களுக்கு நன்றி செலுத்தியதுடன் இனிமேலும் தாராளமாக் நன்கொடை கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார், அநாதைப் பெண்கள் வேறு மதத்திற்குச் செல்லாமல் காப்பாற்ற வேண்டிய அவச்யத்தையும் வற்புறுத்தினர் கமிட்டியில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ப்ரஹ்மஸ்ரீ M. K. வைத்யநாதய்யர் அவர்கள் டிரஸ்டிஷிப்பை ராஜீநாமா செய்ததை இக்கூட்டம் அங்கீகரிக்கிறது. அவருடைய ஸ்தானத்தில் வக்கீல் ப்ரஹ்மஸ்ரீ S. ஸாம்பசிவய்யர், S. R. S. P. மானேஜிங் டாரெக்டர் ஸ்ரீமான் N. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஆகிய இருவர்களையும் டிரஸ்டிகளாக தெரிந்தெடுக்கிறது. மானேஜ்மெண்ட் கமிட்டி மெம்பர்களாகவும் அவர்களை இக்கமிட்டி தேர்ந்தெடுக்கிறது.

2. ரிடைர்ட் ஆபீஸர் M. K. ஸ்ரீநிவாஸாசாரி வக்கீல், N. பிச்சை மூர்த்தி அய்யர், திவான் பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் இவர்களை இக் கூட்டம் மானேஜ்மெண்ட் கமிட்டி மெம்பர்களாகவும், பிரம்மஸ்ரீ கே- ஆர்- சாஸ்திரிகளை கமிட்டியின் பிரஸிடெண்டாகவும் இக்கூட்டம் தேர்ந்தெடுக்கிறது.

3. வக்கீல் S. சாம்சிவம்யர் அவர்களின் ரிபோர்ட்டும், கோஷ்பாராவையும் இக்கூட்டம் ரிகார்ட் செய்கிறது. நெல் அரிசி பேரேடுகளும், மாதாந்திர செலவு பேரேடும் போடும்படி கார்யதர்சியை இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது. கணக்குகளை ஆடிட் செய்ததற்காக ஸாம்பசிவய்யர் அவர்களுக்கு இக் கூட்டம் தனது நன்றியைத் தெரிவிக்கிறது.

4. ப்ரஹ்மஸ்ரீ ராமலிங்க ராமஸ்வாமி அய்யருடைய ஊழியத்தை இக்கமிட்டி மனப்பூர்வமாக பாராட்டி அவருக்கு தன்னுடைய க்ருதக்ஞதையை செலுத்துகிறது. அவருடைய உதவி கமிட்டிக்கு மேலும் வேண்டியிருப்பதால் அவருடைய ராஜீநாமாவை வாபீஸ் வாங்கிக் கொள்ளும் படிக் கேட்டுக் கொள்ளுகிறது. ஸ்ரீ. உ. வெ. M. ஸ்ரீநிவாஸ சார்யஸ்வமிகளையும் அவருடன் கார்யதர்சியாக இக்கூட்டம் தேர்ந்தெடுக்கிறது.

ரிடைர்ட் இன்கம்டாக்ஸ் ஆபீஸ் P. O சிவராமய்யர் அவர்களின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த ராமஸ்வாமி அய்யர் அங்கேயே தன்னுடைய ராஜீநாமாவை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டார்.

நமது நிருபர்.



### சென்னை ஸ்ரீ சாரதா விலாஸினீ ஸபா:

ஸந்தேச காவ்ய ஆராய்ச்சி.

சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலையில் (28-11-37) ஞாயிற்றுகிழமை மாலை ஐந்து மணிக்கு மேற்கண்ட சபை கூடிற்று. சபைக்கு பிரெடென்ஸி காலேஜ் வடமொழி பண்டிதர். பிரம்மஸ்ரீ வி. கிருஷ்ணமாச்சார்யார் அவர்கள் தலைமை வஹித்தார்கள். கடவுள் வழிபாடு முடிந்தவுடன் காரியதரிசியால் முந்தின வியாஸத்தின் சுருக்கம் வாசிக்கபபட்டது. பிறகு சென்னை சர்வகலாசாலை வடமொழிவிமர்சகர், பிரம்மஸ்ரீ டி. கெ. ராமசந்திர சர்மாவால் "ஸந்தேச காவ்யஸமீக்ஷா". என்னும் விஷயம் வடமொழியில் உபன்யசிக்கப்பட்டது அதின் சாராம் சமாவது:- தற்சமயம் சந்தேசகாவ்யங்களுக்கெல்லாம் முதன்மையாக தோன்றியதும் முதன்மையாக விளங்குவதும் கவி காளிதாஸரால் இயற்றப்பட்ட மேக ஸந்தேசமென்னும் காவ்யமொன்றே. பொதுவாக காளிதாஸருடைய செய்யுள் என்றாலே ரஸிகர்களுக்கெல்லாம் ஒரு விதமான உணர்ச்சி ஏற்படுகிறது.

அவ்விதமிருக்கையில் மேக ஸந்தேசத்தைப்பற்றி நாம் அதிகமாக சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. இந்த காவ்யத்தில் இருக்கும்குணங்களை கணக்கிடமுடியாது. மேகசந்தேசத்தை பின்பற்றி செல்லும் காவ்யங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அந்த காவ்யங்களெல்லாம் "சந்தேசம்" என்ற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு இருக்கின்றது களே தவிர காளிதாஸர் சென்ற வழியில் செல்லுவதாக தெரியவில்லை. ஸ்வல்ப்பம் பிரசித்தியடைந்ததான ஹம்ஸ ஸந்தேசத்தையும் இதையும் சற்று ஆராய்வோம். சந்தேச காவ்யமென்றால் விரஹியான நாயகன் ஒருவன் தன் நாயகிக்கு செய்தி அனுப்புதல். அந்த காவ்யத்திலும் முதலில் போகும் வழியும் வழியில் இருக்கும் நகரங்கள் நதிகள் மலைகள் புண்ய க்ஷேத்திரங்கள் அங்காங்கு இருக்கும் விசேஷங்கள் இவைகள் முதல் பாகத்தில் வர்ணிக்கப்படவேண்டும். இரண்டாம் பாகத்தில் வழியில் இருக்கும் நகரம் இல்லம் அதின் அடையாளம், சொல்லவேண்டிய செய்திகள் இதுகளைப்பற்றி சொல்ல வேண்டும். இந்த விஷயத்தில் அனேகமாய் இரண்டு காவ்யங்களும் ஒற்றுமையாய் இருக்கின்றன. காளிதாஸர் முதல் பாகத்தில் வர்ணிக்கவேண்டியவைகளை விடாமல் வர்ணித்துவிட்டு "உஜ்ஜயினீ நகரம் நீ போகும் மார்க்கத்திற்கு கோணலாய் இருந்தாலும் அந்த நகரத்தினுடைய அழகைக் காணவேண்டிதவச்யம்" என்பதாக மார்க்கத்திற்கு சம்பந்தமில்லாததான நகரத்தையும் விடாமல் வர்ணிக்கிறார். தேசிகரோ வென்றால் சில குறிப்பிட்ட விஷ்ணு க்ஷேத்ரங்களை வர்ணிப்பதற்காகவே சரியான வழியில் தோஷங்களை கற்பித்து வேறு வழியாகப்போ என்கிறார். ஒருவர் அபாரமான பக்தியை வெளிப்படுத்துவதற்காக காவ்யம் எழுதலாம். அதை எந்த வழியில் எழுதினால் பரிமளிக்கும் என்பதைச் சற்று யோஜிக்கவேண்டும். முன்பின் யோஜனையில்லாமல் மனைவியை விட்டுப் பிரிந்து கார்காலத்தில் அவஸ்தையை அனுபவித்துக் கொண்டு இருக்கும் ஒரு மஹா புருஷனிடம் தன் பக்தியை செலுத்துவது உசிதமாகாது. இதைத்தான் நாம் ஹம்ஸ ஸந்தேசத்தில் காண்கிறோம். மேக சந்தேசத்திலோ இந்த மாதிரியானக் குற்றம் ஒருக்காலும் சொல்ல முடியாது. மேகசந்தேசத்தில் ரஸ ஸார்வபௌமமாய் விளங்கும் விப்ரலம்பசிருங்காரத்தை அடிப்படையாகக் கொண்டு விரஹியான நாயகனுடைய மனப் போக்கு எவ்விதம் இருக்குமோ அவ்விதம் மனப் போக்குக்குத்தகுந்தவாறு கடைசி வரை விஷயங்கள் கொண்டு போகப்பட்டு இருக்கின்றன. ஹம்ஸ சந்தேசத்தில் எந்த ரஸம் அடிப்படை என்று சொல்லுவதற்கு முடியாது. ஏனென்றால் அந்த காவ்யத்தில் பற்பலரஸங்கள் அடிக்கடி சுற்றிக்கொண்டே இருக்கின்றன. தூது அனுப்பும் விஷயத்திலும் மேகசந்தேசமே ஓங்கி நிற்கின்றது. எப்படி என்றால் அறிவற்றதான ஒரு மேகத்தினிடத்தில் அறிவை கல்பித்து அதனிடத்தில் சகல விஷயங்களையும் யக்ஷன் சொல்லுகிறான். அந்த விதம் இந்த காவ்யத்தில் சொல்லுவதாகத் தெரியவில்லை. மேலும் எல்லா காவ்யங்களைக் காட்டிலும் இதில் உலக நீதியை போதிப்பதிலும்சமயத்திற்குதகுந்தவாறு பிரயோகங்கள் காணப்படுவதிலும் ஒருவிதமான மேன்மையை மேகசந்தேசம் அடைகிறது. காவ்யத்தினால் முன்னோர்கள் நமக்கு ஏற்படக்கூடிய பலன்கள் யாது சொன்னார்களோ அவையாவும் இதில் பரிபூர்ணமாய் இருக்கின்றன. ஆகையால் இதை நாம் கொண்டாடவேண்டி தவச்யம் என்று சொல்லி முடிக்கப்பட்டது.

அவர் சொல்லி முடித்தவுடன் சாமாஜிகர்கள் சிலர் அவர் சொல்லியதில் சிலவைகளை ஆக்ஷேபித்துப் பேசினார்கள்.

முடிவில் அக்ராசனாதிபதியவர்கள். இப்பொழுது உபன்யாசகர் சொன்ன விஷயத்தில் சிலதுகள்நிராகரிக்கின்றோம். ஏனென்றால் தேசிகர் செய்த காவ்யம் அவ்வளவு உசிதமாக இல்லை என்று சொல்லுவது உசிதமாகாது. காளிதாஸர் செய்த காவ்யத்தை அபேக்ஷித்து இந்த காவ்யத்திற்கு தோஷங்கள் பலதுகள் இருக்கலாம். ஆனால் அந்த தோஷங்கள் இந்த காவ்யங்களுடைய குணங்களேயாகும். ஒவ்வொரு கவினுடையவும் மனப்போக்கை யார் அறிவர். சாதாரண மனிதன் ஒருவன் நினைப்பதையே மற்றொருவன் நினைக்கக்கூடும் என்று சொல்லமுடியாது. அப்படியிருக்கையில் கவிகளைப்பற்றிக் கேழ்ப்பானேன். ஆகையால் காளிதாஸர் காவ்யம்போல் இது இல்லை என்று சொல்லு உசிதமாகாது. இதையே இன்னும் ஸ்வல்ப்பம் ஆராய்ந்து இருந்தால் நன்றாய் இருக்கும் என்று சொல்லி முடித்தார்கள். பிறகு காரிதரிசியால் தலைவருக்கும் மற்றோர்க்கும் தன்யவாதம் சொல்லப்பட்டு சபை இனிதுகலைந்தது.

ஈ. எஸ். ராமமூர்த்தி.

### குடந்தை நகர் நிலைமை.

நாளுக்கு நாள் குடந்தை நகரின் நிலைமை, கேவலமாகிக்கொண்டே வருகிறது. நகரில் எங்கு பார்த்தாலும், அறைகுறை சாக்கடை திட்டத்தின் காரணமாக அதிகரித்திருக்கும் சந்து பொந்துகளால் ஏற்பட்டு வரும் தொல்லைகளோ சொல்லத்திறமல்ல. ஒருபுறம் சுகாதாரக்குறைவுகளிருக்கட்டும்; பந்தோபஸ்துக் குறைவால், திருட்டு பயம் அதிகரித்து வருகிறது. ஸானிடரி சந்துக்களில், பகல் வேளைகளிலேயே, போக்கிரிகளின் சஞ்சாரம் பெருகிக்கொண்டு வருவதால், கொல்லைப்புறங்களில் வைக்கம்படும் சாமான்கள் திருட்டுப்போவதுடன், ஸ்திரீகள் ஒண்டியாகச்செல்லவும், லாயக்கில்லாமலிருக்கிறது. இத்தகைய நிலைமைநகரின் ஒதுக்குப்புறத்தெருக்களுக்குமட்டுமல்ல; பிள்ளையார்கோவில் தெரு, டபீர்தெரு -மேற்கே- பாட்ராச்சாரியார் தெரு, மூர்த்தி செட்டி தெரு, போன்ற நகரின் மற்ற பாகங்களிலும், ஏற்பட்டு வருகிறது. இது தவிர ஆங்காங்கு, காலிகளின் குடிக்கும்பல்கள்-(ஜன நெருக்கமுள்ள, கடை வீதியின் மத்யபாகங்களில் கூட) செய்யும் அட்டஹாஸங்களை கவனிப்பாரில்லை. இது ஒரு புறம்: மற்றொரு புறம்-எங்கும் ஏற்பட்டு வரும் 'பிச்சைக்காரர்களின் தொல்லை.

இவர்களின் எண்ணிக்கையோ ஒவ்வொரு நாளும் ஏராளமாய் பெருகிக்கொண்டே வருகிறது. சாதாரணமாக நம் வீட்டு முன்புறச் சாமான்கள் (சிறிது ஏமாந்திருப்பின்) இவர்களுக்கு சொந்தமாகி விடுகிறது. அது போகட்டும்: கடைவீதிகளில்- அடேயப்பா! இந்தப்பிச்சைக்காரர்களில் எவ்வளவு ரகம்! வாரம் ஒண்ணும் மழையில்லை- வெய்யலில்லை- அப்படி அசையாமல் நின்று அட்ட ஹாஸத்துடன் ரூபாய் கணக்கில், பிச்சை வாங்கும், முறட்டுப் பக்கிரிமார்கள் முதல், தம்படிக்கு தாளம் போடும் அங்க ஹீனர்கள் வரையில் கவனித்தால், ஆயிரக்கணக்கிலிருக்கிறார்கள். கடைவீதியோ- வெகு விசாலம்! இதில் இவர்கள் அட்டஹாஸமோ- போக்குவரத்துத்தடை- முடிச்சு அபேஸ்- ஆபாஸப்பேச்சு-குடிவெறியின் கொம்மாளம்- போதுமா! பொது ஜனங்கள் கடைவீதியில் படும் அவதி! அதிலும் ஒரு பண்டிகை நாளென்றால், இவர்கள் அவதி அதிகமாகிறது. இந்த வியாபார மந்த காலத்தில், இவ்விடாமுண்டர்கள், கடைகளை, கூட்டங்கூட்டமாய் மறித்து, வியாபாரத்தை அடியோடு குலைத்து விடுகிறார்கள். வியாபாரிகளை வாயில் வந்தபடி திட்டுகிறார்கள். நிர்ப்பந்தமாய் பணத்தைப்பறிக்கிறார்கள். ஏழை வியாபாரிகளின் பாடு மிகவும் திண்டாட்டமாயிருக்கிறது. அத்துடன், இவ்வெறியர்களின் செய்கையால், அங்கஹீனமடைந்து பிழைப்பிற்கு வேறு வழியின்றி பிச்சை எடுக்கும், பிச்சைக்காரர்களின் பாடும், திண்டாட்டமாய் விடுகிறது. வியாபாரிகள் வேறு யாரை எளிதில் துரத்தியடிக்க முடியும்?

இதுவிஷடங்களை நகரத்தலைவர்களும், போலீஸ்அதிகாரிகளும் வெகுபொறுப்புடன் கவனிக்க வேண்டும். நகரின் திருட்டுபயம் அகல வேண்டும். இவர்களின் கும்பல்கள் மறைவேண்டும். பிச்சைக்காரர்களின் தொல்லைகளும் தொலைய வேண்டும். இதனால் இப்பிச்சைக்காரர்களுக்கு நகர சபையார், தனி விடுதியோ தர்மமோ செய்ய வேண்டுமென்ற அவச்யமல்ல. இக்கும்பலில் பிழைப்பிற்கு வேறு வழியின்றி, திண்டாடும் அங்கஹீனர்களை தவிர்த்து. இதர கடியர்களைம், வெறியர்களையும் வெளியேற்றினால், முக்கியமாய் அதுவே போதும். பிச்சைக்காரர்களின் தொகை தானகவே முக்கால் பாகத்துக்கு மேல் குறையும். எஞ்சி உள்ளவர்களின் பிச்சைக் காசு, அவர்களின் கால் வயிற்றுக்கஞ்சிக்கேனும் நிறையும். பொது ஜனங்களுக்கும் பிச்சைக்காரர்களின் தொல்லை ஒருவாறு குறையும் அதிகார்ரிகள் கவனிப்பார்களா?

C. V. சுப்ரமண்யன்.

### சென்னைக்கார்ப்பரேஷன்.

காங்கிரஸ் கக்ஷியில்பிளவு

சென்னைகார்ப்பரேஷன்காங்ரஸ்கக்ஷியின் புதியதலைவராக ஸ்ரீமான்ஸத்யமூர்த்தி தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதைச்சில காங்கிரஸ் பத்திரிகைகளும், காங்கிரஸ்காரர்களும் கண்டிக்கின்றன.

கார்ப்பரேஷன் காங்கிரஸ்கக்ஷிக்குள்பலத்த அபிப்பிராய பேதம் காரணமாக கக்ஷிப் பிரதி கக்ஷியும்பிராம்மண அப்பிராமண விவாதமும் அதிகம் ஏற்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளிலிருந்து தெரிய வருகிறது.

# வெளியூர்ச் செய்திகள்.

## புதுகோட்டை.

### வித்யாபிவர்த்தினீ ஸபா.

சென்ற நவம்பர்மீ 24வ புதன்கிழமை மாலை4 மணிக்கு ஷை பாடசாலை தலைமை அத்யாபகரான பிரம்மஸ்ரீ எம். என் இராகவசாஸ்திரிகளின் தலைமையின் கீழ் ஷை பாடசாலை வித்யார்த்திகளில் ஒருவனான எஸ். நடராஜசாஸ்திரீ கல்வி என்றவிஷயத்தைக்குறித்து ஸம்ஸ்கிருத பாஷையிலேயே சொற்சுவையும் பொருட் சுவையும் நிறைந்தோங்கி யிருக்கும்படி உபன்யசித்தார்.

தலைமை ஆசிரியரவர்களும் எல்லா வித்யார்த்திகளும் நல்லொழுக்கத்தோடும்' கல்வி கற்பதில் தேர்ச்சியுள்ளவர்களாயும், ஸர்வ விதமான கர்ம, உபாஸனா, ஞான, யோகமும், ஒருங்கே அமைந்திருக்கும்ஸந்தியாவந்தனத்தையும் தவறுமல் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள்.

இறுதியில் இச்சபையின் கார்யதரிசி எஸ். வைத்யநாத சாஸ்திரியினால் உபன்யாசகர்களுக்கும், அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டுசுமார் 6மணிக்கு ஸபை இனிது நிறைவேறியது,

S. வைத்யநாத சாஸ்திரீ காரியதர்சி.

## மணக்கால்.

### பண்டித பரிஷத்தைப்பற்றிப்பிரஸங்கம்.

நாளது டிசம்பர்மீ கடைசி வாரத்தில் சென்னையில் கூடப்போகிற அகிலபாரதீய ஸநாதன தர்ம போஷக வித்வத் பரிஷத்தில் எல்லா பண்டிதமணிகளும் சர்ச்சை செய்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டி பின்னர் சட்ட பூர்வமாக ஏற்படப்போகிற பதினன்கு விஷயங்களைப்பற்றி மதுரை ராவ்சாகேப் N. நடேசய்யர் அவர்கள் ஆங்காங்குள்ள பண்டிதர்களுக்கு விடுத்துள்ள அறிக்கை பெறப்பட்ட ஸநாதன தர்மப்பிரசாரகர் மதுரைM. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளை ஆஸ்திகர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க ஷையார் சென்ற சனிக்கிழமையன்று (27-11-37) ஒரு கூட்டம் கூட்டி, காஞ்சி பரிஷத், திருவாதிபரிஷத் இவைகளில் சீர்திருத்தக்காரர்களின் எண்ணம் பூர்த்தி அடையாததையும், அதை ஒட்டி இப்போது நாளது டிஸம்பர்மீ கடைசியில் கூட்டப்போகும் "அகில இந்திய பண்டித பரிஷத்"தைப்பற்றியும் அதே சமயம் கூட்டப்போகும் "ஸநாதன தர்ம போஷக வித்வ பரிஷத்"தைப்பற்றியும் மிக்க உருக்கமாய் பேசியபின் அந்த 14 கேள்விகளையும் படித்து அவை சாஸ்திரசம்பந்தமில்லாதவை என நன்கு விளக்கினர். அவ்வமயம் வெளியூர்களிலிருந்து பலரும் முக்யமாக வாகூர் பிரம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ முத்து தீக்ஷதரும் வந்திருந்தனர். பின்னர் இக்கிராமத்தினர் சார்பாக வாகூர் வெங்கட்டராம சாஸ்திரிகள் முத்து தீக்ஷதர் எம். என் சுப்பிரமணிய சாஸ்திரிகள் இவர்கள் கலந்து கொண்டு ஷைசர்ச்சைக்கு வரப்போகும்பதினன்கு விஷயங்களுக்கு, ச்ருதி, ஸ்மிருதி, சாஸ்திரபூர்வகமாயுள்ள ஆக்ஷேப சமாதானங்களை தக்க ஆதாரத்துடன் எழுதி அனுப்பும்படி இம்மூவரையும் கேட்டுக்கொண்டதுடன் இக்கூட்டம் கலைந்தது. இன்னும் இரண்டுமூன்று தினங்களுக்குள் மூவரும் எழுதி அநுப்ப போகிறார்கள்,

எம் வைத்தீஸ்வரன்.

## திருவாரூர்.

ஈஸ்வர-ௗு கார்த்திகை-மீ 7வ ஸோமவாரதினம் ராத்திரி 8 மணிக்கு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிக்கு முசுகுந்த ஸகஸ்ரநாமா அர்ச்சனை சிவனாண்டார் கோவில் ஸ்ரீமான் ராமய்யரவர்களின் பரமபக்தி விசேஷத்தினால் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிக்கு புஷ்ப கூடாரமும் உயர்தர பலவித புஷ்பங்கள் அர்ச்சனைக்கும் அலங்காரத்திற்கும் ஏராளமாக வரவழைத்தும் ஸ்ரீமான் ராமய்யரவர்கள் அர்ச்சனை நடக்கும் தருணத்தில் பூஜை ராமாமிருத குருக்களால் முசுகுந்த ஸஹஸ்ரநாமாவைபதம்க்தமாக சொலலியும் ஷை யார் குமாரனால் அர்ச்சனையும் நடந்தது. ஒருமணி நேரமும் கிட்ட இருந்த சகலருக்கும் தேவேந்திரலோகத்தில் இருந்து தேவேந்திர சன்னதி போல் விளங்கச்செய்தது இளையபெருமாள் லெட்சுமணஸ்வாமி போல் சிவனாண்டார் கோவில் ஸ்ரீமான் ராமய்யரவர் சகோதரர் ஸ்ரீமான் வெங்கிட்டராமய்யரவர்களால் அர்ச்சனை அர்ச்சனை ஆரம்பம் முதல் அர்ச்சனை பூர்த்திவரையில் பயபக்தி விசுவாசத்தால் மயில் விசிரியினாலுபசாரணை நடந்ததுடன் பலவிதமான அன்னங்களும் பக்ஷணங்களும் பலவர்க்கங்களும் வைத்து கற்பூரஹாரத்தியும் நடந்தது சகலரும் பிரசாதம் பெற்று ஆனந்தமடைந்து இந்த தர்மம் புத்திர பௌத்திர பாரம்பரியமாகவும் மேன்மேலும் அபிவிருத்தியுடன் நடந்துவரும்படி ஸ்ரீ தியாகராஜ மூர்த்தியை பிரார்த்தித்து கொள்ளப்பட்டது.

V. S. ராமச்சந்திரய்யர்.

## கிருஷ்ண ராயபுரம்.

மேற்படி ஊரில் தர்க்க வேதாந்த வித்வான் அம்மனூர் பிரம்மஸ்ரீ ஏ. ஆர். வெங்கிடராம சாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தை புனர்வசு பட்டாபிஷேக விதிப்படி சென்ற ஐப்பசிமீ 10 தேதி செவ்வாய் கிழமை25-10-37 ஆரம்பித்து தினந்தோறும் காலையில் மூலபாராயணமும் இரவில் பிரவசனமும் செய்து கார்த்திகைமீ 7தேதி திங்கட் கிழமை 22-11-37ல் பட்டாபிஷேக வைபவம் மிகவும் விமரிசையாய் நடந்தது. இந்த 28 நாளும் நடந்த உபந்யாஸங்களில் அனேக வேதாந்த ரகசியங்களும் மதவிஷயங்களும் பாலர் முதல் சர்வ ஜனங்களும் எளிதில் உணருமாறு உபந்யசிக்கப்பட்டன. நாள் தோறும் ஏராளமான ஜனங்கள் வந்து சிரவணாநந்தத்தை அடைந்து ஸ்ரீராம பிரசாதத்தை அடைந்த விஷயம் ரொம்பவும் சிலாகிக்கத் தக்கது!

மேற்படி கிராம மகாஜனங்கள் மிகவும் உத்ஸாகமாய் நடத்தி வைத்தார்கள்.

S. ராமசுந்தரேஸ்வரன்.

## மதராஸ்.

மதராஸ், பழைய மாம்பலம் ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கோவில் வஸந்தமண்டபத்தில் 17-10-37 முதல் உடையாளூர் பிரம்மஸ்ரீ ராமாயணம் அப்புஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் நடத்தப்பட்டு வரும். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் 'ஸ்ரீ ராம பட்டாபிஷேக மஹோத்ஸவம்' நாளது ஈச்வர-ௗு கார்த்திகை-மீ 27வ (12-12-37) ஞாயிற்றுக் கிழமை இரவு 7-30 மணிக்குமேல் நடைபெறும். ஆஸ்திகர்கள் யாவரும் விஜயம் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

"ராம பக்தர்கள்"

மதராஸ் சைதாப்பேட்டை ஸ்ரீ ராமானுஜ கூடத்தில் சென்ற 17-9-37 முதல் பிரம்மஸ்ரீ ராமாயணம் அப்பாஸ்வாமிசாஸ்திரிகள் அவர்களால் உபன்யஸிக்கப்பட்டுவரும், ஸ்ரீமத் பாகவதத்தில், 3-12-37 வெள்ளிக்கிழமை இரவு 8-30மணிக்குமேல், "ருக்மணிகல்யாண கட்ட உபன்யாஸம் நடைபெறும்.

ந. நி.

## பொன்மலை.

பொன்மலை புது லி டைப்பில், சென்ற தாத்ருௗு கார்த்திகை மாதம் 4வ முதற்கொண்டு, மணக்கால் பிரம்மஸ்ரீ மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்களால் வேதபாடங்கள் சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. நிகழும் ஈஸ்வர ௗு கார்த்திகை மாதம் 5வயோடு முதல் வருஷத்தின் முடிவானதலால் அன்று வருஷாந்திரக் கொண்டாட்டம், சிஷ்யர்களால், ஷை மகாலிங்க சாஸ்திரிகளின் அக்ராசனத்தின் கீழ் சிறப்பாய் நடத்தப்பட்டது.

ஓ. நி.

## கும்பகோணம்.

### ஸ்ரீ ருக்மணி கல்யாணம்.

ஸ்ரீ வேத வியாஸரால் லோகஹிதத்தின் பொருட்டு அருளிச்செய்ததும் ஐஹிகாமுஷ்மிக பல ஸாதனமான ஸநாதன தர்ம ரஹஸ்யங்கள் அடங்கியதும் வேதமாகிற கல்பக விருக்ஷத்திலிருந்து நமது அம்ருதாஸபரிதமான பலமென்றும் வர்ணிக்கப்பட்ட ஸ்ரீ மத் பாகவதம் சென்ற 18 வார காலமாய் கும்பகோணம் மேலக்கடலங்குடித்தெருவில் ஆஸ்திகர்கள் உதவியால் பாகவதாசாரியார் என்கிற கு. பூவாரகாசாரியாரைக்கொண்டு தமிழில் பிரவசனம் செய்யப்பட்டு வருவது யாவரும் அறிந்த விஷயம். நாளது இச்வர ௗு கார்த்திகை மீ 27வ ஞாயிற்றுக்கிழமை 12-12-37 ரேவதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 8 மணிக்கு மேல் ஸ்ரீருக்மணி கல்யாண கட்டத்தை உபன்யாஸம் செய்விப்பதாக ஸ்ரீ கிருஷ்ணபகவானின் திருவருளை முன்னிட்டு நிச்சயம் செய்திருப்பதால் ஆஸ்திகர்கள் யாவரும் விஜயம் செய்து கதா சிரவணத்தால் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கிருபைக்கு பாத்ரராகி ஸர்வாபீஷ்டத்தையு அடைய வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்

அக்ரஹாரவாசிகள்.

## விரிஞ்சிபுரம்.

### கார்த்திகைத்திங்கள் கடை ஞாயறு உத்ஸவம்.

இத்தல ஆலயத்தின் கண் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதரளால் சக்ர ஸ்தாபனம் கொண்ட ஸ்ரீ சிம்ஹ தீர்த்தப்புஷ்கரணியில் ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கில் ஸ்திரீதாய்மார்கள் தங்களைப்பிடிக்கவிருக்கும் பேய்ப்பைசாச முனி, மோஹினி, முதலாக தீக்காற்றுகள் நீங்கும் பொருட்டும் வா சித்தியில் புத்திர சந்தான காம்யாதிகள் வேண்டுவாம் வேண்டி சிம்ஹ புஷ்கரணியில் மூழ்கமொண்டு பின் ஸ்ரீமார்க்கபந்துவின் அநுக்ரஹமாய் பலன் அடையப்பெற்றுவரும் லீலைகள் கண்கூடான காட்சியாகும்.

எனவே இவ்வபிஷேக மஹோத்ஸவம் நிகழும் ஈச்வர ௗு கார்த்திகைமீ 26வ சனிவாரம் விடை தந்த காக்ஷி சேர்வை (12-12-1937) 27வ ஞாயிற்றுக்கிழமைஅயிதீகப்படி பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி. உபயன மாடவீதி உற்சவம், அபிஷேக சேர்வையும் இரவு மகாமேருவில் பஞ்ச மூர்த்திகள் விருஷபாரூடாய் தரிசனம். 13-12-37 (28வ கார்த்திகைச்சோமவாரம். ருத்ராக்ஷ விமான தரிசனமும் யாத்ரீகள் வந்து தரிசித்து ஆனந்திபீர்களாக!

ஒரு நிருபர்.



# ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி.

## ஆஸ்திகமத அழிவுதான்

பத்திரிகை உலகமே! போதும் உன் அட்டூழியம்! மேடைப்பேச்சே! நிறுத்து உன் ஆக்ரமிப்பை! அரசியல் சங்கமே! உன் முள்வேலியில் மாட்டிக்ககாள்ளாதே! ஹரிஜன சங்கமே! நீ ஆகமத்தை மீறாதே! நவீன நாகரீகமே! உனது கபட நாடகத்தை நாட்டிற்குள் புகுத்தாதே! அதர்மமே! உன் புதுக்கிளர்ச்சிக்கு தார்மிக பாமரர் சம்மதத்தைக் கனவிலும் எதிர்பாராதே! அடிமை பண்டித பரிஷத்தே! சூழ்ச்சிக்காரர் தீர்ப்புக்கு அஸ்து சொல்லி தக்ஷிணை வாங்கிப்பிழைக்காதே! கூட்டங்களில் கைதூக்கும் குஞ்சரங்களா! அரசியலுக்கு கைதூக்கலாமேயொழிய உன் தலை மீது மண்ணை போட்டுக்கொள்ளும் ரீதியில் மத விஷயத்தில், நாஸ்திகர் தேவேந்திர பதவி கொடுப்போ மென்று சொன்னாலும் கைதூக்காதே! மனப்பேய்களா! உமது எண்ணிறந்த சஞ்சலமான கொள்கையற்ற கொள்கைகளை பாரத புண்ணிய பூமியில் ஒலிபரப்பி நாளுக்கு நாள், இடத்துக்கிடம் நபருக்கு நபர் ஆயிரக்கணக்கான அபிப்பிராய பேதங்களை கிளப்பி விட்டு பாமர சாதுக்களை மாலுமிகளற்ற மரக்கலங்களாக்கி அதர்மக் கடலில் ஓட்டி விடாதீர்கள்! உமது கோஷ்டிகளுக்கு எல்லாம் இது ஓர் சமயோசித எச்சரிக்கை! உஷார்!

நாஸ்திக்யமே! நீ வேறு தேசத்திலிருந்து வந்திருக்கிறாயென்று தெரிந்து கொள்ளும் வரைவிமோசனமில்லை! ஒற்றுமை உண்டாக்க முடியவில்லையே என்று விசனிக்கிறாய்! உன் துநாஸ்திக்ய அகம்பாவத்துக்கும் ஒற்றுமைக்கும் வெகு தூரம்! எதாவது சொல்ப ஒற்றுமை உண்டாக்கப்புகுவாயானால் அது உன்னிடமிருக்கும் சொல்ப ஆஸ்திக்யமே காரணம்! பிறகு இருள் உடனே மூடுகிறது! தர்மத்தை எதிர்க்கப்புகுந்தால் எதிர்க்கும் கக்ஷிகளுக்குள்ளாகவாவது. ஒற்றுமை உண்டாகாதாவென்று பகல் கனவு காண்கிறாய்! அது ஏது? உன்பேச்சையும் நடத்தையையும் ஊன்றிப்பார்க்கும் பாமர ஆஸ்திகர்கள் கூட நாம் ஏமாந்தோமே! மதத்தையாயிழப்பது? என்று சுய அறிவால் உன்னைவிட்டு நாளுக்கு நாள் விலகி இறுதியில், 'அகில பாரத தார்மிக ஸமரச சர்வசமய சன்மார்க்க சங்கம் ஏற்படுத்துவார்! இது திண்ணம்!! அவர்களுடைய அரசியல் கொள்கை எவ்வாறாயினும் தற்காலிக அரசியல் லாபங்களுக்காக சாச்வத தர்மங்களை மாய்க்கும் எண்ணத்தை அறவே ஒழிப்பர் என்று அறியுங்கள்!

நாஸ்திகர்களே! நீங்கள் ஒழிக்கப்புகுவது தீண்டாமையா ஆகமமா? ஆகமம் என்னும் உயிர்போனால் ஆலயம் என்னும் உடல் எதற்கு? எண்ணிறந்த அதிதீவ்ர பக்தர்களால் ஈசுவர சான்னித்யம் உண்டானதை கண்டிருந்தும் ஆகமத்தின் வலிமையை எதிர்ப்பது ஹிந்துமதக்கொள்கையாகுமா? உமக்குஒருக்காலும் வெற்றி வாராது. பக்திமான்களின் ஆத்ம சக்தி உம்மை வெல்லும்! நீங்கள் நினைப்பது:—"ஆலயத்தை வெறும் கற்களால் கட்டியிருக்கிறார்கள். தீண்டாமை என்னும் மை தீட்டியிருக்கிறார்கள். மூர்த்தி என்பது ஹரிஜனங்களை அடக்கிக்கெடுக்கும் சூழ்ச்சி! ஏதோ சிலர் பிழைப்பதற்காக இருக்கிறபடியால் ஆலயங்களை இடித்தெறிவதும் மேலானது! அதி பரிசுத்தமாய் தீண்டாமைக்கு கோட்டையாயிருந்தால் அதில் எல்லோரும் வியவஸ்தையின்றி புகுந்து கொண்டால் தேசத்தில் எல்லோரும் ஸமத்துவபரிசுத்தம் அடைவார். ஹரி ஜனங்களின் நன்மையை உத்தேசித்து ஏற்பட்டிருக்கும், ஸ்தூபிகளும் உற்சவங்களும் ஊர்வலங்களும் நின்று விடலாம். அப்பணமிருந்து எல்லோருக்கும் வயிற்றுக்கு ஆகாரம் ஏற்படும்! ஏதோ சிலர் ஸனாதனிகளென்றிருக்கிறவர்கள் தான் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவர்கள் சாஸ்திரங்களையும் பெரியோரின் ஆசாரணையை கையாளுவதையும் நாம் ஆரவாரம், பாமரர்ஒட்டுபலம், பத்திரிகை பிரசார மூலம் தகர்த்து விட வேண்டும். தகர்த்து விடவும் முடியும்! பாருங்கள் நாளுக்கு நாள் எங்கள் பிரசாரத்தால்ஜனவச்யம் அதிகமாகிறது! சுதேசி ஆசாரணைகளை உதறித்தள்ளிய மேனாட்டுக்கல்வி பயின்ற நிபுணர்கள் எவ்வளவு பேர் எங்கள் கோஷ்டியில் முனைந்து நிற்கிறார்கள்! இவ்விஷயத்தில் ஒருவர்க்கொருவர் போட்டி போடுகிறார்கள்! இப்படி காலம் மாறிவருவதை உம் சாஸ்திரப்பிரசா பிரசாரத்தால் வேறு காலம் உண்டாக்காதீர்கள்! அப்போது தேசம் அன்னிய நாடுகள் போல் முன்னேற முடியாது! அங்கு அபிசீனிய யுத்தத்தால் பௌத்த மதமும் எவ்வளவு முன்னேறி யிருக்கிறது! இனி பாருங்கள். எங்களது புனித சீர்திருத்த ஹிந்து மதம் எவ்வளவு உன்னத தசை அடையப்போகிறது"

என்ற அபிப்பிராய விஷப்புகையை ஆசேது ஹிமாசலம் வரை புண்ணியக்ஷேத்திரங்கள் மீதும் புனித நதிகள் மீதும் பண்டித ரத்னங்கள் பாமர சாதுக்கள், கூறிமுடித்து சிதறியடித்த அதே ஆலயப்பிரவேசம் என்றும் மேலேட்டிற்குள் மறைந்திருக்கும் சாஸ்திர மறுப்பு, வருணபேத மொழிப்பு போன்ற விஷய மருந்திலிருந்து கிளம்பும்படி எறிந்து கொண்டு வருகிறார்கள்! என்ன விபரீதம்!! உலகத்தை உய்விக்கும் மகத்தான மதத்திலுதித்தும் அதில் பற்றில்லாத கெட்ட இதார் மன அறிவாலுண்டாகும் காலத்துக்கு வசமாய், காலத்தை நாம் மாற்றவல்லவர் என்றறியாது காலத்துக்கு தக்கவாறு பலர் என்றும் பலதிறப்பட்டபடி நமது ஸனாதந மதத்தை நாம் மாற்றமுடியுமென்று தற்காலம் நமது சகோதரர்கள் அரசர்கள் முதலாண்டுவரை எண்ணுகிறார்கள்! இது முடியுமா? சாதுர்வர்ண்யம் மயாசிருஷ்டம் என்றும் பரித்ராணாய ஸாதூனாம் என்றும் ஸம்பவாமியுகே யுகே என்றும் கூறி வாக்குறுதி கொடுத்த (Assurance) மாயன் மாயன் இக்கலியில் ஒளிந்து விடுவானோ? ஓடி வருவான் என்று ஸநாதநிகள் நம்புகின்றனர்! நம்பிக்கை என்பது ஸத்யம்நம்பிக்கையை கெடுப்பதென்பது இகபர சுகங்களைக்கெடுக்கும் நாஸ்திக்யம்! ஏன்னையா விந்தை! புதிய ஹிந்துமதமாம்! அதற்கு எங்கே வேதம்! சாஸ்திரம்? இல்லை இல்லை, இதுதான் பழய ஹிந்து மதமாம்! உண்மையான ஹிந்து மதம் தங்கள் அநுஷ்டிப்பதுவாம்! அத்தகையது அநாதியிலிருந்து ஆதியில் ஸனாதநிகள் ஏற்படுத்தின நூதன மதம் பிரயோஜனமில்லையாம்." இதைச் சொல்லுகிறார்களே தவிர சாஸ்திர பண்டித பரிஷத்தில் நுழைய யோக்யதை யற்றிருக்கிறார்கள்! ஏன்? முதலில் பரிஷத்பிரவேசமும் பிறகு ஆலயப்பிரவேசமும் நடக்கலாமே!! அந்தோ! என்ன நடக்கப்போகிறது தெரியுமோ! இவர்களது மாரீசமாய பரிஷத்தானது ஸனாதந தர்மஞானேதய மென்றும் மஹாவீர்ய கோதண்டத்தால் பலாரிய மதராஸில் த்வம்சம் பண்ணப்பட்டு இறுதியில், "ஹா! சீர்திருத்தமே! ஹா நாகரீகமே!" என்று கதறும். பிறகு தான் சீர்திருத்தமும் நாகரீகமும் தமது உண்மை நிலையை அறிந்து பலமாறுதலடைந்து தர்மம் சீர்திருத்தம், நாகரீகம் என்றும் சொற்களுக்கு ஒரே பொருளை உலகம் கொடுத்துய்யும்! அதாவது தர்மமானது பக்ஷட்டற்ற சன்மார்க்க நெறியே உண்மை நாகரீகமென்று ஏற்படுத்திக்கொண்டு பலமனக்குரங்குகளை வசப்படுத்திக்கொண்டு அதர்மக் கோட்டைக்குள் புகுந்து துரெண்ணங்களை ஞானச்சுடரால்எரித்து கர்மேந்திரிய ஞானேந்திரியங்களை ஈச்வரானுக்ரக ஆதித்திய ஹிருதயத்தால் வென்று ஜீவ தர்ம ரக்ஷண மென்றும் சின்ன சீர்திருத்தத்தை மீட்டு பேரின்ப கலப்பு என்னும் உண்மை சீர்திருத்தமாக்கி கொள்ளும். இதுவல்லவோ ஸனாதந தர்மம். ஈசனே காக்க கடமைப்பட்ட மதம்!

புதியமதம் என்ற பெயரால் மதத்தை அழிக்கப்புகுந்து ஒரு பொது அரசியல் ஹிந்து சபா ஏற்படுத்திக்கொண்டால் முடியும், அது நடைபெறும். ஈசனுதவுவார், சகலசித்தியுமதனால் ஏற்படுமென்று கூறுகிறார். இக்கூற்றுக்கு ஹிந்துமதக்கொள்கை முரண்பட்டிருப்பதால் அதை மாற்றவோ, மாய்க்கவோவேண்டுமென்று கோஷிக்கின்றனர். இவ்வாறு எவ்வளவு கோரிப்பை ஹிந்துமதம் பார்த்தாகி விட்டது. கடவுளே கவனிப்பார்!

அபாயம், அதர்மம், பிரமை, சூழ்ச்சி, பொறாமை, மனச்சாட்சியின்மை முதலான குணத்தோடு கூடிய அவர்கள் மார்க்கம் அவர்களது உத்தேசத்து மாறான பலனை அளிக்குமென்பதற்கு இதுவரை அவர்களுக்கு அபஜயமான நிதர்சனமே ஏற்பட்டு வந்திருக்கிறது! இனியும் அவ்வாறே வரும்!

அதர்மமே! நீ எவ்வளவு சிரமப்பட்டு கூட்டங் கூட்டுகிறாய்! கோஷ்டி சேர்க்கிறாய்! சனாதனிகள் ஒவ்வொன்றும் செய்யாமல்தானே ஈசுவரனை நம்பியிருக்கிறார்கள்! முன்பு கண்டாயா, உன் கண்குளிர, எவ்வளவு அழகாய் அணிவகுத்து நின்றார்! இப்பாரத பூமி முழுதும் 'பொறுப்பு"வாய்ந்தஹிந்துமதஸ்தர்கள். இனி நீ செய்யும் கிளர்ச்சிக்கு என்ன காரணமோ ஆஸ்திக தர்ம அணி வகுப்பு ஏற்படுமோ? யார் ஜோஸ்யம் சொல்ல முடியும்? ஆனால் எல்லாரும் ஒன்று ஜோஸ்யம் சொல்லி விடலாம். கல்லின்மேல் முட்டிக்கொண்டால் கல் உடையாது! ஆதலால் கல்லுக்குளப்போதும் பயமில்லை. தைரியமும் நம்பிக்கையும் உண்டு. ஹரிஜன சேவா சங்கத்தினர்களே! உங்களுக்கு ஒரு ஜோஸ்யம்! ஆலயங்களையே இடித்து விடுங்கள்! அப்போதும் தீண்டாமை என்னும் சுத்தம் செய்து கொள்ளும் ஹிந்துமத அநுஷ்டானம் உலகத்தை விட்டு போகாது! பிறகு நீங்கள் ஹரிஜனக்கிரஹப்பிரவேசம், ஹரிஜன சமபங்க்தி போஜன மோகம், தீண்டி ஸ்னானம் செய்யாமை, தீண்டித் தான் போஜனம் முதலான புதிய இயக்கங்கள்சேர்த்துக்கொள்ள வேண்டி வரும்! பிறகு ஹரிஜனங்கள் தங்கள் குறைகள் உண்மையில் போகவேண்டுமென்று திருவாங்கூர் நவீன ஹிந்து ராஜியத்தில் இப்போது மஹாஜர் செய்து கொள்ளுவது போல் மஹா அகில இந்திய ஹரிஜன மஹிபர் தயாரிப்பர்! ஆகையால் உண்மையான சீர்திருத்தம் செய்வது தான் முறை! அது யாது? யார் செய்வது? யார் கேட்பது?

T. A. R. சாஸ்திரி.

## தீண்டாதாருக்கு தனிக்கோவில்

ஷெபிக்பூரா என்ற இடத்தில் தீண்டாதாருக்கென ஒரு தனிக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு ஜாதிஹிந்துக்களும் ஏராளமாக உதவிசெய்தனர். இம்மாதிரி கார்யத்தால் ஆலப்பிரவேசச் சண்டையைஒழிப்பது விவேகமல்லவா?

## திருத்தம்.

கார்த்திகை மாதம் 10வ ஆர்யதர்மம் 10-வது பக்கத்தில் 3-வது பாராவில் விரிஞ்சிபுரம் வேதபாராயணம். என்பதை ஸ்ரீவாஞ்சியம் வேதபாராயணம் என்று திருத்திக் கொள்ளவும்.

ப—ர்.

215211

677

## மதிப்புரை.

### நெல்லிச்சேரி.

அருணசல சாஸ்திரிகளின் வெளியீடுகள்.

விபூதி தாரண மஹிமா ஸ்காந்தம்ஸாதக்குமாரஸம்ஹிதை சிவதத்வஸுதாநிதிகளிலுள்ளது. இதில் ருத்ராக்ஷ தாரண மகிமை பில்வபத்ரார்சனையின் மகிமைகளும் இருக்கிறது. கிரந்த லிபி. அழகான அச்சு. பக்தர்கள் ஒவ்வொருவரிடமும் இது அவச்யமாயிருக்கத்தக்கது. விலை அணு (0–2–6) தபால் சிலவு தனி.

ஸ்ரீ சங்கர விஜய விலாசம். அவதார கதை. ஸ்ரீ சித்விலாஸயதீஸ்வாருக்கும் விக்ஞான கந்தமகரிஷிக்கும் நடந்த ஸம்வாதரூபமானது ஸ்ரீ சங்கர விஜய விலாசத்தில் ஐந்தாவது அத்தியாயத்தின் தமிழ் உரையுடையது. மூலச்லோகத்தையனுசரித்து எளிய தமிழ் நடையில் வித்வான் ஸ்ரீ கச்சபேஸ்வர சாஸ்திரிகளின் மொழிபெயர்ப்பு. சுத்தமான பதிப்பு. ஸ்ரீ குரு பக்தர்கள் அவச்யம் இதை கவனிக்கத்தக்கது. விலை 0–2–0 (தபால்தனி) மிகவும் அழகு வாய்ந்தது.

ஸ்ரீ சிவராத்திரி மகாத்மியம். சேஷ தர்மத்தில் உள்ளது. 100 ச்லோகங்களுக்கு மேல் இருக்கிறது. கடைசியில் சில பக்தர்களுக்கு வேண்டிய பல விஷயங்கள் தமிழ் மொழிபெயர்ப்புடன் காணப்படுகின்றன. இது சில பக்தர்களுக்கு விசேஷானந்தத்தை அளிக்குமென்பதில் ஐயமில்லை. சுத்தமான பதிப்பு. விலை 0–3–0.

கர்பிணீ தர்மம். உபாகர்ம விஷயமும். 20 பக்கங்கள் கொண்டது. கர்பணீ ஸ்திரீகள் அக்காலத்தில் எப்படியிருக்க வேண்டுமென்பது பல ஆண்டுகள் முன் உள்ள நமதுமுன்னோரான முனிவரின் கொள்கை என்ன என்பது விளங்கும் ஆசிரியர் மிக சிரமத்துடன் தமிழ் உரையையும் கூடவே அமைத்திருப்பது ஓர் விசேஷமாகும். பலரும் இந்நூலைப்படிக்க வேண்டும். அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்கள் தம்பதிகளுக்கு இதில் உண்டு. முதலில் உபாகர்மாவின் விஷயமும் பிரமாணத்துடன் விளக்கப்பெற்று விளங்குகின்றது. ஆசிரியர் சிரமம் பாராட்டதற்குறியது.

விலை 0–2–0 தபால் சிலவு தனி வேண்டியவர் ஆர்யதர்மம் ஆபீஸிலும் பெறலாம்.

### ஸ்துதிமாலா க்ஷேத்ர மஹிமை.

திருவையாறு பஞ்சநத க்ஷேத்ர மான்மியத்திலிருந்து அம்மாளக்ரஹாரம்வாசி தத்காலம் திருச்சியில் பல ஆண்டுகளாக ஸத்கதா ப்ரவசனம் செய்து அதன் மூலம் நமது மதத்தைக் காப்பவருமான வித்மணி பிரம்மஸ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் பல அடியார்களின் விருப்பத்திற்கிணங்கி தொகுக்கப்பட்டிருக்கிறது. இது பாகெட் ஸைஸில் 56 பக்கங்கள் கொண்டது. முதலில் வெகு அழகான அட்டவணை அமைக்கப்பட்டிருக்கிறது. இது ஸ்வாமி திருநாவுக்கரசு நாயனாருக்கு கைலாஸ தரிசனம் கொடுத்தருளிய ஸ்தலம். இவ் வைதிஹ்யத்தைக் காட்டும் உற்சவம் ஆடி அமாவாஸ்யை தினம் நடக்கின்றது. அங்ஙனம் தரிசனம் கொடுத்த மூர்த்தி தெற்கு பிராகாரத்திலிருக்கிறார். அவருக்குத் தனி ஸந்நதி அப்பர் ஸ்வாமிகளும் அங்கு இருக்கிறார். அப்பர் ஸ்வாமிகள் எழுந்துவந்ததாகச் சொல்லும் குளம் கோயிலுக்கு வடமேற்கில் இருக்கின்றது. ஸப்தஸ்தானம் என வழங்கும் 7 ஸ்தலங்களில் முதன்மையான ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனாருக்காகவும் சேரமான் பெருமாணாயனாருக்காகவும் ஸ்வாமி காவேரியின் பெருக்கைத் தவிர்க்க நாயன்மாரிருவரும் அடியார் கூட்டத்துடன் ஆற்றைக் கடைந்து சென்று தரிசித்த ஸ்தலமிது. ஸ்தல விநாயகருக்கு ஆதி விநாயகர் எனப் பெயர். காவேரி மிகுந்த வெள்ளத்துடனிருந்தபோது சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அதன் தென்கரையிலிருந்துகொண்டு "ஐயாருடைய அடிகளோ" என்றழைத்தபோது இவ் விநாயகர் ஓலம் ஓலம் என சொன்னதாக ஐதிஹ்யம். இவ் விநாயகருக்குப் பக்கத்தில் ஆட்கொண்டார் சன்னதி இருக்கிறது. ஓர் பிராமணக் குழந்தையை யமன் தொடர்ந்துவந்ததாகவும் அப்பொழுது ஸ்வாமி வெளிப்பட்டு யமனை விலக்கி அக்குழந்தையை ஜ்யோதீ ரூபமாய் ஆட்கொண்டதாகவும் ஆதலால் அவர் சன்னதிக்கெதிரில் ஓர் சிறு குழி ஒன்றுண்டாக்கி அதில்குங்கிலியம்போட்டு கொண்டு வருவதாயும் சொல்லுகிறார்கள். இன்னும் பல பிரார்த்தனைக்காரர்கள் குங்கிலியம் போட்டு வருகிறார்கள். பாடல் பெற்ற சிறந்த ஸ்தலம். இம்மஹாமஹிமை பொருந்திய க்ஷேத்ர விசேஷங்களைத் தெரிவிக்கும் நூல் வெளிவந்தது மிகவும் கொண்டாடத் தகுந்ததே.

இக்குறைய நிவர்த்தி செய்ய ஒருவாறு பலநாளாக பல ஓலைப்பிரதிகளை தேடி ஒத்துப்பார்த்து சுத்தமான தமது கைப்பிரதியிலிருந்து ஸாரமாயும் பக்தர்களுக்கு அவச்யமான க்ஷேத்ரோத்கர்ஷம், துர்வாஸர்செய்தி ஈச்வரஸ்துதி, ஜப்யேச பஞ்ச ரத்னம். யமன் செய்த சூர்ணிகை, கௌதமர், சதாநந்தர், சிவதாஸர் வஸிஷ்டர் ஸுசரிதர் முதலிய முனிவர்கள் செய்த ஸ்தோத்திரங்களும் பலச்ருதி கடைசியில் ஸ்துதி செய்தவர்களின் பெயர்களும் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. நல்லிச்சேரி அருணசல சாஸ்திரிகளின் இந்த வெளியீடை நாம் மிகவும் பாராட்டுகிறோம். கிரந்த லிபி பிழையில்லாமல் சுத்தமாயிருக்கிறது, விலை 0—4—0 தபால் சிலவு தனி.

(2) தீர்த்தமான்மியஸ் தோத்ராவளீ.

இது ஸூத ஸம்ஹிதையிலுள்ளது ச்ரவணபடனத்தினுலேயே சகல பாபங்களையும் தொலைக்ககூடியது. 125 ச்லோகங்கள் உள்ளது. அறியத்தக்க பல விஷயங்கள் உண்டு கடைசியில் பாபமோசனஸாதனம் ப்ரும்மகீதையிலிருந்து எடுத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுவும் ப்ரம்மஸ்ரீ அம்மாளக்ரஹாரம் சாஸ்திரிகளாலேயே தொகுக்கப்பட்டது. ஆஸ்திகர்ஒவ்வொருவருமிடம் இவ்விரண்டு புத்தகம் இருக்கவேண்டியதவச்யம். விலை 0—3—0 (தபால் தனி) வேண்டியவர்கள் ஆர்யதர்மம் ஆபீஸில் விலை கொடுத்து பெறலாம்.

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி,
மேலக்காவேரி.

### ஆத்தன்குடி

ஸநாதன தர்ம மஹா சபை.

ஈசுவர வூ கார்த்திகை மீ 9௳ புதன்கிழமை இரவு 7 மணிக்கு வேதபாடசாலையில் பிரம்மஸ்ரீ, வெங்கட சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கடவுள் வாழ்த்துப்பாட திருவாவுகூடல் முருகப்பெருமான் தேவாலயத்திருப்பணியில் ஈடுபட்டு வரும் பிரம்மஸ்ரீ ஏ. வி. சேஷகிரி சாஸ்திரிகளவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. ஸநாதன தர்ம மஹிமையைப்பற்றியும், வர்ணாசிரம தர்மத்தின் அரிய தத்துவங்களையும், காலத்திற்குத்தகுந்தாற்போல் சாஸ்திரங்கள் மாற்றத்தக்கதல்லவென்றும், தீண்டாதார் ஆலயப்பிரவேசம், ருதுமதி விவாஹம், கலப்பு மணம், விவாஹ ரத்து முதலானவைகள் அசாஸ்திரீயமென்றும், வேதசாஸ்திராதி பிரமாணங்களுடன் கேட்போர் ரஸிக்கும்படி அரிய சொற்பொழிவாற்றினர்.

சீர்திருத்தத்தின் பெயரால் வேதசாஸ்திர கருத்துக்களை காலதேச வர்த்தமானத்திற்கேற்றபடி சீர்திருத்தக்காரர் என்போர் மாற்ற அகில இந்திய வித்வத் பரிஷத்தின் பெயரால் டாக்டர் குருத்கோடி அவர்களின் தலைமையில் சென்னையில் டிஸம்பர்மீ ல் நடத்தப்போவதாக உள்ளசபையில் ஸநாதனிகள் கலந்து வாதிப்பதாகக் கேட்டபொழுது அதனைக் கூட்டுவிப்போர் அதற்கிணங்காததைக்கண்டு, அச்சபை ஒரு தலைப்பக்ஷமானதென்றும், வித்வத் பரிஷத்தின்பெயரால் வேதசாஸ்திரகருத்துக்களை மாற்ற எவருக்கும் அதிகாரம் கிடையாதென்பதையும், சுருதி,ஸ்மிருதி இவைகளின் உண்மைக்கருத்துக்கள் இன்னதென்பதை தெற்றென மக்கட்கு வெளிப்படுத்த மடாதிபதிகள், பிரபல பண்டிதர்கள் முதலிய ஸநாதனதர்மத்தலைவர்கள் 25,26,27,28௳ களில் சென்னையில் அகிலபாரதீயஸநாதன போஷகவிதவத் பரிஷத்தை நடத்த முன்வந்ததை பாராட்டி வரவேற்று விவரமாய் ஸ்ரீமான் ஜெகதீசய்யரவர்கள் உபந்நியாஸம் செய்தார்கள்.

ஜெ ஸி போஸ் என்ற உலகபிரசித்தி பெற்ற பிரபல இந்தியவிக்ஞானி காலகதி அடைந்ததற்கு அநுதாபம் தெரிவித்தும்; அகிலபாரதீயஸநாதன போஷகவித்வத்பரிஷத்தைவரவேற்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவரவர்கள் முடிவுரை கூறவந்தனோபாரத்துடன் சபை இரவு 9மணிக்குக்கலைந்தது.

ஈசுவரவூ கார்த்திகைமீ 8௳ செவ்வாய்கிழமை இரவு 8மணிமுதல் 10மணி வரைஷை சாஸ்திரிகளால் துருவ உபாக்கியானம் பக்திரஸம் ததும்பபிரவசனம் செய்யப்பட்டது.

காரியதர்சி.

குழந்தை
குடல் ஈரல் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம். தங்கமெடல் பரிசும்
பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kvmbakonam,
Published by A Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

679

ஆன்மதர்மம்

ஸ

4 A6

22

9-12-1937

215212

215212
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-JAN 1938
MADRAS
681

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஷு கார்த்திகை-மீ 24உ 1937ஷு டிஸம்பர்-மீ 9உ | ஸம் 46

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு 0 -8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## வாரக் குறிப்புகள்.

(வே. ஸோமதேவசர்மா.)

புதுவழியில் புகுகிறார்.- பண்டிதமாளவ்யா காசியில் ஓர் ஸபை கூட்டுகிறார். அதில் பிராம்மணர்களுக்குள்ளிருக்கும் அவாந்தர ஜாதிகளுக்குள் விவாஹம் நடத்திவைப்பது யோசிக்கப்படுமாம். இவ்வவாந்தர பேதத்திற்கு மூலபிரமாணம் ஸ்பஷ்டமாகக் காணப்படவில்லையென்றாலும் சிஷ்டாசாரத்தை ஒதுக்க முடியாது. இவர் உழைத்துவரும் வித்யா தானத்தோடு நின்றால்நலம்.

ஜப்பான் பேராசை:- சைனாவை விழுங்கி இந்தியாவிலும் ஆசை கொள்வதாக ஜப்பானே சிறிது ஸூசகமாக கூறுகிறது. வங்க அரசாங்கம் இந்திய அரசாங்கம் முதலியன ஜப்பானை இந்தியாவில் எதிர்க்கவேண்டிய ஸம்விதானம் செய்கின்றன. ஏழை இந்தியாவில் நிராயுதபாணிகளால் பலர் இறக்காவண்ணம் ஜப்பானுடன் இந்தியஅரசாங்கம் ஸந்தி செய்துகொள்வது முறையாகும்.

ராஜ்ய தந்திரம்:— திருவாங்கூர் ஸசிவோத்தமர் "மதக்காப்பு மசோதா" ஒன்று கொண்டுவருகிறார். இது கொச்சி ராஜா, ஆலயத்தை சண்டாளருக்களிக்காததால்பலர் அவரை எதிர்க்கின்றனர்: அதைத் தடுப்பதற்கென கூறுகிறார். இந்தப் பெயரை வைத்துக் கொண்டு தார்மிகர்களை இன்னும் அதிகமாக அடக்குவாரோ என அஞ்சுகிறோம்.

எதனால் அதிவிருஷ்டியும் குளிரும்?:— தேசீய சபை ஆக்ஷி ஏற்றபின் நம் நாட்டில் நல்ல மழை என சிலர் பிரசாரம் செய்தனர். துரதிருஷ்டவசமாக அவர்கள் பேச்சு தலைகீழாக மாறும்படியும் அதர்ம ஆக்ஷியை தர்மதேவதை விரும்பவில்லை என்று காட்டவும் பொறுக்க முடியாத குளிர் பனியும் மழையும் நாட்டை வாட்டுகிறது.

இட்ட வேலையை கவனிக்கவும்:- அகில இந்திய தேசீய ஸபை கட்டளைகளை நிறைவேற்றவே மாகாண ஜில்லா தாலூக்கா கிராம தேசீயசபை சட்டப்படி ஏற்பட்டன. அதைவிட்டு மதுரை ஸபை சண்டாளரை ஆலயத்தில் விடும் சட்டம் செய்யும்படி உபதேசிப்பது உசிதமல்ல. இவர்களது நாஸ்திக தன்மையை வெளியிடுவதாகுமே தவிர தேசீய ஸபைக்கோ தேசத்துக்கோ நன்மை செய்ததாகாது.

இவர்தான் பக்தரோ:— ஸ்ரீரங்கம் காஞ்சி திருப்பதி இம்மூன்று ஆலயங்களை நீண்டதாருக்கு தன் ஆயுளுக்குள் திறந்துவிடுவதாகவும் இல்லையேல் தன் மனம் வேகாதென்றும் முதல் மந்திரி பிரதிக்ஞை செய்தாராம். ஆந்த்ர ஸர்வகலாசாலையில் இவர் பேசும் போது ஆலயக் கட்டடங்கள் வீணாகக் கட்டியதற்கு நாம் வருந்துவது போல் கலாசாலை கட்டிடங்களைக் கட்டி வருந்தவேண்டாம் என்கிறார். இவர் உள்ளம் இன்னதென்று ஸ்பஷ்டமாக இது காட்டவில்லையா

எது வீண்? எதனால் வீண்! ஆயிரக்கால் மண்டபங்கள் வௌவால் அடைந்து கிடப்பதைக் கூறினால் அங்கு பிரதிதினம் திவ்யநாம ச்ரவணம் நடந்து நின்றதைப் புதுப்பிக்க முயற்சிக்கவேண்டும். கோவில் கட்டிடமே வீணெனில்அவர் பேச்சுக்குபோகமுடியாது. கோயிலில் நம்பிக்கை இல்லாத அதன் தத்வமறியாத இவர்கள் மற்றவர்களை அங்கு போகும்படி தூண்டுவது யோக்யப் பொறுப்பா.

முறையற்ற கல்வி:— முதன் மந்திரி போன்ற சிலர் ஆங்கிலத்தில் நமது உபநிஷத்துகளைக் கற்று தான் ஸரியானவழியில் செல்லாததுடன் பிறரையும் கெடுக்கின்றனர். இதை இவரியற்றிய "உபநிஷத் பலகணி" போன்ற நூல்களே வெளியிடுகின்றன. இப்பாடத்தை உணர்ந்து மதாபிமானம் உள்ள லௌகிகர் சரியான வித்வான்களை அடுத்து முறைப்படி கற்க வேண்டுகிறோம்.

எழுதுக! வருக! சென்னையில் நடக்கும் வைதிக பரிஷத்துக்கும் தர்ம காங்கிரஸுக்கும் பண்டிதர்களும் மதாபிமானிகளும் கூட்டமாக வரவேண்டும். பண்டிதர்கள் இச்சபை கேட்ட கேள்விகளுக்கு ஸப்ரமாணமாக பதிலெழுதி அனுப்பவேண்டும். ப்ரச்ன பத்திரிகை வேண்டுவோர்

லலிதா ஸதனம்
ராயப்பேட்டை, சென்னை,
என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிக்ஸி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷிட் ஜெம்வேட் சன்ஸ் & Co.,
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

(3) பல மதங்கள்.

கணவான்:— நான் முதலில் தெரிவித்த ஸந்தேஹம் இன்னம் நிவிருத்தியாகவில்லை. பரஸ்பர விருத்தமாக அநேக மதங்கள் ஏற்படக் காரணம் என்ன? எல்லாமே ஸத்கதிக்கு வழிகாட்டுவதாகச் சொல்லுகின்றனவே?

மஹாஸ்வாமிகள்:— அதிகாரம் அதவாது யோக்கியதை என்பதை வைத்தே ஜகத்து ஆளப்படுகின்றதென்று நான் ஏற்கனவே சொன்னேன் அல்லவா? மனிதர்களுக்குள் இருக்கும் அதிகார தாரதம்யத்திற்குத் தக்கபடியே பலவித மதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

க:— இது எனக்கு அர்த்தமாகிறது. ஆனால் ஒரு மதமாவது, தான் இவ்வித யோக்கியதையுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்பட்டதாக ஒப்புக்கொள்ளத் தயாரில்லையே? ஒவ்வொரு மதமும் தானே மேலான மதம் என்றும், தானே வாஸ்தவமான மதம் என்றும், தனித்தனியே சொல்லிக் கொள்கின்றனவே?

ம:— ஒரு சின்னப் பையனைப் பார்த்து ஒருவர் "விளக்கை ஏற்று" என்றும், மற்றொருவர் "திரியைத் தூண்டு" என்றும், மற்றொருவர் "எண்ணெயை விடு" என்றும், இன்னமொருவர் "விளக்கைஅணைத்து விடு" என்றும் நான்கு பேர்கள் ஸமகாலத்தில் கட்டளையிட்டால் அவன் என்னசெய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்பான். இக்கார்யங்கள் ஸமகாலத்தில் செய்யக்கூடியவைகளாக வில்லை; ஆனாலும் 'என் கட்டளைப்படி நடக்கவேண்டும்" என்று ஒவ்வொருவரும் நிர்பந்தம் செய்கிறார்கள். பையன் என்ன செய்ய முடியும்? இந்த ஸந்தர்ப்பத்தில் ஐந்தாவதாக ஒருவர் வந்து "கத்தரிக்கோல் கொண்டுவா" என்று இன்னும் ஒரு கட்டளையிட்டால், ஏற்கனவே நான்கு கட்டளைகளுக்குள் எந்தக் கட்டளைப்படி நடப்பதென்று தெரியாது திகைத்து நிற்கிறவனுக்கு ஐந்து கட்டளைகளுக்குள் எந்தக் கட்டளைப்படி நடப்பதென்று தீர்மானித்துக்கொள்ள வேண்டியதான ஜாஸ்தி சிரமத்தையே கொடுத்ததாகும். ஐந்தாவது மனிதர் வந்ததினால் இந்தப் பையனுக்குச் சிரமம் ஜாஸ்திபடுமே தவிர குறைபடாது. வாஸ்தவத்தில் இந்தப் பையனிடம் அவருக்கு அபிமான மிருக்கும் விஷயத்தில், இந்தப் பையனும் அவருடைய தீர்மானத்திற்குக் கட்டுப்படத் தயாராயிருந்தால், "கத்தரிக்கோலை கொண்டுவா. மற்றக் கட்டளைகளை நீ கவனிக்கவேண்டியதில்லை" என்று சொன்னால்தான் உபயோகமாகும். அப்படியே ஒருவனை நன்னடத்தையில் நடத்திக்கொண்டு போக உத்தேசித்தும் ஓர் ஆசார்யர் "நான் சொல்லுகிறபடி நட. மற்றவர்களைக் கவனிக்காதே" என்று சொல்லித்தான் தீரவேண்டும்.

க:— அப்படியானால், தன்னிடம் கேழ்க்க வருகிறவர்களுடைய யோக்கியதையையும் சக்தியையும் கவனித்தும் காலத்திற்குத் தக்கபடியுமே முன் மதாசார்யர்கள் தங்கள் உபதேசங்களை வெளியிட்டார்கள் என்று ஏற்படுமல்லவா? தங்களுக்கு வாஸ்தவமான மேல் தத்வம் தெரிந்திருந்தபோதிலும், ஸந்தர்ப்பத்திற்குத் தக்கபடி உபதேசித்தார்கள் என்றால் தாங்கள் உண்மைத் தத்வத்தை உபதேசிக்க வேண்டுமென்ற பொறுப்பை விட்டு ஸமயோசிதமாய்ச் செய்தார்களென்று சொல்ல நேரிடுமல்லவா?

ம:— ஜனங்களுடைய யோக்கியதையின் தாரதம்யத்தை வைத்து அப்படிச் சொல்லும்படி ஏற்பட்டது அவர்களுடைய குற்றமாகாது. முன் சொல்லியபடி, தாக முள்ளவனுக்கு குளிர்ந்த ஜலம் ஸுகத்தைக்கொடுக்கும் என்றாலும், ஜ்வரத்திலிருக்கிறவனுக்கு அது அஹிதமாகவே ஆகும். ஒருவனை குளிர்ந்த ஜலம் சாப்பிட அனுமதித்து, மற்றொருவனை சாப்பிடக் கூடாது என்று நிஷேதித்தால், அது வைத்யரிடம் பக்ஷபாதத்தன்மையைக் காட்டாது. ஒருவனுக்கு ஸுகத்தைக்கொடுத்து மற்றவனுக்குக் கெடுதலை செய்கிறதென்று ஜலமும் பக்ஷபாதி யாகாது.

க:— அப்படியானால் ஒரு மதாசார்யர் உபதேசித்திருப்பது மேலான தத்வமா, அல்லது மனிதர்களுக்குத் தக்கபடி சொன்னதா என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?

ம:— உங்களுக்குத் தெரிந்து என்ன ஆக வேண்டும்? அம் மதாசார்யர்களுக்குள் யார் பெரியவர், யார் சின்னவர் என்று தீர்மானிக்கவா? அல்லது நீங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று மாத்திரம் தெரிந்து கொள்ளவா?

க:— வாஸ்தவத்தில் இரண்டும் தான். எந்த மதாச்சார்யருடைய உபதேசம் மிகவும் உண்மையென்று தெரிந்துகொண்டு அதன்படி என் நடத்தையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லையா?

ம:— இரண்டு பேர்களுக்குள் இருக்கும் தாரதம்யத்தைத் தீர்மானிக்க உத்தேசிக்கிறவன், அவர்களுடைய தோஷங்களையும் நன்கு அறியவேண்டியவனாயிருப்பதால், அவ்விருவர்களுக்கும் மேல்பட்ட யோக்கியதை வாய்ந்தவனாக அவன் இருக்கவேண்டும். கிருஸ்து, மகம்மது மற்றும் மதாச்சார்யர்கள் இவர்களுடைய புத்திகளுக்குள் தாரதம்யத்தைக் கண்டுபிடித்துக்கொள்ளும்படியான அவ்வளவு புத்திவன்மை தங்களுக்குப் பகவான் கொடுத்திருப்பதாக எண்ணமா? தவிரவும், இரண்டு மதங்களுக்குள் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்று தீர்மானம் செய்ய ஆரம்பிக்குமுன், அவ்விரண்டு மதங்களையும் நன்கு தெரியவேண்டாமா? அது கிடக்கட்டும், ஒரு மதத்தையாவது நன்கு தெரிந்துகொண்டுவிட்டதாகச் சொல்ல முடியுமா? ஒரு மதத்தில் அடங்கிய ஒரு விஷயத்தையாவது நன்கு பரிசீலனை செய்து அறிந்து கொள்ள நம் ஆயுட்காலம் போதுமா? இப்படியிருக்க, தத்வம் தெரிந்து கொள்வது எப்பொழுது, அனுஷ்டானம் செய்வது அதற்கப்புறம் எப்பொழுது?

க:— பின்னே, என்னதான் செய்ய வேண்டுமென்று தாங்கள் உபதேசிக்கிறீர்கள்?

ம:— ஈசுவரன் ஒருவன் உண்டென்று நம்புகிறீர்களா?

க:— ஆமாம்.

ம:— அவர் ஞானஸம்பன்னர் என்றும் ஒப்புக்கொள்கிறீர்களா?

க:— அப்படியே.

ம:— இந்த ஞானம் அவருடைய ஒவ்வொரு கார்யத்திலும் நன்கு புலப்படுமல்லவா?

க:— ஆமாம்.

ம:— அப்படியானால், தங்களுக்கு ஜன்மம் கொடுத்ததான அவனுடைய இந்தக்கார்யத்திலும் அவ்வறிவு துலங்கவேண்டுமல்லவா?

க:— ஆமாம்:

ம:— உங்களை ஜனிக்கும்படி செய்ததிலும் பகவானுக்கு ஓர் உத்தேசம் இருக்கவேண்டும், அதுவும் அறிவுற்ற உத்தேசமாகவே இருக்கவேண்டுமல்லவா?

க:— அப்படியே என் ஜனனமும் உத்தேசமற்றிராது.

ம:— அப்படியானால், உங்களை ஒரு குறிப்பிட்ட மாதாபிதாக்களிடத்தில் ஜன்மம் எடுக்கச் செய்ததிலும் பகவானுக்கு ஓர் உத்தேசமிருந்தே தீரவேண்டுமல்லவா?

க:— ஆமாம். ஏதோ அகஸ்மாத்தாக ஏற்பட்டதென்று சொல்லும் வியவஹாரத்தை நான் ஏற்றுக்கொள்கிறதில்லை.

ம:— அப்படியானால், கிருஸ்துவ மாதாபிதாக்களிடம் உங்களை ஜன்மம் எடுக்கும்படி செய்த பகவானுக்கு தங்கள் யோக்கியதைக்கு தகுந்த சிரேயஸ் சாதனம் கிருஸ்துவ மதமே என்று தோன்றிற்று என்று வைத்துக்கொள்வதில் என்ன ஆக்ஷேபணை? நமக்கு எந்தமதம் உசிதது என்று தீர்மானிக்கும் விஷயத்தை ஸர்வக்ஞனான ஈசுவரனே பார்த்துக்கொள்கிறான். நாம் நடக்கவேண்டிய வழி இன்னதென்று தீர்மானித்துக்கொள்ள நம் அற்பப் புத்திக்கு சக்திகிடையாதென்று நன்கு அறிந்து அவரே இப்பொறுப்பையும் வஹித்து, தேசம், காலம், மதம் எல்லாவற்றையும் தீர்மானித்து நம்மை ஜன்மம் எடுக்கச்செய்கிறார். இவ்வளவுகருணையோடு அவர் செய்திருந்தும் உபகாரத்தைக்கவனிக்காமல் மதங்களுக்குள் தாரதம்யத்தை தீர்மானிக்க வேண்டிய அஸாத்யமான பொறுப்பை நாம் தலையில் தாங்க என்ன அவசியம்?

க. கிருஸ்துவமதத்தை நன்கு அறிந்து கொள்ள நான் மிகவும் பிரயத்தனப்பட்டிருக்கிறேன். அதன்படி நடக்கவும் முயன்றிருக்கிறேன். ஆனால் அடிக்கடி அநேகம் ஸந்தேஹங்கள் ஏற்படுகின்றன. அவைகளை நிவர்த்திக்க கூடியவர்களாக நான் யாரையும் காணவில்லை. அதனால்தான் இதரமதங்களை வாசிக்க ஏற்பட்டது.

ம:— புஸ்தகங்களை மாத்திரம் வாசித்திருப்பவர்களைக் கேட்டால் ஸந்தேஹம் நிவர்த்தியாகாது. பிரதிதினமும் அம்மதத்தின்படி வழுவாமல் நடக்கிறவர்களை அண்ட வேண்டும். வியாபாரத்திற்காக கடல்களைத்தாண்டி, ஆகாயத்தில் ஏறுகிறீர்கள்! தத்வம் அறியவேண்டுமானால் மாத்திரம் ஆசார்யர் தன் வீட்டு வாசலுக்கு வந்து ஸந்தேஹத்தை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள்! மதம் என்பது ஒரு குதூகலத்திற்காக ஏற்பட்டதென்ற எண்ணம் போய், நம் ஆயுளே மதத்திற்காக என்ற எண்ணம் தீவ்ரமாக ஏற்பட்டதேயானால், சரியான ஆசார்யரை அடைய வேண்டுமென்ற அவாவுடன் உலகம் பூராவும் தேட ஆரம்பிப்பீர்கள் உங்கள் சிரத்தையைக்கண்டு அவரும் உங்கள் முன்பே தோன்றக்காத்திருப்பர். அப்படியுள்ள ஆசார்யர்கள் கிருஸ்துமதத்தில் இப்பொழுது இல்லையென்பதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. இந்த வ்யவஹார ஗்ரஸ்தமான உலகத்தில் அவர்கள் காணப்படாமலிருக்கலாம் இவ்வுலகம் அவர்களைத்தேடாது, அவர்களுக்கும் இவ்வுலகத்தால் பிரயோஜனமில்லை. அவர்கள் இவ்வுலகத்தின் நடுவிலுமிருப்பார்கள். இவ்வுலகத்தின் வியவஹாரம் அவர்களை பாதிக்கமாட்டாது; அவர்களை இவ்வுலகம் கண்டுபிடித்துக்கொள்ளவும் முடியாது. ஆகையால் வாஸ்தவமான கிருஸ்துவர்களைத்தேடியலைய வேண்டும். உங்கள் ஸந்தேஹங்களைத்தெளிய வைக்கும்படி வினயத்துடன் அவர்களைப்பிரார்த்திக்க வேண்டும். ஒரு க்ஷணத்தில் உங்கள் ஸந்தேஹங்களை பறக்க அடித்து விடுவார்கள் அப்பொழுது, கிறிஸ்துவ மாதாபிதாக்களுக்கும் பிறக்கும்படி செய்ததில் ஈஸ்வரனுக்கு இருந்த உத்தேசமும் நன்கு வெளியாகும்.

க:— மிகவும் கிருதார்த்தனானேன். நான் இங்கு வரும்போது, திரும்பிப்போகையில் முன்னையை விட ஜாஸ்தி ஊக்கமுள்ள கிறிஸ்துவனாய்ப்போவேன் என்ற எண்ணம் இல்லாமலேவந்தேன். இப்பொழுதவ்வெண்ணத்தை



# பதினான்கு கேள்விகள்.

## தார்மிக பண்டித பரிஷத் விசாரிக்க வேண்டியவை.

ஸநாதந தர்மரக்ஷண பரர்களாயும், வேத சாஸ்திரங் கற்றுணர்ந்தவர்களாயுமுள்ள வித்வான்களே! தங்களுடைய ஸமூகத்தில் வணக்கமாய்ப் பிரார்த்தித்துக் கொள்வதென்னவென்றால், தர்மதேவதைக்கு நிவாஸஸ்தானமாயும்' கர்ம பூமியாயுமுள்ள நமது பாரத பூமியில் கலி மஹிமையால் அன்ய மதத்தில் ஆசைகொண்ட சில கலிதூதர்களால், வர்ணாச்ரமதர்ம கல்பவிருக்ஷத்தை அழித்து எல்லா ஜாதி மதமும் அபேதத்தையடைந்தாலன்றி தேசாந்தர ஸத்ருசமான ஸமுந்நதி நமது தேசத்துக்குக்கிடைக்க முடியாதென்று நிச்சயித்துக்கொண்டு "ஹிந்துஸங்க ஸம்ஸ்கரணம்" என்றொரு விஷவிருக்ஷ பீஜத்தை விதைத்து, 'உபன்யாஸ மென்னும் உதகத்தால் அதை முளைக்கும்படி செய்து, க்ரமமாய் "ரஜஸ்வலா விவாஹம்" "விதவா விவாஹம்" "ஸமுத்திர யாத்திரை" சண்டாளாஸ்பிருச்யதை நிவாரணம்" தேவாலயப் பிரவேசம் முதலியவை யாகிற கிளைகளுடனும், அதை விருத்தி செய்து, மொட்டு விடும்படியும், பலிக்கும்படியும் செய்து. சட்டமென்னும் நிர்பந்தத்தால் அப்பலத்தை தார்மிகர்கள் விழுங்கும்படி செய்வதற்கு வேண்டிய உபாயங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே.

இப்போது மேற்கண்ட அந்யாயகார்யங்களைச் சட்டஸபைகளில் சட்டமாகக் கொண்டுவரப் போகிறார்கள். அவை நிர்விக்னமாய் நிறைவேறிவிடும் பக்ஷத்தில் ஆர்ய ஜாதியே, தேவ ஸ்தானமே கெட்டுவிடும். தர்மதேவதையும் பாரத தேசத்தை விட்டுப் பரலோகஞ் சென்று விடுவாள். ஆகவே புராதன--நவீந மார்க்கங்களின் பரிசீலனை சாஸ்திரீயமாகச் செய்யவேண்டியது அவசியமென்று கருதித் தங்களிடம் இந்த தர்மப்ரச்நமாலையைத் தயாரித்து அனுப்பியிருக்கிறோம். இதற்குச்சாஸ்திரீயமான பதிலை எழுதி டிஸம்பர் மீ 10உ க்குள் எங்களிடம் கிடைக்கும்படி செய்யப் பிரார்த்திக்கிறோம்.

கேள்விகள்.

1. ரிஷிகளுக்கோ அதன்பின் தோன்றியவர்களுக்கோ, தர்மாதர்மங்களை மாற்ற சாஸ்திரீயமாக அதிகாரமுண்டா? இல்லையா? தர்மாதர்ம நிர்ணயம் செய்வதற்கு மீமாம்ஸா ந்யாய ஞானம்வேண்டுமா? லோகசரித்ரஞானம் வேண்டுமா?

2. ப்ரபுக்களுக்கோ. சட்டசபை மெம்பர்களுக்கோ, சட்டநிர்மாண ப்ரவிருத்தியானது தேசஸம்பிரதாய விருத்தமாக ஏற்படுவதற்கு சாஸ்திரத்தில் அதிகாரமிருக்கிறதா? சட்ட மூலமாக அவ்விதம் நிர்பந்தம் செய்வதால் ஜாதி வ்யவஸ்தை முதலியவையெல்லாம் அழிந்து விடுமா? விடாதா?

3 வர்ணங்களுக்கு ரஜஸ்வலா விவாஹம் தர்ம சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டுள்ளதா? அப்படி விதித்திருந்தால் அது எல்லா வர்ணங்களுக்குமா? அல்லது குறிப்பிட்ட சில வர்ணங்களுக்கு மட்டுமா?

4. சாரதா சட்டத்தைப் பின்பற்றுவதா? இல்லையா? சட்டத்தைப் பின்பற்றினால் சாஸ்திரம் பின்பற்றப் படமுடியாமல் கெட்டுவிடுமே? சாஸ்திரத்தைப் பின்பற்றினால் ராஜதண்டனை முதலியன வேற்படுமே? இந்த ஸ்திதியில் நாம் எவ்விதம் நடந்து வருவது.

5. விதவைகளுக்குப் புனர்விவாகம் செய்யச் சாஸ்திரங்களில் இடமுண்டா? இல்லையா?

6. சண்டாளர்களின் அஸ்பிருச்யதையை போக்கி விடுவதற்குச் சாஸ்திரானுமதியுண்டா? இல்லையா?

7. சண்டாளர்கள் தேவாலயங்களில் ப்ரவேசிப்பதற்குச் சாஸ்திரங்கள் இடந்தருகின்றனவா? இல்லையா?

8. சாஸ்திரப்படி செய்து கொண்ட விவாஹத்திற்குப்பிறகு தம்பதிகள் விவாஹ ரத்து செய்துகொள்ள சாஸ்திரத்தில் ஆதாரமுண்டா? இல்லையா?

9. ஸங்கர விவாஹத்திற்கு மனு முதலிய ஸ்மிருதிகளில் இடமிருக்கிறதா? இல்லையா?

10. தெரிந்தோ, தெரியாமலோ, மதாந்தரம் சென்றவர்களை மறுபடியும் ஆர்யமத ஜாதியில் சேர்த்துக் கொள்வதற்கு ஏதாவது ப்ராயச்சித்தம் சாஸ்திரங்களில் கூறியிருக்கின்றனவா? இல்லையா? இருந்தால் அவை யாவை?

11. ஜாதி குணகர்மங்களால் ஏற்பட்டதா? அல்லது வ்யவஹார ஸித்தமா? அல்லது பிறவியால் உண்டானதா?

12. ஒருநாள் விவாஹம் சாஸ்திரீயமா? இல்லையா? அப்படியே உபனயனமும் ஒரு நாளில் செய்யலாமா? செய்யக்கூடாதா?

13. ஆர்யஜாதி ஸ்திரீகள் புருஷர்களைப் போல், உத்யோகம், உலகஸேவை, தேசஸஞ்சாரம், பணம் ஸம்பாதித்தல்,முதலியலௌகிக கார்யங்களில் ஸ்வாதந்த்ரயம் பெற இடமுண்டா? இல்லையா? அங்ஙனமே அவர்களுக்குத் தாய பாகாதிகாரமுண்டா? இல்லையா?

14. சாஸ்திர விஹிதமாயுள்ள (48) ஸம்ஸ்காரங்களில் விடத்தகுந்த ஸம்ஸ்காரங்கள் எவை?

இந்த 14 கேள்விகளுக்கும் பதில் எழுதி அடியிற் கண்ட விலாஸத்துக்கு அனுப்ப வேணுமாய் ப்பிரார்த்திக்கிறேன்.

விலாஸம்
பாலக்கோட்லு—மேலகோதாவரி ஜில்லா
புல்ய-உ மாமஹேச்வர சாஸ்திரீ என்று
இப்படிக்கு
புல்ய-உமாமஹேச்வர சாஸ்திரி
அகில ஆந்த்ரதேசிய பண்டித பரிஷத்
கார்யதர்சீ

---

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

தாங்கள் உண்டுபண்ணியிருக்கிறீர்கள். இப்படியே ஒரு கிருஸ்துவனை நல்ல கிருஸ்துவனாகவும், ஒரு ஹிந்துவை நல்ல ஹிந்துவாகவும், அப்படியே இதர மதஸ்தர்களையும் அந்தந்த மதத்தில் ஜாஸ்தி ஊக்கமுள்ளவர்களாகவும் ஆக்குவது தான் தங்கள் கொள்கையாயிருக்கும் பக்ஷத்தில், தங்கள் மதம் நான் நினைத்ததற்குமேல் உதாரமானதாகும்.

உத்திரவு வாங்கிக்கொள்கிறேன். ஆசீர்வதிப்பீர்களாக!

ம.— ஆசீர்வாதம் பகவானைச்சேர்ந்தது. அவருடைய ஆசீர்வாதம் வேண்டுமென்று நாம் எல்லாரும் பிரார்த்திப்போம். மறுபடியும் தங்களுக்குஞாபகப்படுத்துகிறேன். உங்களுக்கு த்ருடமான காத்திரமும், நல்ல மனதும், கூர்மையான புத்தியும் பகவான் கொடுத்திருக்கிறார். சித்திரம் எழுதுகிறவன் எவ்வளவு கெட்டிக்காரனாயிருந்தாலும் வர்ணத்திரவியங்கள் எவ்வளவு நேர்மையாயிருந்தாலும் எழுதுகோல் எவ்வளவு கூர்மையாயிருந்தாலும், எழுதவேண்டிய விஷயம்எவ்வளவு சுத்தமாக மனதில் ஸங்கல்பித்திருந்தாலும், வெறும் ஆகாசத்தில் எழுத முடியாது. இவ்வளவு ஸாதனங்களையும் ஸங்கல்பங்களையும் உபயோகப்படுத்தவேண்டுமானால்அசையாத ஒரு படுதாத்துணி வேண்டும். அது விலையற்றதாய் மெல்லியதாய் இருக்கிறதென்பது கணக்கில்லை. ஆகையால் பகவானால் உங்களுக்கு அனுக்கிரஹிக்கப்பட்டிருக்கிற ஸாதனங்களை வீணாகப் பலமதங்களினுடையதாரதம்யத்தை விசாரிப்பதில் செலவழிக்காமல், பகவானால் உங்களுக்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிற கிருஸ்துவமதம் என்ற அசைவற்ற அடிப்படையில் உபயோகப்படுத்துங்கள். சித்திரம் எழுதி முடிந்து, அதன் அழகைப்பார்த்து ஸந்தோஷிக்கும் நாள் வரும் போது படுதாத்துணி தென்படாமல் தானே மறையும். அதுவரை இருந்தே தீரவேண்டும், ஞாபகம் வைத்துக்கொள்ளவும்.

---

## மேலமங்கலம், ஆஸ்திக மகாஜன சபை.

கார்த்திகை-மீ 18ம்தேதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு சபைத்தலைவர் பிரம்மஸ்ரீ பிளாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரவர்களின்கீழ் சபைகூடிற்று. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

அக்கிராஸனர் கிராம முன்னேற்றம் என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் பிரம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்திசாஸ்திரிகள் அகிலபாரதீய வித்வத்பரிஷத் சென்னையில் கூடுவது நமதுபாக்கிய விசேஷமென்றும் எல்லோரும் அதைக் கண்டுகளிக்கவேண்டியது அவசியமென்றும் பேசினார்கள். பிறகு பிரம்மஸ்ரீ அம்பி சிவாமசிரௌதிகள் இச்சபையின் சார்பாக கார்த்திகைமீ 7ம்தேதி திங்கட்கிழமை முதல் வேதவகுப்பும், ஸம்ஸ்கிருத வகுப்பும் நடத்துவதையும், லௌகிகர்கள் சிரத்தையுடன் ஈடுபடுவதைப் பாராட்டியும், மென்மேலும் சிரத்தை ஏற்பட ஈஸ்வரன் கருணைபுரிய வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள்.

பின்னர் பிரம்மஸ்ரீ கோமடம் சங்கரகனபாடிகள் சபையோருக்கு வந்தன மொழி கூறசபை மாலை6மணிக்குபூர்ணமானது.

சிவராம கணபதி கனபாடிகள்.
காரியதரிசி.

---

## அரியலூர்.

ரேஞ்சு ஆசிரிய-மானேஜர்களின் வருடாந்தரக் கொண்டாட்டம் 1937 ஹூ டிசம்பர் மீ 19-உஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு ஜில்லா கல்விச் சபையின் உபதலைவர் ஸ்ரீமான் K. T. தாத்தாச்சாரியார் அவர்கள் B,A. B.L, அக்ராசனத்தில் உடையார்பாளையம் போர்டு ஹிந்து ஆண் எலிமெண்டரி பாடசாலையில் நடைபெறும்.

எஸ். ா. வி. நாதன்,
ஜில்லா சங்கத்தலைவர்.

---

Srimath Bagavatham.
Condensed into 1800 slokas, translated into English and illustrated.
Price Rs. 1—8—0
Same into Tamil without slokas
700 pages Rs. 1—8—0
Skandas 7, 8 & 9 translated into Tamil with slokas, condensed As. 8
By T. R. Ganapatirama Iyer, Advocate.
apply to:— G. Subramania & Co
Tinnevelly.

## சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 22வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்னும் மூன்று ஸஞ்சிகையுடன் இந்த வருஷம் பூர்த்தியாகி விடுகிறது ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

ஈச்வர-ஞு கார்த்திகை-மீ 24உ

## வியவஸாயிகளின் கடன் பளு நிவாரணம்.

சில நாட்களாக அதிகம்பேசப்பட்டு வந்த கடன்பளு நிவாரண மசோதாவானது சென்னை காங்கிரஸ் கவர்மெண்டாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்காக இந்த மாதம் 20உ சட்டஸபைக்கூட்டமும் கூட்டப்பட்டிருக்கிறது. கனம் பிரதம மந்திரி தமது அருமைக் குழந்தைபோல் பாவிக்கும் இம்மசோதாவின் அழகைப் பலவழியிலும் வர்ணித்துப்புகழ்ந்து இதற்கு ஆதரவு கேட்க ஆரம்பித்திருக்கிறார். மதுவிலக்கு திட்டத்தை விட இது தமக்கு அதிக பிரியமானதென்று சொல்லிக்கொண்டு இதை நிறைவேற்றி விட முனைந்து நிற்கிறார். ஆதலால் கக்ஷி ஓட்டு பலத்தைக் கொண்டு இரண்டு ஸபைகளிலும் இந்த மசோதா நிறைவேற எவ்விதத்தடையுமிருக்காது.

இந்த ஆக்ஷேபகரமான மசோதாவைப்பற்றி அறிவாளிகளின் அபிப்பிராயமென்ன வென்பதை காங்கிரஸ் கவர்மெண்டு கவனிக்க போவதாகத் தெரியவில்லை. கக்ஷிக் கட்டுப்பாட்டிற்காகத் தலையாட்டித் தாளம் போடவேண்டிய கடமை பெற்ற ஒரு சில மைக்கலீம் பெரும்பாலோரான ஜனங்களும், பெரிய படிப்பாளிகளும் பொறுப்பாளிகளுமான பலரும் இந்த மசோதாவை எதிர்ப்பது பத்திரிகைகள் மூலம் நன்கு தெளிவாகிறது. இந்த மசோதாவானது மிக்க அநீதியுள்ளதென்பதும், கண்டிக்கத்தக்கதென்பதும் எளிதாக விளங்கக்கூடியது. இந்த மசோதாவின் ஷரத்துக்களைப் படிக்குமெவரும் இது ஒரு அபஹரிக்கும் தன்மையுள்ள கொடிய சட்டமென்பதை ஸுலபமாக உணரக்கூடும்.

நாம் ஏற்கனவே வாதித்தபடி இந்த மசோதாவானது, நல்ல ஸந்தர்ப்பத்திற்குப் பணம் கடன் கொடுத்துதவியவனுக்கு நம்பிக்கை மோசம் செய்யும் வகையிலேயே அமைந்திருக்கிறது. இப்படி விச்வாஸஹத்தி செய்யும் மசோதாவை கனம் பிரதம மந்திரி ஹிந்துமத தத்வத்திற்கு ஏற்ற மசோதாவென்று சாதனை செய்வது ஸஹிக்கக்கூடியதாயில்லை.

உண்மையில் காங்கிரஸ் காரர்கள் இந்த மசோதா மூலமாக என்ன உபகாரம் செய்திருக்கிறார்களென்று சொல்லமுடியுமா? காங்கிரஸ் ஸர்க்கார் கையிலிருந்து ஒரு பைசாவாவது விடவஸாயிகளுக்காக உபகாரம் செய்தார்களா? ஒன்றுமில்லை. கடைத்தேங்காயை எடுத்து, வழிப் பிள்ளையாருக்கு உடைத்து உருகுமவனைப் போல், பிறருடைய பணத்தை அபஹரித்து வியவஸாயிகளுக்கு உபகாரம் செய்து விட்டதாக பாவனை செய்வது எவ்வளவு விநோதம்? கணக்கற்ற கூட்டங்களிலும், தீர்மானங்களிலும் காங்கிரஸ் தலைவர்கள் கூறிய உறுதிமொழி இதுதானு? வியவஸாயிகளின் கடனில் பாதியை ஸர்க்கார் ஏற்றுக்கொண்டு கொடுப்பார்களென்று காங்கிரஸ்காரர் ஆசை காட்டவில்லையா? அப்படியிருக்க, இப்போது, "வாங்கிய கடனுக்கு வட்டி கிடையாது" என்று பேனு முனை மூலமாகப் பெரிய உபகாரம் செய்து விட்டதாக பாவிப்பது விசித்திரம். வியவஸாயக் கடன் நிவாரணத்தைப் பற்றிப் பேச்சு நடந்து வந்த போதெல்லாம், உண்மையான ஏழை உழவாளிகளுக்கும், எளிய வியவசாயிகளுக்குமே கடன் நிவாரண உதவி தேவையென்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஏற்கனவே வெளியான கடன் தவணை ஒத்திவைப்பு மசோதாவில், 400 ரூபாய்க்குக் கீழ் கிஸ்தி செலுத்துகிறவர்களென்ற வரையறையாவது சிறிது இருந்தது. இந்த மசோதாவிலோ அது ஒன்றுமில்லை. ஏராளமான நிலமும், நில வருமானமும் உள்ள பெரிய மிராசுதார்கள் கூட "வியவஸாயி" என்ற வகையில் புகுந்துகொள்ள இந்த மசோதா இடம் தருகிறது. வியவஸாய காரணத்திற்காகக் கடன் வாங்கியதென்றநியமமில்லாமல், டப்பத்திற்காகவும்; ஸுகவாஸத்திற்காகவும், நாகரிக பங்களாக்களுக்கும்,கட்டில் நாற்காலி முதலிய நாகரிக ஸாமான்களுக்கும் கடன் வாங்கி டம்பம் செய்யும் பாரி மிராசுதார்களுக்கும் இதுஸௌகர்யமாயிருக்கிறது.மோட்டார் வாஹனம்போன்ற பணம்பெருத்த டம்பங்களும் அவர்களிடமிருக்கிறது. இந்த டம்ப அநுபவத்திற்காக அவர்கள் வாங்கும் பெரிய கடனுக்குக் கூட வட்டிகொடுக்காமல் தப்பித்துக்கொள்ள இந்த மசோதா இடமளிப்பது பெரிய அநீதியாகும். இதிலிருந்து ஏழைகளுக்கு உதவவேண்டுமென்ற பெரியகூச்சல் பொய்யாகி,டாம்பிகர்களும், வீண்பணவிரயம் செய்கிறவர்களும் கூட இதனுல் ஸௌகர்யம் அடையவும், கடன் கொடுத்தவன் வாயில் விரலை வைத்துக்கொண்டு போகவும் வகை செய்திருப்பது மிகத்துரோஹமானது.

மேலும், வட்டி தள்ளுபடி விஷயத்தில் வட்டி கொடுக்க சக்தி உள்ளவன், இல்லாதவன் என்கிற தாரதம்மியம் கூட கவனிக்கப்படவில்லை. இது மிகவும்மோசமானது. வட்டி செலுத்தக்கூடிய பணத்தென்பும், வருமானமும் உள்ளவன்கூட வட்டி கொடுக்காமலிருக்க ஸௌகர்யமேற்பட்டிருக்கிறது. ஒரு ஏழை விதவை ஸ்வல்பத்தொகையை வைத்துக்கொண்டு அதன் வட்டியால் பிழைக்க வேண்டியவளாயிருக்கலாம். அவளுடைய பணத்தைக்கடனுகப்பெற்றுள்ள நிலக்காரன் அவளுக்கு வட்டி கொடுக்க மறுத்து விட்டால், அந்த விதவை ஜீவிப்பதெப்படி? அந்த பணக்காரன் வட்டி கொடுக்கப் பூர்ணஸௌகர்யமுள்ளவனுயிருந்தாலும்இந்த மசோதாப்படி அவன் தப்பித்துக்கொண்டு விடலாம். ஏழை விதவையின் கதி நிர்கதியே. இதைவிட அநியாயம் வேறு என்ன?

தவிரவும், இந்த மசோதா மற்றொரு வகையில் மிகக்குரூரமாயும், அதர்மமாயுமிருப்பதை கவனிக்க வேணும். ஸர்க்கார் கிஸ்தி காலத்தில் அதிகாரிகளின் நிர்ப்பந்தம் தாங்காமல் வியவஸாயி, பணமுள்ளவனிடம் சென்று கெஞ்சிக்கடன் பெறுகிறுன். பணமுள்ளவனும் அத்தகைய ஆபத்து சமயத்தில் அந்த வியவஸாயிக்குக்கடன் கொடுத்துதவியிருக்கிறுன். அத்தகைய உபகாரிக்கு, பிரதி அபகாரமாக வட்டி கிடையாதென்று சொல்லுவது எவ்வளவு கேவலமான அதர்மம்? ஸர்க்கார் கிஸ்தி கட்டுவதற்காக கொடுத்த கடன் விஷயத்தில் கூட வட்டி மறுப்பது நியாயமா? வியவஸாயியின் மென்னியைப்பிடித்து நெருக்கி ஸர்க்கார் பணம் கேட்கும்போது தந்து பணத்தைக் கொடுத்து உதவியவருக்குகூட இம்மசோதாவால் தீங்கு செய்வதென்றுல், தர்ம தேசமாகிய இந்த பாரத பூமியில் உபகாரம் என்ற பதமே அர்த்தமற்றதாக ஆகிவிடும் இம்மாதிரி இன்னும் கணக்கற்ற ஆக்ஷேபங்கள் இந்த மசோதாவிலிருப்பதைப்பிறகு எடுத்துக் கூறுவோம்.

## எனது ஸந்தோஷம்!

### கிஸ்திக்குப் பாண்டு வாங்கிக்கொள்ள வேணும்

ஒரு வியவஸாயி எழுதுகிறுர்:—

நான் ஆவலுடன் எதிர்பார்த்த மசோதா வந்துவிட்டது. கனம் மந்திரிக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். என்னைப்போன்ற ஏழை வியவஸாயிகளுக்கு இவ்வளவு தயையுடன் நன்மைசெய்ய முன்வந்தவர்களை இதுவரையில் நான் பார்த்ததில்லை. பெரும் கடனில் மூழ்கிக் கிடக்கும் என்போன்றவர்களுக்கு இந்த மசோதாவை விட வேறு என்ன அநுகூலம் வேண்டும்? ஆனுல்,

இதைபொட்டி மேலும் காங்கிரஸ் ஸர்க்கார் சில ஸௌகர்யங்கள் செய்து தீரவேண்டியதாகிவிட்டது. வட்டி இல்லையென்ற கோபத்தினுல் கடன் கொடுத்தவர்கள் நம்மீது அசலுக்கு வியாஜ்யம்போட்டு நிலங்களை ஏலத்துக் கொண்டுவருவார்கள். இதற்குப் பரிஹாரம் வேண்டும்.

தவிரவும் இது வரையில் நமக்கு கிஸ்திகாலத்தில் கடன் கொடுத்து வந்தவர்கள் இனி மேல் கடன் கொடுக்கமாட்டார்கள். கிஸ்தியோ செலுத்தியாக வேண்டுமே! கடனே கிடைக்காதே! ஆகையால் அங்காங்கு உள்ள கலெக்டர்கள் ஏழைவியவஸாயிகளிடமிருந்து கிஸ்திக்காக புரோநோட்டு எழுதி வாங்கிக் கொள்ளும்படி கனம் மந்திரி உடனே ஒரு உத்திரவு போடவேண்டும். கிஸ்தி காலம் நெருங்கிவிட்டது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

தாடபள்ளிக்கூடம்.



## வியவசாயிகள் கடன் நிவாரண மசோதா.

நாளது டிசம்பர் மீ 1உ வெளியான ஷை மசோதாவின் ஸாராம்சம்,

ஸெக்ஷன்8 (1)பாண்டுப்படிக்கோ, கோர்ட்டு டிக்ரிப்படிக்கோ,வேறு எவ்விதமாகவோ வியவசாயிகள் கொடுக்க வேண்டியதாயிருக்கும் கடன்களுக்கு, 1937, அக்டோபர், 1உ வரையில் ஏற்பட்டிருக்கக்கூடிய வட்டியாவற்றும் தள்ளுபடி. அஸல் தொகை மாத்திரம் தான் வஸூலிக்க முடியும்.

ஸெக்ஷன்3 (II) "வியவசாயி" என்றுல் நிலத்தில் (கிரயம் பண்ணக்கூடிய) ஏதாவது பாத்யம் உள்ளவன்; அல்லது குடிவாரபாத்யம் உள்ளவன்,அல்லது ஷை இருவரில்ஒருவரிடம் நிலத்தைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருப்பவன். ஆனுல், ஷை மூன்றுவகை வியவசாயிகளில், எவனொருவன் (A) 1935, 1936 அல்லது 1937ஞுங்களில் இன்கம்டாக்ஸ் போடப்பட்டிருக்கிறுனே, அல்லது (B) 1936, 1937 ஞுங்களில், முனிஸிபாலிட்டி ஆக்டுபடிக்கோ, லோகல் போர்டு ஆக்டுபடிக்கோ, ஆறுமீத்துக்கு அரை ரூபாயோ, ஒரு ஞுத்துக்கு ஒருரூபாயோ, தொழில் வரி செலுத்தி யிருக்கிறுனே, அல்லது(C) முனிஸிபாலிட்டியில், ஒரு ஞுத்துக்கு 600 ரூ வாடகை பொறுமானமுள்ள கட்டிடங்களுக்கு வீட்டுவரி செலுத்தியிருக்கிறுனே, அல்லது (D) ஜமீன்தாராயிருந்து ரூ 500க்கு மேல் பேஷ்கஷ் செலுத்தினுலும், இனும்தார் ஹோதாவில் ரூ. 100க்குமேல் குவிட்ரென்ட் செலுத்தினுலும், மலையாளத்தில் ஜென்மிமுறைமையில் ரூ. 500க்குமேல் நிலவரி செலுத்தினுலும், அவன் வியவசாயி ஆகமாட்டான்.

ஸெக்ஷன் 4:-அடியிற்கண்ட வகையான கடன்களுக்கு, வட்டி தள்ளப்படமாட்டாது. இந்த மசோதாவிற்கண்ட வேறு நிபந்தனைகளும், அடியிற்கண்ட கடன்களையும் பாதிக்க மட்டாது. அதாவது(a)(b)சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய கிஸ்தி, எல்லாவிதமான வரி, கடன்தொகைகள்,(c)முனிசிபாலிடி, லோகல் போர்டு முதலியவைகளுக்குச் செலுத்தவேண்டிய வரிகள், கடன்தொகைகள், (d)முனிசிபாலிடி,கண்டோன்மெண்டு, பஞ்சாயத் யூனியன் இதற்குட்பட்ட வீடுகளின் ஜாமீனின் பேரில் வாங்கப்பட்ட கடன்கள், (e)கோவாபரேடிவ் ஸொஸைட்டிகள், கோவாபரேடிவ்பாங்குகள், லாண்டு மார்ட்கேஜ் பாங்க் இவைகளுக்கு கொடுக்கவேண்டிய கடன்கள். (f)1937 ஞு அக்டோபர் 1உயில் 500 பேர்களுக்கு மேல் ஷேர்ஹோல்டர்கள் உடையதாய் எந்த கம்பெனி, பாங்குகள்,இருந்ததோ அவைகளுக்கு கொடுக்கவேண்டிய கடன்கள்,(g) நம்பிக்கை (டிரட்ஸ்டுக்கு) த்துரோஹம் செய்ததால் ஏற்பட்ட கடன்கள், (h)டிக்ரி மூலமாகவோ, வேறுவிதமாகவோ ஜீவனும்ச சம்பந்தமான கடன்கள், இந்த எட்டுவிதமான கடன்களும் இச்சட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் ஸொஸைடியோ, 500 ஷேர்ஹோல்டருக்கு மேலுள்ள கம்பெனியோ, 1937 அக்டோபர் 1உக்கு பிறகு மற்றவர்களிடமிருந்து கடன்களை மேடோவர் வாங்கினுல், அந்த கடன்களுக்கு இந்த மசோதாப்படி வட்டி தள்ளுபடி உண்டு.

ஸெக்ஷன் 8 (2):- எந்தக் கடன்களுக்கு முக்கால் வட்டிக்குமேல் வட்டிவீதம் கண்டிருக்கிறதோ, அல்லது காம்பவுண்டு வட்டி போட்டிருக்கிறதோ, அப்படிப்பட்ட கடன்களில், அஸல் தொகையைப்போல இரண்டுமடங்கு ஏற்கனவே கடனுளி செலுத்தியிருக்கும் பட்சத்தில், இனிமேல் அவனிடமிருந்து அதிகம் ஒன்றும் வாங்க முடியாது. தவிரவும், அஸல் தொகையைப்போல இன்னெருபங்குக்குமேல் வட்டியாகவாவது, வட்டிபாக்கியாகவாவது, கடனுளியிடமிருந்து வஸூலிக்க முடியாது. வட்டி ரேட் கண்டிராத போக்கியங்களுக்கு இந்த (இரண்டு மடங்கு) வட்டி நிபந்தனை கிடையாது. ஏற்கனவே வட்டி ஓர் அளவு வஸூலாயிருக்கும் கேஸுகளில், ஷை "இரண்டு மடங்கு" விதிக்குட்பட்டுத்தான் வட்டி பாக்கி கேட்க முடியும். தவிர,எவ்விதத்திலும் இப்போதுள்ளபடி அஸலுக்கு மேற்பட்டதான வட்டிபாக்கியும் கேட்க முடியாது. உதாரணம். (1)அஸல் கடன் ரூ100—ஏற்கனவே வஸூலான வட்டி ரூ50, வஸூலான அஸல் ரூ 20. அஸல் பாக்கி ரூ 80, வட்டி பாக்கி ரூ60 இதற்கு வட்டியில் ரூ 50 தான் கிடைக்கும் (இரண்டு பங்கு அஸல் ரூ200— செல்லானது ரூ 70— பாக்கி ரூ130— இதில் அஸல்ரூ 80 நீக்கி வட்டி பாக்கி ரூ 50தான் கிடைக்கும்.) உதாரணம் (2)அஸல் கடன் ரூ100,— ஏற்கனவே வட்டி செல்லு ரூ20; அஸல் செல்லு ரூ 70. பாக்கி அஸல் ரூ 30க்கும் வட்டி 40க்கும் பிராது போட்டால், வட்டி ரூ 30 தான்கிடைக்கும்$(2 \times 100-(20+70+30)$ கிடையாது.

ஸெக்ஷன் 8 (4). இந்த ஆக்ட் அநுஷ்டானத்திற்கு வருவதற்கு முன் ஏற்கனவே செலுத்தப்பட்டு உளவடைந்து போன வட்டித்துகைகளை, இந்த சட்டத்தின் ஆஸ்பதத்தைக்கொண்டு திரும்பிப்பெறமுடியாது.

(5) மேற்சொல்லிய லக்ஷணப்படி 1937, அக்டோபர் 1உயில் யார் 'வியவசாயி'யாக இருந்தாரோ அவனுக்குத்தான் இந்த சட்டப்படி வட்டி தள்ளுபடி உண்டு. வட்டியைச்சேர்த்து புதுபாண்டு எழுதிவாங்கியிருக்கிற கேஸ்களில், ஆதியிலோ,பிற்பட்டோ, அசல் தொகைகளாகக் கொடுக்கப்பட்டவைகளை மாத்திரம் வஸூல் பண்ணமுடியும். சேர்ந்தவட்டி முழுவதும் தள்ளுபடி. ஒரு பாண்டை ஒருவன் மேடோவர் பெற்றிருந்தால், மேடோவருக்கு முன்னிருந்த அசல் தொகையை மாத்திரம்தான் மேடோவர் பெற்றவன் அடைய முடியும். கடனுளியின் கோருதலின் பேரில் மேடோவர் ஏற்பட்டிருந்தால், மேடோவர் பெற்றவன்,தான் கொடுத்த முழுத்துகையையும் வஸூலிக்கலாம்.

ஸெக்ஷன் 9: 1937, அக்டோபர், 1உக்கு முன் பைலான வியாஜ்யங்களுக்கு, தள்ளுபடியில்லாமல் கோர்ட்டு டிக்ரியில் கண்டபடி பூரா செலவு தொகையையும் வர்தி வஸூலிக்க முடியும். மேற்படி தேதிக்குப் பின் பைலான வியாஜ்யங்களுக்கு, 8வதுஸெக்ஷன்படி வட்டியை தள்ளுபடிபண்ணி,பாக்கியை பிராதுதொகையாக கருதி, டிக்ரியில் செலவுதுகை கொடுக்கப்படும். ஷை தேதிக்குப் பின் பைலான வியாஜ்யத்திற்கு, இந்த ஆக்டு அநுஷ்டானத்திற்கு வருவதற்கு முன் முழுச் செலவு தொகைகளுடன் டிகிரி ஏற்பட்டிருந்தால், தீர்ப்புக்கடனுளி மனு கொடுத்தால், மேற்சொன்ன மாதிரி செலவு தொகையை குறைத்து கோர்டார்டிகிரியை திருத்திக்கொடுக்கவேண்டும். 1938-ம்ஞு ஏப்ரல் மீ 1உக்குள் காலாவதியாக போய்விடக்கூடிய பாண்டுகளைப் பொறுத்து ஏற்பட்ட வியாஜ்யங்களுக்கு மாத்திரம் செலவுதுகை பூருவும் கிடைக்கும்.

ஸெக்ஷன் 10:-மேலே 8 வது ஸெக்ஷன்படி வட்டி தள்ளுபடி பண்ணப்பட்ட கடன்களுக்கு, 1937 அக்டோபர் முதல் தேதிக்கு பிறகு நூற்றுக்கு ½ வீதம் வட்டி உண்டு.

ஸெக்ஷன் 11:-இந்த ஆக்டு அநுஷ்டானத்திற்கு வந்தபின், "வியவசாயி" எவனும் 100க்கு ½வீதத்திற்கு மேற்பட்ட பொறுப்புடன் கடன் வாங்கக்கூடாது. ஆனுல், இந்தவட்டிவிகிதத்தை அப்போதைக்கப்போது மாற்ற மாகாண கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் உண்டு.

ஸெக்ஷன் 12:-சென்னைஎஸ்டேட் லாண்டு ஆக்டுபடிக்கோ, அல்லது மலையாளம் குடிக்காணி ஆக்ட்டுபடிக்கோ குடிகளாயுள்ளவர்கள், 1345 பசலிக்கு முற்பட்ட காலத்துக்கு கொடுக்கவேண்டிய குத்தகை, வாரம் பாக்கிகளை அவர்கள் மேல்வாரதார்க்கு கொடுக்க வேண்டியதில்லை அதாவது அந்த பாக்கிகள் தள்ளுபடி. ஆனுல் 1346, 1347 இந்த பசலிகள் குத்தகையை இந்த ஆக்டு அமுலுக்கு வந்த 15மீத்திற்குள் பூராவாக செலுத்தினுல்தான், பழைய தொகைபாக்கிகள் பூரா தள்ளுபடியாகும். எந்த அளவுக்கு இந்த இரண்டு பசலிகளின் குத்தகையை கொடுக்காமல் பாக்கி போடுகிறுனே, அந்தஅளவிற்கு தாமாஷாப்படி முன்பாக்கிக்கு தள்ளுபடி கிடையாது.

ஸெக்ஷன் 13:- ஏற்கனவே டிக்ரி ஏற்பட்டிருந்தபோதிலும், இந்த ஆக்டு படி தனக்கு சௌகரியம் பண்ணித்தரவேண்டு மென்று கடனுளி மனுச்செய்து கொள்வதின்பேரில், கோர்ட்டார் இந்த சட்டத்தில் சொல்லியிருக்கும் தள்ளுபடிகளை அந்த டிகிரியில் இணைத்து திருத்திக் கொடுக்க வேண்டும்.

ஸெக்ஷன் 14:- பெண்டிங்கில் இருக்கிற டிக்ரி நிறைவேற்றும் நடவடிக்கைகளில், தீர்ப்பு கடனுளி இந்தசட்டப்படி தனக்கு சௌகரியம் கிடைக்க வேண்டி டிக்ரியை திருத்த வேண்டு மென்று. ஸ்டே (stay) கேட்டால், டிக்ரி திருத்துகிறவரையில் நிறைவேற்றுகிற கோர்ட்டு ஸ்டே கொடுக்கவேண்டும். ஆனுல், ஸ்டே கொடுத்த 60 நாளைக்குள் கடனுளி டிக்ரியைமாற்ற மனு கொடுத்துவிட வேண்டும்.

செக்ஷன் 15 -இந்த ஆக்டு அமுலுக்கு வருவதற்குமுன் இன்ஸால்வெண்டாக அட்ஜுடிகேட் ஆனவனின் கடன்விஷயத்தில் இந்த ஆக்டின் நிபந்தனைகள் செல்லுபடியுள்ளதல்ல.

ஸெக்ஷன் 16;- 1937, அக்டோபர் 1உக்குப்பிறகு, "விவசாயின்" நிலங்கள் கோர்ட் ஏலத்தில் போயிருந்தால், இந்த ஆக்டு 8,9,10 செக்ஷன்கள்படி தனக்கு சாதகம் செய்துதரவேண்டும் என்றுகோர்ட்டுக்கு மனு கொடுத்தால், தீர்ப்புபெற்ற கடன்காரர் ஷை ஏலத்தின் மூலமாக இந்த ஆக்டு. அனுமதிப்பதற்கு மேற்பட்ட தொகை வஸூலித்திருந்தால், உபரித்துகையை வாபீஸ்பண்ணும்படி கோர்ட்டார் உத்தரவுபண்ணவேண்டும்.

ஸெக்ஷன் 17:- மேற்கண்ட 6வது ஸெக்ஷன்படி, நடந்துபோன ஏலத்தை மாற்றுவதற்கு மனுகொடுப்பதற்கு, லிமிடேஷன் ஆக்டுமூலமாகவோ, ஸிவில்ப்ரொஸீஜர் கோடு மூல்மாகவோ, 90 நாள் காலாவதிபோன்ற குந்தகங்கள் கிடையாது. சொத்து ஏலம் போய் 90 நாள் ஆனபின்பும் கடனுளி மனுக்கொடுத்து ஏலத்தை ரத்துசெய்யலாம்.

ஸெக்ஷன் 18:- 17வது செக்ஷனில் கண்டபடி, நடந்துபோன ஏலத்தில் வாதியல்லாமல் மூன்றும் மனிதன் ஏலம் எடுத்திருந்தால், ஏலம் ரத்தானபின், ஏலத்துகையை அடைந்தவாதி ஏலதாருக்கு துகையைவாபீஸ் செய்யவேண்டும். ஆனுல், இப்படி ரத்தாகும் ஏலங்களுக்கு பவுண்டேஜ் பிடித்தம் கிடையாது.

ஸெக்ஷன் 19:- 17-வது செக்ஷன்படி ஏலம் ரத்தானபிறகு விவசாயி நிலத்தை பாரதீனம் பண்ணினுல், அவ்வித பாரதீனம் கடன்காரன் பாத்தியத்திற்கு விரோதமாய் செல்லாது.

சேக்ஷென் 20:- ஓர் விவசாயி இன்கம்டாக்ஸ் அல்லது தொழில்வரி செலுத்துகிறுஞ் என்று தெரிந்து கொள்வதற்கு கடன்காரர்கள் மனு பண்ணிக்கொண்டால், டிஸ்டிரிக் கலெக்டர் வேண்டிய விபரங்கள் கொடுக்க வேண்டும்.

சேக்ஷன் 21:-வியவசாயி ஒருவன் வீட்டு வரி செலுத்தியிருக்கிறுனு என்று கண்டுபிடிப்பதற்கு கடன்காரன் மனுப்பண்ணிக்கொண்டால், முனிஸிபல் சேர்மனே பஞ்சாயத்து பிரஸிடெண்டோ வேண்டியவிபரம் கொடுக்க வேண்டும்.

## பசிப்பிணி.

தான தர்மங்களில் சிறந்து விளங்கிய நமது பாரதநாட்டில் தற்சமயம் உண்ண உணவும் கட்டத் துணியுமின்றி தவிக்கும் ஜனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. முக்கியமாக, பிரதான நகரங்களில் இவர்கள் அபரிமிதமாகக் காணப்படுகிறார்கள். நகர ஸபைகள், ஜில்லா போர்டுகள், கவர்ன்மெண்டு, இவைகள் இவ்விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்திருக்கிறதாக தெரியவில்லை. பெரிய கதையை சுருங்க விவரிக்க, மதுரை நகரத்தை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.

சென்ற இரண்டு வருஷங்களாக பல தடபுடல் மாறுதல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் ஏற்பட்டு வருகின்றன. அகலமிலா தெருக்களின் ஓரங்களில்கூட உபயோகப்படாதிருக்கிற பிளாட்பாரங்கள் போடப்பட்டிருக்கின்றன. பிளஷ் அவுட்லெட்ரீன்கள் தெருக்களை அலங்கரித்துக்கொண்டு பாதசாரிகளுக்கு துற்நாற்றத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. விசாலமான மணல் நிறைந்துள்ள வைகையாற்றில் ரேடியோவின் சங்கீதம் "உணவுக்கு பதிலாக என் கூச்சலைக் கேட்டு திருப்தி அடை" என்று இறைகிறது. நிற்கவும் இடமில்லாமல் ஆயிரக்கணக்கான ஏழையர்கள் ஒருபுறம் தவித்துக்கொண்டிருக்க கடவுளின் அருளால் நிறைவு பெற்று சௌகரியமாய் வாழும் நாகரிக செல்வவந்தர்கள் இளைப்பாற அநேகம் பார்க்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருக்கிற குளங்களை சீர்திருத்தாமல், புதிய மூழ்கால் தடாகங்கள், குறிப்பிட்ட சிலர் உபயோகிக்க வெட்டப்பட்டிருக்கின்றன. ஒருவரும் உபயோகப்படுத்தாதிருக்கிற அநாவஸ்யமான பிளாட்பாரங்களுக்கு சிமிண்டு தரை போட ஒரு லக்ஷரூபாய் கவர்ன்மெண்டாரிடமிருந்து கடன் கேட்கப்பட்டிருக்கின்றது. பிச்சைக்காரர்கள் ஆயிரக்கணக்காக தெருவெங்கும் அலைந்து திரிவதைப் பார்த்தும் காங்கிரஸ் மெஜாரிட்டியுள்ள மதுரை நகரஸபை ஒரு முயற்சியும் எடுக்காமலிருப்பது வருந்தத் தக்கது.

சமீபத்தில் இவ்வூருக்கு விஜயம் செய்த ஸ்ரீமான் எஸ். சத்யமூர்த்தி M.L.A. (Central) அவர்களும், தனக்குக் கொடுத்த உபசார பத்திரிகைக்கு பதிலளிக்கும்போது இதைப் பற்றி பிரஸ்தாபம் ஒன்றும் செய்யாமல் "எல்லா வீடுகளிலும் எலக்டிரிக் லைட்கள் போடவேண்டும்" என்று சொன்னார். அதோடு நிற்காமல்

"Flush out latrines is the acme of civilization"—

"பிளஷ் அவுட் கக்கூஸ்கள் நாகரீகத்தின் சிகரம்" என்று சொன்னார். தீவிர காங்கிரஸ் வாதி என்று சொல்லப்படுகிறவராகிய இவருக்கு காங்கிரஸ் பிரசிடெண்டு பண்டிட் ஜவஹர்லால் நேருவின் மொழிகளை ஞாபகப் படுத்துகிறேன். Circe Ideal என்பதைப் பற்றி எழுதும்போது பண்டிட் ஜவஹர்லால் கூறியதாவது:— "சுகாதாரம் வெளிச்சம், நற்காற்று போக்குவரவு சாதனங்கள் இவைகளெல்லாம் முனிசிபாலிடியின் வேலைகளாயின. பார்க்குகள், தோட்டங்கள், தியேட்டர்கள், நாடக மேடைகள், ரேடியோ சங்கீதம், முதலியவைகளையும் முனிசிபாலிடிகள் இலவசமாக ஜனங்களுக்கு செய்துகொடுக்க வேண்டும். ஆனால் 'தோட்டத்தில் உட்கார நல்ல ரேடியோ சங்கீதத்தைக் கேள் சுத்தமான காற்றை சாப்பிடு.' என்று பசியால் வருந்துகிறவனிடம் சொல்வது அவனை இழிவு பண்ணி கேலி செய்வதாகும். ஆகையால் முனிசிபாலிடிகள் தங்கள் ஏரியாவிற்குள் இருக்கும் வாசிகளுக்கு வேலைகொடுக்க வேண்டும். வேலைகொடுக்க சாத்யப்படாவிடில் உணவு கட்டாயம் கொடுக்கவேண்டும். பசியினால் வருந்தாமல் செய்வதே முனிசிபாலிடியின் சிறந்த வேலை."

ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களை தனக்கு ஓர் ஆபரணமாக வைத்துக்கொண்டிருக்கும் இந்த மதுரை முனிசிபாலிடிக்கு ரேடியோ சங்கீதம், அதிகச்செலவுள்ள பிளஷ் அவுட் கக்கூஸ்கள் (நாகரீகக் கக்கூசினால் பல ஓட்டர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது) உபயோகம்படாத பிளாட்பாரங்கள், இவைகளெல்லாம் எதற்கு? புதிது புதிதாக அதிக வரி போட்டுக்கொண்டிருக்கும் (சத்தியமூர்த்தி அவர்களும் அதிக வரி போடச் சொல்லியிருக்கிறார்.) இந்த மதுரை முனிசிபாலிடி ஓர் "பசி வரி" என்ற வரியை போட்டாவது உண்மை பிச்சைக்காரர்களுக்கு உதவிபுரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிக வரி கொடுப்பவன்.

## சென்னை மாகாண பிராம்மணர் மகாநாடு

### ஓர் பிரார்த்தனை

இந்திய சமஸ்தானங்களுக்குள்பட்ட சென்னை ராஜதானியிலுள்ள ஸநாதன தர்மத்திலும் அதன் விதி விலக்கு அனுஷ்டானங்களிலும் நம்பிக்கையும் பற்றுதலும் கொண்ட பிராம்மணர்கள் மகாநாடு ஒன்று கூட்ட ஏற்பாடாகியிருக்கிறது.

ஏனெனில் இந்திய சமூகத்தில் பிராம்மணர்கள் நிலைமை மிகக் கேவலமாயிருந்து வருகிறது. அவர்களுக்கு கிட்டவேண்டிய பொருள் அடியோடு அழிந்து போய் விடவில்லையானாலும் வரவர க்ஷீணித்து வருவதை நாம் காண்கிறோம். தற்காலத்தில் இந்திய சமூகமே வரவர தன் பூர்வீக தன்மையை விட்டு மாறி வருவதை நோக்குங்கால் இனி பிராம்மண சமூகத்தை நிலைநிறுத்துவது அசாத்தியம் என தோன்றக்கூடியதாயிருக்கிறது. அவ்விதம் விட்டு விடக்கூடாதாகையால் தக்க சட்ட திட்டங்களுடன் இயக்கத்தை ஆரம்பித்து நடத்தினால் நம் எண்ணம் எளிதில் கைகூடும் என்பதற்கு ஐயமில்லை. தற்கால நிலைமையை சரிவர உணர்ந்து தக்க சக்தியுடன் திட்டங்கள் ஏற்படுத்த பிராமண சமூகத்தை ஓர் ஸ்தாபன முறையில் ஒன்று சேர்த்து, தற்போதைய சமூகப் பொருளாதார பிரசினையில் கலந்து போராடி பிராம்மண தர்மத்தை நிலைநிறுத்தவே இம்மகாநாடு நாளது டிசம்பர் மீ 30 31உ களில் சென்னையில் கூட்டப்படும், இடமும், காலமும் பின்னிட்டு அறிவிக்கப்படும். ஏராளமாக பிராம்மணர்கள் விஜயம் செய்ய வேணுமென்ற நோக்கத்துடன் உபசணை கமிட்டி மெம்பர் கட்டணம் ரூ 1-0-0 ஆகவும் பிரதி கட்டணம் 0-8-0 ஆகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பிராம்மணர்கள் தங்கள் ஸநாதன தர்மம் இருந்த நிலைமையையும் தற்போது மாறி வரும் நிலைமையும் நன்கு உணர்ந்து தவக்கமன்னியில் இம்மகாநாட்டில் கலந்து தர்மத்தையும் பிராமண சமூகத்தையும் காப்பாற்ற தக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேணுமாய் காரியக்கமிட்டியார் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

M. V. சுப்பிரமணிய அய்யர்,
கௌரவகார்யதரிசி.

## மதிப்புரை.

1. கைவல்யோபநிஷத். நிர்வாணஷ்டகம் ஸ்ரீ பகவத்பாதாள் அவர்களால் செய்யப்பட்ட நிர்வாணஷ்டக ஸ்தோத்திரமும் தமிழ் அர்த்தத்துடன் கூடியது. கைவல்யோபநிஷத் (29) மந்திரங்களும் அழகிய தமிழ் கருத்துரையுடன் விளங்குகிறது.

விலை அணு 0 1 6 தபால் செலவு தனி.

2. சிவபக்தி விசாரம். இது ஸூத ஸம்ஹிதையில் உள்ளது. பக்திவிசாரமென்ற 26-வது அத்தியாயம் முழுவதும் கிரந்த லிபியில் மூலமும் தமிழ்மொழி பெயர்ப்புடன்கூடியது. விலை அணு 0 1 6 தபால் செலவு தனி.

3. ஸ்ரீ ராமாவதார கட்டம். ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்திலுள்ளது தமிழ் கருத்துரையுடன் கூடியது. பாராயணத்துக்கு மிகவும் உபயோகமானது. விலை 0 1 6 தபால் செலவு தனி.

4. சிவபக்த லக்ஷணம். சிவபக்தவிசாரம் 19-வது அத்தியாயத்திலுள்ளது. ருத்ராத்யாய மகிமை. க்ஷேத்திர விவரணம் ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம். சைவோத்கர்ஷம் பஞ்சரத்னமாலிகை, கங்காதராஷ்டகம், சிவமானஸிக பூஜை, வியாஷ்டகம், தமிழ்மொழி பெயர்ப்புடன் கூடியது. விலை அணு 0 3 0 தபால் செலவு வேறு.

5. ஜலதான மஹிமை. மஹாபாரதம் ஆநுசாஸனபர்வத்தில் உள்ளவை. பீமஸேனன் செய்த மானஸிக பூஜாவிதியுடன் கூடியது. கிரந்த லிபியில் மூலமும் தமிழ் மொழிபெயர்ப்புடன் உளளத. விலை 0 2 – தபால் சார்ஜ் தனி.

வேண்டியவர்கள் "ஆர்யதர்ம ஆபீஸ் கும்பகோணம் என்றவிடத்திலும் பெறலாம்.

மேலக்காவேரி, ஆர். வைத்திநாதசாஸ்திரி.

## கண்ணன் காட்டிய வழி.

ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியார் எழுதியது. விவேகபோதினீ கார்யாலயம் சென்னை. விலை தெரியவில்லை இந்நூலொன்று வரப்பெற்றோம். இது பகவத்கீதையின் பொருள் விளக்கமாகும். பகவத்கீதை 18 அத்யாயங்கள் 700 ச்லோகங்கள் கொண்டநூலை வடமொழி பயிற்சி விசேஷமாயில்லாவதரின் நன்மையை நாடி இதன் சாராம்சமான 226 ச்லோகங்களை மட்டும் பொருக்கி எடுத்து அதை ஆதாரமாய்கொண்டு அதை 28 விஷயங்களாக வகுத்துத்தக்க சான்றுடன் விளக்கியிருக்கிறார். இதன்மூலம் பகவத்கீதையின் பொருள்ஸ்தூலமாய் விளங்குமென்பதில் ஐயமில்லை. புதியமாதிரியில் பல விஷயங்களுடன் வெளி வந்திருக்கும் இந்நூல் பலருக்கும் பயன்படக்கூடியதே. அடிமுதல் முடிவு வரையில் அடுத்து என்ன? என்ன? என்று வாசகர்கள் விரும்பக்கூடிய உணர்ச்சியையும் உத்ஸாகத்தையும் பெருக்கும் முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல காகிதத்தில் உயர்ந்த அச்சு. மேல் அட்டையில் ஸ்ரீ பகவான் அர்ஜுனனுக்குபதேசம் செய்கிற சிறந்தபடம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரிடமும் இந்தப்புஸ்தகம் ஒன்று இருக்கவேண்டியதவச்யமாகும்.

கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.
மேலக்காவேரி.



## Mr. T. R. V. Sastri's Mysore Convocation Adress.

(Mr. M. K. Vaithinatha Iyer, B. A., B. L.,)

The recent convocation address delivered by Mr. T. R. Venkatarama Sastrigal to the graduates of the Mysore University is a thought provoking pronouncement in finished language. Mr. Sastri is essentially a gentlemen of high culture. He points out clearly the defects in modern education and educational institutions. While not under-rating the importance of physical education, he righly points out 'the devotion to sport has exceeded all reasonable bounds'* * The pages of news-papers devoted to sport news and incessant talk of young fellows at home and outside about cricket and tennis players in distant lands have produced and accentuated the feeling of protest in my mind. The devotion to sport in which one does not take part and the time spent in discussing it are far too much. He agrees that in regard to women the highest study can be achieved without going into the University but pleads that entry into it should not be refused on account of sex. He does not however refer to the question of co-education in schools and colleges.

He deplares, and every right minded person will agree, that the Madras university Act of 1923 and the Mysore University Regulation of 1933 'have alike allowed, what is of questionable policy, the intrusion of political influences into the acadamic world of the university.' The school and the college room, the judiciary and the state departments by which the routine work of the government is carried on must be singularly free from political prejudice and patronage.

Mr. Sastri thinks that restriction of admission to universities is to some extent necessary and in this connection gives a useful word of caution. 'The real difficulty is in discriminating between those who should go into vocations and those who ought to go to universities and in persuading students and guardians to recognize the fact and make a wise choice,' 'Much tact and judgement and a certain flexibility in applying rules to border line cases would be required of the administrator. The exclusions from colleges should not begin before the vocational courses into which the students are to be *diverted*, are ready to be put into operation'

The more noticeable feature of the address is his recognition of the high ideals of ancient education. 'To understand the spirit of dedication involved in the sacred learning of an ancient student, one has only to turn to the book of the Taitriyas which, in its solemn sonerously intoned text, has a high lifting quality."The parting injunction of the teacher to the pupil * * enjoins a well-ordered life following in the wake of thoughtful, high souled men, tender hearted and moved only by righteousness 'Mr. Sastri after quoting texts pursues the theme. Their high ideals 'in study and conduct are still worthy of emulation.' 'The actual content of their study may have been different, but the spirit behind was not inferior to anything that we know or exhibit to-day in our own lives.' Their study was not 'mere memorising' as it is too often criticised. The same Upanishad shows 'Every time the pupil returned with a partial inadequate solution, the teachor sent him back with the direction to go and reflect,' till at last he found out the solution for himself. 'When the night came on and we 'no longer added to our knowledge, we still *retained* the old *discipline* and *preserved* the old heritage and in the capacity we have shown in acquiring modern knowledge, we have proof that the ancient discipline and spirit are still alive, in abundent measure'.

This retention and preservation are what the Sanatanis have at heart. If ancient lore and ancient discipline are held up to ridicule and contempt as often as one gets a chance, how will the younger generation entertain respect or love for these? How will the generation that is to grow into man-hood hereafter and the generations after them be able to tell themselves, 'We still retained the old decipline and preserved the old heritage,' if they are not brought up to some extent at least in that atmosphere as we dare presume Mr. Sastri was brought up in his youth and boy-hood. Mr. Sastri says 'night came on' and he is not able to assure his hearers the day has dawned and bright, that we hereafter may have no use for things ancient. For he himself apprehends that the dark mid-night has not yet passed. He says about British India 'those that are now in political power have associations that exert disturbing influences on the course of legislation and administration.' 'Europe is now inculcating a new lesson'. Each political party 'must not only capture power but must not allow the opposite view or its exponents to lift up their head.' 'The duty of deep study and dissemination of sound ideas laid by our ancients on those who have received higher education gains a new application in the circumstances of our time.' How will they again study there unless they are taught and made to recognise their usefulness and applicabitily even under modern conditons?

Mr. Sastri is clear about this— 'no one can say that the problem of class conflict has received a solution in Europe that we can straight away adopt as a solution for our troubles here.' —'Neither Fascism nor communism is consistent with the genius of our race and the social system we have evclved in the course of millenia and neither can be the real solution for our ills.' Mr. Sastri however gives no solution of his own of the problem. He contents himself with stating that between those to whom 'the ancient wisdom is the final word 'and those to whom revolutionary changes are welcome as adventures into the unknown' 'it would be the part of the graduates of the university to strike the same middle path, to move the immobile conservative and restrain the impatient revolutionary.' This is no real solution of the difficulty—it is but a recognition of things as they are. Mr. Sastri could well have been more concrete in his suggestions.

There is however a suggestion elsewhere in that same address which may perhaps be helpful. 'The projected vocational schools will not abolish *hereditary* crafts manship which would also require to be *revived* or encouraged. The ancient division of the community into various castes and sub-castes, each caste or sub-casts pursuing its own hereditary vocation tended to 'eliminate unrestricted competition' and served to increase the national efficicacy and output. Even to-day the dhoby washes clothes, the barber shaves, the oil monger presses oil, the trader trades, the smiths work in their smithies, the agriculturist tills the soil. Their children learn their art even from a tender age naturally and without difficulty. It will be the path of wisdom of those to whom the task of shaping our future destinies is entrusted to 'study deep' and "disseminate sound ideas laid by our ancients"

This unrestricted competition is not confined to men alone and Mr. Sastri invited the attention of his hearers to the vice-chancellor's reference to "unemployment of even women graduates. His advic to the young men and women in such trying times is particularly apposite—'Face the world with courage" "Strive to make the best of life""Dont pitch your hopes and expectations too high" 'Take what comes to you'. "Don't lose heart over unfulfilled expectations"

## மத்யார்ஜுன ஸாமவேத பாராயணம்.

முக்திக்ஷேத்திரமாகிய மத்யார்ஜுனமென்னும் மஹாக்ஷேத்திரத்தில் பக்தானுக்ரஹத்தின் பொருட்டு கைலாஸத்தினின்றும் ஆவிர்ப்பவித்த மஹாதேவர் ஜோதிர்மய மஹாலிங்கமென்று ரூபமாய் விளங்கி வருகிறார்.

பிரதி வருஷத்திலும் தை–மாதத்தில் மஹாலிங்கமூர்த்திக்கு நடந்துவரும் பிரும்மோத்ஸவத்தில் எங்கள் பரம்பரையில் சுமார் நூறு வருஷகாலமாய் விடாமல் நடத்திவரும் ஸாமவேத பாரபண பிராமணபோஜன தர்மத்தை ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஆஸ்திக பிராமணர்கள் ஒத்தாசையைக்கொண்டு பகவத்ஸன்னிதியில் நடத்திவருகிறோம். இப்படிக்கு ஈசுவர வருஷம் மார்கழிமீ 24உயில் ஆரம்பிக்கப்படும் ஷை மஹோத்ஸவத்திற்கு ஆஸ்திக பிராமணோத்தமர்கள் எல்லோரும் வந்து பகவத் தெரிசனத்தைமுன்னிட்டு எங்கள் ஸாமவேத பாராயணத்தையும் சிரவணம்செய்து கிருதார்த்தர்களாகி மேல் மேலும் ஸாமவேத பாராயணத்தை அபிவிருத்தி செய்ய பிராம்மணோத்தமர்களைப் பிரார்த்திக்கிறோம்.

வேதமூர்த்தி, ராமஸ்வாமி சிரௌதிகள்.
சுப்பிரமணிய சிரௌதிகள்.
ராமச்சந்திரச்ரௌதிகள்.
நாராயணஸ்வாமி ச்ரௌதிகள்.
திப்பிராஜபுரம்.

## தண்டாங்கூரை.

### பசுபந்த யாகம்

ஆஸ்திக மகாஜனங்களுக்கு ஓர் விக்ஞாபனம். தஞ்சை ஜில்லா தண்டாங்கூரை கிராமவாஸியாகிய அட்பாதுரை தீக்ஷிதர் என்கிற வெருனுத வாஜபேயயாஜீ அவர்கள் இதுவரையில் 35 வருஷ காலமாய் 16 ஸோமயாகங்களும், இரண்டு கருடசயனங்களும், ஜன்மஸாபல்யமாயும் லோகோபகாரகமாயும், ஈசுவரப்ரீதி செய்து, வருஷந்தோறும் செய்யக்கூடிய பசுபந்தங்களையும் நடத்தி வருகிற ஷை தீக்ஷிதாளைக் கொண்டும், ஷை யார் குமாரர் வைத்திநாத தீக்ஷிதர் ஸோமயாகம் செய்து பத்து வருஷமாய் கர்மானுஷ்டானம் செய்து வருகிறவரையும் கொண்டு, லோகக்ஷேமார்தமாகவும், ஷை யாருடைய ஜன்ம ஸாபல்யத்துக்காகவும், நாளது ஈச்வர-ஹு கார்த்திகைமீ 25உ வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பித்து ஐந்து நாளில் ஆருணகேதுக சயனத்துடன் ஞாயற்றுக்கிழமை ஒரு பசுபந்தமும், திங்கள்கிழமை ஒரு பசுபந்தமும், செவ்வாய்க்கிழமை பிராம்மண ஸந்தர்பணையும், செய்வதாய் தீர்மானித்து ஷை யாகங்கள் தண்டாங்கூரை கிராமத்தில் நடப்பதால் ஷை யாகத்துக்கு ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து உதவி செய்து யக்ஞேச்வரப் பிரஸாதத்தை அடையவேணுமாய் பிரார்த்திக்கிறோம்.

தஞ்சைஜில்லா,
ஆஸ்திக மகாஜனங்கள்.

215212



659




மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## திருவல்லிக்கேணி.

### வேதவேதாந்தவர்த்தினீயின் வார்ஷிக மஹோற்சவம்.

மேற்கண்ட வர்த்தினியின் கீழ் அடியிற்கண்ட விபரப்படி பிரதிதினம் மாலே 6மணிமுதல் 8மணி வரை ஸ்ரீவானமாமலே மடத்தில் உபந்யாசங்கள் நடைபெற்றன. 22-11-37உ ஸ்ரீ உபவே திருமழிசை ராமாநுஜாசார் ஸ்வாமி,'பகவதாராதனத்தின் ஸௌக்ருத்வம்'; 23உ. ஸ்ரீ உபவே கோவிந்தப்பங்கார் ஸ்வாமி,' ஸ்ரீ ராமாயண தாத்பர்யம்'; 24உ ஸ்ரீ உபவே கிருவாலி ராமாநுஜாசார்ஸ்வாமி, 'அழகிய மணவாளதாசர்'; 25உ ஸ்ரீ உபவே வித்வான் ஸ்ரீரங்கம் சடகோபாசார் ஸ்வாமி'; யதீந்தரும் யதீந்த்ர பாவணரும் 26உ ஸ்ரீ உபவே காரப்பங்காடு வெங்கடாசார் ஸ்வாமி,' கண்ணனும் காரிமாறனும்'; 27உ ஸ்ரீ உபவே ஸேது சமஸ்தான வித்வான் ஆர். ராகவய்யங்கார்ஸ்வாமி, ஸ்ரீராமாவதாரம்' 28-11-37உ ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கல்யாண மண்டபத்தில் மாலே 3 மணி முதல் 6 மணி வரை வார்ஷிக மஹோற்சவம் நடந்தது. மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் வி. பாஷ்யமய்யங்கார் தலைமை வஹிக்க ஸ்ரீ உபவே பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார் ஸ்வாமி 'ஸ்ரீ பார்த்தசாரதியின் ஸௌலப்யம்' எனும் விஷயம் பற்றி உபந்யசித்தார். வித்யார்த்திகளுக்கு பரிசுகளும், பண்டிதர்களுக்கு சன்மானங்களும் வழங்கப்பட்டன. வாரா வாரம் வர்த்தினி தக்க பண்டிதர்களேக்கொண்டு ஸ்ரீ ராமாநுஜ சித்தாந்த ப்ரவசனம் செவ்வையாய்நடத்திவருதலே ஸ்ரீ பாஷ்யகாராதிகளேப்பின்பற்றுகைடாகும்.

ப. ரெ. திருமலே ஐயங்கார்.

---

## சினிமாப்படச்சீர்கேடு.

எதற்கும் வரம்பு உண்டு. அளவுக்கு மிஞ்சினுல் அமிருதமும் நஞ்சாம். நற்போதனைக்காக பிரதமத்தில் ஏற்படுத்தப்பட்ட சினிமாபடக் காக்ஷிகள் உயர்நிலையை யிழந்து பரிதவிப்பது தற்போதைய மாந்தரின் மனேதத்வத்தை நன்கு காட்டுகின்றது. மதவிஷயங்களில் அதிகாரமில்லாதாரும் தத்தமக்குதோன்றியவாறு கூறுதலே இக்காலத்தன்றி முற்காலத்தில் காணமுடியாது. அதிலும் ஹிந்துமதம், சநாதந தர்மம் என்ருல் வாய்புளித்தது மாங்காய் புளித்தது. என்ற கணக்கிலேகூச்சமின்றி ஊத்தை வாய் திறக்கத்துணிந்து விடல் அறிவாளிகள் செயலல்ல. மனுநெறி, ஆகமமார்க்கம் வேதவழி இவற்றிற்கு முரண்பாடாக கட்டுக்கதைகள் இருப்பின் அவற்றை அறிஞர் ஏற்கார். அறிஞர் அங்கீகாரமில்லாதன பயனற்றவையே. சான்றுகள் இருவகைப்படும். அவையாவன அகச்சான்று, புகச்சான்றுஅகச்சான்றே இவ்விரண்டில் வலியுடைத்தது. ஆன்ருேர் அருளிய கிரந்த விஷயங்களுக்கும் அவர்கள் விஷயமாக இப்போது சிலாற் கூறப்படும் கர்ணபரம்பரைக்கதை கட்கும் முரண்பாடு தோன்றிஞல் பின்னவற்றைக்கைவிடுவதே பேல் என்று உத்தமர் நிர்வஹிப்பர் இவை தான் உத்க்ருஷ்டம் என்று வாதிப்பது மூலக்கிரந்தங்களே நன்கு பயிலாத தோஷத்திஞல். இவற்றை ஆதாரமாகக்கொண்டு நாடகங்களும் சினிமாப்படங்களும் தயாரித்தால் அவை முற்றும் அங்கீகரிக்கத்தக்கதாயிருப்பது தர்லபம். சிலப்பதிகாரத்துக்கும் நடிக்கப்படும் கோவலநாடகத்துக்கும் எத்தனேயோ வாசி காண்கலாம். அப்பர் சரித்திரத்தில் முரண்பாடிருந்ததில் அதிருப்தியடைந்த சிலர் செய்த பலத்த கிளர்ச்சியால் அப்பாகங்கள் அறவே நீக்கப்பட்டன.

தற்போது ஸ்ரீ ராமாநுஜர் படத்தில் இவ்வாபாசம் வந்துளதாகக் கூறப்படுகிறது. இஃது ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய மனவுறுதியைப்பரிசோதிக்கவுற்பட்ட பரிபவம் போலும். அகில ஸ்ரீ வைஷணவர்களும் ஏகமனத்தினராய் விரோதாம்சங்களே அறவே ஒழிக்க அரும்பாடுபடல் அத்யாவசியகம். துன்பத்தை முளேயிலேயே தொடைத்துவிட வேண்டும். ஆங்காங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள், ஆசார்ய சிகாமணியான உடையவர் விஷயத்தில் ஒருவரும் அபசாரப்பட்டு அனர்த்தத்துக்கு ஆளாகாமல் தடுக்கவேண்டிய கார்யங்களே நிமிஷம் தாமதியாது செய்வார்களாக. ஆட்டைக்கடித்து, மாடடைக்கடித்து, மநுஷ்யனேயும் கடித்தது, என்ற கணக்கில் வரும்படி செய்யாமல் வரும்முன்னர் தீங்கை நசுக்குவதே உத்தமம் என்று சான்ருேர் கொள்கை.

ப. ரெ. திருமலே ஐயங்கார்.

---

ஆவுடன் கூட இருக்கும் சாதுக்களுக்கு கூட இன்னர் வாஸ்தவமாக தர்மம் செய்கிருரென்பது தெரியாததால் கொடுக்க முடியாமல் போகிறது. ஆகையால் வாஸ்தவமான ஷை தர்மத்தை உத்தமக்ஷேத்திரத்தில் நடத்தும்தீக்ஷிதர் அவர்களிடத்தில் தர்மபுத்தியை காட்டுவதற்காக இந்த விஷயமானது தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

(திரவியம் அனுப்பவேண்டிய விலாசம்)
ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் பனங்குடி.
பனங்குடி போஸ்டு நன்னிலம் தாலுக்கா
சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்.

## ஸ்ரீவாஞ்சிய க்ஷேத்திரம் வேதபாராயண தர்மம்.

இந்த பூமியிலுள்ள சமஸ்தமான் மனுஷ்யர்களும் ஒருதினம் வசித்த மாத்திரத்திஞல் கொடுக்கக்கூடிய கைலாசத்திற்கொப்பான ஸ்ரீவாஞ்சிய மென்றக்ஷேத்திரமானது காவேரிதீரத்திற்கு சமீபத்திலும் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து சுமார் 6மைல் தூரத்திலும் உள்ளது. இந்த க்ஷேத்திர வைபவத்தை தென்னிந்தியாவில் அறியாத ஆஸ்திகர்கள் அதிகமாயிருக்க முடியாது. ஸ்காந்தம் முதலான மகாபுராணங்களில் இந்த க்ஷேத்திர வைபவத்தை மஹாமுனிவரான ஸ்ரீவியாஸாச்சாரியாள் வர்ணித்திருப்பது சத்தியமென்பதுக்ஷேத்திரத்திற்கு ஒருதரம் சென்று குப்த கங்கை என்னும் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து யம தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து மங்களாம்பிகா சகித ஸ்ரீவாஞ்சேஸ்வரரை தரிசித்தால் அப்பொழுதே புலப்படும். யம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு யமபாதையே கிடையாதென்பது புராணங்கள் கூறியிருக்கிறது. அதிலும் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் பஞ்சமஹா பாதகங்களும் விலகிவிடும். இப்பொழுதும் கோடிக்கணக்கான ஜனங்கள் அந்த புண்ணியகாலத்தை முன்னிட்டு ஒவ்வொரு பானுவாரமும் வருகின்றனர் அப்பொழுது உத்ஸவமும் வருஷந்தோறும் நடந்து வருகிறது. ஷை உத்ஸவத்தில் வேதபாராயணம் சாதுக்களுக்கு சந்தர்ப்பணே இவைகளே நன்னிலம் பனங்குடியில் வசித்து வந்த பாரத்வாஜ மகரிஷி போன்ற மகாதபஸ்வியான பிரம்மஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வந்தார். அவர்கள் தன்னுடைய 90வது வயதில் சன்னியாசம் செய்து கொண்டு ஸித்தியான பிறகு அவருடைய புத்திரர் பிரும்மஸ்ரீ ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்கள் நடத்தி வருகிருர்கள். இந்த ஈசுவரஷூ கார்த்திகைமீ 18 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 10நாள் பெரிய மஹோற்சவத்தில் வேதபாராயணத்தையும் சந்தர்ப்பணேயையும் ஷை தீக்ஷிதர் அவர்கள் நடத்திவருகிருர்கள். அனைவரும்உதவி புரியவேண்டியது மிகவும் அவசியமாகும். வேதாத்தியயனம் பண்ணுகிற சாதுக்கள் குக்ஷிகளில் நமது அன்னம் சேர்ந்து ஜீர்ணமாஞல் நமது பாபங்கள் எல்லாம் ஜீர்ணமாகிவிடும். இந்தப்பெரிய தர்மத்தை தீக்ஷிதர் அவர்கள் ஒருவராம் பொருத்து செய்யமுடியாததால் சாதுக்கள் அக்ஷதமாகவோ அல்லது திரவ்யமாகவோ கொடுத்து உபகாரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இக்காலத்தில் தர்மத்திற்கு கொடுக்கவேண்டு மென்கி

Printed by S. Kalyansaundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kvmbakonam.
Published by A Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

691

ஆர்யதர்மம்

4 ஸ 47

22

~~22~~ 16-12-1937

215213

653

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 22 | கும்பகோணம் கலி5039 ஈச்வரஹு மார்கழி-மீ 2வ 1937ஹு டிஸம்பர்-மீ 16வ | வா 47

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0

தனிப் பிரதி அணா 1.

**விளம்பர விகிதம்**

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு, மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## சென்னை சட்ட ஸபை 20வ கூடும்.

கடன் நிவாரண மசோதாவைப்பற்றி யோஜிப்பதற்காக டிசம்பர்மீ 20வ சென்னைசட்ட ஸபை கூடுமெனத் தெரிகிறது. ராஜாங்க ஸபை மெம்பர்களுள்பட சிலரை தனிக்கமிட்டியாக நியமித்து இந்த மசோதாவின் பரிசீலனை நடக்கும். தனிக் கமிட்டி[illegible]ஸ்து உடனே பிரசுரிக்[illegible] பிறகு ஜனவரிக்[illegible]தநல்இது சட்டமாக நிறைவேற்றப்படும்.

## போலீஸ் உத்யோகஸ்தர்மீது லஞ்சப்புகார்.

திருநெல்வேலி ஜில்லாவில் பஸ் [illegible]காரர்களிடமிருந்து சில போலீஸ் உத்யோகஸ்தர்களும் கான்ஸ்டேபிள்களும் அடிக்கடி லஞ்சம் வாங்கியதாக வந்த புகாரை விசாரித்து 7, 8 போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் ஸஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணை நடைபெறும்.

## கல்லூரில் கோவில் திருட்டு. விக்ரஹம் பெயர்க்கப்பட்டது.

கும்பகோணத்திற்கு ஸமீபமாயுள்ள கல்லூர் கிராமத்திலுள்ள பெருமாள் கோவிலில் திருடர் புகுந்து மூல விக்ரஹத்தைப் பெயர்த்து அதனடியிலுள்ள ஸாமான்களைத்திருடிக் கொண்டு போய் விட்டதாகத் தெரிகிறது போலீஸ் விசாரணை நடக்கிறது.

## காந்திஜி பம்பாய் வந்தார்.

ஸ்ரீமான் காந்தி தமது ரத்தக் கொதிப்பு வியாதி காரணமாக மிகுந்ததூர் பலமாகியிருக்கிறார். வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவர் பம்பாய் ஸமுத்ரக்கரையில் வஸிக்க அவ்விடம் வந்திருக்கிறார்.

இங்கு வந்ததும் அவர் குணம் அடைந்து வருவதாகத் தெரிகிறது

## டாக்டர் பட்டம்,

[illegible] ஸர்வ கலா சாலையார் கொசசி மஹாராஜாவுக்கு டாக்டர். ஆப் லாஸ் என்ற கௌரவப்பட்டத்தை அளிக்க நிச்சயித்திருக்கிறார்கள். இந்த விஷயம் பண்டித மாளவியாஜியால் மஹாராஜாவுக்குத் தந்தி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இந்தியாவில் ஆகாயப்படையெடுப்பு. விஷ வாயு நிவாரண முறை.

இப்போது பல தேசங்களிலும் விஷ வாயு ப்பிரயோகத்தினால் ஜனங்களுக்கு அபாயமூண்டு பண்ணுவது அதிகரித்திருப்பதால், இந்தியாவிலும் இந்த அபாயம் நேரிடக் கூடியதாயிருப்பதால் பொது ஜனங்கள் இந்த ஆபத்திலிருந்து தப்பிக் கொள்ளவேண்டியதற்கான சில முறைகளை இந்தியா கவர்ன்மெண்டார் துண்டு பிரசுரமூலம் வெளியிட்டிருக்கிறார்கள்.

## 6-ஜில்லாக்களில் மதுவிலக்கு.

ஐக்ய மாகாண காங்கிரஸ் கவர்ன்மெண்டார் அந்த மாகாணத்தில் 6 ஜில்லாக்களில் பூர்ண மதுவிலக்கை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்போவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இதன்மூலம் 20 லக்ஷம் பேர் குடியிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். சேலமொன்றில் மதுவிலக்குச்செய்யத் திணறிக் கொண்டிருக்கும் சென்னையை விட ஐக்ய மாகாணம் தைர்யசாலியே!

## கட்டாய ஹிந்தி திட்டம். தயாராகிறது.

சென்னை மாகாணத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் ஹிந்தியை கீழ் வகுப்புக்களில் கட்டாயமாக போதிக்க நிச்சயித்திருப்பதை முன்னிட்டு கல்வி மந்திரியும், கல்வி இலாகாத் தலைவரும் வேறு சிலரும் கூடி யோஜித்து கல்வி இலாகாத்தலைவரைக் கொண்டு ஒரு திட்டம் தயாரிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. அவரும் அந்த திட்டத்தைத் தயாரித்திருப்பதாக த்தெரிகிறது. தற்காலம் சில இடங்களில் மட்டுமே கட்டாய ஹிந்தி வருமாம்

## மீண்டும் அந்தமான் கைதிகளின் பயமுறுத்தல்

அந்தமான் தீவிலுள்ள ராஜீயக் கைதிகள் விடுதலை விஷயமாக காந்திஜியும் கவர்னரும் கலந்து பேசிய விவரம் தெரியவில்லையென்றும், அதை வெளியிடா விட்டாலும், அது திருப்திகாமாயில்லாதிருந்தாலும் கைதிகள் யாவரும் மறுபடி உபவாஸஹடம் செய்யப் போவதாக காந்திஜிக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
குணம், மணம், காரம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.

ரஷீட் ஜெம்ஷேட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல்வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

# தேசிகன் தேன்மொழிகள்.

## நவீன வித்யாப்யாஸம்.

நிலை தவறு.

ஒரு நாள் ஸாயங்காலம் ஒரு பண்டிதர் வந்து ஸ்ரீ மகாஸ்வாமிகளவர்களை வந்தனம் செய்தார். அவருடைய ... சாரிக்கிற ஸந்தர்ப்பத்தில் "உங்கள் பையன் என்ன வாசித்துக்கொண்டிருக்கிறான்" என்று ஸ்வாமிகளவர்கள் கேட்க

ப:- இப்பொழுது தான் ஆறாவது பாரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறான். வருஷக் கடைசியில் பரீக்ஷைக்குப் போக வேண்டும் —என்றார்.

ம:— அதற்கப்புறம்?

ப:— இன்னம் தீர்மானம் ஆகவில்லை. கொஞ்ச நாளாகவே படிப்புச்செலவுகளை அதிகாரிகள் மிகவும் ஜாஸ்தியாக்கி விட்டார்கள், என் சொல்ப வரும்படியிலிருந்து செலவழிக்க மிகவும் சிரமப்படுகிறேன். இன்னமும் மேலே வாசிக்கிறதானால் எப்படி நடக்க போகிறதென்று தெரியவில்லை. ஆனால் பையன் நல்ல புத்திசாலியாகவும் முன்னுக்குவரக்கூடியவனாகவும் இருப்பதால் பின்னால் நன்றாய் பிரகாசிப்பான் என்றும் இப்பொழுதுள்ள அசௌகர்யத்தைபொருட் படுத்தக்கூடாதென்றும் அவனுடைய உபாத்யாயர்கள் சொல்லி வருகிறார்கள்.

ம:— பின்னால் பிரகாசிக்கிறது என்றால், பணக்காரனாகிறது என்று தானே அர்த்தம்?

ப:— அது மாத்திரம் இல்லை. மதிப்பு, செல்வாக்கு எல்லாம் சேர்ந்தது தான்.

ம:— எப்படியும் ஐஹிக ஸம்பத்து தானே?

ப:— ஆமாம். இந்தக்காலத்தில் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் சொல்லிக்கொடுக்கிற வாசிப்பு பூராவும் ஐஹிக ஸம்பந்தமாகவே இருப்பதால், அத்யாத்மமாக என்ன பிரயோஜனத்தை எதிர்பார்க்க முடியும்?

ம.— அந்த அத்யாத்ம பிரயோஜனத்தை முன்னிட்டு நம் தர்ம மார்க்கத்தில் பழக்குவதற்கு நீங்கள் வேறு ஏற்பாடு செய்திருக்கிறீர் என்று நம்புகிறேன்.

ப:— அதற்கு ஸாவகாசம் ஏது? காலையிலும் முன் ராத்திரியிலும் அவன் பள்ளிக்கூட பாடங்களை வாசிக்க வேண்டியிருக்கிறது. ஸாயங்காலம் ஏதாவது விளையாட்டில் போய் விடுகிறது. பாக்கி வேளையோ பள்ளிக்கூடம்.

ம:— நம் தர்மத்தைக்கற்றுக்கொள்ளவும் அப்யஸிக்கவும் காலமே அகப்படவில்லை போலும்!

ப:— கொஞ்சம் கூட இல்லை. ஆனால் சில பையன்கள் போலில்லாமல் ஏதோ ஸந்தியாவந்தனத்தை யாவது ஒருவாறு பண்ணி வருகிறானே என்று ஸந்தோஷிக்கிறேன்.

ம:— எனக்கும் மிகவும் ஸந்தோஷம். ஆனாலும் அவனுடைய அத்யாத்ம சிரேயஸ்ஸை நீங்கள் கவனியாமலிருப்பதாக தோன்ற வில்லை?

ப:— தோன்றத்தான் தோன்றுகிறது. என்ன செய்கிறது? நம் தேசத்தின் தற்கால நிலைமை அப்படியிருக்கிறது.

ம:— நீங்கள் உங்கள் பால்யம் முதல் பிராசீன ஸம்பிரதாயத்திலேயே வேதம் முதலிய சாஸ்திரங்களைக்கற்று முன்னுக்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா?

ப:— ஆம்.

ம:— தங்களுக்கு கொடுக்கப்பட்ட வித்யையும் பயிற்சியும் வாத்ஸவத்தில் ஹிதகரம் தான் என்று நம்புகிறீர்களா?

ப:— அதில் என்ன ஸந்தேஹம்?

ம:— அப்படியானால், அப்படி ஹிதகரமென்று நீங்கள் வாஸ்தவமாய் நம்புகிற வித்யையும் பயிற்சியையும் உங்கள் புத்திரனுக்கு நீங்கள் கொடுக்காமலிருப்பது நியாயமா?

ப:— நியாயமில்லை தான். ஆனால் என்ன முடிகிறது? தற்கால வாசிப்பு இல்லாமல் இப்பொழுது ஒரு கார்யமும் நடத்த முடியவில்லையே.

ம:— அந்த வாசிப்பு இல்லாமலே தாங்கள் காலக்ஷேபம் செய்ய வில்லையா?

ப.— ஏதோ ஒரு மாதிரித்தான். நடக்கிறது.

ம:— ஏன் அப்படிச்சொல்கிறீர்கள்? தங்களுக்கு எவ்விதக்குறையும் இல்லை. உங்களிடம் வரும் யாவரும் உங்களை வெகு மரியாதையுடன் பாவிக்கிறார்கள். உங்கள் விஷயத்தில் அதிருப்திக்கு என்ன காரணம் இருக்கிறது?

ப:— அதிகமாயில்லை யென்பது வாஸ்தவம். இருந்தாலும் எங்களை கர்நாடக பண்டிதர்கள் என்று வைத்து, எங்கு போனாலும் உத்யோகஸ்தர்கள், வக்கீல்கள் முதலிய லௌகிகர்கள் எல்லாருமே, அவர்களிடமிருக்கிற புதிய படிப்பு எங்களிடமில்லை யென்ற காரணத்தினால், அவமதிக்கிறார்கள்.

ம:— உங்களுக்கிருக்கிற பிராசீனப்படிப்பு அவர்களுக்கு இல்லை யென்ற காரணத்தினால் நீங்கள் ஏன் அவர்களை அவமதிக்ககூடாது?

ப:— நாங்கள் எப்படிச்செய்கிறது?

ம:— ஏன் செய்யக்கூடாது? நீங்கள் அடைந்திருக்கும் பயிற்சி அவர்களுடையதை விட மேலானது தான் என்று நீங்கள் நிச்சயமாய் நம்பும் விஷயத்தில், உங்கள் மனோபாவம் அப்படித்தானே இருக்க வேண்டும்? எப்படியும் அவர்கள் உங்களை அவமதிக்கும்படி நீங்கள் இடம் கொடுப்பதற்கு நியாயம் கொஞ்சமேனும் கிடையாது.

ப:— நாங்களா இடம் கொடுக்கிறோம்? அவர்கள் மனோபாவனை அப்படி இருக்கிறது.

ம:— அப்படியானால், அவர்களுடைய ஸம்மதத்தை எதிர்பாராமல் நீங்கள் அவர்களையும் அவமதிக்கலாமே? அவ்விதம் செய்கிறீர்களா?

ப:— நாங்கள் செய்கிறோம் என்று சொல்வதற்கில்லை.

ம:— ஜனங்களுடைய தற்கால நிலைமையை நான் தெரிந்து கொண்ட மட்டில், இதரர்கள் அவமதிக்கும்படி பண்டிதர்களே இடம் கொடுத்து வருவதுடன் நிற்காமல் அந்த லௌகிகர்களையே பகுமதித்தும் வருகிறார்கள்.

ப:— வாஸ்தவம் என்று தான் ஒப்புக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

ம:— மேலும், நீங்கள் ஒரு புஸ்தக மூட்டையையோ வேஷ்டி மூட்டையையோ கையில் சுமந்து கொண்டு பாதசாரியாய் ரஸ்தாவில் தள்ளாடிக்கொண்டு போய்க்கொண்டிருக்கும் போது ஒரு லௌகிகர் ஸுகமாக ஒரு மோட்டார்காரில் போவதைப்பார்த்தவுடன், உங்களுக்கு அஸூயை ஏற்படுகிறதா இல்லையா?

ப:— சில வேளைகளில் ஏற்படத்தான் ஏற்படுகிறது.

ம:— வியக்தமாய்தனக்குள்ளேயே ஒப்புக்கொள்ளத்தயாராயில்லாமலிருந்தாலும் பால்யத்தில் இப்புதிய வாசிப்பின் நன்மையை அடையாமல் போய் விட்டோமே என்ற பச்சாதாபமும் இருந்திருக்கும்.

ப:— அதுவும் சில வேளை இருக்கத்தான் இருக்கிறது.

ம:— அத்துடன் இராமல், இவ்வுபயோகமற்ற வேதத்தில் பால்யத்தை வீணாக்கி விட்டோமே என்ற எண்ணமும் உள்ளூர இருக்கும்.

ப:— அவ்வளவு தூரம்நினைக்காமல் போனாலும், புதிய மாதிரி வாசிப்பும் இருந்திருக்கலாமென்று நினைப்பதுண்டு.

ம.— புதிய மாதிரி என்றால் உபயோகமுள்ள வழியில் என்று தானே அர்த்தம்?

ப:— ஆம்.

ம:— அதாவது வைதிகப்பயிற்சி உபயோகமற்றதென்றாவது அல்லது இங்கிலீஷ் படிப்பை விட உபயோகத்தில் குறைந்தது என்றாவது நினைத்துத்தானே இருக்க வேண்டும்?

ப:— அவ்வளவு தூரம் நினைத்ததாகத்தெரியவில்லை.

ம:— வாத்ஸவமே அதினால் தான் "உள்ளூர" என்று சொன்னேன், அப்படி எண்ணம் ஏற்படும் ஸமயத்தில், இந்த உபயோகமற்ற வித்யையை கற்றுக்கொள்ளும்படி செய்த பெற்றோர்களையும் வைத மாதிரி தானே ஆகும்?

ப:— ஆகும் என்பது வாத்ஸவம்தான்.

ம:— ஆகையால் லௌகிகரைப்பார்க்கும் பொழுதெல்லாம், அவருடைய வாசிப்பு உங்களுக்கில்லையே என்ற வருத்தம், உங்கள் வாசிப்பு உங்களுக்கு இருக்கிறதே என்ற வருத்தம், அந்த வாசிப்பை கொடுக்காமல் இந்த வாசிப்பை கொடுத்ததற்காக மாதா பிதாக்களின் பேரில் அதிருப்தி, அப்படியே உபாத்யாயர்களிடமும் அதிருப்தி, இவைகள் ஏற்படுகின்றன.

ப:— மனோபாவத்தை விவேசனம் செய்து பார்த்தால், இவ்வளவும் இருக்கத்தான் இருக்கிறது.

ம:— இந்த உயர்ந்த பயிற்சியை அடைந்த உங்களுக்கே லௌகிகர்களிடத்தில் பகுமானம் ஏற்படுமானால், உங்கள் மனோபாவத்தை அப்படியே அவர்களும் ... துக்கொண்டு தாங்கள் மேலானவர்கள் தான் என்று நினைத்துக்கொண்டு உங்களைக்குறைவாக நினைத்தால் அது அவர்கள் தப்பிதமாகுமா? வைதிகப்பயிற்சியின் தன்மையைத்தெரிந்த நீங்களே இதைக்கொடுத்ததற்காக மாதா பிதாக்களை வையும் வரை தங்களை மறந்திருக்கும்போது, அது என்னதென்றே தெரியாதவர்கள் அதை மதிக்கவில்லை யென்பது ஆச்சர்யமா? தவிரவும் சாஸ்திரத்தில் நம்பிக்கையுள்ளவர்களான நீங்கள் வேதத்தையும் நிரபராதிகளான மாதா பிதாக்களையும் உபாத்யாயர்களையும் வைத பாபத்திற்காவாவது தங்களுக்கு ஜாஸ்தி சிரமம் ஏற்படாதா? ஐஹிகமான வாசிப்பிலேயே வீணாக பால்யத்தை கழித்திருக்கும் லௌகிகரைப்பார்த்து, நீங்கள் அனுதாபப்படக்கூடாதா? வைதிக ஸம்பந்தமன்னியில் ஒருவித பயிற்சியை கொடுத்து அத்யாத்ம சிரேயஸ்ஸைக்கெடுத்த தோஷத்திற்காக, லௌகிகர்களின் தாயார் தகப்பனார்களை வையக்கூடாதா? நீங்கள் லௌகிகர் விஷயத்தில் அனுதாபப்படுகிறீர்களென்பதை அவர்கள் உணரும்படி செய்வதற்கென்ன? தங்கள் நடத்தையினால் உங்களைககண்டு அவர்கள் மதிக்கும்படி நீங்கள் நடந்து கொள்வதற்கென்ன?

— ———

### மூகபஞ்சசதியின் முதல் பாகம்.

### "ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B.L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.

தபால்செலவு வேறு] [விலை அணா 0—8—0.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,

டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

ஒரே தடவையில் 2 புஸ்தகங்களுக்குமேல் வாங்குபவர்களுக்கு போஸ்டேஜ் இனாம்.)



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# 'மூகபஞ்சசதீ'

## கடாக்ஷ சதகம்.

(18—11—37 தொடர்ச்சி)

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே க்ஷணவீக்ஷணம் - உனது க்ஷணநேரப் பார்வையானது, ஸக்ருத் ப்ரணமத: - ஒருமுறை நமஸ்காரம் செய்த ஜந்தோ: - மனுஷ்யனுக்கு, ஜகதீட்யதாம் ச - லோகத்தார்களால் புகழப்படுதலையும், தேஜஸ்விதாம் ச - தேஜஸ்ஸோடிருத்தலையும், நிசிதாம் மதிம் ச - கூர்மையான புத்தியையும், ஸபாயாம் - ஸபையில், மாக்ஷிக ஜரீமிவ - தேனின் பெருக்குபோன்ற, வைகரீம் ச - வாக்கையும், லக்ஷ்மீம் ச - செல்வத்தையும், பக்ஷ்மளயதி - அதிகரிக்கச் செய்கிறது.

1. இதில் அம்பிகையை ஒரு தடவை நமஸ்கரித்தாலேயே அவன்மீது அம்பிகையின் பார்வையானது க்ஷணநேரம் பட்டாலும் அவ்வித அனுக்ரஹம் பெற்றவனுக்கு ஏற்படும் விசேஷ நன்மைகளைப் பற்றிக் சொல்லப்பட்டது. இம்மாதிரி ஸகல ஸௌபாக்கியங்களும் அம்பிகையின் பக்தர்களுக்கு ஏற்படுவதைப்பற்றிப் பலவிதமாக கவிகளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

2. ஜரீ என்றால் நீர்வீழ்ச்சி, ஊற்று, அருவி என்றர்த்தம்.

3. அம்பிகையை ஒரு முறை நமஸ்காரம் செய்தவனுக்கே இப்படி ச்லாக்யமான கவித்வமானது ஏற்படுவதை ஸ்ரீ மதாசார்யாளும்

'ஸக்ருன்னத்வா ந த்வாம் கதமிவ ஸதாம் ஸன்னிததே
மது க்ஷீர த்ராக்ஷா மதுரிம துரீண: பணிதய: |'

என்பதாக 'ஸௌந்தர்ய லஹரி'யில் வர்ணித்திருக்கிறார்கள்.

63. காதம்பினீ கிமயதே ந ஜலானுஷங்கம்
ப்ருங்காவளீ கிமுரரீகுருதே ந பத்மம் |
கிம் வா களிந்ததனயா ஸஹதே ந கங்காம்
காமாக்ஷி நிச்சயபதம் ந தவாக்ஷிலக்ஷ்மீ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, காதம்பினீ - மேகங்களின் கூட்டமானது, ஜலானுஷங்கம் - ஜலத்தின் ஸம்பத்தை, அயதே ந கிம் - அடையவில்லையா? ப்ருங்காவளீ - வண்டுகளின் கூட்டமானது, பத்மம் - தாமரஸ புஷ்பத்தை, உரரீகுருதே ந கிம் - ஒப்புக்கொள்கிறதில்லையா (சேர்த்துக்கொள்கிறதில்லையா,) வா - அல்லது, களிந்த தனயா - யமுனா நதியானது, கங்காம் - கங்கையை, ஸஹதே ந கிம் - பொருத்துக்கொள்வதில்லையா (சேருகிறதில்லையா) தவ அக்ஷிலக்ஷ்மீ: - உனது கடாக்ஷலக்ஷ்மியானது நிச்சய பதம் - நிச்சயமாய் (ஸ்திரமாய், சஞ்சலமில்லாமல்) இருக்கும் தன்மையை, ந - (ஏன் அடைகிறது) இல்லை.

64. காகோல பாவக த்ருணீகரணேऽபி தக்ஷம்
காமாக்ஷி பாலக ஸுதாகர சேகரஸ்ய |
அத்யந்த சீதளதமோऽப்யனுபாரதம் தே
சித்தம் விமோஹயதி சித்ரமயம் கடாக்ஷ: ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, அயம் தே கடாக்ஷ: - இந்த உனது கடாக்ஷமானது, அத்யந்த சீதளம்: அபி - தான் மிகுந்த குளிர்ச்சியுடையதாயிருந்தபோதிலும், பாலக ஸுதாகர சேகரஸ்ய - பாலசந்திரனை சிரோபூஷணமாயுடைய பரமசிவனுடைய சித்தம் - மனதை, (அது) காகோல பாவக - (காலகூட) விஷாக்னியையும், த்ருணீகரணே தக்ஷம் அபி - த்ருணமாத்ரமாகச் செய்வதில் ஸாமர்த்யமுடையதாயிருப்பினும், அனுபாரதம் - இடைவிடாமல் (எப்பொழுதும்,) விமோஹயதி - மோஹமடையச்செய்கிறது, சித்ரம் - (இது) ஆச்சர்யம்.

1. அத்யுக்ரமான காளகூட விஷத்தின் அக்னி ஜ்வாலைகளுக்கும் அஞ்சாத பரமசிவனுடைய மனதானது, அம்பிகையின் கடாக்ஷம் அத்யந்தம் குளிர்ச்சி பொருந்தியதாயிருந்தபோதிலும் அதற்கு வசப்பட்டு மயங்குகிறதே, இந்த ஆச்சர்யத்தை என்னென்று சொல்வது என்று கவியானவர் வர்ணிக்கிறார்.

2. பரமசிவனுடைய சிரோபூஷணமாயிருக்கும் சந்த்ரனானவன் எப்போதும் பாலசந்த்ரனாயிருப்பதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

65. கார்பண்ய பூர ரஸ வர்த்தித மம்ப மோஹ
கந்தோத்கதம் பவமயம் விஷபாதபம் மே |
துங்கம் சினத்து துஹிநாத்ரிஸுதே பவத்யா:
காஞ்சீபுரேச்வரீ கடாக்ஷ குடார தாரா ||

அம்ப - தாயே!, துஹிநாத்ரி ஸுதே - ஹிமவானுடைய பெண்ணே!, காஞ்சீபுரேச்வரீ - காஞ்சீ நகரத்திற்கு ஈச்வரியாயிருப்பவளே!, பவத்யா: - உன்னுடைய, கடாக்ஷ குடாரதாரா - கடாக்ஷமாகிற கோடாலியின் கூர்ப்பான முனையானது, மே - என்னுடையதான, கார்பண்யபூர ரஸ வர்த்திதம் - தாரித்ரியமாகிற வெள்ள ஜலத்தினால் வளரச்செய்யப்பட்டதும், மோஹ கந்தோத்கதம் - மோஹமென்கிற வித்திலிருந்து உண்டானதும், பவமயம் - ஸம்ஸாரமென்பதையே ஸ்வரூபமாயுடையதும், துங்கம் - மிகுந்த உயரத்தையுடையதுமான, விஷ பாதபம் - விஷவ்ருக்ஷத்தை, சினத்து - வெட்டி எறியட்டும்.

66. காமாக்ஷி கோர பவரோக சிகித்ஸனார்த்தம்
அப்யர்த்ய தேசிக கடாக்ஷ பிஷக் ப்ரஸாதாத் |
தத்ராபி தேவி லபதே ஸுக்ருதீ கதாசித்
அத்யந்த துர்லபம் அபாங்க
மஹௌஷதம் தே ||

காமாக்ஷி தேவி - ஹே காமாக்ஷி! தேவி!, கோர பவரோக - கோரமான ஸம்ஸாரமென்கிற வியாதியை, சிகித்ஸனார்த்தம் - போக்கிக்கொள்வதற்காக, ஸுக்ருதீ - புண்யசாலியானவன், அப்யர்த்ய - விசேஷமாகப் ப்ரார்த்தனை செய்து, தேசிக கடாக்ஷ - குருநாதருடைய கடாக்ஷமாகிற, பிஷக் ப்ரஸாதாத் - வைத்யனுடைய அனுக்ரஹத்தால், தத்ராபி கதாசித் - அதிலும் எப்போதாவது ஒரு ஸமயம், அத்யந்த துர்லபம் - கிடைப்பதற்கு மிகவும் அரிதான, தே அபாங்க மஹௌஷதம் - உனது கடாக்ஷமாகிற உயர்ந்த ஔஷதத்தை, லபதே - அடைகிறான்.

1. இதில் ஸம்ஸாரத்தை கோரமான ரோகமாகவும், அம்பிகையின் கடாக்ஷத்தை, அந்த ரோகத்தைப் போக்கவல்ல மஹௌஷதமாகவும், குருநாதனுடைய அனுக்ரஹத்தை அவ்விதமான ஔஷதத்தைக் கொடுக்கும் வைத்தியனாகவும் வர்ணிக்கப்பட்டது. ரோகங்களில் ஸம்ஸார (பவ) மென்ற ரோகமே மிக்க் கொடியதென்று சொல்வது வழக்கம்.

2. அம்பிகையின் கடாக்ஷமானது ஸுக்ருதாயிருந்தும் (புண்ய கார்யங்களைக் செய்வதனாயிருந்தும்) குருவின் அனுக்ரஹம் கிடைக்கப்பெற்றும், வெகுகாலம் அப்யர்த்தனம் செய்தும் எப்போதாவது ஒரு ஸமயம் கிடைக்கக்கூடியதாயிருப்பதால், அதை 'அத்யந்த துர்லபம்' என்று இங்கு சொல்லப்பட்டது.

67. காமாக்ஷி தேசிக க்ருபாங்குரம் ஆச்ரயந்தோ
நாநா தபோ நியம நாசித பாசபந்தா: |
வாஸாலயம் தவ கடாக்ஷமமும் மஹாந்தோ
லப்த்வா ஸுகம் ஸமதியோ விசரந்தி லோகே||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தேசிக க்ருபாங்குரம் - ஆசார்யனுடைய க்ருபையை, ஆச்ரயந்த: - ஆச்ரயித்தவர்களும் (அடைந்தவர்களும்,) நானா தபோநியம - நானாவிதமான தபஸ்ஸுகளாலும் நியமங்களாலும், நாசித பாச பந்தா: - பாசங்களின் பந்தங்களைப் போக்கிக்கொண்டவர்களுமான, மஹாந்த: - மஹான்கள் அமும் தவ கடாக்ஷம் - இந்த உனது கடாக்ஷமாகிற, வாஸாலயம் - வீட்டை, லப்த்வா - அடைந்து, ஸமதிய: - ஸமபுத்தியுள்ளவர்களாய், லோகே ஸுகம் விசரந்தி - லோகத்தில் ஸுகமாக ஸஞ்சரிக்கிறார்கள்.

68 ஸாகூத ஸம்லபித ஸம்பித முக்த ஹாஸம்
வ்ரீடானுராக ஸஹசாரி விலோகனம் தே |
காமாக்ஷி காம பரிபந்தினி மாரவீர
ஸாம்ராஜ்ய விப்ரம தசாம் ஸபலீகரோதி ||

கமாக்ஷி - ஹே காமாக்ஷி!, ஸாகூத ஸம்லபித கர்பித - ச்ருங்கார கேளியான பேச்சின் பாவம் நிறைந்ததான, முக்தஹாஸம் - மந்தஹாஸத்தோடு கூடியதும், வ்ரீடானுராக ஸஹசாரி - நாணம் ப்ரியம் இவையுடையதுமான, தே விலோகனம் - உனது பார்வையானது, காம பரிபந்தினி - பரமசிவனுடைய விஷயத்தில், மாரவீர - மன்மதனாகிற வீரனுடைய, ஸாம்ராஜ்ய விப்ரம தசாம் - ஸாம்ராஜ்யத்தின் ஆடம்பரத்தை, ஸபலீ கரோதி - ஸபலமாகச் செய்கிறது. (நிறைவேற்றுகிறது )

1. அதாவது, அவ்வித குணங்களோடு பொருந்திய கடாக்ஷத்தின் விசேஷத்தினால் மன்மதனானவன் பரமசிவனிடத்தில் கூட தன் ஸாம்ராஜ்யத்தை செலுத்த வல்லவனாக ஆகிறான் என்று சொல்லப்பட்டது.

# பிராமண பிராமணரல்லாதார் ப்ரச்னை

"சென்னை மாகாணம் ஸம்பந்தபட்டில் பிராம்மணர் பிராம்மணரல்லாதார் ப்ரச்னை ஒரு முக்கியஸ்தானத்தைப் பெற்றுவிட்டது, ப்ராஹ்மணர்களிடம் துவேஷ புத்தியை உண்டுபண்ண நினைக்கும் காங்கிரஸ்காரர்களுள்பட யாரும் இப்பிரச்னையைக் கிளப்பா திருப்பதில்லை. சில தினங்களுக்கு முன் மாஜி கவர்னர் ஸர் கே. வி. ரெட்டிநாயிடு அவர்களும் இப்பிரச்னையை வைத்துக்கொண்டு பிராமண மந்திரிகளிடம் தோஷத்தைக் கிளப்ப முயற்சித்ததை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். ராஜீய விஷயங்களில் நிலையான கொள்கையோ, உருப்படியான திட்டமோ ஒன்றுமில்லாமல் ப்ராம்மண த்வேஷத்தை கிளப்புவதையே தொழிலாகக் கொண்ட பத்திரிகைகளிலும் இவ்விஷயமேஅதிகமாயிருக்கிறது, காங்கிரஸ் ஸம்பந்தப்பட்டவரை ப்ராம்மணர் ப்ராமணரல்லாதார் பிரச்னை திருச்சி ஜில்லாபோர்டு தேர்தலிலும் சென்னை கார்பரேஷன் கல்வியதிகாரி தேர்தலிலும் பிரதிபலித்ததாக நாம் அறிகிறோம்.

இக்கொள்கை இன்று பரிணமித்து வரும் போக்கைக் கண்டால் ஒரு ஸமயம் சென்னை ஸம்பந்தப்பட்ட மட்டில் பிராமண ஸமூஹத்தின் ராஜீயஸமூஹவாழ்வுக்குஅபாயமேற்பட்டுவிடும் என்ற சங்கை ஏற்படுகிறது. உண்மையைக் கவனித்தால் இப்ரச்னை ஒரு அர்த்தமில்லாத, பொருத்தமற்ற சூழ்ச்சியென்றே நாம் சொல்லவேண்டி வருகிறது. இது சென்னை மாஹாண சரித்திரத்தில் சில ஸமூக கலஹக்காரர்கள் போடப்பட்ட விதை என்பதும் தெளிவாகிறது, இப்பிரச்னையின் உண்மை ரூபத்தை விளக்கி, எதிர்ப்பாரில்லாததால் இது இன்று மிகவும் வலுத்து வருகிறது.

இப்பிரச்னையை கிளப்பிவிட்ட வர்கள் சென்னைமாகாணத்தின் ராஜீய அரங்கத்தில் பிராம்மணர்கள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்வதாகக் கூக்குரலிடுகின்றனர். உத்யோகங்களிலும் பிராம்மணரே நிறைந்திருப்பதாக முறையிடுகின்றனர். இதுதான் ராஜீயத்தில் இதற்குள்ள முக்கியத்துவம்.

சரித்ரபூர்வகமாக இக்கூற்றை ஆராய ஆரம்பித்தால் சில உண்மைகள் வெளியாகின்றன. கிழக்கு இந்திய கம்பெனிக்காரர்கள் இந்தியாவில் புகுந்த காலத்தில் இந்தியாவில் ஸமூஹவாழ்க்கை அடியோடு குலைந்திருந்தது. ஆர்ய அரசர்கள்காலத்தில் ஜாதிமுறை என்ற கட்டுப்பாட்டால் மிகவும் உறுதியுடன் இருந்த ஸமூகவாழ்க்கையான்து ஹிந்து நாகரிகத்தையே த்வம்ஸம் செய்த மகம்மதிய அரசர்களால் சின்னுபின்னமாக்கப்பட்டுவிட்டது. முக்கியமாக பிராமண, க்ஷத்ரிய, ஸமூகத்தினருக்கு ஹிந்து ஸமூக வாழ்க்கையில் உள்ள பங்கு அழிந்துவிட்டது. இங்நிலையில் கிழக்கு இந்திய கம்பெனிக்காரர்கள் ராஜ்யபாரம் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தகாலத்தில் மேற்கூறப்பட்ட இரண்டு ஸமூஹத்தைச் சேர்ந்தவர்களே அவர்களுடன் ஒத்துழைக்கக்கூடிய நிலையில் இருந்தனர். மற்ற வைச்யாதி ஜாதியினருக்குள்ள தொழில் அழியாமல் இருந்ததால் அவர்களுக்கு கிழக்கிந்திய கம்பெனியின் ராஜ்யநிர்வாகத்தில் ஈடுபடவேண்டிய அவச்யமில்லாமல் போய்விட்டது. க்ஷத்திரியர்களிலும் பிராசீன அரசர்களின் ஸந்ததியைச் சேர்ந்தவர்களும் மற்றும் பரம்பரையாக பணக்காரர்களாகவுமுள்ளவர்கள் கிழக்கிந்திய கம்பெனியின் ராஜ்ய நிர்வாகத்தில் ஈடுபடவில்லை. இந்தியர்களின் ஸமூகவாழ்வில் மஹம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் இவர்களும் பங்கெடுத்துக்கொள்ள ஆரம்பித்தனர். இவர்களுக்கு நிச்சயமான தொழில் இல்லாததால் பல துறைகளிலும் பணம் உத்பத்திசெய்யக் கூடிய வழியில் இவர்கள் வேலை செய்ய முயன்றனர். நாகரீகத்தின் பெயரால் பலருடைய தொழில்களும் முடிவுக்கு வந்துவிட்டன். அதனால் வைச்யாதிகளான மற்றவர்களும் தங்கள் வாழ்வு குலைந்து அரசாங்க உத்யோகத்தை எதிர்பார்க்கவேண்டி வந்துவிட்டனர். அரசாங்க உத்யோகம் பார்ப்பதில் ஒரு நிர்பபந்தமில்லாததால் யாரும்அதில் போட்டிப்போடுவது சுலபமாகிறது.

இதனுல் குழப்பமேற்பட்டு அவரவர்கள் ஒவ்வொரு வ்யாஜத்தில் அரசாங்க உத்யோகத்தைப் பற்ற முயற்சி செய்கின்றனர். இதற்காக கையாளப்பட்ட தந்திரமே பிராமணர் பிராமணரல்லாதார் பிரச்னை. இதனுல் பிராமணர்கள் அரசாங்க உத்தியோகத்தில் விசேஷமாக ஈடுபடுவதைத் தடுக்கவே இக்கொள்கை கல்பிக்கப்பட்டதால், பிராம்மணஸமூஹத்தின் மீது அழியாத த்வேஷத்தை வெளிக்காட்டவும் அவர்களுடைய வாழ்க்கையைக் குலைக்கவும் ஏற்பட்ட கல்பனை என்று நிச்சயமாயிற்று. இப்பிரச்னையைக் கிளப்பியவர் சென்னை மாகாண ஜன சங்கியையில் பிராமணர் மிகவும் குறைந்தவர்கள், மற்ற பிராமணரல்லாதாரே பெரும்பான்மையான்வர்கள், இதனுல் அரசாங்கத்தில் அந்தந்த ஜன ஸமூகத்தின் ஸங்கியையை அநுஸரித்தே உத்யோகம் கொடுக்கவேண்டுமென்று முறையிடுகின்றனர். இதை கவனிப்போம்,

பிராமணர், பிராமணரல்லாதார் பிரிவினை எதை அடிப்படையாகக் கொண்டது? ஸாதாரணமாக மதம், நாகரீகமிவைகளைக்கொண்டு ஒரு வகுப்பை நிர்ணயிக்கலாம். இப்பொழுதும் மகம்மதியர்களென்ற வகுப்பு இவ்விதமே பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியா ஸம்பந்தப்பட்டமட்டில் மஹம்மதியராக மாறிய பாரஸீகர்கள், ஹிந்துக்கள் இவர்கள் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தும் மகம்மதியர்களின் மதம், கல்வி, நாகரீகம் இவைகளைப் பின்பற்றுவதாலேயே மகம்மதியர் என்று ஒரே வகுப்பாகக் குறிப்பிடப்படுகின்றனர். இதைக்கொண்டு கவனித்தோமானுல் ஹிந்துமதம் கல்வி நாகரீகம் இவைகளையே பிராமணர் பிராமணரல்லாதார்கள் பின்பற்றுவதால் இவர்களைஹிந்துஎன்று ஒரே வகுப்பாகப் பிரிக்கவே இடமுண்டு பிராமணர், பிராம்மணரல்லாதார் என்று பிரிக்க இடமில்லை. ஆரியர், திராவிடர், தெலுங்கர், பூர்வீகக் குடிகள் முதலிய போன்றவை சரீர அமைப்பு, மதாசாரம் இவைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், வகுப்புப் பிரிவினைக்கு இவை அவ்வளவு உதவவில்லை.

இதனுலேயே மதம் மாறின, மகம்மதிய கிறுஸ்தவர்கள் விஷயத்தில் இந்த வித்யாசம் ஏற்படவில்லை. த்ராவிட மஹம்மதியன், ஆர்ய மஹம்மதியன், படாகா கிறிஸ்தவன் என்று எங்கும் காணவில்லை. எல்லோரையும் கிறிஸ்தவர்கள், மஹம்மதியர்கள் என்று பொதுவாகவே ஸர்க்கார் தாப்பில் தஸ்தாவேஜ்கள் குறிப்பிடுகின்றன. மேலும் பிராமணன் என்ற பிரிவுபோல, பிராமணரல்லாதார் என்ற பிரிவும் அவ்வளவு தெளிவானதல்ல. பிராம்மணர்களை ஒரே வகுப்பாக நினைக்கக் காரணமென்ன? பிராமணர்களிலும், தெலுங்கு, தமிழ், மலையாள, கன்னட, ஓரியர்கள் என்ற பேதம் காணப்படுகின்றது. இவர்களுள் அநுஷ்டான பேதமும் பரஸ்பரம் முறண்பாடுகளும்கணக்கற்றிருக்கின்றன. இவர்களுடைய மதத்தையும், நாகரீகத்தையும் கொண்டே ஒரே வகுப்பினராக இவர்களை பாவிக்கலாம்.

ஆனுல் இவர்களை ஒரே வகுப்பாகச் செய்யும் மதம் பிராமணரல்லாதாரையும் இவர்களையும் சேர்த்து ஒரே வகுப்பாகச் செய்துவிடும். பிராமணர்களைத் தனியாகப் பிரிக்க ஜாதிமுறை உதவும். ஆனுல் அம்முறை பிராம்மணரல்லாதார்களையும் க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், போன்ற பல வகுப்பாகப் பிரிக்குமேயன்றி ஒரே வகுப்பாகச் செய்யாது. ஒரு சிலர் பிராமணர்களைத் தனியாகப் பிரிக்க பிராமணர், சூத்ரர், என்று இரண்டு பிரிவை ஏற்படுத்திப் பேசுகின்றனர். அவர்களுக்கு சூத்ரன் என்ற தலைப்பில் பிராமணனைக் காட்டிலும் வேறுபட்ட பல்ஜாதி ஹிந்துக்களையும் ஒன்று சேர்க்கலாம் என்ற துரெண்ணமே காரணம். உண்மையைக் கவனித்தால் பிராமணரல்லாத வகுப்புக்களை சூத்திரன் என்று ஒரே வகுப்பில் கொண்டுவர இடமில்லை. சாஸ்திர ரீதியாக கவனித்தாலும், அநுபவத்தைக் கொண்டு கவனித்தாலும் க்ஷத்திரிய வைச்யாதி ஜாதிகள் இன்றுமிருக்கின்றன என்று தெரிகிறது. இவர்களை சூத்திரர் தலைப்பில் கொண்டுவர அடியோடு இடமில்லை. ஆகவே மதத்தைக்கொண்டும், பிராமணர் பிராமணரல்லாதார் என்று பிரிக்க இடமில்லை.

இனி சில வழிகளில் பிராமணல்லாதார்களில் காணப்படாத, ஆசாரணைகள் இன்று பிராமணனிடம் காணப்படுவதால் பிராமணர் வேறுபிராமணரல்லாதார் வேறு என்று பிரிக்க இடமுண்டா என்று கவனிப்போம். ஸஹபோஜனம், விவாகம் இவைகள் போன்றவைகளை இங்கு நாம் ஆதாரமாகக் கொள்வோம். இவைகளால் பிராமணர் பிராமணரல்லாதாருக்கு வித்யாஸம் ஏற்பட்டுவிடுவதாக நினைக்கலாம். ஆனுல் இவ்வித ஆசாரங்கள் பிராமணனல்லாதாரிடம் ஒரே விதமாகவும் காணப்படவில்லை. ஜாதி ஹிந்துக்களெனப்படும் பிராமணரல்லாதாரிடம், ஸஹபோஜனம், விவாஹம் இவைகளில் உள்ள பலவித நிர்பந்தங்களை நாம் அநுபவத்தில் காண்கிறோம் ஒரு வைசியன் ஒரு வேளாளருடன் உண்பதோ, விவாகம் செய்வதோ கிடையாது. ஒரு வேளாளருடன் முதலியார் ஸம்பந்தம் செய்வது கிடையாது. இவ்விதம் விவாஹாதிகளாலும், மற்றும் காணப்படும் சில கட்டுப்பாடுகளாலும் பிராமணரல்லாதார் ஸமூகம் பல வகுப்பாக பிரியவே இடமேற்படுகிறது.

தென்னுட்டிலுள்ள ஒரு சில வகுப்புவாதிகள் பிராமணரல்லாதாரை தமிழர் என்க்கூறி ஒன்று சேர்க்க முயற்சிக்கின்றனர். இதற்கு இடமில்லை. பிராமணரல்லாதார் எல்லோருமே த்ராவிடரன்று. சரித்ரம், அநுபவம் இவைகளைக்கொண்டு கவனித்தால் தமிழரல்லாத பல ஸமூஹம் பிராமணரல்லாத ஸமூஹத்திலிருப்பது ஸ்பஷ்டமாக விளங்கும். எனவே பிராமணர் பிராமணரல்லாதார் என்ற பிரிவினை கல்பனைக்கு எவ்வழியிலும் இடம் இல்லையென்றும் இது ஒரு அபத்தமான கல்பனை என்றுமே ஏற்படுகின்றது. அ. ரா.

(தொடரும்.)

## ஹிந்து மஹாஸபை ஸம்மேளனம்

### ஆமதாபாத்தில் நடக்கும்.

இவ் வருஷத்திய ஹிந்து மஹாஸபை ஸம்மேளனம் ஆமதாபாத்தில் நடைபெற பலமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பாரீஸ்டர் ஸ்ரீமான் வி. டி. ஸர்க்கார் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவ்வருஷத்திய கூட்டம் பலவழிகளில்முக்யமாயிருக்கு மென்றுகருதப்படுகிறது.

## மீனுக்ஷி கோவிலில் மஹம்மதிய மந்திரி.

### கோவில் மரியாதை

சென்னை மந்திரி கனம் யாகூப்ஹஸன் மதுரை ஸ்ரீ மீனுக்ஷிகோவிலுக்கு விஜயம்செய்ததாயும் கோவில் அதிகாரிகள் அவருக்கு கோவில் மரியாதைகளை நடத்தியதாகவும் தெரிகிறது.



657

# வாரக் குறிப்புகள்.

(வே. சே. சர்மா)

செயல வேண்டாம்! புகழ் வேண்டுமா? சென்னை நிர்வாஹஸபை அங்கத்தினராயிருந்த ஓர் பெரியார் நர்கையில் மாணவரிடையே பேசும்போது நமது முன்னோர் சாந்த வாழ்க்கையை மெச்சி தற்கால நிலைமை சோதித்து அழகாக பேசினுர். ஆனுல் முற்கால ஸாதுக்களது அனுஷ்டானத்தை எதிர்ப்பவரில் இவருமொருவர். ஸகோத்ர விவாஹத்தில் முனைந்துள்ளவரிவர். சொல்லொன்று செய்கையொன்று! இதுவும் தற்கால நாகரிகத்தில் ஓரம்சம்போலும்!!

முதல் கோணல் முற்றும் கோணல்!! சென்னையில் அதர்ம சமஜத்தார் புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக்கொண்டது போல் ஓர் கூட்டம்போட ஆரம்பித்தனர். அது தப்பென அவர்களது மனச்சாக்ஷியே கூறிற்றுபோலும்! ஆதலால் பத்ரிகைகாரர் அதை பிரசுரிக்கக் கூடாதென்றுர். ஆனுல் அது அம்பலத்திற்கு வந்துவிட்டது! அது யாதொரு முடிவிற்கும் வராமல் தேதி குறிப்பிடாமலே ஒத்திவைக்கப்பட்டது. சமஜமுமப்படியோ?

பிள்ளையார்பிடிக்க குரங்கானது! தீண்டாதாரை ஆலயத்தில் விடுவது, கண்டவர்களை மணப்பது, ப்ரஷ்டர்களை பிராமணராக்குவது, கர்மாக்களை சுருக்குவது என்ற நாலு தலைப்பின் கீழ் பற்பல அதர்மங்களைத் தர்மமெனக் காட்டி சட்டம் செய்யவும், ராஜப்பிரதிநிதி முதலியோர் ஆக்ஷேபித்தால் இதைப் பக்கபலமாக காட்டவுமே இம் முயற்சி. இதற்கு மாறுக சண்டாள விஷயத்தைப் பேச ஆரம்பிக்கும்போதே சாஸ்திரீயமான வாதம் பேசி 100-க்கு 98பேர் இதை ஏற்றனர். ஓட்டுக்கு விட்டால் சாயம் வெளுத்துவிடுமென ஓர் ஸ்வாமி கூற ஸமஜம் தலைவரால் மொட்டையாக கலைக்கப்பட்டது! பாவம்!!

தேதியூர் சிங்கம்!! அத் திருக்கூட்டம் அப்படி கலைய இச் சிங்கத்தின் கர்ஜனை ஓர் காரணம்! சீர்திருத்தக் காரரிடம் பக்ஷபாதமுள்ளவர் எனக் கருதப்பட்டுவந்த ஓர் நரசிம்மமும் ஸமயத்தில் அவர்களைக் கைவிட்டு தர்மத்தைப் பேசும்படி தர்மதேவதை செய்தது!! கோபால் பக்தியே இப் பிறவியிலேயே சண்டாளரை சுத்தமாக்குமென்ற பெரியாரது பக்திக்கு கோபாலன் மெச்சுவர்!

அதிகார திமிரா? கடன் மசோதாவால் வட்டியை இழந்து தவிக்கும் பாலவிதவைகள் கதி என்ன என்று ஒருவர் கேட்க ஓர் மந்திரி நாகரிகமாக எண்டோன்மண்ட்போர்ட் இவர்களை கவனிக்குமென்கிறுர். அதாவது கோவில் உண்டைகட்டிக்குப் போகட்டுமென்கிறுர் இது நீதியா? தர்மமா? அதிகாரமிப்படி பேசுகிறது போலும்! உலக தர்மாநுபவமில்லாதவர்களுக்கு இறங்குகிறோம்.

ஸமரஸம் செய்வதே தர்மம்! சட்டக் கொள்ளையான கடன் மசோதாவை திரும்பப்பெற்று கடனுளிகளது அதிக வட்டியை குறைத்து பலதவணைகளில் முதலாளி பெறும்படி செய்வதுடன் விவசாயிகளுக்குப் பயிரிடவும் பொருள்களை நல்ல விலைக்கு விற்கும்படியும் ஸஹாயம் செய்வதே தர்மம்!

நன்றியும் பிரார்த்தனையும்! அகில பாரத வர்ஷீய பண்டித பரிஷத் நிர்வாஹகர், அடியேனை ஓர் உபகார்யதர்சியாக தேர்ந்தெடுத்ததற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, தென்தேச பண்டிதர்களும் ஆஸ்திகர்களும் எனது கடமையில் ஏற்படும் குறைகளை மன்னித்து திரள் திரளாக சென்னைக்கு வந்து ஸபையை நன்கு நடத்திவைக்குமாறு ஸாஷ்டாங்க ப்ரணமத்துடன் வேண்டுகிறேன்.

# நமது பரிஷத்.

## ஓர் ஸந்தேஹ விளக்கம்.

இது பல பல பண்டிதர்களாலும் ஆஸ்திகர்களாலும் கூட்டப்படும் ஸபை. ஸ்ரீமான் ஸர். சிவஸ்வாமி அய்யரை முன்னே நிறுத்தி பல சீர்திருத்தக்காரர்கள் வெளிக்கு வாராமல் பதுங்கி நடத்தும் பரிஷத்தைக் கண்டிக்கவும், பழையபடி நமது வேத சாஸ்த்ர ப்ரமாணங்களையே கைகொண்டு தர்மாசரணம் செய்யும்படி தூண்டவுமே இது ஆரம்பிக்கப் படுகிறது. மைசூர் யதுகிரிமடம் ஸ்ரீ ஸ்ரீ ஜீயர்ஸ்வாமிகள் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறுர். உத்தராதிமடம் ஸ்ரீஸ்வாமிகள், ஸ்ரீஜகத்குரு பூரிஸ்வாமிகள், பிக்கானீர் மஹாராஜாமுதலிய பலர் அழைக்கப்பட்டிருக்கின்றனர். இது மைலாப்பூரில் பி. எஸ். ஹைஸ்கூலில் நடப்பதாக ஏற்பாடாகி இருக்கிறது. வடநாட்டிலிருந்து நூற்றுக்கணக்கான பண்டித ரத்னங்கள் வருகின்றனர். இடம்போதாமல் கூட்டமதிகமானுல் ராயப்பேட்டை லலிதாஸதநம் தர்மகாங்க்ரஸ் பந்தலில் நடக்கும். வருபவர்களுக்கு வாஸஸ்தானம் போஜனவஸதிமுதலியன இலவசமாகசெய்யப்படும். ப்ரத்யேகமாக குடும்பத்துடன்வஸிக்க இடமபேக்ஷிப்போர்முன்னுதாகவே எழுதவேண்டும்.

வர்ணுச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் அங்கமாக ஓர் பரிஷத்தும், ஆந்த்ர தேசத்தில் ஓர் பரிஷத்தும் தனித்தனி நடக்கிறது. ஆனுல் சென்னையில் முதல் பரிஷத்தின் தீர்மானங்களையே வ. ஸ். சங்கத்தின் தீர்மானமாக செய்யும். இச்சங்கம் ராயப்பேட்டை லலிதாஸதநத்தில் அதற்கென ஆயிரம்பேர் உட்காரத்தக்கபடி அமைக்கப்பட்ட பந்தலில் நடைபெறும். இதே தர்ம காங்க்ரஸாகும். 25 முதல் 28வரை பரிஷத்தும் 29முதல் 31வரை காங்க்ரஸும் நடக்கும். பிரும்மஸ்ரீ திவான் பேஷ்கார் தலைமையில் நடப்பது பிராமண ஸபையாகும்.

உபகார்யதர்சி, வெ. ஸோ. சர்மா.

## நாகப்பட்டிணத்தில்உபன்யாஸங்கள்

ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற 9-12 37 புதன்கிழமை முதல் திருச்சி S. P. G. காலேஜ் பண்டிதராக இருந்த ஸத்தர்மோபதேசகர் பிரம்மஸ்ரீ T V. ராமசேஷசாஸ்திரிகள் நாஷனல் ஹைஸ்கூல் கட்டிடத்தில் நான்கு உபன்யாஸங்கள் செய்தார்கள். ஆழ்ந்தபடிப்பும் அற்புதமான ப்ரவசன சக்தியும் கூடிய அவர்களுடைய உபன்யாஸங்கள் எல்லோருக்கும்மிகுதியான உத்ஸாகத்தை உண்டுபண்ணியது. முதல் நாள் கீதாசாரமும், மக்களின் கடமையும் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசியதில் ஒரு மனுஷ்யன் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டியவைகள் கர்மா, பக்தி, ஞானம் என்றும் எவ்வளவு படிப்பிருந்தபோதிலும் ஈசுவரானுக்ரஹமில்லாமல் ஞானம் ஸித்திக்காதென்றும் அதற்கு பகவத்பக்தி மிக்க அவச்யமென்றும் சித்தசுத்தி அன்னியில் பகவத்பக்தி கிட்டாதென்றும் சொன்னுர்கள். அடுத்த இரண்டு தினங்களிலும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் பாத்திரகுண விமர்சம் என்ற விஷயத்தை வியாஜமாக வைத்து ஸ்ரீமத் ராமாயணத்தில் சாரமாக உள்ள சகல விஷயங்களையும் எடுத்துரைத்தார்கள். முக்கியமாக பரதன், ஸீதை, லக்ஷ்மணன், ராகவன் இவர்களுடைய குணநிசயங்களையும் ஆஞ்சனேயருடைய கௌரவங்களையும் சுலோகபூர்வமாக எடுத்து விமர்சம் செய்தார்கள். ஸ்ரீ ராகவனுடைய குணநிசயங்களைப் பேசுங்கால் வாலிவதம் விபீஷண சரணுகதி இவைகளிலுமுள்ள ரஹஸ்யங்களையும் வெளியிட்டார்கள். கடைசியாக ஆத்மதத்துவம் என்ற விஷயத்தைப்பற்றி பேசியதில் சார்வாகமதம் முதல் அத்வைதம் வரையிலுள்ள சித்தாந்தங்களை நிரூபணம் செய்தும் திருமதங்களாகிற த்வைத, விசிஷ்டாத்வைத, அத்வைத மதங்களின் அம்சங்களையும் வித்யாசங்களையும் காட்டி சாந்தோக்யாதி உபனிஷத் வாக்யங்களை உதாஹரித்து தத்வமஸி வாக்யத்தின் அபிப்பிராயங்களையும் அழகாக உபன்யசித்தார்கள். சபையின் கார்யதரிசியால் வந்தனுபசாரங்கள் கூறப்பட்டு உபன்யாசங்கள் முடிவுபெற்றன,

N. ஸாம்பசிவ அய்யர்,

பி.ஏ பி.எல்.

# டாக்டர் கூர்தகோடியின் பண்டித பரிஷத்.

## ஆரம்பக்கூட்டம் ஒத்திவைப்பில் முடிந்தது.

திருவல்லிக்கேணியில் டாக்டர் கூர்தகோடி தலைமையில் டிசம்பர் 25, 26, 27உகளில் நடைபெறவிருக்கும் நவீன பண்டித பரிஷத்தின் ஆரம்பக்கூட்டம் குமாரதாத்தாச்சாரி முயற்சியால் திருவல்லிக்கேஸரி ஹைஸ்கூலில் நடைபெற்றது. திவான்பஹதூர் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி தலைமை வகித்தார். தீண்டாமையைப்பற்றி வாதப்ரதிவாதங்கள் நடைபெற்றன. கோடிகன்னிகாதானம் குமாரதாத்தாச்சாரியாரும் கடலங்குடி நடேசசாஸ்திரியும் ஹரிஜனங்களெனச் சொல்லப்படும் தீண்டாதவர்களை ப்ராயச்சித்த மூலமும் சுத்தமாயிருக்கச் சொல்வதன் மூலமும் உயர்ஜாதியினர்களான பிராமணரல்லாதாருடன் ஸமமாகச் செய்துவிடலாமென்பதாக வாதித்தார்கள். பிரும்மஸ்ரீ தேதியூர் சுப்ரமண்யசாஸ்திரிகள் உ வே கொடவாசல் நரஸிம்மாச்சாரியார் ஸ்ரீமான் யதுநாதாச்சாரியார் முதலியோர்கள் இந்த ஜென்மத்திலேயே எவ்விதத்திலும் சாஸ்திரத்தையனுசரித்து தீண்டாமையைப் போக்க முயற்சிப்பதற்கிடமில்லையென்றும் பக்தியாயும், சுத்தமாயுமிருந்தால் மறுஜன்மத்தில்தான் மேல்ஜாதியினராகவோ பிறப்பேயில்லாமலோ போகலாமென்றும் பகவத்கிருபையினுல் மகாத்மாவானுலும் ஜாதியை ஒழிக்கவோ, தீண்டாமையை விலக்கவோ இந்த ஜன்மம் கழிந்துதான் முடியுமெனவும் மிகஸ்வாரஸ்யமாய் எடுத்துரைத்தார்கள். சர்ச்சையை கவனிக்கவேண்டி ஏராளமான சனுதனிகளும் நவீன வாதிகளும் விஜயமாயிருந்தனர் தீண்டாதார் ஆலயப்ரவேச விஷயமாய் ஓட்டெடுக்கவேணுமென்று தேதியூர் சாஸ்திரிகளால் வற்புறுத்தப்பட்டும் தலைவர் கே. எஸ். ஆர். சாஸ்திரி நாட்குறிப்பிடாமலே கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டார். நவீன வாதிகள் கூடும் அ.இ.ப. பரிஷத்தின் ஆதரவுக்காக நடத்திய ஆரம்பக்கூட்டம் ஸனுதன பண்டிதர்கள் ஸம்மதித்தும் ஓட்டெடுக்கப்பிரியப்படாமல் அனுதாவகவே முடிந்தது. நவீன பண்டித வர்க்கங்களுக்கு பெரும் பீதியுண்டாய்விட்டதாக எங்கும் பெரும்பிரஸ்தாபமாயிருப்பதாய்த் தெரிகிறது.

ந. வி. நி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆ ர் ய த ர் ம ம்.

ஈச்வர-ஹு மார்கழி மீ 2உ

## காங்கிரஸ் ஆக்ஷியின் போக்கு!

தற்காலம் நடைபெற்றுவரும் காங்கிரஸ் ஆக்ஷியின் போக்கைப்பற்றி கனம்,ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரும் கனம் ஜயகரும் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் ராஜீயவாதிகளாலும் முக்கியமாகக் காங்கிரஸ் மந்திரி களாலும் கவனிக்கப்படவேண்டியதாகும். இவ்விரு கனவான்களும் இந்தியாவிலன்றி வெளி உலகிலும் விசேஷமாக மதிக்கப்பட்ட அறிவாளிகள். சிதம்பரம் யூனிவர்ஸிடியிலும் லக்ஷ்ணபுரி யூனிவர்ஸிடியிலும் கனம் சாஸ்திரியாரும், கனம் ஜயகரும் செய்துள்ள பட்டமளிப்புப் பிரஸங்கத்தில் காங்கிரஸ்வாதிகள் செய்துவரும் அவஸரப்பட்ட கார்யங்களைக் குறிப்பிட்டுக் கண்டனம் செய்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் மந்திரிகள் ஆக்ஷிபுரிய ஆரம்பித்தபின் அவர்களுடைய கார்யங்களில் குண தோஷங்களை வெளியிட்டுச் சொல்லக்கூடிய எதிர்கக்ஷி ஒன்று இல்லாமல் போய்விட்டது அது இருந்தால் நிர்வாஹத்திலுள்ள குறைகள் நன்கு வெளிப்பட ஹேது இருக்கும். இப்போதோ காங்கிரஸ்காரர்களே எங்கும் கூட்டம் நடத்தித் தங்கள் கக்ஷி கவர்ன்மெண்டின் கார்யங்களை ஆதரித்துப் பொதுஜன அபிப்பிராயம் தங்கள் பக்கமாகவே இருப்பது போல் காட்டி வருகிறார்கள். இந்த நிலையில் உண்மை ஸரியாக வெளிவருவதற்கு இல்லையாகையால் எதிர் அபிப்பிராயத்தின் போக்கை அறிய மேற்கண்ட இருகனவான்களின் அபிப்பிராயம் வெகு முக்யமானதாகும்.

கனம் சாஸ்திரியார், தாம் மாணவர்கள் முன்பாக பட்டமளிப்புப் பிரஸங்கம் செய்வதைக் கூட மறந்து அதை ராஜீய பிரஸங்க மேடையாக உபயோகித்துக்கொள்ள நேர்ந்ததிலிருந்து தற்கால நிலைமையை வெளியிட அவருக்கிருந்த ஆவேகம் நன்கு தெளிவாகிறது.

தற்போது கடன் நிவாரண மசோதா போன்ற புரட்சிகரமான கொள்கைகளால் ஜனங்கள் மீது காங்கிரஸ் மந்திரிகள் செலுத்திவரும் தருண ஆதிக்யத்தை எடுத்துக் காட்ட கனம் சாஸ்திரியாருடைய பேச்சு உதவக்கூடியதாயிருக்கிறது.

"ராஜீயக் கக்ஷிக்காரர்கள், அதிகாரத்திற்கு வந்ததும் அவர்களுக்கு அதிகார ஆசை முற்றி விடுகிறதென்றும், ஸமூகவிஷயங்களிலும் எந்த நடவடிக்கைகளிலும் கூட அவர்கள் பொது ஜனங்களை தங்கள் இஷ்டப்படி கட்டுப்படுத்தி நிர்ப்பந்திக்க ஆரம்பித்துவிடுகிறார்களென்றும், வலதுபுறமாக நடக்கவேண்டுமா, இடதுபுறமாக நடக்கவேண்டுமா, என்பதில் கூட இவர்கள் உத்திரவுபோட முன்வருகிறார்களென்றும், இது ஜனநாயக முறைக்கு ஏற்றதல்ல" வென்றும் கனம் சாஸ்திரியார் வெகு அழுத்தமாகக் கூறுகிறார். ஸ்ரீமான் ஜயகரும் இந்த அபிப்பிராயத்தையே வெளியிட்டிருக்கிறார். "ஜனநாயக ஆக்ஷிமுறையில் சில புதிய அபாயங்கள் தோன்றியிருப்பதாயும், ஜனங்களுடைய உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படும் போல் இருப்பதாயும், இதுவரையில் எதிர்க்கக்ஷியாயிருந்த காங்கிரஸ்வாதிகள் ஸர்க்காராக மாறிவிட்டபோதிலும், அவர்களும் பழைய மாதிரியே எதிரிகளை ஸர்க்கார் பலத்தைக் கொண்டு அடக்கி ஜெயம் பெற முயற்சிப்பதாயும், புதிய ஸர்க்கார் தங்கள் கக்ஷிக் கொள்கைகளை ஜனங்கள் மேல் பலாத்காரமாகச் சுமத்தி, ஜனங்களுக்குச் சட்டாம்பிள்ளையாக ஆகிவிடக்கூடா"தென்றும் ஸ்ரீமான் ஜயகர் எச்சரிக்கிறார். சென்னை மாகாணத்தைப்பற்றியவரையில் ஜயகருடைய அபிப்பிராயத்திற்கு அனேக உதாஹரணங்கள் கிடைக்கக்கூடும். ஆயினும் பிரகிருதத்தில் கடன்பளு நிவாரண மசோதாவையே முக்கிய உதாரணமாகக் கொள்ளலாம். தங்கள் கக்ஷிக் கொள்கைகளை ஜனங்கள் மீது பலாத்காரமாக நமது மந்திரிகள் சுமத்தத் துணிந்ததற்கு இந்த மசோதாவைவிட வேறு என்ன ருஜு வேண்டும்? ஸர்க்காரின் அதிகார பலத்தால் எதிர்க் கக்ஷியை அடக்கி மந்திரிகள் தங்கள் செய்கையில் ஜெயம் பெற முயற்சிப்பதும் இந்த மசோதா விஷயத்தில் பொருத்தமுள்ளதாகவே இருக்கிறது. கடன்பளு நிவாரணம் வேண்டுமென்று ஜனங்கள் கேட்டதுண்மை. காங்கிரஸ் வாதிகளும் வோட்டர்களுக்கு வாக்குறுதி கொடுத்திருப்பது உண்மையே! ஆயினும் இப்போது வெளியிட்டுள்ள அநீதியான முறையை ஜனங்கள் விரும்பிக் கேட்டார்களா? இந்த மசோதாவில் தீமை நிறைந்திருப்பதாகப் பல மேதாவிகள் எடுத்துக் காட்டியும் மந்திரிகள் அதை லக்ஷ்யம் செய்யாமல், தங்கள் பிடிவாதத்தை நிறைவேற்றித்தான் மறுகார்யம் பார்ப்போமென்று மார்தட்டுவது ஸ்ரீ ஜயகர் சொல்லுவதுபோல் எவ்வளவு பலாத்காரச் செயல் என்பதை நிரூபணம் செய்யவேண்டியதில்லை.

இவ்விஷயத்தில் இன்னொரு ஆபாஸமான கக்ஷியை மந்திரிகள்கூடச் சொல்லி வருவது விந்தையாயிருக்கிறது. எந்தச்சட்டம் செய்தாலும் ஒரு சாராருக்கு விரோதமிருப்பது ஸஹஜமென்றும் எல்லோரும் திருப்திப்படக்கூடிய வகையில் சட்டம் ஏற்படுவது ஸாத்யமல்லவென்றும், ஆதலால் ஒரு சாரார் எதிர்ப்பதை லக்ஷ்யம் செய்யப்போவதில்லையென்றும் மந்திரிகள் பேசி வருகிறார்கள். இதற்கும் ஸ்ரீமான் ஜயகரின் பேச்சில் பதில் அடங்கியிருக்கிறது. பழைய அதிகார வர்க்கக்கக்ஷியும், ஜஸ்டிஸ் கக்ஷியும் இந்த மாதிரியே சொல்லியதில் பிசகென்ன? எல்லோருக்கும் பிடித்ததான சட்டத்தைச் செய்வது ஸாத்யமில்லையென்று சொல்லி பலாத்காரமாக எந்த சட்டத்தையும் நம்மீது சுமத்துவது நியாயமானல் ஜஸ்டிஸ் கக்ஷியை மட்டும் தூஷிக்கக் காங்கிரஸ் வாதிகளுக்கு வாய் உண்டா? தேவஸ்தானச்சட்டம், இனாம் தார்சட்டம், போன்ற பலவற்றை அவர்கள் பலாத்காரமாகச்செய்து விட்டார்களென்று கூக்குரல்போடுவதில் நியாயமில்லையே? ஜஸ்டிஸ் கக்ஷியார் மட்டும் எல்லோருக்கும் பிடிக்கக்கூடிய சட்டத்தை இயற்ற முடியுமா? மூக்ஷி கக்ஷி பலத்தாலும் அதிகார பலத்தாலும் ஜஸ்டிஸ் தன் கார்யத்தை ஸாதித்துக்கொள்வதாக சொல்லப்பட்ட புகார் இப்போது காங்கிரஸ் தலையிலும் நிறம்ப விழுந்திருக்கிறது. தர்வாதம் செய்து இதிலிருந்து காங்கிரஸ் வாதிகள் தப்ப முடியாது.

ரஷ்யாவில் சிறிய கக்ஷியாகிய பொதுவுடைமைக் காரர்கள் எப்படியோ அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு தாங்களே பெரும்பாலரென்று சொல்லிக்கொண்டும் பொது ஜனங்களை அடக்கியாண்டு வருகிறார்கள். அந்த வாஸனையே இந்தியாவிலும் காங்கிரஸ் ஆக்ஷியில் வீச ஆரம்பித்திருக்கிறது. இதில் நியாயமோ, தர்மமோ காணப்படவில்லை.

எப்படியும் இந்த மசோதாவானது ஜனநாயக முறைக்கோ, நீதிக்கோ ஏற்றதாய் இல்லை. "எனக்கு ஸாதகமாயிருப்பதால் ஆதரிக்கிறேன்" "எனக்கு பாதகமாயிருப்பதால் எதிர்க்கிறேன்" என்று தனிப்பட்ட முறையில் ஒருவரும்ஒருசட்டத்தைப் பற்றிப் பேசுவதுராஜநீதியாகாது. அப்போதுதிருட்டுப்புரட்டுக் குற்றங்கள் கூட நியாயமென்று வாதிக்கலாம். ஆதலால் தான் தார்மிகர்கள் எதிலும் மனிதபுத்தியை மட்டும் பிரமாணமாக்காமல் சாஸ்திரத்தையும், தர்மத்தையும் அடிப்படையாகக் கொள்ளுகிறார்கள். அந்தசோதனைப்படி பார்த்தால் இந்தமசோதா,அநீதி நிறம்பிய பெரிய அபாயமென்பது சுலபமாக விளங்கும்.

## குறிப்புகள்.

### விதவைகளுக்கு கோவில் சோறு கதி!

கடன் நிவாரண மசோதா மூலமாக எளிய விதவைகளின் கதி பரிதபிக்கக்கூடியதாகி விடுமென்ற பீதி எங்கும் உண்டாகியிருக்கிறது. ஸ்வல்ப மூலதனம் கொண்டு அதன் வட்டியால் ஜீவிய காலம் கழிக்கவேண்டிய நிலையிலுள்ளவள் வட்டியை இழந்து எப்படி ஜீவிக்கமுடியும்? இவர்களிடம் கடன்வாங்கியவர் பணக்காரராயிருந்தும் அவர் ஸௌகர்யமடையவும், நிர்கதியான விதவை தவிக்கவும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையைக்கண்டு உண்மையான ஜீவகாருண்யமுள்ள எந்த மனிதனும் வருந்துவானென்பதில் தடையில்லை. அப்படியிருக்க காங்கிரஸ் வாதியாய், ஏழைகளுக்காக உருகுகிறவர்களாக சொல்லிக்கொள்ளுகிறவர்கள் கூட இந்த விதவைகள் விஷயத்தில் சிறிதும் தயைகாட்டாமல், பொறுப்பற்றும், பரிஹாஸமாயும் பேசுவது மிகவும் கண்டிக்கத்தக்கதாயிருக்கிறது.

ஸ்ரீமான் கே. ஸந்தானம் என்ற காங்கிரஸ் காரரைப் பலரும் அறிந்திருக்கலாம். இவர் பாமரஜன உத்தாரகர். அபேதவாத அபிமானி. தஞ்சை ஜில்லா ஜனப்பிரதிநிதியாக இந்தியா சட்டஸபையில் விளங்குபவர். இவர் மன்னார்குடியிலும், சென்னையிலும் கடன் நிவாரண மசோதா விஷயமாகப் பேசுகையில் ஏழை விதவைகளைப்பற்றிச் சொல்லியிருப்பது மிக அதிசயமாயிருக்கிறது. இந்த மசோதாவால் ஏழை விதவைகளுக்குக் கஷ்டமேற்படுமென்பது உண்மையானாலும் தேச நலத்தைக்கருதி அவர்கள் அதை ஸஹித்துக் கொள்ளவேண்டுமாம்! அதாவது அந்த விதவைகளும் ஸ்வயநலம் பாராமல் த்யாகம் செய்யவேண்டுமாம், ஆனால் த்யாகம் செய்துவிட்டால் அவர்கள் உயிர் நிலைத்திருக்க வயிற்றுச்சோறு வேண்டுமல்லவா? அதற்காக அந்த விதவைகளுக்குக் கோவில்களில் கட்டளைச்சோறு கிடைக்கும்படி தேவஸ்தான மந்திரி வகைசெய்வாரென்றும் ஸ்ரீமான் சந்தானம் பேசியதாகத் தெரிகிறது.



## அகிலபாரதீய வித்வத் பரிஷத்.

### பிரபலமான ஏற்பாடுகள்.

அகில பாரதீய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

நாளது டிசம்பர் 25-ம் உ ஆரம்பித்து 31 முடிய சென்னை லலிதாசதனம் லாயிட்ஸ் ரோடு ராயப்பேட்டையில் ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதி ஸ்வாமிகள், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்வாமிகள், ஸ்ரீ கோவர்த்தன மடாதிபதி ஸ்வாமிகள், வானமாமலை மடாதிபதி ஸ்வாமிகள், அஹோபில மடாதிபதி ஸ்வாமிகள், உத்ராதி மடாதிபதி ஸ்வாமிகள் இவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டுக்கொண்டும் அன்பார்ந்த ஆதரவின் கீழும் அன்பார்ந்த ஆலோசனைகளை முன்னிட்டுக் கொண்டும் அகில பாரதீய வித்வத் பரிஷத்தும், அகில பாரதீய வர்ணாச்ரம சங்கத்தின் 10-வது கான்பரன்ஸும் நடைபெறும் மேல்கோட்டை மடாதிபதி. மைசூர், பரிஷத்துக்கு தலைமை வஹிப்பார்கள். உத்திராதி மடாதிபதி ஸ்வாமிகள் ஹனுமத்வஜத்தை ஏற்று வைப்பார்கள். ஸ்ரீ கோவர்த்தன மடாதிபதி ஸ்வாமிகள் பண்டித பரிஷத்தை ஆரம்பித்து வைப்பார். உத்திராதி மடாதிபதி ஸ்வாமிகளும், கோவர்த்தன மடாதிபதி ஸ்வாமிகளும் மதுரா ஸ் கோமளேச்வர மடாதிபதிஸ்வாமிகளும் பம்பாய் கோகுலநாத்ஜி மகா

காங்கிரஸ் ராஜ்யத்தில் ஏழை விதவைகள் கூட தங்கள் பணங்களை த்யாகம் செய்துவிட்டு கோவில் தேசாந்திரிச் சோற்றைப் பெற்று ஜீவித்து தேசநன்மை செய்யவேண்டுமென்பது வெகு குரூரமான ஆலோசனையாயிருக்கிறது. பொறுப்புவாய்ந்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் இப்படிப் பேசுவது யுக்தமா? அல்லது இது தமாஷ் பேச்சா?

### காங்கிரஸ் வாதிகள் தியாகம் செய்வார்களா?

உண்மையில் இந்த ஏழைவிதவைகளைவிட காங்கிரஸ்வாதிகளே இப்போது த்யாகம் செய்ய ஸந்தர்ப்பமேற்பட்டிருக்கிறது. ஏற்கனவே காங்கிரஸ் மந்திரிகள் குறைந்த சம்பளம் பெற்று த்யாகம் செய்திருக்கிறார்களல்லவா? சட்டஸபை மெம்பர்களும் குறைந்த படித்தனம்பெற்று த்யாகம் செய்திருக்கிறார்கள். அதுபோல் அவர்கள் இந்த மசோதாவால் ஏற்படும் அநுகூலங்களையும் த்யாகம் செய்து ஏழைகளுக்கு உதவிசெய்யமட்டுமே? இந்தக் கடன் நிவாரண மசோதாவால் இம்மாகாணத்தில் பெரியமிராசுதார்களும், பணக்காரர்களுமான அநேக காங்கிரஸ்வாதிகள் கூட வட்டிகொடுக்காமல் தப்பிக்கொள்ளப் போகிறார்கள். இந்த மசோதாவால் ஏற்படும் பண அனுகூலத்தைத் தாங்கள் உபயோகித்துக்கொள்வதில்லையென்றும் அதனால் கிடைக்கும் லாபத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதென்றும் காங்கிரஸ் த்யாகிகள் ஒரு ஏற்பாடு செய்யலாமே! இதைவிட்டு ஏழை விதவைகளைத் தங்கள் பணத்தை இழந்து தியாகம் செய்ய' கேட்பது ஜீவகாருண்யமுள்ள பேச்சாயில்லை.

கைப்பணத்தை இழந்து, கோவில் சோற்றுக்கு தாளம் போடும்படி யோஜனை சொல்வது மிக்க விநோதமாயிருக்கிறது. தேவஸ்தானபோர்டுச் சட்டம் திருத்தப்படும்போது இந்தமாதிரி கட்டளைச் சோற்றுக்கும் ஒரு சட்டம் ஏற்படும்போலும்! இத்தகைய மனப்போக்குள்ளவர் நமது ஜில்லா பிரதிநிதியாக நமக்குக் கிடைத்திருப்பதைவிட வேறு பாக்கியம் என்ன?

ராஜ் அவர்களும் ஜட்ஜுகளாக விருப்பார்கள். முன் வெளியிட்ட பார்வையாளர்களுள் ஹைகோர்ட் ஜட்ஜ் வரதாசாரியார், ரிடையர்டு கொச்சின் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் வைத்யநாதய்யர், மேன் தங்கிய கொச்சி 7வது அரசர் ராமவர்ம பரீக்ஷித்து தி. H ராவ்பகதூர் டி. வெங்கட கிருஷ்ணய்யர், லாணட் லார்ட் சத்நாபூர் ஒரிஸா, ஜயந்யராயய்யா பந்துலுகாரு கவி ஆந்த்ர தேசஅவர்களும்பார்வையாளர்களாயிருப்பார்கள் ஸ்ரீமான் ப்ரபல லக்ஷ்மீ நரசிம்ம பந்துலு B. A. B. L. அட்வகேட் வித்வான் பல பாஷை பண்டிதர் விசாகப்பட்டிணம் பண்டித பரிஷத் வரவேற்புக்கமிட்டித்தலைவர். காசி கல்கத்தா, மீரட், புனு, பம்பாய், அம்ரதகலநப்ண்டாரபுரம், ஆமதாபாத், அஹமேதநகர், ஜகந்நாத், அலகாபாத், முதலிய இடங்களிலிருந்து, 100 பண்டிதர்களும் தமிழ் நாட்டிலிருந்து 100 பண்டிதர்களும், ஆந்த்ர தேசத்திலிருந்து 50 பண்டிதர்களும் கொச்சியிலிருந்து 25 பண்டிதர்களும் விஜயம் செய்கிறார்கள்.

20 மஹாமஹோபாத்யாயர்களும் 20 தர்மசாஸ்திர வேதாந்த வ்யாகரண தீர்த்தர்களும் விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கான்பரன்ஸுக்கு ஸ்ரீமான் ஸேத்தேவிதாஸ் மாதவஜீதாக்கர்ஸே அக்ராஸனாதிபதி. ஸ்ரீகோகுல்நாத்ஜீ மஹாராஜபாம்பே கொடியேற்று வைப்பார். ராஜா ஸர் வாஸுதேவர்கான்பரன்ஸை திறந்து வைப்பார். கோகுல் தாஸ் புருஷோத்தமதாஸ் என்ற கோடீஸ்வரர் வரவேற்புக்கமிட்டித்தலைவர். ஸ்ரீமான் என். ஸ்ரீனிவாஸாசாரியார் மாஜி தேவஸ்தான கமிஷனர் தேதியூர் சாஸ்திர ரத்னாகர சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வைஸ்பிரஸிடெண்டுகள். மஹாமஹோபாத்யாய டாக்டர் தாக்ஷிணாத்ய கலாநிதி ஸாமிநாதைய்யர் திவான்பகதூர் A. V. ராமலிங்கய்யர் ரிடையர்ட் சீப் என்ஜினியர், திவான்பகதூர் N. ஸ்வாமிநாதய்யர் ரிடையர் சீப் என்ஜினியர் மஹாமஹோபாத்யாயர்கள் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், பண்டிதராஜ R. V. கிருஷ்ணமாச்சாரியார், யக்ஞஸாமிசாஸ்திரிகள் முதலிய இன்னும்பலர் வரவேற்புக்கமிட்டி வைஸ்சேர்மனாக அமைந்திருக்கிறார்கள். ராவ்பகதூர் ஸதாசிவ மாதவராவ் பாண்டே ரிடையர்ட் டிஸ்டிரிக் அண்டு ஸெஷன் ஜட்ஜ் அவர்களும் சென்னை டி. எஸ் ராமஸ்வாமிய்யர் அவர்களும் கார்யதரிசிகள். இவ்விதம் மஹாஸபையை சென்னை மாகாணம் இதுவரை பார்த்திருக்காதென்பது நிச்சயம். இந்த மஹாஸபையைக்கூட்டுபவர்கள், ஸநாதநிகள் யாவரும் போஷகர்களாகவும், நன்கொடையாளர்களாகவும் வைஸ்பிரஸிடெண்டுகளாகவும், மெம்பர்களாகவும் வரவேற்புக்கமிட்டியில் சேர்ந்து மஹா ஸபை நன்கு உதவிபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். வரவேற்புக்கமிட்டியில் 300 பேர்கள் இருப்பார்கள். மஹாஸபைக்கு விஜயம் செய்பவர்களின் இலவச ஆஹாராதி வசதிகளுக்காக மஹாஸபை நடக்குமிட மிருந்து ஒரு பர்லாங் தூரம்வரை பங்களாக்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றன. மகாநாட்டுச்செலவு 20000 ஆகப்படுகிறது. நன்கொடையாளர்கள் 100ரூயும் 50ரூபாயும் செலவு தரவேண்டும். இதற்கு மேல் உதவி செய்பவர்கள் ஸபை பரிஷத் இவைகளின் போஷகர்களாகக்கருதப்படுகிறார்கள். 56, 35 செலுத்துபவர்கள் வைஸ்பிரஸிடெண்டிகள் பரிஷத்தின் வரவேற்புக்கமிட்டி மெம்பர் பதவிக்கு10ரூ கான்பரன்ஸின் வரவேற்புக்கமிட்டிக்கு மெம்பராக 2, 5, ரூ செலுத்த வேண்டும். அழைக்கப்பட்ட பண்டிதர்களுக்கு பரிஷத் நிதியிலிருந்து போக்குவரத்து சிலவுகொடுக்கப்படும். ராவ்ஸாஹிப் என். நடேசய்யர்.

### சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 22வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்னும் இரண்டு ஸஞ்சிகை யுடன் இந்த வருஷம் பூர்த்தியாகி விடுகிறது ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். மானேஜர்.

### மிராசுதார்களை வசப்படுத்தவா?

கனம் ஸி. ஆர். தந்திரம்.

கனம் ராஜகோபாலாசாரியார் தந்திரசாலி ஸாமர்த்தியசாலி. வ்யவஸாயிக்கடன் பளு நிவாரணம் செய்ய முன் வந்திருக்கிறார். உள்ளூர எல்லாம் தந்திரம் நிறைந்தது. காங்கிரஸ் கக்ஷி வலுத்திருப்பதும், அது அதிகாரத்திலிருப்பதும் பிரபல மிராசுதார்களின் ஆதரவை பொறுத்திருக்கிறது. இதை கனம் ஆசாரியர் நன்கு அறிவர். ஆயினும் மிராசுதார்களை விரோதித்துக்கொள்ளக்கூடிய தவறு நடந்து விட்டது. சாஸ்வதமாக நிலவரியை குறைக்க காங்கிரஸ் மந்திரி ஸபை வகை செய்யவில்லை. சாக்கு சொல்லி வருகிறது. இத்துடனில்லாமல் மிராசுதார்களுக்கு புதிதாக நிலவருமான வரி விதிக்க யோஜனை செய்கிறது. இதனால் மிராசுதார்கள் மிகுந்த அதிருப்தி அடைந்துவிட்டார்கள். எங்கும் கண்டனமும், ஆர்ப்பாட்டமும் ஆரம்பித்து விட்டது. இத்தோடு கடன் தவணை ஒத்தி வைப்பு ஸௌகர்யத்தில் 400 ரூபாய் கீழ் கிஸ்தி செலுத்துகிறவர்களுக்கே அநுகூலம் செய்ய உத்தேசித்ததும் பெரிய மிராசுதார்களுக்கு அதிருப்தியைக் கொடுத்திருந்தது. நிலைமை முற்றும் தருவாய்க்குவந்துவிட்டது. கனம் ஆசாரியார் யோஜித்தார்.

மிராசுதார்களையும் தம் வலையில் சிக்கவைக்க வகைதேடினார். இப்போது கடன் பளு நிவாரணத்தில் பெரிய பெரிய மிராசுதார்களுக்கும் அநுகூலம் செய்ய வழி ஏற்படுத்திவிட்டார். இதைக்கண்டு மிராசுதார்கள் மந்திரி ஸபை மீது திருப்தியடையலாம். மந்திரி ஸபையை ஆதரித்து நிற்கக் கங்கணம் கட்டலாம். இதன் மூலம் கனம் ஆசாரியாரின் தந்திரம் பலிக்கும்படி ஆகலாம்.

ஆயினும் இந்தச் சிறிய ப்ரயோஜனத்தோடு மிராசுதார் திருப்தியடைந்து ஏமாந்து விடக்கூடாது. நிலவரிக் குறைவிலோ, புதிய வருமானவரி விதிப்பிலோ கனம் ஆசாரியர் ஒரு அநுகூலமும் செய்யக்கூடியதாக ஹேஷ்யமில்லை. இந்த விஷயத்தில் எவ்வித உபகாரமும் மந்திரி ஸபையால் மிராசுதார்களுக்கு ஏற்படப்போவதில்லை. கனம் மந்திரி தமது தந்திரத்தையும், எண்ணத்தையும் எப்படியும் பூர்த்திசெய்துகொண்டு விடப்போகிறார். இப்போது அல்ப ப்ரயோஜனத்திற்காக ஸந்தோஷத்தில் மூழ்கி நிற்கும் மிராசுதார்கள் பிறகு பெரிதும் ஏமார்ந்து நிற்கப்போகிறார்கள். மிராசுதார்களே! ஜாக்ரதை!!

ஒரு மிராசுதார்.

ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

ராஜமகேந்திரம்.

## அகில இந்திய ஸநாதன பண்டித பரிஷத்

### மதராஸில் ஆரம்பக்கூட்டங்கள்.

மஹா ஜனங்களின் மஹோத்சாகம்.

(நமது விசேஷ நிருபர்)

சென்னை டவுன் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீமான் நாகேஸ ஐயர் பி. ஏ. பி. எல் தலைமையில் பரிஷத்தின் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. மதுரை அட்வகேட் ராவ்சாகிப் என். நடேசய்யர், நாக்பூர் ரிடையர்டு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ராவ்பகதூர் பாண்டே முதலிய பிரமுகர்களும் திரளான ஜனங்களும் விஜயமாயிருந்தனர். சாஸ்த்ரரத்ன பஞ்சாபகேசசாஸ்திரி, சாஹித்ய சிரோமணி ஹெட்மாஸ்டர் கிருஷ்ணமாச்சாரியார் பண்டிட் சோமதேவசர்மா முதலியோர்களால் தீண்டாதாரும் ஆலயப்பிரவேசமும் என்பது பற்றி ஸ்வாரஸ்யமாக வாதப்ரதிவாதங்களுடன் எடுத்துரைத்து தீண்டாமை விலக்கு, விதவா விவாஹம், கலப்பு மணம், முதலிய நவீன விஷமப்ரசாரகர்களின் புதிதாய்ப் புகுத்தப்படும் கொள்கைக்கு சாஸ்திரத்தில் இடம் கிடையாதென உபன்யசிக்கப்பட்டது. திருவாங்கூர் ஆலயப்பிரவேசப் பிரகடனத்தையும் அதை ஆதரித்து சென்னை சட்டஸபையில் செய்த தீர்மானத்தையும் கண்டித்தும் ஸ்ரீமான் டி, டி கிருஷ்ணமாச்சாரியார் எம். எல். ஏ. தைர்யமாய் எதிர்த்து ஓட் செய்ததைப் பாராட்டியும் ராவ்பகதூர் பாண்டே அவர்களால் ப்ரேரேபிக்கப்பட்டு ராவ்சாகிப் நடேசய்யரவர்களால் ஆமோதிக்கப்பட்டு பெருங் கரகோஷத்துடன் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. திருவாங்கூரிலிருந்து வந்திருந்த ஓர் பண்டிதர் அங்கு ஆலப்பிரவேசப் பிரகடனத் துக்குப்பின் ஆஸ்திக வாதிகள் எவருமே கோயிலுக்குச் செல்வதை நிறுத்தி விட்டதாயும் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஆலயங்களுக்கு தினசரி செல்ல வேண்டுமென கவர்மெண்டாரர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாயும் விசிடிங் புக் வைத்துக்கொண்டு வந்தவர்களிடம் கையெழுத்து வாங்கப்பட்டும், வாராதவர்களுக்கு அபராதம் போடப்படுவதாய்த் தெரிவதாயும் நிரம்பவும் பயத்துடனே தெரிவித்தார். அதிலிருந்து அவ்வூரிலேயே புதிய கிளர்ச்சிக்கு ஆதரவில்லாமல் பெருமிதமான எதிர்ப்பிருப்பதை யாவரும் அறிந்து கொண்டனர். இந்தக்கூட்டத்திற்கு ஸ்திரீகளும் திரளாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இறுதியாக தண்டலம் டி. எஸ், இராமஸ்வாமிய்யரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டது. சென்னையில் குஜராத்திமார்வாடிகளிடையே பிரசாரம் செய்ய வடஇந்தியாவிலிருந்து சாமர்த்தியமுள்ள ஹிந்திப்ரசாரகர்கள் வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும். ராயப்பேட்டையில் நடாதூர் அட்வகேட் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசாசாரியாரால் ஓர் பிரசங்கம் செய்யப்பட்டதாயும் எங்கும் சநாதனப்ரசாரம் பலமாய் நடைபெற்று வருவதாயும் தெரிகிறது. ஸ்ரீமான்கள் பி. ஆர் திருமலை ஐயங்கார், டி. எஸ். இராமஸ்வாமிய்யர், சோமதேவ சர்மா முதலியோர்கள் ஊக்கம் பாராட்டத்தக்கது.

நமது நிருபர்

(2ம் காலம் தொடர்ச்சி)

இம்மூன்று தினங்களிலும் அதி அற்புதமான விசேஷத்ததீயாராதனம் நடந்தது.

8௳ இரவு 7 மணிக்கு கருடவாகனத்தில் புறப்பாடு நடந்தது.

ப ரெ. திருமலை ஐயங்கார்.

## பழனி.

### லெக்ஷார்ச்சனை கைங்கரியம்.

பழனியம்பதியில் பிரகிர்தம் ஈசுவரநாமஸம்வத்ஸரத்தில் நவக்ரஹங்களின் பலீயஸ்ஸான குரு, சனி, இவ்விரண்டு கிரஹங்கள் வக்ரகதி அடைவதால் பிரஜைகளுக்கும், ராஜாக்களுக்கும் ஏற்படக்கூடிய கொடுமைகளை நிவர்த்திக்க திருவுள்ளங்கொண்டு ஸ்ரீ பழனியாண்டவர் அத்யந்த க்ருபையினால் அதிருத்ரம் என்ற மஹா கைங்கரியத்தை இதுவரை எங்கும் ஒருவராலும் நடத்தப்படாத நிலைமையில் 121 குடம் கெங்காதீர்த்தம் தருவித்து 121 வேதவித்துக்களைக்கொண்டு 11-தினம் பிரதிதினத்திலும் ஒவ்வொருவரும் ஸ்ரீ ருத்ரம் 11 ஆவர்த்தி மகான்யாசத்துடன் பாராயணம் செய்யும்படி செய்து, ஹோம, தர்ப்பணம் எல்லா ஜாதியார்களுக்கு அன்னதானம் இவைகளை நடத்தி 12-வது தினம் அபிஷேகம் செய்விக்கும்படி 121குடம் கெங்காதீர்த்தம் பிரயாகையிலிருந்து தருவிக்கப்பட்டிருப்பதால், பழனி அடிவாரத்தில் ஸ்ரீமான் சங்கரண்டாம்பாளையம் பட்டகார் அவர்கள் தர்மார்த்தம் நூதனமாக அமைத்திருக்கும் கட்டிடத்தில் நிகழும் ஈசுவரநாம ஸம்வத்ஸரம் கார்த்திகைமீ 23௳ புதவாரம் சுக்லபக்ஷம் பஞ்சமி சிரவண நக்ஷத்திரமும் (8-12-37) கூடிய சுபதினத்தில் ஆரம்பித்து 11 தினம் ஜப, ஹோம, தர்ப்பண அன்னதானம் முதலியன நடத்தி 12-வது தினமான ஈசுவர ஹு மார்கழிமீ 5௳ ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (19-12-37) ஸ்ரீ பழனியாண்டவருக்கு உத்திரப்படி அபிஷேகம் செய்விப்பதாய் நிச்சயித்திருக்கிறது. தவிர ஷைபாராயணதினம் பதினொன்றிலும் ஸ்ரீ பழநியாண்டவருக்கு ஸ்ரீ சுப்ரமண்ய ஸஹஸ்ரநாமத்தில் ஒரு லெக்ஷார்ச்சனையும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு லெக்ஷார்ச்சனையும் நடைபெறும்.

தவிர இக்கைங்கர்யமானது சர்வஜன க்ஷேமார்த்தம் ஸ்ரீ பழனியாண்டவரால் நூதனமாக பிரரேபிக்கப்பட்டிருப்பதால் ஸர்வத்ராளும் க்ஷேமத்தை அடையும்படிசெய்ய ரக்ஷாபந்தன யந்திரத் தகடுகள் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஷை தகடுகள் 14641 ஆவர்த்தி ஸ்ரீ ருத்ரம் பாராயணம் ஹோமம் தர்ப்பணம், அன்னதானம் முதலிய கைங்கரியங்கள் நடத்தி தயாரிக்கப்பட்டிருப்பதால் அம்மந்திர பலத்தினால் அதை அணிபவர்களுக்கு எல்லாவித நன்மைகளும் க்ஷேமமும், ரோக நிவர்த்தியும் எல்லாவித சங்கடதோஷங்களும் நிவர்த்தியாகும்என்பது நிச்சயம். ஆண், பெண், பாலர், விருத்தர், அனைவரும் தரித்துக்கொள்ளலாம். அபேக்ஷகர்களுக்கு கொடுக்கப்படும்.

பழனிசிவன்

## திருவள்ளூர்.

### த்வஜஸ்தம்ப பிரதிஷ்டா மஹோற்சவம்.

திருவள்ளூர் எனத்தற்காலம் வழங்கப்படும் திரு எவ்வெள்ளூர் என்ற திவ்யதலத்திலுள்ள ஸ்ரீ வீரராகவஸ்வாமி சந்நிதியில் த்வஜஸ்தம்ப பிரதிஷ்டை ஸ்ரீ அஹோபில மடம் நாற்பத்தொன்றுவது பட்டத்தில் மூர்த்தாபிஷக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்திர மஹாதேசிகனுடைய நியமனப்பிரகாரம் 6-12-37௳ திங்கட்கிழமை ராத்திரி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, 7௳ யாகசாலையில் கடஸ்தாபனம், ஹோமம், வேத பாராயணம் முதலியவை நன்கு உபக்ரமிக்க 8௳ புதன்கிழமை சூரியோதயத்துக்கு முன் 4¾ மணி பூர்ணாஹுதியும், உதயத்தில் த்வஜஸ்தம்பப்ரோக்ஷணமும், அன்றையதினம் 4 மணி வரை ப்ராயச்சித்த ஹோமம் அபிஷேகங்களும் வெகு சம்பிரமமாக நடந்தன.

(Continued from page 9.)

the matter. But as for the benefits of co-operative Banking of which I have sufficient experience in this district, I can confidently say that, if anything, it has effected financial devastation in many villages on account of the unlimited liability system on which rural banks are based, I am unable to understand how, if the facts are known, any credit could be claimed for the co-operative credit system as it is working at present in spite of the large and costly machinery that is supposed to advise, guide and control it with parental solicitude. It may also be noted that the history of Government Agricultural Loans in this district has not got a happier tale to tell. Lastly, I desire in this connection to refer to a remark made by the Editor of Indian Express in his recent speech at Mayavaram where evidently he had gone on a propagandist tour to enlist support for this Bill. To a question put by a gentleman in the audience as to what would be the fate of many helpless ladies young and old, who have been depending for their maintenance solely upon the interest payable on the amounts they had lent out, the speaker is reported to have replied that they can apply to the Honourable Dr. T.S.S. Rajan who is in charge of Religious Endowments for making provision for them, obviusly meaning that they can all wait at the doors of temples begging their feed. Words fail me to adequately condemn the impudent insult and callous contempt that this remark betrays. I do not know how the Hindu audience whom he was addressing felt at the time. But even to read it in cold print makes may blood boil and I have no doubt that unless the Hindu nerve has got completely atrophied, every brother Hindus, with the solitary exception of the speaker, will share my feeling. Had such a remark been made by the follower of a different religion, I am sure the whole country would have reverberated with angry protest. But perhaps because this is a case of fouling one's own nest it is left unnoticed. I for one strongly protest against such maudlin sentimentality. The cancer within is more dangerous than the spear-thrust of the open enemy. Oh! God! God! Save us from such leadership!

## உடையார்பாளையம்.

நாளது டிஸம்பர்மீ 23௳ பகல் 1-மணிக்கு உடையார்பாளையம் போர்டு ஹிந்து ஆண் எலிமெண்டரி பாடசாலையில் ஷை செண்டர் உபாத்திமைச் சங்கத்தின் 29-ம் ஆண்டுவிழா பல்கலைக்கழகம், ஜில்லா கல்வி மன்றம் இவற்றின் அங்கத்தினரும் தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவருமான திரு.பி. வேங்கடாசலம்பிள்ளை பி ஏ. பி.எல்.; எம், எல். ஏ. அவர்கள் அக்ராசனத்தின் கீழ் நடைபெறும். அவ்விழாவில் கும்பகோணம் நகர உயர்தர கலாசாலை தமிழ் ஆசிரியர் பிரும்மஸ்ரீ வை. சா. வேங்கடராமய்யர் அவர்களால் "ஆரம்ப ஆசிரியர்" என்பதைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நடைபெறும். அன்பர்களை விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எஸ். ஏ. வி. நாதன்,
உதவி காரியதரிசி.

## காசி ஹிந்து கலாசாலை.

### கௌரவப்பட்டங்கள்.

லார்டு லோதியின் பிரஸங்கம்.

காசி ஹிந்து சர்வகலாசாலையில் இவ்வருஷப்பட்டமளிப்பு விழாவில் லார்டுலோதியன் பிரஸங்கம் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார். சுமார் ஒரு டஜன் ராஜாக்களுக்கு டாக்டர் பட்டம் வழங்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.



701

## The Agriculturists' Relief Bill.

(By *Advocate M. K. Vaidyanatha Aiyar.*)

The public would be grateful to the Government for having been responsive to public criticisim and dropping the moratorium Bill. The present Bill for relieving agriculturists from indebtedness is equally fraught with danger. The Bill will fail of its purpose, unless land value rises and unless the income of the agriculturist is perceptibly increased by a rise in price of paddy and other grains and a substantial relief in rate of kist.

The statement of objects and reasons put forward a special plea. If statistics were taken, it would conclusively show there have been any number of private and voluntary conciliations and creditors resort to courts only where the debtors are thoroughly unreasonable. No creditor goes to court willingly, as he is always put to heavy expense and as a good deal of his time is taken up in attending the hearings in courts and as he has often to incur expense in travelling and for numerous unmentionable purposes for which he is never compensated.

The Governments expropriatory tendencies have even now not a little stifled personal credit- Lands would not command a market, for there is no knowing about the intentions of the Government. There is a genuine apprehension that Government may legislat against mirasdars and create at any timee occapancy rights in favour of cultivators. There is further the hint of a tax on agricultural income. A Mirasdar of ryotwari land owning about 50 acres has not been able to raise a personal loan of 200/- Government's primary duty is to create a respect for and enforce the fulfilment of obligations between citizen and citizen, and this Bill, if passed into law, will completely crush private credit, which has now frozen up on account of the numerous obstructions placed by law in the way of the creditor realising his dues. This ceasing of personal credit will not affect agriculturists alone, it will spread to trade and other walk of life.

Public credit also is sure to suffer and likewise, for— who knows—a Government, which denies the undoubted right of a creditor who has lent on the faith of the existing law and whose substantive rights must be preserved to him under any system of jurisprudence and ought not to be taken away by any legislation with retrospective effect, may not respect its own obligation and, in order to relieve itself of the huge burden of public debt, legislate for scaling it down and interest due thereon or even wiping it altogether? Confidence in the present Government has already received a rude shock and, if it has not yet found expression, it is because of the lingering love for the Congress in the minds of all. Already people are discussing that the Congress was returned only on the question of the Government of India Act and these sweeping legislations were not even foreshowed by them when Congressmen went to the polls.

It is up to the Government to let the public know what all it proposes to do during its tenure of office in the way of unsettling things existing, so that the people may know how to react and readjust.

The Bill proceeds on the basis that money lending is a sin and money lenders are monsters. In a modern complicated Society the money lender is an indispensable unit, for with his aid alone, the agriculturist pays his kist though his paddy is not sold, the merchant honours his bills though he has not sold the goods. The grabbing money-lender who charged 18% and 24% and would take advance interest and resort to a variety of dubious ways is happily a thing of the past—thanks to the formation of joint stock Banks.

Joint stock enterprise is a new activety in our country and it is yet in its infancy. The discrimination among joint stock banks and exemption of Banks with share-holders of over 500, which is after all an accident, is undefendable and appears to be based on no principle. A preference based on the extent of paid up share capital may be something but even that is vicious. Any harm that may be done to any Bank, whatever its dimensions be, will be irretrievable and one would not be surprised if panic sets in consequent on many of the Banks being brought under the Bill, threatening or jeopardising their very existence. Banks in this country do not do purely banking work as understood in the West and most of the Banks have lent largely to agriculturists and that money really belongs to the investors who have invested in those Banks for very low interest.

The speech of the Premier in defence of the Bill is more amusing than convincing. Maharajas would forego their taxes due to them for a period or make other gifts to their subjects to mark an important or festive occasion- If the Congress Government on assumption of Office had declared that thereafter the land tax was reduced by 33⅓ per cent as the voters who returned the Ministers at the Polls fondly believed and expected, that would have been in the fitness of things. It would have been particularly appropriate for, after all, the Government would be only returning to the ryots what was collected from them during the past several years calculated at Rs. 1–12–0 and more per kalam, while paddy was actually selling so low as 15 as, and Re. 1/– per kalam (It has not yet come up to even Rs. 1—8—0). It would have been bare justice. In fact Government should repay with interest. But to victimise bonafide lenders who have helped the Government to realise its dues by lending to the helpless ryots and mirasdars who have paid their dues to the Government, not from the crops which their lessces kept in arrears, but from their own pocket or by borrowing is only robbing Peter and paying Paul.

Tillers of the soil will always have their hereditary occupation, whether they own lands are not. If their lands are purchased by others, they would still be called in to cultivate and their position will always be assured.

The Bill is open to very serious objection and will have far reaching adverse effect and the country is greatly indebted to the leading newspapers for opening up their valuable columns to make the opinion of the public widely known. For one that writes to a paper, there are any number who read and simply approve without actually starting an agitation.

II

(*By. Mr. T.E. Sadagopachariar M. A. BL. Advocate*)

The Prime Minister is busy canvassing public opinion for the above Bill and others like the editor of the Indian Express are also carrying on assiduous propaganda in its favour. Our Bar Association is preparing a memorandum upon the Bill for submission to the Government and I shall not therefore anticipate it now by entering upon a detailed examination of the measure. But I feel it necessary to refer here to a few remarks that have been made by the propagandists in their recent speeches. In his speech at the public meeting held at Madras under the presidency of Mr. V. Ramadas Pantulu, the Prime Minister referred in eulogistic terms to the rule of the Mohommedan religion prohibiting the levying of interest on loans. Of course no one can have any quarrel over that. At the same time, he also felt tempted to refer to the Hindu belief of a debt obligation sitting heavy upon the soul until it is discharged and when in the audience a voice expressed approval of the principle of such belief the Premier apparently felt complacent that it was after all a solitary voice. But even here, I do not think it right to raise a dispute for, when the duty of the son to his father for which Sree Rama used to be held up as an ideal and the devotion of the wife to her husband for which Seetha was praised and adored are all cast to the winds in these days of *advancing culture* it will be supererogation to ask any body to owe allegiance to this particular Hindu Dharma viz. the debtor's obligation to his creditor. But when the Premier made reference to the injunction of the Hindu Sastras which enjoins the creditor to refrain from claiming by way of interest an amount higher than the principal sum itself, which in modern legal parlance is known as the Damduput doctrine and which is supposed to be embodied in the present Bill, I must respectfully enter a demurrer, because the provisions of Clause 8 of the Bill go far beyond the Demduput limitation as prescribed in the smrithis or expounded by the decisions of the Courts. According to the Damduput theory when at any time the arrear of interest on the principal debt gets accumulated so far as to reach the limit of the principal itself the latter becomes sterile i.e. it ceases to carry interest any further. In the application of this rule past payments towards interset are not taken into account and the principal amount is that which is treated as such in the bond and not what might have been originally advanced in cash, so that if the debtor executes a bond capitalining the interest payable till then that will be regarded as principal. It was this that was embodied in Regulation on XXXIV of 1802 which however was repealed by Act XXVIII of 1855. This doctrine is clearly dealt with in many decided cases from early times e. g. 1. Mad. H. C. 5, I. L. R. 5 Cal. 867, I. L. Rt. 24, Bom. 305; the last of which, a judgmen of Sir Lawrence Jenkin C. J. contains a detailed examination of the original texts bearing on the matter. If the new Bill should merely reproduce this wholesome doctrine no reasonable man can have any objection. But the fact is that under the guise of nominal allegiance to this principle a wholesale expropriation is sought to be carried out by this Bill which, for form being 'a right and just thing' as the Premier chose to put it, offends against all accepted notions of justice, equity, and good conscience. The Premier further said that if he had been the Maharajah of Madras free to enforce his will unfettered by the trammels of a legislature he would have unhesitatingly issued a royal proclamation on the lines of this Bill. Of course it is a different matter whether we should congratulate ourselves or not on not being blessed with a Maharajah of this type. At the same time the world has not yet become too dull to appreciate the interesting psychological study that this statement affords- But our Premier has been openly protesting against any attempt to compart him with the Fuhrer and the Premier knows his own mind better than any other. But of one thing I must remind the Premier viz. that Hindu Maharajas on their accession to the throne never perpetrated acts of spoilation, confiscation or expropriation, but made gifts to the people from the royal treasury and granted remissions of royal dues. In that meeting, the President observed that he hailed the new Bill because it would sweep away all usury from the land and usher the millenium of co-operative banking everywhere. It is too soon to predicate anything about the benefits of this Bill, nor do I at present want to enter into a discussion on

(Continued on page 8)

## THE LATEST STYLE IN PROPAGANDA.

### (Re. Temple-entry).

*(Mr. R. Krishnaswami Aiyer.)*

There was a poor but enterprising young boy studying in one of the High Schools at Madras in the late nineties. He used to write out for himself a handsome testimonial testifying to his keen intelligence and excellent character and subscribe it with the well-feigned signature of, say, Sir P. S. Sivaswami Aiyar. He would take this to V. Krishnaswami Aiyar and by patiently waiting on his convenience for a few days would earn his sympathy and promise of a small monthly contribution towards his education expenses and get from him a short but expressive letter of recommendation couched in his inimitable language. He would then take these two testimonials to P. R. Sundara Aiyar and easily induce him also to promise him an equal monthly support and to give him a similar testimonial. This process would go on till the boy had collected about a dozen genuine testimonials in his hand. Then he would coolly go to Sir P. S. Sivaswami Aiyar and show him all the testimonials, of course other than the first. On the faith of them, that worthy gentleman also would promise his support and give him another testimonial. The boy would have no use for the first faked up testimonial thereafter and it would no longer see the light of day. When any of those gentlemen met one another they had certainly more weighty matters to talk of than this poor needy boy and he was therefore quite safe from detection. His scheme worked beautifully and without the slightest hitch.

I do not vouch for the historical truth of this story but those who are familiar with the kind-heartedness of the then bigwigs of Mylapore will agree that there is nothing at all improbable in it.

The excellent example set up by this enterprising young man finds an interesting parallel in the curious tactics now being adopted by some of the Madras Ministers who are keen on thrusting upon an innocent public their pet lad of Temple Entry for all. The public accustomed as they have been till now to think of the Congress and the Ministry as antagonistic to each other are naturally curious to see a "Congress Minister" and, wherever he goes, a crowd gathers out of sheer curiosity rather than with any idea of endorsing his views on religion or even on politics. To such an audience, at one place say, Tuticorin, the Minister makes the announcement that he has won over the entire sanatanist population of Kumbakonam, the citadel of orthodoxy, to his view of Temple Entry. The audience, that is, such of it as is able to hear and understand him, is, struck with wonder at his courage in making such a declaration. He passes on, to say, Tiruchendur and assures the people there that Tuticorin is entirely with him, then further on to Kallidaikurichi where he tells its simple folk that the guardians of Sri Subrahmania at Tiruchendur are quite in agreement with him on the immediate need for Temple Entry for all. This process is repeated from place to place in the name of "educating public opinion" and this merry-go-round goes on quite cheerfully at the expense of the public in more senses than one. There is certainly no lack of publicity when there is an obliging section of the Press prepared to boom anything that comes from the Congress ranks and to withhold the publication of any incident likely to mar the completeness of the Minister's triumphal tour.

## The All-India Vidvat-Parishad.

(Mr. N. K. Venkatesam.)

Arrangements are going on for holding at Madras this month a Conference under the name of "The All India Pandits" Conference" with the avowed object of bringing together a limited number of Pandits, who are credited to have "progressive views," that is, pandits, who "believe in the adaptability of Hinduism to the changing conditions and spirit of the times," to examine the same Sastras of the Hindus, which are accepted as binding, by those who are called orthodox and to formulate opinions on certain matters which they consider to be essential for bringing Hinduism into line with what they consider to be the requirements of modern life. Their main attention is directed to four important points—the removal of untouchability and the free admission of all classes of people into the inner precincts of the Hindu Temples, changes in the laws relating to the marriage and the inheritance of women, the simplification or nullification of Vedic rituals and Samskaras and the admission into the Hindu-fold of those who leave Hinduism and follow other religions and as a corollary of even the born followers of other religions. Several years ago, efforts were made in this direction, though not on such a vast scale, both at Tiruvadi and Conjeevaram, by some of these very individuals to interpret the Sastras in this manner. But now mightier efforts are being made and a section of Pandits is again being brought in for the purpose, with a view to give their resolutions or conclusions or interpretations, the imprimatur of Sastraic authority. Their declared object is to "educate public opinion" in such important socio-religious matters. Whatever may be the merit of or the need for such an endeavour to interpret the Sastras at this particular moment, this move has necessarily made it essential for the followers of Vaidika Dharma to convene in the same city of Madras an "All-India-Vidwat-Parishad," in order to show to the public the other side of the picture, if the picture could have two sides. This Conference is to be held, as we understand, from 25th December. for four days. It has also been announced that, immediately following the Vidwat-Parishad, there is to be held the Tenth All India Varna-Asrama Conference for three days from 29 th to 31 st December. Thus those who are interested in the preservation of the structure of Varna-Asrama, as based on the Sastras, which have come down to us from the Age of the Vedas, will sit together and consider the whole situation for a whole week at the end of this month.

The boy in the story had at least the merit of being able to get genuine signatures in the testimonials other than the first and even succeeded finally in getting a genuine testimonial in substitution of that faked-up one. The support and approval which our Ministers claim to have secured at every place are equally hollow. Is a cause worth while pushing on which has to be bolstered up like this? A child by repeating to itself that five multiplied by four yields twenty-five may grow to believe and to repeat to others this mathematical "truth". But can untruth ever *become* truth simply for the reason that it is being incessantly repeated. Any amount of emphatic assertion by Mr. Gandhi and his following connot remove form the Hindu Sastras the rules about untouchability and even, if they succeed in burning all the books of the Hindus and in exterminating or winning over their Pandits, it will still remain a truth. Their attempt will be as futile as to burn all books on arithmetic simply because *they* do not approve of the proposition that two plus two make four. It will remain true for all time in spite of their petulant revolt.

The "All India Vidwat-Parishad" is not intended, as is seen from the prospectus, to propagandise any particular theories for practice or even to elucidate opinions on the possibility of interpreting the Sastras to satisfy the needs of our life in the present age. The object of the parishad is not even to "educate public opinion" with any particular object in view, but its main purpose will be to exhibit the structure of Varna-Asrama-Dharma by laying open the various apartments and even the foundation, on which it is based, to the public view.

The enquiry by this Parishad will be based on three fundamental factors:—

(1) Among the three controlling factors in the settlement of social and religious issues relating to Hinduism, namely, the Sastras, Reason and Conscience, what is the order of priority which should be applied?

(2) To what extent are kings competent to change the Sastras and are the legislatures competent to deal with socio-religious matters?

(3) what is to be the basis of the enquiry? Are we to be guided by the Sastra of interpretation, known as Mimamsa, following the accepted methods of disquisition and disscussion or are we to be guided by the exigencies of historical conditions and the needs of human material evolution?

(4) On this three-fold basis of enquiry the Parishad will consider:—

(i) whether and to what extent birth is the criterion of untouchability?

(ii) Whether and to what extent the position of the untouchables and their rights and privileges have been dealt with and decided upon in the Sastras?

(iii) What is the position of the Sastras in relation to the entry of such classes in public places and temples and their sharing with others the use of public wells?

(iv) Whether the Sastras give any room for admission into the Hindu-fold of the followers of other religions or of those who having left the Hindu-fold, desire to get back into it?

(v) If permission is given by the Sastras for such conversion, what are the conditions for such convertion?

(vi) Do the Sastras allow Sastraic marrige between one varna and another among the four varnas and do the Sastras permit inter-marriage among the various sub-sects of one varna based on differences of acnara?

(vii) Do the Sastras countenance the use of the rituals of Varna-Asrama-Dharma by classes who, while entitled to follow all ordinary Dharma relating to life, are precluded from the use of the special code of Samskaras?

(viii) The Parishad will also consider the questions of the day, like the age of marriage, the validity of the Child Marriage Restraint Act, the Marrige of Widows, the question of Divorce, Women's Inheritance, the compulsory and the optional nature of our Samskaras, the permissibility of performing marriage and upanayanam at one stretch on one day, the essentials of Varna-Asrama-Dharma and such other allied questions, whith a view to expound authoritatively the verdict of the Sastras on all social and religious questions from the Sastraic poind of view, pursuing the Sastraic methods of enquiry?

Such a Conference is not coming a day too late or a day too soon. We are threatened on all sides with all sorts of changes in the name of civilisation and modernism. Those who are interested in the right understanding and in the honest following of Vara-Asrama Dharma are bound to gain much from the deliberations of the All-India-Vidwat-Parishad, which is being convened by the most prominent sanatanists of the country, under the patronage of our religious heads, who are still engaged actively in holding up the ideals of vedic religion and life.



## விநாசகாலமும் விபரீத புத்தியும்.

V. N. V.

உலகில் கெடுதலடைந்த வஸ்துக்களை திருத்தியமைப்பது இயல்பு. உதாரணமாக ஓர் வீட்டை எடுத்துக்கொள்வோம். வீட்டின் கூரையோ, சுவரோ கெட்டு விட்டால், தக்க தொழிலாளிகளைக் கொண்டு நாம் அதை ரிபேர் செய்கிறோம். ஆனால் அந்த ஓட்டை வீட்டிலேயே வசிப்பதற்குத் தகுந்தபடி தனது சரீரத்தைத் திருத்தியமைத்துக் கொள்ள முயலும் முழு முட்டாளை நாம் இதுவரை கண்டதில்லை. அவ்வாறு ஒருவன் செய்தால் அறிவாளிகள் அவன் செய்கையில் வருந்தி அவனுக்கு நல்ல புத்தி புகட்டுவார்கள். தனது பிடிவாத குணத்தால் அவைகளை அவன் லக்ஷியம் செய்யாவிட்டால், அவனுக்கு ஏதோ விநாசகாலம் ஏற்பட்டு விட்டபடியால் தான் இவ்வாறு விபரீத புத்தி தோன்றியிருக்கிறது எனத் தீர்மானிப்பார்கள். ஏனெனில் விநாச காலத்தில்தான் மனிதர்களுக்கு இவ்வித விபரீத புத்தி ஏற்படும்.

இவ்வாறிருக்க சில நாட்களாக நமது சனாதன தர்மத்தைப் பற்றி நமது இந்தியாவில் பல வேறு ஜாதிகளைச் சேர்ந்த பலர் விதவிதமான அபிப்பிராயங்களை வெளியிட்டும், பல மகாநாடுகளைக் கூட்டியும், அதை மாற்றியமைக்க வேண்டுமென ... கணம் கட்டிக் கொண்டு சாஸ்திர விருத்தமான துஷ்பிரசாரம் செய்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் யோக்கியதை நடத்தை முதலியவைகளை அறவே மறந்து, தாங்கள் செய்துவரும் கார்யத்தின் பலாபலன்களையும், நன்மை தீமைகளையும் புறக்கணித்து, தங்களது சக்திக்குப்புறம்பான இவ்வித கார்யங்களில், தேன் குடித்த நரி போல், தலைகால் புரியாமல் மதோன்மத்தர்களாக அலைந்து திரிகிறார்கள்.

மேற்கூறிய உதாரணத்தைக் கொண்டு இவர்களை ஒப்பிட்டுப்பார்த்தால், இவர்கள் சனாதன தர்மத்தை சீர்திருத்துவதா? அல்லது இவர்களை சனாதன் தர்மம் சீர்திருத்த வேண்டுமா என்பது நன்கு புலப்படும். சனாதன தர்மத்தை சீர்திருத்த முயற்சிக்கும் இவர்களைப் பற்றி சற்று கவனிப்போம். பலர் தங்களுடைய பிறந்த தேசத்திலும் பற்றுதலற்றவர்கள் (லோகாதீதர்கள் எனப்பிரமிக்க வேண்டாம்) சிலர் தாம் பிறந்த ஜாதியில் நம்பிக்கை யிழந்தவர்கள். வேதம் தர்ம சாஸ்திரம் முதலிய தூய நூல்களைக் கண்டால் கூட விஷம் போல் அவைகளை வெறுத்துத் தள்ளுகிறவர்கள் பலர். சிலரோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் என்ற கொடிய பிடிவாதத்தால் பீடிக்கப்பட்டு, எந்த விஷயங்களிலும் பாபபுண்ய பாகுபாட்டை மறந்து இஷ்டப்பட்டபடி சஞ்சரிக்கும் ஸ்வதந்திர வெறி கொண்டவர்கள். மற்றும் சிலர், வேத சாஸ்திரங்களிலுள்ள விரோதத்தால், அதைப் போதிக்கும் ஸம்ஸ்கிருத பாஷையையும்துவேஷிக்கிறார்கள். இவர்களைவிட மேம்பட்டவர்களும் பலருண்டு. அதாவது வேதம் முதலிய நூல்களைக் கற்கவோ, அதைப்பற்றி விசாரிக்கவோ முற்றிலும் இவர்களுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும்; சுய புத்தியையிழந்து, பிறர் காட்டிய வழியே கதி என எண்ணி, அதர்ம ஸ்தாபனமே தங்கள் வாழ்நாளின் முக்கிய புருஷார்த்தமாகக் கொண்டவர்கள். இவ்வளவு திவ்ய லக்ஷணங்களுடைய மனித வர்க்கங்களால் இன்று நமது சனாதன தர்மமானது சீர்திருத்தம் செய்யப்பட்டால் அது எவ்வாறிருக்குமென்பதைக் கூறவும் வேண்டுமா?

மேற்கூறிய வார்த்தைகளுக்கு நவீன சனாதன சீர்திருத்தக்காரர்கள், ஒன்றுமறியாத மூடர்கள் என்றுவது, எவ்வித கௌரவமும் அற்றவர்கள் என்றோ, அர்த்தம் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவர்கள் லௌகிக விஷயங்களில் நிகரற்றவர்களாக இருக்கலாம். ராஜீய விஷயங்களில் நிபுணர்களாக இருக்கலாம். இன்னும் பல துறைகளில் மஹாமேதாவிகளாக விளங்கலாம். இவ்வித ஒப்பற்ற சாமர்த்தியத்தைக்கண்டு தோட்டி முதல் தொண்டமான் வரை சனாதனிகள் உள்பட எல்லோராலும் இவர்கள் கொண்டாடப்பட்டு பல பட்டங்களையும் புகழ்களையும் பெற்று, மக்களின் நன்மதிப்பிற்குப் பாத்திரமானவர்களாக இருக்கலாம். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நான் கூறுவதெல்லாம் ஒன்றுதான் அதாவது சனாதன தர்மத்தைச் சீர்திருத்தியமைக்கும் ஆற்றலும், அறிவும் அதிகாரமும் இவர்களுக்கு எவ்விதத்திலும் கிடையவே கிடையாது. தர்ம விஷயங்களில் இவர்கள் முழுக்குருடர்களே யாவார்கள். இதை நிரூபிக்க வேறு பிரமாணம் தேட வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் மாற்றமுடியாத கார்யத்தை மாற்றியமைக்க முயற்சிப்பதே இவ்விஷயத்திலுள்ள இவர்களின் மௌட்யத்திற்குத்தக்க சான்றாகும்.

இவர்களுடைய சீர்திருத்தமுயற்சியைக் கண்டு நாம் வியப்படையவில்லை. ஆனால் தங்களிடமுள்ள அறியாமையை உணர்ந்து கொள்ளவில்லையே என்று வருந்துகிறோம். தாம் சாஸ்திரங்களின் ஏதாவதொரு ஏட்டைப்பிரித்துப் படித்திருந்தால் கூட இவர்களே, தங்களுக்கு இவ்விஷயங்களில் அதிகாரம் உண்டா இல்லையா என்பதை கட்டாயம் உணர்ந்திருப்பார்கள். வேதம், சாஸ்திரம், தர்மம், ஜாதி, மதம், பொருள், புத்தி முதலிய எல்லாவற்றையும் பலி கொடுத்து, தங்கள் வாழ்நாளின் முக்கால் பாகத்தையும் செலவழித்துச் சம்பாதித்த கீர்த்தியையும், செல்வாக்கையும், நல்ல வழிகளில் பயன்படுத்திக் கொள்ளாது, ... தன சக்திக்கு மீறிய விஷயங்களில் உபயோகித்து அதையும் இழக்கத்துணிந்த இவர்களின் கூற்றை என்னென்று கூறுவது!

பொதுவாக ஒன்று மட்டும் கூறமுடியும். அதாவது தர்மம் இன்னும் கெட்டு விடவில்லை. அது என்றும்கெடாது. அழிவற்றது. மிக்க பரிசுத்தமான ஓர் வஸ்து. ஆகலால் அதைச் சீர்திருத்த வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டு விடவில்லை. ஆனால் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் முதலிய துர்குணங்களால் முற்றும் பீடிக்கப்பட்டு, ஆகாரம், ஆசாரம், நடை, உடை, பாவனை முதலிய சதாசாரங்களைப் புறக்கணித்து, பணத்திமிரினாலும், மதி மோகத்தாலும் வெளிநாட்டு நடை யுடையாசாரங்களுக்கு 'நாகரிகம்' என்ற பெயர் கொடுத்து, அதைத் தலைமேல் தாங்கிக் கூத்தாடும் இவர்கள்தான் கெட்டு விட்டார்கள். வியாதியுள்ளவன்தான் மருந்துண்ணவேண்டுமே யன்றி, வைத்தியன் மருந்துண்டால் இவனுடைய வியாதி தீராது. ஆதலால் முதலில் தங்களைச்சீர்திருத்திக்கொள்வதுதான் இவர்கள் செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும். அவ்வாறின்றி தங்கள் மனம் போனபடி தர்ம சாஸ்திரங்களை எவ்வளவு குட்டிச் சுவாரக்கிக்கொண்ட போதிலும், இவர்களது துர்குணங்கள் வளருமேயொழிய ஒருநாளும் குறையாதென்பது உண்மை. ஆதலால் இவர்கள் உண்மை சீர்திருத்தக்காரர்களாக ஆகவேண்டுமானல் முதலில் தங்களைத் திருத்திக் கொள்வதுதான் உசிதம்.

தொடரும்.

## ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி.

### ஆஸ்திமத அழிவுதான்.

(2-12-37உ தொடர்ச்சி.)

சாஸ்திரங்களை அறிந்து அதற்கு கீழ்படிந்து நடந்தால் சகல சுகங்களும் நவீன காலத்திற்கேற்ப உண்டாகும். அதர்மமானகாலத்தை தர்மமென்று நினைத்து காலப்போக்குக்கு சகல விஷயங்களும் வர வேண்டு மென்பது அறிவின்மை. கெட்ட காலத்தைசாஸ்திர பலத்தால் மாற்றி தர்மமார்க்கத்திலிருப்பது புத்திசாலித்தனம்! லாபகரம்! ஹரிஜனங்களுக்கு சகல தர்மங்களையும் போதிப்பது நியாயம். அவர்கள் வீரபாகு, பாணாழ்வார், நந்தனார் போன்ற ஆஸ்திகர்களாவார்கள். சாஸ்திர விருத்தமான ஆலயப்பிரவேசத்தையும் பிறகு படிப்படியாய் இதர அவ்யவஸ்தைகளையும் அவர்களுக்கு சொல்லிக்கொடுத்துக் கொண்டுவந்தால் நம்முடைய மதமே அவர்களிடமில்லாததால் உலகஸுகானுபவமே மேலானதாக எண்ணி அன்னிய மதப்பிரவேசமசோதா கொண்டுவரச்சொல்லுவர்! அவர்களுக்கு மதம் வேண்டாமா? அதை கேட்போர்! உம்முடைய ஓட்டுரிமை, பிரசாரப் பணம், அரசியலியக்கம் இவைகள் அவர்களுக்கு சாசுவதமான துணையா; ஆகையால் ஹரிஜன உண்மை மித்ரன் என்ன சொல்ல வேண்டுமென்றால் :— ஹே! நந்தன் குலத்தோரே! வீரபாகுக்களே! நாமெல்லாம் நவீன விஷப்புகை நாகரீகத்தை சாஸ்திர அறிவாகிய மூகமூடிகளால் காப்போமாக! ஈசனருள் ... பெறலாமே யொழிய ஒருக்காலும் நாஸ்திக கூட்டமும் அதன் தயவும் சாஸ்வதமல்ல! ஹிந்துமத தத்வத்தை அனுஷ்டித்தால் திரிகரண சுத்தியுண்டாகும். இகபர சுகங்களெல்லாம் வரும். மகாவரப்ரசாதிகளும் அவதார புருஷர்களும் கண்டு அனுபவித்த உண்மை மதம். மகாகிரந்தங்களுள்ளது. சகலசாஸ்திரங்களுக்குமிருப்பிட மென்று அன்னியமத மேதாவிகள் அடிக்கடி நற்சாட்சி கொடுத்திருக்கின்றனர். இதையறிந்து நம்பிக்கை வைக்க வேணுமே தவிர அதார்மிகர்கள் கூறும் ஆள் சேர்க்கும் மதம், பண மதம்; தொழில் மதம், நாகரீக மதம், சமபங்கதி மதம், கலப்பு மண மதம், அல்லது ... இவைகளெல்லாம் ஒன்று சேர்த்து ... மைக்கோலுவு ஆலயப்பிரவேச கிளர்ச்சி மதம் ஆகியவைகளில் சேருவது உசிதமல்ல. அதர்மம், பாவம், பயனற்றது. வீண்பழியுள்ளது. இதனால் தீண்டாமை போகாது. தீண்டாமை போவதற்கு மதத்தையனுஸரித்து அவ்வழியே ஜீவஸம்ஸ்காராதிகள் அடைய வேண்டும். ஜீவன் முக்தர்களாயும் கும்பிடும் தெய்வங்களாகவும ஆகி விடலாம். இதுதான் சனாதநிகள் கூறுவது!

அதார்மிகர்கள் உம்மை ஆசைகாட்டி பொதுவான தர்மங்களை மாய்க்கும் பாவத்துக்குள்ளாக்குகிறார்கள். ஆலய நம்பிக்கையற்றோர் ஆலய நம்பிக்கையுள்ள நந்தன் குலத்தோராகிய உம்மை கையாளாக்கிக்கொள்வதே இவ்வியக்கத்தின் மர்மம். ஆலயங்களேற்பட்ட நாள்முதலாயுள்ள எந்த நீதியையாவது உங்களுக்கு புகட்டுவதன் உத்தேசம் அவர்களிடமில்லை. ஆலயங்களை மாய்ப்பதே அவர்கள் உத்தேசம். உங்களது மதப்பற்று அதிகரிப்பதல்ல. நீங்கள் அவர்கள் போல் மதமற்று, பணவெறி மதம் ஆள்கூட்ட மதவெறி முதலானதுகள் அடைய வேணுமாம்! நல்ல புது மதம்!

(12வது பக்கம் தொடர்ச்சி பார்க்க.)

(11-ம்பக்கத் தொடர்ச்சி.)

எல்லாருக்கும் நல்ல மதப்பற்று இருந்த முன் காலங்களில் ஹரிஜன ஆலயப்பிரவேசமில்லாமலே சகல முன்னேற்றங்களும் அடைந்திருந்தோமென்று நமது நூல்களும் அயல் தேசத்து மேதாவிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்! ஒரு வித குறைவும் பலரும் எண்ணவில்லை. யாராவது ஒருவர்க்கு ஒருவர் நிர்ப்பந்தமும் தொந்திரவும் செய்து கொண்டதாகக் கேள்விப்படவேயில்லை. இப்போது தான் ஹரிஜனபத்திரிகைகளில் விஷயங்கள் மலிந்து விட்டன! எவ்வளவு சிறிய கூட்டத்தார் எவ்வளவு பரந்த தேசத்தில் எவ்வளவு வலியுள்ள ராஜாங்கம் அரசு செலுத்தும்போது தொந்திரவு செய்து கொள்ளுகின்றார்களே! இது நவீன ஜாலப்! உண்மை ஹிந்து மதஸ்தர் அன்பு, தயை, தாக்ஷிணயர், முதலியன உலகுக்கே புகட்டக்கூடிய நிலைமையிலிருக்கிறீர்கள்! நெருங்கிப்பழகினவர் அறிவர்! நவீன பத்திரிகைகள் சொல்லவே சொல்லா.

ஆலயப்ரவேசமில்லாதது குறைவேயில்லை. புலிக் குகைக்கு நாம் போகவில்லை. இமயமலை சிகரம் பார்க்கவில்லை. நியூயார்க் பார்க்கவில்லை. எத்தனையோ மனிதர்களையோ இடங்களையோ நேரில் பார்க்கவில்லை. இது ஒரு குறைவா? நம்மவர் கிறுஸ்தவ ஆலயங்களுக்கோ, மகம்மதிய மசூதிகளுக்கோ, புத்தர் பகவாடாவுக்கோ, எகிப்து பிரமிட் கோபுரமோ போகவில்லை. இது ஒரு குறைவா? குறையென்று ஏன் எண்ணவேண்டும்? குறையென்று ஒருவர் சொன்னல் அவர் பேச்சை கேட்கவேண்டிய அவசியமில்லை. நமது ஆலயங்களில் மட்டும் மூர்த்திக்கு ஆவிர்பாவம் உண்டாவதற்காக குறிப்பிட்ட நிர்ப்பந்தங்கள் விதிக்கப்பட்டு அதன் பலனாக அனுபவத்தில் நிதர்சனமாக ஈசுவர சான்னித்யம் ஏறபட்டிருக்கிறது! எங்கேயாவது ஹரிஜன ஆலயப்ரவேசம் பண்ணவேணுமென்று யையம் பெசல்லும் ? அவையவர் குலசம்ப்படி தம்மை பக்தியோடு தொழுதால் தாம் அந்த பூஜையை தமக்கென்று ஏற்றுக்கொள்ளுவதாக ஸ்ரீமான் காந்தியடிகளின் திருக்கரங்களிலுள்ள பகவத்கீதையின் ஆதியிலேயே பகவான் கூறியுள்ளார். ஏன் அப்படிக் கூறவேணும். நினைந்தபடி ஆலயங்களை கெடுக்கக்கூடாதென்பதற்கல்லா? ஏன் சந்தேகம்?

ஹிந்து மதஸ்தியாய் ஹரிஜனங்களுக்கு எவ்வளவோ சுகமுண்டு. பயிரிடுதல் தகனக்கிரியை செய்தல், தேரிழுத்தல், வாத்தியம் வாசித்தல், முதலிய பல தொழில்கள் ஹரிஜன சேவாகாலக்ஷேப சங்கங்களை பிறப்பதற்கு முன்பே உண்டு. மேலும் மதஸ்தியாய் சகல தத்துவங்களையும் தெரிந்து எவரும் அடையாத நற்பதவியடையலாம்! இது இல்லையென்று சித்தாந்தம் செய்ய இதுவரை யாராவது வந்திருக்கிறார்களா? பக்தி மார்க்கம் பலதிறப்பட்டது. அவரவர்களுக்குத் தகுந்தபடி ஹிந்து மதத்தில் அமைக்கப்பட்டு முன்னேறினோம். எல்லோரும் ஒரே வழி என்றோம்; ஏற்றத் தாழ்வு எண்ணம் மதத்திலுண்டு. என்றோம். சிரமப்பட்டிலோம். யார் எதைச்செய்ய உரிமையுள்ளவனோ அதை யவன் செய்தால் மேன்மையடைகிறான்; தகாததைச் செய்தால் தாழ்மையடைகிறானென்று ஹிந்து மதக் கருத்து. அவனவனுக்கு விதித்தவற்றை அவனவன் செய்து எல்லாரும் உண்மை சமத்துவமும் உண்மை முன்னேற்றமுமடையக் கடவோம். சுகாதாரம், பசிப்பிணி நீக்குதல் ஆசார வியவகாரங்கள் சாமான்ய தேவதா பூஜைகள் இவைகளால் ஹரிஜனங்களை முன்னேறச் செய்யவேண்டும். மற்றவர்களும் சுசிருசி ஆசார வியவகாரங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு முன்போல் ஆசார சீல சமத்துவமடைவோம். அப்போதுதான் ஈசன் தனதருளால் தமது திருவிளையாட்டால், "ஹரிஜனங்களே வாருங்கள்! ஆலயம் புகுங்கள். சாமான்ய ஆசாரம் உம்மிடம் வந்துவிட்டது என்று கூறுவர். நிதர்சனமாகக் காட்சியும் கடாக்ஷிப்பர். அதில்லாமல் ஆசாரத்தை மீறினல் பக்திமான்களின் ஆத்ம சக்தியால் ஏற்பட்ட மூர்த்தி நிச்சயமாய் எதிர்ப்பர். பக்திக்கு ஆசாரம் வித்து! ஆசாரத்துக்கு பக்தி வித்து! தீண்டாமை ஆசாரத்துக்கு வித்து! தீண்டாமைக்கு ஆலயம் வித்து! ஆலயத்திற்கு ஆகமம் வித்து! ஆகமத்திற்கு ஞானம் வித்து! இவையெல்லாம் தொலைப்பவர்க்கு வக்கரமான சுயபுத்தியே வித்து!

---

ஆசாரவாதி.

# ராமாயண படனக்ரமம்.

## பாலகாண்டம்.

---

1. பாலராமாயணம். பூராக வாசித்தால் தனதான்ய சம்பத்து உண்டாகும்.

வாசிக்கட்பட்ட கிரமம். நித்ய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு, பாலராமாயணத்தை எடுத்துக்கொண்டு, தூபதீப அர்ச்சனை முதலானதும் நடத்தின பிற்பாடு, வாசிக்கவும். ஸாயங்காலம் 108 புஷ்பமாவது துளசியாவது அர்ச்சனை செய்யவும். இந்தப் பிரகாரம் 48நாள் வாசிக்கவும். அதற்குள் சொப்பனமாகும். ஆகாதபக்ஷத்தில் வாசிக்கக்கூடாது. அதிர்ஷ்டமில்லையென்று தெரிந்து கொள்ளவும். சுபமஸ்து.

2. பாலகாண்டம். 1வது சர்க்கத்தில் 1வது சுலோகம் முதல் 3வது சுலோகம் வரை. பலன்- தபசும் நியமும் சித்திக்கும் வாசிக்கப்பட்ட கிரமம் காலையில் வாசிக்க. ஆரம்பத்தில் முதல்நாள் தேங்காய் பழம் அமிசை செய்யவேண்டும். மல்லிகை புஷ்பத்தினல் 108 அர்ச்சனை செய்யவேண்டும். இந்தப் பிரகாரம் 1வருஷம் வாசிக்கவும் சகல காரியமும் சித்திக்கும். சுபமஸ்து.

3. பாலகாண்டம். 14 வது சுலோகம் முதல் 15வது சுலோகம் வரை. பலன்:- வித்தைவரும்.

வாசிக்கப்பட்ட கிரமம். காலையில் சந்தியாவந்தனம், ஜபம் ஆன பிற்பாடு சூரியனுக்கு முன் நின்றுகொண்டு 256 தரம் ஜபிக்கவும் சாயங்காலம் சந்தியாவந்தனம் ஜபம் ஆன பிற்பாடு மேற்கு முகமாய் நின்றுகொண்டு ஜபிக்கவேண்டியது. இந்தப் பிரகாரம் ஒரு நாள்கூட தப்பாமல் ஆறுமாதம் ஜபித்துக்கொண்டுவந்தால் வித்தைவரும். இந்தப் பிரகாரம் 12 நாள் செய்யவும். 12 நாள் செய்ததும் பூதரோகம் நிவர்த்தி. ஆகாத பக்ஷத்தில் சாயந்திரம் ஷெடி சர்க்கத்தை வாசிக்கவும் நிவர்த்தியாகும். சுபமஸ்து.

4. பாலகாண்டம். 16வதுசர்க்கம் பாயஸ ப்ரவணம். பலன்:- நல்ல புத்திரன் பிறக்கும்.

வாசிக்கப்பட்ட கிரமம். இது வாசிக்கும் போது சூரியன் உதயமாவதற்கும் வாசிக்கிறதற்கும் நேராக இருக்கவேண்டும். பால் பாயஸம் செய்து ஸ்வாமிக்கு நைவேத்தியம். ஆனதின்பேரில் ஆண் குழந்தைகளுக்குக் கொடுத்து மிச்சத்தை தன் பாரியாளுக்குக் கொடுக்கவும். இந்தப் பிரகாரம் 48 நாள் செய்யவும். காரியம் சித்திக்கும். சுபமஸ்து.

5. பாலகாண்டம். 18வது சர்க்கத்தில் ஸ்ரீ ராமாவதாரம். பலன்:- நல்ல கதியடைவான். புத்திரனும் பிறக்கும்.

வாசிக்கட்ட கிரமம். நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு இந்த ஸர்க்கத்தை மூன்றுதரம் வாசித்து ஸ்ரீ ராமனுக்கு பால் நிவேதனம் செய்யவும். இந்த பிரகாரம் ஜன்மமுள்ள பரியந்தம் செய்யவும். சுபமஸ்து.

6. பாலகாண்டம் 26வது சர்க்கத்தில் தாடகை வதம். பலன்:- பாப நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம். காலைமாலை இரண்டு காலம் வாசிக்கவும். ஒவ்வொரு வேளையிலும் ஒருகிண்ணத்தில் தீர்த்தம் வைத்துக்கொண்டு மூன்று தரம் ஷெடிஸர்க்கத்தை வாசித்து உள்ளுக்குச் கொடுக்க. பேய் பிசாசு பிடித்தவர்களுக்கு இந்தப் பிரகாரம் 24 நாள் செய்ய நிவர்த்தியாகும்.

7. பாலகாண்டம். 30 வது சர்க்கத்தில் 22வது ஸ்லோகம் முதல் 23வது ஸ்லோகம் வரை. (ஸஹத்வா ராக்ஷஸாந்) ஷோடசோபசாரம். பலன்:- பயம் நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம். நித்ய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு பிரதிதினமும் வாசித்தால் கண்களுக்கு இராத்திரி காலத்தில் ஒரு பயமும் தோற்றம் படமாட்டாது. குழந்தைகள் பயந்திருந்தாலும் இந்த சர்க்கத்தை வாசித்து தீர்த்தத்தினல் புரோட்சிக்கவும். இந்தப்படி 12 நாள் செய்ய நிவர்த்தி. சுபமஸ்து.

8. பாலகாண்டம் 32வது சர்க்கம் வாயு பகவான் ராஜபுத்ரியை முடமாக்கினது. பலன்.- கைகால் முடம் நீங்குதல்.

வாசிக்கப்பட்ட கிரமம். நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு மேற்சொல்லியிருக்கிற ஸர்க்கத்தை மூன்றுதரம் வாசித்து உள்ளுக்கு தீர்த்தம் கொடுக்கவும். 12நாளுக்குள் சகல வியாதியும் தீரும். சுபமஸ்து.

9. பாலகாண்டம். 43வது சர்க்கத்தில் பகீரதர் கங்கை கொண்டுவந்தது. பலன்.- இகபர ஸாதகம்.

இந்த ஸர்க்கத்தை பிதுர் தினங்களில் மூன்றுதரம் வாசித்தால் பித்ருக்களுக்கு நல்ல லோகம் கிடைக்கும வாசிக்கப்பட்டவருக்கும் மோக்ஷம் உண்டாகும். பிரதிதினமும் வாசிக்கலாம். சுபமஸ்து.

10. பாலகாண்டம் 45வது சர்க்கத்தில் அர்மித மதன சிரவணத் பலன்:- வியாதி நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம்,. இந்த ஸர்க்கத்தை மூன்றுதரம் படித்து தீர்த்தமும் பிரஸாதமும் கொடுக்க நிவர்த்தியாகும். இந்தப்பிரகாரம் 24 நாள் செய்யவும். நிவர்த்தியாகும்.

11. பாலகாண்டம் 51வது சர்க்கத்தில் அகல்யாசாபவிமோசனம் பலன்:-தேகசுத்தி

வாசிக்கப்பட்ட கிரமம். தினம் ஒன்றுக்கு ஒருதரம் வாசித்து துளசி புஷ்பம், பவள மல்லிகைப்பூ வைத்து அர்ச்சனை செய்யவும். வெள்ளிக்கிழமைதோறும் நாலு பிராமணருக்கு அன்னம் போடவும். முக்யானமான பாபங்கள் நிவர்த்தியாகும். ஜன்மமுள்ள பர்யந்தம் செய்யலாம். சுபமஸ்து.

(தொடரும்)

குழந்தை
குடல் சால் கட்டிகளுக்கு
ஹிமயகிரியில் ஒரு சித்தரிடமிருந்து உபதேசம் பெற்றுள்ள
மதுரை வைத்ய நிபுணர் T.R. ஆராவமுதய்யங்காரின்
மருந்தை உபயோகியுங்கள். ஆயிரக்கணக்காக சௌக்கியம், தங்கமெடல் பரிசும் பிரபல டாக்டர்களால் அத்தாக்ஷியும் பெற்றுள்ளது.
ஒரு மாதம் மருந்து விலை ரூ. 4—8—0 வி. பி. வேறு.
டாக்டர், T. R. ஆராவமுதய்யங்கார்,
20, வடக்கு வெளிவீதி, மதுரை

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

707

ஆர்யதர்மம்

ஸை

4 / 22 48

23-12-1937

215214

21574
13 JAN 1938
709

Registered No. M. 2913.

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரம்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तு नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4/22 கும்பகோணம் கலி5039 ஈச்வரஹு மார்கழி-மீ 9உ 1937ஹு டிஸம்பர்-மீ 23உ வல 48

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0
தனிப் பிரதி அணா 1
விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.
மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## நிலவரி வஜா.

### 75 லக்ஷத்தின் விநியோகம்.

சென்னை கவர்மெண்டார் நிலவரி வஜா விஷயமாக 75 லக்ஷம் ஒதுக்கி வைத்திருப்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்த ரூபாய்களை விநியோகம் செய்யும் முறையைப்பற்றி கவர்மெண்டார் இப்போது உத்திரவு பிறப்பித்துள்ளார்கள்.

அதன்படி ரூபாய்க்கு 2 அணா வீதம் நிலவரி வஜா அளிக்கப்படும். 1914ம் வருஷத்திற்கு முன் இருந்த வரி விகிதம் சிலவிடங்களில் வசூலிக்கப்படும். புதிய ஸெட்டில்மெண்டில் ஏற்றிய தீர்வை விகிதம் குறைக்கப்படும். தஞ்சை ஜில்லாவைப்பற்றிய வரையில் ரூபாய்க்கு 3 அணா வஜா கிடைக்குமென்று தெரிகிறது.

## தீண்டாதாருக்கு கோவில் பாத்யம்.

### சென்னையில் ஹைகோர்ட் தீர்ப்பு.

சென்னை ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் தர்மகர்த்தா நியமன விஷயமான எலெக்ஷனில் ஜாதி ஹிந்துக்களைப்போல் தீண்டாதாருக்கு வோட் உரிமை உண்டா என்ற விஷயமாக சில வருஷங்களாக கோர்ட்டில் விவஹாரம் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் பாண்டுரங்க ராவ் அவர்கள் தீண்டாதாருக்கு வோட் உரிமை கிடையாதென்று சொல்லியிருந்தார். அதன் மேல் செய்யப்பட்டிருந்த அப்பீலில் ஜஸ்டிஸ் வெங்கடசுப்பாராவ் அவர்களும், ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமும் தீண்டாதாருக்கும் வோட் உரிமை உண்டென்று தீர்ப்புச்செய்து விட்டார்கள். இவர்களுடைய ஜட்ஜ்மெண்டில் லார்டு ஸாங்கி என்பவரின் அபிப்பிராயமே ஆதாரமாக காட்டப்பட்டிருக்கிறது.

"காட்டுமிராண்டிகளான மனிதர்களின் காலத்தில் ஏற்பட்டிருந்த சில வழக்கங்கள் மனித வர்க்கங்கள் மீது பலாத்காரமாகச்சுமத்தப் பட்டிருந்தன. பிற்காலத்தில் அந்த வழக்கங்கள் அமுலிலிருக்க அவச்யமில்லை,,

என்பதே லார்டு ஸாங்கியின் அபிப்பிராயமாகும். ஹிந்துக்களின் மத ஸம்பிரதாய விஷயமான இந்த சச்சரவுக்கும் டை ஸாங்கி அபிப்பிராயமே ஏற்றதென்றும் வேறு நியாயம் தேட வேண்டியதில்லை யென்று ஜட்ஜுகள் அபிப்பிராயப்பட்டிருப்பதை ப்ரிவி கௌன்சில் அப்பீல் மூலம் மாற்ற வேண்டியதை அங்குள்ள பக்தர்கள் யோஜிப்பார்களா ?

## காங்கிரஸ் தேர்தல்.

### தஞ்சையில் அடிதடி.

தஞ்சை நகரக் காங்கிரஸ் கமிட்டியின்தேர்தலுக்காக 17உ நடந்த காங்கிரஸ் மெம்பர்கள் கூட்டத்தில் குழப்பமும் அடிதடியும் நடந்ததாகதெரிகிறது. தலைமைவகித்த ஸர்தார்வேதரத்னம் பிள்ளை எம். எல். ஏ. கூட்டத்தை ஸமாளிக்க முடியாமல் கொல்லைப்புற வழியாகக் கூட்டத்தை விட்டு மறைந்து போக நேர்ந்ததாம். இந்த எலெக்ஷனின் பதவிச் சண்டைக்காக அன்று காலை முதல் இருதரப்பினரும் முஸ்தீப்பு செய்து வந்தார்கள். மோட்டார்களிலும், பஸ்களிலும் ஆட்கள் கூட்டமாகக்கொண்டு வரப்பட்டனராம். ஹால்கதவுகள் பெயர்க்கப்பட்டனவாம். தலைவர் மேடை மீது ஏறிப்பலர் கூச்சல் போட்டனர். கூட்டம் அலங்கோலமாக கலைந்தது!!!

## மீண்டும் ஸாஹித் கஞ்ச் கிளர்ச்சி.

லாஹூரில் ஸாஹித் கஞ்ச் மசூதி விஷயமாகக்கோர்ட் தீர்ப்பு ஏற்பட்டிருந்த போதிலும் மீண்டும் மஹம்மதியர்கள் ஸத்யாக்ரஹ கிளர்ச்சியை ஆரம்பித்திருக்கின்றனர். இது வரையில் அநேகர் கைதியாயிருக்கின்றனர் 20 ஆயிரம்பேர் கொண்ட பெரியகூட்டத்தில் இந்த ஸத்யாக்ரஹம் ஆமோதிக்கப்பட்டது.

போலீஸார் தக்க முன் ஜாக்கிரதையுடன் கார்யம் செய்து வருகிறார்கள்.

## ஸ்வேச்சை பிரதிக்ஞை.

### சென்னையில் தடை நீக்கம்.

சென்ற வருஷம் வரையில் ஸ்வேச்சை பிரதிக்ஞையை சென்னை ஸர்க்கார் தடுத்து வைத்திருந்தார்கள். இப்போது காங்கிரஸ் மந்திரிகள் அந்த தடையை நீக்கி விட்டனர் காங்கிரஸ் ஆக்ஷியில் இது பாக்கி யிருக்கக் கூடாதல்லவா? பிரிடிஷ் ஸாம் ராஜ்யத்தை விட்டு விலகி ஸ்வேச்சையாக இருப்பதே ஸ்வேச்சை பிரதிக்ஞையின் கருத்து. காங்கிரஸ் காரர்கள் ஒவ்வொரு வருஷமும் சுயேச்சை பிரதிக்ஞை தினம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு அன்று அதை நிறைவேற்றுவது வழக்கமாயிருந்து வருகிறது.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
துணம், மணம், காறம் நிறைந்த R. J. S. & Co.,
மேலான T. T. M. A. மிஸ்கி பெருங்காயத்தையே
கவனித்து வாங்கவும்.
போலி விளம்பரங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.
Head Office:— Bombay.
Branches:—
Madras, Madura.
ரஷிட் ஜெம்ஷெட் சன்ஸ் & Co.
56, சக்கரபாணி சன்னதி, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன் மொழிகள்.

## 2-வது பிரவிருத்தி நிமித்தம்.

சென்றவாரத் தொடர்ச்சி.

ப:- ஆனால் இந்தக் காலத்தில் வாஸ்தவ யோக்கியதையை யார் கவனிக்கிறார்கள்? பணத்திற்கு தான் மதிப்பு.

ம:- மதிப்பிடுகிறவர் யார்?

ப:- எல்லாரும் தான்.

ம.- அப்படியல்ல. ஒரு பதார்த்தம் எவனுக்குத் தேவையோ அவன்தான் அந்தப் பதார்த்தத்தில் மதிப்பு வைப்பான். அப்படியே, பணத்திற்கும் மதிப்பு, பணம் வேண்டுமென்று நினைக்கிறவர்களுக்குத் தான். பணம் வேண்டியதில்லையென்றால், இன்னொருவர் எவ்வளவு பணக்காரராயிருந்தால் நமக்கு ஆவதென்ன?

ப:- ஆனால் இந்த லோகத்தில் அதாவது வியவாஹார தசையில், பணமில்லாமல் யாராலும் ஒரு காரியமும் செய்யமுடியவில்லையே!

ம:-அது வாஸ்தவம். இதினால் பணத்திற்கு ஏற்படுகிற மதிப்புக்கு மேல் ஜாஸ்தி மதிப்புக் கொடுத்தாக வேண்டுமென்பது கிடையாது. பணம் என்பது ஸுகஸாதனமாக ஏற்பட்டிருக்கிறதென்பதை மறந்து சுகமென்றே எண்ணிவிடுகிறோம். இந்த ஜன்மத்தில் அனுபவிக்கவேண்டிய சுகம் எவ்வளவு என்பது ஜன்ம ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட்டிருப்பதால், நம் பிரயத்தினத்தை எதிர்பாராமலே அது நமக்கு கிடைக்குமென்பதையும், நம் பிரயத்தினத்தினால் அதை முன் கூட்டி அனுபவிக்கவோ, மாற்றிக் கொள்ளவோ முடியாதென்பதையும் மறந்து விடுகிறீர்கள். தூக்கத்தில் மூழ்கியிருக்கும் பணக்காரர்களையும் ஸந்தோஷத்தில் குதிக்கும் பிச்சைக்காரர்களையும் நாம் பார்க்கிறோம் அல்லவா? நம் மதம் இன்னதென்று தெரிந்துகொண்டிருக்கிற நீங்கள் பணத்திற்கும், சுகத்திற்கும் ஸம்பந்தம் வைக்கலாமா? சுகஸாதனமென்று பணத்திற்கு மதிப்புக்கொடுக்கலாமா? பணம் வந்தால் ஸ்வீகரித்துக் கொண்டு உபயோகப்படுத்தலாமே தவிர, பணமில்லையே என்று குறைப்பட்வாவது ஏங்கவாவது நியாயம் கிடையாது. இது நிற்க, உங்கள் பையனுக்கு நவீன வித்யாப்யாசம் கொடுத்துவிட்டால், பணம் சேகரிப்பானென்றாவது, நீங்களுத்தேசிக்கிற லௌகிக அந்தஸ்தை ஸம்பாதிப்பானென்றாவது நிச்சயமாய்ச் சொல்ல முடியுமா?

ப.- ஸம்பாதிப்பானென்று எதிர்பார்க்கிறேன். அவ்வளவுதான் சொல்லமுடியும்.

ம:- நன்கு விசாரணை செய்யக்கூடாதவரில்லை நீங்கள். புத்தியுள்ள ஒருவன் ஒரு காரியத்தில் பிரவிருத்தித்தால் ஏன் பிரவர்த்திக்கிறான் என்று சொல்லவேண்டும்.

ப.- அந்தக் கார்யத்தினால் கிடைக்கப்போகிற பலத்திலுள்ள காமம் தான் பிரவிருத்திக்குக் காரணமாகும்.

ம:- ஒரு குறிப்பிட்ட பலன் கிடைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறவன் ஏதேனும் தோன்றினபடி ஒரு காரியத்தில் இறங்குவானா?

ப.- அதெப்படி? அந்தப் பலத்தைக் கொடுக்கக் கூடிய காரியத்தில் தான் இறங்குவான்.

ம.- அல்லது, அந்தப்பலனைக் கொடுக்கக் கூடிய காரியமென்று அவன் நினைத்துக்கொண்டிருந்தாலும் இறங்குவானில்லையா!

ப:- ஆம்.

ம:- ஆகையால் ஒவ்வொரு கார்யத்தையும் ஆரம்பித்தும் முன் அந்தக் கார்யத்திற்கும் உத்தேசிக்கிற பலனுக்கும் காரணகாரிய ஸம்பந்தமுண்டென்று சரியாகவோ தப்பாகவோ தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அதாவது, இந்தக் காரியம் இந்தப்பலனைக் கொடுக்கும் என்ற எண்ணம் இல்லாதவரையில், பிரவிருத்தியிராது.

ப:- அப்படித்தான்.

ம:- அந்த எண்ணம் பிரவிருத்திக்குக் காரணமாவதற்கு சரியாயிருக்கவேண்டுமென்று அவசியமில்லை.

ப:- ஆனால் தப்பு எண்ணத்தை அறிவுடன் சேர்ப்பது கிடையாது.

ம- இந்த இடத்தில் எண்ணத்தை மாத்திரம்தான் சொல்லுகிறேன். அந்த எண்ணம் வாஸ்தவ ஸ்திதியை அனுசரித்திருந்தால், சரியான அறிவாகும். அனுஸரித்திலிருக்காமலிருந்தால் தப்பித அறிவாகும். எப்படியும் சரியோ தப்போ இந்த எண்ணம் பிரவிருத்திக்குக் காரணமாவதற்குப் போதும். தரையில் வாஸ்தவமான வெள்ளிக்காசைப் பார்க்கிற பையனும், சிப்பியைக்கண்டு வெள்ளி என்று ஏமாந்து போகிற பையனும், இரண்டு பேர்களும் எடுக்கக் குனிகிறார்கள். அவ்வளவுதான் இங்கே ப்ரகிருதம். வாஸ்தவ ஸ்திதியை ஒத்திருந்தால் அந்த அறிவுக்கு ப்ரமை என்றும், மாறியிருந்தால் ப்ரமம் என்றும் சொல்லுவார்கள். ப்ரமை என்பது எப்படி ஏற்படுகிறது?

ப:- சரியான அறிவுக்கு ஸாதனங்களாகிற பிரமாணங்களால் ஏற்படுகிறது.

ம:- சாஸ்திர பரிபாஷையை விட்டுச்சொல்வோமானால், பிரமாணங்கள் ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என மூவகைப்படுமல்லவா?

ப:- ஆம்

ம;- ஆகையால் இரண்டு பதார்த்தங்களுக்குள் இருக்கும் ஸம்பந்தம் நமக்கு ப்ரத்யக்ஷம், அனுமானம் அல்லது சப்தம் இவைகளால் தெரியவேண்டும். நவீன வித்யாப்யாசத்திற்கும் பணத்திற்கும் கார்யகாரண ஸம்பந்தமிருக்கிறதா என்று அந்த ப்ரமாணங்களில் ஏதேனும் ஒன்று நமக்குச் சொல்கிறதா என்று பார்ப்போம்.

ப.- அப்படியே.

(தொடரும்)

## சென்னை பண்டித பரிஷத் ஆரம்பக்கூட்டம்.

### ஓர் மறுப்பு.

கடலங்குடி ஸ்ரீ நடேசசாஸ்திரிகள் எழுதுகிறார்:—

16—12—34ல் வெளியான ஆர்யதர்மம் 5-வது பக்கத்தில் "ஆரம்பக்கூட்டம் ஒத்திவைப்பில் முடிந்தது" என்ற தலையங்கத்தின் கீழ் வெளியானதை நாம் படித்தோம். அதில் "கடலங்குடி நடேச சாஸ்திரியும் ஹரிஜனங்களெனச் சொல்லப்படும் தீண்டாதவர்களை ப்ராயச்சித்த மூலமும், சுத்தமாயிருக்கச் செய்தவன் மூலமும் உயர் ஜாதியினர்களான ப்ராம்ஹணரல்லாதாருடன் ஸமமாகச் செய்துவிடலாம் என்பதாக வாதித்தார்கள்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அன்று நாம் பேசின விஷயத்துக்கும் இதற்கும் முறண்பாடு காணப்படுவதால் அன்று நடந்த விஷயத்தை இங்கு எழுதுகிறோம்:—

ஸபையின் ஆரம்பத்தில் "சாஸ்திரீயமாக அஸ்ப்ருச்யர் எவர்?" என்றதைப் பற்றிப் பேசும்பொழுது அஸ்ப்ருச்யத்வம் என்பது நிமித்த மூலமேற்படும் ஒரு துஷ்ட தர்மமென்றும், சண்டாளத்வம் என்ற ஜாதிபோல அது சரீரத்துடன் கூட ஏற்பட்டதல்லவென்றும், ஆனது பற்றியே தான் देवालयसम[illegible]न्देवसेवार्थमागतान् । चण्डालान्पुल्कसान्वापि स्पृष्ट्वा [illegible]स्नानमाचरेत् ॥ என்றதால் தேவஸேவை முத[illegible] காலங்களில் சண்டாளர்களுக்கு அஸ்ப்ருச[illegible]வம் கிடையாதென்று சொன்னது பொரு[illegible]கின்றதென்றும், பொதுவாய் நமது ப்ரா[illegible]ண ஸ்திரீகளுக்குக்குச் சாஸ்திரமுறைப்படி ஆலயப்ரவேசத்தில் அதிகாரம் கிடையாது என்றோம்.

ஆகவே நாம் ப்ராயச்சித்தாதிகள் மூலமும் நல்ல வொழுக்கத்தைக் கற்பிப்பதன் மூலமும் அவற்றைப் பின்பற்றின சண்டாளர்களுடன் உலக வியவகார விஷயத்தில் ஸ்பர்சத்தை மட்டும் அடையலாமே யொழிய சண்டாள ஜாதி விலகாததுபற்றி அவர்கள் புனிதமான ஆலயங்களில் ப்ரவேசிப்பதை ஒருபொழுதும் ஸம்மதிக்கமாட்டோம் என்பது எமது திடமான அபிப்ராயம். அன்று ஸபையில் விசாரத்துக்கு எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி மட்டும் நாம் பேசி அதில் நமது அபிப்பிராயத்தைச் சொன்னோமேயல்லாது விசாரத்துக்குவாராத விஷயத்தை நாம் பேசாதபொழுது எமது அபிப்பிராயம் இன்னது என ஒருவர் திருத்திச் சொல்லுவாராயின் அதை நாம் மன்னிக்கவேண்டியவர்களாகவே இருக்கிறோம். இப்பொழுதேனும் எமது அபிப்பிராயத்தை உலகம் நன்கு அறியுமென நம்புகிறோம். ஒரு கூட்டத்தை समजम् (ஸமஜம்) என்ற சப்தத்தால் அழைக்கத் துணிந்தது அடக்கமின்மையையும் பதட்டத்தையுமே வெளிப்படுத்தும் நிலைமைக்குத் தக்கவாறு எழுதுவதும், பேசுவதும் தான் பொருத்தமுடையதாகும்.

## ஸமஷ்டி அரசியல் திட்டம். ஹிந்துக்கள் ஆதரிக்கவேண்டும்.

### பரமானந்தரின் வேண்டுகோள்.

ஹிந்து ஸபைத்தலைவரான ஸ்ரீமான் பாய் பரமானந்தர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஸமஷ்டி சட்ட ஸபையில் ஹிந்துக்களுக்கு 100க்கு 40 ஸ்தான விகிதமே கொடுக்கப்பட்டிருப்பது அநீதி யென்றும் நியாயமாக 100க்கு 75 வீதம் பிரதிநிதித்வம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஸமஸ்தான பிரதிநிதிகளில் மஹம்மதியருக்கு அதிகச்சலுகை காட்ட காங்கிரஸ்காரர்கள் கூட ஸம்மதியளித்து மஹம்மதியர்களை திருத்தி முயற்சிப்பதாயும், இது ஹிந்து ஸமூஹத்திற்கு தீங்கு செய்வதாகு மென்றும், ஹிந்து ஸமஸ்தானங்கள் ஸமஷ்டியில் சேர்ந்து ஹிந்துக்களின் பிரதிநிதி ஸங்க்யையை உயர்த்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்.

## மந்திரிகளுக்கும், கவர்னருக்கும் அபிப்பிராய பேதம்?

### ஐக்ய மாகாணத்தில் யோஜனை.

ஐக்ய மாகாண கவர்மெண்டில் மந்திரிகளுக்கும் கவர்னருக்கும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு நிலைமை சிக்கலாயிருப்பதாய் தெரிகிறது. அந்த மாகாண தலைவர்களான நேருஜி முதலியவர்களும் மந்திரி ஸ்ரீமான் வல்லபபந்து முதலியவர்களும் இந்த நிலைமையைப்பற்றியோஜிக்க ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதில் தற்போதிய ஸ்திதிக்கு ஏற்றபடி என்ன செய்யலாமென்று விவாதிக்கப்பட்டது.



ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# 'மூக பஞ்சசதீ'

## கடாக்ஷ சதகம்.

(16—12—37 தொடர்ச்சி)

காமாக்ஷி தேசிக க்ருபாங்குரம் ஆச்ரயந்தோ
நாநா தபோ நியம நாசித பாசபந்தா: |
வாஸாலயம் தவ கடாக்ஷமமும் மஹாந்தோ
லப்த்வா ஸுகம் ஸமதியோ விசரந்தி லோகே ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, தேசிக க்ருபாங்குரம் - ஆசார்யனுடைய க்ருபையை, ஆச்ரயந்த:-ஆச்ரயித்தவர்களும்(அடைந்தவர்களும்,) நாநா தபோநியம - நானாவிதமான தபஸ்ஸுகளாலும் நியமங்களாலும், நாசித பாச பந்தா: - பாசங்களின் பந்தங்களைப் போக்கிக்கொண்டவர்களுமான, மஹாந்த: - மஹான்கள் அமும் தவ கடாக்ஷம் - இந்த உனது கடாக்ஷமாகிற, வாஸாலயம் - வீட்டை, லப்த்வா - அடைந்து, ஸமதிய: - ஸமபுத்தியுள்ளவர்களாய், லோகே ஸுகம் விசரந்தி - லோகத்தில் ஸுகமாக ஸஞ்சரிக்கிறார்கள்.

ஸாகூத ஸம்லபித கர்பித முக்த ஹாஸம்
வ்ரீடானுராக ஸஹசாரி விலோகனம் தே |
காமாக்ஷி காம பரிபந்தினி மாரவீர
ஸாம்ராஜ்ய விப்ரம தசாம் ஸபலீகரோதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி!, ஸாகூத ஸம்லபித கர்பித - ச்ருங்கார கேளியான பேச்சின் பாவம் நிறைந்ததான, முக்தஹாஸம்-மந்தஹாஸத்தோடு கூடியதும், வ்ரீடானுராக ஸஹசாரி - நாணம் ப்ரியம் இவையுடையதுமான, தே விலோகனம் - உனது பார்வையானது, காம பரிபந்தினி - பரமசிவனுடைய விஷயத்தில், மாரவீர - மன்மதனாகிற வீரனுடைய, ஸாம்ராஜ்ய விப்ரம தசாம் - ஸாம்ராஜ்யத்தின் ஆடம்பரத்தை, ஸபலீ கரோதி - ஸபலமாகச் செய்கிறது. (நிறைவேற்றுகிறது)

1. அதாவது, அவ்வித குணங்களோடு பொருந்திய கடாக்ஷத்தின் விசேஷத்தினால் மன்மதனானவன் பரமசிவனிடத்தில் கூட தன் ஸாம்ராஜ்யத்தை செலுத்த வல்லவனாக ஆகிறான் என்று சொல்லப்பட்டது.

காமாக்ஷி விப்ரம பலைக நிதிர்விதாய
ப்ரூவல்லி சாப குடிலீக்ருதிமேவ சித்ரம் |
ஸ்வாதீனதாம் தவ நினாய சசாங்கமௌளே:
அங்கார்த்த ராஜ்யஸுகலாபம் அபாங்கவீர: |

காமாக்ஷி - ஹே காமாக்ஷி, அபாங்க வீர:-உனது கடாக்ஷமாகிற வீரனானவன், விப்ரம பலைக நிதி: - உனது விலாஸமாகிற ஒரே ஒத்தாசையை உடையவனால், ப்ரூவல்லி சாபகுடிலீக்ருதிமேவ - புருவக்கொடியாகிய வில்லை வளைக்கிற கார்யத்தை மட்டுமே, விதாய - செய்து, சசாங்க மௌளே:- பரமசிவனுடைய, அங்கார்த்த ராஜ்ய ஸுக லாபம் - பாதி சரீரமாகிற ராஜ்ய ஸுகத்தின் ப்ரயோஜனத்தை, தவ ஸ்வாதீனதாம் நினாய - உனக்கு ஸ்வாதீனமாகச் செய்து விட்டான். சித்ரம் - இது ஆச்சர்யம்.

காமாங்குரைக நிலயஸ்தவ த்ருஷ்டிபாத:
காமாக்ஷி பக்தமனஸாம் ப்ரததாதி காமான் |
ராகான்வித: ஸ்வயமபி ப்ரகடீகரோதி
வைராக்யமேவ கதமேஷ மஹாமுனீனாம் ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! காமாங்குரைக நிலய: - காமத்தை முக்யமான இருப்பிடமாக உடைய (காமம் நிறைந்ததான) தவ த்ருஷ்டிபாத: - உனது பார்வையானது, பக்த மனஸாம் - பக்தர்களுடைய மனங்களுக்கு, காமான் ப்ரததாதி - காமங்களை (அவர்களுடைய விருப்பங்களை) யதேஷ்டமாகக் கொடுக்கிறது. (ஆயினும்) ஏஷ: - இந்த உனது கடாக்ஷமானது, ஸ்வயம் - தான், ராகான்வித: அபி - ராகத்தோடு (ஆசையோடு) கூடியிருந்தபோதிலும், மஹாமுனீனாம் - முனீச்வரர்களுக்கு, வைராக்யமேவ - வைராக்யத்தையே (ராகமில்லாதிருத்தலையே) கதம் ப்ரகடீகரோதி - எப்படி உண்டுபண்ணுகிறது.

1. பக்தர்களுடைய விருப்பங்களையெல்லாம் அபரிமிதமாக கொடுப்பதால் அம்பாளுக்குக் காமாக்ஷியென்ற பெயர் ஏற்பட்டது என்பதைப் பற்றி, ஏற்கனவேயே சொல்லப்பட்டது.

2. ராகமென்றால் ஆசை, பற்றுதல் என்று அர்த்தம். வைராக்யமென்றால் பற்றுதல் அற்றதான நிலைமை. அம்பிகையின் கடாக்ஷமானதுதான் (பரமசிவனிடத்தில்) ராகத்தோடு (ஆசையோடு) இருந்தபோதிலும், முனீச்வரர்களுடைய மனதில் ராகமில்லாதிருத்தலை (விஷயாதிகள் பற்றுதல் இல்லாதிருத்தலை) எப்படி உண்டுபண்ணுகிறது என்பதாக கவியானவர் ஆச்சர்யப்படுகிறார்.

71. காலாம்புவாஹ: நிவஹை கலஹாயதே தே
காமாக்ஷி காளிமமதேன ஸதா கடாக்ஷ: |
சித்ரம் ததாபி நிதராம் அமுமேவ த்ருஷ்ட்வா
ஸோத்கண்ட ஏவ ரமதே கில நீலகண்ட: |

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! தே - கடாக்ஷ: - உனது கடாக்ஷமானது, காளிம மதேன - தான் கருப்பாயிருக்கும் மதத்தினால் (கொழுப்பினால்) காலாம்புவாஹ நிவஹை: - காளமேகங்களின் கூட்டங்களோடு, ஸதா கலஹாயதே - எப்போதும் கலஹம் செய்கிறது (சண்டை போடுகிறது) ததாபி - அப்படி இருந்தும், அமுமேவ - அதையே, நிதராம் த்ருஷ்ட்வா - அதிகமாக (எப்போதும்) பார்த்து, நீலகண்ட: - நீலகண்டனான பரமசிவன், ஸோத்கண்ட ஏவ - ஆசையோடு கூடவே, ரமதே கில - கூத்தாடுகிறார் (ஸந்தோஷப்படுகிறார்) அல்லவா. சித்ரம் - இது விசித்ரமாக இருக்கிறது.

1. மயிலின் கழுத்து நீலமாயிருப்பதால் அதற்கு நீலகண்டமென்று பெயர். பரமசிவன் ஹாலாஹல விஷத்தைத் தன் கழுத்தில் தரிப்பதால் அது சுத்த ஸ்படிக ஸங்காசமான சரீரத்தையுடைய அவருடைய கழுத்தில் நீல நிறமுள்ளதாகத் தோன்றுகிறது. ஆகவே அவருக்கும் நீலகண்டரென்று பெயர். இவ்விதமான பெயரின் ஒற்றுமையைக் கொண்டு அம்பிகையின் கடாக்ஷமானது இதில் வர்ணிக்கப்பட்டது.

2. காளமேகங்களை (நீருண்ட மேகங்களை) பார்த்து மயில்கள் ஸந்தோஷப்பட்டு நர்த்தனம் செய்வதாக வர்ணிப்பது கவிகளின் ஸம்ப்ரதாயம்.

3. அம்பாளுடைய கடாக்ஷமானது கறுப்பு நிறத்தில் நீருண்ட மேகங்களையும் தோற்கடிப்பதாக இருப்பதை அவைகளோடு கலஹம் செய்வதாக இங்கு சொல்லப்பட்டது. அப்படியிருந்தும் அந்த கடாக்ஷத்தைப் பார்த்து (காளமேகங்களைக் கண்டு மயில்கள் நர்த்தனம் செய்வதுபோல்) நீலகண்டனான பரமசிவன் ஸந்தோஷமடைகிறாரே, இது என்ன ஆச்சர்யம் என்று கவி வர்ணிக்கிறார்.

72. காமாக்ஷி மன்மத ரிபுப்ப்ரதிமாரதாப-
மோஹாந்தகார ஜலதாகமனேன ந்ருத்யன் |
துஷ்கர்ம கஞ்சுகிகுலம் கபளீகரோது
வ்யாமிச்ரா மேசக ருசிஸ்த்வ தபாங்ககேகீ ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! வ்யாமிச்ர மேக ருசி: - கலந்ததான மேகத்தின் காந்தியைப் போன்ற காந்தியுடையதான, த்வத் அபாங்ககேகீ - உனது கடைக்கண்ணாகிய மயிலானது, மாரதாப - மன்மத தாபத்தினால் உண்டான, மோஹாந்தகார - மோஹமென்ற இருட்டோடு கூடிய, ஜலதாகமனேன - வர்ஷா காலத்தின் வருகையினால், மன்மதரிபும் ப்ரதி - பரமசிவனுக்கு எதிரில், ந்ருத்யன் - நர்த்தனம் செய்துகொண்டு, துஷ்கர்ம கஞ்சுகி குலம் - (எனது) பாபகர்மாக்களாகிய ஸர்ப்பங்களின் கூட்டத்தை, கபளீ கரோது - நாசம் செய்யட்டும்.

1. இதில் அம்பிகையின் கடாக்ஷத்தை மயிலுக்கு ஒப்பிடப்பட்டது. வர்ஷாகாலத்தில் நீருண்ட மேகங்களைப் பார்த்து மயில்கள் ஸந்தோஷத்துடன் நர்த்தனம் செய்வது வழக்கம். அது தவிர, மயில்கள் ஸர்ப்பங்களுக்கு வைரிகள். இந்த இரண்டு அம்சங்களும் அம்பிகையின் கடாக்ஷத்திற்கு இருப்பதாக இங்கு சொல்லப்பட்டது.

2. மேசகமென்றால் கருப்பு நிறத்தைத் தவிர மயில்களின் தோகையிலுள்ள கண்களுக்கும் பெயர்.

73, காமாக்ஷி மன்மத ரிபோரவலோகனேஷு
காந்தம் பயோஜமிவ தாவகம் அக்ஷிபாதம் |
ப்ரேமாகமோர் திவஸவத் விகஸீகரோதி
லஜ்ஜாபரோ ரஜனிவத் முகுளீகரோதி ||

காமாக்ஷி - ஹே காமாக்ஷி! மன்மதரிபோ: - பரமசிவனுடைய, அவலோகனேஷு - பார்வைகளின் போது (அதாவது, பரமசிவன் பார்க்கும் காலங்களில்), காந்தம் பயோஜமிவ - அழகான தாமரஸ புஷ்பம் போன்ற, தாவகம் அக்ஷிபாதம் - உனது பார்வையை, ப்ரேமாகம: - ப்ரியமானது, திவஸவத் விகஸீரோதி - பகற்காலம்போல் மலரச்செய்கிறது. லஜ்ஜாபர: - அதிகமான லஜ்ஜையானது, ரஜனிவத் - ராத்ரிகாலம் போல், முகுளீகரோதி - மூடச்செய்கிறது.

## சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 22வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்னும் ஒரு ஸஞ்சிகையுடன் இந்த வருஷம் பூர்த்தியாகி விடுகிறது ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे॥

# ஆர்யதர்மம்.

ஈச்வர-ஷு மார்கழி மீ 9௳

## கடன் மசோதாவைப்பற்றி டி. ஆர். வி. சாஸ்திரியார்.

கடன் நிவாரண மசோதாவை ஆக்ஷேபித்துப் பத்திரிகைகளில் வெளிவரும் அபிப்ராயங்களுக்கு அளவில்லை. சட்டரீதியாக ஏற்படக்கூடிய புதிய குழப்பங்களையும் வேறு ஸாதாரணக் கக்ஷிகளையுமே பெரும்பாலோர் வெளியிட்டுவருகிறார்கள். ஸமூஹ அமைப்பு, தர்மா தர்மங்கள், நியாயம் முதலிய அடிப்படையான தத்வங்களை முன்னிட்டு இந்த மசோதாவை ஆக்ஷேபித்தவர்களும் சிலர் உண்டு. கடன் தவணை ஒத்திவைப்பு மசோதா தலைகாட்டியபோதே நாம் எழுதுகையில் இத்தகைய மசோதாக்கள் விச்வாஸஹத்தியில் சேர்ந்ததாயிருப்பனவாகவும், தர்ம மூலமாக அமைந்துள்ள ஸமூஹ வ்யவஸ்தையை த்வம்ஸம் செய்பவைகளென்றும் குறிப்பிட்டோம்.

பிரபல சட்ட நிபுணரும், மிகப் பிரஸித்தியடைந்த மேதாவியும், நிர்வாஹஸபை மெம்பர் பதவியை தன் மதிப்பையுத்தேசித்து த்யாகம் செய்தவருமான ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் இந்த மசோதாவை ஆக்ஷேபித்து வெளியிட்டுள்ள அபிப்பிராயம் தார்மிக உலகத்தாலும், நாஸ்திக உலகத்தாலும் நன்கு கவனிக்கக் கூடியதாயிருக்கிறது.

இந்த மசோதாவினால் ஏற்படக்கூடிய சட்டரீதியிலான சிக்கல்களைப்பற்றி அவர் அதிகம் கவலைப்படவில்லை. ஆனால் இந்த மசோதாவினால் தர்மத்திற்கும், அதன் மூலமாக அமைந்துள்ள நமது ஸமூஹ வியவஸ்தைக்கும் பெரிய அழிவு ஏற்பட்டுவிடுமேயென்ற கவலையே அவருக்கு அதிகமிருக்கிறது. இந்த முக்ய கொள்கையையே அவர் பலமாகக்கொண்டு இந்த மசோதாவை ஆக்ஷேபிக்க முன்வந்திருக்கிறார். ஸமூஹ வாழ்க்கையை ஸ்திரப்படுத்தக்கூடிய, பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ணம் இவைகளை இது அழித்துவிடுமென்றும், இதனால் கணக்கற்றதீமை ஏற்படுமென்றும், தர்மத்தை மூலமாகக் கொண்டு கவனித்தாலும் இது அநீதியானதென்பது விளங்குமென்றும், தர்மமே மனித வாழ்க்கைக்கு மூலவேராக இருப்பதாயும் ஸ்ரீமான் சாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார். மேலும்: தர்மமூலமாகப் பார்த்தால், ப்ரத்யக்ஷத்தில் காணப்படுவதைவிட கண்ணுக்குப் புலப்படாதவிடத்தில் இந்த மசோதாவினால் அதிகத் தீங்கு விளையக்கூடுமென்றும், நமது கீழ் ஸந்ததியாரையும் இந்த மசோதா பாழாக்கிவிடுமென்றும், வேறு சில உயர்ந்த அபிப்பிராயங்களையும் ஸ்ரீமான் சாஸ்திரியார் வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் சாஸ்திரியாருடைய அபிப்பிராயத்திலிருந்து, ஸனாதநிகள் நீண்டகாலமாக வற்புத்தி வரும் ஓர் முக்கிய அம்சம் அங்கீகரிக்கப்பட்டிருப்பது விசேஷமாகும். எந்த அம்சத்தையும் கேவலம் மனிதபுத்தியை மட்டும் ஆதாரமாகக்கொண்டு நிர்ணயித்துவிடக்கூடாதென்பதும், தர்மங்களையும், அவைகளைபோதிக்கும் சாஸ்திரங்களையுமே லௌகிக அலௌகிக ஸகல வியவஹாரங்களுக்கும் பிரமாணமாக கொள்ளவேண்டுமென்பதே தார்மிகர்களின் வாதமாகும். பிரமம், பிரமாதம், பக்ஷபாதம் இவை நிரம்பிய மனித புத்தியினால் செய்யப்படும் எந்த முடிவும் உலகில் எங்கும் க்ஷேமத்தைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. குழப்பங்களே அதனால் பெருகி, உலகமெங்கும் பெருத்த அமைதியின்மையே காணப்படுகிறது. ஆதலால் மனிதபுத்தியை பிரமாணமாகக்கொண்டுசெய்யப்படும் தீர்மானங்களுக்கு இப்போது எதிர்ப்பு ஏற்பட ஆரம்பித்திருப்பது ஸஹஜமானதே. மனிதர்களுடைய பாரலௌகிக சிரேயஸ் ஸாதனமான தர்மங்களில் மனிதபுத்தி புகுந்து வேலை செய்வதை தார்மிகர்கள் என்றைக்கும் எதிர்த்து வருகிறார்கள். ஆனால் ஸ்ரீமான் சாஸ்திரியார் போன்ற சீர்திருத்த வாதிகள் இதை அலக்ஷ்யம் செய்து வந்தார்கள். சாரதாச்சட்டம் போன்ற அநீதிகள் ஏற்படும் காலத்தில் நம்மவர்கள் ஸ்ரீமான் சாஸ்திரியார் இப்போது வாதிக்கும் நியாயங்களையே எடுத்துக்காட்டினார்கள். ஆனால் அது அப்போது கவனிக்கப்படவில்லை. இப்போது பணம், நிலம், முதலிய சொத்துக்கள் விஷயமாகவும் தேசத்தில் அவ்யவஸ்தை ஏற்பட ஆரம்பித்துவிட்டதால் கண்ணுக்குப்புலப்படாத தர்மத்தை கவனிக்கச் சமயம் நேர்ந்திருக்கிறது

எப்படியும் ஸ்ரீமான் சாஸ்திரியார் வெளியிட்டுள்ள அடிப்படையான அம்சங்களை தார்மிகள் மனப்பூர்வகமாக ஆதரிப்பார்களென்பதில் தடையில்லை. நவீன சீர்திருத்த வாதிகளும் எவ்வளவு அவ்யவஸ்தை ருசிகொண்டபோதிலும், கடைசியாக முட்டித் திரும்பி தர்மத்தையே நம்பவேண்டிய நிலைமை நிச்சயம் ஏற்படும். அதற்கு இந்தக்கடன் நிவாரண மசோதாவே ஓர் இணையற்ற உதாரணமாக பகவானால் காட்டப்பட்டிருக்கிறது. இம்மாதிரி இன்னும் எவ்வளவோ, ஸமூக, மத, தர்ம நாசகாரிகளான மசோதாக்களும் வரக்கூடும். ஸ்ரீமான் வெங்கடராம சாஸ்திரிகள் போன்ற மேதாவிகள் இப்போது கொண்டுள்ள அபிப்பிராயத்தையே உறுதியாகக்கொண்டு ஸமூஹ தர்மங்களுக்குப் பாதுகாப்பாளர்களாக நிற்கவேண்டியது அவசியமென இந்த மசோதா நிரூபித்துவிட்டது நல்லதே.

கனம் ராஜகோபாலாசாரியார், ஸ்ரீமான் சாஸ்திரியாருடைய கக்ஷிக்கு என்ன பதில் கூறுவார்? அவருடைய சட்டஸபைப் பேச்சில் இந்த முக்ய விஷயத்திற்கு ஒரு பதிலும் காணப்படவில்லை. ஸ்ரீமான் சாஸ்திரியார் குறிப்பிட்டுள்ள அடிப்படையான அம்சங்களை ராஜாஜியும் அங்கீகரிக்கவேண்டிய நிர்ப்பந்த காலம் கிட்டி வருகிறது. அபேதவாதிகளின் தாக்கல் நாலுபக்கத்திலும் அதிகரிக்கப்போவதால் இப்போது கனம் மந்திரியே "ஓர் வரையறைக்குட்பட்டுப் பேசவேண்டு" மென்ற கக்ஷியை வற்புறுத்தவேண்டி வரப்போகிறது. மந்திரி பதவி ஏற்பதற்கும், உறுதிமொழி வாங்குவதற்கும் காங்கிரஸ் காரர்கள் ஸ்ரீமான் சாஸ்திரியார் போன்ற மிதவாதித் தலைவர்களின் உதவியைக் கோரினார்கள். அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இம்மாதிரி உதவிசெய்த புத்திமான்களுடைய நியாயமான கக்ஷியை இப்போது கனம் மந்திரி உதாஸீனமும், அலக்ஷ்யமும் செய்வது என்ன நீதியில் சேர்ந்தது?

## குடந்தையில் ஸநாதநிகளின் கூட்டம்.

### பரிஷத்திற்கு ஆதரவு.

சென்னையில் டிஸம்பர் 25௳ முதல் நடைபெறப்போகும் அகில இந்திய ஸநாதநதர்ம வித்வத் பரிஷத், அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்க கான்பரன்ஸ் இவைகளை ஆதரிப்பதற்காக டிஸம்பர் 16௳ வியாழக்கிழமை குடந்தை ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் மடத்தில் ஸநாதனிகளின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்திரீகளும் புருஷர்களும் ஏராளமாக விஜயம் செய்திருந்தனர். உள்ளூர் ஸநாதநி ப்ரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகள் ஸநாதநதர்மத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை விளக்கி புருஷர்கள்போல் ஸ்திரீகளும் தர்ம ரக்ஷணத்தில் ஈடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பிறகு ஸ்ரீமான் M. K. வைத்யநாத அய்யர் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்து தர்மரக்ஷணத்தின் அவச்யத்தை வற்புறுத்திப்பேசினார். ராமாயணம் ஸ்ரீமான் வேம்பு சாஸ்திரிகளை தலைமை வஹிக்கவும் வேண்டிக்கொண்டார். ஸ்ரீமான் சாஸ்திரிகளும் தலைமை வஹித்து சென்னையில் நடப்பதுபோன்ற பரிஷத்து அவச்யமானதென்றும் மஹாஸபை மூலம் கிளர்ச்சி செய்யவேண்டியதவச்யமென்றும், புருஷர்களுடைய தர்மாபிமானம் ஸ்திரீகளாலேயே காப்பாற்றப்படுகிறதென்றும் கூறினார் பிறகு மருவிப்பட்டிணம் வ்யாகரண கேஸரி ஸ்ரீ பார்த்தஸாரதி பட்டாசார்யர் சென்னை பரிஷத்துக் கூட்டவேண்டி நேரிட்டதை விளக்கினார். திருவாங்கூர் ஆலயப்பிரவேச அறிக்கையைக் கண்டித்தும், அது அரசனின் அதிகாரத்தை மீறின செய்கை என்றும், சென்னை சட்டஸபை அதைப்பாராட்டி மீறியதும் கண்டிக்கத்தக்கதென்றும் கூறினார். சென்னையிலுள்ள காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர் முதலில் கொச்சி அரசன் ஆலயப்பிரவேசத்திற்கு எதிராக இருப்பதில் வருத்தம் தெரிவித்தும் திருவாங்கூர் அறிக்கையில் ஸந்தோஷத்தை தெரிவித்தும் தீர்மானம் கொண்டுவந்ததாகவும், கவர்னர் ஜெனரலே கொச்சிஸம்பந்தமான பாகத்தை அனுமதிக்க மறுத்து விட்டதாகவும் கூறினார். சீர்திருத்த வாதிகள் அஸ்வர்ண விவாஹம், விதவா விவாஹம் விவாஹரத்து ப்ரௌடா விவாஹம் பஞ்சம ஆலயப்பிரவேசம் இவைகளை சாஸ்திரீயமாக்கவே சென்னையில் அவர்களுக்கும் பரிஷத்துக்கூட்டுவதாகவும் அப்பரிஷத்தை பஹிஷ்கரித்து ஸநாதநிகளின் பரிஷத்தை ஆதரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அவர்களின் பரிஷத்தின் தலைவர், உபசாரணைத் தலைவர் எல்லோருமே தர்மாபிமானமற்றவர் என்றும் கூறினார். சென்னை ஸநாதநிகளின் பரிஷத்திற்கு நடந்துள்ள ஏற்பாட்டையும், அதற்கு பலர் எடுத்துக்கொண்டுள்ள பரிச்ரமத்தையும் பாராட்டினார்.

பிறகு நாச்சியார்கோவில் வைகாநஸாகம கேஸரி ஸ்ரீ க்ருஷ்ணபட்டாசாரியர் பேசுகையில் தர்மங்களே ஸகல ச்ரேயஸ்ஸுகளையும் கொடுக்குமென்றும் ஆகமங்கள் பஞ்சம ஆலயப்பிரவேசத்தை பலமாக எதிர்க்கின்றனவென்றும், ஆலயப்பிரவேசத்தால் பிம்ப ஸாந்நித்யம் கெட்டுவிடுமென்றும் கூறினார். பிம்பத்திற்கு இந்த வழியில் ஸாந்நித்யக்குறைவு ஏற்பட நேரிட்டால் அதிலுள்ள தைவீக சக்தியை பூஜகர்கள் ஆகர்ஷித்துவிட வேண்டுமென்றும் கூறினார். அக்ராஸநாதிபதியின் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

நமது நிருபர்.



## சென்னை பரிஷத்.

### ஒரு வேண்டுகோள்.

(அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார்)

புதிய அரசியல் மதவிஷயத்தில் சட்டஸபைகளுக்கு பூர்ண ஸ்வாதந்திரியத்தை அளித்துவிட்டது. மதவிஷயமாக எவ்வித சட்டத்தையும் சட்டஸ்பை செய்யலாம். சட்டஸபை மெம்பர் பதவிக்கு படிப்பு, ஆசாரம், அந்தஸ்து முதலிய எந்த நிர்பந்தமில்லாததால் யாரும் சட்டஸபை மெம்பராகலாம். சட்டஸபையும் மஹம்மதியர், கிருஸ்தவர், நாஸ்திகர் முதலிய பலவித கொள்கையுள்ளவர்கள் நிறைந்தது. இந்நிலையில் புனிதமான மதவிஷயத்தில் இஷ்டப்படி சட்டம்செய்ய ஷெ சட்டஸபைக்கு அதிகாரமளித்திருப்பது மிகுந்த ஆபத்தை விளைவிக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. அடியோடு மதவாஸனையே இல்லாமலும், மதநம்பிக்கையற்றவர்களும் நிறைந்த ஸபையின் கையில் இன்று புனிதமான நமது ஸநாதந தர்மம் அகப்பட்டுக் கொண்டிருப்பது சரித்ரத்தில் காணக்கூடாத ஸம்பவம். புராணங்களிலிருந்து வெளியாகும் கோடிக்கணக்கான வருஷங்களின் சரித்ரங்களிலிருந்தோ நவீன சரித்ரகாரர்களின் புத்திக்கெட்டிய ஆயிரக்கணக்கான வருஷங்களின் சரித்ரத்திலேயோ இவ்வித நிலை ஏற்பட்டதில்லை என்பது நிச்சயம். இந்த நெருக்கடியான ஸந்தர்பத்தில் பரிஷத்கூடி ஒரு மனதான முடிவு செய்து தனது கொள்கையை நிச்சயமாக வெளியிடுவது மிக்க அவச்யமானது. இந்த அரிய ஸந்தர்பத்தில் பரிஷத்து கூட்ட முயற்சித்தவர்கள் வருங்காலத்தில் சரித்ரகாரர்களால் போற்றப்படப்போவது நிச்சயம்.

பரிஷத்தில் விசாரித்துத் தீர்மானிக்கவேண்டியவையாகக் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் மிகவும் முக்யமானவைகளே. ஆனால் இன்று நம்நாடு உள்ள நிலையை கவனித்தால் பண்டித பரிஷத் இத்துடன் தனது பொருப்பை கழித்துவிடமுடியாதென்று தோன்றுகிறது. முன்காலங்களில் பிராமணர்கள் பரிஷத்கூடி சாஸ்திரார்த்த நிர்ணயம் செய்வார்கள். நிர்ணயிக்கப்பட்ட சாஸ்திரார்த்தம் தண்டநீதி மூலம் அரசனால் நிறைவேற்றப்படும். இன்றுள்ள நிலை அடியோடு மாறினதென்பதை நாம் மறக்கக்கூடாது. பண்டித பரிஷத்துக்கூட்டி நாம் பல தீர்மானங்களைச் செய்யலாம், ஆனால் அதை நிறைவேற்றிவைக்கவேண்டிய பொறுப்பு எந்தத் தனிமனிதனுக்கும் ஸ்தாபனத்திற்குமிருப்பதாகத் தெரியவில்லை. சாரதாசட்டத்தின்போது நடந்த பரிஷத்தின் முடிவையும் அதன் பிறகு சட்டஸபை நடந்துகொண்ட முறையையும் நாம் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்: ஆகவே பண்டித பரிஷத் செய்யும் தீர்மானங்களை அநுபவமுறையில் நிறைவேற்ற பண்டித பரிஷத்தே முயற்சிக்கவேண்டியதவச்யமாகிறது. இதற்கான வழிகளை பரிஷத் ஆலோசிக்கவேண்டியது அவச்யமாகிறது. இங்கு இரண்டே வழிகள் இருக்கின்றன. ஒன்று பண்டித பரிஷத் கூடிச்செய்யும் எந்த முடிவிற்கும் சட்டஸபை கட்டுப்படும்படிச் செய்து, அல்லது சட்டசபைகள் மதவிஷயத்தில் தீர்மானம் செய்ய அதிகாரமில்லாமல் செய்து பொதுஜனங்களிஷ்டப்படி நடக்க விட்டுவிட்டு விடுவது.

இப்பொழுதுள்ள நிலையில் புதிய அரசியலை மாற்றுதவரை இவை ஸாத்யமானவையல்ல. இரண்டாவதாக பண்டித பரிஷத்கூடிச் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்ற சட்டசபைகளிலும் பண்டிதர்கள் சென்று நிறைவேற்றுமதிகாரத்தைக் கைப்பற்றுவது. இதற்கு யாதொரு இடையூறுமில்லை. சட்டசபைகளை கைப்பற்றும் வழி. அதற்காகச் செய்ய வேண்டிய உபாயம் இவைகளை பரிஷத் யோஜிக்கவேண்டும். பண்டிதர்கள் ஸம்பந்தப்பட்டமட்டில் இப்பொழுது ராஜீயத்தில் கலப்பது அநாவச்யமானதென்ற எண்ணம் பரவியிருக்கிறது. உண்மையைகவனித்தால் உலகம் தனது வேகத்தில் செல்லும்போது மஹர்ஷிகள், பண்டிதர்களை கையைக் கட்டிக்கொண்டு நிற்கச் சொல்லவில்லை.

ஸவெஷாம் ப்ராஹ்மணோவித்வாக்ஷ வ்ருத்த்யுபாயா ந்யா விதி।

என்று உலகத்தின் ஸுகதுக்கங்களில்கலந்து வழிகாட்டியாக இருக்கவேண்டிய பொறுப்பு பண்டிதனுக்குண்டு.

ப்ராஹ்மணாய வராஜெஹுவஸவட்ராஃ வரிஷெஹுஜாஃ என்று உலகத்திலுள்ள ஸகல ஜனங்களும் பகவானால் பண்டிதர்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் உலக வேகத்தில் ஒதுங்கி நின்றுவிடுவதாக நினைப்பது நிச்சயம் பயம் நிறைந்த செய்கையாகும்

தண்ஃ ஸம்ரக்ஷதெ யஃடும் என்று தர்மரக்ஷணத்திற்கு தண்டம் அவச்யம் என்று மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள். ராஜ்யத்தில் கலந்தாலொழிய தண்டத்தை நாம் கைப்பற்ற முடியாது. தண்டமில்லாது தர்மரக்ஷணம் அஸாத்யம்.

ரிக்வேத காலம் முதல் வைதிக மத சரித்ரத்தில் எந்த நிமிஷமும் பிராமணன், க்ஷத்ரியனில்லாது தனியாக இருந்ததில்லை. நாக்ஷத்ரம் ப்ரஹ்மவெயமெதெ என்று க்ஷாத்ர சக்தி இல்லாத ப்ராஹ்மணர் வளர்ச்சியடையாதென்றும் மஹரிஷிகள் முறையிடுகின்றனர். தனியாக இன்று க்ஷத்ரியன் தேசத்தை ஆள முடியவில்லை. ஜனநாயகத் தத்வப்படி க்ஷாத்ர சக்தி ஒவ்வொரு வனிடமே இன்று புகுந்துவிட்டது. பண்டிதர்கள் தங்களிடம் அந்த சக்தி இருப்பதை உணர்ந்து அதை உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். ராஜீயத்தில் கலக்காதவரை இது ஸாத்யமன்று. சாஸ்திரத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியவரை பொறுப்பு பண்டிதனுக்கு இருப்பதால் ராஜீயத்தில் கலந்துகொள்ளவேண்டியது நிர்பந்தமாகிவிட்டது. ராஜீயத்தில் கலந்துகொண்டு நமது தர்மங்களை நிறைவேற்ற வழிதேடாதவரை, பரிஷத் தீர்மானம் பிரயோஜனமுள்ளதாயிராது. முக்யமான ஸந்தர்பத்தில் கூடும் பரிஷத் இவ்விஷயத்தில் வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
ராஜமகேந்திரம்.

## வித்வத் பரிஷத்.

அழைப்பு. நமது தேசத்திலுள்ள ஸகல வித்வான்களது விலாசத்தைத்தெரிந்து கொள்வது மிக சிரமமாக இருக்கிறது. ஏற்கனவே நாங்களறிந்த விலாஸம் ஸ்ரீ மடாதிபதிகளளித்த விலாஸம். நேரில் சில பண்டிதர்களளித்த விலாஸம் இவைகளுக்கு அழைப்புப்பத்திரம் அனுப்பியுள்ளோம். பலரது விலாஸம் தவறுதலாக இருக்கலாம். சிலது விட்டுமிருக்கலாம்! இது தர்மகார்யமாதலின் அழைப்புப்பத்திரம் வரவில்லையென்றிராமல் அவச்யம் விஜயம் செய்யும்படி மிகப்பணிவுடன் வேண்டுகிறேன்.

காலமும் இடமும் மாற்றம். ப்ரச்ந பத்ரங்களுக்கு டிஸம்பர் 10௳க்குள் பதிலுரைக்கும்படி எழுதப்பட்டது. ஆனால் பலருக்கு முன்னதாக அது சேராதிருக்கலாம். ஆனதால் ஸபை ஆரம்பிக்கும் 25௳க்குள் அனுப்பும்படி கால மாற்றம். மைலாப்பூர் பௌளுதூர் உயர்தர கலாசாலையில் பரிஷத் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இடமங்கு போதாததால் ராயப்பேட்டை லாயிட்ஸ் ரோட் லலிதா ஸதநம் என்ற இடத்திலேயே பரிஷத்தும் நடக்கும்.

பந்தல். புருஷ ஸூக்த, ஹோமம் ஸப்த சதீ பாராயணம் முதலியவை நடத்த தனிபந்தல், யாகசாலைக்கு வேறு போஜந சாலைக்கு அந்தந்த தேசத்தவருக்கேற்றபடி தனித்தனி பந்தல், பரிஷத்து நடக்க ஓர் தனிப்பந்தல் ஆக இவ்வளவும் பரிபூர்ணமாக வேலைநடந்து விட்டன. அவகாசமும் அவச்யமுமிருந்தால் வைதிக முறையைப்பின் பற்றும் தீண்டாதாருக்கும் தூர ஒரு பந்தலமைக்க உத்தேசம்.

தொண்டர் படை, ஸபைக்கு உதவி புரிய ஓர் தொண்டர்ப்படை திரட்டப்பட்டு அவச்யமான பயிற்சி அளிக்கப்படுகிறது. இன்னும்மதிக தொண்டர்கள் தேவை. விருப்பமுள்ளோர் கார்யதர்சிக்கு விண்ணப்பமனுப்ப வேண்டுகிறேன்.

த்வஜமும் அலங்காரமும். ஸஞ்ஜீவியை ஓர் கையிலும் கதையை ஓர் கையிலும் ஏந்திய ஹனுமானை இடையே கொண்ட ஓர் த்வஜம் தர்மத்வஜமாககருதப்பட்டு அழகிய ஓர் உயர்ந்த ஸ்தம்பத்தின் மீது ஓர் மடாதிபதிகளால் பறக்கவிடப்படும். பல தர்மங்களைப் போதிக்கும் சுலோகங்களை ஆங்காங்கு பெரிய நாகர எழுத்தில் எழுதி தூண்களில் தொங்கவிட ஏற்பாடாகிறது.

ப்ரதிநிதிகள். காசி டில்லி நாகபூர் பாம்பே ஆக்ரா முதலிய இடங்களிலிருந்து பற்பல பண்டிதர்கள் வந்து விட்டனர். பலர் வருவதாக கடிதம் குவிந்த வண்ணமாயிருக்கிறது. மடாதிபதிகளில் பலர் வருவதாக தந்திகள் வந்திருக்கின்றன.

தலைவர் வருகை! ஸ்ரீ பண்டித பரிஷத்திற்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரம்மஸ்ரீ உ. வே. ஸ்ரீயதுகிரி யதிராஜ ஸம்பத்குமார ராமாநுஜ ஜீயர்ஸ்வாமிகள் மேலக்கோட்டிலிருந்து ஏற்கனவே சென்னைக்கு விஜயம் செய்து தக்கபடி வரவேற்கப்பட்டு திருவல்லிக்கேணியில் ஓர் அழகிய விடுதியில் தங்கி இருக்கிறார்கள்.

நிறுத்த முடியாது! ஸர். பி.எஸ் சிவஸ்வாமியர் ஆரம்பித்த பரிஷத் நிறுத்தப்பட்டதாகத் தெரிவதால் ஏன் நமது ஸபையையும் நிறுத்தக்கூடாதென சிலர் கூறுகின்றனர். நம்மவரில் பலர் அப்படியே பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனாலும் இவ்வளவு தூரம் ஆரம்பித்த ஸபையை எப்படி நிறுத்த முடியும்? பலர் நம்மை நம்பாமல் போய் விடுவர். நமது தர்மப்பிரசாரத்திற்காக ஏற்பட்ட இதை நிறுத்துவது உசிதமல்ல என ஸபை கருதுகிறது.

வெ. ஸோ. சர்மா.

713

# தேவாலயச் சீர்திருத்தம்

## டாக்டர் ராஜனிடம் பண்டிதர்களின் தூது.

சென்றவாரம் 13உ திங்கள்கிழமை சென்னை ஸுகாதார, தர்மஸ்தாபன இலாகா மந்திரியான டாக்டர் ராஜன் அவர்கள் கும்பகோணம் வந்து ஸுகாதார வாரவிழாவை ஆரம்பம் செய்து வைத்தபின் மாலை 1-மணிக்கு ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்தார்.

அச்சமயம் கும்பகோணத்திலுள்ள பண்டிதர்கள் மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமிகளின் தலைமையில் கனம் மந்திரியைக்கண்டு தேவாலயச்சீர்திருத்த விஷயமாக ஒரு மெமோராண்டத்தைத் தயாரித்துக் கொடுத்தனர். அந்த பத்திரத்தில் பாஷா பாரத துரந்தர, மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ.வே. M.V. ராமாநுஜாசாரியர், மஹாமஹோபாத்ய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் முதலான பிரபல பண்டிதர்கள் பலர் கையொப்பமிட்டிருந்தனர். பண்டித கோஷ்டியார் டாக்டர் ராஜனை வரவேற்று மாலையிட்டு உபசரித்தனர்.

கனம் மந்திரி தமது நன்றியைத்தெரிவித்துவிட்டு, பண்டிதர்கள் கொடுத்த மெமோராண்டத்தைத் தாம் மிகுந்த கவனத்துடன் வாசித்ததாயும் தேவாலய சீர்திருத்த விஷயமாக அதில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு யோஜனையும் சிலாக்யமாயிருப்பதாயும், தேவஸ்தான போர்டு சட்டத்தைத் திருத்தும்போது பண்டிதர் சொல்லியுள்ள ஆலோசனைகளை அடிப்படையாகக்கொண்டு தாம் பரிஷ்காரம் செய்ய முயலுவதாயும், வித்வான்கள் தம்முடன் இதில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பதில் கூறினார். வேறு சில முக்ய விஷயங்களை பற்றி ம. ம. ஸ்ரீமான் ஆர். வி. கிருஷ்ணமாசாரியஸ்வாமி மந்திரியிடம் நேரில் வற்புறுத்தி நன்றி தெரிவித்துப் பேசியபின், கனம் மந்திரி பண்டிதர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

பண்டிதர்கள் கொடுத்துள்ள மெமோராண்டத்தில் கண்டுள்ள விஷயங்களின் ஸாரமாவது:—

(1) இப்போதுள்ள தேவஸ்தான போர்டை, எடுத்துவிடவோ, சீர்திருத்தவோ தங்கள் கவர்ன்மெண்டார் யோஜித்து வருவதை அறிந்து நாங்கள் திருப்தியடைகிறோம். கோயில் நிர்வாஹங்களும் மாமூல் வழக்கங்களும், பூஜை, உத்ஸவாதிகளும் தடையின்றி நடைபெறும்படி திடமான முறையில் சீர்திருத்தம் செய்யப்படுமென்று நம்புகிறோம். திரவிய சக்தி குறைந்துள்ள தேவாலயங்களுக்கும், ஸர்க்கார் செலவில் உசிதமான கிராண்ட்கொடுத்து உதவி, பூஜை ஸரியாக நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்.

(2) தேவாலயங்கள் முற்றிலும் மத ஸம்பந்தமான ஸ்தாபனங்களாகையால், அவைகளில் நியமிக்கப்படும், பெரிய, சிறிய உத்யோகஸ்தர்கள் யாவரும் ஹிந்துமத ஆசாரங்களிலும், விக்ரஹ ஆராதனத்திலும் நம்பிக்கையுள்ள ஆஸ்திக ஹிந்துக்களாயிருக்கவேண்டியது அவசியம். மேனாட்டு முறைப்படி நடப்போரை நியமிக்கக்கூடாது.

(3) தேவாலயங்களில் மத ஸம்பந்தமான கார்யங்களே முக்யமாகையால், வைதிக கார்யங்களை ஸரிவர மேற்பார்வையிட, ஆகமாதி சாஸ்திரங்களையும், மத தத்வங்களையும் அறிந்த பண்டிதர்களையும் தர்ம கர்த்தாவாக நியமிக்கவேண்டியது அவசியமென நினைக்கிறோம். இதுவரையில் இப்படியில்லாததால் அநேக கோவில்களில் சாஸ்திர விஷயமாகப் பல குழப்பங்கள் ஏற்படக் காரணமுண்டாகிவிட்டது. பண்டிதர்கள் தேவாலய நிர்வாஹத்தில் பங்குபெற்றப் பூர்ண பாத்ய முள்ளவர்கள். இவ்விஷயம் முக்யமாக கவனிக்கப்படவேண்டும்.

(4) சைவ, வைஷ்ணவ ஆலயங்களில் ஆகமாதி சாஸ்திர விஷயமாக ஏற்படும் ஸந்தேஹங்களை நிவிர்த்திசெய்துகொள்ள அந்தந்த ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த பண்டிதர்களைக் கொண்டு நிரந்தரமான ஆலோசனை ஸபை ஒன்றை ஏற்படுத்தவேண்டும். எந்த ஸந்தேஹமும் இந்த ஸபையால் தீர்க்கப்பட்டு அந்தன்படி டிரஸ்டிகள் நடத்தவேண்டும்.

(5) தேவாலயங்களுக்கு பூஜையே உயிர். அதனால்தான் தெய்வ ஸான்னித்யம் ஏற்படவேண்டும். இவ்வளவு முக்யமான இந்த விஷயம் டிரஸ்டிகளால் கவனிக்கப்படுவதில்லை. பண வரவு செலவு கார்யத்துடன் அவர்கள் நின்றுவிடுகிறார்கள். டிரஸ்டிகளுக்கு ஆகம சாஸ்திர பரிசயமில்லாததும், பூஜகர்களைக் கண்டிக்க அவர்கள் பயப்படுவதுமே இதற்குக்காரணம். இதனால் ஆலயங்களில் பூஜை முதலிய வைதிக கார்யங்கள் வெகு மோசமான நிலைமைக்கு வந்து விட்டன.

(6) அநேகமாக பூஜகர்களுக்கு ஸாதாரணப் படிப்போ, வேத சாஸ்திர பரிசயமோ ஆகமப் பயிற்சியோ, இருப்பதில்லை. அதைப் பெற அவர்கள் முயற்சிசெய்வதும் வழக்கமில்லை இதை நிரூபணம் செய்வது ஸுலபம்.

ஆகையால், எந்த பூஜகர்களையும் பரீக்ஷை செய்தே பூஜை செய்யச் சேர்க்கவேணும். தற்போதும் பூஜாதிகளை நன்கு அறியாதவர்களை பரீக்ஷைசெய்து அவர்கள் நன்கு அப்யஸிக்கும் வரையில் விலக்கிவைக்கவேணும்.

தங்கள் கடமையைச் சரிவரச் செய்யச் சக்தியில்லாதவர்கள் எவ்வித பூஜாபாத்யமும் கொண்டாட இடமிருக்கக்கூடாது.

(7) ஒவ்வொரு பெரிய தேவாலயத்திலும் ஆகம பாடசாலை ஏற்படுத்தி அதில் பூஜகர்கள் பயிற்சிபெறக் கட்டாயப்படுத்தவேண்டும். பூஜகர்கள் மதாசாரம் ஸதாசாரம் இவைகளில் தவறுமலிருக்கிறார்களா வென்று கவனித்து, அப்படியில்லாதவர்களை விலக்க டிரஸ்டிகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

(8) ஒவ்வொரு கோவில்களிலும் சாஸ்திரப்படி பூஜாகாலங்களை நிர்ணயித்து, அந்தக் காலம் தவறுமல் பூஜை நடத்தும்படி பூஜகர்கள் கட்டுப்படுத்தவேண்டும். பொது ஜனங்களை அறியும்படி பூஜா காலங்களை அறிவித்து போர்டுப் பலகைகளில் எழுதி மாட்டவேணும்.

(9) இவ்வூரிலுள்ள, பொற்றுமரை, மஹாமகக்குளம் இரண்டும் புண்ய தீர்த்தமாகையால், பொதுஜன ஸௌகர்யத்தையும் ஸுகாதாரத்தையும் கருதி, காவிரி ஜலம் பாய்ச்சி நல்ல நிலைமையில் வைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

மேற்கண்ட விஷயங்கள் இங்கிலீஷில் தர்ஜுமா செய்து அச்சடித்து கனம் மந்திரியிடம் கொடுக்கப்பட்டது, தேவஸ்தானச் சீர்திருத்தம் சீக்கிரம் செய்யப்படபோகிறபடியால் ஒவ்வொரு ஊரிலுள்ள ஆஸ்திகர்களும் மேலேகண்ட முக்ய விஷயங்களை மஹஜர் மூலமாக மந்திரிகளுக்கு எழுதியனுப்பவேண்டியது அவசியமாகும்.

தெய்வபக்தன்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | |
|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 12 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 5 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கீதா தினக் கொண்டாட்டம்.

### கும்பகோணம்.

ஸ்ரீமான் ஸி. ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களின் பெருமுயற்சியால் 18-12-36 காலை 9-மணிக்கு செட்டிராயர் குளம் கீழ்க்கரை ராமமந்திரத்தில் ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் தலைமையில் கீதாதினம் கொண்டாடப்பட்டது. தலைவர் 'கதயந்த்ஸ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச' ஒவ்வொருவரும் பகவானின் குணங்களைச் சொல்லி சந்தோஷப்படவேண்டும் என்றபடி மற்றவர்களையும் பேசும்படி வேண்டினார். ஸ்ரீமான் எம். ராமராவ் கீதாவில் உள்ள த்வைத தத்துவங்களை பல மேற்கோள்களுடன் விளக்கிக் காட்டி ஆயுதங்களுக்கிடையே அப்ரதிஹதமாய் தலைசிறந்து விளங்கும் பகவானின் சக்ராயுதம் இருக்கும்போது ஆயுதானாம் வஜ்ரம் என்று கூறியதிலிருந்தும் மாதங்களுக்கிடையே சிறப்புற்றுள்ள மாகமாஸமிருக்க "மாஸானாம் மார்க்கசீர்ஷோஹம்" என்றுகூறியதிலிருந்தும் இம்மாதிரியே "பண்டவானாம் தனஞ்சய:" என்று கூறியதற்கு முக்கிய தாத்பர்யம் பாண்டவர்களுக்கிடையே விபூதிமத்தாக விளங்குபவன் பீமஸேனர் தான் என்று அறியவேண்டும் என்று கூறினார்.

பிறகு ஸ்ரீமான் ஐயாதுரை ஐயர் கீதா ஓர் யோகசாஸ்த்ரம் தான் என்று காட்ட பல யோகப்ரக்ரியைகளையொட்டி அந்வயம்படுத்திக் காட்டினார். ஸ்ரீமான் வேம்பு சாஸ்திரிகள் பகவத்குணங்களில் ஈடுபட்டு அநுகானம் பண்ணி பத்தியோகத்தில் ஆழ்ந்திருப்பதில் உள்ளத்திலிருந்தும் ஆனந்தம் வேறு எதிலும் இல்லை என்றும் அவ்வித நிலையையடைந்தபிறகுபார்க்கி நிலையைப்பற்றியோசிக்கலாம் என்றும் கூறினார். தலைவர் முடிவுரையில் கீதா உபதேசம் 'அசோச்யான்' என்று ஆரம்பித்து 'மா சுச:' என்று முடிவதால் துக்கத்தைப் போக்கடித்துக்கொள்ள யாவரும் மதபேதமின்றி முயற்சிக்கவேண்டியதவசியமெனவும் விசுத்தமான புத்தியை சம்பாதிக்கவேண்டுமெனவும் வற்புறுத்தினார். முடிவில் கீதா 15-ம் அத்யாயம் பாராயணம் செய்யப்பட்டு பலப்ரஸாதம் முதலியன்வழங்கப்பட்டு இனிது முடிந்தது. இக்கொண்டாட்டத்தில் ஸ்ரீமான் ஏ. ஸுப்பிரமணியஐயர் அவர்களின் பேராதரவு குறிப்பிடத் தகுந்தது.

நமது நிருபர்.

## கும்பகோணம்.

### சித்ஸம்வர்தனீ ஸபா.

ஷை ஸபையானது வழக்கம் போல் 19-12-37. ஞாயிற்றுக்கிழமை மாலை $4\frac{1}{2}$ மணிக்கு கும்பகோணம் கவர்மெண்ட் காலேஜ், ஸம்ஸ்கிருத பண்டிதர், மஹாமஹோபாத்யாய வியாகரண. கே. எல். வி. சாஸ்திரிகளவர்களக்ராஸனத்தின் கீழ், எண்ட்ரன்ஸ் கிளாஸ் மாணுக்கன் ராஜு சர்மாவால் "தர்மம்," என்பதை வடமொழியிலெழுதி படிக்கப்பட்டு பிறகு அதே விஷயத்தை வடமொழியில் அக்ராஸனரால் உபன்யசிக்கப்பட்டு நடந்தேறியது. அவ்வமயம், த்வைதவேதாந்த பாடசாலை அத்யாபகர் கோபாலசார் அவர்களும் சர்கிள்டெம்பிள், கமிட்டி ஆபீஸ் மானேஜர் மகா-ா-ஸ்ரீ கே. ஆராவமுதய்யங்காரவர்களும் விஜயம் செய்திருந்தனர்கள்.

எஸ். ஆர். காரியதரிசி.



## The Agricultur... Debts Relief Bill is open to ... serious objections.

*(M. N. Natesa Aiyar, Madura.)*

The first objection is that it pitilessly ignores the basic principle of legislation Viz., that that legislation alone is the best which trenches least upon the vested rights of the people and interferes least with the freedom of their contracts. This is the bed-rock of all normal legislative activities. Any Legislature which fails to respect this principle does so at its peril, and has to justify its deviation from it. This is a truism. The saddest tragedy of the time-spirit is that even truisms have to be aggressively asserted. The bill takes away the vested right of the lender to the interest accrued due before October 1937 and also to the whole or portion of the principal also in some specified cases. It similarly takes away the vested right of a landholder to all rents which had accrued due before Fasli 1346. This is so even when their claims have ripened to a decree and a sale thereunder. The only justification pleaded for this admitted confiscation is the chronic indebtedness of the agriculturist. This holds good even though the creditor or landholder is in no way answerable for it. This is nothing short of incipient socialism and communism.

The second objection is that it makes no discrimination between a debt incurred for an agricultural purpose and one incurred for a non-agricultural purpose. Agricultural indebtedness can draw within its ambit only a debt incurred by the agriculturist for agricultural purposes. The bill has to be confined in its operation to such a debt only There is neither rhymer nor reason, no logic nor sense in extending the protection to the non-agricultural debts of the agriculturist as the bill proposes to do. A very substantial portion of the 200 crores which by some unexplained process have been found to be the volume of the debts of the agriculturists, can be easily established to have been borrowed for purely non agricultural purposes. An examination of the Registration Statistics will reveal that pattadhars paying a kist of Rs. 25/- and above constitute the bulk of the borrowers and among them it is those at the top rung of the ladder that borrow heavily. A simple mathematical calculation will yield the result that only a very small percentage of the borrowings has relation to agricultural needs. The rest has almost invariably assumed the shape of spring carriages, costly bulls, palatial furnished houses and motors also; it is besides adorning his wife, daughters and daughters-in-law and perhaps some concubines also in the shape of diamond ear rings, nose-screws, necklaces, golden wristlets and waist bands; it has conceivably converted his sons and sons-in-law into budding lawyers or doctors or engineers or educationists or an I. C. S, I. E. S., I. F. S., and I. M. S. The bill grants an enviable immunity to this class of agriculturists and the lender who has managed to save his little bit by denying himself even the ordinary necessities of life is compelled to look on helplessly with a broken heart. How liberally the milk of ministerial kindness flows. What has the lender done to merit this punishment. The parable riddled author of the bill with characteristic nonchallance is reported to have declared when cornered, that provision cannot be made for a few hard cases and that a small modicum of evil is bound to exist in all good measures. Are the hard cases few? Is there only a modicum of evil? On what statistics does he make the assumption? Exuberance of parental love is necessarily blinding.

The third objection is that an exacting creditor who unrelentingly bleeds the agriculturists into regular payments of interest escapes unscathed while the generous weak-hearted lender is victimized very often to a point beyond recovery. Is this part of wisdom? Is this the Swaraj Legislature for which the children have been freely spilling their blood and cheerfully going to gaols and wrecking their all. How many widows, pensioners and aged and infirm people are penalized in this way. Do the author's never ending miserable parables furnish an answer?

The Fourth objection is that the benefit expected from the Bill is problematical, deceptive and illusory while the harm therefrom is certain, incalculable and mainfold. The certain loss outweighs the uncertain benefit It is enough to refer to 2 aspects by way of illustration. An agriculturist is very often as much a lender as a borrower. He advances comparatively large loans to his tenants, lessees and tillers of the soil who are agriculturists within the meaning of the bill. What the right hand borrows is lent by the left hand and is irrecoverably lost on account of the Bill. How is his position improved by it. Secondly the lender whose right to interest and portions of the principal is statutorily extinguished and the landholder whose vested right to the rent is wiped out—and this happens even when the claims of both have ripened into decrees and sales—both of them get irritated and disgruntled and naturally launch costly proceedings for enforcing what little of their claims is left untouched by the bill. The bill does not prohibit this course. An unenviable position arises. The credit once commanded by him is now lost and for ever. His lands, his houses, his cowsheds all vanish in execution of the inevitable decree under the very nose of the parental Government. The very purpose of the bill stands frustrated and the agriculturist stands forlorn and forsaken and ruined.

The fifth objection is that in actual working, the bill will turn out to be a potential powder of magazine. Neither the owning section nor the tilling section derive any benifit. Instead of helping the agricultural industry, the Bill smothers it and kills it by crippling at once their resources. Money will not be forthcoming even for purchasing seed grains, manure or plough bulls. The help envisaged from the co-operative institutions on which the author of the bill banks will be wholly inadequate if not also illusory. The author of the bill attempts to answer this by saying that this danger is wholly imaginary and twits the objections with characteristic levity and lightness on the false and misleading analogy of the lamentable Sarda Act without realising that the matter will acquire a momentum which no known force on earth can effectively resist. Its repurcussion on other industries is better imagined than told. Even the very necessities of life such as rice, groceries, clothes, kerosine oil cannot be had for credit. Mills, factories, exports and imports all will suffer alike. Government Revenue will also stand imperilled.

There are several other questionable features which have been dealt with in the press and platform with such a wealth of merciless logic and reasoning and vigour that a ministry less obstinate and less tyrannical and less selfsufficient would have quietly allowed the bill to go the way of the Moratorium Bill and devised some other measure.

The problem of relief against agricultural indebtedness can be solved only in one way. It may be a bold adventure and may constitute a severe strain on the slender finances of the Provincial Government. A Government which is successfully working the prohibition schoeme in Salem at a scrifice of 26 lacs and is prepared to work it similarly in the whole of the Presidency will certainly be able to cope with the situation, assisted as it must be, by the paternal central Government. The solution is this. The Government must itself take over the genuine agricultural debts and help the agriculturist to start life with a clean slate. The creditors will submit to a reasonable cut in the interest payable to them more cheerfully than the Government servants to a cut in their salaries, provided of course cash is paid or what is equivalent to it in G.P. Notes payable at easy rates of interest and in suitable instalments are delivered to them. This ought to be followed by a substantial reduction in the Revenue, if necessary at a gradated scale. A limit may be placed on the rate of future interest. The law of Damdupat may be worked so as to extract the maximum benefit out of it. No other measure can be evolved without trenching upon vested rights and it ought to be the effort of every normally working legislature to avoid such encroachments.

If the still-born Moratorium Bill was unwise, as now conceded even by its quondam champions, the bill before us is still more unwise. No body desires to call in question the ringing sincerity, the gushing enthusiasm and the lofty idealism which have inspired it. But all these are not effective substitutes for soundness and practical wisdom. It may be true that a Bill more stead-fast in its avowed purpose and policy and more ambitious in its scheme and design never found its way into the Legislative Chambers in the recent past. It is more true to say that a bill more pitilessly destructive of the principles of natural justice more openly confiscating in its effects and more patently guilty of unedifying class descrimination can hardly be conceived. Even among the most loyal adherents of the ministry, there runs an undercurrent of disappointment, dissatisfaction and dismay and uneasiness. Some pay mere lip worship to it. Some others damn it with faint praise. A few are content with pointing to a defect here, an irregularity there and an injustice elsewhere. A few more are a bit frank and express disapproval. Many others are more outspoken and express horror and disdain. A large class makes bold to suggest alterations. A still larger class under the guise of constructive criticism insist on radical changes. About 90 p. c. condemn it outright and in this class are found agriculturists also. This last class is hourly growing in volume and comprises persons of all shades of opinion and tried patriotism who do not lag behind the sponsors of the bill in their solicitude for the agriculturists. If some individuals are still left who do not openly join the majority, it is because a false sense of mistaken duty and tyranny of party discipline force them to persist in the wrong track. It is still open to the ministry to abandon it, as well as the misleading Civil Disabilities Removal Bill and the cataclysmical Civil Disabilities Removal Bill, to cover itself with glory and rise to the full height of its stature and popularity. Will it do so? If in spite of all these compelling circumstances the ministry with the strength of its pocket majority passes it, may God save them.

## "Ahimsa, Cause of India's Political Death"

The doctrine of Ahimsa (nonviolence) while it raised Hindustan to spiritual glory, largely contributed to its political death, said Dr. B. S Moonje, the Hindu Mahasabha leader, presiding over the Maharashtra Hindu Dharma Parishad (conference) which began to day.

Dr. Moonje urged Hindus to accept the Vedic cult of militarism and realism. He justified the caste system as an attempt to resist the proselytising pressure of Islam and prevent destruction of Vedic culture.

Over 1,000 delegates are attending the conference which was opened by His Holiness Kshtra Jagat Guru. A. P.

*(M. M. 19th Dec. 37.)*

## The duty of the Sanatanists.

*Mr. N. K. Venkatesam.*

The Lord of the Universe comes into the world in human form from age to age, to establish Dharma in this land of Dharma, by protecting the followers of Dharma from the attacks of their opponents, physically, mentally, or spiritually. The Lord of the Universe, who revealed the Veda to Brahma, the Creator of the Universe, caused Him in turn to communicate the Divine Knowledge to the holy Rishis and through them to us, their descendants, through a continued stream of Guru-Sishya Parampara. The Vedas have laid down the dictum that we should speak Truth and walk on the path of Dharma. All the laws of the conduct of human life, known as Varna-Dharma and Asrama-Dharma, were codified by the holy Rishis, with the aid of their experience and intuition, in the Smritis and the Sastras, in accordance with the Laws of Life laid down in the Vedas, as the Divine Commandments as to what we should or should not do. The Sage Valmiki has said that Dharma is the basis of life in Universe and that even Truth or Satya is established in Dharma. It was the bond of Dharma, that saved the life of Hanuman at Lanka and the virtue of Sita in the kingdom of Ravana. Veda-Vyasa has said in his epic, the Mahabharata, that Dharma protects her protector and that where there is Dharma, there is all round success.

While Dharma is thus declared to be the very basis of life for humanity, the king has been entrusted with the duty of maintaining Dharma, with the aid of His Danda or the Rod of Authority. He himself is bound by the Dharma of the order to which he belongs. His business is to maintain Dharma and make his subjects happy and virtuous. The rules regulating his own life and conduct have been distinctly laid down by the holy Rishis themselves. They dare not transgress them. The dictum of Veda-Vyasa, which has been exploited during the recent months, that the King is the maker of the Age, has been clearly explained by the author of the dictum. It is left to the king to make his own age, the Krita Yuga, the Treta Yuga, the Dwapara Yuga, or the Kali Yuga according as he makes Dharma stand on the four legs of Tapas, Saucha, Daya, and Satya, that is. Penance, Purity, Love and Truth, or on three or on two or on one only. The sage has also stated unequivocally the different kinds of bliss or otherwise to which the king would be entitled according to his rule of Dharma. The dictum leaves no doubt as to the conduct of the king in ruling the kingdom entrusted to his charge by the Almighty. What applies to the king applies to the legislature, which acts on behalf of the king, bearing his responsibility for the rule of the land. While, according to our sastras, the functions of God and the king have been thus declared, the duties of those who are learned in the Vedas and the Sastras have also been clearly laid down. The Holy Rishis have laid down the methods of enquiry to be adopted in interpreting the Sastras and applying them to the needs of life from age to age and from day to day. Under these circumstances, it is not open to us, if we believe in Vedas and the Sastras, to deviate from the path laid down by the Holy Rishis and to apply to the problems of our lives, either our reason or our conscience, unaided by the dictates of the Rishis.

It is argued that the impact of western civilisation during the past century and a half has completely altered the outlook and the ideals of life in India. We, the descendants of the holy Rishis, who have been the servants of Mother India, for unknown ages, living within the bourds of the peninsula, crossing neither the Himalaya, nor the encircling waters, have a sacred duty to perform in maintaining unsullied the Dharma of Mother India. History has been proving more and more persistently during recent times that the nations of the world who left this land at different times for different purposes, have during millions of years been again and again coming into contact with the Mother of all lands, bringing in their cultures and civilisations for the benefit of India. It is therefore, wrong to say that India has particularly been affected by the impact of foreign culture and civilisation during this century and a half, which we poor mortals have, perhaps, had the fortune or the misfortune to see with our eyes. Problems relating to our social and religious lives have always been there and have always had to be solved. The cries that we should have 'progressive views', that we should 'adjust ourselves to the times' and that we are 'the creators and custodians of public opinion', are all slogans of the hour, if we look at them from the standpoint of the eternal values of life indicated by our Holy Rishis. Deviations, neglect, deficiencies, and adjustments, are all bound to be seen in human conduct in daily life, but such deviations and defects cannot displace the laws of Dharma laid down on the eternal principles of human conduct, which progressively moves towards the realisation of Divinity in man.

While these are the conditions under which we have to follow, interpret, and administer our Sastras for the good of humanity and for the glory of Mother India, it is impossible to believe that we, who are called Sanatanists or orthodox men, do not bear any responsibility for holding sound opinions which would be in consonance with public good and conducive to the progress of humanity. The Press and the Platform have been freely used for reviling Orthodoxy and Sanatana Dharma by attempting to consign those who are called Sanatanists, to the limbo of antiquity, so that those who do not share their views, might shine in bold relief, at the fore-front of the picture of life. It was because of that and it was also because of those people, who are really in a majority in the land, and did not wake up early enough, that an Act like the Child Marriage Restraint Act became an Act of the Legislature. Though the evil was done behind their backs, yet it acted on them like a horse-whip to rouse them from their lethargy, based on their implicit faith in the Proclamation of Religious Neutrality by Her Majesty Queen Victoria of revered memory. The proof of the awakening lies in the struggle that the Temple-entry Movement has been undergoing during the past months. A Royal Proclamation in a small Indian State cannot change Eternal Dharma and several such Proclamations and Acts in our ancient and mediaeval history, have not been able to stand the test of all times. Expediency is a policy and not a rule of law, be it political, social or religious. It is wrong to contend, that we, who have lived for ages together in this land in amity with those classes that have always been part and parcel of ourselves, could have lived so long if Dharma had been the basis of our contact with the classes that are being exploited at the present moment by different sections of people with different objects in view. The Law of Untouchability, if it is a Law, is a Law, for all times, for all people, and under all conditions of life, as the purity of the body and the soul demands untouchability of a sort always. The question to be considered is not the physical touch but the spiritual touch; there, it has been held by our great Gurus, that untouchability does not exist. The Laws of Human Conduct, in relation to one another, require conditions, and grades of touchability, but the Laws of the Divine life transcend these laws of life. The Laws of Varna and Asrama, the Laws and Privileges of Marriage, the Duties and the Responsibilities of men and women, the Sanctity of Temple and the rules of approach to the Deity therein, the ceremonials of life, known as Samskaras, and the various rules and regulations guiding and controlling our lives in the world, are all eternal, in the sense, that they do not admit of any change in the basic principles. Sanctions for all our fancies cannot be excavated in the Sastras, unless we choose to read into them what we wish to be there.

It is indeed a good sign of the times that an All-India Vidwat-Parished will examine at Madras at the end of this month various questions relating to our social and religious welfare, from the sastric standpoint, following the sastric methods of enquiry. Whatever circumstances might have made this assembly and its deliberations necessary at the present moment, there is no doubt that the task the Sanatanists have to perform at this juncture is holy and urgent. I hope that the Parishad will do its duty honestly and fearlessly, and make all Sanatanists eligible for the Grace of Lord Narayana, the Supreme Power that keeps the Universe Godly and good, on the basis of Dharma and Satya.

---

### புதுக்கோட்டை.

#### வித்யாபிவர்த்தினீ சபா.

சென்ற டிஸம்பர்மீ 15௳ புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேத பாடசாலை தலைமை உபாத்யாயரான பிரும்மஸ்ரீ எம். என். இராகவ சாஸ்திரிகளின் தலைமையின் கீழ் வேத பாடசாலை வித்யார்த்திகளில் ஒருவனான பி. கே. சுப்பராம சாஸ்திரீ "ஸத்ஸங்கம்" என்ற விஷயத்தைக்குறித்து ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தோங்கி யிருக்கும்படி உபன்யஸித்தார்.

தலைமை ஆசிரியர்களும் எல்லா வித்யார்த்திகளும் நல்லொழுக்கத்தோடும், கல்வி கற்பதில் முயற்சியுள்ளவர்களாயும், ஸத்ஸங்கத்தை எப்பொழுதும் விடாமலும் இருக்க வேண்டுமென்றும் சொன்னார்கள்.

இறுதியில் இச்சபையின் காரியதரிசி எஸ். வைத்யநாத சாஸ்திரியினால் உபன்யாஸகர்களுக்கும், அக்ராஸனாதிபதியவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு சமார் 6 மணிக்கு சபை இனிது நிறைவேறியது.

ஒரு நிருபர்.

---



717

## பிராமண பிராமணரல்லாதார் பிரச்னை.

(சென்றவாரத்தொடர்ச்சி)

மற்றும் காணப்படும் சில கட்டுப்பாடுகளாலும் பிராமணரல்லாதார் ஸமூஹம் பல வகுப்பாக பிரியவே இடமேற்படுகிறது. தென்னாட்டிலுள்ள ஒரு சில வகுப்பு வாதிகள் பிராமணரல்லாதாரை தமிழர் எனக் கூறி ஒன்று சேர்க்க முயற்சிக்கின்றனர். இதற்குமிடமில்லை. பிராமணரல்லாதார் எல்லோருமே த்ராவிடரன்று. சரித்ரம், அநுபவம் இவைகளைக் கொண்டு கவனித்தால் தமிழரல்லாத பல ஸமூஹம் பிராமணரல்லாத ஸமூஹத்திலிருப்பது ஸ்பஷ்டமாக விளங்கும் எனவே பிராமணர் பிராமணரல்லாதார் என்ற பிரிவினை கல்பனைக்கு எவ்வழியிலும் இடமில்லையென்றும் இது ஒரு அபத்தமான கல்பனை என்றுமே ஏற்படுகின்றது.

ஸென்ஸார்ரிபோர்ட் அரசாங்கத்தாலேயே தயாரிக்கப்படுவது. இங்குஹிந்துஸமூஹத்தில் பிராமணர் ராஜு, பேரயா, வைசயர், நாடார் போன்ற வகுப்புக்கள் காணப்படுகின்றன. Sice Censes of 1931 Vol. XIV part V page 3. 6 இந்த தஸ்தாவேஜீ பொது மக்களிடம் மிகவும் நெருங்கிப்பழகி எடுக்கப்படுவதால் இதை நாம் உதாஸீனம் செய்வது ஸுலபமல்ல. இங்கு பிராமணரல்லாதார் என்ற வகுப்பு இருப்பதாகக் காண்முடியவில்லை. ஆகவே பிராமணரல்லாதார் என்ற வார்த்தை ஒரு ஸமூகத்தைக் குறிப்பிடாது என்று ஏற்பட்டது.

இதை அடிப்படையாகக்கொண்டு விவாதம் செய்ய இடமேது? ஆனாலும் வகுப்பு வாதிகள் இந்த மாயையை வைத்துக்கொண்டே கூக்குரலிடுகின்றனர். அடுத்தாப்போல் இவர்கள் கூறும் வாதங்களை ஆராய்வோம். பிராம்மணர்கள் அதிகமாக உத்யோகத்திலீடுபடுவதால் பிராமணரல்லாதார் நலம் கெட்டுவிடுவதென்பதே அவர்களின் அடிப்படையான வாதம். கீழ் நாம் நிரூபித்தபடி பிராம்மணரல்லாதார் என்ற ஸமூக கல்பனையே விச்வாமித்ர ஸ்ருஷ்டி. இந்த ஸமூகத்தின் நன்மை கெட்டுவிடுவதாகக் கூறுவதெப்படி பொருந்தும்.

பிராமணரல்லாதார் ஸமூஹம் உண்மையிலே பல ஸமூஹங்களாகப் பிரிந்திருப்பதால் பிராமணர் ராஜாங்க உத்யோகத்திலீடுபடுவதால் எந்த பிராமணரல்லாத ஸமூஹத்தின் நன்மை கெட்டுவிடும்? இக் கூற்றால் இவர்கள் நினைப்பதென்ன? பிராமண ஸமூஹம் சிறுப்பான்மை ஸமூஹம். அப்படி இருந்தும் ஸமூஹ ஜன ஸங்கியைக்கு அதிகமாக உத்யோகம் பெறுவது ந்யாயமாகாதென்று இவர்கள் அபிப்ராயப்படுகிறார்களா? அல்லது மைனாரிடியான பிராமண ஸமூஹம் அரசாங்க உத்யோகத்தில் அதிகமாக ஈடுபடுவதால் மற்ற மெஜாரிடி ஸமூஹ பாத்யதைப் புறக்கணிக்கப்பட்டு விடுகிறதென்று அபிப்ராயப்படுகிறார்களா?

பிராமணர்கள் உலக சரித்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே கல்வியினாலேயே ஜீவித்து வந்திருப்பதை யாருமறிவார்கள். அதனால் பிரிடிஷ் ஸாம்ராஜ்யம் இந்தியாவில் ஸ்திரப்பட்டு நவீனக் கல்வி முறையை கையாள ஆரம்பித்ததும் பிராமணர்கள் ஸ்வபாவமாகவே அதில் அதிகமாக ஈடுபட்டனர், அரசாங்க உத்யோகத்திற்குப் கல்வி யோக்யதையே முக்யமானதாக விருக்கிறது. இதனால் பிராமணர்கள் பெரும்பாலாக அரசாங்க உத்யோகத்தைக் கைப்பற்ற இடமேற்பட்டது. மேலும் சாச்வதமாகவும் பணத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் உள்ள கைத்தொழிலை உடையவர்கள் ஒரு நாளும் அரசாங்கத்தில் ஊழியம் செய்து ஜீவிக்க முன்வரமாட்டார்கள். இதற்கு விச்வகர்ம ஸமூஹம் யாதவ ஸமூஹம் இவைகளே உதாஹரணம். சென்னை மாகாணத்தில் பொதுவாக விச்வகர்மர்கள், ஸங்கியை 897964 யாதவர்கள், 904695 இந்த ஸமூஹத்தினர் ஜாதி ஹிந்துக்களில் பெரும்பான்மையானவர்கள் வகுப்பு ஸங்கியைப்படி அரசாங்க உத்யோகமளிக்க வேண்டுமானால் இந்த ஸமூஹத்தினருக்குப் பெரும்பான்மை உத்யோகம் கிடைப்பது நிச்சயம். ஆனால் இந்த ஸமூஹத்தினருக்குள்ள தொழில்கள் இதுவரை அழியவில்லை. தங்கள் தொழிலைக் கொண்டே இன்றும் இவர்கள் ஜீவித்துவருகிறார்கள். இதனால் இன்றும் இச் சமூஹத்தினர் அரசாங்க உத்யோகத்தை எதிர்பாராமலே இருந்து வருகின்றனர். பிராமணர்களுக்குப் பரம்பரையான கைத்தொழில் இல்லை அவர்கள் பிழைக்கவேண்டி அரசாங்க உத்யோகத்தை எதிர்பார்ப்பதைவிட வேறு வழியில்லை. இந்நிலையில் பிராமணர்கள் அரசாங்க உத்யோகத்தை அதிகமாகக் கைப்பற்றிய தெப்படி ந்யாயமற்றதாகும்.

அடுத்தாப்போல், மற்ற ஸமூஹங்களுக்கு அநியாயம் விளைந்து விடுகிறதென்ற கூற்றை கவனிப்போம்.

உத்யோகங்கள் எங்கும் சிலவகை வரைக்யரைக்குள்பட்டு கணக்கிலடங்கினதாகவே காணப்படுகிறது. சென்னை மாகாணம் ஸம்பந்தப்பட்டில் ஜாதி ஹிந்துக்களில் ஸுமார் 20 பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு உத்யோகங்களிலும் இவ்வகுப்புகளெல்லாவற்றிற்கும் பாத்யதை அளிப்பதென்பது எவ்விதம் ஸாத்யமாகும். அரசாங்க உத்யோகம் முதலிய எதுவும் தனித்தனி மனிதனின் ஸாமர்த்யத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது. கல்வி முதலிய வசதிகள் காரணமாக யாரும் இதில் போட்டிபோட இடமுண்டு. எந்த பிராம்ணர் அல்லாத ஸமூஹமும் இதில் போட்டியிட தடை இல்லை. இந்நிலையில் பிராமணர் அதிகமாக உத்யோகம் முதலியவைகளில் புகுந்துவிட்டதற்கு அவர்களுக்குள்ள வசதிகளே காரணம் என்று ஏற்படுகிறது. இதனால் மற்ற ஸமூஹத்திற்கு அநியாயம் எப்படி விளைந்து விடும்? அநியாயம் விளைவதாகக் கொண்டாலும் எந்த ஸமூஹத்திற்கு அநியாயம் விளைந்து விடுகிறதென்று கேட்போம். பிராமணரல்லாதார் என்று உண்மையான ஸமூஹம் இல்லாததால் அதன் நன்மை கெட்டுவிடுவதாகச் சொல்லுவதில் அர்த்தமில்லை. மேலும் சென்னை மாஹாணத்தில் மொத்த ஜனத்தொகை 4 கோடிக்கு மேல் உள்ளது அதில் தீண்டாதார் போக ஜாதி ஹிந்துக்களில் ஸுமார் 20 வகுப்புக்களிருக்கின்றன. இவற்றுள் வன்னிகுல க்ஷத்ரியர்கள் 2944014 பிராமணரல்லாத ஸமூஹத்தில் இதுதான் ஜனத்தொகை பெருத்தது. இதற்கடுத்தபடியாக யாதவர்கள் 905695 விச்வ பிராமணர்கள் 897964 மற்ற ஸமூஹங்கள் இவைகளைக் காட்டிலும் குறைவான ஜனத்தொகை உள்ளதே. பிராமணர்கள் தமிழர், தெலுங்கர், கன்னடர், ஒரியர் எல்லாரும் சேர்ந்து 1250825. அந்தந்த ஸமூஹத்தின் தொகையைக் கொண்டு கவனித்தால் பிராமணர்களைக்காட்டிலும், வன்னிய குல க்ஷத்ரியர் வகுப்பே மெஜாரிடி வகுப்பு என்று தெரிகிறது. மற்ற எதுவும் பிராமண வகுப்பின் ஜனத்தொகைக்கு குறைந்ததே. ஆனால் வகுப்புவாதிகள் பிராமண ஸமூஹ ஜனத்தொகையை மைனாரிடியாக்க பிராமணரல்லாத பல மைனாரிடி ஸமூஹங்களை ஒன்று சேர்த்துப் பேசுகின்றனர். இது தவறானது. வகுப்பு வித்யாஸத்துடன் நாம் மெஜாரிட்டி மைனாரிட்டி பார்க்கும் காலத்தில் அந்தந்த ஸமூஹத்தின் ஜனத்தொகைகளையே முக்யமாக கவனிக்கவேண்டும். இதைக்கொண்டே மற்றொரு வகுப்புக்கும் இதற்குமுள்ள ஜனத்தொகை வித்யாஸத்தை கவனிக்கவேண்டும். அவ்விதமில்லாதது மொத்த ஜனத்தொகையைக்கொண்டு கவனித்தால் பொது ஸங்கியையில் எந்த ஸமூஹமும் மைனாரிடியாகவே யாகும். எனவே பிராமணர் அதிகஉத்யோகம் ஸம்பாதிப்பதால் வன்னிகுல க்ஷத்ரியர்களின் நலம் கெட்டுவிடுவதாகவே கூறப்படவேண்டும். வகுப்புவாதிகள் இவ்விதம் கூக்குரலிடக் காணோம். பொதுவாக கவனிக்குமிடத்தில் பிராமணரல்லாத பல ஸமூஹங்களை ஒன்று சேர்த்தால் தொகையில் பிராம்ணர் மிக மிகச் சிறிய ஸமூஹமாகவே ஆகும். இவ்வித ஸமூஹத்தினர் இன்று திடீரென்று அரசாங்கத்தை விட்டுவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

இதனால் கோடிக்கணக்கிலுள்ள ஜனத்தொகையுள்ள பிராமணரல்லாத ஸமூஹங்கள் சிறிதும் பக்ஷபாதமின்றி நன்மை அடைவது ஸாத்யமாகுமா? ஆகவே பிராமணர் உத்யோகங்கள் பெரும்பான்மையாக ஏற்பதால் மற்ற ஸமூகங்கள் நன்மையடையாமல் போய் விடுவதாகக் கூறுவதும் பிராமணர்களை உத்யோகங்களிலிருந்து குறைப்பதால் மற்ற மெஜாரிட்டி ஸமூஹங்களுக்கு நன்மைசெய்வதாகச் சொல்வதும் அர்த்தமற்றதே.

ஜஸ்டிஸ் கக்ஷியின் நடவடிக்கையே இதற்குத் தகுந்த உதாஹரணம். இக்கக்ஷி பிராமணரல்லாதார் நலனை காப்பாற்றவே கங்கணம் கட்டி வேலைசெய்துவந்தது. இக்கக்ஷி பெயரால் இந்த மஹாணத்தில் 15 வருஷம் ஆக்ஷி நடைபெற்றது. வகுப்புவாரி நியமன முறையை இக் கக்ஷியினரே வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் இவர்கள் ஆக்ஷியில் நடந்ததென்ன? ஸர்க்கார் உத்யோகங்களில் பிராமணர்கள் குறைக்கப்பட்டதென்னமையே. ஆனால் அதனால் உண்மையில் மெஜாரிடியான எந்த வகுப்பும் நன்மை அடையவில்லை. 4 கோடி மக்களுள்ள மாஹாணத்தில் லக்ஷக்கணக்கில் ஜனத்தொகையுள்ள சில ஸமூஹங்களே நன்மைபெற்றன. ஜஸ்டிஸ் ஆக்ஷியினால் பிள்ளை, நாயிடு, முதலிகள், நாயர், ராஜு, ரெட்டி, ஸமூஹமே மந்திரி பதவி முதல் குமாஸ்தா உத்யோகம் வரை அடைந்தது. 4 கோடி மக்களுள்ள நமது மாகாணத்தில் நாயர்கள் 537618. பிராமணரல்லாத ஸமூஹத்தின் பெயரால் இந்த ஸமூஹம் அடைந்த நன்மைபல. ராஜுக்கள் 69976. இந்த சின்ன ஸமூஹமும் பலவித நன்மைகளை அடைந்தது. மெஜாரிடி ஸமூஹமான வன்னிகுல க்ஷத்ரியர்கள் விச்வ பிராமணர்கள் யாதவர்கள் இவர்கள் போன்ற பல ஸமூஹங்கள் எவ்விதப் பதவியையும் அடைந்துவிடவில்லை. இதனாலும் பிராமணர்களால் தான் பிராமணரல்லாதார் நலன்கெட்டு விடுவதாக கூறுவது உண்மையானதன்று என்று ஏற்பட்டது.

இக்கல்பனையோ இதற்கான வாதமோ இவ்விதம் அடியோடு பொருத்தமற்றிருந்தும் இக்கல்பனை இன்று பலவழிகளிலும் புகுந்து விட்டது. சென்னை ராஜீய சரித்ரத்தில் இது குறுக்கே நிற்காத இடமே கிடையாது. இதன் உண்மை ரூபத்தை சிந்திக்காமலே யாரும் இதைக்கண்டு பயப்படுகின்றனர். வகுப்புவாதத்தை அடியோடு தொலைக்க நினைக்கும் காங்கிரஸ் மந்திரிகளும் இந்த கல்பனையைக் கண்டு பிரமிப்பதாகவே நான் நினைக்கிறேன். சென்னை ராஜீய அரங்க மேடையில் நடிகராக ஸ்ருஷ்டிக்கப்பட்டவள்ளுக்களில் இதுவுமொன்று. இத்துடன் ஜஸ்டிஸ் கக்ஷி காங்கிரஸ் கக்ஷியினால் அழிக்கப்பட்டுவிட்டது. இத்துடன் கூடப்பிறந்த மாயையையும் அவர்களே அழிக்கவேண்டும்.

அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர்.

215214

719




அநாவசியமாக ஏன் — —
— — அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்


## ராமாயண படனக்ரமம்.

### பால காண்டம்.

(சென்றவாரத்தொடர்ச்சி)

12. பாலகாண்டம். 51வது சர்க்கத்தில் விச்வாமித்திர பூஜா சிரவணுத் பலன்:— கடன் நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம். இது வாசிக்கும் போது ஸ்ரீமந் நாராயணனையும், ரிஷிகணங்களையும் தியானம் செய்துகொண்டு சுவாமிக்கு தேங்காய் நேவேத்தியம் செய்து ஆனதின்பேரில் துளசியாவது புஷ்பமாவது அர்ச்சனை ஆனதின்பேரில் வாசிக்கவும், 6மாதத்துக்குள் கடன் நிவர்த்தி. சுபமஸ்து.

13. பாலகாண்டம் 53வது சர்க்கத்தில் காமதேனு பூஜா சிரவணுத் பலன்.- பாப நாசனம்.

வாசிக்கப்பட்ட கிரமம். நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக் கொண்டு மேல் சொன்ன சர்க்கத்தைதப்பாமல் நாள்தோரும் வாசித்துக்கொண்டு வருவானுகில் சகலபாக்கியம் உண்டாகும். சுபமஸ்து.

14. பாலகாண்டம் 61வது சர்க்கம் முதல் 62வது சர்க்கம் வரை. அம்பரீஷ மஹாராஜா யாகம். பலன்:- குற்றவாளி விடுதலை.

வாசிக்கப்பட்ட கிரமம். குற்றவாளிஜெயிலிருக்கவே, வேறொரு மனிதனைக் கொண்டு ஷை சர்க்கத்தை ஒரு நாளைக்கு இரண்டு வேளை 6தரம் வாசித்து சுவாமிக்கு புஷ்பத்தினுல் 108 அர்ச்சனையும் தேங்காய் பழம் நேவேத்தியம் செய்து வாசிக்கவும். குற்றவாளி விடுதலை 48 நாளுக்குள்ளாக என்றுணர்க. சுபமஸ்து.

15. பாலகாண்டம். 2வது சுலோகம் முதல் 22வது சுலோகம் வரையில் (விஸ்வாமித்திர மஹாதேஜா) பலன்:- ஜிதேந்திரியனுவான்.

(விச்வாமித்ரமஹாதேஜா:)

வாசிக்கப்பட்ட கிரமம், இந்த ஸர்க்கத்தை வாசிக்கும் காலத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவை தியானம் செய்துகொண்டு சனிக்கிழமை தோறும் தப்பாமல் நாள் ஒன்றுக்கு மூன்று தரம் வாசித்து 4 பிராமணுளுக்கு அன்னம் போடவும். நினைத்த காரியம் கைகூடும்.

16. பாலகாண்டம். 73வது சர்க்கத்தில் ஸீதா விவாஹம். பலன்:- கலியாணமாகும்.

வாசிக்கப்பட்ட கிரமம். ஒரு கிரஹத்தில் பெண் குழந்தைகளாவது, ஆண்குழந்தைகளாவது இருந்து கலியாணம் நடசிக்க தவக்கப்பட்டுதானுல் இந்த சர்க்கத்தை ஒரு தரம் காலையில் வாசிக்கவும். 24 நாளைக்குள்ளாக கல்யாணம் நடக்கும். ஸ்ரீ ராமனுககு நாள் தப்பாமல் ஏதாவது ஒருபட்சயம் செய்யவும் சுபமஸ்து.

17. பாலகாண்டம். 74வது ஸர்க்கத்தில் பாசுராமன் தோல்வியடைந்தது. பலன்:- விரோதி இஷ்டத்துடனிருப்பான்.

வாசிக்கப்பட்ட கிரமம். தனக்கு ஒரு மனிதன் விரோதியாயிருந்து தனககு கெடுதல் செய்கிறதாக தெரியும் பக்ஷத்தில் இந்த சர்க்கத்தை மூன்றுதரம் வாசித்து பெருமாளுக்கு சர்க்கரைப்பொங்கல் நேவேத்தியம் செய்துவிட்டு புஷ்பத்தினுல் அர்சனை செய்யவும். இந்தப் பிரகாரம் 24 நாள் வாசிக்கவும்: ருஜியாய்வருவான். சுபமஸ்து.

### அயோத்தியா காண்டம்.

18. 25வது சர்க்கம் கோசலோக்தம் நாம மங்களம். பலன்:- பிரயாணம் சித்திக்கும்.

வாசிக்கப்பட்ட கிரமம். ஒரு மனிதன் எந்த திசை த்வீபங்களுக்குப் போக உத்தேசிக்கிருனே, அந்த திசை முகமாய் நித்திய கர்மானுஷ்டானம் முடித்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு மூன்றுதாம் வாசித்து சுவாமிக்கு கண்ணமுது அமிசை செய்விக்கவும். காரியம் சித்திக்கும். சுபமஸ்து.

19. 40வது சர்க்கத்தில் ஸுமித்திராலக்ஷ்மணருக்கு புத்தி சொல்லுதல். பலன்:— பைத்திய நிவர்த்தி.

வாசிக்கப்பட்ட கிரமம். ஸாயந்தாம் ஸந்த்யாவந்தனம் ஜபம் செய்தானதின் பேரில் இந்த ஸர்க்கத்தை 2தாம் வாசித்து ஸ்வாமிக்கு வெண்பொங்கல் நைவேத்தியம் செய்தானதின் பேரில் புஷ்பத்தினுல் அர்ச்சனை செய்துவிட்டு வாசிக்கவும். சீக்கிரத்தில் நிவர்த்தியாகும். சுபமஸ்து.

20. அயோத்தியா காண்டம். 91வது சர்க்கத்தில் பாத்வாஜ மகரிஷி பாதருக்கு ஆதித்யம். பலன்:- லக்ஷ்மி கடாக்ஷம்.

வாசிக்கப்பட்ட கிரமம். சனிக்கிழமை தோறும் ஷை சர்க்கத்தை மூன்றுதாம் வாசித்து ஸ்வாமிக்கு செய்து இரண்டு ஸ்வாமிகளுக்கு அன்னம்போடவும். இந்தப் பிரகாரம் செய்துகொண்டுவரவும். சுபமஸ்து.

21. அயோத்தியாகாண்டம். 104வது ஸர்கம் முதல் 105வது ஸர்க்கம் வரை சித்திரகூட ராம பாத ஸம்வாத சிரவணுத் பலன்:— ஸர்வகார்யம் ஸித்திக்கும். (தொடரு:)

மேலக்காவேரி, K. R. V. சாஸ்திரி.

## வெளியூர்ச் செய்திகள்.

### தண்டாங்கூரை.

#### பசுபந்தம்.

தண்டாங்கூரை ஸ்ரீ அப்பாதுரை தீக்ஷதராலும் அவர் குமாரராலும் சென்ற வாரம் திங்கள் செவ்வாய்க்கிழமையில் ஆருணகேதுக சயனத்துடன் பசுபந்தம் செய்யப்பட்டது. அதற்கு மிலட்டூர் ந. சிவஸாமி சிரௌதிகள் நல்லிச்சேரி ருமனுத சிரௌதிகள் தஞ்சை சுப்ரமண்ய தீக்ஷிதர் சேங்காலிபுரம் நாருயணவாஜபேயி முதலியவர் வந்திருந்து ஆஸ்திகர்கள் உதவியால் வெகு சிறப்பாக நடந்தது.

### மதருஸ்.

உடையாளூர் பிரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால், மதராஸ் பழைய மாம்பலம், ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கோயில் வசந்த மண்டபத்தில் நடத்தப்பட்ட ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் "ஸ்ரீ ராமபட்டாபிஷேக வைபவம்" சென்ற கார்த்திகை-மீ 27௳ (12—12—37) ஞாயிற்றுக் கிழமை இரவு வெகு விமரிசையாக நடைபெற்றது. பொது ஜனங்களின் விருப்பத்தின் பேரில் ஸ்ரீமத் ராமாயணத்தின் உத்திரகாண்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

நமது நிருபர்.

### 13-12-37-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3-14-0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3-10-0 |
| அரிசி முதல்தரம் வெள்ளைசிறுமணி 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 9—8-0 |
| ஷை இரண்டாம் தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 8—8-0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | ரூ 5—1-0 |

தாசில்தார்
கும்பகோணம்ரேஞ்சு

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram,